
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
சென்னை-600090.

தமிழ்த்தாய் வாழ்க

மணிமலர்

9837



பண்டிதமணி, முதுபெரும்புலவர்,

திருவாளர், மு. கதிரேசச் செட்டியார் அவர்களுடைய
அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவில்

செட்டிநாட்டரசர், திருமிகு,

ராஜா, சர், மு. அண்ணாமலைச்செட்டியார் அவர்கள்
தலைமையில் அளித்த

கட்டுரைத் தொகுதி

விசு, புரட்டாசி, உசு
12—10—'41

இதன் விலை ரூபாய் 3—0—0

கிடைக்கும் இடம் :—

மீ. முத்துசாமிப்பிள்ளை யவர்கள்,

சன்மார்க்க சபைத் தமிழாசிரியர்,

Melasivapuri Post

(Pudukottai State)

மணிமலர்

பண்டிதமணி, முதுபேரும்புல்வர்,

திருவாளர், மு. கதிரேசச்செட்டியார் அவர்களுடைய

அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவில்

செட்டிநாட்டரசர், திருமிகு,


ராஜா, சர், மு. அண்ணமலைச்செட்டியார் அவர்கள்

தலைமையில் அளித்த

கட்டுரைத் தொகுதி

விசு, புரட்டாசி, உசு

12—10—'41



2"



பண்டிதமணி,

முதுபெரும் புலவர்,

திரு. மு. கதிரேசச் செட்டியார் அவர்கள்.

முகவுரை


பண்டிதமணி, முதுபெரும் புலவர், திரு. மு. கதிரேசச் செட்டியார் அவர்களுடைய அறுபதாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு அறிதுறியாக 'மணி மலர்' என்னும் பெயரிய இக் கட்டுரைத் தொகுதியைப் பல அன்பர்களது துணைக் கொண்டு அளிக்க முன்வந்துள்ளோம். நாங்கள் வேண்டியவுடனே, தங்கள் பல அலுவல்களுக் கிடையே உளமுவந்து கட்டுரையெழுதி உதவிய அன்பர்களுக்கும், சுருங்கிய காலத்தில் திறம்பட அச்சியற்றித் தந்த தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகத்தாருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். பண்டிதமணி அவர்கள் நீடிய வாழ்நாளுடன் பல நலங்களும் பெற்றுத் தமிழ்ப் பணியாற்றுதற் கருளும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளை வணங்கி, இம் மணி மலரை அளிக்கின்றோம்.

விசு, புரட்டாசி, களை

பெ. ரா.ம. ரா.ம. சித.
சிதம்பரம் செட்டியார்.
கீ. கந்தசாமி.



தஞ்சைச்
கூட்டுறவு மின்னியக்கிப் பதிப்பகத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.



பொருவாடக்கம்.

எண்		பக்கம்
க.	திரு. மு. கதிரேசச் செட்டியார்—பாராட்டு	I-VIII
உ.	ஆங்கிலவாணி. சுவாமி விபுலாநந்தர்	1
ங.	தொல்காப்பியன். திரு. ச. சோமசுந்தரபாரதியார், பி. ஏ., பி. எல்.	25
ச.	நைநியப் பிள்ளையும், குருவப் பிள்ளையும். திரு. C. S. சீனிவாசாச்சாரியர், எம். ஏ.	34
ஞ.	பண்டைத் தமிழரின் அரசியல். திரு. ச. க. கோவிந்தசாமிபிள்ளை, எம். ஏ,	40
ஞ.	புறநானூற்று ஆராய்ச்சி. திரு. ஆ. பூவராகம்பிள்ளை	47
எ.	முத்தமிழ். திரு. T. P. மீனாட்சிசுந்தரம்பிள்ளை, எம்.ஏ., பி.எல்., எம். ஓ. எல்.	71
அ.	முறைமறந் தறைதல். திரு. தி. பொ. பழனியப்பபிள்ளை, பி. ஓ. எல்.	76
கூ.	திருநாவுக்கரசர். திரு. பண்டித. ந. மு. வேங்கடசாமி நாட்டார்	93
ம்.	விஞ்ஞான வழி. திரு. த. பு. நவநீதகிருட்டினன், எம். ஏ.	104
ஙக.	சாமான்னிய மக்களுக்காகும் சங்கீதத்தின் உருவமும், சாகித்தியமும். திரு. தி. இலக்குமணப்பிள்ளை, பி. ஏ.	109
ஙஉ.	காங்கேயம். திரு. ரா. இராகவையங்கார்	115
ஙங.	கவியுள்ளமும், கலை ஞானமும். திரு. பூ. ஆலாலசுந்தரஞ்செட்டியார், எம். ஏ.	119
ஙச.	செந்தமிழ் நாடு. திரு. மு. அருணாசலம்பிள்ளை	128

மு.	மணிமேகலை காதல் திரு. அ. சிதம்பரநாதச்செட்டியார், எம். ஏ.	149
மசு.	வள்ளுவர் கூறிய வாய்மை திரு. பு. ரா. புருடோத்தமநாயுடு	160
மள.	சிவ வழிபாட்டின் தொன்மை திரு. கா. சுப்பிரமணியபிள்ளை, எம். ஏ., எம். எல்.	183
மஅ.	தமிழர் மறந்த தமிழொலி திரு. ஈ. த. இராசேசுவரியம்மை, எம். ஏ., எல். டி.	189
மக.	தமிழிலக்கியங்களிலுள்ள உவமைச் சுவை திரு. அ. மு. சரவண முதலியார்	195
உமி.	சத்சங்கம் திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் பி.ஏ., பி.எல்.	202
உக.	பிறை தொழுதல். திரு. ஞானும்பான் அம்மையார் எம். ஏ.	206
உஉ.	வணிகப்புலவர்கள், திரு. கோ. ம. இராமச்சந்திரஞ் செட்டியார் பி.ஏ., பி.எல்.	215
உங.	சங்க காலத்துப் பெண்பாற் புலவர்கள். திரு. இராசாமணியம்மையார் எம்.ஏ.	220
உச.	இலக்கிய மறுமலர்ச்சி. திரு. இ. கே. நடேச சர்மா	228
உடு.	பண்டைத் தமிழர் பெருமை. திரு. வி. ஆர். இராமச்சந்திர தீட்சதர், எம். ஏ.	236
உசு.	தமிழாசிரியரும், பிறமொழி கலந்து கற்பித்தலும். திரு. சோமசுந்தரம் பிள்ளை	241
உள.	பரிபாடல். திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்	251
உஅ.	"கொள்" என்ற சொல்பற்றி ஓர் ஆராய்ச்சி திரு. க. ப. மகிழ்நன் பி. ஏ., எல். டி.	288
உக.	அருட் கோலங்கள். திரு. பெ. இராம. இராம. சித. சிதம்பரஞ் செட்டியார்	291



பண்டிதமணி, முதுபெரும் புலவர்,

திருவாளர்.

மு. கதிரேசச் செட்டியார் அவர்கள்

[பாராட்டு.]

நிகழும் இருபதாம் நூற்றாண்டில் தமிழ் மொழிக்குப் புலவராகவும், புரவலராகவும் தொண்டு செய்த பெரியார்கள் பலர் இருக்கின்றார்கள். புரவலராகத்தொண்டு செய்கின்றவர்கள் தமிழ்ப் புலவர்களைத் தாங்கியும், தமிழ்க் கழகங்களைக் கூட்டி நிலை நிறுத்தியும், தமிழ்க்கெனப் பள்ளிக்கூடங்களமைத்தும், தமிழ் மாணவர்களுக்கு உண்டி உறையுள் உதவியும், தூய தமிழ் நூல்கள் வெளிவருவதற்குப் பொருள் உதவியும், பரிசளித்தும், பல்கலைக் கழகங்களில் தமிழ்மொழி தக்க இடம் பெறச்செய்தும், இன்னும் பல வகையாகவும் பணியாற்றி வருகின்றார்கள். புலவராக உள்ளோர் தமிழ் மொழியின் உயர்வை யாவரும் அறியும் வண்ணம் சொற்பொழிவாற்றியும், நன் மாணவர்களுக்குக் கல்வி பயிற்றி மொழிப்பற்றைப் பரவச்செய்தும், பழந்தமிழ் நூல்களை நன் முறையிற் பதிப்பித்தும், அரிய நூல்களுக்கு உரை கண்டும், புது நூல்கள் இயற்றியும், பிறமொழி நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தும், தமிழ் நூல்களைப் பிற மொழிகளில் ஆக்கியும், இன்னும் பல வழிகளாலும் பணியாற்றி வருகின்றார்கள். ஒரு சிலர் புலவர், புரவலர் என்ற இருபாகு பாட்டிற்குமுரிய தொண்டுகளைச்செய்து புலவராகவும், புரவலராகவும் விளங்குகின்றார்கள்.

இவ்வாறு புரவலராகவும், புலவராகவும் விளங்குகின்ற ஒரு சிலருள், **பண்டிதமணியவர்கள்** முதலணியில் வைத்து எண்ணக் கூடியவர்களாவார்கள். செட்டிநாட்டுள் முதல் சங்கமாகக் கருதக்கூடிய **மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையினைச்** சில அன்பர்களது உதவியைக் கொண்டு தோற்றிவைத்த பெருமை யிவர்களுக்கே யுரியதாகும். இச்சபையினுல், பொதுவாகத் தமிழ் மக்களுக்கும், சிறப்பாக நகரத்தார்களுக்கும் விளைந்துள்ள நன்மைகள் பல. பல பெரும் புலவர்கள் இச் சங்கத்திற்கு வந்து சொற்பொழிவாற்றித் தமிழ் மணம் பரவச் செய்துள்ளார்கள். இச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் கல்லூரியில், தமிழ் பயின்ற மாணவர்களுள் பலர் தமிழ் நாட்டின் பல பாகங்களிலும் தமிழாசிரியர்களாக விருந்து தமிழ்த் தொண்டாற்றி வருகின்றார்கள். இச் சங்கத்தைச் சார்ந்த கல்லூரியின் தகுதியை நன்கறிந்த சென்னைப் பல்கலைக் கழகத்தார் தனித் தமிழ் வித்துவான் தேர்வுக்குரிய கல்லூரியாக இதனை இணைத்துக் கொண்டிருக்கின்றார்கள். நம் பண்டிதமணியவர்கள் ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளாகத் தமிழ்ப் புலவர் **பலரோடும்** நெருங்கிப் பழகி, அவரவர்களுக்கேற்ற வுதவிகளைச் செய்து வருகின்றார்கள். சேதுபதிவந்தான் **அரசஞ் சண்முகனார்** அவர்கள்,

"கல்வி தனம் மிக்க கதி ரேச னும்வணிகன்
வல்விதன மெற்கொழித்தான் வள்ளுவரே"

எனக் கூறியுள்ள பாட்டின் பகுதிகளே இவர்களது புரவலராந் தன்மையை நன்கு விளக்குவதாகும். இவர்களைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு எழுந்த நூல்களும் பலவுள. மாணவர்களுக்கு, பிறதுறையாமலே உண்டியுறையுளுக்காய பொருள் நல்கியுதவி வருகிறார்கள்.

புலவர் என்ற நிலையில் இவர்கள் எத்துணைத் தகுதிவாய்ந்தவர் களென்பதைப் **பண்டிதமணி, முதுபெரும் புலவர்** என்னும் பல சிறப்புப் பெயர்களைத் தமிழ்ப் புலவர்கள் இவர்களுக்கு வழங்கியுள்ளதே தக்க சான்றாகும். மிக்க இளமையிலேயே செய்யுள் இயற்றுக் திறன் படைத்து, **சுந்தரவினுயகர்** பதிகம், **வீரவினுயகர்** மாலை, பதிற்றுப் பத்தந்தாதி முதலிய நூல்களியற்றிக் கவியாக விளங்கினர்கள். இத்தமிழ்நாற் புலமையோடு நில்லாது, தமது இருபத்தாரு மாண்டில் தமிழ்ப்பயிற்சிக்கும், சமய நூலுணர்ச்சிக்கும் வடமொழிப் பயிற்சியின் பயனுடமையை யுணர்ந்து வடமொழியை நன்கு கற்று வல்லவ ரானார்கள். வடமொழியிலுள்ள அணியியல்களையும், இலக்கணங் களையும், அவற்றின் பல அகலவுரைகளையும் நன்கு கற்றுத் தமிழ் மொழிக்குத் தக்கவாறு பயன்படச் செய்திருக்கின்றார்கள். வடநூற் பயிற்சியின் பயனுக அணி நூல்கள் பலவற்றை மொழிபெயர்த்து வைத்திருக்கிறார்கள். **மீருச்சகடிகம்** என்னும் சிறந்த காடக நூலை உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக **மண்ணியல்சிறுதேர்** எனப் பெயர்தந்து தவின்பெற மொழிபெயர்த் திருக்கிறார்கள். சுக்கிர

நீதி யென்னும் அரும்பெருநூலையும், சூலோசனை, உதயண சரிதம் என்னும் வசன நூலையும் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார்கள். இம்மொழிபெயர்ப்பு வெளியீடுகள் சன்மார்க்க சபையின் கலத்துக் கென வெளிவந்துள்ளமை இவர்களது விரிந்த உளப்பான்மையைத் தெரிவிப்பதாகும். ஆசிரியர் என்ற முறையில் நம் பண்டிதமணி யவர்கள் ஒரு தனிச் சிறப்பெய்தியுள்ளார்கள். எத்தகைய கிலியுள்ள மாணவர்களுக்கும் அவரவர்கள் தகுதிக்கேற்ப வுளங்கொள்ளுமாறு எத்தகைய நூல்களையும் பாடஞ் சொல்லும் பேராற்றல் இவர்களது தனியுரிமையென்று கூறினும் மிகையாகாது. சிங்கைச்சிலேடை வெண் பாவாயினும் ஆகுக; சிலப்பதிகாரமாயினும் ஆகுக; ஆறுமுக நாவலர் இலக்கணவினுவிடையாயினும் ஆகுக; தொல்காப்பிய சேனுவரையு மாயினும் ஆகுக; பாடங்கேட்போர் தமிழில் எழுத்துவரை யுணர்ந்த மாணவராயினும் ஆகுக; பல்கலைக்கழகத்து அறிஞர் (டாக்டர்) பட்டம் பெற்ற புலவராயினும் ஆகுக; அவரவர்களும் மகிழ்ந்து பயன் கொள்ளுமாறு பாடஞ் சொல்வார்கள் எனின் இவர்கள் ஆசிரியத்திறனை யாவர்தான் வியக்கா திருக்கக்கூடும்! சொற்பொழி வாற்று முறையிலோ இவர்களதுமுறை ஒரு தனிமுறை யென்றே கூறும் பான்மையுடையது. ஒரு நூலை யெடுத்து அதன் கயங்களைக் கூறுவதிலும், ஒரு பொருளை யெடுத்து அதன் விரிவுகளைத் திரட்டிச் சுருங்கக் கூறுவதிலும், ஒரு வரலாற்றை யெடுத்து அதன் பல சிறப்புக்களும் தோன்ற தக்கவாறு இணைத்துக் கூறுவதிலும் சமய நூற்கருத்துக்களையும், உண்மை (தத்துவ) நுண் பொருள்களையும் எடுத்து விளக்குவதிலும் இவர்களைப் போன்று இனிமையாகவும், எளிமையாகவும், இடையிடையே கதைச் சுவை தோன்றவும் பேசுபவர்கள் இல்லை யென்றே கூறலாம். இவர்களு டைய ஆழ்ந்த கருத்துக்களமைந்த சொற்பொழிவுகளிலிருந்தே திருவாசகம், பெரிய புராணம், சிலப்பதிகாரம் முதலிய பெருநூல்களின் நுண்ணிய கருத்துக்களையும், பாட்டின் வளங்களையும் பலரும் அறிந்து பயனடைந் துள்ளார்கள். இருபத்தைந்தாண்டுகட்குமுன் தஞ்சையில் சேக்கிழார் கவிமாண்பு என்னும் பெருமைப்பற்றி இவர்கள் பேசிய பொழுது அங்குக் கூடியிருந்த புலவர் பலரும் ஒவ்வொரு கயங்களுக்கும் பிறகு அடுத்தென்ன கூறுவார்களோ, என்ன கூறுவார்களோ என்று ஆவலுடன் கேட்டு மகிழ்ந்தார்கள். தமிழ் நூல்களின் பொருளை அம் முறையில் எடுத்துக் கூறத் தொடங்கியவர்களிவர்களே யாவர்கள். அது தனிமுறையென்றே கூறலாம். சைவசமயச்சார்பிலார்களுங்கூட இவர்களுடைய திருவாசகப் பெரியபுராண விரிவுரைகளைக் கேட்டபின் அந்நூல்களில் ஈடுபடுவார்களென்பது திண்ணம். சிலப்பதிகாரத்தையும் சாகுந்தல நாடகத்தையும் இவர்கள் ஒப்பிட்டுப் பாராட்டும் போது வடமொழித் தென்மொழிப் புலவர்கள் எல்லாம் இவர்களது நூலாராய்ச் சியையும், நுண்ணறிவையும் வியந்து மிகவும் பாராட்டுவார்கள்.

பத்தாண்டுகளுக்குமுன் தஞ்சையில் ஒரு நண்பர் வீட்டில் தங்க நேர்ந்த பொழுது, ஐ. ஸி. எஸ். (I.C.S.) பட்டம் பெற்றவர்களும், இப்

பொழுது மாகாட்டுத் தலைவர்களாக (ஜில்லா கலெக்டராக) உள்ளவர் களுமான பதின்மருக்கு மேற்பட்ட நண்பர்களோடு சிலப்பதிகாரத்தை யும், சாகுந்தலத்தையும் பற்றி இவர்கள் பேசியபொழுது அவர்கள் எல்லாரும் மிக்க வியந்து ஆங்கிலப் பல்கலைக்கழகத்திற்கும் அணியாகும் புலமையுடையவர்களெனப் பாராட்டியதோடு, அவரவர்கள் வேலைகளுக் கிடையேயும் சிலகாலம் சிலப்பதிகாரத்தைப் படித்தார்கள்.

உரைநடை யெழுதும் ஆற்றலிலும் இவர்கள் எத்தகையவர்க ளென்பதை அண்மையில் வெளியாகி இருக்கும், இவர்கள் பல காலங் களில் எழுதியனவும் பேசியனவுமான கட்டுரைத் தொகுதிகளே நன்கு தெரிவிப்பனவாகும். ஞானத்தின் திருவுரு, அன்பின் திருவுரு முதலிய கட்டுரைகள் எப்பாலாரும் வியக்கும் இனிமை வாய்ந்தனவா கும். பல தலைமையுரைகள், இவர்களது கடுங்கிலைமையையும், தெளிந்து தேறிய கருத்துக்களையும் தெரிவிப்பதோடு பல வழிகளிலும் துணையாய் நின்று அறிவு கொளுத்துவனவாக இருக்கின்றன. இப்பேருரைகள் தமிழ்நாட்டின் பல பாகங்களோடு நில்லாது ஈழநாட்டிலும், கன்ன டத்தைத் தாய்மொழியாகக் கொண்ட மைசூர் நாட்டிலும், மலையாளத்தைத் தாய்மொழியாகக்கொண்ட சேர நாட்டிலும், நிகழ்ந் திருப்பதை நோக்கின் தமிழ் பேசும் மக்கள் எங்கெல்லாம் பரவியிருக் கின்றார்களோ அங்கெல்லாம் இவர்கள் புகழ் பரவி யிருக்கின்ற தென்பது நன்கு விளங்குவதாகும்.

இவ்வாறு புலவர், புரவலர் என்ற இருநிலையிலும் தமிழ்ப்பணி யாற்றும் நம் பண்டிதமணி யவர்கள் 'பாண்டிநாடே பழம்பதி' யெனத் திருவாதவூரடிகள் வாயாரப் புகழ்ந்த பாண்டிநாட்டில், கணியன் பூங்குன்றனார் என்னும் சங்கத்துச் சான்றோர் தோன்றிய பூங்குன்ற நாட்டின் தலைநகராகிய மதுரைமாநகரில், விசு, புரட்டாசி, இரண்டாந்தெய்தி வெள்ளிக்கிழமையில் முத்துக்கருப்பன் செட்டி யாருக்கு, சிகப்பிஆச்சியின் திருவயிற்றில் மகவாய்த் தோன்றினர்கள். கருப்பன் என்னும் பெயர் திருமாலைக் குறிப்பதாகும். சிகப்பி யென்னும் பெயர் செம்மை நிறமுடைய திருமகளைக் குறிப்பதாகும். தந்தையும் தாயும் திருமாலும் திருமகளும் என்ன இருந்தாலும் இவர்கள் சைவநெறிக்கே யுரியவர்களென்பதனை இவர்கள் தோன்றிய நன்னாளாகிய அக்காலை கூறுவது போன்று சிவனுக் குரியதாகிய திருவாதிரை காளிற் றோன்றினர்கள். இருபத் தேழு நாட்களுள் சிவபெருமானுக்குத் திருமாலுக்கும் உரிய நாட்களாகிய ஆதிரையும் ஓணமுமே இரு என்னும் அடைமொழி பெற்று மிளிர்வது தமிழ் மக்களின் சமயப் பற்றைத் தெரிவிப்பது போன்றிருக்கின்றது.

இவர்கள், இளமைப் பருவத்திலேயே தங்கள் குலமுறைக்கேற்ப "இரைகடலோடியுந் திரவியந்தேடு" தல் என்னும் வாய்மையைப் பின்பற்றி, இலங்கைக்குச் சென்று வாணிக முயற்சியில் ஈடுபட்டார்கள்;

பின்னர், தமது பதினொன்காவது ஆண்டில் தந்தையார் சிவபதம் எய்த, தமது ஊருக்குத் திரும்பிவிட்டார்கள். ஊர் வந்து சேர்ந்தநிலிருந்து தமிழ்ப்பயிற்சியிலேயே தன் முழுப்பொழுதையும் செலவிடத் தொடங் கினர்கள். இளமையில் இவர்கள் ஆசிரியரை அடுத்துக் கல்விபயின்றது, திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்த ஓராண்டளவேயாகும். பின்னர், தம் வழிபடு கடவுளாகிய விநாயகப் பெருமானையே ஆசிரியராக உள்ளத்தில் அமைத்து, தன் தனிமுயற்சியினுலேயே, தமிழ் மொழியில் இவர்கள் கல்லாத நூல் இல்லையென்று எவரும் புகழ்ந்துபோற்றும் வண்ணம் எல்லா இலக்கியங்களையும் கற்று வல்லவராஞர்கள். எப் பொழுதும், புலவர் பலரும் புடைசூழ இருந்து அரிய பொருள்களை ஆராய்ந்து மகிழ்வதையே தம் பொழுதுபோக்காகக்கொண்டுவந்தார்கள். இவர்களோடு இடைவிடாது பழகிவந்த புலவர்களில், சோழவந்தான் **அரசன் சண்முகனார், கந்தசாமிக் கவிராயர், சுந்தரேசுவர ஐயர்** முதலியோர் மிக்க தெருங்கியவர்க ளாவார்கள்.

சைவசித்தாந்த நூல்களையும், சைவத் திருமுறைகளையும், அவற்றின் நுண்ணியபொருள்களையும், மரபுகளையும் நன்கு உணர்ந்து பயின்றுர்கள். சமய நூலுணர்ச்சிக்கு ஆகம நூல்கள் இன்றியமையாதன என வுணர்ந்து வடமொழி பயிலத் தொடங்கினர்கள். ஒரு தக்க வடமொழிப் புலவரைத் தன்னுடன் வைத்துக்கொண்டு ஐந்தாண்டுகளுக்குள் அம் மொழியிலுள்ள நீதி நூல்கள், காவியங்கள், சம்பு, நாடகங்கள், அலங்கார நூல்கள், பாணினீயிலக்கணம் முதலியவற்றை உச்சரிப்பும் பொருளுணர்ச்சியும் நன்கு வாய்க்க முறையாகப் பயின்று தேர்ந்தார்கள். இவ்வடமொழிப் பயிற்சியின் பயனுக அம்மொழியிலுள்ள அணி இலக் கண அணிகளுக்கு, தமிழ் இலக்கியங்களினின்று இவர்கள் எடுத்துக் காட்டுகள் காட்டும் பொழுது, வடமொழிப் புலவர்களும் அவ்வணியின் இலக்கணங்களெல்லாம் வடமொழி இலக்கிய எடுத்துக் காட்டுகளிலும் சாலப்பொருத்தமுடையதென வியப்பார்கள். இவ்விருமொழியிலுமுள்ள சிறந்த நூற்கருத்துக்களை இவர்கள் ஒப்பிட்டுக் கூறும்போது இரு மொழிப் புலவர்களும் இன்பமும் பயனும் எய்துவார்கள். வடமொழி யிலுள்ள சிறந்த நூல்களையெல்லாம் தாய தமிழ் மொழியில் ஆக்கித்தர வல்லாரொருவர் வேண்டுமென யாம் தேடுவோமேல் நம் பண்டிதமணி யினும் தக்காரொருவரை இக்காலத்துக் காண்பதரிதென்றே கூறலாம். இவர்களது வடமொழிப் பயிற்சியை நன்குணர்ந்து இவர்களை மதுரை யிலுள்ள, இராமேச்சுர அறகிலைய வட மொழிக் கல்லூரியில் (Rameswaram Devasthana Sanskrit College) ஆலோசனைக் குழுவுறுப் பினராக நியமித்திருந்தார்கள்.

இவர்கள் தனியாக ஒரு சிற்றூரில் வாழ்ந்து தமிழ்பயின்று வந்தார் களேனும் இவர்களது தமிழ்ப்புலமையின் பெருமை தமிழ்நாடெங்கும் பரவத் தொடங்கிற்று. தமிழ்ச்சங்கங்களும், பல்கலைக் கழகங்களும்

இவர்களது பெரும்புலமையை நன்குணர்ந்து தமிழ்த்துறையில் இவர்கள் உதவியை நாடத் தொடங்கினர். மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் தொடக்க காலத்தொட்டே இவர்கள் உறுப்பினராக அமர்ந்துள்ளார்கள். இச் சங்கத்தில் நடைபெறும் தேர்வுகளுக்கு (பிரவேச, பால, பண்டித பரீட்சைகள்) முப்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தேர்வாளராக (பரீட்சகர்) இருந்து வருகிறார்கள். இச்சங்கத்தின் ஆலோசனைக்குழுவிலும், நிறைவேற்றுக் குழுவிலும் நீண்ட நாட்களாக உறுப்பினராக இருந்து வருகிறார்கள். தஞ்சை, காந்தளூர்த் தமிழ்ச்சங்கத்தில் இருபதாண்டுகளுக்கு மேலாகவே தொடர்பு கொண்டு அதன் ஆயுட்கால உறுப்பினராக அமர்ந்துள்ளார்கள். இச்சங்கத்தின் பதினொன்காவது ஆண்டு விழாவில் தலைமை தாங்கி இவர்கள் நிகழ்த்திய தலைமையுரை எல்லோராலும் பேசற்றப்படுவதொன்றாகும். இச்சங்கத்தில் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவுகள் பல. அச்சங்க வெள்ளிவிழாவில் அமைத்த புலவர் குழுவில் ஓர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளார்கள். பல்கலைக்கழகங்களில், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இவர்களைத் தமிழ் விரிவுரையாளராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டது. ஏழாண்டுகளாக அப்பல்கலைக் கழகத்தில் ஆசிரியராக அமர்ந்து மாணவர்களுக்கு அரிய நூல்களைப் பாடஞ் சொல்லி வந்திருக்கிறார்கள். இரண்டாண்டுகள் அப்பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராகவும் (Professor in Tamil) இருந்தார்கள். இப்பேராசிரியர் பதவியை முதன் முதலாகப் பெற்ற பெருமை தனித்தமிழ்ப் புலவர்களுக்குள் இவர்களுக்கே உரியதாகும். இப்பதவியில் இவர்களது ஆட்சித்திறனும், மற்றைய கலைப்பகுதிகளோடு ஒத்துழைக்கும் பான்மையும் பல்கலைக் கழகத்தாரால் மிகவும் பேரற்றப்பெற்றன. தனித்தமிழ்ப்புலமை கொண்டே ஒருவர் எவ்வுயரிய கலைப்பகுதியையும் ஆழ்ந்தறிந்து ஆட்சி செலுத்த இயலும் என்பதற்கு இவர்கள் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினர்கள். இப்பல்கலைக் கழகத் தமிழ்ப் பாடக்குழுவிலும் (Board of Studies) தமிழ்த் தேர்வுக் குழுவிலும் உறுப்பினராகவும், தலைவராகவும் இருந்து வந்திருக்கிறார்கள். இப் பல்கலைக் கழகப் பேரவையிலும் (Senate) கலைக்குழுவிலும் (Accademic Council) உறுப்பினராக இருந்து வந்திருக்கிறார்கள். சென்னைப் பல்கலைக் கழகத்திலும், திருவிதாங்கூர்ப் பல்கலைக் கழகத்திலும் தமிழ்ப்பாடக்குழுவின் உறுப்பினராகப்பலகாலம் இருந்து, இப்போது அவற்றின் தலைவராக விளங்கி வருகிறார்கள். இப் பல்கலைக் கழகங்களின் தேர்வுக்குழுக்களிலும் உறுப்பினராகவும், தலைவராகவும் இருந்து வருகிறார்கள். யாழ்ப்பாணத்திலுள்ள கீழ் நாட்டுக் கல்வி நிலையம் (School of Oriental Studies) என்னும் கல்லூரிக்கு தேர்வாளராக இருந்து வருகிறார்கள். அங்கட்டிலுள்ள **ஆரிய திராவிட பாஷாபிவிருத்திசங்கத்தின்** பதினோராம் ஆண்டுவிழாவிற்குத் தலைவராக அழைக்கப்பெற்று யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் அதைச்சார்ந்த பலதிலைகளிலும் பல அன்பர்களால் வரவேற்கப்பெற்று ஒரு திங்களுக்கு மேலாகத் தங்கிப் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தி வந்திருக்கிறார்கள். அச்சொற்பொழிவுகளைப் பலமொழிகற்று மேல்நாட்டுப் பல்கலைக் கழகங்

களில் பெரும்பட்டங்கள் பெற்ற அறிஞர்களும் பிறமொழிப் பயிற்சியே இன்றித் தமிழ் ஒன்றிலேயே வாழ்நாள்முழுதும் செலவிட்டுக்கற்று வல்லவராய தமிழ்ப் புலவர்களும் ஒரு சேர மகிழ்ந்து பாராட்டினர்கள்.

இவர்கள் தலைமை தாங்கிய கழகங்கள், மாநாடுகள் பலவற்றுள், சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாசத்தின் வெள்ளிவிழா, கரந்தைத் தமிழ்ச்சங்க ஆண்டு விழா, தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் பொன் விழா, துறையூர் மாநாட்டுத் திறப்பு விழா, பூவாளூர் சைவ சித்தாந்த சபை விழா, பேரூர் சற்சங்க விழா, சென்னைத் தமிழ்ப் புலவர் மாநாடு, குறுந்தொகை மாநாடு முதலிய சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவையாகும்.

திருச்சிராப்பள்ளி எல்லா இக்கிய ஒலிபரப்பு நிலையத்தில் பல அரிய தமிழ்இலக்கியப் பொருள்களைப்பற்றி அடிக்கடி பேசி வருகிறார்கள். இப் பெரியாரது புலமையின் பெருமையெல்லாம் ஆழ்ந்தறிந்து எழுதுவ தென்பது ஒரு கட்டுரையளவில் நிற்பதன்று. பல இயல்களையுடைய ஒரு நூலாக வெளிவந்தாற்றான் ஒருவகையாக எழுதப்பெற்றது என்று அமைவு பெறலாம். இவர்கள் உலகியலில் மக்களிடத்துப் பழகுவதில் மிகவும் இனிமையுடையவர்கள் ஆவார்கள். இலக்கண இலக்கிய, சமயப்புலமையோடு நில்லாது சோதிட நூற் புலமையும் கண்டு பெற் றிருப்பதை நினைக்கும்போது இவர்களோடு ஒரே காட்டிற் பிறந்த கணியன் பூங்குன்றனார் நம் நினைவுக்கு வருகின்றார். அப்பெரியார் போலவே இவர்களும் ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற உண்மை யைக் கடைப்பிடித்து ஒழுகி வருகின்றார்கள். தங்களோடு பழகுகின்ற வர்கள் இளைஞர், முதியர், கற்றோர், கல்லார், செல்வர், வறியர், என்ற பாகுபாட்டில் எப்பகுதியினராயிருந்தாலும் அவரவர்களும் தன் னிடத்து அன்பும் வியப்பும் கொள்ளுமாறு நடந்து கொள்வார்கள். ஒருமுறை இவர்களோடு பழகியவர்கள் எப்பொழுதும் இவர்கள் அன்பை மறவார். நகைச்சுவை ததும்ப இவர்கள் பேசும் பேச்சுக்கள் பழகிய வர்கள் உள்ளத்தில் எப்பொழுதும் நினைந்து நினைந்து மகிழத்தக்கன வாகும். திருமுறைகளிலும் சைவசித்தாந்த நூல்களிலும் நுண்ணிய பயிற்சி வாய்ந்ததோடு தன் வாழ்க்கையையும் சமய வாழ்க்கையாகவே நடத்தி வருகின்றார்கள். சமய வாழ்க்கையில் பிறர் அறிந்து போற்ற வேண்டுமென்னும் ஆசாவாச நிலைமையைப் பெரிதும் வெறுக்கின்றவர்கள். சமயம் என்பது ஆன்மாவுக்கும் ஆண்டவனுக்கும் தனித்து ஏற்படும் உறவென்பதும் சமயத்தின்பேரால் பெருமை பேசுவதும் சச்சரவு செய் வதும் தக்கதல்ல வென்பதும் இவர்கள் கொள்கை. உலகத்தில் ஒருவன் துய்க்கும் எல்லா இன்பங்களிலும் புலன்களால் நுகரப்படும் கல்வி இன்பமே சாலச் சிறந்ததென்பதும், ஆண்டவன் அருளுமுத இன்பம் ஒன்று தான் அவ்வின்பத்திற்கு மேம்பட்ட தென்பதும் இன்பத்தைப் பற்றிய, இவர்கள் கொள்கையாகும். இப்பெரியாரது இல்லற வாழ்க்கை அவ்வறத்திற்கேற்ற எல்லா நலங்களும் வாய்ந்ததாகும். அக்கலங்க

ளெல்லாம் வாய்த்த இவர்கள் அவ்வறத்திற்குரிய கடமைகளை ஒரு சிறிதும் வழுவாது போற்றி வருவது இல்வாழ்வார்க்கெல்லாம் எடுத்துக் காட்டென்றே கூறலாம். இவர்களுக்கு வாழ்க்கைத் துணையாக அமைந்த திரு. மீனுட்சிஆச்சியார் கொண்டான் குறிப்பறிந்து செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருக்கும் கற்குணம் உடையார்; யாவர்க்கும் தாயாய் நின்று தண்ணளிசுரக்கும் தக்கார்; இல்லறம் நடாத்துதலில் ஒரு சிறிதும் துணைவர்க்குக் கவலை ஏற்படாவண்ணம் கண்காணிக்கும் ஆற்றல் படைத்தவர்கள்; இவர்களுக்கு மகவாகத் தோன்றியவர்கள் சுப்பிர மணியன், கனகசபாபதி, மாணிக்கவாசகன், தியாகராசன் என்னும் ஆண்மக்கள் நால்வரும், மங்கையர்க்கரசி, மீனுட்சி, சகுந்தலை என் னும் பெண்மக்கள் மூவரும் ஆவார்கள். இவர்களில் முதல் மகன் சுப்பிர மணியனுக்கு ஒரு மகன் உண்டு. இம்மக்களெல்லாம் தாய் தந்தையின் கற்குண கற்செயல்கள் வாய்க்கப் பெற்றுள்ளமை பெரிதும் போற்றத் தக்கதாகும்.

புல்மைக்கும் தெரண்டுக்கும் எடுத்துக்காட்டாக நிற்கும் திரு. பண்டிதமணியவர்களும், இல்லறத்திற்கு எடுத்துக்காட்டாக நிற்கும் இவர்களுடைய மனைவி,மக்களும்,இறைவன் திருவருளால் எல்லா நலனும் மேலும் மேலும் ஓங்கி வளரப்பெற்றுப் பல்லெடுங்காலம் வாழும் வண்ணம், உலகமீன்ற அன்னையோடு தில்லையம்பொதுவில் திருநடஞ் செய்து எம்மை வாழ்விக்கும் எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளை, மனமொழி மெய்களால் வணங்குகின்றோம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயவெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

—ஆளுடைய பிள்ளையார்.

பெ. இராம. இராம. சித. சிதம்பரம் செட்டியார்
நீ. கந்தசாமி

'மணிமலர்' பதிப்பாளர்கள்.

வாழ்க.

ஆங்கிலவாணி

சுவாமி விபுலாநந்தர்
மாயாவதித் தவப்பள்ளி — இமயமலைச்சாரல்

திருமலிக்தோங்கிய நிலவுலகத்தின் வடமேற்குக்கோடியிலே, பலவளம் பொலிந்து விளங்கும் ஆங்கில நாட்டின் கலைச்செல்வத்தை ஆராயப்புகுமுன், அந்நாட்டு மக்களது வரன்முறையை ஒரு சிறிது அறிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும். காற்றிசையினும் கடலினுற் சூழப்பட்ட பிரித்தானியாவென்னுந் தீவின்வடபாலிலே ஒருபகுதி ஸ்காட்லாந்து எனப்படும். மேற்றிசையில் ஒருபகுதி உவேல்சு எனப்படும். இவ்விருபகுதியும் நீங்கலாக எஞ்சி கின்ற பெரும்பாகம் இங்கிலாந்து (அங்கிளத்தரை) எனப்படும். 'அங்கிளர்' என்னும் மொழிதிரிந்து ஆங்கிளர், ஆங்கிலர், இங்கிலீஷ் எனவாயிற்று. தெற்குக் கரையிலே சுண்ணக் கற்பாறைகள் மருவிக் கடலிலிருந்து நோக்குவோருக்குக் கரை வெண்ணிறமாகத் தோற்றுதலின், ஆங்கில நாட்டுக்கு அல்பியன் (Albion) வெண்ணிறத்தீவு, சுவேதத்துவீபம் என்னுங் கவிதைப் பெயருண்டு மேற்றிசையிலே கடலுக்கப்புறத்திலே ஐர்லாந்து என்னும் தீவுளது. இது பசும் புற்றரைகள் செறிந்திருத்தலின், மாகதத் துவீபம் எனும் கவிதைப்பெயர்பெற்றது.

மேற்குறித்த நான்கு தேசங்களிலும் வாழும் மக்கள் வெவ்வேறு இனத்தினர். ஸ்கொட்ஸ், உவெல்ஷ், இங்கிலீஷ், ஐரிஷ் என்னும் நான்கு இனத்தினரும் ஆதியிலே வழங்கிய மொழிகளும் வேறு வேறு ஆவன. பூர்வத்தில் இவர்கள் கைக்கொண்ட சமயமும் வேறு. ஆங்கிலர் வருவதற்குமுன் பிரித்தானியாவின் கீழ் தென்பாகங்களில் வாழ்ந்த மக்கள் பிரித்தன் என்னும் இனத்தினர். இவர்கள் வெள்ளாட்டுத் தொடர்பின்றி ரோகிகங் குறைந்தவர்களாயிருந்தனர்.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலே, இத்தாலி தேசத்தின் தலைநகராகிய உரோமாபுரியானது பெரிய சக்கர வர்த்திகளுக்குரிய இராசதானியாக விளங்கியது. இச் சக்கரவர்த்திகள் தங்கள் இயற் பெயரோடு சீசர் என்னும் விருதுப் பெயரினைச் சார்த்தி ஆகஸ்தஸ் சீசர், திபேரியஸ் சீசர், கிளோடியஸ் சீசர் என்றித்தகைய பெயர்களைத் தாங்கினார்கள். சீசர் என்னும் பெயரினைத் தமக்கு இயற் பெயராகக் கொண்டவர் யூலியஸ் சீசர் எனப் பெயரிய பராக்கிரமசாலி. இவர் உரோமாபுரிச் சேனைகளுக்குத் தளபதியாகச்சென்று பல நாடுகளை மேற்கொண்டு உரோமச் சக்கராதிபத்தியத்தின் எல்லையை அகலச் செய்தார். கிளோடியஸ் சீசர் காலத்திலே கி. பி. 43-ஆம் ஆண்டிலே, பிரித்தானியாவின் தென் கீழ்ப்பாகங்கள் உரோமரது ஆளுகைக்குட் பட்டன. வடபாலிலுள்ள கலிடோனியா எனப்படும் ஸ்கொட்லாந்தை உரோமர் கைப்பற்றவில்லை. காலாறு ஆண்டுகளுக்கு உரோமர் ஆங்கில நாட்டை ஆண்டனர். அக்காலத்திலே அவர்கள் அமைத்த பாதைகளும் பாலங்களும் இன்றும் இருக்கின்றன. உரோமச் சக்காதிபத்தியம் நிலை குலைந்த காரணத்தினாலே உரோமர் வெளியேறிய பின், வடபாலிலுள்ள ஸ்கோட்ஸ் தெற்கே வந்து ஆகிரைகளைக் கவர்ந்து பிரித்தானியரைச் சில காலந் துன்புறுத்தினர்.

ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே, ஜெர்மனி, ஸ்காண்டி நேவிய (இக்காலத்து நோர்வே, சுவீடன்) நாடுகளிலிருந்து கடல் கடந்து சென்ற சாக்சனியரும், அங்கிளரும் பிரித்தானியாவின் கீழ்த் திசையிலே சில பகுதிகளைப்பற்றி ஆளுகை புரிந்தனர். தென்மார்க் காட்டினராகிய தேனர் அவரை மேற்கொண்டு தம்மாணை செலுத்தினர். ஐஞ்ஞூறு ஆண்டுகளுக்கு நாடு பல குறுநில மன்னர்களால் ஆளப்பட்டு வந்தது. இவ்வாறு வந்து குடியேறினோர் பலருடைய கலப்பினாலே ஆங்கில மக்கள் தோன்றினர். வாடைக்காற்றுக் கஞ்சாது சிறு படகுகளிலே கடல்மீதுசென்ற வைக்கிங்ஸ் என்னும் ஆங்கில முன்னோர் போர்த்தொழிற் பிரியராயிருந்தனர். பண்டைத்தமிழ் நாட்டிலிருந்த குறுநில மன்னரைப்போலப் பூர்வ ஆங்கிலரும் ஒருவரோடொருவர் போர்மலிந்துகொண்டிருந்தனர். சிறையாகப் பிடிக்கப்பட்டு உரோமபுரியை அடைந்த ஆங்கில இளைஞர் சிலரைக்கண்ட கத்தோலிக்க கிறிஸ்த சமயத் தலைமைப் பீடாதிபதியாகிய பாப்பரசர் அவர்கள் தோற்றப்பொலிவை நோக்கி வியந்து இவர்கள் 'அங்கிள்ஸ்' அல்ல 'ஏஞ்ஜெல்ஸ்' (வானவர்) எனக்கூறி ஆங்கில நாட்டிலே கிறிஸ்தவ சமயத்தை பரப்பும்படி சில குருமாரை அனுப்பினர்.

கிறிஸ்த சமயம் புகுதற்கு முற்பட்ட காலத்திலே, ஆங்கிளசாக்சன் என்னும் பூர்வ ஆங்கிலத்திலே பேவுல்வ் (Beowulf) எனப்பெயரிய காப்பியமொன்று இயற்றப்பட்டது. இதன் பகுதிகள் இன்றும் இருக்கின்றன. கிறிஸ்து சமயம் புகுந்தபின் பழைய போர்த்தொழிலைக் கைவிட்டு மக்கள் கட்டுக்கடங்கி வாழத் தொடங்கினர். கவிகளும் சமய

சம்பந்தமான நூல்களை ஆக்கினர். கேய்ட்மன் (Caedmon,) கயின்வுல்வ் (Cynewulf.) அல்பிரட் அரசர் (King Alfred) என்பின்னோர் ஆக்கிய நூல்கள் சமயசம்பந்தமானவை.

கி. பி. 1066ஆம் ஆண்டிலே, பிராஞ்சு தேசத்தின் வடபாலிலுள்ள நோர்மாண்டி காட்டுச் சிற்றரசனுகிய உவில்லியம் என்பான் ஆங்கில காட்டின் மீது படையெடுத்துச்சென்று வெற்றிகொண்டு அங்காட்டின் முடிமன்னனனுன். இவனை உவில்லியம்-த-கோங்கரர் 'வாகை சூடிய உவில்லிய மன்னன்' எனச் சரித்திர நூலாசிரியர் கூறுவர். இம் மன்னனேடு நோர்மானிய பிராஞ்சியர் அநேகர் ஆங்கில காட்டிலே குடியேறினர். ஆங்கிலமொழியும் நோர்மானிய பிரஞ்சுப்பதங்களைஏற்று வழங்கத் தொடங்கியது. அதனற் பாஷையானது வளமெய்தியது. ஆயினும் காட்டிலே அரசியற் கலக்க மிருந்தமையின், பெரிய நூல்கள் தோன்றவில்லை. முந்நூருண்டின் எல்லையிலே நோர்மான் பிராஞ்சியர் வேறுபாடின்றிக் கலந்து ஆங்கிலரோடு ஒன்றுயினர். காட்டிலும் சமாதானம் நிலவியது.

கி. பி. 1340 முதல் 1400 வரையும் வாழ்ந்த சாசர் (Chaucer) என்னும் கவியை ஆங்கிலக்கவிதைவானின் உதயதாரகையென இலக்கிய வரன்முறை ஆசிரியர் கூறுவர். இவர் முதலிலே தோன்றிய காரணத்தினுலே பெருமையுற்றனரேயன்றிக் கவித்திறமையினுல் அல்ல. பிராஞ்சிய செய்யுள் மரபினைப் பின்பற்றிப் புதுயாப்பு முறைகளை வழங்கினர். கந்தர்பேரி எனப்பெயரிய ஆலயத்திற்கு யாத்திரை புரிந்த யாத்திரீகர்கள் வழியிலே ஒரு சத்திரத்தில் இறங்கி நிற்கும்போது தத்தமது வாழ்க்கை யநுபவத்திலே கண்டறிந்த சரித்திரம் ஒவ்வொன்றைக் கூறுவதாக அமைத்துக் கந்தர்பேரிக்கதைகள் என்னும் காப்பியத்தையும் சில சிறு நூல்களையும் சாசர் வகுத்தார். சாசர் காலத்திலிருந்து ஒரு நூற்றைம்பது ஆண்டுகளுக்குப்பின் வாழ்ந்த ஸ்பென்சர் (கி. பி. 1552—1599) என்னும் மகாகவி கவிஞர்க்குக்கவிஞர் எனப்போற்றப்பட்டார். இவரியற்றிய அரமடந்தையார் இராணி (Faeri Queen) என்னும் பெரும் காப்பியம் கவிநயம் நிறைந்தது. கற்பனையிலும் செஞ்சொல்லாட்சியிலும் தமது சிவக சிந்தாமணியை நிகர்த்தது. ஸ்பென்சர் காலத்திலே ஆங்கில காட்டிலே அரசபுரிந்த எலிசபெத்து இராணி இல் வாழ்க்கையுட்புகாமல், மணிமுடிசூடி, காட்டினைப் பரிபாலித்தலிலே முழுமனத்தையும் செலுத்தி வந்தாள். பாவாணர்களையும் சேனைத் தலைவர்களையும் பாராட்டி அவர்களுக்கு வேண்டுவன கல்கினுள். அதனற் கவிதை வளம் எய்தியது. மக்களுடைய சிந்தை விசாலிப்பதற்கு வேறு சில சரித்திர நிகழ்ச்சிகளும் ஏற்பட்டன. அவற்றைச் சுருக்கமாகக் கூறுகின்றும். எலிசபெத்து இராணியே ஸ்பென்சரது பெரும் காப்பியத்திற்குக் கவிதைத் தலைவி.

ஆங்கிலவாணி

எலிசபெத்தின் தங்கையாகிய எட்டாம் ஹென்றி மன்னன்காலத்திலே ஆங்கில நாட்டு மதக் கொள்கையிலே ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டது. இம் மன்னன் ஒருவர் பின்னொருவராக ஆறு மனைவியரை மணந்தான். முதல் மனைவியை நீக்கிவிட்டு இரண்டாம் மனைவியை முறைமையாக விவாகஞ் செய்து இராணியாக்குதல் கருதி, அவ்வாறு செய்தற்கு உத்தரவளிக்கும்படிக்குத் தனது சமயத் தலைவராகிய உரோமாபுரிப்பாப்பரசரைவேண்டினான். கத்தோலிக்க கிறிஸ்தவ சமயக் கொள்கைப்படி முறையின் மணந்த மனைவியை நீக்குதல் மரபன்று ஆதலின், பாப்பரசர் உத்தரவளித்திலர். ஹென்றி மன்னன் அவரது ஆணைக்கு அடங்காது, ஆங்கில நாட்டின் தலைமையோடு அக்காட்டு மக்களின் சமயநெறித் தலைமையையும் தானே தாங்குவதாக முற்பட்டுக், கத்தோலிக்க சமயத் தொடர்பினின்று நீங்கி, ஆங்கில திருச்சபையென ஒன்றினையேற்படுத்திச் சில சமய அத்தியக்ஷர்களைத் தன் வசப்படுத்தித் தன் கருத்தை நிறைவேற்றினான். இதனால் ஆங்கில நாட்டு மக்களின் சிக்தையிலே ஒரு புத்துணர்ச்சி யேற்பட்டது.

ஐரோப்பியர் அமெரிக்காக் கண்டத்தினைக்கண்டு பிடித்தது மற்றொரு விசேஷ நிகழ்ச்சி. கிறிஸ்தோபர் கோலம்பஸ் என்னும் மீகாமன் ஸ்பானியா தேசத்து இராணியாகிய இசபெல்லாவின் பொருளுதவியைப் பெற்றுக்கொண்டு மேற்குக்கடலைக் கடந்து இந்தியாவுக்குச் செல்லும் ஒரு புதிய மார்க்கத்தைக் கண்டுபிடிக்கும் நோக்கமாகச் சில பாய்க் தப்பல்களை அமைத்துக்கொண்டு புறப்பட்டான். அக்காலத்திலே நமது பாரதநாடு பெருஞ் செல்வமுற்ற நாடாக விளங்கியது. நமது நாட்டு விளை பொருள்கள் அராபிக்கடல், பாரசீகக்கடல், செங்கடல் வழியாகச் சென்று பின்பு கரை வழியாகவும், மத்தித்தரைக்கடல் வழியாகவும் இத்தாலிநாட்டுத் துறைமுகங்களை அடைந்தன. வேனிஸ் நகரம் சிறந்த வர்த்தக ஸ்தலமாக விளங்கியது. இந்தியாவிலிருந்து சென்ற பட்டுத் துணிகளும், பொன்னும், முத்தும், யானைத்தந்தமும், மிளகும், சந்தனமும் இலவங்கப்பட்டையும் பிறவும் மேனாட்டு மக்களுடைய உள்ளத்தைக்கவர்ந்தன. பூவுலகம் கோளவடிவானது என்னுங்கருத்து மேனாட்டிலே பரவிய அக்காலத்திலே, கிழக்கு நோக்கி இந்தியாவுக்குச் செல்ல ஒருபாதை இருப்பதினாலே, மேற்கு நோக்கிச் செல்லவும் ஒரு பாதை இருக்கவேண்டுமென்னும் எண்ணம் கல்வியறிவுடையோர் சிக்தையில் உலவியது. கோலம்பஸ் புறப்பட்டது இந்தியாவுக்குச் செல்லும்வழி காண்பதற்கு, ஆனால் கண்டுபிடித்தது அமெரிக்காக் கண்டத்தை கி. பி. 1492-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலே, கொலம்பஸ் மத்திய அமெரிக்காவிலே சில தீவுகளை அடைந்தான்.

அக்காலத்திலே மத்திய அமெரிக்காவிலே மெக்சிக்கோ, பீருவன்னும் நாடுகள் சிறந்த நாகரீகம் படைத்திருந்தன. மிகப்பழைய காலத்திலே, தமிழ் நாட்டு வணிகர் கிழக்கு நோக்கிக் கடல் கடந்து சென்று மத்திய அமெரிக்காவை அடைந்தனரென்றும் அங்கு நிலவிய நாகரீகம் நமது நாகரீகத் தொடர்புடைய தென்றும் அறிஞர் கருதுகின்றனர்.

சாமன்லால் என்னும் ஆசிரியர் எழுதிய 'இந்து அமெரிக்கா' என்னும் நூலிலேபலசான்றுகளோடு இவ்வுண்மை நிறுவப்பட்டிருக்கிறது. அஃது ஒருபாலாக, மேனாட்டாராகிய கொலம்பஸ் மீகான் அமெரிக்காவைக் கண்டுபிடித்தபின் ஸ்பானியா தேசத்து மக்கள் துப்பாக்கியோடு சென்று மத்திய அமெரிக்க மன்னரைத் தக்திரத்தாலும் துப்பாக்கி வன்மையாலும் சிறைப்படுத்தி, அவர்கள் குவித்துவைத்த பொன்னைக் கவர்ந்துகொண்டு தம்மூர்க்கு வந்தனர்.

ஆங்கில நாட்டினராகிய கடற்கொள்ளைக்காரர் இடையில் நின்று, அப்பொன்னில் ஒரு பகுதியைக் கைப்பற்றிக்கொண்டு தம்மூர்க்குச் சென்றனர். அஃதன்றியும் எலிசபத்து ராணியின் அரசியலாற்றலினாலே, ஆங்கில நாட்டுச் சேனையங்கள் சில போர்க்களங்களிலே, ஸ்பானிய சேனைகளை வெற்றிகொண்டன. ஐரோப்பாவின் மேற்குக் கரையில் உளவாகிய போர்த்துக்கல், பிரான்சு, ஒல்லாந்து நாடுகள் கடல் வர்த்தகத்தினாலே பொருளீட்டினவெனினும், பொருளும்கப்பற்படையுந் திரட்டிய வகையில் ஆங்கில நாடே முன்னணியில் நின்றது.

மேனாட்டார் அறிவு விசாலிப்பதற்குரிய மற்றொரு நிகழ்ச்சி அராபியா தேசத்திலே நிகழ்ந்தது. திருநாவுக்கரசு சுவாமிகள் காலது நாட்டிலிருந்த காலத்திலே அராபி நாட்டுமக்கமா நகரிலே முகம்மது நபி அவதரித்தார். நபியின் சிஷ பரம்பரையில் வந்தோர் மேற்கேயுள்ள பல நாடுகளிலே ஆணை செலுத்தி அரசு புரிந்ததோடுகூட அறிவொளி விளங்குமாறுஞ் செய்தார்கள். கிறிஸ்துநாதர் காலத்திற்குப் பல நூற்றாண்டுகளின் முன்னே, யவனபுரத்தில் வாழ்ந்த அறிஞர்கள் இயற்றிவைத்த அரிய கலைநூல்கள் அராபியர் வழியாக மேனாட்டிலே பரவி அறிவொளி பரப்பியன. யவனவாணியின் செல்வப் புதல்வியருள் ஒருவராக ஆங்கிலவாணி உதித்தாள்.

ஆண்டவன் ஒருவனேயாயினும் பற்பல நாட்டுமக்கள் அவனுக்குப் பற்பல திருநாமங்களைத் தந்து வழிபடுமாறுபோலச் சொல்லின் கிழத்தியாகிய கலைவாணியும் பற்பல நாட்டுமொழிச் சார்பினாலே பற்பல உருவங்களை வகித்தாள். ஆதியிலே கான்முகக் கடவுளது காவிலிருந்து வேதத்தை யருளி, இடைக்காலத்திலே வேத வியாசரது நாவினின்று மாபாரதத்தைத் தோற்றுவித்துக் காளிதாசனை யுள்ளிட்ட உத்தமக் கவிகளது காவிலே களி நடம்புரிந்தாள் ஆரியவாணி. இமயத்திற்கு வட பாலதாய் உத்தர குருவெனப் புராணங்கள் கூறும் போக பூமியை யுள்ளிட்டதாய், நாற்பதுகோடிமக்களுக்கு உறைவிடமாகிய சீனத்திலே தோன்றிய கவிவாணரது நாவினை இருப்பிடமாகக் கொண்டாள் சீனவாணி. பண்டைக்காலத்திலே, யவனபுரத்தாரோடு போர்மேற்கொண்டும் கட்புப்பூண்டும் மேற்றிசைக்குங் கீழ்த்திசைக்கும் நடு நாடாகி, அக்கினி தேவனை வழிபடுவோருக்கு உறைவிடமாகிப் பொலிந்த செல்வப் பாரசீகப் பழந்தேசத்துமக்கள் கவிகூறும்வண்ணம் அந்நாட்டுப்புலவர்நாவினுன்று கவி சுரந்தளித்தாள் பாரசீகவாணி. ஹோமர் என்னும் அத்தகக் கவியின் நாவிலிருந்து தோயம் என்னும் ஈலிய நாட்டிலே நிகழ்ந்த போரினை

விரித்துக்கூறும் ஈவிய காவியமும், அப்போர்க்களத்திலே சிறந்து விளங்கிய உலீசன் (Ulysses, Odyssens) என்னும் வீரனது நிகழ்ச்சிகளைக் கூறும் உலீச காவியமும்ஆகிய வீரகாவியங்களை அளித்தும், எய்சிக்கிலீஸ், அரிஸ்தோபனீஸ், இயூரிப்பிடீஸ் என்னும் நாடகக் கவிகள் வாயிலாக 'என்றும் புலராது யாணர் நாட்செல்லுகினும் நின்றலர்ந்து தேன் பிலிற்றும் நீர்மைய' வாகிய அழகிய நாடகங்களை அளித்தும், பிண்டார் என்னும் கவிவாணர், சஃபோ என்னுங் கவியரசி வாயிலாக அகப் பொருட்டுறை தழுவிய இசைப் பாடல்களைத் தோற்றுவித்தும், சோக்ரத்தீஸ், பிளேத்தோ, அரிஸ்தாத்தில் என்றித்தொடக்கத்த தத்துவ ஞானிகள் வாயிலாக உண்மைநூல், ஒழுக்கநூல்களைத் தோற்றுவித்தும் பண்டை யவனமொழிக்கு ஆக்கமளித்தாள் யவனவாணி. உரோமகவாணி இத்தாலியவாணி, ஜோமானியவாணி. பிராஞ்சியவாணி, ஆங்கிலவாணி யென்றின்னே செல்லரம் யவனவாணியின் செல்வப்புதல்வியரே யாவர்.

கணிதம், சிற்பம், வைத்தியம், காவியம், தர்க்கம், தத்துவம் என்னும் அருங்கலைகளுக்கெல்லாம் தாயகம் யவனபுரமே யாகும். ஆதலினலன்றே, மேனாட்டுக் கலைக்கழகங்களிலே, யவனபுரத்து மொழியாகிய கிரேக்கமொழியும் உரோமருக்குரியலத்தீன் மொழியும் பெரிதும் கற்கப்பட்டு வருகின்றன. எலிசபெத்து இராணி காலத்திலே, அமெரிக்காக் கண்டத்துப் பொருட் செல்வமும் பழைய யவனபுரத்துக் கலைச்செல்வமும் ஆங்கில நாட்டிற்கு உரியவாயின. ஸ்பென்சர் என்னும் மகாகவி 'அரமடக்தையர் இராணி' என்னும் பெருங்காப்பியத் தோடமையாது அழகுபொருந்திய சிறு காப்பியங்கள் பலவற்றையும் செய்தார். "ஆயன்நாட்குறிப்பு" என்பது அவற்றுள் ஒன்று. அது இயற்கை வனப்பினைக் கூறுவது.

பலவகையிலும் ஆங்கிலநாடு பொலிவுற்ற இக்காலத்திலே தான் செக்சிற்பியார் (ஷேக்ஸ்பியர்) என்னும் சிறந்த நாடகக் கவிதோற்றினர். இவருடைய கவிவனப்பினை 'மதங்கசூளாமணி' யென்னும் நூலிலே சற்று விரிவாகக் கூறியிருக்கின்றோம். யூலியஸ்சீசர் எனும் நாடகத்தின் ஒரு பகுதியின் மொழிபெயர்ப்பை ஈங்குத்தருகின்றோம். இக்காடகத் தலைவராகிய யூலியஸ்சீசர் பராக்கிரமசாலி யென்றும் சேணைத்தலைவ ரென்றும் முன்னர்க் குறிப்பிடப்பட்டார். உரோமாபுரியில் வாழ்ந்த காஷியஸ் எனப் பெயரிய சனத்தலைவனொருவன் கல்கா, திரேபோணியஸ், லிகாரியஸ், டேசியஸ். சின்ஞ, சிம்பர், என்பாரையும் நீதிமானும் யூலியஸ் சீசரது கண்பனுமாகிய மார்க்கஸ் புரூட்டஸையுந் தன்வயப்படுத்திப் பங்குனித் திங்களின் நடுநாளில், கண்பகலில், அத்தாணி மண்டபத்தில், யூலியஸ் சீசரது உயிரைக் கவர்வதற்கு ஏற்பாடு செய்தனன். குறித்த தினத்திற்கு முன்னிரவில், விண்வீழ்கொள்ளிகளும், தூமகேதுக்களும் பலவகை உற்பாதங்களுந்தோற்றியன. யூலியஸ் சீசரின் மனைவி கல்பூர்ணியா தீக்கனவுகண்டு அச்சமுற்றெழுந்து, புறத்தே நிகழுகின்ற உற்பாதங்களினால் உள்ளம் அவலித்துத், துயிலெழுந்திருந்து, காலைப்பொழுது வந்ததும் கணவனது முன்னிலையை யடைந்து,

பேரிரவில் நடந்தவெலாம் பீழையினை வீளக்கப்
பேதலிக்கும் உளச்சிறியேன் பேசுகின்ற மொழிகள்
ஆருயிர்க்குத் தீவை! கின தருட்செவியில் வீழ்க,
அகத்திடையின் றிருக்கிகே, அவைபுகுத லொழிக,

எனக் குறையிரந்துவேண்டி நின்றனள்.

அதனைக்கேட்ட சிசர் புன்னகை புரிந்து,

அஞ்னெர்க்குச் சதமாணம், அஞ்சாத நெஞ்சத்(து)
ஆடவனுக்(கு) ஒருமரணம். அவனிமிசைப் பிறந்தோர்
துஞ்சுவர், என்றறிந்திருந்தும் சாதலுக்கு நடுங்கும்
துன்மதிமூ டரைக்கண்டாற் புன்னகைசெய் பவன்யான்

இன்னலும்யா னும்பிறந்த தொருதினத்தில் அறிவாய்;
இளஞ்சிங்கக் குருளைகள்யாம்; யான்மூத்தோன் எனது
பின்வருவது இன்னல்எனப் பகைமன்னர் அறிவார்,
பேதுறல்பெண்ணைனக்கே! யான் போய்வருதல் வேண்டும்,

எனக் கூறினர்.

இத்தருணத்தில் டேசியஸ் என்பவன் வந்து அத்தாணி மண்டபத்திற் குழுமியிருந்த முதியோர் சிசரை அழைத்து வரும்படி சொல்லியதாகத் தெரிவித்தான். சிசர் முதலிலே மறுத்துப் பின்பு இசைந்து உடன்போயினர். வழியில் ஒரு சேவகன் ஒரு கிருபத்தைக் கொண்டுவந்து கொடுத்து 'இது சிசருடைய சுகத்தைக் கோரியது, இதனையுடனே படித்தருளவேண்டும்' எனச்சிசர் கையிற்கொடுத்தனன். 'நல்லது கண்ப! சனங்களுடைய சுகத்தைக்கோரிய கிருபங்களைப்படித்த பின்பு இதனைப்படிக்கிறேன்' என்று கூறிவிட்டுச் சிசர் அத்தாணி மண்டபத்தை நோக்கி நடந்தனர். ஆங்குச் சிம்பர் என்பவன் முற் பட்டுவந்து முழந்தாட்படியிட்டு நின்று, 'மஹௌதாரிய மஹாப் பிரபுவே! எழையேனது விண்ணப்பத்திற்கிரங்கி எழையேனது சகோதரனை மன்னித்தருளவேண்டும்,' எனவேண்டிநின்றனன்.

சிசர் அவனை நோக்கித்,

தாழ்ந்து மென்மொழி யுரைத்திடேல், தாணியிற் பணிந்து
வீழ்ந்து நைபவர் பொய்யுரைக் கிரங்கிய வீணர்
சூழ்ந்து செய்தன தடைத்துப்பின் சோர்வினை யடைவார்,
ஆழ்ந்து செய்வன செய்யுமயான் அவர்நெறி அணையேன்;

அண்ணல் நீர்மையேன், பிழைசெயேன், அணுவளவேனும்
நண்ணும் நீதியிற் பிரிந்திடேன், காயெனக் கதறிக்
கண்ணில் நீர்மிக நிலத்தினிற் புரள்வதாற் கருதும்
எண்ணம் முற்றுறும் என்னநீ எண்ணுவதிழிவே,

எனக் கூறச் சார்ந்து நின்ற மார்க்கஸ் புரூட்டஸ் சிசரை நோக்கி, 'ஐய! நான் இச்சகம் பேசுவேனல்லேன், தேவரீரது திருக்கரத்தை முத்தமிட்டேன், சிம்பரின் விண்ணப்பத்துக்கிரங்கி அவரது சகோதரனை

விடுதலை செய்தல் வேண்டும், என்றனன். சமீபத்தில் நின்ற காஷியஸ் சீசரை நோக்கி, 'மகிமை பொருந்திய சீசரே! மன்னிக்கவேண்டும்! உம்மிருதாளிணையினையும் பற்றினேன், சிம்பரின் சகோதரனை மன்னிக்கவேண்டும்,' என்றனன். சீசர் தம்மைச் சூழ்ந்துநின்று விண்ணப்பித்தோரைநோக்கி,

இரங்குதிர், என்ன இரக்கும் நீர்மையர்
தமைப்பிறர் இரக்கிற் றயைகாட் டுகரே;
நும்போல் வேனெனின், நும்மொழிக்கு இசைவேன்;
வானகம் மிளிரும் மீனினம் அனைத்தும்
தற்சூழ்ந் தசையத் தானசை வின்றி
நிலைபெறு துருவன் நிலைமைகண் டிலிரோ?
வான்மீன் அனையர் மாதல மாந்தர்;
துருவன் அனையன் ஒருவனீங் குளனுல்;
அவன்தான் யான், என அறிகுவிர், புகன்ற
மொழியிற் பிரியேன்; பழியொடு படரேன்;
மலைவீழ் வெய்தினும், மனம்வீழ் வினனே,

எனக்கூறினர். இதனைக்கேட்ட புரூட்டஸ் ஆதியோர் சீசரது பெருமித வுரையைத் தற்பெருமை யுரையென வெண்ணி, உடைவாளை உருவி அனைவரும் ஏகோபித்துச் சீசரை வெட்டினர்கள். 'நீயுமா புரூட்டஸ்' என்னும் உரையோடு சீசர் வீழ்ந்து மரணித்தனர்.

பிளூத்தார்க் (Plutarch) எனப் பெயரிய யவனபுரத்தறிஞர் இயற்றிய வீரர்வாழ்க்கைச் சரிதங்கள் என்னும் நூலின் வழியாக அநேக சரித்திரங்களையும், ஆங்கிலநாட்டு மன்னர் சரித்திரங்கள் பலவற்றையும் செகசிற்பியார் நாடகமாக்கி உலகிற்கு அளித்தார். ஆங்கிலமொழி உலகில் வழங்குங்காலம் வரையும் இப்பெருங் கவியின்பெயர் நின்று நிலவும். ஆங்கில நாடு பெருஞ்சிறப்புற்றிருந்த காலத்திலே, தோன்றிய செகசிற்பியாரைப்போலத் தமிழ்நாட்டு மன்னர் கடல் கடந்து சென்று பல நாடுகளையும் தமது வெற்றிக்கொடி நாட்டிய காலத்திலே தோன்றிய கம்பநாடர், உலகுபுகழும் வனப்புவாய்ந்த காப்பியத்தை வகுத்தளித்தார். வீரத்தையும், ஆண்மையையும், மக்கள் நீர்மையையும் சித்திரித்துக் காட்டும் வகையிலேஇருபெருங் கவிஞரும் ஒத்தபான்மையர்; இருவர் நாவிலும் நின்று கவிதை சுரந்தளித்தவள் ஒருத்தியன்றே?

இக்காலத்திலே, மில்தனர் எனப்பெயரிய காப்பியக் கவியும் வாழ்ந்தார். யவனபுரத்துக் காவியங்களிலே கண்ணு பயின்று அவை தம்முட் பொதிந்த வனப்பு விளங்கச்செய்யுள் செய்தார். அவரியற்றிய பெருங் காப்பியம் 'சுவர்க்க நீக்கம்' எனப்பெயரியது. இதன் ஒருபகுதியினைத் தமிழ்ப் பெருங்கவி வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் தமிழ் விருத்தச் செய்யுளில் மொழிபெயர்த்துள்ளார்கள்.

தேவாசுர யுத்தங்கூறுதலின் இந்நூல் கந்தபுராணம் போன்றது. வானுலகத்திலே ஆண்டவன் முன்னிலையிலிருந்த தேவர்களின் மூன்றின் ஒரு பகுதியார் இறைவனுணக்கு அமைந்து நடக்காத காரணத்தினாலே

நாகராயினர். இவர்கள் தலைவனுகிய ஒளிவண்ணன் சாத்தனுயினுன். இந்த எல்லையிலே, இறைவன் இம் மண்ணுலகையும் புல் பூண்டு மரஞ்செடி கொடி பறவை விலங்கு மீன் என்னும் இவற்றையும் படைத்து இறுதியிலே மன்பதைக்குத் தந்தை தாயாராகிய அத்தனையும், அவ்வையையும் படைத்து அவர் தம்மை ஏதேன் என்னும் உவனத்தில் இருத்தினர். இவ்வுவனம் பேரழகுடையது. இதன் நடுவிலே கலி ஞானத்தருவிருந்தது. அதன் கனியை உண்ணவேண்டாமென்று ஆதித்தந்தை தாயாருக்கு ஆண்டவன் ஆணையிட்டிருந்தனர். சாத்தான் அவர்களை வஞ்சித்துக்கனியை உண்ணுமாறு செய்தனன். அக்குற்றத்திற்காக அத்தனும் அவ்வையும் பூலோக சுவர்க்கமாகிய உவனத்திலிருந்து துரத்தப்பட்டனர். இதுவே கரப்பியத்தின் கதை.

ஐந்தாம் பரிச்சேதத்தின் தொடக்கத்திற் சில அடிகளின் மொழி பெயர்ப்பினைத் தருகின்றும்.

நித்திலத்தை வாரி நிலத்தில் உகுத்ததுபோல்
காலைப் பரிதி கதிர்காலும் வேளையிலே,
உள்ளக் கவலையின்றி உணவுடலிற் சேர்தலினுல்,
கன்கு துயின்றெழுந்த நல்லோர் புகழ்அத்தன்
இளங்காற் றிசையெலியும், இன்ப இலையொலியும்,
வளஞ்சான்ற நீரருவி வாய்ங்ன் றெழுமொலியும்,
பள்ளி யெழுச்சிப்பண் பாடுகின்ற புள்ளொலியும்,
ஆரா உவகைதர, அன்பிதயத் துள்ளூரச்,
சீரார் இளமான், திருமகள்போல் வாள்அவ்வை,
காதற் கிளியனைய கட்டழகி, எந்நாளும்
வைகறையில் முன்னெழுவாள் மலர்ச்சயனம் விட்டகலாச்
செய்கையினே நோக்கி, அவள் சென்ற மரைவதனம்
எறச் சிவந்த இயல்பும், மலர்க்கூந்தல்
சிக்கைதந்து சோர்ந்த செயலுங்கண் டுள்ளுருகி,
எழிலார் மடநல்லார் இன்றுயிலுஞ் சீரிதே,
என்னவளைத் தெண்ணி, இளந்தென்றல் மென்மலர்மேற்
சென்று வருடுந் திறமனைய மெல்லெலியில்,
'என்னு ருயிர்த்துணையே ; ஈசன் எனக்களித்த
செல்வ நிதியே ! செழுந்துயில்நீத் தேயெழுவாய்,
புத்தமிழ்தே ! அன்பே புலரிப் பொழுதினிலே,
வாச மலர்க்கொடியில் வண்டினங்கள் தேனருந்தும்
விந்தையினைக் காண்போம், விழியுயில்நீத் தேயெழுவாய்,
வண்ணவண்ணப் பூக்கள் மலர்ந்தனகாண்,' என்றுரைத்தான் ;
ஆங்கவளும் இன்றுயில்நீத் தன்பன் முகநோக்கி,
'மேதகவு செம்மைநெறி மேவியனன் னன்பரே !
காதலரே ! நும்முகமும் காலை இளம்பொழுதும்
கண்டேன் ; கவலையற்றேன் ; கங்குற் பொழுதினிலே,
கனவோ நனவோநான் கண்டதொரு காட்சியினை
விண்டுரைப்பேன் கேளீரிம் மேதினியில் வந்ததற்பின்,
காளின்பின் நான்கழிய நானேயென்ப தொன்றறியாத்
தூன்ப மறியாத் தொடக்கதியா வாழ்க்கை அய்த்தேன் ;

கடந்த இரவிற் கலக்கமுறுஞ் செய்திகண்டேன் ;
கின்குரல்போல் மென்குரலில், " கித்திரையோ அவ்வையே !
இனிய கிசிப்பொழுதில் எவ்விடத்தும் மோனநிலை ;
வட்ட மதியம்உயர் வானின் ரொளிகாலும் ;
இருன்குவிந்த மென்னிழலால் எங்கெங்கும் எப்பொருளுங்
கண்ணுக் கினியகண்டாய், காரிகையே ! வானுறையும்
விண்வணர்கின் போழதில் வேட்கையுற்ற நீர்மையராய்க்
கண்ணிமையார் நோக்குதலைக் கண்டிலையோ," என் றுரைக்க,
எழுந்தெங்கும் நோக்கினேன் ; இன்குரலின் பின்சென்றேன் ;
ஞானத் திருவிடத்தை நண்ணினேன் ; ஆவ்கொருவன்
வானோர் படிவத்தன் வாய்விட் டிரைபகர்வான் :
" கண்ணுக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
உண்ணத் தெவிட்டா உணர்வமிழ்தச் செங்கனிகள்,
எண்ணெண் கலைஞான இன்கனிகள் தாங்கிநின்ற
செல்வ மாமே'நின் செழுங்கிளைகள் பாரித்த
தீங்கனியை மானிடருந் தேவர்களும் உண்டிலர்காண் ;
கல்வி யறிவைக் கடிந்தொதுக்கல் சீரிதோ ?
உண்பல்யான்," என்ரூன் ஒருகனியை வாய்மடுத்தான் ;
ஆணை கடந்தசெயல் ஆதலினுல் ஈான் அஞ்சி,
ஒருபால் ஒதுங்கினேன் ; உரவோன்பின் னும்மொழிவான் ;
" மானிடர்இத் தீங்கனியை மாந்துவரேல், வானுலக
இன்பம் பெறுவார் ; எழிற்பாவாய், அவ்வையே !
இக்கனியை உண்ணுதியேல், எழிலார் அமகளிர்
தோற்றப் பொலிவுடனே தூயஅறி வும்பெறுவாய் ;
வானத் திவர்ந்துசெல்லும் வல்லமையும் நீபெறுவாய் ;
ஈாகரட் டோர்தம் நலம்பெறுவாய்," என்றுசொல்லி,
ஓர்கனியைத் தந்தான் உயர்மணமுந் தீஞ்சுவையும்,
புலன்வழியெண் ரிந்தைபுகப் புதுக்கனியை வாய்மமிழ்தேன் ;
ககனத் தெழுந்தக்கக் கந்தருவன் பின்போனேன் ;
மேகமியங்கும் வியன்புலத்தைத் தாண்டியபின்,
மேதினியை நோக்கி வியந்தேன் ;அவ் வெல்லையிலே,
கந்தருவன் சென்றுவிட்டான் ; கண்டுயின்றேன் காதலரே !
கனவீ தெனவறிந்தேன் கலக்கம் தெளிர்த்'தென்ரூள்.

செகஜிற்பியார்காலம் கி. பி. 1564 முதல் 1616 வரை ஆகும்; மில்தனர் காலம் 1608 முதல் 1674 வரை ஆகும். டிறைடன் என்னும் அகலக்கவி 1631 முதல் 1700 வரையும் வாழ்ந்தார்; பாப்பு என்னும் இலக்கணக்கவி 1688 முதல் 1744 வரை வாழ்ந்தார்.

பதினேழாம் நூற்ரூண்டின் இறுதியிலே ஆங்கிலமொழி வழங்கிய மக்களின் தொகை ஐம்பது லக்ஷமாகும். ஐம்பது லக்ஷம் என்ரூல் அரைக்கோடி. இந்நாளிலே இலங்கைத் தீவிலேயுள்ள சனத் தொகையிலும் குறைந்த எண்ணிக்கையுள்ள மக்களே, அக்காலில் ஆங்கில நாட்டில் வசந்து ஆங்கில மொழியை வழங்கினர்கள். மூன்நூரூண்டு எல்லையினுள்ளே ஆங்கில மொழியைத் தமது தாய் மொழியாக வழங்குவோர் தொகை நாற்பதுமடங்கு பெருகிவிட்டது.

பிரித்தானியாவிலே, இக்காளில் வாழும் காலசைக்கோடி மக்களும், அமெரிக்க ஐக்கிய மாகாணம், கனடா, அவுஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா முதலிய சூடியேற்ற நாடுகளில் வாழ்வோருமாக இருபதுகோடி மக்கள் ஆங்கில மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் இக்காளில் இப்பூவுலகில் வாழ்கின்றனர். அமேரிக்கா ஐக்கிய ஆணைசெல்லும் இந்தியா முதலிய நாடுகளிலும், பிற நாடுகளிலும் ஆங்கில மொழியறிவு உள்ளோர் தொகை இன்னும் பலகோடியாகும்.

கி.பி. 1832முதல்1901வரையும் பிரித்தானிய சக்ராதிபத்தியத்தினை ஆளுகை புரிந்த விக்டோரியா ராணியாரின் காலம் ஆங்கில நாடு பல துறையிலும் சிறப்பெய்திய காலமாகும்.

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே தோன்றிய உவால்டர் ஸ்கோட் (1771—1832), உவேட்சுவேத் (1770—1850) என்னும் கவிவாணர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தார்கள். பைரன் (1788—1824,) ஷெல்லி (1792—1822,) கீத்சு (1795–1821,) தெனிசன் (1809-1892,) றபர்ட்பிறௌணிங் (1812–1889) எனப்பெயரிய அழியாப்புகழ்படைத்த அகலக்கவிகள் பத்தொன்பதாம் நூற்றாண்டிலே திகழ்த்தார்கள். மேற்குறித்த எழுவரும் இயற்றிய காப்பியங்களும் தனிப்பாடல்களும் எத்தனையோ பல. எண்ணிறந்த புலவர்கள் சிறந்த வசனகாவியங்கள் இயற்றினர்கள். சையன்ஸ் என்னும் அறிவியல்நூல், கணிதநூல், வானநூல், இதிகாசநூல், தத்துவநூல் முதலிய கல்வித்துறைகள் பலவற்றிலும் எத்தனையோ பலநூல்கள் எழுந்தன. ஆக்ஸ்பர்ட், கேம்பிறிட்ஜ் என்னும் நகரங்களிலுள்ள பழைய பல்கலைக் கழகங்களும், லண்டன், மான்செஸ்டர், முதலிய நகரங்களிலுள்ள புதிய பல்கலைக் கழகங்களும் கலைத்துறைகள் பலவற்றையும் போற்றி ஆதரித்துவந்தன; இன்றும் ஆதரித்து வருகின்றன.

மேலே நாம் குறிப்பிட்ட எழுவருள்ளே உவால்டர்ஸ்கோட் எத்தனையோ சிறந்த வசனகாவியங்களைச்செய்திருக்கிறார்; இவர் ஆக்கிய செய்யுள்வடிவ நூல்கள் அத்தனை உயர்வுடையவல்லவாயினும், கதை பொதிந்த பனுவல்களாதலின், இளைஞர்க்கு உவகை பயப்பன. இவர் ஸ்கொட்லாந்திலே பிறந்தவர்; தேசாபிமானம் நிறைந்தவர். பழைய காலத்திலே தமது நாட்டிலே வாழ்ந்த குறுநில மன்னரது வீரச் செயல்களையும் அவர்களது மன்றங்களிலே யாழிசைத்த பாணர் திறத்தினையும் சிறப்புறக்கூறுவார்.

இவரது பாடல்களைப் படிக்கும்போது, பழந்தமிழ் நாட்டின் நினைவு உள்ளத்திலே இயல்பாக எழும். மன்னனுயிர் காக்கத் தம்முயிரையீயும் மறவர் செயலும், அடுகளத்திலே தம்மைத்தர் பொருது வீழ்ந்த செய்திகேட்டு உவகைக் கண்ணீர் உகுத்த வீரத்தாயர் செயலும்,

ஆண்மைசான்ற ஆடவரும் அழகுவாய்ந்த அரிவையரும் கேட்டு உளமுருகுமாறு வீரஞ்செறிந்த பாடல்களை யாழிசையோடு பாடும் பாணர் செயலும் பழந்தமிழ்நாட்டுக்கு உரியனவன்றே? இத்தகைய செயல்கள் உவால்டர் ஸ்கோட் என்னுங் கவிஞரது தாய்நாட்டுக்கும் உரியன.

இவர்பாடிய பாணன் பாட்டு என்னும் பனுவலின் தொடக்கத்திலே பாணனது பழைமை கூறுமிடத்துத்

'தாவுகின்ற பரிமாவின் மீதிவர்ந்து சென்று
தாணிபரும் அரிவையரும் உருகவிசை பொழிவோன்'

எனப்பாணனைப் பாராட்டுகிறார். கால வேறுபாட்டினாலே வேற்று மன்னன் மணியாசனத்தமரப், பாணன் ஆக்கமிழந்து, பசிப்பிணியை யாற்றுதற்கு ஒருபிடி யுணவுதேடி, ஏழைகளுடைய மனையினைநாடி, அலைகின்ற நிர்மையினை உருக்கத்தோடு கூறுகிறார்.

மேலும், நீர்நிலக்கன்னிகை யென்னும் அழகிய பனுவலின் தொடக்கத்திலே, கவி தன்னையே பாணனைக்கற்பித்துத்தேடுவாரின்றிப் பலகாள் மரக்கினைமீது கிடத்தலிற் பசுங்கொடிபடர்ந்த யாழ்க்கருவியினை முன்னிலைப்படுத்திக் கூறுகிறார்; 'வடபுலத்து நல்யாழே! நீரூற்றினுக்கு கிழலளிக்கும் இம்மரக்கினைமீது கெடிது தங்கினை. இலையொலியும் அருவி நீரொலியும் இசையியம்ப, கின்னரம்புகள் இசையின்றித் துயிலுதல் முறையாகுமா? முன்னாளிலே வீசுகின்ற காற்றிலே இசையமிழ்தத்தை யூகுத்தனையே! கின்பாற் பொருமையுற்ற பசுங்கொடி படர்ந்து, கின் கரம்புகளை ஒவ்வொன்றாகக் கட்டிவிட்டமையினாலே பேசாதிருக் கின்றனையா? வீரர்முகத்திலே புன்னகை தவழவும், அரிவையர் நாட்டங்களிலிருந்து உவகைக் கண்ணீர் கலுழவும் கினது இனிய குரலினாலே பேசலாகாதா? 'முன்னாளிலே, கலிடோனியாவிலே, விழாக்கொண்டாடுவார் மத்தியிலே, நீ மௌனஞ் சாதித்தில்லையே. காதலையும் வெற்றியையும் பாடி, அச்சத்தையும் பெருமிதத்தையும் அளவுபடுத்தினையே. கினது இசை கேட்டருளும் வண்ணம் காவலரும் காரிகை கல்லாரும் சூழ்ந்து கின்றனரன்றே? வீரரது தீரச்செயலும் காரிகையரது ஒப்பற்ற கண்ணிணைகளுமே கினது பாடற் பொருளாக அமைக்தன.

'கல்யாழே! துயிலொழிக் தெழுவாயாக கினது கரம்புகளிற் படருங் கையானது பயிற்சியற்ற கையெனினும், செழிய பழம் பாடல்களின் இன்னெளியை ஓளவிற்காவது இசைத்தலாகாதா? கின்னிசைக்குருகி ஓர் இதயமாவது துடிப்புறுமெனின், கின்செயல் வீண்செயலாகாதல்லவா? நீ இன்னும் வாய்திறவாதிருத்தல் தகுதி அன்று. சித்தத்தைக்கவரும் வனமோகினியே! எழுந்திரு, இன்னும் ஒருமுறை எழுந்திரு.'

உவேட்சுவேத் எளிய நடையிலே, பொதுமக்களுடைய இன்பத் துன்பங்களையும், இயற்கை வனப்பையும் பொருளாக வைத்துக் கவியியற்றியவர்.

முதுவேனிற்காலம்; நண்பகல்; பரந்தவெளியிடத்திலே நிதைந்த குரம்பையொன்று காணப்படுகிறது. அதனை நோக்கிக் கவிஞர் நடந்து செல்லுகிறார். செல்லும்வழி சேற்று நிலம் ஆதலினாலே கால்கள் துன்புறுகின்றன. சேற்றிலிருந்து ஈக்கள் எழுந்து முகத்தைச்சூழ, இருகைகளாலும் ஓய்வின்றி அவற்றை ஓட்டுகிறார். இதனால் கைகள் சோர்கின்றன. இத்தனை அழகினிடையே கவிதை சுரக்கின்றது.

முதுவேனிற் பெரும்பொழுதின் மூளத்தெழுந்த பரிதி
மூன்னேறி ஒளிபரப்ப, மென்னீர அருவி
மதுவாரும் பொழிலகத்துத் தென்றிசையிற் றோன்ற,
வடதிசையின் மிகத்தெளிந்த வளிவழங்கும் வெளியில்,

வானகத்தில் அசைவின்றி வதியுமுகிற் குலங்கள்
மண்ணியநன் னிழல்பரப்ப, அந்நிழலி னிடையே,
வேனில்வெயில் கதிர்சொரிய, உளமவிழ்வு விரிய,
மெத்தென்ற பசும்புல்லில் எத்தொழிலும் இன்றி

அஞ்சிறைய புள்ளிசைக்கும் செழும்பாடல் செவிவாய்
அகலுழைய, இருள்விரவு மலைமுழையில், அயர்ந்தி
துஞ்சுதல்போற் றுயிலாது கடைக்கண்ணுல் அழகு
சுவைத்திடுவான் ஒருவன்; அவன் சுகத்தினேயென் னென்போம்?

நோக்கினிய அவ்வெளியில், இருகாலும் சேற்றில்
நொந்தலைய, முகத்தினேச்சூழ்ந்து அத்தரமே யெயரும்
சுக்குலங்கள் தமையோட்டும் இருகர்முஞ்சோர,
இளைப்புடனே வழிநடந்தேன யானுமத்தப்பொழுதில்.

நீண்டுயர்ந்த மரம்பலவும் உடன்பிறந்தார் போன்று
நிலைத்தொன் றுஞ் சோலையிலே, இலைக்கூரை நிதைய,
நண்டிகின்ற சுவர்நான்கா யியைந்ததொரு குரம்பை;
இக்குரம்பை தனையடைந்தேன்; இளைப்பொழிந்தேன்; ஆங்கு

கல்லிரும்புப் பூண்செறிந்த தண்டொருபாற் கிடக்க
கண்ணிழலிற் பலகையின்மேல் என்னரிய கண்பன்
அல்லலறப் படுத்திருந்தான், திண்ணியகல் லுடலம்,
அருஞ்சுரங்கள் பலகடந்தும் அசையாத நிலையான்

நீர்க்காயுளாக எண்பது ஆண்டு வாழ்ந்து ஓய்வின்றிக் கவிதை புனைந்தளித்த உவேட்சுவேத் கிழவர் இயற்றிய பாடல்கள் மிகப்பல. உயர்ந்த நோக்கமும் இடையிடையே வேதாந்தக்கருத்தும் அமைய எளிய நடையிலே செய்யுள் செய்தார். இவரும் வேறு சில புலவர்களும் வடபாலிலே ஸ்கொட்லாந்திலே வாவிகளிடையே வாழ்ந்து கவி இயற்றினமையின் வாவிக் கவிஞர் என்னும் பெயருக்குரியராயினர்.

இவருக்கு கேர் விரோதமாக முப்பத்தைத்து, முப்பது, இருபத்தைத்து என்னும் எண்ணிக்கையுடைய ஆண்டுகள் மாத்திரமே உயிர் வாழ்ந்த பைரன். ஷெல்லி, கீத்சு என்னும் மூன்று பெருங்கவிகளும் ஆங்கிலமொழிக்கே அழியாத பெருஞ் செல்வத்தை உதவினர். இம் மூவரும் நண்பர்கள். பைரன் கிரேக்க நாட்டிலே போர்க்களத்திலே உயிர் துறந்தார், ஷெல்லி உரோமாபுரியை யடுத்த கடலிலே படகு கவிழ்ந்து அமிழ்ந்தி உயிர்நீத்தார். இவர் உடலினை அக்கடற்கரையிலே தகனித்துச் சாம்பரை உரோமாபுரியிலே அடக்கஞ் செய்தார்கள். கீத்சும் தமது பூதவுடலினை உரோமாபுரியிலே நீத்தார். மூவரிலும் இளையராகிய கீத்சு முதலிலே மரணித்தார். இவரைக்குறித்து ஷெல்லி இயற்றிய கையறு நிலைச் செய்யுள் நிறைந்த கவியமம் வாய்ந்தது. கடலிலமிழ்ந்திய ஷெல்லியின் சட்டைப்பையிலே கீத்சு இயற்றிய லாமியா என்னும் பனுவல் இருந்தது.

இவர்கள் முற்பிறப்பிலே யவனபுரத்திலும் உரோமாபுரியிலும் வாழ்ந்த புலவர் வரிசையில் உள்ளவர்களோ என எண்ணவேண்டி இருக்கிறது. கீத்சு கல்லூரியிலே யவனமொழி பயிலவில்லை; ஆனால் அவருடைய செழும் பாடல்கள் வரிக்கு வரி யவனபுரத்துக் கவியமம் சொட்டுவன. இம்மூவரும் இயற்றிய சிறந்த நூல்கள் பாரதகாவியங்களாதலினாலே, ஒவ்வொரு வரையுங் குறித்து ஒவ்வொரு தனிப்புத்தகம்(பெரிய அளவிலே) எழுதினாலன்றி, இவர்களது ஆற்றலை அளவிட்டுரைக்க முடியாது.

இற்றைக்கு இருபது ஆண்டுகளின்முன்னே லண்டன்மா நகரிலே, கீத்சு இகவாழ்வொருவிய நூற்றாண்டுவிழாக் கொண்டாடினார்கள். அவ்விழாக்கொண்டாட்டத்து நிருவாக சபையாருக்கு யான் எழுதி யனுப்பிய செய்யுளை இங்குத்தருகின்றேன். இப்பெருங்கவி வகுத்த காப்பியங்களின் தொகையினை இச் செய்யுள் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

திருமலி அழகுடைச் செழும்பொருள் தானே
உவகை நீர்மையது; ஆங்கவ் வுவகை
பனஞட் கழியினும் கழியா இயல்பிற்
றண்டா இன்பந் தந்துநிற் பதுவே
எனமுதல் நிறீஇய இன்னிசைச் செய்யுள்
மனனுறு மகிழ்வினை வழங்கி அணிமிகும்
செஞ்சொற் பொதிந்த செவ்விய கடையினது;
அஞ்செஞ் சீறடி அரமகள் ஒருத்தி
சோமனுலகு துறந்து, புவி யுற்றுக்
காமனுங் கைதொழுங் கட்டழ கமைந்த
எண்டிமீ யோன் எனும் இளவேல் விரும்பும்
செய்கி கூறும் சீரிது; நிரைகடல்
அலையி னுப்பனும், அருங்கடி கமழ்தரும்
கமலமலர் பொதுளி உறுஞிமி ரூர்க்கும்

உவவன மருங்கும் உற்ற துரைத்தலின்
விஞ்சைய ருலகின் வியன்றெரிந் துரைப்பது ;
பவனகல் லறிஞர் பனுவலி னமைந்த
கவிநய மருவிய காட்சியது ; அறிஞர்
பெருங்காப் பியமெனப் பேசுதற் குரிய
அருங்காப் பியத்தை அளித்தனே மன்னே.
அதாஅன்று,
மாயா மயக்க வஞ்சமிவ் வுலகம்
குருபரன் அருளால் மருவுவ தறிவெனும்
உண்மையை யுரைக்கும் வண்மைசால் கவிதை,
லாமியா வெனும்பெயர் மேவிய மடவரல்
லீசியஸ் என்னும் இளைஞற் பேணி
இன்னுயிர்க் காதலன் ஆக்கல் வேண்ட
அவனும்,
மங்கல நாணை வழங்கும் எல்லை
அபல்லோனியன் எனும் அறிஞன் தோன்றித்
கட்புலங் கொண்டவள் கள்ளவஞ் சனையை
ஒழித்த லுரைக்கும் உயர்நடைச் செய்யுள்
அளித்தனே மன்னே ; ஆங்கது வன்றியும்
காதலி னியல்பைக் கருத்துற வினக்கும்
இஸபெல் லாவின் இன்னல்சார் சரிதம்
வகையின் ருகு மாண்பிற் சமைத்தனே ;
அதன்கண்,
நித்திலக் தருவ திலங்கைத் தீவென,
வித்தக உரைத்தனே ; விண்ணுட் டமிழ்தம்
புரையுமெச் சுவைபொதி உரையுடைச் செய்யுள்
பலவா யமைத்தனே ; நலகா நுகர்ந்தோம்.
பல்லா யிரங்கா வதத்தினுக் கிப்பால்
உன்னேம் ஆயினும், உன்னுரை கேட்டு
மகிழ்ச்சி எய்தினம் ; மதுவிரி நறுமலர்
அவிழ்ந்து பகற்போது அளிகளுக்கு உணவும்,
பாங்குசென் றோர்க்குப் பரிமள வாசமும்,
தக்தி வீயுந் தன்மையைப் போல
ஐயைத் தாண்டின் அகில நீத்தனே.
நீபோய்,
நூறுண்டு கழிந்தன எனினும் நின்மொழி
இன்றலர் நறுமலர் என்ன நின்றது ;
அதனுல்,
ஆங்கில மொழிசெலும் அனைத்துநா டர்க்கும்
களங்கமில் களிப்பினைத் தந்தி,
களிந்து வீளங்குமாற் றேக்கு எனும் பெயரே.

இப்புலவர்கள் வாழ்ந்த காலத்திலே பிரான்சு தேசத்திலே, பெரியதொரு புரட்சி யேற்பட்டது. உணவின்றித் துன்புற்ற தொழிலாளிகளும் ஏழைமக்களும் மூதலாளிகளையும் பிரபுக்களையும் அரசகுடும்பத்தையும் அழித்து, விதேலே, சமத்துவம், சகோதரத்துவம்

எனும் முழக்கத்தோடு காட்டிலே புரட்சி செய்தார்கள். பிராஞ்சு காட்டினை ஐரோப்பிய முடிமன்னர்களெல்லோரும் எதிர்த்துப் போராடினர்கள். நப்போலியன் எனப்பெயரிய தளபதிபிராஞ்சுகாட்டினை எதிர்த்து வந்தோரோடு போராடி வெற்றிபெற்றதோடமையாது, படையெடுத்துச்சென்று ஐரோப்பாவின் பெரும்பாகத்தை மேற்கொண்டு பிராஞ்சு காட்டுக்குப் பெரும்பெயர் உண்டாக்கினன். தன்றியறிதல் காரணமாகப் பிராஞ்சியர் நப்போலியனைச் சக்கரவர்த்தியாக்கிச் சிங்காசனத்தில் இருத்தினர். இந் நிகழ்ச்சிகள் ஆங்கில நாட்டுக் கவிவாணரது காப்பியங்களிலே, ஒரு புத்துணர்ச்சி தந்து காணப் படுகின்றன. பிராஞ்சிய நாட்டில் எழுந்த "விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம்" என்னும் ஒலியானது எவ்விடத்தும் பரவியது.

ஷெல்லி துன்புற்றோருக் கிரங்கும் தூய உள்ளம்வாய்ந்த கவி. கலாசாலையிற் படிக்கின்ற காலத்திலே, இவர் பூவுலகத்துக்கொடுங்கோல் மன்னர்களையும், ஏழைகளை வருத்தும் பிரபுக்களையும், மன்னருக்கும் பிரபுக்களுக்குஞ் சார்பாக வானுலகத்திலேயிருந்து அரசாளும் தெய்வத்தையும் ஒருங்கு வையத்தொடங்கினர். எங்கும் பரந்து உயிர்க் குயிராக விளங்கும் கருணைக்கடலாகிய மெய்க்கடவுளிடத்திலே நிறைந்த பத்தியுள்ள ஷெல்லியின் உள்ளக்கருத்தை யறியாத மக்கள் அவர் தெய்வத்தை இகழுகிறார் எனக் குற்றஞ் சாட்டிக் கலாசாலையிலிருந்து தூத்தியதோடமையாது, அவரது குழந்தையைத் தானும் அவர் வளர்த்தல் கூடாதெனக் கூறித் தந்தையிடமிருந்து மைந்தனைப் பிரித்தார்கள். இத்தகைய நிகழ்ச்சிகளினாலே கவிஞருள்ளம் பெரிதும் அல்லலுற்றது. இவரது கவிதை விண்ணுலகத்தை மண்ணுலகத்திலே காட்டும் பேரழகுவாய்ந்தது. நிலவின் ஒளியும், விண்மீன்களின் வனப்பும், இசையின் மென்னீர்மையும், குழந்தையின் மழலையும், மெல்லிய காற்றாது தூய அன்பும், மேகங்களின் வனப்பும், செஞ்சுடர்ப்பரிதியின் தோற்றமும் மறைவும் இவரது கவிதையிற் படிதலினாலே புதிய கலம் பெற்றுத்திகழுகின்றன.

யாழ் கரம்பினிசையோடு இன்னிசைக் கீதம் பாடிய ஒரு மடவரலை நோக்கிப் பின்வருமாறு கூறுகிறார்.

வளர்வான் மதியி னொளிக்கிரணம்
வயங்கி, மெல்லென் றியங்கியபின்,
குளிர்வான் மீனின் கதிர்படிந்த
கொள்கை யென்னக் கூறுவமோ ?

தெளியா மழலை அணங்கே ! நின்
தேனூர் கிளவி இசையமிழ்தம்
(அளிதோ) வில்சேர் யாழ்நரம்பிற்(கு)
ஆவி யாகும் மாண்பினையே.

எங்கும் பரந்த இசைநறுந்தேன்
நுகர்ந்தண் பனிநீ ராயிமையச்,
கங்குற் பொழுதில், மென்கொடியிற்
கலந்த இலேயும் அசைந்திலவால்;

இங்கட் புத்தேள் ஒருகடிகை
செலவு தாழ்ந்து சென்றிடினும்,
தங்கு விண்மீன் இமைப்பிலவாய்த்
தரணி நோக்கும் தகைமையவே.

தேனூர் இசையென் உளங்கவரச்
செயலற் றயர்ந்தேன் யானெனினும்,
மானே ! இன்னும் இசைநறுந்தேன்
வழங்கல் வேண்டும் ; இளங்குதலே

ஆனு இனிய குரலொலியால்
அகிலம் மறைய மகிக்கதிரும்
வானூர் உலகும் இசையமிழ்தம்
மருவி யொருங்குவந்தனவே

இளந்தென்றலின் மெல்லுயிர்ப்பும் மாலைப்பொழுதின் அழகும், எங்கும் நிறைந்த அமைதி நிலையும், வளர்மதியின் ஒள்ளொளியும், விண்மீன்களின் மெல்லொளியும், நீல விதானம் போன்றமைந்த வானினழகும் மேல்வரும் வெண்பாக்களுட் கூறப்படுகின்றன.

வேனி லிளந்தென்றல் மெல்லுயிர்ப்பு நன்மாலை
மானின் செலிக்கு மருந்தாகி,—வானின்
உரைதேர்ந்த மோன உறுதி குலைக்கும்,
அரிதன்றே அல்லின் அழகு ?

மங்குல் பயிலா வளர்மதியின் ஒள்ளொளியும்,
எங்குமியல் மீனெளியும், எய்தியே—கங்குல்
விழிதுயிலும் பூமகட்கு மேலாப்பா யன்பின்
வழியியலும் நீர்மையதிவ் வான்.

எய்ஸ்க்கிலீஸ் எனப்பெயரிய யவனபுரத்து நாடக ஆசிரியரது நடையினைப் பின்பற்றி இவரெழுதிய கட்டு நீங்கிய பிரமேதயன் என்னும் நாடகம் உயர்ந்த வீரச்சுவை செறிந்தது. பிரமேதயன் வானுலகி லிருந்து நெருப்பினைக் கவர்ந்துவந்து மண்ணுலகத்தோருக்கு வழங்கிய பேருபகாரி. தேவராஜனுகிய யோபிதாவினது ஆணைக்கு அடங்காத காரணத்தினுலே பிரமேதயன் சிறையிலிடப்பட்டான். பனிபடர்ந்த மலைச்சாரலிலே சங்கிலியாற் கட்டப்பட்டான். தேவராஜனுடைய கட்டளையினுலே ஓய்வின்றிக் குளிர்ந்த வாடை வீசியது; கழுகுகள் வந்து மூக்கினுலே உடற்றசையைக் குடைந்தன. பிரமேதயனுடைய ஆண்மையையும் உண்மை வீரத்தையும் ஒருவகையாகவும் எதிர்த்து அடக்கமுடியவில்லை.

ஹெல்லாஸ் எனப்பெயரிட்டு இவரெழுதிய நாடகம் யவனபுரத்தின் மீது இவருக்குள்ள பேரன்பினை வெளிப்படுத்துவது. அக்காலத்திலே துருக்கியர் கிரேக்கநாட்டில் அரசு செலுத்தினமையின், சுதந்திரப் போராட்டம் நடந்துகொண்டிருந்தது.

இவரியற்றிய பாரகாவியங்கள் அரியணர் பொருளன. வானம்பாடிப் புள்ளினைக்குறித்த இசைப்பாட்டு, மேகத்தைக் குறித்த இசைப்பாட்டு முதலிய சிறு நூல்களே மாணவராற் பெரிதும் பயிலப் படுவன.

ஐரோப்பாக் கண்டத்திலுள்ளோர் ஆங்கிலப் புலவர்களுடைய கவித்திறத்தினைப் பாராட்டுங்கால், சேக் சிற்பியாருக்கு அடுத்த படியிலே பைரன் என்னும் புலவரைக்கொள்ளுவார்கள். பைரன் பட்டவர்த்தனர் குடும்பத்துத் தலைமகனதலின் லார்ட் பட்டம் வகித்தவர். இளமையிலே தந்தையை இழுந்தார். இவர் தாயின்மீது வெறுப்புடையவர். ஒழுக்கக் தவறிய நடையினலே இவரை முதியோர் வெறுத்தனர். சிருங்கார ரசம் மேவ இவர் செய்த காவியங்கள் மிகப்பல. தொட்டவற்றையெல்லாம் பொன்னுக்கும் பரிசவேதிபோல எந்தப் பொருளை யெடுத்தாலும் கவிநயம் சொட்டுமாறு செய்வார். 'கருதுவதன்கொன்றுண்டோ காப்பியக் கவிகள் காம எரியெழ விகற்பித்திட்டார்' எனத் தமிழ் நாட்டுப் பெரும்புலவர் கூறுவதுபோலவும், 'சுவை பலவென்று சொல்லுவர் புலவர் யாம் வேண்டுவது இன்பச் சுவையே' என்று வடமொழி மன்னன் வரித்ததுபோலவும் இன்பச் சுவையினைப்போற்றி இவர்செய்த டன்ஜுவான் என்னும் பெருங்காப்பியம் பதினாறு இலம் பகங்களால் நடப்பது. திருத்தக்க தேவரது காப்பியத் தலைவனுகிய சீவகனைப் போலப் பைரனது காப்பியத்தலைவனுகிய டன்ஜுவானும் காமதுரந்தரன். பல மகளிராற் காதலிக்கப்படும் ஆடவனுக்கு அப் பெயர் சூட்டுதல் ஆங்கிலமொழி வழக்காக வந்துவிட்டது. சீவகன் கன்னியரையே காதலித்தான்; இது தமிழ் மரபு. டன்ஜுவானே வென்ரூல் பிறர் மனைவியர் காதல் வலையிலுஞ் சிக்குண்டான். இக்காப்பியத்திலே பல விடங்களிலே கவி தமது சொந்த அநுபவத்தைக் கூறக்காணலாம். பதினெட்டாம் ஆண்டுப் பருவத்திலே பிறன்மனைவியிடத்துவைத்த பொருந்தாக்காதல் காரணமாகத் தாயினுலே பிறநாட்டு யாத்திரைக்கு அனுப்பப்பட்ட டன்ஜுவான் கப்பலுடைந்து தன்னந் தனியனுய் ஒரு தீவுக்கரையை அடைகிறுன். கரையிலே உணர்விழுந்து கிடந்தோனை யவனபுரத்து இளங்கை யொருத்தியும் அவளது உயிர்ப் பாங்கியும் கண்டு எடுத்து உபசரிக்கின்றனர். பின்பு இவன் அக்கன்னியை மணக்கின்றுன். அவள் தந்தை வெகுண்டு இவனை அடிமையாக விற்றுவிடத் துருக்கி தேசத்தை யடைகிறுன். அரமனைமாதொருத்தி இவனை விலைகொடுத்து வாங்கிப் பெண்ணுடை தரிப்பித்து அந்தப் புரத்திற்குக்கொண்டுசென்று தன்கருத்துக் கிசையும்படி கேட்க, இவன் மறுக்கிறுன். அங்கிருந்தும் தப்பித்துண்டு துருக்கிக்கும் ரூஷியாவுக்கு மிடையே நடந்த யுத்தத்திலே கலந்து ரூஷிய ராணியின் முன்னிலையை

அடைகிறான். ராணி இவனைக் காதலிக்கிறாள். அவளது அன்புக் குரியவனாகி, அரசியல் விஷயமாக இங்கிலாந்து தேசத்தை யடைகிறான். அங்கும் பல மகளிர் இவனைக்கண்டு தமது நிறை யழிகின்றனர். சரித்திரம் ஒழுக்கத்தினிழிந்ததாயினும், பைரணியற்றிய காப்பியம் சீவக சிந்தாமணியிலும் கவிச்சுவையிக்கது, யவனகாட்டின் மீது இக் கவிக்குள்ள பேரன்பு காப்பியத்தின் பல விடங்களிலே காணப்படுகிறது. சைல்ட் ஹரால்ட் யாத்திரை என்னும் பெருங்காப்பியம் தேசாபிமானச் சுவையிக்கது. வானகமும் மண்ணகமும், சார்தானாப்பாலஸ், காயின், உவோர்ணர், அங்கஹீனன் அங்கம் நிமிர்ந்தது எனப் பெயரிய நாடகங்கள் இலக்கணமும் சுவையும் நிரம்பியவை. இவரியற்றிய சிறு காப்பியங்களும் பல. கடலே வருணிப்பதில் இவருக்கு இணையாயினர் யாருமிலலை யென்றே கூறலாம்.

விக்டோரியா ராணியினது சமஸ்தானப் புலவராகப் பெரும் பெயர் பெற்றவரும், ஒழுக்கமே யுருவெடுத்தாற்போன்ற வருமாகிய தெனிசன் என்னும் பெருங்கவியைப்பற்றி ஒருசில கூறுவாம். இவரும் லார்ட்பட்டம் வகித்தவர். இவருக்கு அப்பட்டம் ராணியாரால் வழங்கப்பட்டது. இவர் மகா கவியாயிருந்ததோடு, ஞானவானுகவும் விளங்கினர். இவரது சகோதரியாருக்கு மணமகனை வருவதற்கிருந்த கண்பரொருவர், இவர்மேற் பேரன்பு பூண்டோர், இளவயதிலே இறந்துபோக அத் துயரினை ஒருவாறு ஆற்றிக்கொள்ளும் வண்ணம் இவர்பாடிய கையறு நிலைச்செய்யுள் ஒரு வேதாந்த நூல்போல் அமைந்தது. மக்கள் வாழ்க்கையின் நிலையாமையும், ஆண்டவனே நமக்கு 'எய்ப்பில்வைப்பு' ஆவான் என்பதும், ஒழுக்கத்தினலெய்திய புகழ் அழியா நீர்மைய தென்பதும் பிறவும் நாலடிச் செய்யுளிலே அழகாகப் பாடப்பட்டி ருக்கின்றன. முதற் பத்துச் செய்யுட்களின் மொழி பெயர்ப்பு வருமாறு :—

'ஆண்டவனது திருமகனே! அருள்நிறவுடையாய்! அழியா அன்பின் நிலைக்களமே! நினது திருமுகத்தை நேரிற் கண்டிலமெனினும், உள்ளத்துணர்ச்சியே (நம்பிக்கையே) துணையாக நின்னை நம்பி, நின்னருளிற்கலந்து நிற்கின்றோம்.'

'பகற்பொழுதினை விளக்கும் செஞ்ஞாயிறும், இரவுப் பொழுதினை விளக்கும் வெண்டிங்களும் நினக்கு உரியவை. மனிதவுயிர்க்கும் விலங்குயிர்க்கும் வாழ்வினை ஈந்தனை; சாவினையும் நீயே படைத்தனை; நினது திருவடி நீசெய்த மனித கபாலத்தின்மீது பொருந்தி நிற்கிறது.'

'மண்ணிற் புழுதியிற் கிடக்கும் வண்ணம் எம்மைப் புறக்கணிப்பா யல்லை; மனிதனைப்படைத்தனை, எற்றுக்குப் படைத்தனையென அவன் அறியான். வாளா இறந்து ஒழிந்துபோம் வண்ணம் படைக்கப்பட வில்லையென அவனது உள்ளம் நினைக்கின்றது. அவன் நினது திருக்கரத்தினல் உருவாக்கப்பட்டான். நீ அறத்தின் முதல்வன்.'

‘மக்களது நீர்மையும் தெய்வத் தன்மையும் கின்பாற் காணப் படுகின்றன. அறியுயர்ந்த, அதிதூய்மையாகிய ஆண்டகைமை கினக்கு உரியது. எமது சித்தம் எமக்குரியன. அவ்வுரிமை எவ்வாறு எய்திய தென யாம் அறியேம். எமது சித்தம் எமக்கு உரியவாயின, அவை தம்மை கினக்கு உரியவாக்குதற் பொருட்டாகவோ?’

‘யாம் வருக்கும் முறைகள் சில நாள் கின்று ஒழிந்துபோகும் தகைமைய. அவை கினது அருளொளியினின்று சிதறிய கதிர்கள். என் ஆண்டவனே! நீ அவற்றினும் மிக்காய்.’

‘எமது உள்ளத்தில் கம்பிக்கையுளது; அறியும் அறிவு இல்லை. அறிவு காட்சிப் பொருள்கள் மேற்செல்வது. (நீ காட்சிக்கு எட்டாப் பொருள்) ஆயினும் யாம் கின்னை கம்புகிறேம் அக்கம்பிக்கை கின்னிட மிருந்து வந்தது. பேரிருளிலே அஃது ஓர் ஒளிக்கிரணம்; அது வளர்வதாக.’

‘அறிவு மேன் மேலும் பெருகுக. அறிவினும் பார்க்க வழிபாடு எம் உள்ளத்தில் உறுவதாக. முன்னிருந்ததுபோல உள்ளமும் உயிரும் ஒன்றுபட்டு இசை பரப்புக.’

‘அவ்விசை பெருக்கம் உறுக. யாம் பேதைமையுடையேம், அற்ப மதியுடையேம். அச்சம் நீங்கிய வேளைகளில் கின்னை அவமதிக்கின்றேம். பேதையே மாகிய எமக்குப் பொறையினைத்தந்து உதவுவாயாக. கினது அருளொளியைத் தாங்கும் வலிமையினை நீ படைத்த அற்பமதியின ராகிய உலகினருமக்குத்தந்து உதவி புரிவாயாக.’

‘ஏழையேனிடத்துக் காணப்படும் பாவங்களை மன்னித்தருள்வா யாக; (உயிர் வாழுத்) தொடங்கியது முதல் எனது தகவுள யாள் கொண்ட எண்ணத்தினை மன்னித்தருள்வாயாக. மதிப்பு எனப்படுவது மனிதனிடத்துத்தோன்றி மனிதனை நாடுகிறது. அது மனிதனிடத்துத் தோன்றி ஆண்டவனுகிய கின்னை அடைவதில்லை.’

‘கின்னைப் படைக்கப்பட்டவன், செம்மை நலம் உடையோனென ஏழையேனால் மதிக்கப்பட்டவன், அவனது பிரிவினாலே என்னுள்ளத்தில் எழுந்த துயரினை மன்னித்தருள்க. அவன் கினது (திருவடி) நிழலிலே வாழுகிறான் என அடியேன் கம்புகிறேன். ஆதலினாலே, அவன் முன்னையிலும் பார்க்க எனது அன்புக்குப் பாத்திரவான் ஆயினன் என நான் காண்கின்றேன்.’

‘சீரற்ற அலையும் இவ்வல இசைகளை மன்னித்தருள்க. கலமின்றிக் கழிந்த இளமையின் பெறுபேறுக அவை எய்தின. எவ்வெவ்விடத்தில் அவை உண்மை நெறியிற் பிறழ்கின்றனவோ, அவ்வவ்விடத்தில் அவை தம்மை மன்னித்தருள்க. ஞானமுடையாய்! அடியேனுக்கு ஞானத்தைத் தந்தருள்க.’

இப்பெருங்கவி இயற்றிய 'உலீசன்' என்னும் செய்யுள் வீரச்சுவை செறிந்தது. ஹோமர் எனப் பெயரிய யவனபுரத்து மகாகவி இயற்றிய உலீச காவியத்துத் தலைவனுகிய உலீசன் கிரேக்க சைனியங்களின் தளபதியாகச்சென்று துரோய நாட்டிலே போர்புரிந்தான். இப் போரினது வரலாற்று முறையினை ஒரு சிறிது கூறுவாம். துரோயம், ஈவியம், பேர்காமம் எனப் பெயரெய்தியகரம் ஆசிய துருக்கி நாட்டின் வடமேற்திசையிலுள்ளது. இங்கரத்தரசன் பெயர் பிரியமன்னன், (Priamus). இவன் தனது பட்டத்தரசியாகிய எக்கூபை (Hecuba)யோடு அரசு புரிகின்ற காலத்திலே, துரோயம் செல்வம் மிகுத்த அழகிய நகராயிருந்தது. அரசனுக்குப் புதல்வர் ஐம்பதின்மர். இவருள் எகதன் (Hector) என்பான் சுத்தவீரனுகவும், பரிசன் (Paris) என்பான் காம துரந்தரனுகவும் இருந்தனர். ஒருநாட் பரிசன் ஐதாமலியின் சிங்காரத்திணைச் சுற்றிப்பார்த்துக்கொண்டு வரும்பொழுது மூவர் தேவ மகளிரைச் சந்தித்தான். அவருள் ஒருத்தி தேவராஜனுகிய யோபிதர (Jupiter)வின் மனைவி யூனே (Juno ; ஏரை Hare என்றும் பெயர்) மற்றவள் செழுங்கலை நாயகியாகிய மீனேர்வை (Minerva ; பாலசி Pallas என்றும் பெயர்) மற்றவள் வேட்கைத் தெய்வமாகிய ஆவிரதை (Aphrodite; வீநசை Venus என்றும் பெயர்.) மூவருள் ஒவ்வொருத்தியும் தானே மற்றையிருவரினும் பார்க்க அழகிற் சிறந்தவள் எனக்கூறி வாதிட்டுக்கொண்டு வருமெல்லையிலே, பரிசனைச் சந்தித்துத் தமது வழக்கைத் தீர்க்கும்படி அவனைக்கேட்டனர். அழகின் மிக்க ஒரு பெண்ணைக்கூட்டிவைப்பதாக ஆவிரதை கூறிய இரகசிய வார்த்தையில் ஈடுபட்ட பரிசன் அவளே அழகிற் சிறந்தவளெனத் தீர்ப்பிட்டான். இதனைக்கேட்ட யூனே பரிசனை நோக்கிப் 'பழிக்கஞ்சாது இவ்வாறு கூறினை ; என் சமர்த்தையுங் காட்டுகிறேன்' எனச் சொல்லிப் போய் விட்டாள்.

பின்னர் ஆவிரதை தனது வாக்கின்படி லக்கதமோனிய தேச ராஜனுகிய மேனிலாவனுடைய (Menelaus) மனையாட்டியும் அழகிற் சிறந்தவளுமாகிய ஏலேனுவை (Helena)க் கவர்ந்துகொள்ளும்படி பரிசனுக்கு உதவி புரிந்தாள். பரிசன் ஏலேனுவைத் தன்னூர்க்குக் கொண்டு சென்று மனைவியாக்கினன். இதனையறிந்த மேனிலாவன் கிரேக்கத் தலைவர்களைப்படைத்துணையாகச் சேர்த்துச்சென்று துரோய நகரை முற்றுகை செய்தான். இத்தலைவருள் ஒருவன் உலீசன். பத்தாண்டு பெரும்போர் நடந்தது, ஈற்றிலே கிரேக்கர்வெற்றிபெற்றனர். யவனபுரத்துக்குத் திரும்பும் வழியிலே பல துன்பங்களை யடைந்து இன்னும் பத்தாண்டு கழித்து உலீசன் தன்னூரை யடைந்தான். போரின்றி மனையிலே வாழ்வதை யவன் விரும்பவில்லை. அவனது வீரச் சொற்களை யமைத்துத் தெனிசன் அழகிய கவிதையொன்று யாத்தார். அதன் மொழி பெயர்ப்பு வருமாறு :—

பெறுபயன் சிறிதே, பெறுபயன் சிறிதே,
வறிதிங் குறையும் மன்னன் யாரே ;
வினைவ குன்றிய களர்நிலத் தூரிமையும்,
(குய்ப்புகை) யடங்கிய அட்டிலும், மெய்ப்பசி
மூப்புவந் தெய்திய இல்லக் கிழத்தியும்,
யாப்புற அமையச் செய்வினை யின்றி,
வறிதிங் குறையும் மன்னன் யாரே ;
என்னிழல் வாழ்வோர் என்னியல் பறியார் ;
உண்பார் ; துயில்வார் ; ஒண்ணிதி குவிப்பார் ;
செம்மை நலமிலாச் சிறியோ ரவர்தமக்கு
நடுநிலை யில்லா நீதி வழங்கி,
வறிதிங் குறைதல் மாண்பே ? பிறபுலம்
செல்லா தமையேன் ; சேரொப் பொழுகினும்
அன்பர் தம்மொடும், அவரிலா நிலையிலும்,
கரையி னகத்தும், திரையெறிந் தார்க்குங்
குரைகடற் புறத்தும், பெரிதுபெரி தாகிய
இன்பந் துய்த்தேன் ; துன்பத் திழந்தேன் ;
வினைவுறு மனமெனு டலையுறு நாளில்
அளப்பில கண்டேன் ; அறிந்தன பலவே ;
எத்தனை நகரம், எத்தனை மக்கள்,
எத்தனை ஒழுக்கம், எத்தனை அலுவக்களம்,
எத்தனை அரசியல், எவ்வெவ் விடத்தும்
பெரும்பெயர் நிறுவி அரும்புகழ் படைத்தேன்;
வளமலி தூரோய வளிவீசு புலத்தில்,
அடற்போர் மதுவுண் டகங்களி கூர்ந்தேன்;
கண்டன அனைத்தும் என்னகங் கலந்தன;
வாழ்க்கை வட்டத் தெல்லையி னிகந்த
வேற்றுப் புலங்கள் மிகப்பல உள ; அவை
செல்வுழிச் செல்வுழிச் சேணிடை அகல்வன ;
உறைப்படி வாளிற் கறைப்படல் தரியேன் ;
வானா உயிர்த்தல் வாழ்க்கை யாமோ ;
(அறிவு நிறைதலும் அருஞ்செயல் புரிதலும்
ஓரிரு பிறவியில் ஒழியும் நீர்மையவோ ?)
வாழ்க்கை மேல்வாழ்க்கை வந்து குவியினும்
வேண்டா ஏன்ன விளம்பலும் ஆமோ ?
யாண்டுபல கழிந்தன, ஈண்டிப் பிறவியில்
எஞ்சிய நாளொரு சிலவே ; ஆங்கவை
புதுப்பயன் விளைதா னாகுக ; விதிப்பட
மக்கள் யாத்த எல்லையின் இகந்து,
குணகடற் குளிக்கும் வான்மீன் போல,
அறிவு நிறைதற்கிவ் வுலகடல் கடக்க
நரைமூதிர் உள்ளம் நாடிநின் றதுவே.
இவனென் புதல்வன் ; எல்செல் கோலும்
தரணி காவலும் தாங்குதற் குரியோன் ;
மூவணுறு மாக்களைச் சிறிதுசிறி தாக
நலனுறத் திருத்தும் நாட்டம் உடையோன் ;

ஏதமில் மனத்தன் ; இல்லுரை தேவரின்
பாதம் பரவும் பான்மையன் ; பண்பும்,
சால்பும் உடையோன் ; தனக்கென விதித்த
வினைபுரி இன்றுன் ; என்வினை பிறவே.
ஆங்கது துறைமுகம் ; பாங்கினிற் கப்பல் ;
வளிமுகந் தன்ன பாய்கள் ; தெளிவில்
இருள்குவிந் தனையது, திரைபொரு கருங்கடல் ;
வம்மின் நண்பீர் ! என்னுடன் உழுன்றீர்,
மழையினும் வெயிலினும் வண்மைசால் மனத்தீர்,
யானும் நீவிரும் யாண்டினில் முதிர்ந்தனம் ;
மூப்பினும் வினையுள ; ஆக்கமும் உளவே ;
சாதல் எய்துமுன் மேதக வுடைய
செயல்சில புரிகுவம் ; தேவரை மலைந்த
அடல்வலி யுடையோம், அருந்திற லேம்யாம்,
பகலொடு சருங்கும் பாறையில் ஒளிக்கதிர் ;
மெல்லென எழுந்து விண்ணிடை மதியம் ;
பல்குரல் எழுதியது பரவையும். வம்மின்
நலனுறு புதுப்புவி நாடியாம் செல்குவம் ;
கப்பலைத் தள்ளுமின் ; கவினுற அமர்மின் !
பாய்களை விரிமின் ; பல்கதிர்ப் பரிதி
படியும் குணகடற் படர்வோம், முடிவில்
வான்மீன் குளிக்கும் வரைப்பினை அடைவோம் ;
தஞ்சினர் வதியும் தூயதீ வகத்தை
எஞ்சல் இன்றியாம் எய்தலும் ஆகம் ;
* அருந்திற லாளன் அகிலே சப்பெயர்க்
காவலன் றன்னைக் காணலும் ஆகும் ;
இரிந்தன பலவெனின், இருப்பவும் பலவே ;
விண்ணும் மண்ணும் அதிர மலைந்த
திண்மையிற் நாளிற் சோர்ந்தில தெனினும்,
காலமும் விதியும் மேவலின் உடல்வலி
குன்ற வியன்ற கொள்கையம் எனினும்,
சித்த வலிமை சிறிதும் குறைவிலம்,
ஒத்த நீர்மைய உளமுடை உள்ளம் ;
முயன்று தேடிப் பெறுகுவம் இடர்வரின்
அயர்ந்து முதிகிடா ஆண்மையேம் யாமே.

ரபர்ட் பிறௌணிங் என்னும் புலவரும் தெனிசனைப் போன்று சிறிய ஒழுக்கம் வாய்க்தவர் ; ஆன்றமைந் தடங்கிய கொள்கையர். இவரியற்றிய ஆழியும் பனுவலும் என்னும் பெருங்காப்பியம் உயர்ந்த கருத்து உடையது. இவர் மனைவியாரும் கவிபுனையும் ஆற்றலுடையார் பிறௌணிங் வாழ்க்கையின் நோக்கத்தினை நன்கு தெரிந்து நயம்பட உரைத்துளார். ஒரு சில அடிகளின் மொழிபெயர்ப்பு வருமாறு :—

* (அகிலேசன் Achilles ஹோக்க சேனைத் தலைவன்.)

என்னெடு :
யாண்டுபல வாக நீவிரும் வாழுமின் ;
காண்டகு செம்மை ஈண்டுதற் குரிய ;
நாள்பல வாக நலம்பல பெறுகுவிர் ;
வாணன்,
பின்னவைக் காக முன்னவை இயைந்தன ;
' அனைத்தும் ஒருபிழம்பு அதனுள் இளமை
ஒருபாற் பயனே உணர்த்துமற் றொருபால்
அமைதியுங் காண்மின் ; அச்சம் அகற்றுமின் ;
காதலே கம்புமின், ' எனஅவன் கலின்ற
போதம் உள, நம் வாணன் அனைத்தும்
அவன்திருக் காத்தில் அமைந்தன கண்டீர்.

இவர்ப்பின் தோன்றிய புலவரும் பலருளர். ஹார்ஜ் பேர்ணட் ஷா என்னும் நாடக ஆசிரியர் எண்பது ஆண்டு கிறைந்தவராயினும், இன்றும் சுவை மிகுத்த புது நாடகங்கள் ஆக்கித் தருகின்றார். இவர் ஐர்லாந்து தேசத்தவர். அமெரிக்க காட்டினுதித்த ஆங்கிலப் புலவரும் பலர். நமது பாரத தேசத்திலே தோன்றியவருள்ளும் சரோஜினிதேவி முதலினேர் ஆங்கிலமொழியிலே அழகிய பனுவல்கள் செய்திருக்கின்றனர்.

ஆரியவரசன் பிரகத்தனைத் தமிழறிவித்தற்குக் கபிலர்பாடிய குறிஞ்சிப்பாட்டினை ஒருவாறு நிகர்ப்ப,

ஆரியமும் தமிழும்வல்ல பண்டிதமணியாருக்கு ஆங்கிலமொழிக் கவியத்தினை ஒரு சிறிது காட்டுதல் கருதி எழுந்த பாட்டிடையிட்ட இவ்வுரைத்தொடர் நிலையானது,

வடபால் இமயத்துச் சம்பாவதி நகருக்கடுத்த மாயாவதித்தவப் பள்ளியிலே,

விஷுவ வைகாசிமீ உருவ நிறைவேறியது.

கேதாரநாதர் திருவடிவாழ்க.

தொல்காப்பியன்

திரு. ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் M.A., B.L.,
பசுமலை.



பெரும் பழங்காலத்தில் அருந்தமிழ் நூலியற்றிய புலவர் பலரெனத் தெரிகின்றோம். ஆயினும், அவர் பெயரும் அவரியற்றிய நூற்பெயரும்கூட சரியாய் அறியாதிருக்கின்றோம். அவர் தந்த சேமநிதியான பொருவரு நூற்கருவூலங்களைக்கற்றுப் பேணிக் காவாமல், கடல்கவர விட்டோம். கடல்சுவர வேல்விடவும், யாற்றிலிட்டதை வேற்றுக் குளத்தெடுக்கவும், நீருள் ஏடு எதிர் நீக்கி ஊர்க்கரை ஏறவைக்கவும், அருந் திருவிளையாட்டாற்றும் ஆற்றல் பழங் காலத்தின்மையின், கைப்பொருளிழந்து, மேல் ஈட்டும் ஊக்கமுமற்றுத் தாழுமேழையர் வாழ்வடைந்துள்ளோம். நூல் வளம் குன்றவே, கற்றனைத் தூறுமறிவும், அறிவனை மாக்க மனைத்து மின்றி, இக்காலத்தில் முயன்று முன்னேறும் புதிய ஏதிலார் நகைக்கு ஆளாய் தாழ்ந்துழலுகின்றோம்.

இப்பழைய நாட்டில் ஆரியர் பேரரசு அசோகனுட்கியே. அவன் தந்தை **சந்திரகுப்தன்** புகழ்படப் பாடலிபுரத்தை யாண்டது ஏசு தோன்றுதற்கு முன்னரே நூற்றாண்டின்முன். அப்போது பாடலி வேத்தவையில் யவனதூதனுமிருந்த **மெகத்தனிசு** எழுதிவைத்த நிகழ்ச்சிக் குறிப்பு இன்று கின்றது. அதில் தமிழர் பேரூர் மதுரை எனவும் அதின் சீரும் சிறப்பும் நேரிலா வளமும் யாண்டுமில்லாத் தேக்கோடகிலும் தென்கடல் முத்தும் உப்பொதிலப்புரி உணவுப் பண்டமும் ஒப்பிலுடைகளும் உலக மெங்கணும் கிலவ வங்கமும் கால் கடை வகைகளும் சுமந்துதவும் பெருஞ்செல்வமும் சிறப்பும், அதிலாண்ட பாடலி எட்டிய பாண்டியர் புகழும், தமிழர் தேய்விலாத்தாய வாழ்வும் பராட்டிய யவனப் புலவன் குறிப்புரைகள் பழைய தமிழர் பெருமைக்கு இறவாச்சான்று தருகின்றன. அதனால், இற்றைக்கு இருபத்தைந்து நூற்றாண்டுகளுக்குமுன்னரே கூடல்—மதுரை பாண்டியர் தலைகாரராய்ச் சிறந்தோங்கிய செய்தி அக்காலப் பிறமொழிப் புலவர் பலரும் பேசிய **பழமை.**

இனி, மதுரை தலைககராகுமுன் கெடும் பல்லாண்டு பாண்டிய ராண்டது குமரி முனைக்குத் தெற்கே கடல் கொண்ட கபாடத்தி லென்பது நம்மவர் மறப்பினும் பிறமொழிப் பழைமைப்புலவர் பலரும் இறவாச்சான்றால் நிறுவிய உண்மை. இது கவிகள் கட்டும் கதை வகையன்று. பண்டைத் தமிழ்ச் சான்றோர் செய்புட் குறிப்புக்களால் தெளிக்கப்படுவது மட்டுமன்று; மூதறிவுடைய முதற்கவி யென்று ஆரியப் புலவர் பாராட்டிவரும் வான்மீகரும், சந்திரகுப்தன் மந்திரியாய் புலமையும் புகழும் நிலவ வாழ்ந்த சாணக்கியரும், தங்கள் பெரும் பனுவல்களில் மிகப் பேசும் வாய்ப்புடையது. இவ்வரலாறுணர்த்தும் தொல்காப்பியர் கால ஆராய்ச்சிக் கட்டுரையில் விரித்து விளக்கி யுள்ளேன்; அதனால் மீண்டும் விரிக்க ஈண்டிடமும் விருப்பமும் இல்லே னுகையாலும், இனைத்தளவில் இதனை நிறுத்துகிறேன். இவ்வாறு அளவிட்டறியவொண்ணு அரும்பழங் காலத்துப் பெருந்தமிழ் நாட்டில், ஆரியத்தின் வேறுபட்ட சீரிய கலைச்சிறப்பும், செம்பொருட் செய்யுட் செல்வமும் நிறைந்து சிறந்த தமிழ் வழங்கிற்றென்பது வரலாறறியாத் தற்காலத் தமிழர் சிலர் ஐயுறினும், ஆரிய நூல்களும் பிற அயன் மொழிச் செய்யுட்களும் நற்சான்று கூறி வற்புறுத்து முண்மையாகும். எனவே ஆரியர் இங்கு வருவதற்குப்பற்பல நூற்றாண்டுகளுக்குமுன்னரே இக்காட்டில் செல்வமும்புகழும் சிறக்கவாழ்ந்தவர் தமிழர்; அறனறிந்து மூத்த அறிவும்; அகன்றாழ்ந்த அறிவுநூல் வளமும் நிறைத்து நின்றவர்; ஊழையு முப்பக்கங் காணுமுலிவிலா வூக்கமும், '' திரைகடலோடியும் திரவியந்தேடி'', தானாற்றித் தந்தபொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தும்மகிழும் ஆக்கமும் படைத்தவர்; '' ஒழுக்கமே உயிரினுமோம் பற்குரித்தென உணர்ந்து தம்மொழியியல் முறையினும், வழக்கொடு செய்யுள் வகைப்படு பொருள் வரலாறுகள் அனைத்தினும் நிறைவகுத்து உயரும் வாழ்க்கையை உவந்துகொண்டவர்.''

அத்தகைய பழைய தமிழரின் வாழ்க்கை நிலை, ஒழுக்கநெறி, அடிப்பட்ட வழக்குமுறை, குறிக்கோள்கள், நான்மரபு, மொழி மரபுகளை உள்ளவாறு இன்று நம்மவர் ஆய்ந்ததிய விரும்புவ தியல்பாகும். அவ்வாராய்ச்சிக்கு ஓரளவு உதவுவன பண்டைச்சான்றோர் செய்யுட்களேயாம். முதற்பெருநூல் பல நீரினும் கெரும்பினும் போனினும் போயின. எஞ்சியநிலவும் துஞ்சியநம்மவர் மடியும் மறப்பும் மடியவிட்டன. கபாடமுண்ட கடல்கோளில் தப்பிப்பிழைத்தது தொல்காப்பியன் நூல் ஒன்றே காண்குவம். அதனிடை வருங் குறிப்புக்களால் தொல்காப்பியனுக்குமுன் தமிழில் மொழியியற் பகுதிகள் தனித்தனி பிரித்து நுனித்து விரித்து விளக்கிய பெருநூல் பலப்பல உண்டென உணருகிறோம். '' ஒத்தெனமொழிப உயர்மொழிப் புலவர்,'' "தோன்று மொழிப் புலவர் அது பிண்டமென்ப,'' ''நூலென மொழிப நுணங்கு மொழிப்புலவர்,'' ''கல்லிசைப் புலவர் செய்யுளுறுப் பென.....வகுத்துரைத்தனரே,'' ''யாப்பென மொழிப யாப்பறி புலவர்,''——'' மறையென மொழிதல் மறையோராறே,'' சொல்லியற்

புலவரது செந்தொடையென்ப,'' என்று இவ்வாறு ஆங்காங்கே சுட்டுதலால், அவ்வப்பகுதிபற்றிய முத்துநூல் பலவுண்மை குறிக்கப் படுதல் வெளிப்படை. மொழியியல் முழுதும் வகைபெறத்தொகுத்த நூலுடைத்தாயின் அதுவே ஒரு மொழியின் சிறப்புக்கறிகுறி ; அதன் மேல் ஒரு மொழியில் எழுத்துச்சொற்பொருளின் இயற் பகுதிகளைப் பிரித்து விரித்து ஆராயும் தனிப்பெருநூல் பல எழுமாயின், அவை அம்மொழி செஞ்சொற் செறிவுக்கும், புலனெறிச் செய்யுள் நிறைவுக்கும் பேரெல்லையெய்திய பெருமைக்குச்சான்றாகும். தமிழ்அறப்பழங்காலத்து அக்கினியுற்றிருந்த செய்தி தொல்காப்பியனின் தெள்ளிய குறிப்பால் தேற்றமாகிறது. எனவே இடையிருட் காலத்தே கம்மவர் புறக்கணிப் பாலுமிறவாத தொல்காப்பியன்நூல் தனிமுதல் நூலன்று .கும்பவம்பக் குலமுனி ஒருவரின் ஒருநூற் சார்பாம் வழி நூலுமன்று.

தமிழியற் பகுதிகள் தனிவிரித் தெழுதிய தண்பெருநூல் பல பெருகிய நிலையில், அனைத்தையும் பயின்று சொல்லியல் தேர்தல் மாணவர் பலருக்கு மலைவினை விளைக்கும். ஆதலின், அவையெலாம் துருவிமுற்றும் கற்றமுதறிவாளன் திரட்டச்சுருக்கி, இளைஞர் முயன்று மொழியியல் முழுதும் எளிதிற்பயின்று செய்யுளின்பச் செல்வ நுகர்தற் குதவக் கருதி வடித்துக்கொடுத்தது தொல்காப்பியன் நூல். முதற்படியா யிது முற்றுங்கற்றபின், தனிப்பெரு நூல்களையாயத் தொடங்குவர் புலமையை விரும்புவோர். தொடங்கி, எழுத்தும் சொல்லும், யாப்பும் அணியும் பொருளிருவகையும் மருளறத்துருவித் தெளிவர். அவ்வழக் கொழிந்து தொல்காப்பியனைப் பேரளவின்றி நூல் நுணித்ததியா நிலை தமதாகப் புலவருலகம் பெருமிதமடையும் காலம் வந்துளது. பேரும் சீர்யாய்த் தேருநர் உளரோ என்றையை மெழவும் இடமாயிற்று. இங்ஙனே, தமிழறிவைப் பறிகொடுத்து வறியராய் ஆரிய மோகினிக் கடிமையான தன் பயனுகும்.

மட்டின்றி மதுவுண்டார் மதிமயங்கித் தமை மறப்பதியல்பாகும். பிறகு வெறிகுறைந்து தெளிவுறத் தங்கள் முன்மயக்கிற்கு வெட்கமும் வெறுப்பும் எய்தலுமியல்பே. சென்ற 1500 ஆண்டுகளாக ஊறியேறிய புதிய ஆரியக்களியால் தமிழர் தம்மையும் தமிழையும் மறந்து, முன்னோர் பெருமையும் உரனும் துறந்து, பிறர் நகைப்புக்காளாயினர். உலகமெலாம் கெட்டிருள் நீங்கி வெட்டென விடிந்து அறிவொளியேறு மிக்காலத் தமிழினஞரும் நாட்காலைத் தூய காற்றைச் சாலமோப் பாராயினர். களித்த ஆரியம் புளித்தபின், அதில் அருவருப்பும், தன் மதிப்புணர்வு தடிக்கவும் தமது பழந்தமிழ்த் தூய வாழ்வினை மீள மேற்கொளும் பெருவிருப்பும் ஒருங்குணர்வாராயினர். இப்புதிய நன் முயற்சிக்குப் பழையநூல்களே துணையாமாதலின், முன் மறந்து துறந்த செய்யுள்களைத் தேடத்தொடங்கினர். துருவிக்கண் டுருவும் செல்லரித்த சுவடிகளைத் துடைத்துப் புதுக்கி, தம் முன்னேற்றக் கருவியாக்கக் கருதுவர். அவற்றுள் தொல்காப்பியன் நூலே தொன்மையும் தூய்மையும் உடையதாகவே, அதனைப்பேணிக் கற்கப் பலர் விரும்புவர்.

ஆனல் அதன் நடையும், உரைகளின் முடையும், அதை முழுது மூடிய பொய்க்கதை முட்புதர்களின் தொடையும், அவர்களே அச்சுறுத்தி அலமரச் செய்கின்றன. ஆரியர் மறையைப் பொருளறியாமல் போற்றுதல்போல, தமிழினஞர் எதையும் விழிதண் குருடராய் விழுங்க இணங்கார். புலவருலகில் நிலவும் பல கட்டுக்கதைகளும் அறிவை மூட்டியலமருத்தும் உரைகளும் இந்நூலின் நோக்கையும் சொற்றொடர்ச் செம்பொருட் போக்கையும் அறிய இடம் தராமையால் அவர்கள் மயங்குகின்றனர்.

இதனல் இந்நூல் இன்றளவும் கற்றூரு முற்றும் தெளியாத மூடுமந்திரமாயிருந்து வருகிறது. இக்கிலியில் இதுபழந்தமிழ்வாழ்வினைப் புதுக்க விரும்புவோர்க்குதவுவ தெப்படி? உள்ளவாறு உட்பொருளுணராத கள்ளப்புகழ்ச்சி எள்ளற்குரித்து. 'ஏட்டில் எழுதா' மறை கூடப் பார்ப்பன வகுப்பார் கற்றுக் கனம் சொல்லி விற்றற் குதவுகிறது. வேதப்பொருள்பற்றி வாதமில்லை. தொல்காப்பியன் நூலோ பிற்கால உரைப்பிரையால் திரைத்து அருந்தவொண்ணுப் பாலாயிற்று. அறியாவடநூற்கு அஞ்சி மெய்விரித்து அறிவொடுவாயும் புதைக்கும் போலிப் புலவர் புனையுங்கதைகளால் இந்நூல் அறிவு நுழையா அரும்புதராகத் தோன்றுகிறது; புலமை புகுதாப்பெரும்புற்று; நுண்ணறிவினரும் கிலேயர் நீந்தா அலையாழி; அயனெடுமாலும் அடிமுடி யறியா அண்ணமலைபோல, புலவரு மருளும் பொல்லாக்கலைப்பாழி(பாழி=மலை.)

இவ்வளவும் போதாமல், எனைத்தளவும் இதுதனித்தமிழ் மரபு தாதெனவும், வடித்தவடநூல் முடித்தமுடிபே தொடுத்து யாத்ததோர் பார்ப்பனப்படைவலெனவும், தொல்காப்பியம் என்னும் இந்நூற்பெயரே தத்திதாந்தமாய் காவியக்குடியரன்செய்த நூலெனக்காட்டும் எனவும் வாய்ப்பறைகொட்டும் வம்பருமம்பலருளர். அதனல் தமிழர் மயங்கித் தெள்ளிய சொற்பொருள் தோராது விடுகின்றனர். கொள்ளமையா ஆரியக்கொள்கையை அள்ளிநுழைத்து சூத்திரச் செந்தொடர்ச் சொல்லொடு மல்லிடும் பொல்லா உரைகற்பவர்க்கு அல்லல்தருகின்றன. தொல்காப்பியன் ஆரியத்தைப் புகுத்தித் தமிழை அழிக்கவந்த ஆரியப் பார்ப்பனனு? அன்றித்தமிழைப்பேணிய பழம்புலவனு? அவன் நூல், தளரும் தமிழ்வளர்தற்குதவும் தப்பாமருந்தாய், கொள்ளக் குறையாச் சேமநிதியுமாம் என்பார் மெய்பேசுபவரா? அன்றி, தோண்டகாறும் வேண்டாக் குப்பைக்களஞ்சியம் இதுவென்பதுண்மையா? இதனைத் துருவி முடிவுகட்டுமுன், இவன் நூற்பெயரைச் சிறிது சிந்திப்பது மெய்காணுமுயற்சிக்கு முதற்படியாகும்.

இன்றுபுலவர் இதனைத்தொல்காப்பியம் எனவழங்குகின்றனர். 'தொல்காப்பியம்' என்பது தமிழ்ப்பெயரன்று; வழக்கொடு செய்யுளின் மரபோடியையாத வடநூல் தத்திதமுடிவுடையது. இது இலக்கணப் புலவருக்கு இரும்புக்கடலையாய்த் தீர்க்கவொண்ணுப் புதுப்பிசி (புதிர்) ஆகும். ஒருநூலுக்கு அதனை ஆக்கியவர்பெயரோடு 'அம்' எனும் தத்திதவிகுதி கூட்டிப் பெயர்தருவது வடநூன்மரபு; வான்மீகம்,

வசிஷ்டம், பாணினீயம், பதஞ்சலீயம், யாக்கியவல்கியம் போல்வன ஆக்கியோர் பெயரடியாய் வரும் வடமொழி தத்தித இலக்கணவகையாலமைவன. தமிழில் அவ்வாறு நூற்பெயரமைக்க உதவும் ஆதாரவு எனைத்துமில்லை; ஆட்சியிலும் ஆன்றோர்வழக்கிலும் யாண்டும் மேற்கோள் காண்டற்கில்லை. அவரவரின் சிறந்தசெய்யுட்கள் அவ்வப் புலவர்பெயரே தம்பெயராய்க் கொண்டமைவதே தமிழ்ப்பல், முறைமையாகும். அதனை ஆகுபெயரென்பர் மொழியியற் புலவர் 'வள்ளுவன்' 'கம்பன்' 'கபிலன்' 'சம்பந்தன்' என்பன அவ்வப்புலவர் பெருமக்களின் சிறந்த செய்யுட்பெராய்த் தமிழில் வழங்குவதறிவோம். எனில், வள்ளுவம், கம்பம், கபிலம், சம்பந்தம், என்பன தமிழில் எஞ்ஞான்றும் யாராலும் கேட்கப்படாத புதுமை. ஆகவே, வள்ளுவன்செய்த நூல் அவன்பெயரே கொள்ளுவதுபோல, தொல்காப்பியன் ஆக்கிய தமிழ் நூலும் முதலில் அவன்பெயரால் 'தொல்காப்பியன்' என்றே வழங்கியிருத்தல் மரபும் முறையுமாகும். பின் தமிழை ஆரியமயமாக்கிய பிற்காலத்தில், அவனைப் பார்ப்பனன் ஆக்கும் நோக்குக்கேற்ப, அவன் நூலுக்கும் வடமொழிமரபால் பெயரிட்டழைக்கப் பெற்றதென்பதும் வெளிப்படை. இவ்வாறு கொள்ளாமல், இத்தமிழ்நூல் எழுந்தகாள் முதல் இதற்குத் தொல்காப்பியம் என வடமொழித் தத்திதப்பெயரே வழங்கிற்று என்பது நம்புதற்கில்லை. முதலில் தனித்தமிழ் மொழியியல் பெருநூலுக்கு அம்மொழி மாபொடுமுரணி அன்னிய ஆரிய இலக்கண விதிகொண்டு பெயரமைப்பது பெருவியப்பாகும். மரபிறக்து முறை பிறழ்ந்துஇவ்வாறு நூற்பெயரமைதல் தமிழளவில் ஆட்சியற்ற ஆரியமயக்கப் பேய்த்தோராகும்.

இனி வான்மீகம் எனும் வடசொல்லைத் தமிழில் வழங்குதல் போல, தொல்காப்பியமும் வடவழக்காய் எழுந்து பின் தமிழில்வந்து வழங்கிற்றெனலும் கொள்ளற்கில்லை, வடநூற்தன்றி தமிழ் நூற்கம்முறை வழக்காதாதலின், வடசொற்களுக்கும் தமிழில் வழங்குங்கால் தமிழ் மொழியியல்பே கட்டளையாகும்; ஒரோவழி, அவை வடமொழியிலக்கண வகையினமைத்தவாறே கொள்ளினும் தவறில்லை. எனில். தமிழ்ச் சொற் றொடர்புகள் எஞ்ஞான்றும் எனைத்தளவும் தமிழ் மரபுக்கு மாறுகப் பிறமொழி யிலக்கண அமைதிகொண்டு வழங்கப்பெரு. தொல்காப்பியத்தில், தொல் என்பது நல்லதமிழ்; காப்பியமும் தனித் தமிழே என்பதை பின்னர்க் காட்டுவன். அது காவியம் என்னும் வடசொல் மரூஉவாகக்கொள்ளினும் அவ்வாறு தமிழுருப் பெற்றபின் தமிழ் மரபிகக்து வடமொழியிலக்கண வரம்பினிற்றல் வழக்காறில்லை. வடமொழி நூல்களும் அப்படி தன்னினம் திழக்து பிறமொழி தழுவிய சண்டாளச்சொற்களுக்குத்தம்இலக்கணத்தில் இடம்தரா. 'லோக'த்தின் அடியாகத் தத்திதமாய் 'லௌகிகம்' பிறக்கும்; லோகச்சொல் 'உலகம்' எனத்தமிழ் உருவுக்கொண்டபின் வடநூல் விதிபற்றி 'உலௌகிகம்' என வாராமையறிக. இலௌகிகம் என்பது லௌகிகத்தின் தமிழ் உருவாகுமன்றி, உலகச்சொல்லின் தத்திதமன்று.

அன்றியும், கவிஎன்னும் வடசொல், பாட்டுக்கும் சுக்கிரனுக்கும் பெயராகும், அதனுள் காவியம் என்பதும் பாட்டாலாயது, அல்லது சுக்கிரன் செய்தது எனப்பொருள்படும். சுக்கிரனின் வழிவந்தார் எல்லார்க்கும் கவி பொதுப்பெயராயின், அக்குடியினன் இன்னார் செய்ததெனச்சுட்டும் சிறப்பியற்பெயர்த் தத்திதமாவது முறையாகுமன்றி, ஆக்கியோனைக் குறித்துச்சுட்டாப் பொதுப்பெயரால் நூற் பெயரமைதற்கு மரபும்வழக்கும் வடமொழியினும் காணலரிதே. மனு செய்த அறநூல் 'மானவம்' எனப்படும். மனுவின் வழிவந்தார் மானவராயினும், அவர் சிறப்புப்பெயர் சுட்டாமல் எவர் செய்த நூலுக்கும் மானவம் என்று தத்திதம் அமைவதில்லை. இன்னும் 'காவியம்' வடசொல்லாக் கருதப்படினும், தொல்காப்பியம் கல்ல தமிழ்த்தொடராதலின், அவ்வாறு தத்திதம் அமையாது. ஆதிகவி என்பது வான்மீகருக்குத் தனியுரிமைப்பெயர்; அதனுல் அவரியற்றியதை ஆதிகாவியம் எனல் அமையும். கவிகுலத்தார், பல பழங்குடிகளில் ஒருவராகலாம். ஆயினும் அவருள் யாருக்கும் புராணம் முதலிய பழமைச்சுட்டு தனியுரிமையின்று. அதனுலும் 'தொல்காப்பியம்' வடநூல் தத்திதப்பெயராகாது. இத்தகைய இலக்கணமரபும், ஆன்றவழக்கும்பற்றிய துணிபே இதற்குப் போதிய ஆதரவாகும்.

இனி, ஆக்கிய புலவன் சிறப்பியற் பெயரே அவன் நூலுக்கு ஆகுபெயராவது தமிழ் மரபாதல் அங்கையிற் செங்கனிபோல் விளங்குமுண்மை. அம்முறையில் தொல்காப்பியன் எனும் சிறப்புப் பெயருடையான் செய்த நூல் தொல்காப்பியன் எனப்பெறுதல் வழக்கொடுபட்ட மரபின் வழித்தாகும். குறளை 'வள்ளுவன்' எனவும், விருத்தத் தமிழ் இராமாயணத்தைக் கம்பன் எனவும், அஃதைச் செய்தோன் பெயரால் கூறுதல் போல, தொல்காப்பியன் செய்ததை அவன் பெயரால் தொல்காப்பியன் என்பதே பழவழக்கும் இயல் மரபுமாகும். இது கருதலளவையாற் காணும் மெய்மையாதல் மட்டுமில்லை; நூற்சான்றுமும் உறுதிபெறும் உண்மையுமாகும். ''தொல்காப்பியன் எனத் தன்பெயர் தோற்றி'' எனும் பாயிரத்தொடர் இவ்வுண்மையை ஐயமறச் செய்யும் அழியாச் சான்றாய் நிற்கவும், அதை மறந்து புதிய உரைகளால் மதிமயங்கி அல்லற் படுகின்றோம். மொழியியல் முழுதும் பழுதறத் தொகுத்துத் தான்செய்த தமிழ்ப் பெரும் புதுநூலுக்குத் தனிப்பெயரிடாமல் தன் பெயரையே பெயராக்கி நிலவினனெனத் தெளிக்கும் இப்பாயிரத்தொடருக்கு, தொல்காப்பியத்தை ஆக்கியதால், தனக்கு அந்நூற்பெயரே அழியாப் புகழ்தரும் பெயராக நிலை நிறுத்திக்கொண்டான் எனப் பொருள் பண்ணி மகிழ்வார் சில புதிய புலவர். அது பொருளாயின், அந்நூற்பெயர் தொல்காப்பியம் எனச் சுட்டாததேனே? அன்றியும் அந்நூலால் பெற்ற தொல்காப்பியன் எனும் புதுச்சிறப்புப் பெயரை புலவன் நிறுத்தினன் எனக்கொள்ளின் எழும் ஏதங்கள் எத்தனை? நூற்பெயரை நுவலாததோடு, அதை

ஆக்கியோன் இயற்பெயரும் கூறுதகுற்றம் பாயிரத்தின் மேலேறும். பாயிரம் ஆக்கியோன் இயற்பெயரும் நூற்பெயரும் சுட்டுதல் வேண்டும்:-

> " ஆக்கியோன் பெயரே, வழியே, எல்லே
> நூற்பெயர், யாப்பே, நுதலியபொருளே
> கேட்போர், பயனோடாயெண் பொருளும்
> வாய்ப்பக்கரட்டல் பாயிரத்தியல்பே "

இது, பாயிரம் பற்றிய பிறழாக்கட்டளை. இதனால் பாயிரம் கூற வேண்டுவன எட்டனுள் ஆக்கியவனியற் பெயரும், நூற்பெயரும் இன்றியமையாதன எனத் தெளிக்கப்படுகிறது. அதன்படி பாயிரம், கூறும் தொல்காப்பியன் என்பது அவன் இயற்பெயராதல் தேற்றம். அஃதவன் இயற்பெயராதலின், 'குடிப்பெயர் தோற்றி' என்னுமல் 'தொல்காப்பிய னெனத் தன்பெயர் தோற்றி' என விளக்கப்பட்டது அவன் பெயரே ஆகுபெயராய் நூலுக்கும் பெயராயிற்றுதலின், இத்தொடர் நூற் பெயரும் கூறிற்றுதல் வெளிப்படை. இறவாப் பெருங்கலியாக்கி, அதற்குத் தன்பெயரே பெயராக அமைத்து, அதனால் மறவாது நிலைத்த புகழோடு தன் பெயர் விளங்கப் பண்ணிய பெருமை அப்புலவனது என்பதே இப்பாயிரத் தொடரின் தெள்ளிய பொருளாதல் ஒருதலை. தன் பெயரால் இன்று நிலவும் பெருநூலைச் செய்த சிறப்பால், அவன் பெயரே அந்நூற்பெயராய், என்றுமிறவாமல் தமிழ் கூறும் நல்லுலகில் விளங்குகிறது.

இனி, பழங்காவியக் குடியினனான திராணதூமாக்கினி எனும் பார்ப்பனன் இக்நூலியற்றியவன் எனும் கட்டுக்கதை வடநூலாதர வற்றதும், அறிவால் மறுக்கப் படுவதுமான பொய்க்கதை. தென்னாட்டிலொரு பகுதியில் இழிவழக்குகளை யேற்றி மக்களைப் பழிபடு வாழ்வினுக்காளாக்கிய சிறுமை பரசுராமன்மேற் சுமத்தும் கட்டுக்கதை, மேற்கடலோரத்தைக் கீழ்மைப் படுத்திய செய்தி கேட்கின்றோம், அவனுக்குத் தமிழைக் கெடுக்கத் தலைப்பட்ட தம்பி ஒருவனுண்டென வடநூலெதுவும் குறிக்கவுமில்லை. இவ்வம்புக்கதை வள்ளுவனுள்ளிட்டு நல்ல தமிழ்ப் புலவரெல்லாரும் ஆரியரெனக்கூறி, தமிழரைப் பழிக்கும் **பார்ப்பன மாக்களின்** குறும்பின் விளைவாகும். இரண்டாழியித் துவக்கத்தில் இளைய இராமனை எதிர்த்த முதிய பரசுராமன் தம்பி மூன்றாழி முடிவில் முடிந்த கண்ணனிடம் சென்று வேளிரைக் கேட்டு வரங்கொண்டு கூட்டிப் போந்த அகத்தியனுக்கு மாணவன் என்பது கால முரணால் கருதவொண்ணாப் பொய்மையாதல் வெளிப்படை.

பழந்தமிழுலகில், 'காப்பியன்' எனுமியற்பெயருடையார் புலவருள்ளும் பலருண்மை தொகைநூற் பரக்களாக்கிய புலவர் பெயர் வரிசையிற் பரக்கக் காணலாம். அப்பெயருடையார் பலராகவே, அவருள் வேற்றுமை விளங்க ஒவ்வொருவர் பெயருக்கும் அவரவர் சிறப்பியல்புகளால் அடைகொடுத்துத் தெளித்தல் மரபொடுபட்ட தமிழ் வழக்காம். இன்றும், கருப்பன் என்பார் பலரிடை, குட்டைக்கருப்பன்,

கெட்டைக்கருப்பன், சின்னக்கருப்பன், பெரியகருப்பன் என்று ஏற்புடை யடையால் கூறுதல் காண்போம். அதுவே போல, காப்பியப் பெயரினர் பல பெரும்புலவர் பண்டைக் காலத்திருந்தனராதலின், காப்பியாற்றுக் காப்பியனார், சேந்தன் தந்தை காப்பியனார், பல் காப்பியர், தொல் காப்பியர், எனப் புலவர் பெயர்கள் பல பழம் செய்யுளியற்றியோராகத் தொல்லை ஏடுகள் சொல்லத் தேர்கின்றோம். பண்டைப் புலவருட் காப்பியப் பெயருடையார் பலராதலின், அவரனைவருக்கும் காலத்தால் முற்பட்ட இப்பெரு நூலியற்றியவர் பழமைதோன்ற இவரைத் தொல் காப்பியன் எனும் சிறப்படையால் சுட்டிப்பிரித்து, மற்றையோரையும் அவரவர்க்கேற்ற வேறடை புணர்த்திக் குறித்தனர்போலும். காப்பியாறு எனும்ஊர்ப் புலவரொருவருக்குக் காப்பியனார்எனும் பெயருண்மையால், காப்பியப் பெயர் அக்காலத் தமிழ் மக்களதியற் பெயராவதன்றி, காப்பியக்குடி எனும் ஊர்த்தொடர்பு சுட்டும் சிறப்புப் பெயராகாமையும் தேற்றமாகும். எனவே, இத் தமிழ்ப்பெரு நூலாக்கியவர் 'காப்பியன்' எனும் பழைய தமிழ் இயற் பெயருடையதொரு பண்டைத் தமிழ்ப் புலவரேயாவரென்பது கடியலாகா முடிவாகும்.

இனி 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்றதனால், இவர் பார்ப்பனரென்பார் கூற்றையும் ஆராய்வோம். ஐந்திரம் என்ற பண்டை இலக்கணம் தமிழன் பயிலத் தடை கிடையாதே. பார்ப்பாரன்றிப் பிறர் பயிலாத மறைபோலன்றி, பிற வடநூல்யாவும் யாவரும் கற்றற் குரியனவன்றே? வேடன் வான்மீகனும், சமணரும், தமிழரும் வட மொழி பயின்று பெருநூலியற்றிப் புகழ்பட விளங்கியது உலகறிந்த உண்மையன்றே? இன்னும் இந்நூலைக் கேட்ட அதங்கோட்டாசான் பார்ப்பனன் என்பது விளங்க 'அறங்கரை நாவின் நான் மறை முற்றிய' எனச்சுட்டும் பாயிரம், தொல்காப்பியன் ஐந்திரம் நிறைந்தான் எனமட்டும் கூறிய குறிப்பும் கருதற்குரியது. ஐந்திரம் யாருக்கும் சிறந்துரிய உடைமையன்று. அன்றியும், அப்புலவன் பார்ப்பனப் பண்டிதனுயின், அக்கால வடமொழி நூலான ஐந்திரத்தை அவன் நன்கு பயிலுதலில் தளிச்சிறப்பில்லை; இலக்கணமறியார் பண்டிதராகார். அவன் தமிழனுயின், தன்மொழியளவில் தொன்நூற் புலமை நிரம்பி யதோடு, ஆரியர் பழைய பெருநூலதையும் முழுதும் பழுதறப்பயின்று தேர்ந்திருப்பின், அஃதவன் சிறந்த பெருமையாகும். அதனால் 'ஐந்திரம் நிறைந்த' எனுமடையே அவன் அந்நூல் பயிலும் இயல்புடைய பார்ப்பனப் பண்டிதனுகாமல், அதைக் கற்க வேண்டாத பிறமொழிப் புலவனுதலையும், அக்கிலையில் அவன் அதைக்கற்று வல்லுகனை சிறப்பையும் ஒருங்கு சுட்டும். இதுவே அவ்வடையின் கருத்தாம் என்பது உற்று நோக்கி உணரற்குரியது. பின் பொய்மலிந்த புராண காலத்தில், மற்றத் தமிழ்ப் பெரியாரோடிவனையும் பார்ப்பனருக்கும் நோக்குடைய பண்டிதர் இவனுக்குத்திரணதூமாக்கினி எனப் புதுநாமம் சூட்டி, காப்பியத் தமிழ்ப் பெயரை காவியமெனும் வடசொல்லின் தற்பவமாக்கி, இத்தமிழ்ப் பெருமகனை ஆரிய கவிகுலத்தானுக ஒரு

கதையும் புனைந்து, அரச விசுவாமித்திரரையும் ஆகாரென விலக்கிய மறைக்குடியிற் புகுத்தி முடித்தார். தமிழையிழிக்கக் கூசாது எதையும் கூறத் துணிந்த இவர்கள் ஆரியதாலில் இதிற்காதாரமின்மையை ஒரு தடையாகக் கருதமாட்டார். தன்னிகரற்ற தமிழ் மூதறிவினன் இவனை ஆரியனுக்கி, தமிழருள் யாரு மித்தகவினராகர னெனுந்தருக்குரை கிறுத்த, இவ்வாதாரவற்ற பொய்க்கதை போதிய சான்றுமோ? புதிய தமிழகத்தில் பார்ப்பனப் பண்டிதர் பழந்தமிழ்ப் புலவரைப் பழிக்குமிச் சழக்குரைகள் மறுக்கவும் வேண்டாப் பழங்கதைகள்; இவை தாமே தம் பொய் சாற்றுந்தன்மைய. எனில், ஆரியமோகம் ஏறிய தமிழர் அறிவைப் பறிகொடுத்து இப்புரையுரைகளைப் பாராட்டும் புன்மைபுகுது. சிறிதும் தரம் அறியா, அறியொண்ணு, அறிதற்கொவ்வா, தம்மினம் பழிக்கும் தன்மையவான ஆரிய மறைகளைக் கடவுளாக் கடந்த எழுதா மொழியென மருளும் தமிழர், புலவன் **தொல்காப்பியனும் வேள்வள்ளுவனும்** பார்ப்பனரென்னப் பகருதல் தவறென்றறியும் முணர்விலராதல் வியத்தற்கில்லை.

இனி, அளவுடைய பெருமைக்குரியாரை அவர் பெயரீற்றில் ரகரவொற்றைக் கூட்டிக் கூறுவதும், ஒப்புயர்வற்ற பெருந்தகையாரை ஒருமை முடிபால் உவந்தழைப்பதும், சான்றோராலும் ஆன்ற வழக்காகும். வள்ளுவன், கம்பன், கபிலன், என மக்கட்பெரியாரையும், சிவன், முருகன், எனத் தலைமைக் கடவுளரையும் ஒருமை சுட்டும் னகரவீற்றால் அருமை தோன்ற இன்றும் அழைத்து மகிழ்வது தமிழ் வழக்காகும். 'கடவுள் கேட்பான்', 'முருகன் அருளுவன்', 'கம்பன் கூறுவன்' என்று இன்றும் வழங்குதல் யாவரும் அறிந்தது. இம்மரபு உணராத பிற்காலத்தில் பெரியரெவரையும் பன்மை சுட்டும் ஒற்றெடு பேசுதல் வழக்காற்றில் வந்துவிட்டது. அதனால் வள்ளுவன், கபிலன், கம்பன் எனத் தொல்லோர்மரபால் சொல்லுவதோடு, ரகரவொற்றுக்கூட்டி வள்ளுவர், கபிலர், கம்பர், என வழங்குவாருமுளர். அம்முறையில் தொல்காப்பியனையும் தொல்காப்பியர் எனவே பாராட்டி வாலாயினர். அதனால் தற்காலத் தமிழுலகில் 'தொல்காப்பியன்,' 'தொல்காப்பியர்' எனும் இரண்டும் ஒரு நூலிக்குறிக்கும் ஆகு பெயர்களாகும் எனத்தெளிக்தலெளிது.




புதுச்சேரியில் பிரெஞ்சியரின் ஆதி துபாஷிகளான

நைநியப்பிள்ளையும் குருவப்பிள்ளையும்

இவர்களைப்பற்றிய ஒரு குறிப்பு.

திரு. இராவ்சாகிபு, C. S. சிநிவாசாச்சாரியார் அவர்கள் M. A.,
வரலாற்றுப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.



பிரெஞ்சியரின் கிழக்கிந்தியக் கம்பெனியார், கி. பி. 1674ஆம் ஆண்டில் புதுச்சேரியில் குடியேறி, அங்கு ஒரு வியாபார இடத்தை ஏற்படுத்திக் கொண்டனர். அக்காலத்தில் வியாபார விருத்தியின் பொருட்டும், புதுச்சேரியில் கௌவுத்தொழில் சம்பந்தமாய் மக்கள் குடியேறுவதற்கும் பிரெஞ்சியருக்குப் பெருந்துணையாயிருந்தவர், பூந்தமல்லியைச்சேர்ந்தவரும், அகமுடைய வேளாளர்குலத்திற்றோன்றியவரும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினவருமான தானப்பமுதலியார் என்னும் வணிகப் பெருமானேயாவர். அவரே பிரெஞ்சியருக்கு முதல் துபாஷியானவர். சுமார் இருபதாண்டுகளுக்குமேல் புதுச்சேரியின்முன்னேற்றத்திற்காக அவர் அரும்பாடுபட்டார்.

அவர் காலமானபிறகு, அவர் மகனான, வேலேந்திர முத்தையப்ப முதலியார் சிறிதுகாலம் கம்பெனியின் முக்கிய துபாஷியாக அமர்ந்தார்; ஆனாலும், அவர் வேலை பார்க்கத்தகுந்த சாமர்த்தியம் இல்லாதவரானதால், தம்பெரும் பதவியினின்றும், 1708ஆம் ஆண்டு விலகவேண்டிவந்தது.

அத்தருணம், புதுச்சேரியில் குடியேறியிருந்த வியாபாரிகளுள், அதிசமர்த்தராயும், செல்வாக்குள்ளவராயு மிருந்த நைநியப்பிள்ளை என்பார் துரைத்தனத்தாருக்கு முக்கிய துபாஷியானார். இவர் தம்மைத்தனரான திருவேங்கடம் பிள்ளையின் உதவியைக்கொண்டு தமக்குரிய கருமங்களையெல்லாம் நன்முக நிகழ்த்தினர். நைநியப்பிள்ளையும், திருவேங்கடம் பிள்ளையும், சென்னையில் வெகுகாலம் வியாபாரம் செய்து புகழும் செல்வமும் அடைந்தவர்கள். நையப்பிள்ளை புதுச்சேரியில் வியாபாரம் செய்து, அதிசெல்வத்தைப் பெற்றதால்

தம்முடைய மைத்துனரையும் தம்முடன் கலந்து புதுச்சேரியிலேயே வர்த்தகம் செய்யும்படித் தூண்டினர். காளாவட்டத்தில் இவ்விருவரும் பிரெஞ்சியரின் இந்தியக்குடிகளுள் தலைமைவகித்து அவர்களுக்கெல்லாம் முதல்வராய் விளங்கினர்.

பிரெஞ்சுக்காரர்கள் புதுச்சேரியில் முன்னேற்றமடைய உதவி செய்தவர்களுள் பெயர்பெற்ற துபாஷியாகவும் சரித்திர சம்பந்தமான தினசரியைக் குறித்தவருமான **அநந்தரங்கம் பிள்ளை**யின் குடும்பமும் ஒன்று. அக்குடும்பத்தின் தலைவர் திருவேங்கடம் பிள்ளை முதலில் சென்னையில் கன்சு வியாபாரம் செய்துகொண்டிருந்தார். பிறகு அவர் புதுச்சேரிக்குக் குடியேறினர். புதுச்சேரிப் பெருமன்றத்தாரிடமிருந்து (Superior Council) இரண்டு வருடங்களுக்கு, ஆண்டு ஒன்றுக்கு இரண்டாயிரத்து நானூறு பகோடாக்கள் (வராகன்கள்) மதிப்புள்ள இலாபம் கொண்ட வெற்றிலையிலும் புகையிலையிலும் வியாபாரம் செய்வதற்கு அனுமதி பெற்றுக்கொண்டார். கி. பி. 1708 ஆம் ஆண்டு புதுச்சேரியுள்ள துணி வியாபாரிகள் ஏற்றுமதி செய்யும் துணிகளின் விலையில் நூற்றுக்கு இருபது வீதம் விலையை உயர்த்தவேண்டுமென்று பிரெஞ்சுக் கம்பெனியாரைக்கேட்டனர். அப்போது **நைனியப்பிள்ளை**, இன்னும் மிகக் குறைந்தவிலையில் துணிகள் நெய்து கொடுப்பதாகச் சம்மதித்தார். அதனால் பிரெஞ்சுக்காரர்களுக்குப் பருத்தித்துணி ஏற்றுமதி சம்பந்தமான கவலை குறைந்தது. மற்றொருமுறை பிரெஞ்சுக் கம்பெனியார் தங்களது வியாபாரப் பிரதிநிதியின் கையிலிருந்த பவளத்தைத் தக்க விலைக்கு விற்பதற்கியலாமல் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கும்போது, நைனியப்பிள்ளை அப்பவளத்தைத் தக்க விலைக்கு விற்பதற்கு உதவி புரிந்தார். இவ்வருமபெரும் சேவைகளுக்காக அவரைக் கவர்னர் ஓர்ப்பேர் என்பவர் முக்கிய துபாஷியாகவும் இந்தியரெல்லோருக்கும் முதலியாராகவும் (Courtier) நியமித்தார்.

நைனியப்பிள்ளை என்பவர் மிகவும் புகழ் பெற்றவர். இந்தியக் குடிகளிடம் அவருக்கு அதிகச் செல்வாக்கிருந்தது. அவரை முதலியாராகவும் முக்கிய துபாஷியாகவும் நியமனம் செய்ததை **ஜெஸ்யூட்** கிறிஸ்தவ சபையார் பலமாகக் கண்டனம் செய்தனர். ஆனால் கவர்னர் ஹீபேர் அவருக்குப் பெரிய துணையாகவிருந்தார்.

டுலிவியர் என்பவர், சிறிது காலத்துக் கெல்லாம் நைனியப் பிள்ளையைச் சிறை செய்யும் அதிகாரத்துடன் புதுச்சேரிக்கு வந்து கவர்னர் பதவியை வகித்தார். இதற்கிடையில் ஜெஸ்யூட் கிறிஸ்தவ சங்கத்தவர்கள் கீழ்க்கண்ட விண்ணப்பங்களை ஐரோப்பாவில் பிரெஞ்சிய அரசாங்கத்தாரிடம் சமர்ப்பித்தனர்: (1) 'முதலியார்' என்னும் உத்தியோகமும் இந்தியருள் முதலியார் பதவியும் எப்போதும் ஒரு கிறிஸ்தவருக்கே கொடுக்கப்படவேண்டும். (2) புதுச்சேரியில் வணிகர் வீதியாய் விளங்கும் சென்னைத்தெருவிலுள்ள ஈஸ்வரன் கோவிலும்,

வணிகர் தெருவிலுள்ள பெருமாள் கோவிலும் தவிர அக்கரத்திலுள்ள பிற இந்துக் கோயில்களை மூடிவிட வேண்டும். (3) கைங்கியப்பிள்ளையை அவரது புதுப் பதவியினின்றும் நீக்கிவிடவேண்டும்.

இவையெல்லாவற்றிற்கும் பிரெஞ்சியரின் மன்னரான, 14 ஆம் லூயி சம்மதித்து, கோயில்களை மூடுவதில் கம்பெனி அதிகாரிகள் மிக ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டு மென்றும், கவர்னரும் ஜெஸ்யூட் கிறிஸ்தவர்களும் இக்காரியத்திற்காக ஒத்துழைக்க வேண்டுமென்றும், கைங்கியப்பிள்ளை கிறிஸ்தவராவதற்கு ஆறு மாதகாலம் தவணை கொடுக்க வேண்டுமென்றும், அதற்குள் அவர் கிறிஸ்தவராகாவிட்டால் அவருக்குப் பதிலாக வேறொரு கிறிஸ்தவரை முக்கிய துவிபாஷியாக நியமிக்கவேண்டு மென்றும் கட்டளையிட்டார்.

புதுச்சேரியிலுள்ள அதிகாரிகள், இந்துக்கோவில்களை மூடுவதினால் அங்குள்ள இந்துக்கள் தூரைத்தனத்தாரிடம் வெறுப்புற்று வெளியேறி விடுவார்களோ என அச்சமுற்றனர். இந்துக்களிடம் செல்வாக்குடைய கைங்கியப்பிள்ளையின் உதவியைக்கொண்டு கோயில்களை மூடுவதைப்பற்றிய அரசரின் கட்டளையை நிறைவேற்றமுடியுமென நினைத்தார்கள். அதற்காக கைங்கியப்பிள்ளையுடன் சவரிமுத்துஎன்னும் ஒருகிறிஸ்தவரைக் கூட்டதிகாரியாக (Co-mudaliar) நியமித்து இருவருக்கும் சம அதிகாரங்களும், கௌரவங்களும், உரிமைகளும் கொடுத்தனர். வியாபார சம்பந்தமான காரியங்களில் கைங்கியப்பிள்ளை மிகத் தேர்ந்தவ ரென்றும், கர்ணடகத்தின் அதிகாரியான நவாப்பின் தர்பாரில் மிகுந்த செல்வாக்குள்ளவரென்றும், ஐரோப்பியர்களுக்கு நாட்டரசர்களால் விடப்பட்ட நிராமங்களை மீண்டும் நவாப் கைக்கொள்ளுவதற்காகப் போர்ச்சுகீசியர்கள் சூழ்ச்சிசெய்து கொண்டிருக்கும் இத்தருணத்தில், முதலியார் பதவிக்கு கைங்கியப்பிள்ளையைவிடத் தகுதியுடையவர் எவரும் இல்லை என்றும், அச்சபையார் கூறினர்.

சவரிமுத்து என்னும் கூட்டு அதிகாரி கிறிஸ்தவர்களிடைமாத்திரம் செல்வாக்குடையவராக விருந்தார். கைங்கியப்பிள்ளை இந்துக்களின் தலைவராக இருந்தார். புதுச்சேரியிலுள்ள இந்துக்கோயில்களை மூடுவதைப்பற்றி அங்குள்ள இந்துக்கள் பெருங் கிளர்ச்சிகள் செய்தனர். அங்ஙனம் கிளர்ச்சிசெய்யும் இந்துக்களை இவரே தூண்டிக்கொண்டு இருப்பதாக ஜெஸ்யூட் கிறிஸ்தவர்கள், கைங்கியப்பிள்ளைமேல் குற்றஞ் சாட்டினர்; மேலும் 14-ம் லூயி அரசரின் கட்டளைகளை உடனே நிறைவேற்றும்படிப் புதுச்சேரி அதிகாரிகளைத் தூண்டினர்கள். அத்தூண்டுதலுக்கிணங்க ஞாயிற்றுக்கிழமைதோறும், கத்தோலிக்க கிறிஸ்தவர்களது மதவிடுமுறை தினங்களிலும், இந்துக்களின் கோயில் சடங்குகளையும், மதம், மரணம், முதலியவை சம்பந்தமான கூட்டங்களையும் ஊர்வலங்களையும், நிறுத்தும்படி உத்தரவிட்டார். கி. பி. 1715-ம் வருஷம் பிப்ரவரிமாதம் 3-ம் தேதியன்று ஞாயிற்றுக்கிழமை அமாவாசை தினம் அத்தினத்திற்கேற்ற சடங்குகளை இந்துக்கள் செய்யக்கூடாதென்று அதிகாரிகள் உத்தரவிட்டார்கள்.

ஆதலின் ஊரிலுள்ள இந்துக்குடிகள் கோபமடைந்து நகரைவிட்டு வெளியேறினர். நான்கு நாட்கள் வரை நகர வீதிகள் காலியாயிருந்தன. பிறகு கவர்னரும் நகர மன்றத்தாரும் வேண்டிக்கொண்டதனாலும், இந்துக்களது மதசம்பந்தமான எல்லாவுரிமைகளையும் போற்றுவதாக உறுதிமொழி கூறினதாலும், இந்துக்கள் திரும்பவும் புதுச்சேரிக்கு வந்து முன்போல் தொழில் செய்யலானார்கள்.

இதற்கிடையில் ஹீபேர் என்பவர் பிரான்சுக்குச்சென்று, ஜெஸ்யூட் கிறிஸ்தவர்களுடன் சமாதானம் செய்துகொண்டார். இன்னும், பிரான்சில் பல கனவான்களின் சிட்பையும், மந்திரிகளின் சன்மதிப்பையும் பெற்றார். அவருக்கெதிராகச் சாட்டப்பட்ட குற்றங்களினின்றும், இச்சிபார்சுகளால் அவர் விடுவிக்கப்பட்டார். பின்னர் முழு அதிகாரங்களுடன் இந்தியாவுக்குத் திரும்பினர். டேலிவரிடமிருந்து எல்லா அதிகாரங்களும் பிடுங்கப்பட்டன.

கவர்னர் ஹீபேர் இந்தியாவுக்குத் திரும்பியதும், கைகியப்பிள்ளையை முக்கிய துவிபாஷி அந்தஸ்தினின்றும் நீக்கவேண்டுமென்று முயற்சித்தார். ஆனால் புதுச்சேரியில் பிரபலமாயிருந்த மாலோ கம்பெனியார்கள் மாத்திரம் கைகியப்பிள்ளையை அவர் உத்தியோக பதவியினின்றும் நீக்கக்கூடாதெனக் கிளர்ச்சிசெய்தனர். அதனால் ஹீபேர் சிறிதுகாலம் ஒன்றும்செய்ய இயலாது இருந்தனர். மாலோகம்பெனியார்களின் சாக்குகள் புதுச்சேரியினின்றும் கப்பல்களில் ஏற்றுமதியானதும், முன்னர் பிரிவரிமாதம் நான்காம்தேதி ஏற்பட்ட கலகத்திற்குச் சார்பாக அவர் இருந்ததாகக் குற்றஞ்சாட்டி, கைகியப்பிள்ளையையும், இன்னும் அவர்சார்பான சில இந்தியர்களையும் சிறையிட்டு, ஹீபேர் ஒரு போலிவிசாரணைநடத்தி, நகரச்சாவடிகளில் அவரைச் சாட்டை அடிகளினால் தண்டித்து, 8 000 பூவராகன்கள் அபராதமும் விதித்து, மூன்றுவருஷம் அவரைக் கடுங்காவலில் வைப்பதற்கும், பிறகுநாடுகடத்துவதற்கும் தண்டனையிட்டார்.

இத்தண்டனை மிகக்கடுமையானதும், அநியாயமானதும் என்று பொதுவாகப் புதுச்சேரியிலுள்ள வெள்ளையர்களும், குறிப்பாக மாலோ கம்பெனியாரின் கணக்காகிய ஜாக்ஸ் வின்சென்ட் (Jacques Vincent) என்பவரும் கண்டித்தனர். எனவே கைகியப்பிள்ளையின் தண்டனையை விலக்குவதற்கும், திரும்பவிசாரணை நடத்துவதற்கும் பிரெஞ்சு அரசாங்கத்துக்கு மனுச்செய்யும்படி அவரை மாலோகம்பெனியார் தூண்டினார்கள். அதன்பேரில் பிரெஞ்சிய அரசாங்க மந்திரியே கைகியப்பிள்ளையைத் திரும்பப் பழையநிலைக்கு நியமிக்கும்படியும் அவருக்கு உதவியாக ஒரு கிறிஸ்தவரை நியமிக்கும்படியும் ஹீபேருக்கு உத்தரவிட்டார். ஆனால் இவ்வுத்திரவு புதுச்சேரிக்கு வந்து சேருவதற்குள் கைகியப்பிள்ளை சிறையிலிடப்பட்டதாலும், மானக்கேட்டாலும், மனமுடைந்து உடல்கலங்குன்றி அங்கேயே இறந்து

விட்டார். அவர்மேல் இட்ட அபராதத்தை வசூலிப்பதற்காக அவருடைய சரக்குகள் புதுச்சேரியிலுள்ள கவர்னரால் பறிமுதல் செய்யப்பட்டன. பிறகு விசாரித்ததில் அச்சரக்குகளில் பெரும்பாகத்தை ஹீபேரும் அவருடைய குமாரரும் அபகரித்துக்கொண்டார்கள் எனத்தெரிந்தது.

பிறகு கைகியப்பிள்ளையின் மைத்துனரான திருவேங்கடம்பிள்ளையையும் ஹீபேர் தண்டித்தார்; இதன்காரணம், கவர்னர் தமக்குக் கடனுகக்கேட்ட தொகையைத் திருவேங்கடம்பிள்ளை கொடுக்க மறுத்ததேயாகும். புதுச்சேரியிலுள்ள பெருமன்றத்தாரின் (Superior Council) சம்மதமின்றி ஒருபோலி விசாரணையை ஹீபேர் நடத்தித் திருவேங்கடம்பிள்ளையை எல்லோருக்கும் முன்னிலையில் 50 சவுக்கடிகள் கொடுத்துத் தண்டித்தார். அதன்பின், தண்டனைக்குப் பதிலாகத் திருவேங்கடம்பிள்ளை இலஞ்சப்பணம் கொடுத்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட்டார். இவையெல்லாம் முழுப்பொய்யென ஜாக்ஸ்வின்ஸேன்ட் என்பவர் மறுவிசாரணையில் நிரூபித்துத் திருவேங்கடம்பிள்ளையின் பேரில் விதிக்கப்பட்ட தண்டனையையும் விலக்குவித்தார்.

கி. பி. 1718-ல் கைகியப்பிள்ளையின் தண்டனையை மாற்றி ஒரு தனிச்சபையை ஏற்படுத்தி ஹீபேரையும் அவரது குமாரனையும் விசாரணைசெய்யும்படி பிரெஞ்சு அரசர் உத்திரவிட்டார். ஹீபேர் கவர்னர் பதவியினின்றும் நீக்கப்பட்டு ஒருபுது கவர்னர் நியமிக்கப் பட்டார். ஹீபேர் தாம் அபகரித்த சொத்துக்களைச் சென்னைக்குக் கொண்டு போய்விட்டார். தமக்கு விரோதமான குற்றப்பத்திரங்களையும் அழித்துவிட்டார். பிறகு விசாரணைசெய்ததில் ஹீபேரும் அவருடைய மகனும் ஒரு இலட்சம் லிவர்கள் பெறுமான கம்பெனியின் சொத்துக்களை அபகரித்ததாகவும், வேறு சிலரிடமும் லஞ்சமாகவும் மற்றும் பரிதானமாகவும் பணம்வாங்கியதாகவும் வெளிப்பட்டது. இவ்விசாரணைக்காகநியமிக்கப்பட்டதனிச்சபையார் கைகியப்பிள்ளையின் தண்டனைகளையும் மற்றும் சில இந்துக்களின் தண்டனைகளையும் விலக்கினார்கள். கைகியப்பிள்ளையின் கௌரவமும் புகழும், திரும்பவும் கிஸோட்டப்பட்டாலும் அவரது குடும்பத்தின் செல்வநிலை குன்றிற்று.

பிறகு, கைகியப்பிள்ளையின் மூத்தகுமாரரான குருவப்பிள்ளை ஜேக்ஸ் வின்ஸெண்ட் போன்ற பிரெஞ்சு நண்பர்களின் ஆலோசனைக் கிணங்க, பிரான்சுக்குச்சென்று அரசரிடம் மனுச்செய்ய விரும்பினர். கி. பி. 1719-ஆம் வருஷம் அவரது மாமன் திருவேங்கடம் பிள்ளையின் அனுமதியையும் இன்னும் பலரது அனுமதியையும் பெற்றுக்கொண்டு பிரான்சுக்குச் சென்றார். போவதற்குமுன் கடல் பிரயாணச் செலவை ஹீபேரிடமிருந்து வசூலிக்க வேண்டுமெனப் புதுச்சேரிப் பெருமன்றத்தில் விண்ணப்பம் செய்திருந்தார். சென்னையிலிருந்து கப்பலேறி ஐரோப்பாவையடைந்து பிரெஞ்சு தேசத்தைச் சேர்ந்தார்.

மாலோ கம்பெனியார், டுலிவியர் முதலியோரின் சிபாரிசின்பேரில் குருவப்பிள்ளை பிரெஞ்சு அரச சபையில் கன்கு வரவேற்கப்பட்டார்.

இளம் பிராயத்தவரான 15ஆம் லூயி அரசருக்குப் பதிலாக காட்டைப் பரிபாலித்து வந்த ஆர்லியன்ஸ் கோமகனார் குருவப்பிள்ளையின் காரியத்தில் மிகுந்த சிரத்தை காட்டினார். 1710-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 10ஆம்தேதி இங்கியக் கம்பெனியின் நிதியில் கவர்னர் ஹூபேர் போட்டிருந்த 10060 வராகன்களை, 100-க்குப் பத்து வீதம் வட்டி சேர்த்துக் குருவப்பிள்ளைக்குக் கொடுக்கும்படி அரசரது சபை உத்திரவிட்டது. அத்தொகையில் ஒருசிறு தொகை பாரிசிலும் மற்றொரு சிறு தொகைபுதுச்சேரியிலும் குருவப்பிள்ளைக்குக் கொடுக்கப்பட்டது. எஞ்சிய சிறுதொகை குருவப்பிள்ளையின் சகோதரர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அங்கனம் கொடுக்கப்பட்ட பணம் அவரது குடும்பம் இடுக்கவேண்டி வந்த தொகையில் ஒரு சிறு பாகத்திற்கே ஈடாக விருந்தது.

எனினும் திருத்தப்பட்ட பிரெஞ்சு இங்கியக் கம்பெனியார் (Reorganised French Company) அவரைப் புதுச்சேரியில் முதலியாராக நியமித்தார்கள். அவர் பிரான்சில் இருந்தபோது வெர்சேல்ஸ் பட்டினத்தில் கத்தோலிக்க மதத்தைத்தழுவி இறிஸ்தவரானார். அவரது ஞானத்தந்தை (Godfather) பதினேந்தாவது லூயியான பிரெஞ்சு மன்னரேயாகும். அவரது ஞானஸ்நான பெயர் சார்லஸ் பிலிப் என மாற்றப்பட்டது. விரைவில் அவருக்குப் பெரும் பட்டங்களும் கௌரவங்களும் வழங்கப்பட்டன. 1722-ம் வருஷம் ஐரோப்பாவினின்றும் புதுச்சேரிக்கு வந்துசேர்ந்தார். இரண்டு நாட்களுக்குப் பிறகு அவர் துரைத்தனத்தாரின் முக்கிய துவிபாஷியாக நியமிக்கப்பட்டார். அவரது மாமன் திருவேங்கடம்பிள்ளை அவருக்கு உதவி அதிகாரியாக நியமிக்கப்பட்டார். ஆனால் கி. பி 1724-ல் எல்லோரும் நினைத்துவருந்தும்படி அகாலமரண மடைந்தார்.

குருவப்பிள்ளை ஒரு நல்ல கிறிஸ்தவர். அவரது மனைவியும் 1723-ல் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினார். அவருக்குப் பிறகு பீட்ரோகனராய முதலியார் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டார். அவர் இறக்கும்போது புகழ்பெற்ற தினசரிக் குறிப்பாசிரியர் அனந்தரங்கம் பிள்ளைக்கு 14 வயது ஆயிற்று. அவரது தந்தை திருவேங்கடம்பிள்ளை கி. பி. 1726-ல் இறந்தார். தந்தையிறந்ததும் அவரது வியாபாரக்கருமங்களை எல்லாம் செவ்வனே கடத்திவந்து மக்களின் நன்மதிப்பைப் பெற்று, அரசாங்க விஷயங்களில் தலையிட்டுத் துரைத்தனத்தாருக்குப் பலவிதங்களில் பெருதவி செய்துபுகழ்பெற்றார். கி. பி. 1746-ம் ஆண்டில் பீட்ரோகனராய முதலியாருக்குப் பிறகு, முக்கிய துவிபாஷியை யடைந்து, 1761-ம் ஆண்டுவரை அப்பதவியை வகித்தார். அனந்தரங்கம் பிள்ளையின் இராச சேவையும் தினசரிக் குறிப்புக்களும் மிகவும் போற்றத்தக்கன.

பண்டைத் தமிழரின் அரசியல்

திரு. ச. க. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் எம். ஏ.,
வரலாற்று விரிவுரையாளர்,
அண்ணமலைப் பல்கலைக் கழகம்.

பண்டைத் தமிழர் தம்மரசியலை அறிதற்கு ஆதாரமாக உள்ளது சங்கத் தழுவிய தண்டமிழ் இலக்கியமே. கிறிஸ்து பிறத்தற்கு இருநூறாண்டுகட்கு முன்னும், அவர் பிறந்து இருநூறாண்டுகட்குப் பின்னும், ஆக நானூறு ஆண்டுகளின் அரசுநிலையை அறிதற் கேனும் அவ்விலக்கியம் பயன்படக்கூடும் என்பதை மறுப்பார் இலர். அவ்விலக்கியத்தில் சிறப்பாக திருக்குறளும், புறநானூறும், பதிற்றுப்பத்தும் புற நிகழ்ச்சிகளாய அரசியல், போர்முறை முதலியவற்றைப்பற்றிப் பேசுகின்றமையால், அவற்றையே பெரிதும் துணைகொண்டு இக்கட்டுரையை எழுதுவாம். அக நிகழ்ச்சியாகிய காதலைப்பற்றி மட்டும் பேசும் பிற நூல்களிலும், ஆங்காங்கு உவமை வாயிலாகச் சில அரசியற் கருத்துக்கள் சிதறிக் கிடக்கின்றன. நாம் மேற்குறிப்பிட்ட கால எல்லையில் வருவது சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ்க் கருவூலமாம். அந்நூலில் அரசியற் செய்திகள் பல பொதிந்து கிடக்கின்றன.

இக்காலத்தில் ஒரு நாட்டினரசியல் மற்றொரு நாட்டினரை ஓட்டி அமைத்துக்கொள்ளப்படுகின்றதெனினும், அக்காலத் தமிழர் நம் அரசியல் காலப்போக்கில், நாட்டின் இயற்கை அமைப்புக்கும், வெப்ப தட்ப நிலைக்கும், மக்களின் மனப்பான்மைக்கும் ஏற்ற முறையில் வளர்ந்த தெனவே கொள்ளல் சாலப்பொருத்த முடைத்தாம். இக்கருத்தையே நாம் இவண் கடைப்பிடிக்கின்றோம். பண்டைத் தமிழகத்தில் நிலை பெற்றிருந்த அரசியல் கோனுட்சியேயன்றி குடியாட்சி என்பதில்லையாம். மூன்று வேந்தர் குடும்பங்கள் எல்லையிலாது செல்கின்ற தொன்மை யுடையதாய் தமிழரிடையே வீற்றிருந்தன. வேந்தனின் இயல்பை முதன் முதலில் ஆராய்வாம். பழந்தமிழ் மன்னர் பொதுவான மானுடமாகப் பாவிக்கப்படவில்லை என்பதையும், அவர் கடவுளரைப் போலவே கருதப்பட்டனர் என்பதையும் நாம் தெள்ளிதாக உணரல் வேண்டும். இறை என்னும் சொல் கடவுளையும் வேந்தரையும்

உணர்த்துவதை விளக்கப் போந்த **பரிமேலழகரும்**, 'உலக பாலர் உருவாய் நின்று உலகங்காத்தலின் இறைவனன்றோ' என உரைவகுத்தனர். எனவே தமிழ்காட்டுவேந்தர் கடவுளராக மதிக்கப்பட்டனர் என்பது தேற்றம். இக்கருத்து, பத்துப்பாட்டுள் ஒன்றாகிய பொருநர் ஆற்றுப் படையின் முடிவிற் காணப்படும் வெண்பா ஒன்றாலும் வலியுறுத்தப் படுகிறது. **கரிகால் திருமாவளவனைக்** கண்ணுற்ற புலவன் ஒருவன் தலைவிக் கூற்றாக,

> "அரிமா சுமந்த அமளிமேல் யானைத்
> திருமா வளவ னெனத்தேறேன் — ஒருமாவின்
> மான மாலென்றே கை தொழுதேன்
> போனவா பெய்த வளை."

என்னும் வெண்பாவை இயற்றினன். தலைவி தோழிக்குக் கூறுகிறாள் : 'சிங்கங்களால் சுமக்கப்பட்ட அரசுகட்டிலின் மிசை வீற்றிருந்த திருமாவளவனெனும் தரிகாலனை நான் கண்டேன். ஆனால் அவனை நான் சாதாரண மகனாகக் கைகூப்பவில்லை. திருவீற்றிருக்கும் மார்பையுடைய திருமாலே அவனென நான் அவனை வணங்கினேன். அவனைக் கண்டவுடன் எழுந்த காதலால் என்னுடல் மெலிவுற, என் கைகளில் இருந்த வளையல்களெல்லாம் கழன்று விழுந்தன,' என இப்பாட்டால் பழந்தமிழ் மன்னர் தேவரனையரென்று மட்டும் கருதப்படாது, தேவரே எனக் கருதப்பட்டார் என்பது அறியக்கிடக்கிறது.

சங்க இலக்கியத்திற் காணப்படும் வேறுபல குறிப்புக்களும் இக்கருத்தை வலியுறுத்தும். இயற்கை நிகழ்ச்சிகளெல்லாம் முறையாக நிகழ்தல் வேந்தனின் கடவுட்டன்மையால்தானென அக்கால தமிழ் மக்கள் உறுதியாக நம்பினர். இதற்குச் சான்றாகக் கீழ்வரும் அடிகளைக் காட்டுவாம்;

> 'ஓங்குதிரை வியன் பரப்பின்
> ஒலி முந்நீர் வரம்பாகத்
> தேன் தங்கும் உயர் சிமையம்
> மலை தாழிய வியன் ஞாலத்து
> வல மாதிரத்தான் வளி கொட்ப,
> வியனுண் மீன் நெறி ஒழுக,
> பகற்செய்யும் செஞ்ஞாயிறும்,
> இரவுச்செய்யும் வெண்டிங்களும்
> நமைதீர்ந்து இளர்ந்து விளங்க,
> மழை தொழில் உதவ, மாதிரம் கொழுக்கத்,
> தொடுப்பின் ஆயிரம் வித்தியது வினைய,
> ... ...
> உலகம் ஆண்ட உயர்ந்தோர் மருக!' (மதுரைக்காஞ்சி)

அலைகளையுடைய கடலாற் சூழப்பட்டதும், தேன்கூடுகள் கொடு முடிகளில் அசையாதுத் தொங்கிக்கொண்டிருக்கும் இமயத்தின் புகழால் நிறையப் பெற்றதுமான இவ்வுலகத்தில், காற்று பருவத்தின் படி வீசுவதும், உடுத்திரள்கள் வானில் தத்தம் நெறிபிறழாது செல்வதும், ஞாயிறும் திங்களும் ஒளிமங்காதுத் தலங்குவதும், காலமழை பயிர்த்

தொழிலுக்கு உதவலும், இட்ட வித்து ஓராயிரமாக விளைதலும் மீ உலகத்தை நெறிபிறழாது ஆட்சிபுரிதலால், என மாங்குடிமருதன் என்னும் தலைசிறந்த புலவர், நெடுஞ்செழியனை வியந்து பாடியுள்ளார். இயற்கை நிகழ்ச்சிகள் தடைப்படினும், முறைதவறினும் அக்கடவுட் டன்மை நல்வழிப்படுத்தப்படாததே அவற்றிற்குக் காரணமாகக் கருதப்பட்டது. மாரிபொய்ப்பினும், கல்லா பால்சுரக்காது மறப்பினும், நீர்நிலைகள் வறண்டுபோயினும், இயற்கையல்லது செயற்கையில் தோன்றினும், மன்னனையே அவற்றிற்கெல்லாம் காரணமாய்க் கருதிப் பழிப்பர் பழந்தமிழர். மக்களுக்கு அரசனே உயிராவான் என்றதும் இதைக்குறித்து போலும். அக்காலத் தமிழ் மன்னரிடையே நிகழ்ந்து வந்த வடக்கிருத்தல் என்னும் ஒழுகலாறும் இக்கடவுட்டன்மையை உணர்த்தக்கூடும். போரில் புறப்புண் பெற்ற வேந்தன் உயிர்வாழ்தல் இன்றும். கரிகாலனுடு எதிர்த்துப் பொருது, வெண்ணிப்போரில் தோல்வியுற்ற பெருஞ்சோலாதனைப்போலவும், தம்மக்களால் தோல்வியுறப்பெற்ற கோப்பெருஞ்சோழனைப் போலும், அவர்தம் வாளைப் பக்கலில் கிடத்தி, வடக்கு நோக்கித் தனித்தஇடத்தில் அமர்ந்து, உண்ணாது உயிர்விடுதல் ஒருதலை. நிலக்கடவுளாகிய வேந்தர் தோல்வியுறுதலென்பது மக்களுக்கும் அக்கருத்துக்கும் ஒவ்வாததாகையால், அவர் இத்தகைய வீரமுறையில் தம்முயிரை நீத்தல்வேண்டும் என விதிக்கப்பட்டிருந்தது.

பொதுவாக நோக்குமிடத்துப் பண்டைத்தமிழ் வேந்தன் எல்லையற்ற ஆணையை உடையவன் என்பது புலப்படும். அவன் அவ்வதிகாரத்தை வரம்பின்றி ஆற்றுதற்கு முற்படின், மக்களால் அவனைத் தடைப்படுத்தவோ, அரசுகட்டிலினின்றும் அப்புறப்படுத்தவோ, கொல்லுதற்கோ இயலாது. அக்கொடுங்கோன்மையை மக்கட் பொறுத்துக்கொண்டிருத்தல் வேண்டுமெனவும், அவர் பொறுக்க முடியாது பெருக்கிய கண்ணீரே அவ்வரசனின் குடியையும் செல்வத்தையும் வேரறுக்கும் படையெனவும் நம்பினர். அத்தகைய அரசியற் பிழைத்த மன்னர்க்கு அறமே கூற்றம் என இளங்கோவும் கூறிச்சென்றனர். கோவலனைக் 'கொன்றச் சிலம்பைக் கொணர்க எங்கு' எனக் கூறிய பாண்டியனுக்குக் கண்ணகி வடிவமாக அறக் கடவுள் இன்னல் இழைத்ததுபோல, பிற கொடியோருக்குப் பகைஞர் வாயிலாக அவ்வறக்கடவுள் தோன்றினும் தோன்றும். அரசியல் தத்துவ முறையில் நோக்குங்கால் இஃதுண்மையாயினும், வரலாற்றில் பழந்தமிழ் மன்னர் எவரும் இவ்விலக்கணத்துக்குப் பொருத்த முடையவரன்றும். ஆகையாற்றான் தம்மன்னனை இழக்கநேரிட்ட மக்கள் தம் கண்மணியையே இழந்ததாக வருந்தினர். ஞாயிறு படுதற்கும் திங்கள் எழுதற்கும் இடைப்பட்ட மருட்சியுடைய சிறு போது, மறுவுலகெய்திய அரசனுக்கும், இவ்வுலக அரசெய்தி ஆளவரும் அரசனுக்கும் இடைப்பட்ட காலம்போல் இருந்ததென ஒருபுலவர் கூறினர். மன்னன் மாண்டதால் வானது கலுழ்ந்தது உலகம்'

என அவர் புகலுகிறார். இதனாலும் பழந்தமிழர் தம்வேந்தை எங்ஙனம் பாராட்டினர் என்பது விளங்கும்.

தமிழ் வேந்தரை, தெறி பிறழ்ந்தவழி இடித்து நல்லாற்றில் செலுத்தியவர் புலவரேயாவர். புலமையில் வைத்திருந்த பெருமதிப்பால் அக்கால மன்னர் புலவரை ஆதரித்துப் பாராட்டி மகிழ்ந்தனர். மருதன் என்னும் கவிஞனின் செய்யுளில் பாண்டியனுடி இடம்பெறு விடில், தான் சிறப்பிழந்ததாக நெடுஞ்செழியன் கருதினன். எனவே அரசர் புலவர்தமக்குப் பேருரிமை அளித்தனர். 'அறநெறிமுதற்றே அரசின் கொற்றம்' என அவர் வற்புறுத்துவர். 'நீ வாழிய இவ் வுலகத்தவர்க்கு' என குமட்டூர் கண்ணனார் எனும் புலவர் இமய வரம்பன் பெருஞ்சோலாதனுக்கு கிணைபூட்டினர். அரசராவார் தம்முன்னோர் வழிநிற்றல் வேண்டும் என்பதைப் புலவர் அடிக்கடி அறிவுறுத்துவர்.

'அரசியல் பிழையாதீ, அறமெறி காட்டிப்
பெரியோர் சென்ற அடிவழி பிழையாது'

செங்கோல் ஓச்சுவாயாகவென மாங்குடிமருதனார், தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியனை வாழ்த்துகின்றனர். தன்னுயிர் நீங்க நேரிட்ட பாண்டியனும், 'மன்பதைக் காக்கும் தென்புலக் காவல் என்னெடு பிழைத்தது' என உரைக்கின்றான்.

அரசியல் தடுமாறின்றி செல்லுதற்கு உறுப்புகள் ஆறு இன்றியமையாவாம். அவை படை, குடி, கூழ் அமைச்சு, நட்பு, அரண் எனப்படும். தன்னறிவின் ஒளிமட்டும்கொண்டு ஆட்சிசெலுத்தும் மன்னனிலும், அமைச்சரின் அறிவையும் துணைகொண்டு ஆள்பவன் பிழைத்தல்பெரும்பாலும்கிடையாதாம். தனியரசனுட்சிஒருகாற்றேனென வீழ்ந்துபடும் என கௌடல்யனும் கூறுவன். இடிப்பாரை இலாத ஏமருமன்னன் கெடுப்பாரிலாது கெடும் என்பது தமிழர்தம் கொள்கையாம். அமைச்சுக்குழுவில் பொதுவாக ஆசான், அமைச்சன், கணி, தானைத்தலைவன் என்பார் இடம்பெற்றிருந்தனர். சமயத்தைப் பற்றியவற்றைக் கூறுபவன் ஆசானுவான். போர்குறித்தவழி, புள்நிமித்தம் பார்த்தலும், நாள், கோள் நிலை அறிந்து பகரலும் கணியின் கடனும். அமைச்சர் மற்றனல்லா அரசியற்றுறைகளைப்பற்றியும் அரசனுக்கு அறிவுறுத்தற்குரியர், தானைத்தலைவன் படையைப்பற்றியும் போரைப்பற்றியும் வேந்தன்பால் எடுத்துக்கூற வல்லவனுவான். அரசனின் சிற்றத்துக்கு ஆளாயினும் அஞ்சாது உண்மையையும், உறுதிபயப்பதையும் எடுத்துக்கூறல் அமைச்சுக் குழுவினரின் கடமை யாகும். அங்ஙனமின்றி, அமைச்சரும் அரசனின் கொடுங்கோன்மைக்கு ஆதரவளித்தல், முல்லையும் குறிஞ்சியும் முறைமையில்திரிந்து பாலை யாவது போலாகும் என இளங்கோவும் கூறியுளார்.

கூழ் என்பது பொருளாகும். அஃதின்றி அரசாட்சி இயலுதல் இன்றுதலால் பொருள் வரும்வழியை காடுதல் வேந்தனுவானின் தலையாய கடமையாம். மக்கள் பக்கத்தில் அன்பால் அளிக்கப்

பெற்றதும், மன்னன் பக்கத்தில் அருளொடு வாங்கப்பெற்றதுமே பொருளாக்கமாகும். நிலம்படு கடம்படு பொருளும், சுங்கமும், மாற்றூர் தேயத்திற்சென்று போர்செய்து திரட்டிவரும் பொருளும் மன்னனின் பொருள் என்பர். புதையல், முத்து போன்றன முதற்கண் குறிக்கப் பட்டன. வணிகம் ஓங்கி செழித்தகாலம் அதுவாகையால், காலிலும், கலத்திலும் போந்த பண்டங்களுக்குச் சுங்கம்பெறுதல் அரசரின் உரிமையாயிற்று. பகைப்புலத்தைக் கொள்ளையிடல் குற்றமாகக் கருதப்படாததால், அதுவும் வருவாய்க்கு வழியாயிற்று. இவையன்றி நிலவினையுளுள் ஒருபகுதியும் வாங்கப்பெற்றது. ஆறில் ஒருபங்கு கொளல்வேண்டும் என்னும்விதி அக்காலத் தமிழரிடையே இல்லையாம். விளைந்த நிலத்தில் யாவை தனித்துப் புகுந்து, உழுகின் பாழாக்குதல் போல் அரசனுவான் விளைத்தவினையுள் எல்லாவற்றையுமோ, பெரும் பகுதியையோ பற்றிக்கொள்ளக் கூடாதெனவும், ஏழுதமாடு விளைந்து வந்த கெல்லை விரும்பாது, கேவலம் வைக்கோலை உண்டின்புறுதல்போல், அரசன் சிறுபகுதியையே கொள்ளவேண்டும் எனவும் அக்காலப்புலவர் தம்மரசருக்கு அறிவுறுத்தியுளார்.

மேற்கூறிய வண்ணம் பலவாற்றலும் ஈட்டிய பொருளைச் செலவிட வேண்டிய துறைகளும் அக்காலத்தில் வகுக்கப்பட்டிருந்தன. 'அறனும் பொருளும் இன்பமும் மூன்றும் ஆற்றும் பெருமகின் செல்வம்' என, சோழன் நலங்கிள்ளியை நோக்கிப் புலவர் ஒருவர் உரைக்கின்றார். வறியோருக்கும், புகழுக்குமாகக் கொடுத்தலை அறப்பொருட்டாகவும், கரி, பரி, முதலியவற்றிற்கும், அரணுக்கும், கட்புகொண்டோருக்கும் கொடுப்பதைப் பொருள் பொருட்டாகவும், மண்டபம், வாவி, இளமரக்கா முதலிய செய்தற்கும், புலநுகர்ச்சிக்காகவும் கொடுப்பதை இன்பப் பொருட்டாகவும் கொள்ளல்வேண்டும். அரசனுவான் மக்களிடையே பசியைப் போக்க வேண்டியவனென்னும் பொருள்பட பசிப்பிணி மருத்துவன் எனப்பட்டான்.

முடியுடைத் தமிழ் வேந்தர், அரசியற் ஒழுலை ஆற்றுதற்கும், கண்காணித்தற்கும் ஏவல் சூற்றத்தையுடையவராக விளங்கினர். அவர் கோத்தொழிலாளர் எனவும் வினைஞர் எனவும் அழைக்கப் பெற்றனர். அவர் தர்மவினைஞர், கர்மவினைஞர் எனவும், தந்திரவினைஞர், கணக்கியல்வினைஞர் எனவும் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப் பெறுகின்றனர். வேந்தரால் நிறுவப்பெற்ற அறச்சாலைகளைக் கண்காணித்தல் தர்ம வினைஞரின் பணியாகும். தந்திரவினைஞர் என்பார் தன் நாட்டின் பொருட்டுத் தூதுவராக பிற நாடுகளுக்குச் சென்று அந்நாடுகளின் அரசரின் நட்பைப் பெறுவதற்கு முயலுபவராவர். கணக்கியல் வினைஞரோ வரவு செலவு கணக்கை வரைபவராம். மற்ற அதிகாரிகளெல்லாம் ஒருங்கே கருமவினைஞர் எனப்படுவர். இவரேயன்றி, சில அதிகாரக் குழுக்களும் இருந்தன. அவை எண்பேராயம், ஐம் பெருங்குழு எனப்படும். அவை வேந்தனின் உடன்கூட்டத்தாரும், மெய்காப்பாளர், கஞ்சுகன் முதலியோரும் அடங்கிய ஆயக்குழுக்களாம்.

முறைசெய்து, தன் மக்களைத் தீங்கிழைப்பாரினின்றும் காப்பாற்றும் மன்னனே மக்கட்கு இறையாக வைக்கப்பெற்றனன். ஆதலிற்போராலும், கொலைஞராலும், பிற கொடியோராலும் மக்களுக்கு இன்னல் நிகழாத வண்ணம் அவரைக் காத்து, மற்றவரைக் கடிதல் அரசனுவானின் தலையாயகடமையாம். ஆனதால்போலும் அவன் 'சான்றோர் மெய்ம் மறை' எனப்பட்டான். மன்னன் கோர்முகமாகவும், அதிகாரிகள் வரியிலாகவும் முறை வழங்கினுன். அவனுடைய முறை வழங்கு மன்றம் அறங்கூறவையம் எனப்பட்டது. சட்டம் என்பது அக்காலத்தில் எழுதிவைக்கப்படவில்லை யாயினும், அறவுணர்ச்சியை இயற்கையாகப் பெற்றவர் தமிழராகையால், அவ்வுணர்ச்சியின் ஒளியினைக்கொண்டே அவர் முறை வழங்கினர். வழக்கை ஆராய்ந்து உண்மை காணும் முறை கீழ்வருமாறு ஒரு புலவனுல் பேசப்பட்டிருக்கிறது.

"பிறர் பழி கூறுவோர் மொழி தேறலையே;
நீ மெய் கண்ட நீமை காணின்
ஒப்ப நாடி யத்தக வுறுத்தி;
வன்தடி பணிந்து முன்னை கிற்பின்
றண்டமும் தணிதி நீ."

சாட்சி கூறுவார் பழி கூறின், அவர் கூற்றை ஆராய்ந்து உண்மையைத் தெளிந்துகொள்ள வேண்டும் எனவும், ஒருவன்பால் குற்றம்காணப்படின் அறநூலின் துணைகொண்டு அரசனுவான் அவனைத் தண்டித்தல் வேண்டுமெனவும், குற்றம் செய்தோர் சரணடைந்தால் அவரைத் தண்டிக்காது மன்னித்தல் வேண்டுமெனவும், இங்ஙனமாக முறை வழங்கும் நெறி ஒரு புலவனுல் வகுக்கப்பட்டது. களவுசெய்தோனுக்குக் கொலைத்தண்டனை வழங்கப்பட்டது என்பது கோவலன் கதையாலும், புதையிலெடுத்து மறைத்துக்கொண்டவனைச் சிறையிடலென்பது வார்த்திகன் கதையாலும், அறியக்கிடக்கின்றன. கெய்தலிப்பெய்து குற்றவாளியை யிழிபுபடுத்தல் வேறொருவிதத் தண்டனை என்பது கீழ்வரும் பதிற்றுப்பத்துப் பதிகஅடிகளால் அறியலாகும்.

'நயனில் வன்சொல் யவனர்ப் பிணித்து
நெய்தலம் பெய்து கைபிற் கொளீஇ.'

போரே அக்காலத் தமிழ் வேந்தர் வாழ்க்கைக்குச் சுவையூட்டியது. முரசொலிகேட்டதும் தோள் நிமிர்ந்தகையவர் அவ்வரசரும் அவர்தம் குடியும். நாட்டினில் உள்ள ஆடவர் யாவரும் அரசனுக்குப் படைத் துணையாகச் செல்லுதற்கு முனைந்திருந்தும், அவரையன்றி தனிப்பட்ட நிலையாய படையையும் உடையவனுக அவன் இருந்தான் என்பது தேற்றம். அப்படை நால்வகைத்ததாய் இருந்தது என்பது,

'கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய கலிமாவும்
தெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய புகன்மறவரும்'

என்னும் மதுரை மருதனிள நாகனுர் வாக்கினுல் நிலைநாட்டப் பெற்றது. படையிலும் வழிவழிவந்த படையே சிறந்ததாகும். ஓரரசனை நோக்கி ஒளவையானவர், 'இவனுடைய தந்தை கின் தந்தையைப்


போரில் கரப்பாற்றினன். இவனும் நிற்குறித்து வரும்வேலே தன் நெஞ்சிற் புக்கச்செய்து நின்னைக் காப்பன்' எனக் கூறுகிறார். இதனால் பரம்பரையாகப் படைத்தொழிலுடைய குடும்பங்கள் தமிழ்நாட்டிலிருந்தன என அறியக்கிடக்கிறது. 'தானே தலைமக்கள் இல்வழிஇல்' என்னும் வள்ளுவர் மொழிப்படி தானைத்தலைவர் பலரும் மன்னனால் ஏற்படுத்தப்பட்டனர். அவருள்தலையாவார் அவனுடைய அமைச்சுக் குழுவிலும் இடம்பெற்றனர் என நாம் முன்னமே கூறியுள்ளோம்.

போர் செய்யும்போது மறனிழுக்கா மானமுடைய முறையில் செய்தல்வேண்டும் என்னும் உணர்ச்சி அக்காலத்தில் உயர்ந்திருந்தது. பெண்டிரையும், நோயுடையோரையும், ஆண்மகவைப் பெறாத ஆடவரையும் வீரர் துன்புறுத்தலாகாது என்னும் கோட்பாடு தமிழரிடையே காணப்பட்டது. ஆனால் பகைஞரின் ஊர்களைத் தீப்க்கிரையாக்கலும், கொள்ளையிடலும், விளையுளை அழித்தலும், கழுதை ஏர்கட்டி அவர்தம் நிலத்தை உழுது பாழ்செய்தலும் போன்ற போரற ஒழுக்கத்தினின்றும் தவறின செயல்களும் நிகழ்ந்தன.

திருவள்ளுவர் குடியை அறுவகை அரசியலுறுப்புகளில் ஒன்றாகக் கூறியுளார். குடிமக்களின்றி அரசு நடவாதாகையால் மற்றைய உறுப்புகளிலும் அஃதே சிறப்புடையதாகும். குடி என்றதால் நாடும் பெறப்பட்டது. 'எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே' என்றதால் நிலத்தின் பெருமை மக்கள் பாலுள்ளது என்பது தேற்றம். மக்களிலும் நாட்டைச்சிறப்பாகக் கூறினன். தமிழ்மக்களினிடையே குறுநில மன்னராக பெருநிலக்கிழவர், பெருந்தகைக் காரராகவும் சிலர் இருந்தனர். அவர் அரசனோடு நில ஒப்பந்தத் தொடர்பு (Feudal Contract) உடையராக விருந்தனர் என்பது இவ்விரு அடிகளாலும் உணரலாகும்.

> 'படை வேண்டுவழி வாள் உதவியும்
> வினை வேண்டுவழி அறிவு உதவியும்'

இவ்விரு பணியுமே அத்தகைய ஒப்பந்தத்தாரின் தலையாய கடமையென மேனூட்டு இடைக்கால வரலாற்றாலும் அறியக்கிடக்கிறது. போர் நிமித்து அரசன் எழுங்கால், பெருநிலக்கிழவர் தத்தம் படையுடன் போந்து துணைசெய்யவேண்டுமென்பதும், அரசியலைப்பற்றி ஆராயுங்கால் அரசனுக்கு அவர் அறிவுறுத்தவேண்டும் என்பதும் மேற்கூறிய அடிகளால் நாம் தெரிந்துகொள்ளுன்றோம். மற்றமக்களில், நிலத்தைப் பண்படுத்தி பயிரிடும் வேளாளரை மன்னன் காத்தல்வேண்டுமெனவும் கூறப்படுகிறது. 'பகடு புறந்தருநர் பாரம் ஓம்பி' எனப்புலவர் ஒருவர் அரசனிடம் சொல்லுகிறார். கூலம் பகர்வாராள வணிகரைக் காத்தலும் அவன் கடமையென்பது பதிற்றுப்பத்தால் அறியக்கிடக்கிறது.



புறநானூற்று ஆராய்ச்சி

வித்துவான், ஆ. பூவராகம் பிள்ளை அவர்கள்
தமிழாசிரியர்,
அண்ணமலைப் பல்கலைக் கழகம்.

1. முன்னுரை

சங்க காலத்துச் செந்தமிழ்ச் செல்வர்களாகிய புலவர் பெருமக்களால் அவ்வப்போது ஆங்காங்குப் பாடப்பட்ட பாக்களை அறிஞர்கள் தொகுத்து எட்டு நூல்களாக அமைத்துள்ளனர். அவை எட்டுத்தொகை எனப்படும். அவற்றுள் புறநானூறு என்பதும் ஒன்றாகும். இந்நூலில் புறப்பொருள்பற்றி முரஞ்சியூர் முடிநாகராயர் முதலிய புலவர்களாலும், சேரபாண்டிய சோழவேந்தர்களாலும், ஔவையார் முதலிய கல்லிசைப் புலமை மெல்லியலார்களாலும் பாடப்பட்ட நானூறுபாக்கள் அடங்கியுள்ளன. இப்பாக்களைத் தொகுத்தவர் தொகுப்பித்தவர் இன்னார் என்பது அறியப்படவில்லை.

தொல்காப்பியர் முதலிய தமிழ் முழுதுணர்ந்த சான்றோர்கள் மக்கட்குணர்த்த வேண்டுவனவற்றை அகம், புறம் என இருபாற் படுத்துரைத்தனர். காதல்பற்றிய இன்பப் பகுதிகளை அகம் எனவும், அறம், பொருள், வீடு என்பவற்றைப் புறம் எனவும் கொண்டுரைத்தனர். புறநானூற்றிலுள்ள நானூறு பாக்களும் அறம், பொருள், வீடு என்பவற்றை யுணர்த்துகின்றன.

இந்நூலில் பொதுவாக மக்கள் எல்லோருக்கு முரிய அறங்களும், சிறப்பாக அரசர்க்குரிய நீதிகளும் பலபட விரித்துக் கூறப்பட்டுள்ளன. பொருட் பகுதியாகிய போர்முயற்சிகளும், அதன் திறங்களும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. உயிர், வினைவழிப்பட்டுப் பிறத்தலும், இன்பத் துன்பங்களை நுகர்தலும், இறத்தலும் உடையதென்பதும், சுற்றத் தோடுகூடிய இல்வாழ்க்கை வீட்டு நெறிக்குத் தடையாவதென்பதும், அதனால்,

''நல்லது செய்தலாற் றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரு மூவப்பதன் றியும்
கல்லாற் றூப்படூஉம் கெறியுமாரதுவே''

என நல்வினைகளைச் செய்தல் வேண்டும்; அங்ஙனம் நல்வினைகளைச் செய்ய இயலாவிடினும் தீவினைகளைச் செய்யா தொழித்தல் வேண்டும்; தீவினை இல்லாமையே ஒருவனை வீட்டுநெறிக்கட் செலுத்தும் என்று வீடடைதற்குரிய நெறியும் விளக்கப்பட்டன.

வையமும் தவமும் தூக்கின் தவத்துக்கு
ஐயவி யனைத்து மாற்றாது

உலகமுழுதுடைய பேரரசன் செல்வத்தையும், தவத்தையும் சீர் தூக்கிப் பார்த்தால் தவத்தை நோக்க அரசசெல்வம் ஒரு சிறு கடுகளவாகவும் மதிக்கத்தக்கதன்று என்று வீட்டிற்குரிய நெறியாகிய தவத்தின் பெருமை கூறப்பட்டது.

கான யானை தந்த லிறகிற்
கடுக் தெறற் செந்தீ வேட்டுப்
புறங் தாழ் புரிசடை புலர்த்து வோனே

எனத் தவமுடையாருக்கு யானை முதலிய கொடிய விலங்குகளும் அடங்கி ஏவல் செய்தொழுகும் என்று தவத்தோர் ஆற்றல் கூறப்பட்டது. இவ்வாறு அறம், பொருள், வீடு என்பவற்றைப்பற்றி அறியவேண்டுவன பல இந்நூலகத்துக் கூறப்பட்டுள்ளன.

இந்நூலில் பலதரப்பட்ட அறங்கள் கூறப்பட்டுள்ளன வெனினும் பெரும்பாலும் வீரமும் கொடையுமே சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. வீரம், கொடையும் கொடைக்குக் காரணமாகிய அருளும் இல்லா விடத்துச் சிறப்பதில்லை.

பேராண்மை என்பதுமுகண் ஒன்றுற்றக்கால்
ஈராண்மை மற்றதனைஃகு

என்ற தெய்வப்புலமைத் திருவள்ளுவர் பொருளுரை மீண்டு உணர்தற் குரித்து. பகைவர்க்கும் இடையூறு நேர்ந்தவிடத்து உதவி புரிய முயலுதலே ஆண்மைக்குச் சிறப்பாகும் என்பது இதன்கருத்து. பகைவர்க்கும் உதவிபுரிய முயலவேண்டுமெனின் பிறர்க்கு உதவிபுரிய முயலுதல் கூறுமலே யமையும்.

இசைமேம் தோன்றிய வண்மையொடு
பகைமேம் படுகளீ யேத்தியவேலே

என 'நீ கொடையாலும் வெற்றியாலும் சிறந்து விளங்குக' என்று பெருஞ்சித்திரனர் என்னும் புலவர் குமணவள்ளலை வாழ்த்தியிருத்தல் காண்க.

இந்நூலுக்கு மிகச் சிறந்ததோர் உரையுளது. உரையாசிரியர் பெயர் அறியப்படவில்லை. இவ்வுரை 266 பாடல்களுக்கே கிடைத்துளது. எஞ்சிய பாடல்களுக்கு உரை கிடையாமையும், உரையெழுதியவர் பெயர் முதலியன அறியப்படாமையும் தமிழர் தவக்குறைவே யாகும்.

இந்நூலில் பிற்பகுதியில் சிதைந்துள்ளவை நீங்கலாக முற்பகுதியிலுள்ள ஒவ்வொரு பாடலின் கீழும் புறப்பொருளிலக்கண முறையில் அவ்வப்பாடலுக்குரிய திணையும் துறையும் எழுதப்பட்டுள்ளன. அவ்வற்றின்கீழ் பாடினோர் பெயர், பாடப்பட்டோர் பெயர், சிலபாடல்களுக்கு அவை பாடப்பட்ட காரணம் ஆகிய இவைகள் எழுதப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடலுக்குமுரிய திணையும் துறையும் அவ்வப் பாடலைப் பாடியோரால் எழுதப்பட்டனவல்ல; பிற்காலத்து ஒருவரால் எழுதப்பட்டன எனக்கோடல் பொருத்தமாகும். இப்பாக்கள் சங்க காலத்துச் சான்றோரால் இயற்றப்பட்டன வாதலானும், அக்காலத்துத் தொல்காப்பியமே இலக்கணமாதலானும் பாடினோர், திணை, துறை கூறியிருப்பின் தொல்காப்பியங்கொண்டே கூறியிருப்பர். அங்ஙனமன்றித் தொல்காப்பியத்திற் காணப்படாத கரந்தை, கைக்கிளை முதலிய திணைகளும், அங்ஙனமே தொல்காப்பியத்திற் காணப்படாத பல துறைகளும் இந்நூலிற் காணப்படுதலின் பிற்காலத்தொருவரே திணை, துறைகள் எழுதியிருத்தல் வேண்டும். நச்சினார்க்கினியர் 'தத்தம் புது நூல்வழிகளாற் புறநானூற்றிற்குத் துறை கூறினரேனும், அகத்தியமும் தொல்காப்பியமுமே தொகைகளுக்கு நூலாகலின் அவர் சூத்திரப் பொருளாகத் துறைகூறவேண்டு மென்றுணர்க' என்றுகூறி, இப்புற நானூற்றுப் பாடல்கள் சிலவற்றிற்கு இங்குக் கூறப்பட்ட துறைகளே விடுத்து வேறு துறைகள் கூறியிருத்தல் காண்க. இதனால் புறநானூறு தொகுக்கப்பட்ட காலத்திற்குப்பின் நச்சினார்க்கினியர் காலத்துக்குமுன் இருந்த ஒருவரால் திணை, துறைகள் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். தொகுத்தவர் எழுதியிருத்தலும் கூடும்.

புறநானூற்று உரையாசிரியர் திணை, துறைகள் எழுதினர் எனக்கோடலும் பொருத்தமாகத் தோன்றவில்லை. உரையாசிரியர் உரையில் சொல் முடிபிலக்கணங் கூறுமிடங்களிலெல்லாம் தொல்காப்பியம் கொண்டே கூறியுள்ளார்.

9-வது பாடலுரையில் முன்னிலைப்பெயரோடு படர்க்கைப்பெயர்கள் விராய்வந்து முன்னிலை வினையாய் முடிதல் 'செய்யுள் மருங்கினும் வழக்கியன் மருங்கினும்' என்னும் அதிகாரப் புறனடையாற் கொள்ளப்படும் என்றும், 155-வது பாடலுரையில் 'ஏர்தருகூடின் எதிர் கொண்டாங்கு' என்புழி இன்சாரியை; அது 'தோற்றம் வேண்டாத் தொகுதிக்கண்' வந்தது என்றும், 211-ம் பாடலுரையில் தூவெறியுமென்பது தூவெறியும் என வகரங்கெட முடிதல் புறனடையாற் கொள்க என்றும் கூறியிருப்பன காண்க. இங்ஙனம்

தொல்காப்பியங்கொண்டு இலக்கணங்கூறும் ஆசிரியர் பிற்கால நூல் கொண்டு திணை, துறை கூறினர் எனக்கோடல் பொருத்தமைகாண்க. துறைப்பொருளை விளக்கக் கருதிய சிலவிடங்களில் புறப்பொருள் வெண்பாமாலையை மேற்கொண்டனரேயெனின் திணை துறைவகுத்தோர் பின் நூல்கொண்டு வகுத்தனராகலின் அத்துறைப்பொருளை விளக்கப் பின் நூலையே மேற்கொண்டனரென்க. 16-வது பாடலுரையில் துறை விளக்கத்திற்கு 'கடைவயிற்றோன்றும் இருவகை விடையும் என்பதனால் இது பெருது பெயர்ந்த பரிசில்விடை' எனத் தொல்காப்பிய விதி காட்டினராகலின், துறைவிளக்கத்திற்கும் ஏற்றவிடத்துத்தொல்காப்பிய விதி மேற்கோடலே உரையாசிரியர் உட்கோளாதல் காண்க. இங்ஙனம் தொல்காப்பியவிதியே மேற்கொள்ளும் உரையாசிரியர் பிற்காலத்ததாகிய புறப்பொருள் வெண்பாமாலையை மேற்கொண்டு திணை துறைவகுத்தார் எனக்கோடல் பொருந்தாமையின் உரையாசிரியரல்லாத வேறொருவரே திணை துறைவகுத்தவர் எனக்கோடல் பொருத்துமென்க.

இனிப் புறப்பொருள் வெண்பாமாலையில் இல்லாத சில துறைப் பெயர்கள் புறநானூற்றில் காணப்படுதலின், திணை துறைவகுத்தவர், புறப்பொருள் வெண்பாமாலையை ஆதாரமாகக்கொண்டு, அதன்கண் இல்லாவிடினும் புறநானூற்றுப் பாடல்களின் பொருளமைதிக்கேற்பச் சில புதிய துறைகள் அமைத்தனராதல் வேண்டும். புறப்பொருள் வெண்பாமாலைக்கு முதல்நூல் பன்னிருபடலமாகலின் அதுகொண்டு திணை துறைவகுத்தனரெனினுமாம்.

திணை துறைகளின் கீழுள்ள பாடினோர் பெயர் முதலியனவும் பாடினோரால் எழுதப்படாமல் பிறரொருவரால் எழுதப்பட்டனவெனக் கோடலே பொருத்தமாகும். பலபாடல்களுக்குப் பாடியதன் காரணம் காணப்படாமையானும், பாடினோர் பெயருட் பல இயற்பெயரன்றி உறுப்புப்பற்றியும் பிறகாரணம்பற்றியும் வந்த பெயர்களாக இருத்தலானும், அங்ஙனங் கோடல் பொருத்தமாதல் காண்க. பாடல்களைத் தொகுத்தவர் அன்றி வேறொருவர் அக்குறிப்புக்களை எழுதினராதல் வேண்டும். தொகுத்தவரல்லாத வேறொருவர் எழுதினரெனின் அவர் நெடுங்காலம் பிற்பட்டவராகார். நெடுங்காலம் பிற்பட்டவராயின், பாடினோர் பெயர் முதலியன மறைந்துபோதல் கூடுமாதலின், பாடல்கள் தொகுக்கப் பட்டபின் அண்மைக் காலத்திலேயே ஒருவரால் எழுதப்பட்டனவெனக் கோடல் பொருத்தமாகும். இனித் திணை துறைகளும் பாடினோர் பெயர் முதலியனவும் ஒருவரான் எழுதப்பட்டனவோ அன்றி வேறு வேறு அறிஞரான் எழுதப்பட்டனவோ என்று அறிதற்குரிய குறிப்புக்கள் ஒன்றும் காணப்படவில்லை.

பாடினோர் பெயர் முதலிய குறிப்புக்களை நோக்குமிடத்து அவற்றை எழுதியவர் பாக்களை தன்குறைத்தறிந்து எழுதியுள்ளார் என்பது சில குறிப்புக்களால் தெரிகின்றது.

45 முதல் 47 வரையுள்ள பாக்கள் கோவூர்கிழார் என்னும் புலவர் பெருந்தகையாற் பாடப்பட்டன. 45-வது பாடலின் கீழ் ''சோழன் கலங்கிள்ளி உறையூர் முற்றியிருந்தானையும் அடைத்திருந்த நெடுங்கிள்ளியையும் கோவூர்கிழார் பாடியது'' என்றும், 46-வது பாடலின்கீழ் ''சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன் மலையமான் மக்களை யானைக்கிடுவுழிக் கோவூர்கிழார் பாடி உய்யக் கொண்டது'' என்றும், 47-வது பாடலின்கீழ் ''சோழன் கலங்கிள்ளியுழை நின்று உறையூர் புகுந்த இளந்தத்தன் என்னும் புலவனைக் காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி ஒற்றுவந்தான் என்று கொல்லப்புக்குழிக் கோவூர் பாடி உய்யக் கொண்டது'' என்றும் எழுதப்பட்டுள்ளன. இம்மூன்று பாடல்களும் கோவூர்கிழார் பிறர் உயிரைக் காக்கப் பாடியனவே. (45-வது பாடலில் '' ஒருவீர் தோற்பினும் தோற்பதும் குடியே'' என்று பொதுமையிற் கூறப்பட்டிருப்பினும், வலிகுறைத்தவனை அடைமதிற்பட்டிருந்தோன் நெடுங்கிள்ளியாதலின் அவனே காக்கப்பட்டவன் எனக்கொள்க.) இவற்றுள், முன்னையதற்குக் 'கோவூர்கிழார் பாடியது' என்றும், பின்னிரண்டற்கும் 'கோவூர்கிழார் பாடிஉய்யக் கொண்டது' என்றும் எழுதப்பட்டுள்ள வேறுபாடு சிந்திக்கத் தக்கதாகும்.

45-வது பாடலைப் பாடியதனைப் பேர் அப்பொழுது நிறுத்தப் பட்டதேயன்றி அவர்கட்குள்ளிருந்த பகைமை ஒழிந்திலது. இக்நெடுங்கிள்ளி காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி என்று 47-வது பாடற் கீழ்க்குறிப்பிற் காணப்படுதலாலும், சோழன் கலங்கிள்ளிபால் நின்றுவந்த இளந்தத்தனைத் தம்முள்ளிருந்த பகைமை காரணமாக ஐயுற்றுக் கொல்லத் தொடங்குதலாலும், சோழன் கலங்கிள்ளி, அவன் தம்பி ஆகிய இருவரில் ஒருவராதல், இருவரும் சேர்ந்தாதல், நெடுங்கிள்ளியைக் காரியாறு என்னுமிடத்தில் போர்புரிந்து கொன்றனராதல்வேண்டும். அங்ஙனம் கோவூர்கிழார் பாடியதனால் போர் அப்பொழுது நிறுத்தப்பட்டதாயினும், பின்னர் நெடுங்கிள்ளி அப்பகைவனால் இறந்தே யொழிந்தானுதலால் கோவூர்கிழார் பாடி உய்யக்கொண்டது என்றெழுதாமல் கோவூர்கிழார் பாடியது என்று மட்டும் எழுதினாரவர். 46, 47-ஆம் பாடல்களினால் சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனால் கொல்லப்படாமல் மலையமான் மக்களும், நெடுங்கிள்ளியாற் கொல்லப்படாமல் இளந்தத்தன் என்னும் புலவனும் காக்கப்பட்டனராதலால் அவ்விருபாடல்களின் கீழும் கோவூர் கிழார் பாடி உய்யக் கொண்டது என்றெழுதினர். 44-வது பாடல் தினை துறை வேறாக இருப்பினும் சோழன் கலங்கிள்ளி தம்பி மாவளத் தானுக்கும் நெடுங்கிள்ளிக்கும் நிகழ்விருந்த போர் நிறுத்தப்பட்ட தாகலின் அதனையும் 45-வது பாடலைப் போலவே கொள்ளலாம்.

சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன் கருவூரை முற்றுகை யிட்டிருந்தபோது ஆலத்தூர்கிழார் என்னும் புலவர்பாடி அப்போரை விலக்கினமை 36-வது பாடலால் அறியப்படுகின்றது.

அப்பாடலின்கீழும் ''ஆலத்தூர் கிழார் பாடியது'' என்றெழுதப் பட்டுள்ளதேயன்றி ஆலத்தூர்கிழார் பாடி உய்யக்கொண்டது என்றெழுதப்படவில்லை. அதனால் ஆண்டும் அப்போர் அப்பொழுது மட்டுமே தடுக்கப்பட்டது என்று கோடல் பொருத்தமாகும்.

கல்வியறிவு ஒழுக்கங்களால் மிகச்சிறந்து விளங்கிப் புலவர்களால் உயிரினும் சிறக்கப் போற்றப்பட்ட சான்றோனாகிய கோப்பெருஞ்சோழன் என்னும் அரசன் தன்புதல்வர் தன்னோடு ஒற்றுமையின்றி மாறுபட்ட மையால் அவர்களோடு போர் புரியத் தொடங்கினன். அப்பொழுது புல்லாற்றூர் எயிற்றியனார் என்னும் புலவர் கோப்பெருஞ் சோழனை நோக்கிப்பாடி (213 பா.) அப்போரை விலக்கினர். பின்னர் அவன் புதல்வர் அவனைக் கொல்லப்பட்டாராக அறியப்பட்டிலர். அங்ஙனம் ஆயினும் அப்பாடலின்கீழ், ''புல்லாற்றூர் எயிற்றியனார் பாடியது'' என்றெழுதப்பட்டுள்ளதேயன்றி, பாடி உய்யக்கொண்டது என்றெழுதப் படவில்லை. கோப்பெருஞ்சோழன் அவன் புதல்வரோடு போர் புரிதல் அவன் பெருமைக்கேற்ற காரியமாகாமையின், அவனைப் போரினின்று மீட்டலே புலவருடைய முக்கியகொள்கையாதல் அன்றி, அவன் புலவரைக்காத்தல் முக்கிய கொள்கையாகாமையின் உய்யக் கொண்டது என எழுதாது விடுத்தனர் எனக் கொள்க. கோப்பெருஞ் சோழன் வடக்கிருத்தலை யுணர்ந்து, அவனுடன் கூடப்பூண்ட புலவர்களும் அவனைப் பிரிந்திருக்க ஆற்றாது வடக்கிருந்து உயிர் துறத்தலை மேற்கொண்டனர். அத்துணைப் பெருமை வாய்ந்த தந்தையோடு ஒற்றுமையின்றிப் போர்மேற்கொண்ட அவன் புதல்வர் அறிவில்லாதவராதலின் அவரைக் காத்தலைப் புலவர் முதன்மையாகக் கருதிலர் போலும்.

''எண்ணில் காட்சி இனையோர்'' என அவன் புதல்வரிகழப்படுதல் காண்க. இனி இப்போரில் யார் வெல்வர்? யார் இறப்பர்? என்று துணிந்து கூறலாகாமையானும், அப்பாட்டிற் புலவரும் அங்ஙனமே கூறியுள்ளாராதலானும், கோப்பெருஞ்சோழன் போரினின்று மீட்கப்பட்டானதலின் அவனைக்கருதி உய்யக்கொண்டது என்றெழுதலாமெனின், கோப்பெருஞ் சோழன் போரை நிறுத்தினன் எனினும், மேலும் இவ்வுலகவாழ்வை விரும்பானாய், வடக்கிருந்து உயிர்துறந்தானதலின், அவனைக்கருதியும் எழுதாது விடுத்தனர். இங்ஙனமாக ஒருதலையாக இறப்புநீங்கிஉய்தல் நிகழ்ந்த விடத்து ''உய்யக்கொண்டது'' எனவும் அங்ஙனமில்லாதவிடத்து வாளா ''பாடியது'' எனவும் வேறுபாடு தோன்ற எழுதப்பட்டிருத்தல் காண்க.

இனிப் பழங்குடியினராகிய மூவேந்தர் வழிவந்தோரை ''உய்யக் கொண்டது'' எனக் கூறுதல் அவர் குடிப்பெருமைக் கேலாதென்றும், பிறரை ''உய்யக்கொண்டது'' எனக்கூறுதல் ஏற்குமென்றும் ஒரு வரன்முறைகொண்டு அங்ஙனம் எழுதினர் எனக் கொள்ளினுமாம்.

இங்ஙனம் எழுதப்பட்ட குறிப்புக்களிற் சில பிழைகளும் காணப்படுகின்றன. அவை பிற்காலத்துண்டாயிருத்தல்கூடும். 389-ஆம் பாட்டில்,

> ஆதனுங்கன் போலநீயும்
> பகைத்த வொக்கல் பழங்கண்வீட
> வீறுசால் கன்கலம் கல்குமதிபெரும

எனக் கூறப்பட்டுள்ளது. ஆதனுங்கனைப்போல நீயும் கல்குமதி என்று கூறப்படுதலின் ஆதனுங்கன் உவமையாகக் கூறப்பட்டவன் என்பதும் பாட்டுடைத்தலைவன் ஆதனுங்கனல்லாத பிறனொருவன் என்பதும் புலப்படுவனவாகும். இப்பாட்டின்கீழ் ''ஆதனுங்கனைக் கள்ளிலாத் திரையனர்'' என்றெழுதப்பட்டுள்ளது. ('கள்ளிலாத்திரையனர் பாடியது' என்பதில் 'பாடியது' என்பது விடுபட்டிருத்தல் வேண்டும்.) ஈண்டு ஆதனுங்கன் பாட்டுடைத் தலைவனைக் கூறப்பட்டிருத்தல் பொருத்தமின்மை காண்க. இப்பாட்டைப் பாடிய கள்ளிலாத்திரையனர் ஆதனுங்கன்பாற் பேரன்புடையர் என்பது இவர் அவனைப்பாடிய 175-வது புறப்பாட்டாலறியலாம். அங்ஙனம் அவன்பாற் பேரன்புடைய இவர் பிறனொருவனைப் பாடும்போதும் ஆதனுங்கனை உவமையாக வைத்துப்பாடினர் எனக்கொள்க. ஆகவே இப்பாட்டுடைத்தலைவன் ஆதனுங்கனல்லாத வேறொருவன் எனக் கோடல் பொருத்தமாகும். இங்ஙனம் ஓரரசனைப் பாடும்போது தம் அன்பிற்குரிய பிறரைப் புலவர் இடையே புகழ்தல் உண்டு என்பதைப் பதிற்றுப்பத்திற் கபிலர் செல்வக்கடுங்கோவாழியாதனைப் பாடுமிடத்து இடையே பாரியைப் புகழ்தல் முதலியவற்றுள் உணர்க.

207-வது பாட்டின்கீழ் 'இளவெளிமானைப் பரிசில்கொடுவென அவன் சிறிது கொடுப்பக் கொள்ளாது பெருஞ்சித்திரனர் பாடியது' என்றெழுதப்பட்டுள்ளது. அப்பாட்டில்,

> அருஞ்சிற்கண்டு மறியார் போல
> அகனகவாரா முகனழி பரிசில்
> தாளிலாளர் வேளாரல்லர்'

என்ற பகுதி புலவர் தம்மை கன்குமதித்துப் போற்றிப் பரிசில் தாராது பிறர்வாயிலாகக் கொடுத்தமையால் அதனையேலாது இங்ஙனம்பாடிச் சென்றனர் எனக் கருதுமாறு உள்ளது. கீழ்க்குறிப்பில் கன்கு மதியாமை குறிப்பிடப்படாது, சிறிது கொடுத்தமை குறிப்பிடப் பட்டுள்ளது. சிறிது கொடுத்தமையுணர்த்தும் குறிப்புப் பாட்டில் காணப்பட்டிலது. அதனைப் பிறவகையான் உணர்க்து எழுதினரெனினும் கன்கு மதியாமையும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். ஆகவே 'காணுது சிறிது கொடுப்பக் கொள்ளாது பெருஞ்சித்திரனர் பாடியது' என்றிருத்தல் பொருத்தமாகும். அங்ஙனங் காணுது கொடுப்பின் அதனைப் புலவர் வெறுத்துச் செலுதல் உண்டு என்பது

208-வது பாட்டின் கீழ்க்குறிப்பால் அறியலாகும். 'காணுது சிறிது கொடுப்ப' என்றிருந்து பின்னர் 'காணுது' என்பது விடுப்பட்டிருத்தலும் கூடும்.

பாரியிறந்தபின் கபிலர் பாரிமகளிரைக் கொண்டுசென்று, அவர்களை மணந்து கொள்ளும்படி விச்சிக்கோன், இருங்கோவேள் என்னு மிருவரையும் ஒருவர்பின் ஒருவராக வேண்டி, அவர்கள் இணங் காமையினால் அம்மகளிரைப் பார்ப்பார் பாதுகாவலில் வைத்து வடக் கிருப்பாராயினர். மேற்கூறப்பட்ட அரசரிருவரிடம் சென்று கபிலர் வேண்டினமையாலும், பறம்புமலையிட்டுக் கபிலர் புறப்படும்போது 'காறிருங் கூந்தற் கிழவரைப்படர்ந்து' செல்லுதும் எனக்கூறி யிருத்தலாலும், புறப்படும்போதே பார்ப்பார் பாதுகாவலில் வைக்கும் கிளைவு கபிலர்க்கின்மை தெளிவாகும். ஆகவே 113-வது பாடலின் கீழ் 'அவன் மகளிரைப் பார்ப்பார்ப் படுக்கக்கொண்டு போவான் பறம்புவிடுத்த கபிலர் பாடியது' என்றிருத்தல் பொருத்தமின்மை காண்க. 'அவன் மகளிரை மணம் படுக்கக் கொண்டுபோவான் பறம்பு விடுத்த கபிலர் பாடியது' என்றிருப்பின் பொருத்தமாகும். அம் மகளிர்க்கு மணம் நிகழ்ந்தமை புறநானூற்று லறியப்படாமையானும், 236-வது பாட்டின்கீழ் 'வேள்பாரி துஞ்சியவழி அவன் மகளிரைப் பார்ப்பார்ப் படுத்து வடக்கிருந்த கபிலர் பாடியது' எனப் பார்ப்பார் பாதுகாவலில் வைத்தமை கூறப்பட்டிருத்தலானும், 'மணம்படுக்க' என்றிருந்ததைப் 'பார்ப்பார்ப்படுக்க' எனப் பிற்காலத்தில் மாற்றி விட்டனர்போலும்.

1. புலவரியல்பு, புலவர் வாழ்க்கை முறை.

புறநானூற்றிலிருந்து அக்காலத்துப்புலவர்தம்வாழ்க்கை முறையும் அவர்தம் இயல்பும் கீழ்வருமாறு அறியப்படுகின்றன. பெருகிய வேந்தர்களையும் குறுகில மன்னர்களையும் பாடிப் பரிசில் பெற்றே வாழ்ந்து வந்தனரெனச் சிலரெண்ணுமாறின்றிப் பல தொழில்களை மேற்கொண்டே வாழ்ந்து வந்தனர்.

வெள்ளைக்குடி நாகனார் என்பவர் ஓர் செம்மொழிச் செல்வர்; சோழநாட்டினர்; சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனைப் பாடியவர். அப்பாடலின் கீழ் இவர் அவ்வரசனைப்பாடிப் பழஞ்செய்க் கடன் வீடு கொண்டனரெனக் குறிப்புக் காணப்படுகின்றது. அதனால் இவர் விளை நிலம் உடையவர் என்பதும், அதனைத் தாமே உழுது, அன்றிப் பிறரைக்கொண்டு உழுவித்து உண்டு வாழ்ந்துவந்தனர் என்பதும், ஒரு காலத்தில் எக்காரணத்தாலோ அந்நிலத்திற் பயிர் இறைப்பொருளை அரசனுக்கு இறுக்க இயலாதவராயினர் என்பதும், பின் அதனை ஒருங்குசேர்த்து இறுக்கவும் இயலாதவராயினர் என்பதும், அதனால் தம் கிளையை அரசனுக்கறிவித்து அப்பழைய இறைக்கடனை விடுவித்துக்கொண்டனர் (தள்ளுபடி செய்துகொண்டனர்) என்பதும் அறியப்படுகின்றன.

கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானும் வேந்தர்க் கொளி

என்ற குறளுரையில் ஆசிரியர் பரிமேலழகர் குடியோம்பல் என்பது தளர்ந்த குடிகளைக் காத்தல் என்றும், அஃதாவது :—ஆறிலொன்றுகிய வரிப்பொருளைக் கொடுக்க வியலாத குடிமக்கட்கு அப்போது அவ்வரிப் பொருளை கிறுத்திப் பின் இயன்றபோது பெற்றுக்கொள்ளுதலும், கொடுக்க இயலாமலே போனவிடத்து அவ்வரிப்பொருள்முழுதும் பெருமலே விடுதலும் ஆகும் என்றும் விளக்கியுள்ளார். இவ்விருபெரு நீதியும் பண்டையரசர்பால் விளங்கினமை இப்புலவர், அரசன் செய்திகளால் நன்கு உணரலாகும். 'பழுஞ்செய்க்கடன்' என்றதனுல் முன் சிலகாலம் இவராற்கொடுக்க இயலாமையால் இறைப்பொருள் நிறுத்திவைக்கப்பட்டமையும், 'வீடுகொண்டது' என்றதனுல் பின் கொடுக்க இயலாமலே போனவிடத்து அப்பழைய இறைப்பொருள் முழுதும் இவர் கொடுத்தல் வேண்டாம் என அரசன் நீக்கிவிட்டமையும் அறிக.

இவர் பாடிய பாடலும் இறைவீடு பெருதலாகிய பயனுக்கேற்ப இருத்தல் காணத்தக்கதாகும். அப்பாடலில் அரசனை இந்திரனே, குபேரனே, என வாளா புகழ்ந்நிலர்.

வருபடை தாங்கிப் பெயர்புறத் தார்த்துப்
பொருபடை தருஉம் கொற்றமும் உழுபடை
ஊன்றுசான் மருங்கின் நன்றதன் பயனே.

அரசன் படை நிரட்டிப் பகை வென்று ஆரவாரித்தல் தன்னாட்டுக் குடிமக்கள் செய்யும் உழவுத்தொழிலின் பயனேயாகும். உழவுத்தொழில் நன்கு நடைபெற்றிலதேல் அரசன் பகைவர்பால் வெற்றிபெறுதல் இலேயாகும். உனது வெண் கொற்றக்குடை உனக்கு வெயிலே மறைத்து நிழல் செய்வதற்கன்று. வருத்தமுற்ற குடிகட்கு நிழல் செய்தற்காகவே கொள்ளப்பட்டதாகும். (வருத்தமுற்ற குடிகளைக் காத்தற்கு அறிகுறி வெண்கொற்றக்குடை என்றபடி.) ஆதலால் நீ நின் உழுதொழிற்குடிகளை கன்கு போற்றுவாயாயின் நின் பகைவரெல்லாம் நின் அடியின் கீழ் அடங்குவர் எனத் தம் காரியம் நிறைவெய்துதற் கேற்றவும், அரசன் அறிய வேண்டுவனவுமாக எடுத்துக் கூறினர். அன்றியும் குறையுற்ற குடிகள் நின்னை எளிதிற் கண்டு தம் குறைகளைக் கூறுமாறு அவர்கள் காட்சிக்கு எளியனும், அவர்கள் குறைகளை நேரில் உணர்ந்து அவர்கட்கு வேண்டுவன செய்க என்றமையால் அரசியற் காரியஞ் செய்வோர் அரசனுக்குக் குடிகளின் குறைகளை யுணர்த்தாது வருவரையை மிருத்துக்காட்டவேவிரும்புவராதலின் அவர்மொழியொன்றே கொள்ளாது குடிகளிடமும் கேட்டு ஆவன செய்க என்றறிவித்தனர். இப்புலவர் செய்தி கொண்டு அக்காலத்துப் புலவர் பலர் உழுதொழில் மேற்கொண்டு வாழ்த்தனராவர் எனக்கோடல் மிகையாகாது.

ஆடை விற்குந்தொழில், கெல் முதலிய தானியங்களை விற்றல், பணியோலையாற் செய்யப்படுந் குடை முதலியன விற்றல், மருத்துவத் தொழில்செய்தல், ஆசிரியத்தொழில்புரிதல், கூத்தாடுதல், அரசியலில் காணய பரிசோதனைக்காக இருத்தல் முதலிய பல தொழில்களைப் புலவர்கள் மேற்கொண்டு வாழ்ந்து வந்தமை அவரவர் பெயர்களாலறியலாம்.

பரிசில்பெற்று வாழ்க்கை நடாத்திய ஒரு சிலரும் தாம் இனிதுண்டு வாழ்தல்கருதி அவ்வாழ்க்கையை மேற்கொண்டாரல்லர். இறந்த மூப்பினராய இருமுதுகுரவரும் கற்புடைமனைவியும் குழவியும் பசியான் வருந்தும் எல்லைக்கண் இரந்தேனும் அவரைக் காத்தல்வேண்டும் என்பது அறநூற் பொதுவிதியாதலாலும், விருந்தினரைப்போற்று வாழ்க்கை பயனிலதாதலாலும், பரிசில் பெற்றேனும் அவ்விருதத்தாரையும் ஓம்பும் செயலைப் புலவர் மேற்கொண்டனராவர். பசியால் வாடும் தாயி, மனைவி, சிறுவர், சுற்றம் இவர்கள் நிலையைக் கூறிப் பரிசில் விரும்பிப் பாடப்பட்ட பாடல்கள் பல புறகானூற்றில் காணலாகும்.

பெருங்குன்றூர் கிழார், உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி என்னும சோழமன்னனை நோக்கி,

'விருந்துகண்டொளிக்கும் திருந்தா வாழ்க்கை' யை

யுடைய என் அறிவுகெட நின்ற வறுமையை விரைய நீக்குவாயாக எனவேண்டுதல் காண்க. (விருந்தினர்க்கு உதவியாற்றவியலாமையினால் அவரைக் கண்டவுடன் சென்று ஒளிக்கும் நன்மையில்லாத இல்வாழ்க்கை எனவும், வந்த விருந்தினர் தமது வறுமையைக் காணமாட்டாதவராய் ஒளிந்து செல்லும்படியுள்ள நன்மையில்லாத இல்வாழ்க்கை எனவும் பொருள்கொள்க.)

மேற்கூறப்பட்ட விருதிறத்தாரையும் ஓம்புதற் பொருட்டு,

கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்
நிரப்பும் ஒரேவருடைத்து

என்ற பொய்யில் புலவர் பொருளுரைக்கேற்ப, இல்லையென்னுது வழங்கும் வண்மைக் குணமுடையாரைக் கருதிப், பழம் மிக்க மரத்தைத் தேடிச்செல்லும் பறவைகள்போல அவரிருக்குமிடம் நாடிச்சென்று, அவர் பெருமைகளைத் தாமறிக்தபடி பாடி, அவர்பாற்பெற்ற பரிசிற் பொருளைக்கொண்டு மகிழ்ந்து, தாமும் சுற்றமும் உண்டு, தம்மைநாடி வருவோர்க்கு இல்லையென்னுது தாமும் மகிழ்வோடு கொடுத்து, முன் பெற்றபொருள் நீர்த்துவிடின் மீண்டும் வள்ளியோரை நாடிச்செல்லும் இயல்பினராய், பெருந்தன்மையும் அறவுள்ளமும் உடையோராய்ப், பிறர்க்குத் நீமை செய்தலைக் கனவினும் நினையாதவராய் வாழ்ந்தனர் என்பது கோவூர்கிழார் பாடலானறியப்படும். இப்புலவர் பெருந்தகை

கூறியபடியே, பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் குமணவள்ளல்பால் தாம்பெற்ற பரிசிலைத் தம்மனைவியிடம் கொடுத்து ''நீ இன்னவாறு செய்க'' எனக்கூறும் பாடலில்

இன்னோர்க்கென்னுஅ என்னெஞ்சுஞ்சூழாது
வல்லாங்கு வாழ்தும்என்னுஅ நீயும்
எல்லோர்க்குங் கொடுமதி மனைஇழவோயே

எனக்கூறுதல் காண்க.

இங்ஙனங் கூறப்பட்டன கொண்டு அக்காலத்துப்பரிசில் வாழ்க்கைப் புலவரெல்லோரும் இத்தன்மையினராக விளங்கினர் எனக் கோடல் பொருத்தமாகும். (இங்ஙனம் வரையாது வழங்கும் வள்ளியோர் பிற்காலத்தின்மைகருதியே ''வம்மின் புலவீர் நும்மெய் வருந்திக் கைசெய்துய்ம்மினே, இம்மன் னுலகினிற் செல்வரிப் போதில்லை நோக்கினும்'' என நம்மாழ்வார் அருளிச் செய்தனர் போலும். ''செல்வத்துப்பயனே ஈதல்'' எனப்படுதலின், ஈகைக் குணமில்லாதார் செல்வமுடையரெனினும், அவர் செல்வமுடையராகக் கருதப்படாமையின் ''செல்வரிப் போதில்லை'' என்றருளினர் எனக் கொள்க.)

பரிசில் வாழ்க்கை மேற்கொண்டனராயினும் கொடுக்கும் வள்ளியோர் புலவரை நன்குமதித்துப்போற்றி, இருவர் சிலைக்கும் தக்கவாறு அளிக்கும் பரிசிலையே புலவர் விரும்பி ஏற்பாராயினர். கொடுப்போர் புலவரைப்போற்றி நன்குமதித்தலின்றிக் கொடுப்பாராயினும், தம்சிலைக்குத் தக்கவாறின்றிச் சிறிதாகக் கொடுப்பாராயினும் புலவர் அப்பரிசிலை ஏற்காது ஒதுக்கினர். ஏறூர் மன்னராயினும் எம்மிடத்து நடந்துகொள்ளும் முறைமையோடு நடப்போரையே யாம் மதிப்போம்; அங்ஙனம் நடந்து கொள்ளாதவராகிய

மண் கெழுதானை யொண்பூண் வேந்தர்
வெண்குடைச் செல்வத்தை''யும்

யாம் மதிக்க மாட்டோம் என்றும்.

மூற்றிய திருவின் மூவாயினும்
பெட்பின்றீதல் யாம் வேண்டலமே

என்றும் கூறப்பட்டிருப்பன காண்க. புலி தனக்கு இரையாக யானையைக் கொள்ளக்கருதி முயன்று, அது தவறுமாயின், பிறிதொரு யானையைக் கொள்ள முயல்வதல்லது எலியைத் தனக்கிரையாகக் கொள்ள விரும்பாது; அதுபோலப் பெரிய பரிசிலைக் கொள்ள விரும்பிய யான் அது தவிர்ந்து சிறிய பரிசிலைக் கொள்ளேன் என ஒரு புலவர் கூறினர்.

வள்ளியோர் செவிமுதல் வயங்கு மொழி வித்திநாம்
உள்ளியது முடிக்கும் உரனுடையுள்ளத்து
வரிசைசக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை

என்பதில் வண்மைக் குணமுடையார் செவியாகிய வீளைபுலத்தில் தம்முடைய சிறந்த சொற்களாகிய விதைகளை விதைத்துப் பரிசிலாகிய தாம்கருதிய பயனையடையும்புலவர் அம்முயற்சியில் தம்மேம்பாட்டிற்குக் குறை வரலாகாதென வருந்துமியல்பினர் என அறிவின் உறைவிடமாகிய ஔவையார் கூறினர்.

2. புலவர் வரன்முறை பிறழாமை.

சங்க காலத்துப் புலவர்கள் தம்மையாதரித்த வள்ளல்களைப்போற்றி வாயாரப் புகழ்ந்துள்ளனரெனினும், அவர்கள் ஒரு சிறிதும் வரம்பிகந்து கூறுதல் இல்லை.

'செய்யா கூறிக் கெளத்தல்
எய்யாதாகின்றெஞ் சிறு செக்காவே' — என்றும்

'பொய்யாச் செந்நா நெளிய ஏத்தி' — என்றும்

புலவர் தம்மைக் கூறியிருத்தல் காண்க. அத்தகைய செங்நெறிகடவாப் பேரறிஞர்கள் பெருங்கில மன்னர்களையும் குறுங்கில மன்னர்களையும் அவர்கட்குரிய வரிசைதப்பாது பாடியுள்ளனர். குறுங்கில மன்னரைப் புகழ்ந்து பெருங்கில மன்னரை யிகழ்ந்துரைக்கு மிடங்களிலும் இகழப்படும் பெருங்கில மன்னர்க்குரிய வரிசை யிற்றவறுதலில்லை. புறநானூற்றுப்பாக்களை யாராயுமிடத்துப் புலவரெல்லோரிடத்தும் இத்தகைய நெறி காணப்படுகின்றது. புலவர் சேரபாண்டிய சோழ மன்னர்களை மட்டுமே வேந்தர் என்னும் சொல்லாற் கூறியுள்ளனர். அம்மூவேந்தரினும் மிக்கு வரையாது வழங்கிய வள்ளல்களையும் அவர்கள் வேந்தர் என்னும் சொல்லாற் கூறிற்றிலர். வேந்தர் என்னும் சொல் சேர பாண்டிய சோழ மரபிற்றோன்றியவர்கட்கே யுரித்தென்பது அவர்கள் கருத்துப்போலும். ஔவையார் தமக்கு உயிரினுஞ்சிறந்த நெல்லிக்கனியீந்த அதிகமானைப் பல பாக்களாற் புகழ்ந்துள்ளனர். அவற்றில் அவனை

"முழவுத்தோ ளென்னையைக் காணுங்கே"
"மழுவில் வண்கை மழவர் பெரும"
"ஓர்கலிநறவின் அதியர்கோமான்"
"பெருந்தகை விழுப்புண் பட்டமாறே"
"ஆசாகெந்தை யாண்டுளன் கொல்லோ" — எனப்

பலதிறப்படச் சிறப்புப் பெயரிட்டுக் கூறியுள்ளனர். ஆனால் அவ்வள்ளலே வேந்தன் எனக் கூறக் காண்கின்றிலேம். அவனைக் கூறுமையேயன்றி 89-ம் பாடலில் இகழ்ந்து கூறப்படும் பிறனொரு மன்னனை 'வினவ லானுப்பொருபடைவேந்தே' என்றுகூறி அதிகனை 'அதுபோரென்னும் என்னையுமுளனே' என்றார். 390ம் பாடலில் அதிகனை 'மலையலரணியும் தலைநீர் நாடன்' என்றுகூறிப் பிறரை 'அண்ணல் யானைவேந்தர், உண்மையோவறியல் காண்பறியலரே' என்றுரைத்தனர்.

கபிலரும் பாரிவள்ளலும் உயிரொன்றிய அன்புடையார். பாரியிறந்தபின் அவ்வள்ளலைப் பிரிந்திருக்கவாற்றாதவராய்த் தாமும் வடக்கிருந்து உயிர்நீத்தனர். அவர் பாரியை வேந்தன் என்னும் சொல்லாற் கூறிற்றிலர். அவர்,

"அண்ணல் யானை வேந்தர்க்
கின்னுயிர் வினையோன் குன்றே"

"வலம்படுதானை வேந்தர்
பொலம்படைக்கலிமா வெண்ணுவோரே"

"பணைகெழு வேந்தரையிறந்தோ
ரிரவலர்க்கீயும் வள்ளியோன் நாடே"

எனப்பிறரை வேந்தர் என்ற சொல்லாலும் தம் உயிரனைய பாரியை இனியோன், வள்ளியோன் முதலிய பிற சொற்களாலும் கூறியுள்ளனர். தந்தையை யிழந்து, துன்பமுழந்து, பறம்புவிடுத்துச் சென்ற பாரிமகளிர் அங்கிலையில்

வென்றெறி முரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார்யாம் எந்தையுமிலமே

என்றுரைப்பாராயினர்.

126-ம் பாடலில் மாரேரக்கத்து நப்பசலையார் மலையமான் திருமுடிக்காரியை 'பெண்ணேயம் படப்பை நாடுகிழவோயே' என்றும் அவனால் வெல்லப்பட்ட அரசனை 'அண்ணல் யானை வேந்துகளத் தொழிய' என்றும் பாடியுள்ளனர். 157-ம் பாடலில் குறமகள் இளவெயினி என்னும் நல்லிசைப் புலமை மெல்லியலார் ஏறைக்கோன் என்னுக்தலைவனை 'பெருங்கனடனெம்மேறைக்குத் தகுமே' என்றும், பிறரை 'வேந்துடையவைத் தோங்குபு நடத்தலும்' என்றும் கூறியுள்ளனர். இங்ஙனம் புலவர் கூறுதலால் வேந்தர் என்பது சேர பாண்டிய சோழர்க்கே யுரியதென்றும், மன்னன், கோமான் முதலியன அவரவர் பெருமைக் கேற்பக் கூறுதற்குரியன என்றும் கொள்ளுதல் பொருத்தமாகும். 336 முதல் உள்ள மகட்பாற்காஞ்சிப் பகுதியில் பலவிடத்து இவ்வேறுபாடு காணப்படுகின்றது.

இவ்வேறுபாடு நன்குணர்ந்த ஆசிரியர் கச்சினார்க்கினியர் தொல்காப்பியப் பொருளதிகாரப் புறத்திணையியல் 5-ம் சூத்திரத்து 'மரபோன் மேய மன்பெருஞ்சிறப்பிற் றுவாவிழுப் புகழ்ப் பூவை நிலையும்' என்ற பகுதியுரையில் "'தாவா' வென்றதனானே அரசர் புகழைக் காட்டுவாழ்வோர்க்குக் கூறுதலும் அவரை அரசர் பெயராற் கூறுதலும் கொள்க" எனக்கூறி அகநானூற்றில் 109-ம் செய்யுளில் வரும்,

"அறனில் வேந்தனும்
வறனுறு குன்றம் பல விலங்கினவே"

என்ற பகுதியை மேற்கோள் காட்டினர். இதனால் அவர் வேந்தர் என்னுஞ் சொல் முடியுடை மூவேந்தர்க்கே யுரித்தென்றும், அது அரிதாகப் பிறரைக் குறித்து வருதல் வழுவமைதி என்றும் கருதினர்

என்பது வெளிப்படை. வேந்தன் என்னும் சொற் போலவே அரசன் என்னும் சொல்லும் குறுநிலமன்னர்க்குக் கூறப்பட்டதாகக் காணப்படவில்லை.

138-ம் பாடலில் மருதனிள நாகனார் **நாஞ்சில்வள்ளுவனை** இறை என்ற சொல்லாற் கூறியுள்ளனர். 152-ம் பாடலில் வல்விலோரியை வன்பரணர் அவ்வாறே பாடியுள்ளனர். இறை என்னும் சொல் கடவுட் பெயராய் உபசார வழக்காக மக்கட்குக் கூறப்படுவதாகலின், அது வேந்தன் என்னுஞ் சொற்போல மரபுபற்றி வழங்கப்படுவ தன்றெனக்கொள்க. அன்றி மேல் நச்சினார்க்கினியர் கருத்திற்கேற்பக் வழுவமைதியாகக் கொள்ளினுமாம்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் வஞ்சினக் காஞ்சித்துறையில் பாடிய 72-வது பாட்டில்,

> "உறுதுப்பஞ்சாது உடல் சினஞ்செருக்கிச்
> சிறு சொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை"

எனக்கூறியுள்ளான். அச் செழியன், சேரன் சோழன் என்னும் இரு பெரு வேந்தரையும் திதியின் முதலிய ஐம்பெரு வேளிரையும் ஒரு காலத்தே வென்றுனெனக் கூறப்பட்டிருத்தலின், இங்கு வேந்தர்என அச்செழியனுற் கூறப்பட்டோர் அவ்வெழுவருமாவர். எனினும் அவ்வெழுவருள் சேரனும் சோழனும் இருத்தலால் அச்சிறப்புநோக்கி வேந்தர் எனக்கூறினன் எனக்கொள்க.

3. மக்கள் மனநிலை.

மக்கள் எல்லோரும் எக்காலத்தும் ஒரு திறப்பட்ட மனநிலை யுடையராக இருத்தல் இல்லை. ஒவ்வொருவரும் வெவ்வேறு மனநிலை யுடையராதல் இயல்பு. அறத்திறநிறம்பா ஒழுக்கமுடைய பலருள்ளும் ஒவ்வொருவர் ஒவ்வொரு வகையான மனநிலையுடையராக இருப்பர். ஒருவரே இளமைப்பருவத்தும் காளைப்பருவத்தும் முதுமைப்பருவத்தும் வேறுவேறு வகைப்பட்ட மனநிலையுடையாதல் உலகியல்பாம். புறநானூற்றிலுள்ள பாக்களைப் பாடினோரும் அவற்றுற் பாடப் பட்டோரும் பலராதலின் அப்பாடல்களிற் பலதிறப்பட்ட மனநிலைகள் காணப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றை காட்டப்படுகின்றன.

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், சோழன் கலங்கிள்ளி என்னும் மூவரும் வஞ்சினக்காஞ்சி என்னுந் துறையிற் பாடியுள்ளனர். வஞ்சினக் காஞ்சியாவது "யான் இன்ன செயலைச் செய்யேனாயின் இன்ன தன்மையேன் ஆக" என்று சபதங் கூறுதல். பூதப்பாண்டியன் "யான் பகைவரைத் தாக்கிப் புறங்காணேனாயின் என் கற்புடை மனைவியை விட்டுப் பிரிவேனாக; அறநிலைதிரியா அன்பின் அவையத்து

அறமறியாத ஒருவனிடத்தில்வளுகவைத்துக்கொடுங்கோல் செய்தேனுக; **மையற்** கோமானுகிய மாவன் முதலான என் கண்போன்ற கண்பான்றோடு கூடி மகிழும் மகிழ்ச்சியை இழப்பேனுக : பாண்டியர் குடியையிட்டுப் பிற தாழ்ந்த குடிக்கண்ணே பிறப்பேனுக'' என்ருன். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் "என் வலிமையை யறியாது பேசும் பகைவரைவென்று அவர் மூசசத்தோடு அவரையும் கைப்பற்றேனுயின்,

கொடிய னெம்மிறையெனக் கண்ணீர்பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னுகுக ;

மாங்குடி மருதன் முதலாகவுள்ள புலவர் என் நாட்டைப் பாடாது விலக்குவாராக; இரந்து வந்தோர்க்கு ஈயாத வறுமையை யடைவேனுக'' என்ருன். சோழன் நலங்கிள்ளி "என் ஆற்றல் உணராது இகழ்ந் தூரைத்தோன் தூங்குகின்ற புலியை இடறிய குருடன்போலப் பிழைத்தல் அரிது ; யானையின் காலில் அகப்பட்ட மூங்கில்முளை யழியுமாறுபோல அவர்கள் அழியுமாறு யான் செய்யேனுயின் உண்ணத்தில் அன்பில்லாத பரத்தையரைக் கூடினேன் ஆக'' என்ருன்.

இம் மூவரும் தீ நெறிகடிந்த செங்நெறிச் செல்வரேயாவர். இவர்களுள் ஒருவர் கூறிய கருத்துக்கள் எனை இருவர்க்கும் கொள்ளத் தகுவனவேயன்றித் தள்ளத்தகுவனவாகா. ஆயினும் ஒவ்வொருவர் உள்ளமும் ஒரு சிலவற்றைச் சிறப்பாக நினைத்தல் காண்க. சிறப்பாக நோக்குமிடத்துப் பூதப்பாண்டியன் கட்பினரைப் பிரிதலைப் பெருந் துன்பமாகக் கருதலும், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் ஈதற்கியலாமையைப் பெருங்குறையாகக் கருதுதலும், சோழன் நலங்கிள்ளி பரத்தையர் கூட்டுறவைப்பெரிதுவாகக் கருதுதலும் கொண்டு செங்கோல் வேந்தராகிய இம்மூவர்க்கும் மனகிலை வேறுபடுதல் நினைதற் பாலதாகும்.

கபிலர், மலையமான் திருமுடிக் காரியைப் பாடுமிடத்து,

ஒருதிசை ஒருவனே யுள்ளிகாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசை யறிகலோ அரிதே பெரிதும்
ஈதல் எளிதே மாவண் டோன்றல்
அதுகற் கறிந்தனே யாயின்
பொதுகோக் கொழிமதி புலவர் மாட்டே

என்றனர். (ஓரிடத்துள்ள வள்ளலே நினைந்து காற்றிசையிலிருந்தும் பரிசிலர்வருவர் ; அவர்கட்கு ஈதல் எளிது ; அவர்கள் தரமறிந்து கொடுத்தல் அரிது ; ஆதலால் நின்பால் வருபவர் எல்லோரையும் ஒரு நிகராக எண்ணுது அவரவர் தரமறிந்து பரிசில் நல்குக என்பதாம்.) பெருஞ் சித்திரனர் என்னும் புலவர் குமண வள்ளலைப் பாடுமிடத்து என் வறுமை என்னைப் பின் நின்று தள்ள, நின்புகழ் முன்நின்று இழுத்தலால் நின்பால் வந்து நின் வண்மையைப் புகழ்வேனுயினேன். நீ

வல்லினும் வல்லேனாயினும் வல்லே
என்னளக்தறிந்தனே நோக்காது சிறந்த
கின்னளக்தறி மதிபெரும என்றனர்.

அஃதாவது நான் நன்குபாட அறிவேனாயினும் அறியேனாயினும் என் கல்வியளவை யாராய்ந்து பாராது கின்பெருமையை அறிந்து அதற்கேற்ப அருள்வாயாக என்றனர். (இதன் கருத்து கின்பால் யான் பெற்றுச் செல்லும் பரிசில் சிறிதாயின், அதனைக்கானும் பிறர் கின்வண்மையைக் குறைவாக கினைப்பர்; பரிசில் பெரிதாயின் அதுகண்டுகின் வண்மையைப் பெரிதெனப் போற்றுவர்; ஆதலின் கிறையக் கொடுக்க என்பதாம்.) இங்ஙனமே துறையூர் ஓடைகிழார் என்னும் புலவர் வேள் ஆய் என்னும் வள்ளலை

கினைக் கொத்தது நீ நாடி
நல்லினை வீடுமதிபரிசில் என்றனர்.

(கின்பெருமைக் கேற்ப ஆராய்ந்து பரிசில் கொடுத்து என்னை அனுப்புக.) பரிசில் கொடுக்கும் முறைபற்றி இங்குக் கபிலர் மனகிலை வேறுகவும், பெருஞ்சித்திரனர், துறையூர் ஓடைகிழார் இவ்விருவர் மனகிலையும் ஒருவகையில் வேறுகவும் இருத்தல் காண்க. மோசிகீரனர் என்னும் புலவர் கொண்கானங் கிழான் என்னுந் தலைவனைப் பாடுமிடத்து "உலகத்து மக்கள் நீர்கிறைந்த கடற்கரைக்கட் செலினும் சிறிதளவாயினும் பருகுதற்குரிய நீர்யாண்டுளது எனப்பிறரை வினவுவர்; அது போல ஈயாமன்னர் அண்மையிலிருப்பினும் வள்ளியோர் இருக்குமிடத்தை கினைந்து செல்வர் புலவர். அதனால் யானும் பெற்றதுபயனைக் கொண்டு, பெற்றபொருள் சிறிதாயினும், இவன் இங்ஙனம் செய்தனனே என்றிகழேன், வறுமையுற்றேன் ஆதலின்' என்றுரைத்தனர். பெருஞ்சித்திரனர் என்னும் புலவர், வெளிமான் என்னும் தலைவன் தம்பி இளவெளிமான் என்பவன் பரிசில் சிறிது கொடுப்ப, அதனைக் கொள்ளாது குமணன்பாற் சென்று பெரும்பரிசில் பெற்றுச் செல்வாயினர். கொடுக்கப்படும் பரிசில்பற்றி இவ்விருவர் மனகிலையும் வேறுபடுதல் காண்க.

கழைதின் யானையார் என்னும் புலவர் வல்வில்ஓரி பரிசில் கொடுக்கக் காலம் தாழ்த்தவிடத்து, அவ்வள்ளலை நோக்கி

புள்ளும் பொழுதும் பழித்த லல்லதை
உள்ளிச் சென்றோர்ப் பழியலாதனுந்
புலவேன் வாழியர் ஓரி என்றபாடியால்

புலவர் தாம் கருதியவாறு பரிசில் பெறுதவிடத்துத் தாம்புறப்பட்ட நோம் கன்னேரம் அன்றென்றும், இடைகிகழ்ந்த சகுனம் கன்றன்றென்றும் அவற்றை வெறுத்தல் அல்லது பரிசில் கொடாத தலைவரை வெறுத்துரைத்தல் இல்லை என்று கூறினர். இங்ஙனமே மூவன் என்னுந் தலைவனை நோக்கிப் பெருந்தலைச் சாத்தனர்,

ஈயா யாயினும் இரங்குவேனல்லேன்
கோயிலே யாருமி பெரும என்றுரைத்தனர்.

பெருஞ்சித்திரனார் இளவெளிமான் பரிசில் சிறிதாகக்கொடுத்தவிடத்து,

இரவலர் புரவலே யீயுமல்லே
புரவலர் இரவலர்க் கில்லையுமல்லர்
இரவல ருண்மையுங் காணினி இரவலர்க்
கீவோ ருண்மையுங் காண் என

வெறுத்துரைத்தனர். கொடுப்போரேத்திக் கொடார்ப்பழித்தல் உலகியல் பாயினும் கழைதின்யானையார், பெருந்தலைச்சாத்தனார் மனநிலையும், பெருஞ்சித்திரனார் மனநிலையும் தம்முள் வேறுபட்டமை காண்க.

குமணவள்ளலும் அவன் தம்பி இளங்குமணனும் ஒரு குடியிற் பிறந்தாராகவும் இளங்குமணன் நாட்டைக் கைப்பற்றிக்கொண்டு தமையனைக் காட்டின்கட் போக்கினன்; காட்டிலிருந்த குமணன் ஆண்டுவந்த பெருஞ்சித்திரனார்க்கு

பாடு பெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
நாடிழந்த தனினும் நனியின்னாது என்று

கூறித் தன்தலையைத் தன் தம்பிபாற் கொடுத்துப் பொருள் பெறுக என்று தன் வாளைக் கொடுத்தனன். ஒருகுடிப்பிறந்த இவ்விருவர் மனநிலையும் பெரிதும் வேறு படுதல் நினைதற்பாலது.

வேள் ஆய் என்பவனது கொடையைப்பற்றி உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்,

இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆய் அலன் பிறரும்
சான்றோர் சென்ற நெறியெண
ணுங்குப் பட்டன்றவன் கைவண்மையே என்றுகூறினர்.

(ஆய் இம்மையில் வறியோர்க்குக் கொடுத்தால் மறுமையில் தனக்கு நன்மையுண்டாகுமென்று செய்பவனல்லன்; சான்றோர் கொடுத்தல் நன்றெனச் செய்தமையிற் றானும் அக்நெறியே செய்கின்றனன் என்பது கருத்து.) வையாவிக்கோப்பெரும்பேகன் என்பவனது வண்மையைப் பற்றிப் பரணர்,

ஏத்தணையாயினும் ஈத்தல் நன்றென
மறுமை நோக்கின்றே அன்றே
பிறர், வறுமை நோக்கின்றவன் கைவண்மையே என்றனர்.

(மறுமையில் தனக்கு நன்மையுண்டாகும் என்பது கருதாது பிறர் வறுமைத்துன்பத்தைப் போக்குதல்வேண்டும் என்பதே கருதி ஈகின்றனன் என்பது கருத்து.) இவ்வள்ளிருவர் மனநிலையும் வேறுபடுதல் காண்க. இருவரும் மறுமைப்பயன் கருதி இம்மையில் ஈகை மேற்கொண்டனரல்லராயினும், சான்றோர் சென்ற நெறியெனக் கருதி ஈகைமேற்கொண்ட ஆய்வண்மையினும் வறுமையால்வாடும்

பிறரை அவ்வறுமையின் நீக்கிக் காத்தல் நன்றென்பதே கருதி ஈகை மேற்கொண்ட பேகன் வண்மை சிறப்புடைத்தாதல் ஆராய்ந்துணர்தற் பாலது.

கணியன் பூங்குன்றனார் என்னும் புலவர் மக்கட்குப் பொருள் உண்டாதலும் கெடுதலும், இன்பமும் துன்பமும், இறப்பும் பிறப்பும் ஆகிய எல்லாம் அவரவர் ஊழ்வினையாலே வருவன ஆதலின்,

பெரியோரை வியத்தலுமிலமே
சிறியோரை யிகழ்தல் அதனினுமிலமே என்றனர்.

கோப்பெருஞ்சோழன் என்னும் மன்னன். தன் புதல்வர்பாலுண்டான மனவெறுப்பினால் பட்டினியிருந்து உயிர் துறத்தலை மேற்கொண்டனன்; அங்ஙனந் தொடங்கியவன், ஆருயிர் நண்பராகிய பிசிராந்தையார் இச்செய்தியுணர்ந்து, தாமும் உயிர்துறக்கும் விருப்பினராய் ஈண்டு வருவர்; அவரிருத்தற்கும் இடம் அமைக்க என்றனன். அதுகேட்ட அவ்வரசனது மற்றொரு நண்பினராகிய பொத்தியார் என்னும் புலவர் முதற்கண் அங்ஙனம் நிகழுமெனக் கருதினாரல்லர். பின் அரசன் சொன்னவண்ணம் வந்த பிசிராந்தையாரைக் கண்ட பொத்தியார் மிக்க வியப்படைந்தனர். அங்ஙனம் வியப்புற்றவர்,

வருவன் என்ற கோனது பெருமையும்
அதுபழுதின்றி வந்தவனறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந்தன்றே என்று

தம் வியப்பின் மிகுதியை வெளியிடுவராயினர். கணியன் பூங்குன்றனார் உள்ள நிலையும் பொத்தியார் உள்ள நிலையும் வேறுபடுதல்காண்க.

4. செய்யுள்நயம்

புறநானூற்றுச் செய்யுட்கள் கல்வியறிவும் இயற்கை நுண்ணறிவும் ஒருங்குவாய்க்கப்பெற்ற சான்றோர்களாற் பாடப்பட்டனவாகலின், அவைகள் சிறியநுண்ணிய கருத்துக்களும் இன்சொல்லும் அழகுமிக்க நடையுமுடையவாக விளங்குகின்றன. செய்யுட்கள் தனித்தனியே இங்ஙனம் செவ்வியனவாக விளங்குதலோடு இச்செய்யுட்களைத் தொகுத்தவர் தொகுத்த முறையினால் மேலும் சிறப்புமிக்கு விளங்குகின்றன. அங்ஙனம் தொகுப்புமுறையினாற் சிறப்புற்று விளங்குதல் ஈண்டுச் சில செய்யுட்களாற் காட்டப்படும்.

வையாவிக்கோப்பெரும்பேகன் சிறந்தவள்ளல்; பிறவுயிர்கள் துன்புறுதலைக் காணச்சிறிதும் பொறாதவன்; கார் காலத்துத்தோகை விரித்தாடிய மயிலைக்கண்டு, அதுகுளிரால் நடுங்குகின்றதெனக்கருதித் தன்போர்வையை அதன் மேலிட்டுச் சென்றவன். அத்தகையோன் தன்மனைவி கண்ணகியைத்துறந்து வேறொருத்தியைவிரும்பி அவள்பால் உறைவானினன். அதுகண்ட கபிலர் அவன்பாற் சென்று 'பேக! கேழ்மிகுகின் மலையிற் சிற்றாரில் கின் அரண்மனைவாயிலில் கின்று

நின்னையும் நின் மலையையும் புகழ்ந்து பாடினேம்; அப்பொழுது ஒரு பெண் தன் பத்தால் செறியும் கண்ணீரோடு வேய்ங்குழல் அழுதாற் போல் அழுதனள்; அவள் யார்? அவள் காக்கத் தக்காள்' என்னும் கருத்தமைய,

கைவள் ளீகைக் கடுமான் பேக
யார்கொல் அளியள் தானே கெருங்கற்
சுரனுழந் துவருக்கிய வொக்கல் பசித்தெனக்
குளிர்பாய் மூசினிரங் குமருவி
ளளியிருஞ் செம்பிற் றொராக்கண்
வாயிற் ரோன்றி வாழ்த்தி நின்று
நின்னு நின்மலையும்பாட வின்னு
நிரைத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாண்
குழலினேவது போலமூதனள் பெரிதே (143 பா)

எனப்பாடினர்.

மூற்காலத்துப்புலவர்கள் அரசரிடத்து அணுகிப்பயின்று அவர்கட்கு அவ்வப்போது வேண்டிய அறங்களை எடுத்துரைக்கும் உரிமையுடையராயிருந்தாராயினும், சண்டுக் கபிலர் 'பேக! நீ நின் மனைவி வருந்துமாறு விட்டு வேருெத்தியுடனிருத்தல் தக்கதன்று; ஆகலின் நீ உடனே நின் மனைவிபாற் செல்க' என வெளிப்படையாகக் கூறிற்றிலர். ஈண்டுக் கூறப்படுவது அரசனையும் அவன் தேவியையும் பற்றியதொருசெய்தியாகலின் அதனை வெளிப்படக் கூறுதல் முறையன்றுகலானும், அரசரிடத்துப் பயில்வோர் அகலாது அணுகாது தீக்காய்வார்போற் பயிறல் வேண்டுமென்பது நீதி நூற் கருத்தாகலானும், தாமும் தம்மைச்சேர்ந்தோரும் பரிசில் கருதிவந்தவிடத்து அறிந்ததொரு நிகழ்ச்சியைக் கூறுவாரைக் கூறியுள்ளனர். அதுவும் அவன் மனைவி என்று தாங்கள் அறிந்துகொள்ளாமற் கூறுவார் போலவும், அறத்தின் வழாது பிறர் துன்பம் நீக்கிக் காத்தல் அரசன் கடன் ஆதலின் அவன் தன் கடனையுணர்ந்து செய்தற்காகக் கூறுவார்போலவும் கூறியிருக்குமுறை மிக்க அழகுடையதாகும்.

இன்னும் இக்கபிலர்கூற்று, பேகன், கபிலராற் கூறப்பட்டவள் தன் மனைவியே யென்பதும், அவன் தன்பிரிவால் துயர் பெரிதுடைய ளாயினள் என்பதும், தன்சுற்றமும் அவள் துயரும் கபிலர் முதலிய பிறரும் அறியுமளவிற்குவந்துவிட்டன என்பதும், அவள் துயர்தீங்கவும் புலவர் மனமகிழவும் இனிச்சிறிதும் தாழ்க்காது தன்மனைவியைச் சென்றடைதல் வேண்டுமென்பதும் உய்த்துணருமாறு புலப்படுத்தி நிற்றல் காண்க.

மற்றும் 'குழலினேவதுபோல் அழுதனள்' என்பதால் கண்ணகியின் கலம் உணர்த்தப்பட்டது. அழுகையார் தன்மை எக்கிலேயினும் அழகுடையதாகவே யிருக்குமாதலின், இயல்பில் இன்மொழியுடைய ளாகிய கண்ணகியழுதகுரலும் வேய்ங்குழல்தன் இன்னேசையோடு அழுதது போலிருந்ததென்க் கூறினர்.

மலைவான் தொள் கெனவுயர்பலிதூஉம்
மாரியான்று மழைமேக் குயர்கெனக்
கடவுட் பேணிய குறவர் மாக்கள்
பெயல்கண் மாறிய உவகையார் சாரற்
புனத் தினையிலும் நாட

என அவன் நாட்டின்வளங்கூறுமுகத்தால்,நின்னுட்டுமக்களெல்லோரும் தாம் வேண்டுவன பெற்றுமகிழ்வராக, நின் மனைவி மட்டும் வருந்துபவளாதல்தகாது;அவளும் தன்விருப்பம்பெற்று மகிழ்பவளாதல் வேண்டும் என்னும் கருத்தைப் புலப்படுத்தினர்.

இதற்கடுத்த 'அருளாயாகலோ கொடிதே' என்ற பாட்டு அவள் காரணமாகப்பேகனே நோக்கிப்பரணர் பாடியது. இதன் கண் கருத்து முற்பாட்டினும் சிறிது வெளிப்படக் கூறப்பட்டுள்ளது. 'பேக! யாங்கள் நின் அரண்மனைக்கட் சென்று நின்னைப் புகழ்ந்துபாட, ஆண்டு ஒரு பெண் அழுது கொண்டிருந்தனள்; அவளை நீ எம் தலைவனுகிய பேகனுக்கு உறவினளோ எனவினவினேம்; அதற்கு அவள் 'நான் அவன் உறவினளல்லேன்; அவன் வேறொருத்தியின் அழகைக் காதலித்து வருகிறான் என்று பலரும் சொல்லுகின்றனர், என்றாள்' எனக்கூறினர். முற்பாட்டில் வருத்தியவனைக்கண்ட அளவே கூறப்பட்டது. இப்பாட்டில் அவள் உட்கருத்தும், அவன் பிறனொருத்தியையகந்தமை ஊரிற்பலருமறிந்தமையும்கூறப்பட்டிருத்தல் காண்க. கண்ணகி, 'பேகன் வெறொருத்தியின் அழகைக் காதலித்து வருகிறான் என்று பலரும் சொல்லுகின்றனர்' என்றதனால் அவன் தன்னை நீங்கியதினும் பிறர்பழிப்புக்காளாயிருத்தலே தனக்குப் பெருத்தியர் தருவதாயிற்று என்பது அவள் கருத்தாகும். தான்பெறும் இன்பம் நீங்கினும் நீங்குக; தன் கணவனுக்குப் பழிவாதொழிக என்றெண்ணுவது நற்பெண்டிர் இயல்பா குமன்றே?

கோதை, பெய்வளைப் பிழந்த கதுப்புமுள்ளார்
அருள்கண்மாறலோ மாதுக வந்தில்
அறனஞ் சலரே யாயிழை நமரெனச்
சிறிய சொல்லிப் பெரிய புலம்பினும் (அகம் 144)

என அகநானூற்றிற் கூறப்பட்டிருத்தல் காண்க. இதனால் தன் கணவன் நலமே கருதும் உயர் குணமுடையள் கண்ணகி என்பது உணர்த்தப்பட்டது.

'வயங்கு புகழ்ப் பேக' எனப் பேகனைவிளித்ததனால் நீ உயர்ந்த புகழையுடையன்; அத்தகைய உன் புகழை இச்செயல் கெடுப்பதாகும்; ஆதலின் இச்செயல் ஒழிக எனக்குறிப்பித்தனர்.

மேற்பாடலில் கண்ணகியின் இன்மொழியுடைமை கூறப்பட்டது. இப்பாடலில் நீலமலர்போலும் கண்ணினள், காந்தள் அரும்புபோலும் விரலினள் எனஅவள் வடிவழகும், அவள் கூறிய சொற்களால் அவள்

உயர் குணமும் கூறப்பட்டன. இவ்விருபாடல்களாலும் அவள் பெண்கட்குரிய கலனெல்லாம் ஒருங்குடையள் என்பது கொள்ளக் கிடத்தல் காண்க.

இங்ஙனங் குறிப்பாற் கூறியவிடத்தும் பேகன் திருத்தாமையால் அப்பாணரே அடுத்த (145வது) பாடலால் 'மயிலுக்குப்போர்வை யளித்தபேக! யான் பரியால் கின்னிடம் இரந்து பொருள்பெற வந்திலேன்; ஆயினும் என் யாழை வாசித்து கின்னிடம் பரிசில்பெற விரும்புகின்றேன்; அப்பரிசில் யாதெனின் 'நீ உடனே தேரேறிச் சென்று கண்ணகியின் துயரைக்களைதல் வேண்டும் என்பதே' என மிகவும் வெளிப்படையாகக் கூறுவாராயினர். அரிசில்கிழார் பாடியதாக உள்ள இதற்கடுத்த (146வது) செய்யுளும் இக்கருத்துடையதே.

இங்ஙனம் கண்ணகியின் பொருட்டுப் புலவர்கள் பாடிய பாக்களின் கருத்தைக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் கூறும் தன்மைக் கேற்பத்தொகுத்தமைத்த முறையால் இச்செய்யுட்களின் பொருள்நயம் மேலும் சிறந்து விளங்குதல் காண்க.

பாரியிறந்தபின் அவன் உயிரினைய நண்பினராகிய கபிலர் அவன் மகளிர்க்கு மணம் முடித்துவைக்கும் விருப்பினராய், அவர்களை விச்சிக்கோன் என்னும் அரசனிடம் அழைத்துச் சென்று 'இவர், முல்லைக்கொடி புலவர் போலப்பாடாதாயினும், அதுபடாருமாறு அதற்குத் தேரீந்த பாரியின்மகளிர்; யான் பரிசிலன் அத்தனன்; இவர்களையான் நினக்குக்கொடுக்கின்றேன்; மணந்து கொள்க என்னுங் கருத்துப்பட

''இவரே, பூத்தலேரூப்புனைகொடிமுல்லை
நாத்தழும்பிருப்பப் பாடாதாயினும்
கறங்குமணி யெடுத்தேர் கொள்ளெனக்கொடுத்த
பாரந்தாங் குதிறப்பிற் பாரிமகளிர்
யானே, பரிசிலன் மன்னுமந்தணன் நீயே
வரிசையில் வணக்கும் வாண் மேம்படுதன்
னினக்கியான் கொடுப்பக் கொண்மதி'' (200 பா) என்றனர்

ஆனால் விச்சிக் கோன் இம்மணத்திற்குடம்பட்டிலன். அங்ஙனம் உடம்படாமைக்கு வேறு காரணங் கூறப்படுவதாயினும், (அப்பொழுதிருந்த தமிழ் வேந்தர் மூவரும் பாரிக்குப்பகைவராதலின், பாரிமகளிரை மணந்து கொண்டால் அம்மூவேந்தரும் தன்னுடன் பகைகொள்வர் என்றஞ்சி விச்சிக்கோனும், அடுத்த பாடலிற் கூறப்படுகிற இருங்கோ வேளும் இம்மணத்திற்கு உடம்பட்டிலர் என வேறு காரணம் கூறப்படுகின்றது.) இச் செய்யுளிற் புலவர் கூறிய சொற்கள் அரசன் மணத்திற்குடம்படாதவாறு செய்துவிட்டன என்றுணர இடமுண்டு. இதன்கண் கபிலர் தம்மைப் பரிசிலன் அத்தணன் என்று கூறினர். பரிசிலர் விருப்பத்தை நிறைவேற்றுதல் அரசன் கடனாயினும், 'நினக்குயான் கொடுப்பக்கொள்' என்றமையால்

பரிசிலர்க்கு ஈதலன்றி அவர்பால் ஏற்றல் அரசன் பெருமைக் கேலாத தோன்றுகலானும். அத்தணர் ஈதல் ஏற்றல் இரண்டற்குமுரியராயினும் பெரும்பாலும் ஏற்றற் கேயுரியராதலின் அவர்பாலேற்றலும் அரசன் பெருமைக் கேலாதாகலானும் விச்சிக்கோன் இம்மணத்திற்குடம் பட்டிலன் என்றுணரலாகும். ('அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கமும்' என்ற தொல்காப்பியப் புறத்திணையியற்சூத்திர உரையில் நச்சினார்க்கினியர் 'கொடுத்தலாவது, வேள்வியாசாரனும் அவற்குத் துணையாயினரும் ஆண்டுவக்தாரும் இன்புறுமாற்றான் வோளாண்மையைச் செய்தல்' என அத்தணர் கொடைக்குரிய இடம் உணர்த்தினமை காண்க.) இக்கருத்தை அடுத்த (201) செய்யுள் வலியுருத்துகின்றது.

இங்ஙனம் விச்சிக்கோன் பாரிமகளிரை மணக்க இசையா தொழியவே, கபிலர் அம்மகளிரையழைத்துக்கொண்டு இருங்கோவேள் என்பானிடம் சென்று இவர்,

"கெமோப் பாரிமகளிர் யானே
தந்தை தோழன் இவரென்மகளிர்
அத்தணன் புலவன் கொண்டுவந்தனனே
... ...
யான் தாஇவரைக் கொண்மதி" (201 பா) என்றனர்

முற்பாட்டிற்போல 'யானே பரிசிலன் மன்னுமத்தணன்' என்றுகூறாது இப்பாட்டில் யான் பாரியின்தோழன்; அம்முறையால் இவர் என்மகளிர் எனமுறைப்படுத்திக் கூறியதோடமையாது 'பரிசிலன்' என்பதை விடுத்தும் 'புலவன்' எனக்கூறினர். யான் பாரியின் தோழன்; இவரென்மகளிர் என்றதனால் இம்மகளிர் திறத்துப் பாரிக்குரிய உரிமை எனக்கும் உண்டு; ஆதலின் யான்தர நீமணந்துகொள்ளலாம் என்ற கருத்தைப் புலப்படுத்தினர். இங்ஙனம் கபிலர் முற்கூறிய முறையை மாற்றிக் கூறினமையால் முற்கூறிய முறை பொருத்தமுடைத்தன் றென்பது அவர்கருத்தாதல் தெளிவாம்.

இருங்கோவேளும் பாரிமகளிரை மணக்க இசையாதொழியவே கபிலர் அவனை அடுத்த 202-வது பாடலால் முனிந்து கூறுவாரானர். விச்சிக்கோன் இருங்கோவேள் இருவரும் பாரி மகளிரை மணக்க மறுத்திருப்பவும், விச்சிக்கோனை வெகுண்டுபாடாது, இருங்கோவேளை மட்டும் கபிலர் வெகுண்டு பாடியிருத்தல், விச்சிக்கோன் தம் பொருந்தாக் கூற்றிலேயே மணக்க மறுத்தானென்பது கபிலர் கருத்தாதலைவலியுறுத்தி நிற்றல் காண்க.

202-வது பாடலிற் கபிலர் இருங்கோவேளின் வலிமையை இகழ்ந்துரைத்தலால், அவன் மூவேந்தரின் பகைமைக் கஞ்சியே மறுத்தனன் எனப்பின்னர் உணர்ந்தனர் எனக்கோடல் பொருத்தமாகும். இருங்கோவேளை நோக்கி

" தங்தை தாயம் நிறைவுற வெய்திய
ஒலியற் கண்ணிப் புலிகடிமால் " (202) என்று

நீ நின் தந்தையாற்பெற்ற அரசுரிமையைக்கொண்டு மகிழ்ந்திருப்வனன்றி நின் முயற்சியால் யாதோரரிய செயலும் செய்தவனல்லன் என இகழ்ந்தனர். ஆற்றலில்லாத சிறியோன் தக்தையால்பெற்ற தாயமாகிய அரசுரிமையைப் பெரிதாக மதித்து மகிழ்வன்; ஆற்றலும் முயற்சியுமுடைய பெரியோன் பெறுவானுயின், அதனைக் கிடேச்சினது (கெட்டி) காய்ந்த சுள்ளியைப்போல நினைப்பான் எனச் சோழன் கலங்கிள்ளி (75 பா) கூறியிருத்தல்காண்க. மேற்பகுதியில் 'புலிகடிமால்' என்றது இருங்கோவேள் புலியை வென்றுனைக்கூறியதன்று. இவன் முன்னோருள் ஒருவன் செயலை இவன் மேலிட்டுக் கூறியதாகும். இவ்விடத்து இதுவும் ஓர் இகழ்ச்சிக் குறிப்பாயிற்று. மற்றும்,

" அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மாத்தகட் டொன்வீ தாய தாறுகல்
இரும்புலி வரிப்புறங் கடுக்கும்
பெருங்கல் வைப்பின் நாடெழி வேரோ" (202)

என இவன் மலைகாட்டைப் புனைந்துரைப்பார் போலவும் இகழ்ந்துரைத்தனர். வேங்கை மரத்தின்மலர் வீழ்ந்து பரவப்பெற்றுள்ள கற்பாறை புலிபோலத்தோன்றும் என்றதனுல், உண்மையிற் புலியல்லாத கற்பாறை வேங்கை மலரையணிந்து புலிபோலத் தோன்றிக் கண்டாரை அஞ்சப்பண்ணுவது போலப், பிறரை வெல்லும் ஆற்றலில்லாத நீ தந்தையரற் பெற்ற அரசுரிமையை மேற்கொண்டு ஆற்றலுடைய அரசன்போன்று நின் குடிகளையும் பிறரையும் அஞ்சுவித்துக்கொண்டு வாழ்கின்றனை என்று குறிப்பாலிகழ்ந்துரைத்தனர்.

இங்ஙனம் இவன் வலிமையை இகழ்ந்துரைத்தலோடமையாது 'உன் முன்னோருள் உன்னைப்போல் அறிவிலான் ஒருவன் கழாத்தலையார் என்னும் புலவரை இகழ, அவர் வசையாகப் பாடியதனுல் சிற்றரையம் பேரரையம் என இரண்டு பகுதியாக அமைந்த பெரியதுமகரம் கெட்டது' என்றுகூறி, இப்போது என் வேண்டுகோளை ஏற்காது என்னை இகழ்ந்ததனுல் நின் நாடும் அழிவதாகும் என்பதைக் குறிப்பாலுணர்த்தினர்

" இவர், கைவண்பாரி மகளிர் என்றவென்
தேற்றுப் புன் சொல் நோற்றிசிற் பெரும "

என்றதனுல் பாரியின் பெருமையையும் இவன் இழிவையும் கருதி 'இவன் முன் நின்று இவர் பாரியின் மகளிர் என்று கூறினுமே' என்று கபிலர் தம்மைத்தாமே கொந்துகொண்டனர் என்பது குறிப்பாலுணரப்படும் கருத்தாகும். இங்ஙனம் கபிலர் வெகுண்டு கூறிய பாடலும் குறிப்புப்பொருள் நிறைந்து விளங்குதல் காண்க.

இப்பாடல்கள் மூன்றும் தம்பொருட்சிறப்போடு வைப்பு முறையால் மேலும் சிறப்புற்று விளங்குதல் காணுக.

பாரி மகளிர் பொருட்டுக் கபிலர் சென்று வேண்டிய இவ்விரண்டரசர்களும் புலவரால் ஒதுக்கப்பட்ட அரசர் மரபினராவர். இளங்கண்டீரக்கோவும் (கண்டீரக்கோப்பெருநள்ளியின் தம்பி) இளவிச்சிக்கோவும் (விச்சிக்கோன் தம்பி) ஒருங்கிருந்தவிடத்து வந்த பெருந்தலைச் சாத்தனர் இளங்கண்டீரக்கோவைத் தழுவிக்கொண்டு இளவிச்சிக்கோவைத் தழுவாது விடுத்தனர். இளவிச்சிக்கோ அதற்குக் காரணம் கேட்டபப் பெருந்தலைச்சாத்தனர், பாடிவரும் புலவர்க்கு ஈயாது கதவடைத்ததன் காரணமாக தும்மலையை (உங்களை)ப் புலவர் பாடாதொழிந்தனர் எனக்கூறியுள்ளனர். இருங்கோவேள், கழாத்தலையார் என்னும் புலவரையிகழ்ந்து அதன் பயனுகத் தன் நகரம் அழியப்பெற்றவன்மரபினன். இங்ஙனம் இவ்விருவரும் புலவரால் ஒதுக்கப்பட்டவராய்த் தம்மால் வேண்டத்தகாதாரெனினும், இவ்விருவரும் வேளிர் மரபினராதலின் அம்மரபினராகிய பாரி மகளிரின் மணங்கருதிச்சென்று வேண்டினராவர். இதனால் சுட்பின் பொருட்டுத் தகாதாரிடத்திலும் சென்று வேண்டினர் எனக் கபிலர் பெருமை சிறப்புறுதல் காண்க.

முடிவுரை.

இதுகாறுங்கூறியவற்றால் புறநானூறென்னும் அருந்தமிழ்நூலில் அறம், பொருள், வீடு எனும் மூப்பொருளும் சிறப்புறக் கூறப்பட்டிருத்தலும், புறநானூற்றுப் பாடல்கட்குத் திணை, துறை, பாடினோர் பெயர் முதலியன பாடினோரல்லாத பிறரால் எழுதப்பட்டன வென்பதும், கீழ்க்குறிப்புக்கள் நுண்ணிதின் உணர்ந்து எழுதப்பட்டுள்ள முறையும், புலவர் வாழ்க்கை முறையும், அவர் தம் வரன் முறை பிறழாத்தன்மையும், மக்கள் மனநிலைவேறுபாடுகளும், செய்யுள்நயமும் ஆகிய இவையிற்றை ஓரளவு உணர்த்தினும்.



மூத்தமிழ்

வித்துவான்,
T. P. மீநாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் M. A., B. L., M. O. L.
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

மூத்தமிழ் என்ற வழக்கு நம் தமிழ் மரபாகும். 'தொன்மாண் டமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்' என்பது பரிபாடல். முத்தமிழ்க்கும் இலக்கணம் கூறும் மூவறுப்பு அடங்கிய பிண்டமே அகத்தியம் எனப் பண்டைத் தமிழ் உரையாசிரியர்கள் எழுதிவைத்துள்ளனர். சிலப்பதிகாரம் முத்தமிழ் இலக்கணத்திற்கு இலக்கியமாக விளங்குகிறது என அடியார்க்கு நல்லார் உரைவழியே அறிகின்றோம். திருக்கச்சூர்க் கல்வெட்டு ஒன்று (M. E. R. 377 of 1906) முத்தமிழாசிரியர் பெருகம்பி என்பவரைப்பற்றிப் பேசுகின்றது. இன்றும் நம் பள்ளிச் சிறுவர்கள் ஔவையார் வாயால் "சங்கத்தமிழ் மூன்றும் 'தா' எனக்கடவுளே வேண்டி நிற்கின்றனர்.

முத்தமிழாவன இயல், இசை, கூத்து என யாவரும் அறிவர். கூத்து என்பது 'நாடகக் கரப்பியம்' அன்று. பரதகாட்டியம் என்றும் 'Dance' என்றும் வழங்குவனவோடு ஒத்தது ஒன்று, இவற்றை ஆங்கிலத்தில் 'Fine arts' எனவழங்கும் இன்னியற் கல்வித்துறைகளோ எனவும் ஐயுறலாம். ஆனால் ஓவியம் முதலியன மூத்தமிழில் பிரித்தெண்ணப்படவில்லை. வடமொழியாளர் 64 கலைகள் என கல்வித்துறைகளை வகுத்த முறையும் இதற்குப் பொருந்துவதில்லை. ஆகவே இவ்வாறு மூன்று எனத் தமிழ்வகுத்ததன் உண்மை நோக்கம் யாது என்ற கேள்வி பிறக்கிறது.

இயற்றமிழானது சொற்களாலாயது. சொல்லோ ஒலிவடிவம்; இசையும் ஒலிவடிவே. இவ்விரண்டிற்கும் வேற்றுமை என்னை? சொல்லோ நம் எண்ணத்தைச் சுட்டும் அறிகுறி; அஃது ஒலியாகவும் எழுதலாம், எழுதும் எழுத்தாகவும் அமையலாம்; ஓவியமாகவும் முடியலாம். ஆனால் இவற்றுள் குறிக்கப்படுவது மனத்தெழும் கருத்துக்களேயாம். நம் எண்ணம் எல்லாம் சொல்வடிவே என்பர்

சிவஞானபோதம் பேருரையாளர். பேசும்போது எழும் ஒலி வானிற் பிறக்கும் அசுத்தமாயாகரியமாயினும், அது குறிப்பது எண்ணமே யாதலின் சொற்கள் அவ்வகையில் சுத்தமாயாகாரியமே என்பர். பெனிடெட்டோ க்ரோசே (Benedetto Croce) என்ற இத்தாலியப் பேராசிரியரும் சொல்லில்லையேல் எண்ணமில்லை என்பர். ஆனால் இசையோ நம் உணர்ச்சிக்குப் போக்குவீடாக எழும் இயற்கை ஒலியாகும். அஃது அறிகுறியல்ல; அஃதே பொருள். இன்ப ஒலியும் துன்ப ஒலியுமாக இசை வெளிவருகின்றது. நோதிரம் எனத்தமிழர் ஓர் இசைக்குப் பெயரிட்டனர் அன்றே? ஆகவே மனக்கருத்தின் அமைதியே இயற்றமிழ். இயற்கை வாய்ஒலியின் அமைதியே இசைத்தமிழ் மெய்யின் இயக்கவிளக்கமே கூத்துத்தமிழ். இவ்வாறு உயிர் முத்திறத்தாலும் தன்னியல்பை வெளிப்படுத்து நிலையில் சிறப்பாக விளங்குவன முத்தமிழாம்.

மேல்நாட்டு உள்ளத்தியற்கை நூலாசிரியர்கள் மனமானது அறிவு நிலை, உணர்சிநிலை, செயனிலை என முத்திறப்பட்டது எனக் கூறிவந்தனர்; இவை வெவ்வேறு நிலைகளாகாது ஒருப்பில் சூடும் ஒளியும் வடிவும் ஒன்றாய் விளங்குதல்போல ஒற்றித்துநிற்பன என இதுபோது கூறுகின்றனர். நம் நாட்டு அறிஞர்களும், விருப்பாற்றல், அறிவாற்றல், செயலாற்றல் என்றும் இச்சா ஞானக்கிரியா சத்திகள் என்றும் பேசிவந்தனர். இசை, இன்ப ஒலியும் துன்ப ஒலியுமாக எழுக் காண்கின்றோமாதலின் உணர்ச்சிநிலை அல்லது விருப்பாற்றலின் இயக்கம் எனலாம். மனக்கருத்தை விளக்கும் இயற்றமிழ் அறிவுநிலை அல்லது அறிவாற்றலின் இயக்கம் எனலாம். செயல்நிலை அல்லது செயலாற்றலின் இயக்கமே கூத்துத்தமிழாம். எனவே மனதின் இயக்கமாக எழுகின்றவை அனைத்தும் இவற்றிலடங்கவே வேண்டும். இப்பாகுபாடு இவ்வகையில் இயற்கைக்கும் இலக்கணத்திற்கும் பொருத்தமாகும்.

வீட்டு நெறியெனும் மெய்யுணர்வே அறத்துப்பாலின் முடிபாதலின் அறம் அறிவு நிலையின் பயன் எனலாம். உலகில் மக்கள் அரசும் குடிகளுமாய் வாழும் வாழ்க்கையைக்கூறும் பொருட்பால் செயல்நிலையின் பயன் எனலாம். முடிந்தமுடிபாம் இன்பத்துப்பால் உணர்ச்சிநிலையின் பயன் எனலாம். 'இன்பமும் பொருளும் அறனும் என்றங்கு அன்பொடுபுணர்ந்த ஐந்திணை' எனத் தொல்காப்பியனார் தமிழ் ஒழுக்கம் கூறினர். எனவே மூப்பாலும் முத்தமிழாக முடிகின்றன. காதலே வீணைச்செல்வம் எனச்சிந்தாமணி கூறுவதி னின்றும் இசையும் இன்பமும் ஒன்றுதல் விளங்கும்; எனவே இயற்றமிழ் அறமாம்; கூத்துத்தமிழ் பொருளாம்.

உலகப் பொருள்களின் இயல்பாகச் சத்துவ இராசத தமோ குணங்களையும் காத்தல் படைத்தல் அழித்தல் என்ற செயல்களையும் கூறுவர் அன்றே? இவை கீழ் நிலையிற்றோன்றும் அறிவுநிலை விளக்க

மாகவும் செயல் நிலை விளக்கமாகவும் விருப்புநிலை விளக்கமாகவும் முறையே கொள்ளத்தக்கன என்பர் திரு பகவான் தாசர். தாம் எழுதிய 'அமைதிநூல்' என்பதனுள், 'வீடு பெற்றுநின்ற மேனிலையில் இறைவனியல்பாக விளங்கும் அறிவும் உண்மையும் இன்பமும் (சச்சிதானந்தம்) மேனிலையிற்றோன்றும் அறிவு நிலையும் செயல்நிலையும் விருப்பு நிலையுமாக முறையே அமைகின்றன, என்றும் இயங்காதிருக்கும் போது ஓர் பொருளுண்மையினை உற்றுநோக்கியறியாத நாம் அஃது இயங்கும்போது எளிதின் அறிதலின், உண்மைத்தன்மையைச் செயனிலை விளக்கமாகக் கொள்வது பொருத்தமே என்றும் அறிவு, அறிவுநிலையின் விளக்கமாதலினும் இன்பம் விருப்புநிலை விளக்க மாதலினும் ஐயம் ஒன்றும் எழுதற்கிடமில்லை என்றும் கூறுகின்றார். அறியும் ஆன்ம அறிவு குறை நீங்கி நிறைவாம் வீட்டு நிலையில மெய்யறிவு நிலையாக விளங்க, எங்கும் நிறைந்த இறைவன் அடிப் படையான உண்மை நிலையாக விளங்க மயக்கின்ற இருளுலகம் முற்றும் மாறி இன்ப நிலையாக விளங்க இவ்வாறு இவை மூன்றும் ஒற்றித்து முதிர்ந்து பழுத்து முற்றிநிற்கும் முத்திநிலையும் முத்தமிழ் நிலைதானே.

> முத்திதனின் மூன்று முதலும் மொழியக்கேள்
> சுத்தஅது போகத்தைத் துய்த்தலனு - மெத்தவே
> இன்பங் கொடுத்தலிறை இத்தை விளைவித்தல்மலம்
> அன்புடனே கண்டுகொளப் பா.

என்பது காண்க.

இவ்வாறு உயரப்பறப்பதைவிட்டு மண்ணிற்றவழ்ந்து வரும்போதும் முத்தமிழ்க்கொள்கையின் பெருமை விளங்குகிறது. இக்காலத்துக் கல்வி அறிவுநிலை ஒன்றையே வளர்க்கின்றது. இதன்பயனுகத் தலைகொழுத்து உள்ளம் வற்றி உடல்வாடி நிற்கின்ற மக்களையே காண்கின்றோம். போரும் மூண்டெரிகின்றது. முத்தமிழ் நெறியே கல்வி கற்றிருந்தால் முழுமனவளர்ச்சிப்பெற்ற சான்றோர்களாய் தனக்கெனவாழாப் பிறர்க்குரியாளராய் விளங்கியிருப்பர் அன்றே? 'சங்கத்தமிழ் மூன்றுந்தா' என எல்லோரும் வேண்டுதல் இன்றியமையாததன்றே?

மற்றுமொரு வகையால் முத்தமிழ்க் கொள்கையை ஆராயலாம். நமக்கு அமைந்தன மூன்றுகருவிகள், மனம் மொழி மெய் என்பன. இவை பண்பட்ட நிலையைத் 'திரிகரணசுத்தி' என்பர் வடமொழியாளர். தமிழர் இதனைத் தம்மொழியில் மிக அழகாக விளக்கிவைத்துள்ளனர். உள்ளத்தில் இயற்கை நிலையே அதன் தூய நிலையாகும். ஊர்ந்து

உள்ளது உணர்வதே அங்கிலேயம். அதனை உண்மை என்றனர். (மை என்பது மெய் என்பதன் திரிபாக விளங்குவதை மொழி நூலாராய்ச்சியாளர் எடுத்துரைப்பர். ஆகவே எண்மை என்பது உள்ளத்தின் இயல்பு அல்லது வடிவம் எனப் பொருள்படும். மெய்ம்மை என்பது அங்ஙனமே உடலின் இயற்கை என்றும், வாய்மை என்பது வாயின் இயற்கை என்றும் பொருள்படுமாறு காண்க.) வாயின் இயல்பு தீதின்றி நன்று பயக்கும் வாய்மையே யாம். மெய்யின் இயல்பு பொய்படா தொழுகும் ஒழுக்கமாம் மெய்ம்மையே யாம். உண்மை, வாய்மை, மெய்ம்மை என்ற தனித் தமிழ்ச் சிறப்புச்சொற்கள் முத்தமிழின் இயல்பை விளக்க எழுந்தன போன்றமைந்துள்ளன. இன்பமாய்ப் பொங்கி அறிவாய்விளங்கும் உள்பொருளை உள்ளத்தாலும் வாயாலும்மெய்யாலும்வழிபட்டு அதுவாய்நிற்கும்முறைஇதுவேயாகும். தூயமனத்தில் பொங்கி எழுந்தது இயற்றமிழ். தூயவாயின் முழக்கமே இசைத்தமிழ். தூயமெய்யின் இயக்கமே கூத்துத்தமிழ். இவை மூன்றும் உண்மைக்குமாறாக இருத்தலாகாது என்பது தமிழர் கண்டமுடிபு. இவற்றின் ஒற்றித்தவடிவமே முருகு எனும் அழகாம். உணர்ச்சி நிலையின் அழகையாவரும் அறிவர். 'கல்வியழகேயழகு' என அறிவு நிலையையும் அழகாகக் கண்டனர் நாலடிபாடிய தமிழர். 'ஒழுக்கத்தழகு' எனச்செயல்நிலை அழகினையும் அழகாகக்கண்டார் தமிழவ்ல்லியார். கிரேக்கர்கள் உண்மை, அழகு, நன்மை என்பவற்றைப் பொன்னிலான முக்கோணமாகப் பாராட்டி வந்தனர். உண்மைஎன்பது அறிவையும், அழகு உணர்ச்சியையும், நன்மை ஒழுக்கத்தையும் குறிப்பனவாகலின் அவையும் முத்தமிழ்க் கொள்கையை விளக்குதல் காண்க. ஆனல் கிரேக்கர்க்கு அவை குறிக்கோளாக விளங்கத் தமிழர்க்கு இவை கல்வி முறையாகி அன்றுடைய வாழ்க்கையாய் விளங்கின. முத்தமிழ் எனக் கொண்டதால் எல்லாவற்றையும் அழகு என முடிப்பது எளிதாயிற்று. பரத நாட்டியத்திலும் பாவம் எனும் மனக்குறிப்பும் ராகம் எனும் இசையும் தாளம் என்பதும் ஒத்திசைதல் வேண்டும் என்றனர் வடமொழியாளர். முத்தமிழை வெவ்வேறுகப் பிரித்துப் பேசினலும் பிரிக்கமுடியாதபடி ஒன்றுய் மனக்கருத்தாய் அரும்பி, இசையாய்ப்பூத்துக், கூத்தாய்ப்பழுத்து, முற்றியபோதுதான் உயரிய வாழ்க்கையாய் இனிக்கக் காண்கிறோம். கண்ணன் மறைமுடி பேதிப்புல்லாங்குழலூதிக் குடக் கூத்தாடுகின்றன். சிவபெருமான் ஆலின்கீழ் அறமுரைத்துச் சாமகீதனுய் மிக கல்ல வீணை தடவி இன்பக் கூத்தாடிக் கூத்தரசனைச் சிறப்படைகின்றன். பேரறிவுநிலைபெற்ற பெரியோர்களும் 'அயரா அன்பின் அரன்கழல் செலுமே' என்றப்படி

உண்மைநிலை மறவாத அறிவாற்றலும், அன்பாய் விளங்கும் விருப்பாற்றலும், அரன்கழல் செலவும் செயலாற்றலும் பெற்று விளங்குகின்றனர். அவர்கள் இயலும் இசையும் கூத்தும் இருந்தபடி அது. 'ஆடுகின்றீலை கூத்துடையான் கழற்கன்பீலை என்புருகிப் பாடுகின்றீலை' என்பது திருவாசகம். கடவுளையடையும் வழிகள் அன்புநெறி, செயல் நெறி, செறிவுநெறி என்றெல்லாம் பெயர்பெற்றுள்ளமை அறிவோம். முத்தமிழ் வழியே கடவுளையடைதலும் கூடும் எனக் கண்ட கற்றமிழ் ஞானசம்பந்தர் 'ஆடல் நெறி,' 'பாடல் நெறி' எனப்புதிதாகக் கூறியுள்ளார் பாடல்நெறி இயல் இசை என்ற இரண்டையும் குறிப்பதால் முத்தமிழும் இங்கே குறிக்கப்பட்டமை காண்க. திருமூலர் "தமிழ் மண்டலம் ஐந்தும் பரவிய ஞானம்" எனக் கூறுவது ஈதேயாம். இவற்றை எல்லாம் மனத்தில் வைத்துக் கொண்டன்றே முத்தமிழ்கற்று முழங்கு மெய்ஞ்ஞானிகட்கு,

சத்தங்கள் எனக்கடி குகம்பாய்
சத்தங்கள் எனக்கடி

எனக் குகம்பைச் சித்தர் பாடுகின்றார்.

முறைமறந்தறைதல்

வித்துவான்,
தி. பொ. பழநியப்பப் பிள்ளை அவர்கள் B. O. L.,
Reader in Tamil,
Sri Venkateswara Oriental Institute, Tirupati.

நம் செந்தமிழ் மொழியின் இலக்கண நுண்பொருள்களைப் பல்லாற்றான் கண்டு ஆராய்ந்த சுவாமிநாத தேசிகர் இயற்றியருளிய இலக்கணக்கொத்து என்னும் அரியநூலைக் கற்றூர் யாவரும் இக்கட்டுரையின் தலைப்புப் பெயருக்குரிய பொருளைத் தெள்ளிதின் உணர்தல் கூடும். அப்பெரியார் அந்நூலுள் அவையடக்கமாகக் கூறிய நூற்பாவில்,

> "நூலுரை போதகா சிரியர் மூவரும்
> மூக்குண வசத்தான் முறைமறந் தறைவரே"

என்றருளிய பகுதியுள்ளது அறியப்படும். இதன் பொருளாவது; நூல் இயற்றும் ஆசிரியரும் உரை இயற்றும் ஆசிரியரும் நூலுரைகளைப் பயிற்றுவிக்கும் ஆசிரியரும் ஆகிய இம்முத்திறத்தார்களும் உடல்கொள் உயிர்க்குணங்களாகிய சத்துவ, இராசத, தாமதங்கள் தம்மிடத்து மாறி மாறி நிகழ்தலின் ஒருகால் தாமத குணவயப்பட்டோராய் மறவியால் தாம் உரைக்கப்புகும் நூற்பொருண் முறைமையினைப் பிழைபட உரைப்பர் என்பதாம். இப்பகுதியை உரையால் விளக்கப் போந்த அவ்வாசிரியர்,

'அன்றியின்றியென் வினையெஞ் சிகரந்தொடர்பினுளுகாமாய்த் திரியும்' என்று முறை கூறினர். அம்முறையே 'வினையெச்சம்மே வினைமுற்றாகலும்' எனல்வேண்டும்; அதுமறந்து 'வினைமுற்றே வினையெச்சமாகலும்' என்றார்" என்று கண்ணூலாசிரியர் முறை மறந்தறைந்தமையை எடுத்துக்காட்டினர். பின்னர் அவரே 'இம்மறவி

உரையாசிரியர் போதகாசிரியரொடு மூவர்க்கும் பொது' என்றமையால் ஏனைய இருவகையாசிரியர்களும் இவ்வாறே முறைமறந்துரைப்பர் என்றாராயிற்று.

இனி இதனையடுத்து,

> "இம்முறை யெல்லா மெவர்பாலுந் தழியினும்
> அவத்தை வசத்தா லலிவுகுவர் இடனே" என்ற

மொழிந்து அவத்தை வசத்தால் அலிவதற்கு எடுத்துக்காட்டாகக் கனவு கனவு சாக்கிர பிரேரகங்களின் ஐயம் மலிவுகளுரைத்தலே விளக்கிக் கூறி 'இவைபோல்வன அவத்தை வசத்தாலலிதல். இவையும் மூவாசிரியர்க்கும்பொது,' என்று முடித்தார். ஈண்டு 'இம்முறை' என்று அவர் சுட்டியவை இதற்கு முன்னர் அவர் தொகுத்துக்கூறிய பதினென்றும் என்பது அவர் உரைக்குறிப்பால் அறிதலாம். அவற்றுள்,

> "நூலா சிரியர் கருத்தினை நோக்கா
> தொருசூத் திரத்திற் கொவ்வொ ராசிரிய
> ரொவ்வொரு மதமா யுரையுரைக் குவரே:
> யவ்வுரை யதனு ளடுத்தவா சகங்கட்
> கவ்வுரைத் தழியா தவரவர் கருத்தினுட்
> கொண்ட பொருள் படப் பொருள் கூ றுவரே."

என்பவற்றையும் அடக்கிக் கூறியுள்ளார். ஆதலின் இவ்வாறுரைத்தலும் முறை மறந்தறைதலாகக் கருதப்படும். முறை என்ற சொல், நூல் எனவும் பொருள்தருதலின் ஆசிரியர்தன் நூல்வழக்கு முறைமைகளுக்கு மாறுபட உரைப்பன எல்லாவற்றையும் முறைமறந்தறைதலென்று மொழியலாம்.

இவ்வாறு அப்பெரியார் அறிந்துரைத்த பெற்றியை நோக்குங்கால், தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார்,

> 'அரியகற் றூசற்றூர் கண்ணும் தெரியுங்கா
> லின்மை யரிதே வெளிறு'

என்று கூறியருளிய பொய்யில் பொருளுரைக் கேற்பப் புலத்துறை முற்றிய பெருமக்களும் ஓரோவழித் தம் நூலுரையுள் வழுப்படச்சில உரைப்பர் என்பது தெளியப்படும். அதுபற்றி அவர் இகழற்பாடுபெறார் என்பதும் அறிஞர் யாவரும் அறிந்தது. இங்ஙனம் புலமுற்றிய பெருமக்களுட் பண்டை ஆசிரியர் சிலரும் இன்றை ஆசிரியர் சிலரும் நூன்முறை மறந்தறைந்த சில பொருள்களை ஈண்டு எடுத்துக்காட்டித் தெருட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமென அறிக.

நன்னூல் எழுத்தியலுள் பயிலும்,

> 'ஆவியு மொற்று மளவிறக் கிசைத்தலு
> மேவு மிசைவிளி பண்டமாற் றுரையின்'

என்ற சூத்திரத்தின் உரையில், உரைகாரராகிய சங்கரநமச்சிவாயப் புலவர் 'ஆதியென்றமையின் நாவல் சூழ்ப்பிசை முறையீடு புலம்பலுங்

கொள்க' என்று கூறியபின்னர், 'நாவல்' என்பது இன்னதென விளக்கப்போந்து, 'நாவலென்பது நெற்போர் தெழிக்கும் பகட்டினங்களைத் துரப்பதொரு சொல்' என்று விளக்கம்கூறி, அதற்கு மேற்கோளாக,

> 'காவலுழவர் கடுங்களத்துப் போரேறி
> நாவலோ டென்றிசைக்கு நாலோதை — மாவலவன்
> கொல்யானை மேலிருத்தி கூற்றிசைத்தாற் போலுமே
> நல்யானைக் கோக்கிள்ளி நாடு'

என்ற செய்யுளை எடுத்துக் காட்டினர். இது முத்தொள்ளாயிரத்துள் சிறிது வேறுபாடத்துடன் உள்ளது.

இனி இவருரையைத் திருத்திப், புதுக்கிப், பெருக்கி விருத்தியுரை வகுத்த சிவஞான முனிவரும் இங்குக்காட்டியவாறே சங்கர நமச்சிவாயருரையைப் பெய்து, நாவல் எனற சொல்லுக்கு இப்பொருளும் இப்பொருள் வழக்கிற்கு இம்மேற்கோளுமே காட்டியுள்ளார். இவ்வாறு தம் விருத்தியுரையுள் அவருரையை உடன்பட்டு எடுத்துக்கொண்டாராயினும், இவர் தாம் பாடியருளிய காஞ்சிப்புராணத்துள் இக்காருத்திற் சிறிது வேறுபட, நாவல் என்ற சொற்பொருளை யாண்டுள்ளனர் என்பது அறிஞர் அறியத்தக்கது. அப்புராணத்துள்ள திரு நாட்டுப்படலத்துள்,

> 'நாவலோர் புனைந்துரைக்கு நலமுழுது மமைந்த வட நாகஞ் சூள்பொன்
> னுவலோ வெனவியப்ப வளர்செந்நெலரியருவ நாடித் தெண்ணீர்
> நாவலோ னுளங் களிப்பப் படியெடுக்குங் குண்டை நகருழவர் போல்வார்
> நாவலோ வென விளிப்பத் தொழுவரொரா நயந்தெய்தி வினையின் மூள்வார்

என இவர் பாடியிருத்தலின், 'நாவலோர்' என விளிப்பது சங்கர நமச்சிவாயர் கூறியவாறு நெற்போர் தெழிக்கும் பகட்டினங்களைத் துரப்பதொரு சொல்லாகாது செல்லரியும் பருவகாலத்தில் தொழுவரை நோக்கி விளிப்பது ஒரு சொல்லெனத் தெளிவாகக் கூறியிருத்தல் அறியலாகின்றது. ஆதலின் சிவஞான முனிவர்க்கு நன்னூல் விருத்தியுரையில் இச்சொற் பொருள் ஒருவாறுகவும், தம் காஞ்சிப் புராணத்தில் பிறிதொருவாறுகவும் அமைந்துள்ளது என அறிஞர் நன்குணர்ந்து கொள்ளலாம்.

பின்னர், நன்னூலுக்கு உரைவகுத்த முகவை, இராமாநுஜக் கவிராயர் இச்சூத்திரவுரையுள் 'நாவல் என்பது நெல்லின் போர் அடிப்போர் எருமைக்கடாக்களை அதட்டுவதோர் சொல்' என்று பொருளை எளிதின் விளங்கவழுதி இம்முத்தொள்ளாயிரச் செய்யுளையே மேற்கோள் காட்டியுள்ளார். இவர் சங்கர நமச்சிவாயர் கருத்தைத் தெளிவுறக் கூறியிருக்கிறார்.

இனி, இலக்கண விளக்கம் இயற்றிய திருவாரூர் வைத்தியநாத தேசிகர் தம் நூலுள் இக்கன்னூற் சூத்திரத்தையே போற்றி எடுத்துக்கொண் டுரைகூறிப் பின் விசேடவுரை எழுதுங்கால், 'ஆதி

யென்றதனுல் காவலும் முறையீடும் புலம்புங் குறிப்பிசை முதலியனவுங் கொள்க. காவல் — உழுவர் கெல்லரிதொழுவரை விளித்தல்' என்று பொருள் கூறி இச்செய்யுளையே சிறிது பாடவேறுபாட்டுடன் காட்டினர். இவருரையின்படி காவல் என்பது பகட்டினங்களைத் துரப்பதொரு சொல்லாகாது, உழுகர் தொழுவரை விளிப்பதொரு சொல்லென்பது தெரியக்கிடக்கின்றது.

•

இனி, இச்சூத்திரத்திற்குப் பண்டை உரைகாரராகிய மயிலைநாதர் விசேடவுரை எழுதுங்கால் 'ஆதி யென்றதனுல் காவலும் முறையீடும் புலம்பும் குறிப்பிசை முதலாயினவுங்கொள்க.....காவல் - போர்க்கழைத்தல்' என்றெழுதியுள்ளார். இவருரையின்படி காவல் என்பதன் பொருள் முற்காட்டிய புலமையாளர் நல்வருரையின் முற்றும் வேறுபட்டதென அறியலாம்.

இவ்வாறு இச்சொல்லுக்கு ஒவ்வோராசிரியரும் ஒவ்வொருவிதமா யுரையுரைத்துத் தம்முள் முரண்படுதலின் இவர்கள் இச்சொல்லின் பொருளைத்தெளிய உணராது அச்செய்யுட் சொற்போக்கால் தமக்குத் தோன்றிய பொருளைக் கூறினரெனவே கொள்ளக் கிடக்கின்றது. பிற்கால உரைகாரர்களாகிய இக்காலவரும் இவ்வாறு உரை கண்டதற்கு ஏதுஉண்டோவென ஆராயின், அவர்கள் கூற்றன்றி வேறு சான்றுகள் காணப்பட்டில.

இனி, சொற்பொருள் அறி கருவிநூல்களாகிய நிகண்டம், திவாகரம், முதலிய பழங்கால நிகண்டுகளிலாயினும் பிற்காலச் சூடாமணி நிகண்டிலாயினும் காவல் என்னும் சொல், அப்பெயரிய மரத்தைக் குறிக்கும் பொருட் பெயர்ச்சொல்லாக வழங்கப் பதிதலன்றி இவ்வுரை காரர்கள் கூறியவாறு செயல் பற்றிய பெயராக யாண்டும் ஓதப்படாமை யானும், உழுவர் நெற்போர் மேலேறி காவலோ என அழைத்தல் இக்காலாத்து யாண்டும் அறியப்படாமையானும், காவலோ எனக் கூவியழைத்தல் பகட்டினத்தைத் துரப்பதொரு சொல்லாதல் ஏலாது ஆதலினுனும், தொழுவரை விளித்தலுடைய சொல்லாதற்கும் பொருட் காரணம் புலப்படாமையானும், போர்மீது ஏறுதலும் யானைமீது இருத்தலும் ஒருவாறு தொழிலாலொப்புமை கொள்ளப்படுமாயினும், உழுவர் அழைப்பு ஒலியை அடுங்கூற்றின் கொடுங்கூவிளியோடு ஒப்பிட்டுரைத்தல் பொருந்தாமையானும் இவர்கள் உரைத்தபொருள் போலியாதல் தெளிதற்பாலது.

போர் என்ற சொல்லும் பண்டைவழக்கில் பொருதல் தொழிலைக் குறித்ததன்றி இஞ்ஞான்றை வழக்கிற் காணப்படுவதுபோல நெற் போரினைக் குறித்ததன்று என்பதும் ஈண்டு நோக்கிக்கொள்ளற்பாலது. என்னெனின் நெற்போர்களெல்லாம் பண்டைவழக்கில் 'போர்வு' என்றே வழங்கப்பட்டமை கீழ்வரும் எடுத்துக் காட்டுக்களால் அறியப்படும்.

"கயலார் நாரை போற்விற் சேக்குக்
தண்டுறை யூரன் கேண்மை"—(ஐங்-9).

"விண்டு வன்ன வெண்ணெற் போர்வீற்
கைவண் விரா அ னிருப்பை யன்ன"—(ஐங்-58)

என வரும் ஐங்குறுநூற்றுப் பாடலடிகளினும்,

"சோர்புயன் மூகிறலைவிலங்கித்தனில
மார்பு கொண்டார்த்தது நரல வண்சுரை
யார்வுறு பலாப் பழ மழித்த நீள்களம்
போர்விஞன் மலிக்துடன் பொலிக்த கீரவே"

என வரும் சிக்தாமணிச் செய்யுளாலும் இவ்வழக்கை நன்கு தெளிக.

போர்வு, போர்ப்புளவும் வழங்கியமை நிகண்டுகளான் அறியலாம். இப்போர்வு, போர்ப்பு ஆகிய சொற்கள் நெற்றுள் அரிகள் மேன்மேலிட்டு மூடப்படுதலால் போர்த்தல் - மூடுதல் என்ற பொருட்பேற்றால் போர்வு, போர்ப்பு எனப்படுதலாயின. மற்றுப் போர் என்னுஞ்சொல்லோ பொரு என்ற முதனிலையடியாப் பிறக்த பிறிதொரு சொல்லாகும். போர்வு, போர்ப்பு என்பன காலப்பழமையால் வழக்கில் வடிவுதேய்ந்து போர் என மருவி இஞ்ஞான்று நெற்போர், வைக்கோற்போர் என வழங்குதலான் இவ்வொப்புமையால் இவர்கள் உழவர், களம் என்பவற்றொடு இயைத்து இவ்வாறு பொருள் கொண்டனரெனவும் அறிதற்பாலது.

இனி, நன்னூலுக்கு முதற்கண் உரைவரைந்த மயிலைநாதர் இந்நாவல் என்னுஞ் சொல்லுக்குப் 'போர்க்கலைத்தல்' என்று பொருள் கூறினர் என்பது முன்காட்டப்பட்டது. அவர் அவ்வாறு பொருள் கூறியதற்குத் தக்க ஏதுக்கள் எவையேனும் உளவோ என்று நோக்குவாம். காலாயிர திவ்வியப் பிரபந்தத்துள் தொண்டரடிப்பொடி யாழ்வார் அருளிச்செய்த திருமாலையின் முதல் திருப்பாசுரமாகிய,

'காவலிற் புலனைவைத்துக் கலிதன்னைக் கடக்கப் பாய்ந்து
நாவலிட் டுழிதரு கின்றோம் நமன்தமர் தலைகண்மீதே
மூவுல குண்டுமிழ்ந்த முதல்வனின் னுமைங்கற்ற
ஆவலிப் புடைமை கண்டாயாக்கமா நகருளானே'

என்பதனுள் நாவல் என்பது போர்க்கலைத்தல் என்னும் பொருளில் வந்துள்ளது அறியப்படுகின்றது. இதற்கு வியாக்கியானம் எழுதிய பெரியவாச்சான் பிள்ளை என்பார் கீழ்வருமாறு விளக்கியுள்ளார்.

'பாப பலத்தையனுபவிப்பிக்கும் யமனுடைய தலையிலும் அவன் மணுட்டி தலையிலுமடியிட்டு ஸஞ்சரியாகின்றோம். கலிந்துபோக்த யமபடரை ஒரு பேரையிட்டுத்துகைக்கிறார் காணும்'. 'காவலோநாவல்' என்னும் 'ஆறையோஅறை' என்னும் தோற்றவர்கள் முன்னே ஜெயித்தவர் சொல்லுஞ் சொல்லு. முன்பு யமாதிகள் பேர் கேட்க அஞ்சிக்கிடக்தவர் திருநாமத்தை யண்டைகொண்ட பலத்தாலே யமன்

வாசலிலே சென்று தலையிலேயடிவைத்து அறைகூவுகிறீரிப்போது. வாலி பேர்கேட்க அஞ்சிச்சுரமடைந்துகிடந்த மகாராஜர் பெருமானே யண்டைகொண்ட பலத்தாலே இஷ்கிந்தாத்வாரத்திலே சென்று அறை கூவினுப்போல. அங்கு நாமிபலம். இங்கு நாமபலம். 'உழிதருகின்றேம்' என்றது தமிழிடுக்குத்தோற்ற நின்ற கிர்ப்பய ஸஞ்சாரம் பண்ணுகிறபடி. 'பாபத்துக்கு நீ யெழுதிவைத்த பட்டோலையைக் கொண்டுவரவில்லை யாகில் புறப்படாய்' என்றுப்போல இருக்கிறதாய்த்து" என இப்பேருரை காரரும் நாவல்—போருக்கழைத்தல் என்ற பொருளுடையதாகக் கூறினும் இவ்வழக்கிற்குப் பிரமாணமாக உள்ளது விளங்கிற்றிலது. அது பண்டைத் தமிழகத்து வழங்கிய சைன, பௌத்த சமயநூல் வழக்கிலிருந்து ஏற்பட்டதாகலாமெனத் தோன்றுகிறது. அவ்வாற்றுன் ஆயதை விளக்குவேம்.

சைன சமயநூலாகிய நீலகேசி என்பதனுள் குண்டலகேசி வாதச் சருக்கத்துள், சைன சமயத்தருமவுரை கேட்டுத் தெளிந்து அச்சமயத்தைத் தழுவி அச்சமயத்தொண்டிலீடுபட்ட நீலகேசி என்ற தவமாது, அக்காலத்தில் தன் சமயகெறியோடு மாறுபட்ட புத்தசமயப் புன்னெறியை யடிப்படுத்தல் தன்னறக் கருமமெனக் கொண்டாளாய்க் காம்பிலி நகரத்தில் குண்டலகேசி என்னும் பௌத்தசமய மாது பௌத்த சமயமல்லாத பிறகெறி தழுவியோரைச் சமயவாதப்போருக்கு அழைத்தற்பொருட்டு அந்நகர்க்காவலன் கடைமுகத்து ஒரு நாவற் கீழையைகட்டு வாதப்போருக்கு அழைத்தாள் என்றசெய்தியைத் தன் அவதிஞானத்தால் அறிந்து அம்மாதினை வெல்லுவதற்கு அரசனைக் கண்டி அவனுல் குண்டலகேசியை அழைப்பித்துச் சமயவாதம் செய்து அவளை வெற்றிகொண்டனள் என்ற வரலாறு காணப்படுகிறது. இதனுள் நாவற்கீழை கட்டு வாதப்போருக்கு அறைகூவியழைக்கின்ற வழக்குண்மையைக் காட்டுஞ்செய்யுட்களைக் கீழே தருகின்றோம். கண்டுகொள்க

மண்டலத்தி லேக்குவாள் மடித்தன தவதியாற்
கண்டனடான் காம்பிலிக் காவலன் கடைமுகத்தோர்
தண்டழைய பொழில்நாவற் சாகைகட் கோரைபெருக்
குண்டலகே சிப்பெயரைக் குறியாகவே கொண்டான் (குண் 15)

என்கருமம் வினவுதியே விலிங்கியரு ளென்னுடு
கன்குரைப்பார்த் தரல்வேண்டி நாவற்கொம் பிதுநட்டேன்
நன்கருமந் தீசெய்வாய் நுழைந்தறிவு மூடையையேல்
மன்பெரியான் றிருத்தையுண் மாற்றக்கா வெனச்சொன்னுன் (குண். 20)

அப்படித்தே யெனின்வாயி லடைப்பொழிக யாணேதே
ரெப்படியு மியங்குகநும் மிறைமகற்கு மிசைமினென்
றிப்படியா விலையிசையா வீலநாவ லிருத்திட்டான்
துப்புரிபூ ணினதோண்ட னுயில்கொண்ட னுவர்வாயான் (குண் 21)

கட்டுரை பலசொல்லிக் காவல்நெடுங் கடைநாவலீமுன்
னட்டிவணசரிடை நகைசெய்து புகுந்தவிந் நன்னுதலே
லட்டிகொள் பறைகொட்டி வழுவுரை பலசொல்லி வாரலென்று
பெட்டன பலசெய்து பெருநகர் வாயிலைப் புறப்படுத்தார் (குண் 79)

ஈண்டுக்காட்டிய பல செய்யுட்களின் பொருளால், **நாவலிட்டுப்** போருக்கு அறைகூவுதல் பண்டைவழக்கென்பது தெற்றென விளங்குவது காண்க. தேரிகாதை எனவழங்கும் பௌத்தசமய நூலுள்ளும் குண்டலகேசியின் வாழ்க்கை வரலாற்றுப்பகுதியுள் இவ்வழக்குண்மை கூறப்படுகின்றது. இக்குண்டலகேசியார் புத்தபெருமான் காலத்தில் அவரைத் தலைப்படுதற்கு முன்பு சிராவஸ்தி நகரில் அவர்தலைமைத் தொண்டனாகிய சாரிபுத்தன்பால் இவ்வாறே **நாவல்** கட்டுவாதப்போர் நிகழ்த்தித் தோல்வியுற்றுப் பின்னர் புத்தபெருமானைத் தலைப்பட்டு மெய்ப்பொருள் தேர்ந்து விளங்கினரென்று தெரிகின்றது. இத்தவ மாதர் வரலாற்றைக் கூறுவதாகிய குண்டலகேசி என்ற தமிழ்க் காப்பியமும் நீலகேசியாகிய தமிழ்க்காப்பியமும் தமிழகத்து விளக்க முற்ற பண்டைக்கால முதல் இச் '**நாவல்**' என்னும் சொல் அறைகூவிப் போருக்கழைக்கும் பொருட்குறிப்புடையதாக நிலவியதென்று தெளிதற் பாலது. இவ்வழக்குநோக்கியே நம் தமிழகத்து வைணவ சமயத்துப் பெரியாராகிய தொண்டரடிப் பொடியாழ்வார் திருமாலியுள் 'நாவலிட்டுழிதருகின்றோரும் நமன்தமர் தலைகள்மீதே' என்றுபாடியருளினரென்று கொள்ளலாம்.

இனி 'நாவல்' என்னும் சொல்லே இப்பொருட்சார்பில் வழங்கிய பண்டைத்தனிச்செய்யுள் ஒன்றினையும் ஈண்டு உடன்நோக்கி இவ்வழக்கு வலிமைதேர்ந்துகொள்ளுக. தமிழ் **நாவலர்** சரிதையில் 'பழைய னூரார் பழிதீர்ந்த திக்குழி அவியாதெரிய மூவேக்தரும் வந்துபார்த்துப் பாடியவை' என்ற தலைப்பின்கீழ்ச் சேரன்பாடியதாக உள்ள தனிச் செய்யுள்,

'யாவரே காராளர் யாவ ரிணையாவார்
நாவலோ நாவலோ நாவலோ—கோவைப்
பொருப்பால வித்தார்க்கும் போதுமே யுண்மை
கெருப்பா லளித்தார்க்கு கேர்'

என்பது இதனுள் 'மெய்ம்மையை கெருப்பிற் புக்குப் போற்றி யளித்தோர் களாகிய பழையனூர் வேளாண் தலைமக்கள் எழுபதின்மருக்கும் (மெய்யுரை நிறுத்தலில்) ஒப்பு ஆதற்குக் கடலை மலையால் அடைத் தடக்கிய இராமனுக்கும் மெய்ம்மைப் பண்பு போதுமோ' என்று அறைகூவி உவகையாற் கலுழ்கின்றேம் என்ற கருத்து அமைந்திருத்தல் காண்க. 'நாவலோ' என்பது முக்கால் அடுக்கப்பெற்றமை உவகைக் கலுழ்ச்சியைப் புலப்படுத்தும்.

இனி, தெய்வக் கவியாகிய கம்பநாடர் பாடியருளிய ஏரெழுபதின்கண் உள்ள,

> "நாவலோ நாவலென நாடறிய முறையிட்ட
> ஏவலோர் போர்க்களத்திலெதிர் நிற்பர் முத்தமிழ்தேர்
> பாவலோ ரிசைவல்லோர் பற்றுடைய பதினெண்மர்
> காவலோ ரெல்லாருங் கையேற்கும் பொருட்டாலே"

என்னும் இனிய செய்யுள், இந்நாவலிட்டொலி நாட்டினர்யாவரும் அறியுமாறு நெற்போர்க்களத்தில் ஏவல் மக்கள் செய்யும் முறையீடு என்பதனையும், அஃது அறிந்தவாறே தமிழ்தேர் பாவலர், இசை வல்லோர், தலைமக்கள் பாற் பற்றுடைய பதினெண்குடிமக்கள், காவலோர் எல்லோரும் தம் கைகளால் நெற்கொடையேற்கும் பொருட்டால் அக்களத்தின்கண் எதிர்நிற்பர் என்பதனையும் புலப் படுத்துகின்றது. ஈண்டு 'நாவல்' என்பது வேளாண் தலைமக்கள் கொடைமகிழ் கம்பலையை யுணர்த்துகின்றமையின், கன்னூற் சூத்திர வுரைகாரர் கால்வர் கருத்தும் இதனின் வேறுபடாதலையும் கோக்கிக் கொள்க. மற்று, இக்நூலுக்கு உரையெழுதிய கச்சித்தலைச் செங்கோட்டத்துவஞர் மகனர் நாகந்தையார் என்பார் 'நாவல் என்பது பண்ணையாட்கள் பண்ணைக் கண்ணே பயிலுமோர் குறியீட்டுச் சொல்' என்றெழுதியதும் இச்செய்யுட் கருத்தொடு ஒன்றுமை கண்டு கொள்க.

ஈண்டு இச்சொல்வழக்கைப் பண்டைச் செய்யுட்களைத் துணைக் கொண்டு ஆய்ந்ததன் பயனாக, இது போருக்கு அறைகூவுதல் வெற்றி மகிழ்வுரை, பரிசிற் கொடைக்கம்பலை என்ற பொருளிற் பயிலுதல் காண்கின்றோம். இவை ஒன்றோடொன்று காரணகாரியத்தொடர்பு கொண்டு நிகழ்தலின், அறைகூவுதற் பொருளதாகிய நாவல்என்னும் சொல் ஆகுபெயரிலக்கண வழக்கரல் பொருண்மாற்றம்பெற்றுவழங்கிய தென்று அறியப்படும்.

மற்றிது போர்வினைக்கும் ஏர்வினைக்கும் பொதுமையிற் பயில்வது என்னையோவெனின், அவ்வியைபினை ஈண்டுச் சிறிது விளக்குதும். ஆசிரியர் தொல்காப்பியனர் வாகைத்திணைத்துறைகளை வகுத்தெடுத் துரைப்புழி 'ஏரோர் களவழியன்றிக் களவழித்தேரோர் தோற்றிய வென்றியும்' என்று சூத்திரித்து ஏரோர் களவழிச்செய்தியும் போரோர் களவழிச்செய்தியும் ஒப்புமைபெற்று நடைபெறும் வழக்கினை வாகை வென்றியாகக் குறித்திட்டார். இச்சூத்திரப்பகுதிக்கு உரை யாளராகிய நச்சினர்க்கினியர் 'நெற்கதிரைக் கொன்று களத்திற் குவித்துப் போரழித்து அதனிறுத்துச் சுற்றத்தோடு நுகர்வதற்கு முன்னே கடவுட்பலிகொடுத்துப் பின்னர் பரிசிலாளர் முகந்து கொள வரிசையின் அளிக்குமாறுபோல, அரசனும் நாற்படையையும் கொன்று களத்திற்குவித்து எருது களிறாக வாள்மடலேச்சி அதனிறுத்துப் பிணக்குவையை நிணச்சோறாக்கூடி உதிரப்பேருலக்கண்

ஏற்றி ஈனுவெண்மாள் இடக்குழக்கட்ட கூழ்ப்பலியைப் பலியாகக் கொடுத்து எஞ்சின்ற யாணுகுதிரைகளையும் ஆண்டுப் பெற்ற பலவற்றையும் பரிசிலர் முகந்துகொள்ளக் கொடுத்தலாம்' என்றுவிளக்கி ஏருழவர் போர்க்களத்துத் தொழிலோடு வாளுழவர் போர்க்களத்துத் தொழிலை ஒப்பிட்டுள்ளார் என்பதும் கண்டுகொள்க.

இதனுள் ஏர்க்களவழிப் பரிசில் ஈதலும், போர்க்களவழிப் பரிசில் ஈதலும் ஒப்பப்பொருந்தி நிலவியவழக்கை யுட்கொண்டே இம் முத்தொள்ளாயிரச் செய்யுளை அக்நூலாசிரியர் பாடினரெனல்வேண்டும். ஆகவே இவ்விரு கருத்துக்கும் பொருந்தவே உடனிலைச் சிலேடை வகையால் இதற்குப் பொருள்கொள்ளவேண்டுமென அறிக. அவ்வாறு உரைப்பின் இதன் பொருள் 'கல்லயாணப்படையையுடைய கோக்கிள்ளியின் சோழகாட்டின்கண், களங்காவலுடைய வாளுழவர் கடியபொருகளத்திற் போர்மேற்கொண்டு வென்றிக்களிப்பான் காவலோ வென்று பரிசிலாளரையழைக்கும் அவ்வென்றி காளோசையும், நெற் களம் காவலுடைய ஏருழவர் நெற்போர் மீதேறிப் பரிசில்வாணரை யழைக்கும் அங்காண் மகிழொலியும், மாவலவன் யாணைமேலிருந்து கூற்றெழித்தாற் போன்றிருந்தது' என்று அமைத்து சிறத்துகாட்டு மெனத்தெளிக. ஆதலின் இவ்வினிய முத்தொள்ளாயிரச்செய்யுள் புறப்பொருளமைதியாய் வாகைத்திணைக்கண் களவழிவென்றித் துறைக் கருத்துடையதாகப் பாடப்பட்டதென்று கன்னூலுரைகாரர்கள் உய்த் துணராது தத்தமக்குத்தோன்றியவாறு பொருள்கூறியது முறைமறத் தறைதலாயிற்று என்று தெருட்டியுரைத்தாம்.

இனி, தெய்வக்கணிஞராகிய கும்பநாடரும், தொல்வழக்கறியாது நான்முறை மறந்தறைந்ததற்கும் ஒருசான்றுகாட்டுதும் அறிக. வன்பரணர் என்னும் பண்டைத் தண்டமிழ்ப்புலவர் நள்ளி என்னும் பெருவள்ளலைக்கண்டு அவன் கொடைத்திறத்தைப் புகழுங்கால்பாடிய,

நள்ளி வாழியோ நள்ளி! நள்ளென்
மாலை மருதம் பண்ணிக் காலைக்
கைவிழி மருங்கிற் செவ்வழி பண்ணி
வரவெமர் மறந்தன ரதுநீ
புரவுக் கடன்பூண்ட வண்மையானே

என்ற அரிய இனியபாடல் புறநானூற்றில் உள்ளது அறிஞர் அறிவர். உரைகாரர் இதன்பொருளை விளக்குமிடத்து 'நள்ளி வாழ்வயாக; நள்ளி நள்ளென்னும் ஓசையையுடைய மாலைப்பொழுதின் கண்ணே மருதமென்கிற பண்ணைவாசித்துக் காலைப்பொழுதின்கண் கைவழியாகிய யாழின்கண் செவ்வழி யென்னும் பண்ணை வாசித்து வாலாற்று முறைமையை எம்முடைய பாணர் சாதியிலுள்ளோர் மறந்தார். அவ்வாறு மறந்தது, நீ கொடுத்துஞ்சும்புதலைக் கடனுக மேற்கொண்ட வண்மையான்' என்று எழுதியுள்ளார். அதனால் தமிழகத்தில் இசை பாடும் வாலாற்று முறைமையில் மருதம் காலைப்பொழுதிற் பாடுதற்குரிய

பண்ணென்பதும், செவ்வழி மாலைப்பொழுதிற் பாடுதற்குரிய பண் ணென்பதும், தெற்றெனப் புலப்படுகின்றன. இக்கருத்துக்கொப்பவே புறநானூற்றுள் பிறிதொரு பாடலுள்,

அருளா யாகலோ கொடிதே யிருள்வரச்
சேயாழ் செவ்வழி பண்ணி யாழநின்
காரெதிர் கானம் பாடினே மாக (144)

எனச்செவ்வழி மாலையிற் பாடுதற்குரியதெனக் கூறப்பட்டுளது. பெருங்கதை உஞ்சைக்காண்டம் மாலைப்புலம்பல் என்ற பகுதியுள்ளும்,

சேக்கை கல்யாழ் செவ்வழி பண்ணிச்
செறிவிரற் பாணிபினறி வாப்பாடவும்
அஞ்ஞ றக்கை இவப்ப நல்லோர்
துஞ்சின் வெண்ஞிழித்துக் கடைநிமிடி
யுள்ளிழுது நீஇய வொள்ளடர்ப் பாண்டிற்
றிரிதலைக் கொளீஇ யெரிதரு மாலை

ஈண்டுச்சொல்லியவாறு செவ்வழிமாலைக் கேயுரிய தெனக் கூறியிருப்ப தறிந்துகொள்ளுக

மதுரைக் காஞ்சியினின்றும் கீழ்க்காட்டிய அடிகள் இவ்வழக்கை வலியுறுத்துதல் கண்டுகொள்க.

நிவவுமெய்ந் நிறத்தச் செவ்வழி பண்ணிக்
குரல்புணர் நல்யாழ் முழவோ டொன்றி
நண்ணீ ராகுளி யிரட்டப் பலவுடன்
ஒண்கடார் விளக்க முத்துற மடையொடு
நன்மா மயிலின் மென்மெல வியலி
... ...
... ...
முக்கையா மஞ்சென்ற பின்றை எனச்செவ்வழி

மாலைப்பொழுதிற் குரித்தாதல் தெளிவுறக்காட்டியது அறிக.

இனி மருதப்பண் காலைப்பொழுதிற்குரியதென்பது

"ஓத வந்தணர் வேதம் பாடச்
சீரினிது கொண்டு சம்பினியியக்கி
யாழோர் மருதம் பண்ண ... ...
... ...
... ...
புலர்ந்து விரிவிடியலெய்த என்றமதுரைக்காஞ்சியடிகளானும்,

மங்கையர் பண்ணிய மருத யாழ் குழல்
நங்கையைப் பிரியுமிந் நம்பி யின்றென
அங்கதற் கிரங்கின வாரும் பேதுறக்
கங்குல்போய் காட்டகன் றெழித்தென்பவே என்ற

சிந்தாமணிப் பாடலானும் நன்குபுலனாகும்.

இங்ஙனம் பண் பாடுவதில் தமிழகத்து வரலாற்று முறையால் செவ்வழி மரபிற் பொழுதிற்கே யுரித்தாக அமைக்திருப்பவும் தெய்வக் கவிஞராகிய கம்ப நாடர் தாம் பாடியருளிய இராமாவதாரப் பெருங் காப்பியத்தில் இந்நான்முறைமைமறந்து

"குயிலினம் வதுவை செய்யக் கொம்பிடைக் குனிக்கு மஞ்ஞை
அயில் விழி மகளிராடி மாங்கினுக் கழகுசெய்யப்
பயில்கிறையரச வன்னம் பன்பலர்ப் பள்ளி கின்றும்
துயிலெழத் தும்பி காலைச் செவ்வழி முரல்வ சோலை"

என்று காட்டுப் படலத்துள் பாடினர். இனி இப்பெரு நூலுக்கு அண்மைக் காலத்தில் அரிதின் முயன்று உரையெழுதிப் பதிப்பித்த திரு. வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியாவர்களும் இம்மரபு பாட்டினை உணராது 'செவ்வழி-வைகறையிற் பாடும் பண்' என்று எழுதியுள்ளார்கள். ஈண்டுக் காட்டியவாறு நூலாசிரியரும் உரையாசிரியரும் முறைமைமறந்தறைந்தமை அறிந்துகொள்க.

இனி இக்காலத்து கல்லறிஞருட் சிலரும் இவ்வாறு முறைமறந்தறைந்தவற்றுட் சிலவற்றை எடுத்துக்காட்டுதும். ஈண்டிவற்றை எடுத்துக் காட்டுமாற்றுல் இக்கல்லாசிரியர்களின் தமிழ்ப்பெருக் தொண்டினையேனும் பெரும்புலமையையேனும் உளத்தாற் போற்று துரைக்கின்ற மென்றெண்ணற்க. ஒரோவழிநேர்ந்த வழுக்களைக்களைந்து தமிழ்கற்பார் செம்பொருளுணர்ச்சிபெறும்பயன் விழைந்துகுறித்தலன்றி வேறு கருத்திலது என அறிஞரறியுமாறு பணிவுடன் வேண்டுகின்றும்.

கற்றிணை யென்னும் தண்டமிழ் அகப்பொருட்டொகைநூலை முதன்முதல் தெடிதுகன்கு ஆய்ந்துபோற்றற்குரிய புத்துரைதந்து தமிழறி சான்றோர் தாம் மகிழ்கொள்ள நந்தமிழுலகிற்கு கல்விருந்தென்ன கொடுத்து கிலைப்புகழ் கொண்ட புலவர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயரவர்கள் தாம் பதிப்பித்த அந்நூலுட் சிலவிடத்து முறைமைமறந்தறைந்துள்ளன ரென்பதனைக் காட்டுகின்றேம்.

கற்றிணை-120-வது பாடல் மாங்குடிகிழார் பாடியது :

"தடமருப் பெருமை மடநடைக் குழவி
தண்டொறும் யாத்த காண்டகு நல்லில்
தொடுக்குழை பெய்த செஞ்செலீப் பேதை
சிறுதாழ் செறித்த மெல்விரல் சேப்ப
வாலை யிரந்தடி வல்லிதின் வகைஇப்
புகையுண் டமாத்த கண்ண டகைபெறப்
பிறைநுதற் பொறித்த சிறுநுண் பல்லிய
ரத்துகிற் றலையிற்றடையின ணப்புலம்
தட்டி லோளே யம்மா வரிவை
யெமக்கே, வருக இல்லிருந்தே சிவப்பான்று
சிறியமூள்ளெயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகங்காண் கம்மே" என்பது.

இதற்கு உரைவரைந்த ஐயாவர்கள் இதன் ஐந்தாவது அடியினை 'வாழையிர்ந்தடி வல்லிதின் வகைஇ' எனப்பாடங்கொண்டு, 'வாழை யிலையைக் கொய்துவந்து அதன் அடிக்காம்பு பருத்திருத்தலின் அதனை வகிர்ந்து பரிகலமமைத்து' என்றெழுதியுள்ளார். ஆனால் இச்செய்யுளையே நச்சினர்க்கினியர் தொல்காப்பியப் பொருளதிகாரம் அகத்திணையியல் 24-ம் சூத்திரம் ஆகிய,

"ஏவன் மரபி னேனோரு மூரிய
ராகிய நிலைமை யவரு மன்னர்" என்பதனுரையில்,

தலைவர் தலைவியர் இன்ன இன்ன வருணத்தவர் என்று ஆதாரங்கூறி விளக்குகின்றுழி இதன் ஐந்தாவது அடியின் பாடத்தை 'வாளையிர்ந்தடி வல்லிதின் வகைஇ' என்று கொண்டு 'வாளையிர்ந்தடி வகைஇ' என்றலின் வேளாண் வருணமாயிற்று, என்றுரைத்தார். இவர் கருத்தின்படி அவ்வடிக்கு 'வாளைமீனின் ஈரிய தசையை வல்லிதின் வகிர்ந்து' என்றே பொருள் கோடல் வேண்டுமென்பது புலனும். என்னெனின், 'தடி' என்னும் சொல் சங்ககாலவழக்கில் 'என்பொடு தடி படுவழியெல்லாமெமக்கியுமன்னே'-(புறம்-235.) 'புலவுகாற்றத்த பைந்தடி, பூநாற்றத்த புகைகொளினி''—புறம் (14) என்பவற்றுட் போலத் 'தசை' என்ற பொருளதாய் வழங்கியதன்றி 'இலையடிக்காம்பு' என்ற பெருளில் வழங்கிற்றில தென்று அறியலாம். மேலும் மெல்லிய வாழைக்குருத்தையரியுங்கால் மெல்விரல் சேத்தலின்றி வலியவாளைமீனை நெருக்கிப் பற்றிக்கொண்டு கைவன்மையின் வகிர்தலின் கண்ணேயே விரல் சேத்தலுண்மையானும் இதுவே பாடமும் பொருளுமாமென்பது கண்ணுணரப்படும்.

வேளாண் குடித்தலைமக்கள் அக்காலத்து ஊன் மீன் இவற்றுலைய உணவுட்கொண்டு வாழ்ந்தனரென்பதும் ஈண்டு நோக்கிக் கொள்ளுக. புறநானூற்றுள்,

"கானுறை வாழ்க்கைக் கதநாய்வே ட்டுவன்
மான்றசை சொரிந்த வட்டியு மாய்மகன்
தயிர்கொடு வந்த தசும்பு நிறைய
எரின் வாழ்நர் பேரிலரிவையர்
குனகீழ் லினேந்த களக்கொள்வெண்ணெ
முகந்தனர் கொடுப்ப வுவந்தனர் பெயரும்
தென்னம் பொருப்ப னன்னாட்டுள்ளும்" என்று

வருவதனுள் அக்காலத்துப்பாண்டிநாட்டு வேளாண்குடித்தலைமக்கள் வேட்டுவன் வேட்டையாற்பெற்ற மான்றசையைக் கொண்டுவந்து கொடுக்க அதனை யுணவிற்குப் பெற்றுக்கொண்டு அத்தசைகொண்டு வந்த கடகப்பெட்டி நிறைய வெண்ணெல்லைக் கொடுத்தனுப்புவர் என்ற செய்தி குறித்துள்ளது காண்க.

இனி, ஐஞ்ஞூறு நூற்றுள்ளும்,

முன்னெயிற்றுப் பாண்மக ளின்கெடிறு சொரிந்த
அகன்பெரு வட்டி நிறைய மனையோள்
அரிகாற் பெரும்பயறு நிறைக்குமூர (47) எனவும்,

வலேவல் பாண்மகன் வாலெயிற்று மடமகன்
வராஅல் சொரிந்த வட்டியுண் மனையோள்
யாண்டுகழி வெண்ணெனிறைக்கு மூர (48) எனவும்

அஞ்சிலோதி யசைநடைப் பாண்மகன்
சின்மீன் சொரிந்த பன்னெற்பெறூஉம்
யாணரூர (49) எனவும்

வந்தவற்றுள் அக்குடியினர் மீன் உணவு உட்கொள்ளும் வழக்குடைய ராயிருந்தனரென்பது புலப்படுகின்றது. இக்காலத்து வேளாண்குடித் தலைமக்கள் சைவ வைணவ சமய நல்லொழுக்கத்திற் றலைப் பட்டிருத்தல் போல அக்காலத்தாரில்லாமையால் அக்கால வழக்கத்திற் கொப்ப அவர்கள் அவ்வகை உணவு கொள்ளும் தன்மையராயிருந்தமையறிக்தே நச்சினார்க்கினியர் அங்ஙனம் உரைக்குறிப்பிலுரைத்துப் போந்தார் என கோக்கிக் கொள்க.

ஐயரவர்கள் தம்முரையுள் நச்சினார்க்கினியர் இவ்வாறு ஆதாரங் காட்டி எழுதியதை ஆண்டுப் புலப்படுத்தாது பிறிதுரை வகுத்துப் பிழைபட்டதும் முறை மறந்தறைதலே யாம் எனத் தெள்ளிதிற்கண்டு திறம்படவுணர்க.

இனி, அக்கற்றிணை நூலுள் 280-வதுபாட்டின்கண்வரும்,

"கொக்கினுக் கொழிந்த நீம்பழங் கொக்கின்
கூம்புவிலே யண்ண முகைய வாம்பற்
றூங்குநீர்க் குட்டத்துத் தடுமென வீழும்
தண்டுறை யூரன்" என்ற

அடிகளுக்கு ஐயரவர்கள் உரையெழுதுங்கால் முதலடிக்கு 'கொக்கு வந்திருந்தலினால் இனி அசைதலின் உதிர்ந்த மாங்கனியானது' என வரைந்தார்கள். பின்னர் சின்னட்கு முன்னர் பரணர் பாட்டுக்களைப் பல்லாற்றானாய்ந்து சென்னைப் பல்கலைக்கழக ஆராய்ச்சித்துறை நூலாக வெளியிட்ட வித்துவான் திரு. வேங்கடராஜுலு ரெட்டியாரவர்கள், தம் 'பரணர்' என்னும் நூலுள் 44-ம் பக்கத்திற் கீழ்க் கண்டவாறு எழுதி ஐயரவர்களின் கற்றிணையுரையிற் பிழைகாட்டித் திருத்தம் கூறியிருக்கிறார்கள். அவர்கள் உரைத்திருத்தக்குறிப்பு வருமாறு :—

"கொக்கினுக் கொழிந்த நீம்பழம் கொக்கின்.....யீழும்" என்னும் பகுதியில் முதலடிக்கு 'கொக்குவந்திருந்ததனால் இனி அசைதலின் உதிர்ந்த இனிய மாங்கனியானது' என்று உரையெழுதப் பட்டுள்ளது. ஈண்டு 'கொக்கு' என்பதற்கு 'மாமரம்' என்று பொருள் கொள்ளுதல் தகுதி. கொக்கு என்பது 'குங்கு' என்னும் துளுச்சொ

சொல்லின் திரிபு. **கொக்கின் உக்கு ஒழிந்த தீம்பழம்** மாமரத் தினின்று உதிர்ந்து ஒழிந்த இனிய பழம் என்க என்பது அவர்கள் திருத்த உரை. இவ்விருவரும் முன்னோரிலக்கண நூற்களில், இத்தப்பாட்டின் முதலடியாகிய 'கொக்கினுக்கிழிந்த தீம்பழம்' என்பது மேற்கோளாய்க் காட்டப்பட்டுள்ளதை அறியாமையால் வந்த இழுக்கினை எண்டு எடுத்துக் காட்டுகின்றோம்.

பிரயோக விவேக நூலாசிரியர் காரக படலத்துள் உருபு மயக் கத்தின் இலக்கணத்தை யுரைத்துக் கிழ்வருத்துக் காட்டுரைக்கின் றுழி, 'கொக்கினுக்கிழிந்த தீம்பழம், 'நாகுவேயொடு கருவிங்குதோள்' இவற்றுள்

ளான்கும் மூன்றும் ஐந்தாவதன் பொருட்டாயும் இரண்டாவதன் பொருட்டாயும் நின்றன'' என்றெழுதியுள்ளார். இனி, தொல்காப்பியச் சொல்லதிகார வேற்றுமை மயங்கியலுள்வரும்,

''யாதனுருபிற் கூறிற்றாயினும்
பொருள்சென் மருங்கின் வேற்றுமை சாரும்'' என்ற

சூத்திரத்திற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதிய உரையில் 'கொக்கினுக்கொழிந்த தீம்பழம் கொக்கின்' என்புழியுங் கொக்கினின் றுமென ஐந்தாவதன் பொருளாயிற்று' என்று விளக்கியுள்ளார். இவ்விருவரும் இவ்வாறு இந்த அடியைக்காட்டி இலக்கண முறையாற் பொருள் விளக்கியிருத்தலே அறியின் இத்தொடர் 'மாமரத்தினின்று விழுந்த இனிய பழம்' என்று வெளிதிற்பொருள் படுதல் தெள்ளிதின் விளங்கும். இவ்விருவரும் இவ்வுரைகாரர் கருத்தையறியாமையின் இவருள் **ஐயாவர்கள்** பிழைபடவுரை செய்தும், திரு. **ரெட்டியார் வர்கள்** 'கொக்கின் உக்கு ஒழிந்த தீம்பழம்' என வேண்டாவாற்றால் பிரித்து வலிந்து பொருள் கொண்டும் வழிஇனிஞர்கள் என கன்குணரலாம். ஆகவே இவ்விருபெரும் புலவர்களும் முறை மறந் தறைந்தமை கண்டுகொள்க.

இனி, சென்னைப் பல்கலைக் கழக ஆராய்ச்சித்துறை விரிவுரை யாளராகிய திருவாளர் R. P. **சேதுப்பிள்ளையவர்கள்** B. A., B. L., சில்லாண்டுகளுக்குமுன்னர் தம்மினிய அழகிய தண்டமிழ்நடையில் '**சிலப்பதிகார விளக்கம்**' என்றொரு நூல் வெளியிட்டுள்ளார்கள். அதில் வஞ்சிக்காண்டத்து வரலாறுரைக்கும் பகுதியில் 65-ம் பக்கத்தில் பின்வருமாறு எழுதியுள்ளார்கள்.

'அப்பால் சேரமன்னவன் தன்னுடனிருந்த அரசியைப்பார்த்து, 'காதலி, உயிருடன் சென்றபாண்டிமாதேவியின் கற்பையும், செயிருடன் வந்த கண்ணகியின் கற்பையும் சீர்தூக்கிப் பார்த்து எவர் நலம் சிறிய தென்று கூறுக' என்று வேண்டினன். அதற்கு அறிவால் சிறந்த அவ்வரசி, இருபெரும் மாதர் கற்பின் ஏற்றம் தாழ்வு உரைக்க மனமற்ற வளாய் 'தம் காதலர் இறந்த துயரம் பொறுக்கமாட்டாமல் இவ்வுலக வாழ்க்கையை நீத்த அவ்விருமாதரும் பேரின்பப்

பெருவாழ்வை அடைவார்களாக; ஆயினும் நமது காடடைந்த பத்தினிக் கடவுளாகிய கண்ணகியை நாம் போற்றி வழிபடவேண்டும்' என்று கூறினள். உடனே அரசன் தனது அருகேயிருந்த நூலறி புலவரை நோக்கினன் ... . ' என்றெழுதியுள்ளார்கள். இத்தப் பகுதிக்குரிய சிலப்பதிகாரச் செய்யுள் அடிகளை எண்டுத்தந்துகாட்டி இவ்வுரை நடைப்பகுதி எவ்வளவில் மூலத்துடன் கருத்து ஒத்துள்ள தென்று அறிஞர் அறிந்து கொள்ளுமாறு விடுக்கின்றோம். அச்செய்யுளடிகள் வருமாறு:—

'உயிருடன் சென்ற வொருமக டன்னினுஞ்
செயிருடன் வக்தவிச் சேயிழை தன்னினு
கன்னுதல்! வியக்கு நலத்தோ ரியாரென
மன்னவ னுரைப்ப மாபெருந் தேவி
காதலன் றுன்பங் காணுது கழிந்த
மாதரோ பெருந்திரு வுறுக வானகத்
தத்திறற் நிற்கம் மஃறு டடைந்தவிப்
பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டுமென' என்பவை.

இவற்றுள் ஐந்தாவது ஆறுவது அடிகளிற் கண்ட சொற்களுக்கு விளக்கவுரை செய்த அரும்பதவுரைகாரர், ''காதலன் - பாண்டியன்; மாதர்; அவன் தேவி'' என்று குறித்துப்பொருளெழுதி, மேல்பொருள் தெளிவுறுத்துவார், ''அவள் வானிலே திருவுறுக; அதுகூறவேண்டா; இவளைக் கொண்டாடவேண்டுமென்று தேவி சொல்ல'' என்று விளக்கி எழுதியுள்ளார்.

சிலப்பதிகாரத்தின் செய்யுளடிகளும் அவற்றின் பொருளும் இவ்வாறு தெளிவாயிருப்பன ஆகவும், நம் பிள்ளையவர்கள் ''அறிவால் சிறக்த அவ்வரசி இருபெரும் மாதர் கற்பின் ஏற்றம் தாழ்வு உரைக்க மனமற்றவளாய்'' என்று ஒரு கருத்தைத் தாம் புதுமையிற் கற்பித்துரைத்துக்கொண்டு மேல், ''**தம் காதலர் இறந்த துயரம் பொறுக்கமாட்டாமல் இவ்வுலக வாழ்க்கையை நீத்த அவ்விரு மாதரும்** பேரின்பப் பெருவாழ்வை அடைவார்களாக'' என்று உரை நடையிற் பொருள்விரித்தெழுதியுள்ளார்கள். இவ்வுரை அரும்பதவுரைகாரர் கருத்துக்கு முற்றும மாறுபட்டதென உணர்க: இவர்கள் 'காதலன்' என்ற ஆண்பாலொருமையிற்றுச் சொல்லுக்குக் 'காதலர்' என்ற பலர்பாற் சொற்பொருள் எவ்வாறு கொண்டனரோ? இனங்கோவடிகள் 'காதலன் துன்பங்காணுது கழிந்த மாதர் (கோப்பெருந்தேவி) வானகத்துப் பெருந்திருவுறுக; அத்திறம் ஒழிய; நம் நாடு அடைந்த இப்பத்தினிக்கடவுளைப் பரசல் வேண்டும்' என்று அரசி தெளியவுரைத்ததாக, இருவர் செய்திகளையும் நன்கு பிரிவுறுத்து வேறுபடவுரைத்துள்ள நமதறியாதுபிள்ளையவர்கள் 'அவ்விருமாதரும் பேரின்பப்பெருவாழ்வடைவார்களாக' என்று திரியப்பொருள் கூறியது பெரு வியப்பே. இவ்வாறு இவர்கள் முறைமறந்து காட்டித்தெருட்டிய துணர்ந்து கொள்க.

இனி, சேது சமஸ்தான மகா வித்துவானாகிய திரு. உ. வே. சா. இராகவையங்காரவர்கள் பல ஆண்டுகளுக்கு முன் 'நல்லிசைப் புலமை மெல்லியலார்' என்ற உரைநடைநூல் ஒன்று எழுதித் தமிழகத்துப்புலமைசான்ற பெண்பாலார்களின் வரலாறுகளைத் தொகுத்துரைத்துள்ளார்கள். இவர்கள் தம்துண்ணறிவால் பல ஆராய்ச்சிப் பொருள்களை ஒருங்கு தொகுத்துக் கடலமுதம்போன்று திரட்டிக் கொடுத்தார்கள் ஆயினும் அந்நூற்சிறப்பிற்கு ஒருகுறையாக ஒரு பிழை இதுகாறும் திருத்தம்பெறாது இருக்கின்றது வருந்தற்பாலதென்று காட்டி இக்கட்டுரையை முடிக்கின்றும்.

இவர்கள் பூதப்பாண்டியனார் திருத்தேவியார் வரலாற்றை ஆராய்ந்துரைக்கப் புக்குப் பாண்டியர் குடியிற்றோன்றியோரின் சிறப்புரைத்துப் பூதப்பாண்டியன் செய்யுளியற்றும் ஆற்றலுடையனு தலைக் குறிக்குமுகத்தான் 'மடங்கலிற்சினை இ மடங்காவுள்ளத் தடங் காத்தானை வேந்தர்.' என்றற்றொடக்கமுடைய செய்யுளைஎடுத்துக்காட்டி 'என்னும் பாட்டு இவர் காதலனது வீரம்பற்றிய வஞ்சின வார்த்தை யாகலும் காண்க' என்று முடித்தார். பின்னர் அப்பாண்டியன் தேவியாகிய பெருங்கோப்பெண்டு அவனிறந்தபோது தீப்பாய்வாள் சொல்லியதாகிய 'பல் சான்றீரே பல் சான்றீரே' என்ற பாடலை எடுத்துக்கூறி 'இப்பாட்டொன்றே இம்மெல்லியலாரது நல்லிசைப் புலமையினைச் செவ்விதினறிவுறுத்தும்' என்று முடித்தபின்னர், 'இச்செய்தி கிழ்வுழியுடனிருந்த மதுரைப் பேராலவாயார் இத்தேவி யாரது அருப்பெருஞ் செயற்கு வியந்து 'மடங்கலிற்சினை இ' என்னும் புறப்பாட்டைப் பாடினார். அதனையும் இவரது பேரன்பும் அருஞ் செயலும் அறிந்து கொள்க' என்று முடித்துள்ளார். ஈண்டு மதுரைப் பேராலவாயார் என்ற புலவர் பாடிய பாடல் 'மடங்கலிற்சினை இ' என்றற்றொடக்கமுடைய பாட்டன்று என்பது இவரே முன்பு அதனைப் பூதப்பாண்டியன் பாடிய பாட்டு என்று காட்டிப் பாராட்டியதால் நன்கு தெளியப்படுமாயினும், அச்செய்தியை மறந்து பேராலவாயார் பாடியதென்றுரைத்துள்ளார். ஆகலின் இதுவும் முறை மறந்தறைதலா யிற்றென்று அறிந்து கொள்க. மற்றும் பூதப்பாண்டியன் தேவியார் தீப்பாய் வரனைக் கண்டு அவர் பாடிய பாட்டு,

'யானை தந்த மூளிமர வீறிற்
கானவர் பொத்திய ஞெலிநீ வினக்கத்து
மடமான் பெருகிரை வைகுதுயி லெடுப்பி
மஞ்ஞைக்கு மணங்குடை முன்றில்
னீர்வார் கூந்த லிரும்புறந் தாழப்
பேரஞர்க் கண்ணள் பெருங்காடு நோக்கித்
தெருமரு மம்ம தானே தன்கொழுகன்
முழுவுகண் மெயிலாக் கடியுடை வியனகர்ச்
சென்னெனி தமிய ளாயினு
மின்னுயிர் நடுங்கும் தன்னிளமை புறங்கொடுத்தே'

என்பது எனப் புறநானூற்றுள் நன்கு நோக்கித்தெளிக.

இனி இறுதியாக யாம் ஈண்டு மொழிவனவற்றைப் புலவர்கள் கூர்ந்துணருமாறு வேண்டிக் கொள்ளுகின்றேம். ஆங்கில மொழியில் 'Homer sometimes nods' என்று வழங்கும் பழமொழி யொன்றுண்டு. அதன் பொருளாவது 'பெருங்கவிஞராகிய ஹோமர் என்பாரும் சில்போது தலையசைப்பர்' என்பதாம். பல வேறுமொழிகளைப் பேசும் ஐரோப்பியர்கள் யாவரும் 'ஹோமர்' என்பாரை இஞ்ஞான்றும் 'பெருங்கவிஞர்' எனக்கொண்டாடிப் போற்றுவாரகளாயினும் அவரும் சிலபோது வழுவிற்குள்ளாவர் என அவர்கள் கொள்ளுகின்றார்கள். அவ்வழக்குப்போன்றே நம் நாட்டுத் தமிழ்ப் பெரும் புலவர்களும் ஓரோவழி வழுவிற்குள்ளாவார்கள் என்பதிற் குறையொன்றுமில்லை. அவரவர்கள் கிலேபெறச் செய்துள்ள நூற்கருவூலங்கள் மாசகன்று தூய்மைய வாதல் கடப்பாடெனக் கருத்துள் ஓர்ந்தே ஈண்டு 'முறை மறத்தறைத்தவற்றை' எடுத்துக் காட்டியதன்றி வேறு கருத்துப்பற்றி யன்றென ஒருகால்ன்றி இருகால் வணங்கிப் புலப்பெருமக்கள் முன்பு புகன்றும். இருகால் வணங்கியென இரட்டித்துரைத்தா மாதலின் அவர்கள் எம்பரம் சீற்றம் கொள்ளார் என்பதே துணிவு.

எழுசீர் விருத்தம்.

மேன்முறை யறிஞர் நுண்ணுணர் திறத்தின் விழுப்பொருள் காண்குறும் பெரியோர்
தான்முறை மறந்தீண் டுரைத்தன சிலவே நுவன்றனன் வெளிற்ற நிவுடைய
நான்முறை மறந்தீண் டுரைத்தன சிற் சின்னவை களோப் பொருட் கொளாதற்ற
பான்முறை யறிந்து போற்றுதல் நூலின் பயன் டெரிதறிந்தவர் பண்பே.

திருநாவுக்கரசர்

நாவலர், பண்டித, ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்.
தலைமை ஆசிரியர் (பிரின்ஸ்பால்)
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

திருநாவுக்கரசர், பரதகண்டமெங்கணும் பரந்து கிலவிய தொன்மைச்சமயமும் உண்மைத்திருநெறியுமாகிய சைவ சமயத்திற்குப் புறச்சமயிகளால் உண்டாகிய இடையூற்றைக்கனைந்து, அதன் மாண்பு மலை விளக்காய்த் திகழுமாறுசெய்த பேரருளாளப் பெருமக்களாம் சமய குரவர் கால்வருள் ஒருவராவர். இவர் பசுகரணமெல்லாம் பதிகரண மாகத் திகழப்பெறும் சீவன்முத்த நிலையை எய்தியவரென்பது,

"பாலே நெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்
காலனையன் றேவிக் கராங் கொண்ட—பாலன்
மரணந் தவிர்த்தலவும் மற்றவர்க்கு ஈர்தம்
காணம்போ லல்லாமை காண்" (திருக்களிற்றுப்படியார்)

என்னும் ஆன்றோர் திருவாக்கானறியப்படும். இவரது மெய்வரலாறு தில்லை யம்பலவாணர் அருளிய *முதல்கொண்டு சேக்கிழார் பெருமான் பாடிய திருத்தொண்டர் புராணத்துள்ளே திகழாகிற்பது. அதன் சுருக்கம் :—

திருமுனைப்பாடி நாட்டிலே, திருவாமூரிலே, வேளாளர் மரபிலே, குறுக்கையர் குடியில் புகழனார் என்பவர்க்கும் அவர் மனைவி மாதினியார்க்கும் திலகவதியார் என்பவர் பிறந்து சில யாண்டு சென்றபின், மருணீக்கியார் என்பவர் திருவவதாரஞ் செய்து, உரிய காலத்திலே கல்வி கேள்விகளில் வல்லராகி மேம்பட்டு விளங்கினர். திலகவதியாரை அரசன்பாற் படைத்தலைவராயிருந்த கலிப்பகையார் என்பவர் மணம் பேசிப் பெற்றோரின் இசைவு பெற்றும், கலியாணம் செய்யுமுன், தம் அரசன் ஏவலே மேற்கொண்டு வடபுலத்தும்மாற்றரசரோடு அமர்செய்து கொண்டிருந்தனர். அப்பொழுது புகழனார் இறந்து அவர் மனைவியாரும் உடன் சென்றனராக, திலகவதியாரும் மருணீக்கியாரும் பெருந்து யருழந்து தந்தை தாயர்க்குரிய கடன்களைச்செய்து முடித்தனர். அந்காளிலே கலிப்பகையாரும் போர்க்களத்தில் உயிர்கொடுக்க அச்செய்தியைக்கேட்ட திலகவதியார் தாமும் இறக்கத்துணிந்தும்,

* முதல் நூல் "உலகு" என்ற சொல்.

தம்பியார் வேண்டிக்கொண்டமையின் அவர்பொருட்டு உயிர்தரித்து, 'அம் பொன் மணி நூல் தாங்காது அனைத்துயர்க்கும் அருள்தாங்கி' மனையின்கண் தவம்புரிந்து கொண்டிருந்தார்.

அவர், இங்ஙனமிருக்க, மருணீக்கியார் யாக்கை நிலையாமையையும், செல்வ நிலையாமையையும் அறிந்து தமது செல்வத்தை அறஞ்செய்தலிற் செலவிட்டுப்பற்றற்ற நிலையை எய்தியும், சிவபிரான் அருள் தலைக் கூடாமையால் உண்மைச்சமயம் இதுவென அறியப்பெறாது சமண் சமயத்திற்புகுந்து பாடலிபுத்திரம் என்னுமிடத்தையடைந்து ஆருகத நூலாராய்ச்சியில் மேம்பட்டவராய்ப் **புத்த சமயத்தவரை** வாதில் வென்று தருமசேனர் என்னும் பெயருடன் இருந்து வந்தனர்.

திருவாமூரில் இருந்த திலகவதியார் திருவதிகை வீரட்டானத்தை யடைந்து வீரட்டானேசுரருக்குத் திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருப்பள்ளித்தாமம் தொடுத்துச் சாத்துதல் முதலிய திருப்பணிகளைச் செய்துவரும் காலில் தமது தம்பியார் சமணசமயப்படுகுழியில் வீழ்ந்து கெடுவதை இறைவனிடத்தில் விண்ணப்பித்துவர, அதனை ஏற்ற சிவபெருமான் அவருக்குக் கனவிலே தோன்றி, 'நின்தம்பி முற்பிறப்பிலே ஓர் முனிவனாகி கம்மையடையத் தவம்புரிந்தவன்; சிறிது தவறியற்றி இக்கிலையனாயினன்; நாம் இனி அவனைச் சூலை மடுத்து ஆட்கொள்வோம்; கவலை யொழிக' என்று அருள் புரிந்தார்.

அதற்கியைய தருமசேனருக்குச் சூலைநோய் வந்துற்றது. சமணர் பலவகையான தீர்வினைச் செய்யவும் அது தீராது மேன்மேல் முறுகி வருத்தவே, உய்யுங்காலம் வந்தமையால் தமது தமக்கையை நினைந்து திருவதிகையை அடைந்து அவரைவணங்கிவேண்ட, அவர் பரமசிவனது அருளை வியந்து அவருக்குத் திருநீற்றைத் திருவைந்தெழுத்தோதிக் கொடுத்து, திருப்பள்ளியெழுச்சியிலே திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்று இறைவன்பால் ஆட்படுத்தனர்.

ஆட்பட்ட மருணீக்கியாரும் இறைவனை வலம்வந்து பணிந்து திருமுன்னின்று திருவருளினாலே பாடும் வண்மை பெற்றுத் தமது சூலை நீங்குமாறும் உலகினர் உய்யுமாறும் 'கூற்றாயினவாறு விலக்க கிலீர்' என்னும் திருப்பதிகம்பாடி நோய் நீங்கிப் பேரின்பமடைந்து, தமக்கு மிகப் பெரிதாய உதவியைச் செய்ததென்று சூலையைப் பரசாட்டினர். அப்பொழுது இறைவர் அவருக்கு 'நாவுக்கரசு' என்னும் பெயரினைச் சூட்டியருளினர். திருநாவுக்கரசர் அன்று தொட்டு மனம் மொழி மெய் என்னும் மும்மைக்காரணங்களாலும் வழிபடும் உரிமைபூண்டு சிவசாதன மணிந்து, தியானமாராதனையும், தடையின்றியெழுகின்ற திருப்பதிகத் திருவாக்கும், மழைபோலப் பொழியும் கண்ணீரும், உழவாரப் பணியும் உடையவராயினர்.

இங்கு நிகழ்ந்தவற்றைக் கேட்ட சமணர் இதனை அரசன் அறியின் தானும் சைவனுவான் என்று அஞ்சி, அவனையடைந்து, 'தருமசேனர்

சூலை வந்ததாகப் பாவித்துச் சைவதத்தையடைந்து கூறிய சமயத்தை யிழந்தார்' என்று சொல்லினர். அதைக்கேட்ட அரசன் அமைச்சர்களை யழைத்துத் தருமசேனரை அழைத்துவருகவென, அவர்கள் போய்த் திருநாவுக்கரசரை அழைக்க, அவர், 'நாமார்க்குங்குடியல்லோம்' என்னும் மறுமாற்றத்திருத்தாண்டகம் பாடி மறுத்து, அமைச்சர்கள் வேண்டிக்கொண்டமையின, 'இறைவன் உளன்' என்று அவரோடு சென்றனர். பல்லவமன்னன் அவரைக்காவலாளரிடம் ஒப்புவித்துச் சமணர் சொல்லுமாறு செய்கவென விடுத்தான்.

சமணர் அவரைக் கொல்லுதற்கு நீற்றறையிலிட்டு எழுநாள்காறும் பூட்டிவைத்தும், பின் நஞ்சினையருத்தியும், யானையை ஏவியும் அவர் ஒன்றினும் ஊனமின்றி யிருத்தமையின், இறுதியாகக் கற்றாணிலே வலிய பாசங்களினாற் கட்டிக் கடலில் இட்டனர். இடவும், திருநாவுக்கரசர் 'சொற்றுணை வேதியன்' என்னும் கமச்சிவாயத் திருப்பதிகம்பாடித் துதித்து, அக்கல்லே தெப்பமாக மிதக்கத் திருப்பாதிரிப்புலியூர் என்னும் பதியிற் கரையேறினர். ஏறினவர் திருக்கோயிலுக்குச் சென்று தரிசித்து 'சூன்றுஞுமாய்' என்னுந்திரு விருத்தம் பாடினர்.

திருநாவுக்கரசு நாயனர் பின்பு திருவதிகை வீரட்டானத்தை யடைந்து ஏழைத்திருத்தாண்டகம் முதலிய பலபதிகங்கள்பாடியிருக்கு மளவில் உண்மையை யறிந்த பல்லவ வரசன் சைவத்தை யடைந்து நாயனாரைத் திருவடிகளில் வணங்கிச் சமண் பாழிகளையிடித்துத் திருவதிகையில் சிவபெருமானுக்குக் குணபாவிச்சரம் என்னுந் திருக் கோயில் எடுத்து உய்ந்தான்.

திருநாவுக்காசர் திருப்பதிகடோறும் விருப்புடன் சென்று பதிகம் பாடியும், உழவாரப்பணிபுரிந்தும் போதருவராயினர். அவ்வாறு சென்ற பதிகஞுள்ளே அவர் திருப்பெண்ணாகடத்தையடைந்தபொழுது சமண் மாசுதீரும்பொருட்டுத் தமக்குச் சூல, இடப இலச்சினை பொறிக்க வேண்டுமென்றுபாடி அவ்வாறே பொறிக்கப்பெற்றார். தில்லைத்திருப் பதியிலே பல பதிகங்கள் பாடிப் பணிசெய்யும் காலில் திருஞான சம்பந்தப் பிள்ளையாருடைய பெருமைகளைக் கேள்வியுற்றுச் சீகாழிப் பதியை அடைந்து அவர்கழல்களில் விழுந்து வணங்கப் பிள்ளையாரும் இறைஞ்சித் தமது மலர்க்கையால் அவரையெடுத்து 'அப்பரே' என, அவரும் 'அடியேன்' என்றார்; இருவரும் திருக்கோயிலையடைந்து தரிசித்தபின், அப்பர் பிள்ளையாரது மடத்திலே சில நாள் தங்கியிருந்து, பின்பு பிற பதிகளையும் வணங்குதற்குச் சென்றனர்.

திருச்சத்திமுற்றத்திலே தமக்குத் திருவடி சூட்ட வேண்டி இறைவனைப்பாடி, கல்லூரிலே சூட்டப் பெற்றுப் பதிகம் பாடித் துதித்தார். திருப்பழனத்தை வணங்கித் திங்களூருக்கணிமையிற் செல்லும்பொழுது அவ்வூரிலுள்ள அந்தணராகிய அப்பூதியடிகள்

தம்மீது எல்லையில்லா அன்பு செய்தலையறிந்து அவர் மனைக்குச்சென்று அவரைக்கண்டு அவரன்பினை வியந்து அவரில்லில் அமுது செய்ய இசைத்து தாம் அமுது செய்தற்கு இலைகொணரச்சென்ற அப்பூதியடிகளின் புதல்வராகிய மூத்த திருநாவுக்கரசு இலையெடுப்பொழுது அரவு தீண்டி மரித்தமையறிந்து 'ஒன்று கொலாம்' என்னும் பதிகம்பாடி அவரை உயிர்ப்பித்தனர்.

திருப்புகலூரையடைந்த பொழுது முருக நாயனார் மடத்தில் எழுந்தருளியிருந்த திருஞானசம்பந்தரைச் சந்தித்துப்பின் இருவருமாகப் பல பதிகட்குச் சென்று வழிபட்டனர். இருவரும் திருவீழிமிழலையை அடைந்தபொழுது மழையின்மையால் வற்கடம்மிக்கு உயிர்கள் பசியால்வருந்த, நரயன்மாரிருவரும் சிவபெருமான்பாற் படிக்காசுபெற்றுத் தங்கள் திருமடங்களிலே இரண்டுகாலமும் பறை சாற்றி யாவர்க்கும் உணவளித்தனர். இருவரும் திருமறைக்காட்டினை யடைந்தபொழுது, மறைகள் பூசித்துத் திருக்கப்பிடப்பெற்ற எதிர்முக வாயிற்கதவு திறக்கப் பாடுமாறு சம்பந்தர்வேண்ட, அவ்வாறே 'பண்ணினேர் மொழியாள்' என்னும் பதிகம் பாடித் திறப்பித்தார்; அவ்வாயிலாற் சென்று வழிபட்டபின் பிள்ளையார் பதிகம் பாடி அடைப்பித்தார்.

திருநாவுக்கரசர் பழையாறையை அடைந்தபொழுது வடதளியிற் சிவபிரான் சமணர்களால் மறைக்கப்பட்டிருத்தலையறிந்து, 'இறைவனை நேரே கண்டு கும்பிட்டன்றிப் போகேன்' என உணவு கொள்ளாது அங்குத்தங்கி, இறைவனும் கனவிலருளிச் செய்யப்பெற்ற சோழமன்னர் சமணரையகற்றிப் பெருமானை வெளிப்படுத்தக் கண்டு கும்பிட்டார். திருப்பைஞ்ஞீலிக்குச் செல்லும்பொழுது வழியிலே பசியாலும் நீர் வேட்கையாலும் வருந்துவது பொறாத சிவபெருமான் தண்ணீர்ப் பந்தர் அமைத்துப் பொதிசோறும் தண்ணீரும் அளித்து உண்பிக்க உண்டு திருவருள் வியந்து பாடினர்.

திருக்காளத்தியை அடைந்து காளத்தியப்பரையும் கண்ணப்பரையும் தரிசித்திருக்கும் பொழுது, வடகயிலையிற் சிவபிரான் எழுந்தருளியிருக்கும் கோலத்தைத் தரிசிக்க விழைந்து, வடதிசைக்கண் காடு மலையெல்லாம் இரவு பகலாக உணவின்றி நடந்து தம் உறுப்புக்களெல்லாம் சிதைத்து வயமழிந்து ஓரிடத்திற்கிடந்தார்; அப்பொழுது அங்கே சைவ முனிவராகத் தோன்றிய சிவபெருமான் கயிலைக்குச் செல்லலாகாமை தெரிவித்து மீளுமாறு கூறவும் அதற்கொருப்படாது, பின் அவர் வானிலே மறைந்து பணித்தவண்ணம் ஓர் வாவியிலே மூழ்கித் திருவையாற்றிலே ஓர் வாவியிலெழுந்து திருக்கோயிலையடைந்து, அதுவே திருக்கயிலையாக அம்மையப்பர் எழுந்தருளியிருக்கும் காட்சியைக்கண்டு வணங்கிப் பதிகம் பாடித்துதித்தார். திருப்பூந்துருத்தியை அடைந்து ஒரு திருமடங்கட்டுவித்துப் பல பதிகம் பாடிப் பணிசெய்து கொண்டிருந்தார். அப்பர் திருப்புகலூரை

யடைந்து திருப்பணி செய்து கொண்டிருந்தபொழுது சிவபிரான் அவரது பற்றற்ற நிலையை உலகினர்க்குக் காட்டவேண்டி அவர் பணி செய்யும் உழவாரம் நுழையுமிடங்களில் செம்பொன்னும் வைரமணியும் திகழுமாறு செய்ய அவர் அவற்றை அங்குள்ள பரல்களோடொப்ப மதித்து உழவாரத்தாலெடுத் தெறிந்தார்; தேவகணிகையர் எதிர் நின்று ஆடியும் பாடியும் மருட்டுமாறு செய்ய அதற்குச் சிறிதும் சித்தஞ் சலியாதிருந்து அவர் அகன்றொழியச் செய்தார். இதுதியில், திருநாவுக்கரசர் புகலூரிலே ஒரு சித்திரைமதிச் சதய நாளில் 'எண்ணுகேன் என் சொல்லி யெண்ணுகேனே' என்று திருத் தாண்டகம் எடுத்து, 'உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே' என்றுபாடி, அண்ணலைச் சேவடிக்கீழ், கண்ணிய சிவானந்த ஞானவடிவாயினர்; என்பது.

இனி, இவ்வரலாற்றினின்று உளங்கொளற் பாலவாய உண்மை களிற் சிலவற்றை எண்டுச் சிந்திப்போம்:

திருநாவுக்கரசர் சூலைநோய் முன்பு தம்மைப் பொறுக்கலாற்றாத இன்னல் செய்ததாகவும், உண்மையறியாது புறச்சமயம் புக்க தம்மைச் சிவபிரான் திருவடிக்கீழாட்படுத்தியது அதுவெனக் கொண்டு 'இவ்வாழ்வு பெறத்தரு சூலையினுக்கெதிர் செய்குறை யென்கொலெனத் தொழுதார்' என்று சேக்கிழார் கூறுகின்றனர். சூலை நோய் செய்த உதவிக்குக் கைம்மாறின்றெனக்கூறி அதனை வணங்கினரென்பது 'இன்னுசெய்தார்க்கும் இனியவே செய்யும்' அவரது சால்புடைமையை இனிது விளக்குகின்றது. மற்று, நீற்றறையிலிடுதல் முதலிய கொடுந் துன்பங்களை யிழைத்த சமணர் திறத்தும் எத்துணையும் இன்னலிழைக்கக் கருதாமலும் சினங்கொள்ளாமலும் அமைந்திருந்த அவரதியல்பு 'எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானும், மாறு செய்யாமை தலை' என்னும் பொய்யாமொழிக்கு மெய்யிலக்கியமாகின்றது. அவர் திருக்கயிலை காண்பான் வேணுறக்கமின்றிச் செல்வழிக் காலால் நடந்த தன்றிக் கையை வன்றியும் மெய்யைக்கிடத்தியும் தவழ்ந்தும் புரண்டும் உடலுறுப்பெல்லாஞ் சிதையவும் உள்ளஞ் சிதையாதிருந்தமை கோன்மைக்கு எடுத்துக்காட்டாகும் சீர்மையது. இவ்வாற்றால் ''உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை, அற்றே தவத்திற் குரு'' எனத் தெய்வப்புலவர் தவத்திற்கே யுருவமெனக் கூறிய இரண்டு பண்புகளும் நாவுக்கரசர்பால் மேவிப் பொலிந்தமை விளக்கமாம். அருண்மொழித் தேவர் '' திருநாவுக்கரசுவளர் திருத்தொண்டினெறி வாழ, வருஞானத் தவ முனிவர்'' எனத் தோற்றுவாயிலேயே திருத்தொண்டு, தவம், ஞானம் என்னும் மூன்றற்கு முரிமைப்படுத் துரைத்தமையும் காண்க. மற்று, அவர் 'ஞான த்தவ முனிவர்' என்றமையால் அவரது தவம் இம்மை மறுமைப் பயன் விழைந்து செய்யும் பொதுத்தவமாகாது, மெய்யுணர்வுக்கேதுவாகிய உண்மைச் சரியை கிரியை யோகமாகிய மெய்த்தவமா மென்பதும் பெற்றும்.

இனி, நாவுக்கரசரது திருத்தொண்டோ மும்மைக்காரணமும் ஒன்றிய செம்மைவாய்த்தது. அவரதுஉள்ளம் இறைவனே நெக்குநெக்கு கிணைந்து இணைத்துருகும் மென்னீர்மையுடன் மலைகலங்கினும் நிலை கங்காத வன்னீர்மையும் உடையது; அவரது உரை 'பத்தனாய்ப் பாட மாட்டேன் பரமனே பரமயோகி, எத்திறம் பத்திசெய்கேன் என்னை நீ யிகழவேண்டா' எனக்குறைந்தடைந்திரந்துகூறும் மென்றன்மை யுடன் 'வானந்துளங்கிலென் மண்கம்பமாகிலென் மால்வரையும், தானந் துளங்கித் தலைதடுமாறிலென்' என்றிங்ஙனம் செம்மாந்துரைக்கும் வன்றன்மையும் உடையது. அவரது உடல்தளர்ந்து அசையும்மெல்லியல் புடன் காடு மலையெல்லாம் நடந்து கால்கை தேயினும் ஓய்வின்றி நில மிசைப்புரண்டு செல்லும் வல்லியல்பும் உடையது. நாவரசின் அன்பின் கெழிச்சியிலாய மென்னீர்மையை,

"ஐயவெண்ணீறு அதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும்
கையகண் சேவடி தைவரு சிந்தையும் கைந்தருகிப்
பாய்வதுபோ லன்பு நீர் பொழிகண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ்வாயு முடையார் புகுந்தனர் வீதியுள்ளே"

"சிந்தையிடையுருவன்புந் திருமேனி தனிலசைவும்
கந்தமிகை யாங்கருத்துங் கையுழவா ரப்படையும்
வந்திழிகண் ணீர்மழையும் வடிவிற் பொலி திருநீறும்
அந்தமிலாத் திருவேடத் தாசுமெதிர் வந்தணைய"

என்னும் திருத்தொண்டர் புராணச்செய்யுட்கள் இனிது விளக்காகிற்பன சிவஞானபோத மாபாடியத்தில், 'மாலறநேயம் மலிந்தவர் வேட'த்திற்கு எடுத்துக்கட்டாக நின்றன இவையென்றால் இப்பாடல்களின் அருமை யையும், திருநாவுக்கரசரது அன்பின் பெருமையையும் என்னென்பேம், மற்று, அம்பலவாணர் திருமுன் அவர்க்கு நிகழ்ந்த அன்பின் மெய்ப் பாட்டினை அருண்மொழித்தேவர் நீட்டிக்காட்டிய அற்புத வோவியப் பொற்பினையும் ஈண்டுநோக்கி யின்புறுதும்:

"கையுந் தலைமிசை புனையுஞ்சலியன கண்ணும் பொழிமழை யொழியாதே
பெய்யுந்தகையன காணல்களுமுட னுருகும் பரிவின பேறெய்தும்
மெய்யுந்தரைமிசை விழுமுன் பெழுதரு மின்றும் சடையொடு நின்றுமே
ஐயன் திருநடமெதிர்கும் பிடுமவ ராரவம் பெருகுத லளவின்றால்"

நாவுக்காசர் சமணர்கள் புரிந்த கொடுவினையனைத்தையும் கடந்தமை அவரது திருத்தொண்டின் உறைப்பாலேயாம்; சேக்கிழாரும், 'நாணில மண்பதகருட, னெனறிய மன்னவன் சூழ்ச்சி திருத்தொண்டினுறைப் பாலே, வென்றவர்' என்றமைகாண்க; பிறிதோரிடத்தும் அவ் வுறைப்பினை அவர் சுட்டுகின்றனர். பழையாறை வடதளியிற் சமணரது மறைப்பை நீக்கி இறைவனைக் கும்பிட்டன்றி யகலேன் என உணவு மின்றித் தன்னந் தனியே இருந்துவிட்டதும், கயிலை காணச்சென்ற தெறியிடையே முனியுருக்கொடுவந்த இறைவன் 'கயிலை மால்வரை கின்னுற் காண்டற்குரியதொன்றன்று; மீளுவதே கடன்' எனவுரைப்புழி 'ஆளுமாயகன் கயிலையிலிருக்கை கண்டல்லால், மாளுமிவ்வுடல்கொண்டு

மீளேன்' என மறுத்ததும் திருத்தொண்டின் உறைப்பேயாகும். மற்று அவரது தொண்டினுக்குள்ளதோர் சிறப்பு அது கைத்தொண்டாவதாகம்; கைத்தொண்டு சிறுமையுடன்புரிந்த தொண்டும், ஒழுக்கமுடனுளுற்றிய தொண்டும், கையாற்செய்த தொண்டுமாகும்; 'கைத்தொண்டாகும் பெருமையினுல், வாசியில்லாக்காசு நனிபெற்றுவந்தார் வாசீசர்' எனச் சேக்கிழார் குரிசில் அதன் தனிமாண்பினைக் ஙிளக்தோதுதலும் காண்க.

இனி வரலாற்றுப்பகுதியுள் நாவுக்கரசின் ஞானநிலையைக்குறிப்பன அவர் திருமறைக்காட்டிலே கதவம்திறந்து கண்ணுதலைத் தரிசித்ததும், திருவையாற்றிலே யாவும் சத்தியுளு சிவமுமாய்த் நிகழக்கண்டதும் என்னலாம். கதவந்திறந்தமை அவரது மெய்யுணர்வுக்கும் பொருத்த மாவதறிக்தே,

> "தாயிலியாகுஞ் சிவபெருமான்றனைத் தானெனுமோர்
> கோயிலினூறிவாகிய காமமுன் கொண்டிருந்த
> வாயிலுணைவ மாகுங் கபாடமும் மன்றிறந்து
> கோயிலியாகிய சொல்லிறை காட்டிவ ளுக்குதற்கே"

என்று சிவப்பிரகாசவடிகள் அருளிச்செய்வாராயினர் என்க. மற்றும், 'பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் மருளீ நீக்கிப்பற்றறுத்த அவரது உணர்வுநிலையானது புகலூரிலே பொன்னை மாதரைப் பொரு ளெனக் கொள்ளாமையானும் போதரும்.

இதுகாறும் நாவுக்கரசர் வரலாற்றினின்று அவரது சால்பு, தவம், தொண்டு, ஞானம் என்பவற்றை எம் அறிவுசென்றவாறு சிறிது ஆராய்ந்தேம். இவற்றின்புறனுக அறியலாவதொன்றுமுளது; அது, புறச்சமயம்புக்க தம்பியாரைத் தமக்கையார் திருவைக்தெழுத்தோதித் திருநீறளித்துத் திருக்கோயிலுக்கழைத்தேகி இறைவனுக்காட் படுத்தினர் என்பதனுல் இற்றைநாளினும் பிற்றைநாளினும் வேற்றுமதம் புக்கு மீளுங்கருத்துடையாரை யாதுசெய்தல் வேண்டும் என்பது.

இனி, நாவுக்கரசரின் பாக்களாகிய பாவையிற் படிந்து அரும் பொருண் மணிகளைக் கொணர்தல் எமக்கெளியதன்றுயினும், அதன் கரைமருங்குலாவும் திரை கொழிப்பவற்றுள் எம் புன்மதிச்சிறுகையால் ஒல்லுமளவு முகப்பேமாக.

நாவுக்கரசரது கல்வியின்பெருமையும் கவிதையின் செழுமையும் 'பாவுற்றலர் செந்தமிழின் சொல்வளப்பதிகத்தொடை பாடிய பண் பதினைக்கண்டு, அவருக்கு நாவுக்கரசு என்று திருப்பெயர் சூட்டிய நம்பரே அறியவல்லார்; அவர் இறைவன் திருக்கயிலையில் எழுந்தருளிய கோலத்தைத் தரிசிக்க மீதூர்ந்தவன்பினாலும், அவரை ஆண்டுச்செல்ல வொட்டாது தடுத்துத் திருவையாற்றிலே அக்கோலத்தைத் தரிசிப்பித்த பெருமானது திருக்குறிப்பு, அவர் 'மன்னு நீர்த்தமிழ் பின்னையும் புவியிடைவழுத்த' வேண்டுமென்பதாயின், அதற்குக்காரணம் அப் பாக்களைக் கேட்கும் விருப்பமும், அவற்றை உலகினர் முகர்ந்து உய்ய

வேண்டுமென்னுங் கருணையும் இறைவன்பால் விஞ்சினமையேயன்றே? நாவுக்கரசர் தேவாரத்தில் கொல்லி, காந்தாரம் முதலிய பண்வகையன்றிச் சிறப்பாகவுள்ளன திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை 'திருத்தாண்டகம் என்னும் நாற்பகுதியுமாம். அவற்றுள்ளும் திருத்தாண்டகத்தைச் சிறப்பாக நோக்கித் தாண்டகவேந்தர் என்றும், தாண்டகச்சதுரர் என்றும் அவரைப்பாராட்டுவர் உயர்ந்தோர். 'இணைகொள் ஏழேழு நூறிரும் பனுவலீன்றவன் திருநாவினுக்கரையன்' என அவர் பாடியவற்றிற்குமட்டும் நம்பியாரூரர் தொகை கூறியதில் ஏதோ ஓர் உண்மையிருத்தல் வேண்டும். அப்பாடல்கள் ஒவ்வொன்றினுள்ளே உலப்பில் பொருள்கள் உள்ளனவாகலின் அனைத்தின் பொருளும் எங்ஙனம் அளவிடலாகும்?

நாவுக்கரசர் வரலாற்றுப்பகுதிகள் பலவற்றுக்கு அவர்பாடல்களில் உறுதியுடைய சான்றுகள் பலவுள்ளன. தாம் சமண் சமயஞ்சார்ந்து உழன்றதனையும், இறைவன் பணியைகேற்கிப் பின்பு அதுதீர்த்து ஆட்கொண்டதனையும் பலவிடத்துப் பகர்கின்றார் சொல்லரசர்.

"பெருகுவித்தென் பாவத்தைப் பண்டெலாங் குண்டர்கள்தஞ் சொல்லேகேட்டு,
உருகுவித்தென்னுள்ளத்தி னுள்ளிருந்த கள்ளத்தைத் தள்ளிப்போக்கி
அருகுவித்துப் பிணிகாட்டி யாட்கொண்டு பிணிதீர்த்த வாரூர்த்தம்
அருகிருக்கும் விதியின்றி யறமிருக்க மறம்விலக்குக் கொண்டவாறே"

என்பது காண்க. நாவுக்கரசர் தாம்முன்பு புறச்சமயம் புகுதலாகிய திருவடிப்பிழைசெய்தும் இறைவன் தம்மைச்சூலைநோயால் ஒறுத்துத் தாம் அடைந்தவழி ஆட்கொண்டருளிய பேரருளை நினைந்து அவ்விறைமைக் குணத்தைப் பாராட்டுவாராகியே, அத்தன்மையனைய இராவணனுக்குப் பண்டு அருள்செய்ததனை ஒவ்வொருபதிக விறுதியிலும் பாடிப் பரவுவாராயினர். சிவபெருமானது பேரருட்டிறம் இத்தகையதென மன்பதைக்கறிவுறுத்தற் பொருட்டே ஆஞ்சையிற் பிள்ளையாரும் பதிகத்தோறும் இராவணன்செய்தி கூறுவராயினர் என்க. இனித்திருநாவுக்கரசர் சிவபிரானே தமக்கருட்குருவராய் அருணெறிக்கினுல் ஞானமுழுக்கு செய்விக்கப்பெற்றவர் தாமென்பதனை 'மலங்கெடுத்து மாதிர்த்தமாட்டிக்கொண்ட மறையவனே', 'அருணெறிக்கிற் நீர்த்தநீராட்டிக்கொண்டாய்' என்பவற்றினுல் வெளியிடுகின்றார், திருகெறித்தமிழ் அருளிய மூவரும் குருவருளால் வீடுபெற்றவரெனச் சேக்கிழார் புராணங் கூறுவதும், 'தோடு கூற்றுப்பித்தா மூன்றும், பீடுடைத்தேசிகன் பேரருளாகும்' என ஆன்றோர் பகர்வதும் இதனை வலியுறுத்துவனவாகும். மற்றும் இறைவனே தமது பந்தத்தையறுத்து ஆட்கொண்டனன் என்பதனையும், அவன் பாடுவிக்கவே அவனருளால் தமிழ்மாலை பாடப்பெற்றதென்பதனையும் 'நரையேனை முன்னம், பந்த மறுத்தாளாக்கிப் பணிகொண்டாங்கே பன்னிய நூற்றமிழ்மாலை பாடுவித்தென், சிந்தைமயக்கறுத்த திருவருளினைச் செங்காட்டங்

குடியதனிற் கண்டேனுனே' எனவும், அருளறமாகிய நன்னெறி ஆண்டவனுலே தமக்கு அறிவுறுத்தப் பெற்றதென்பதனைத் 'தயாமூல தன்மவழி யெனக்கு நல்கி' எனவும் அரசு அருளிச்செய்தலுங்காண்க.

இனி, நாவரசர் தேவாரத்தால் அறியலாகும் பொருட்பரப்பைச் சுருக்கிக்கூறின் இறை, உயிர், கட்டுனன்னும் மும்பொருளியல்புகளும், உயிர் கட்டின் நீங்கி இறையை அடைந்து பேரின்பெய்துதற்குரிய நெறிகளும், அந்நெறிகளிற்சென்று கட்டுநீங்கினர் நீர்மையும் ஆகிய சைவசித்தாந்தச் செழும்பொருள் யாவும் அறியப்படும் என்னலாம்.

அவற்றுள்ளே ஒல்லுவ சில காட்டி இவ்வுரை முடிக்கப்பெறும். இறைவன் 'உலகெலாமாகி வேறுய் உடனுமாய்' உளன் என்பது சித்தாந்த நூற் துணிபு:

"இருநிலனுய்த் தீயாகி நீருமாகி யியமான னுயெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறுகி யாகாசமா யட்ட மூர்த்தியாகிப்
பெருகலமுவ குற்றமும் பெண்ணு மாணும் பிறருருவுந் தம்முருவுந் தாமேயாகி
நெருகலையா யின்றுகி காலையாகி நிமிர்புன் சடையடிகணின்ற வாறே"

என்பது இறைவன் கலப்பினுல் உலகெலாமாகியுள்ள வியல்பினையும்,

"விரிதிரை ஞாயிறல்லர் மதியல்லர் வேத விதியல்லர் விண்ணு நிலனும்
திரிதரு வாயுவல்லர் செறுதீயு மல்லர் தெளிநீரு மல்லர் தெரியில்
அரிதரு கண்ணியாரோ யொருபாகமாக வருள்காரணத்தின் வருவார்
எரியர வாமமார்பரிமையாரு மல்ல ரிமைப்பாருமல்ல ரிவரே"

என்பது பொருட்டன்மையால் வேறுகியுள்ள வியல்பினையும்,

"விண்ணகத் தான்மிக்க வேதத் துளான்விரி நீருடுத்த
மண்ணகத் தான்றிரு மாலகத் தான்மரு வற்கினிய
பண்ணகத் தான்பத்தர் சித்தத் துளான்பழ னாயடியேன்
கண்ணகத் தான்மனத் தான்சென்னி யானெங் கறைக்கண்டனே"

என்பது உண்ணிற்றலால் உடனுகியுள்ள வியல்பினையும் தெளிவித்தல் காண்க

இனி, உயிர்கள் முதல்வனையடைதற்குரியவராகச் சைவசமயங் கூறும் நெறிகள் நான்கு; அவை; சரியை, கிரியை, யோகம். ஞானம் என்னும் அடிமை நெறி, மதலை நெறி, தோழ நெறி, உண்மைநெறி, என்பனவாம். சைவ சமய குரவகர்ளாகிய நால்வர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கூர்ந்து நோக்கின் நால் நெறிகளுள் ஒவ்வொன்று ஒவ்வொருவர்பால் விஞ்சித்தோன்றுமாயினும், நால்வரும் சிவஞானி களென்பது துணிபாகலின், ஒவ்வொருவர் வாக்கினுள்ளும் நானெறி களும் புலப்படா நிற்கும். அம்முறையே வாக்கரசர் பாக்களுள்ளே சரியையாகிய அடிமை நெறியன்றி மற்றைய நெறிகளும் தெற்றென விளங்குதல் கண்கூடு.

"நீலமெறுமா றெண்ணுகியேல் நெஞ்சேநீவா நித்தலு மெம் பிரானுடைய கோயில்
புலர்வதன் முனலெடுத்து மெழுக்குமிட்டுப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்தபாடித்[புக்குப்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச் சங்கா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதி யென்றும் ஆரூரா வென்றென்றே யலறுகில்லே"

என்பது சரியை யினையும்,

"தேனுடை மலர்கள் கொண்டு திருந்தடி பொருந்தச் சாத்தி
ஆனிடை யஞ்சுங் கொண்டு அன்பினுலமை வாட்டி
வானிடை மதியஞ் சூடும் வலம்புரத் தடிகள் தம்மை
நானடைந் தேத்தப் பெற்று நல்வினைப் பயனுற்றேனே"

என்பது கிரியை யினையும் தெரிவிக்கின்றன.

"உயிராவண மிருந்தற்று நோக்கியுள்ளக் கிழியினுரு வெழுதி,
உயிராவணஞ் செய்திட் டனைகைத் தந்தாலுணரப்படுவாரோ டொட்டி வாழ்தி"

"உடம் பெனு மனையகத்துள் உள்ளமே தகளியாக
மடம்படு மூணர் நெய் யட்டி யுயிரொனுக் கிரிமயக்கி
இடம்படு ஞானத் தீயா லெரிகொள விருந்து நோக்கிற்
கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே"

"விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினல்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே"

என்பன யோக ஞானங்களை உணர்த்துவன.

"தானெனிற் ருனே யென்னும் ஞானத்தார் பத்தர் நெஞ்சுள்
தேனுமின் னமுது மானர் திருச்செம்பொன் பள்ளியாரே"

என்பது, சிவஞானபோதம், பத்தாஞ்சூத்திரத்தில், உயிர்தானென வேறு காணப்படாதது முதல்வனே யம்படி ஒற்றுமைப்பட்டு அவ்விறை பணியில் வழுவாது நிற்றல் வேண்டுமெனக்கூறிய ஞானநிலையினை உணர்த்துதல் காண்க.

"முன்ன மவனுடைய நாமங் கேட்டாள் மூர்த்தியவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னையவனுடைய வூரூர் கேட்டான் பெயர்த்துமவனுக்கே பிச்சியானுள்
அன்னையையு மத்தனையு மன்றே நீத்தான் அகன்றுளக விடத்தா ராசாரத்தைத்
தன்னை மறந்தான்தன் னுமங் கெட்டாள் தலைப்பட்டாள் நங்கை தலைவன் ருளே"

உயிர் இறைவனோடிரண்டறக்கூடுதலாகிய அத்துவிதமுத்தியைப் பெறுமாறு படிமுறையாக உருவக வரய்பாட்டால் இதில் அருளிச் செய்துள்ளார் ஞானத் தவமுனிவராகிய நம் காவேந்தர்.

இனி, உள்ளம் தூய்மையுற்று மெய்யுணர்வு பெறுதற்கேதுவாகிய கன்னெறிகள் பலப்பல காவரசர் பாடல்களில் ஆண்டாண்டுக் காணப் படுகின்றன.

"வீரதமெல்லாம் மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்"

"பொய்யனத்தையும் விட்டவர் புந்தியுள், மெய்யனே"

"சூரும்பமருங் குழன் மடவார் கடைக்கண் ணோக்கில்
தூணங்காத சிந்தையராய்த் தூறந்தோ ருள்ளப் பெரும் பயனே"

"தூறந்தார்க்குத் தூநெறியாய் நின்றுன் றன்னே"

என்பன காண்க. ஆயின் இறைவன்பால் உண்மையன்பின்றி எத்துணை நோன்புகளை மேற்கொள்ளினும் எவ்வெவற்றைச் செய்யினும் அவற்று னெல்லாம் பயனின்றென்பது அவர் கருத்தாதலை,

"கங்கை யாடிலென் காவிரி யாடி லென்
கொங்குதண் குமரித்துறை யாடி லென்
ஒங்கு மாகட லோதநீ ராடி லென்
எங்குமீச னெனாதவர்க் கில்லையே"

"வேத மோதிலென் வேள்விகள் செய்யிலென்
நீதி நூல்பல நித்தல் பயிற்றிலென்
ஓதியுங்கமோ ராறு மூணரிலென்
ஈசனே யுள்குவார்க்கன்றி யில்லையே"

என்றற்றொடக்கத்தனவாகிய கழற்றுரையால் அறியலாகும். 'அம்பலக் கூத்தனைத், தினைத்தனைப் பொழுதும் மறந்துய்வனே' 'கெக்கு கெக்கு கினைப்பவர் கெஞ்சுளே, புக்குநிற்கும் பொன்னுர் சடைப்புண்ணியன்' என்பன இறைவனை இடையருது கினைந்து அன்பினுல் உருகுதலே அவனை யடைதற்கு நெறியாமென்பது அவரது உள்ளக்கிடையாதலைப் புலப்படுத்தும். மக்களெல்லோரும் இறைவன்பால் அன்பு செய்து உய்திகூடவேண்டுமென்னும் பேரிரக்கத்துடன் அவர்களை ஆற்றுப் படுத்துவனவும், அன்புநெறியிற் நலைப்படாதாரை நோக்கி இரங்கிக் கூறுவனவும் ஆகிய பாடல்களும், பரந்த உலகியலறிவையும் புலமைத் திறத்தையும் வெளிப்படுத்துவனவாகிய உவமைகளும் பழமொழிகளும் கற்பனைகளும் அமைந்த பாடல்களும் பலப்பல உள்ளன.

"மூன்கை நோவக் கடைத்தவர் நிற்கவே
சான்கியாது சமுத்திர நஞ்சுண்டான்"

என்றாற்போல நகைச்சுவை யமைந்தனவுமுள. அவைகள் விரிவஞ்சி விடப்பெற்றன.

இறுதியாகக் கூறற்பாலது திருவைந்தெழுத்தின்பால் நாவுக்கரசர்க் குள்ள உறுதியான பற்றாகும். பாவத்தை யறுப்பதும், கடுக்கத்தைக் கெடுப்பதும், நலமிகக் கொடுப்பதும், ஞானமாவதும், கல்வியாவதும், நன்னெறியாவதும் எல்லாம் அத்திருமறையே என்கின்றார் அவர்.

'படைக்கல மாகவுன்னைத் தெழுத்தஞ்சென் நாவிற் கொண்டேன்,' 'திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்' என அன்பு ததும்பக் கூறுகின்றார்; பின் வருவதும் காண்மின்:

"நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே"

விஞ்ஞான வழி

திரு. த. பு. நவநீதகிருட்டினன் அவர்கள் M. A.,
அறிவுநூல் விரிவுரையாளர்,
அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

விஞ்ஞானமென்பது குறித்த சில பொருள்களைப்பற்றி மட்டும் கூறும் நூல் ஒன்றன்று. அது இயற்கை நிகழ்ச்சிகளைப்பற்றிக் குறித்த சிலவகைகளில் பலவகைகளில் கருதும்நோக்கம் கொண்டது. எடுத்துக்காட்டாக, வானம்பாடியொன்று ஆகாயத்தில் பாடிக்கொண்டு செல்கின்றது என்று ஒரு பொதுவான அநுபவ நிகழ்ச்சியைக்கருதலாம். இறைவனடியேபோற்றும் ஒருவன் கடவுளின் அற்புதப்படைப்பில் ஒன்றாய் அதைக் கருதுகிறான். கவியானவன் அதைத் தன்கவியில் மொழிகளால் அழகுபெற எடுத்துக் காட்டலாம் என எண்ணுகிறான். ஓவியன் ஒருவன் மனத்தில் அது அழகான சித்திரமாய்ப் பதிகின்றது. பூதவிஞ்ஞானி[1] அது ஆகாயத்தில் மேலெழும்பும் ஆற்றலை எவ்வாறு பெற்றது எனும் காரணத்தை அறிய விரும்புகிறான். உயிர்நூல் விஞ்ஞானி[2] அது பறக்கும்போது அதன் உடலின் பலபாகங்களின் அமைப்பு எவ்வாறுள்ளன என்பதை உற்று நோக்குகிறான்.

விஞ்ஞானியானவன் தன் கருத்தையூன்றி, இவ்வாறு, பலபொருள்களை அறிகிறான். பின்னர் சிதறிக் கிடக்கும் இப்பல பொருள்களிடையு முள்ள தொடர்பைப்பற்றி ஆராய்கிறான். அவற்றினின்று கிடைக்கும் முடிவுகளைத் தக்க சூத்திரங்களாக வெளியிடுகிறான். இவ்வாறு செய்வதில் அவன் 'தர்க்க நூல்'[3] முறைகளைக் கையாள்கிறான். இதுவே 'விஞ்ஞான வழி' யாகும்.

இவ்வாறு தர்க்கமுறையில் பொருள்களை அறிதலில் மூன்று வகைகள் உள்ளனவென்று அரிஸ்டாடில்[4] கூறியுள்ளனர். அவையாவன: (1) குறித்த ஒன்றினின்று குறித்த மற்றொன்றினுக்கு (அதாவது ஒப்புவமை[5]யால்) தர்க்கித்தல் (2) குறித்த ஒன்றினின்று பொதுவான

1. Physicist. 2. Biologist. 3. Logic. 4. Aristotle. 5. Analogy.

வைக்கு (அதாவது அனுமானத்தால்[1]) தர்க்கித்தல் (3) பொதுவான்றிலின்று குறித்த ஒன்றினுக்கு (அதாவது பகுத்தறிதலால்[2]) தர்க்கித்தல். இவற்றை விளக்க எடுத்துக்காட்டுகள் கூறலாம்.

(1) ஒப்புவமையால் தர்க்கித்தல்.

தாது நூலார் இவ்வுலகம் எவ்வாறு தோன்றியதென்றும், பல கோடியாண்டுகளுக்குமுன் அது எக்நிலைமையிலிருந்ததென்றும், அதன் வரலாற்றை உரைக்கின்றனர். இவ்வாறு உரைப்பதற்கு ஒப்புவமை முறையையே கையாள்கின்றனர். இக்காலத்தில் நிகழும் பல நிகழ்ச்சிகளின் விளைவுகளைக்கொண்டு, அவற்றைப் போலவே அக்காலங்களிலும் நேர்ந்திருக்க வேண்டுமென ஊகிக்கின்றனர். பண்டைக்காலமெனும் இருள்படர்ந்த குகையை, தற்கால நிகழ்ச்சிகள் எனும் விளக்கைக் கொண்டு ஆராய்கின்றனர்.

தான் வளர்த்த புட்களிலும் பூண்டுகளிலும் கண்ட சில மாறுதல்களை ஆதாரமாய்க் கொண்டு, சென்ற காலங்களில் என்ன நேர்ந்திருக்க வேண்டும் என டார்வின்[3] உணர்ந்தது 'உவமை'த்தர்க்க முறையாலேயாம்.

(2) அனுமானத்தால் தர்க்கித்தல்

கலிலேயோ[4] எனும் பூதநூலறிஞர் மழமழப்பான சரய்வுத்தட்டுகளின் சிலவற்றின்மேல், பக்குகளை உருளச் செய்தார். அப்பக்குகள் சென்ற தொலைவுகளையும் அவ்வாறு செல்வதற்கான கால அளவுகளையும் குறித்துக் கொண்டார். இவற்றினின்று தொலைவுகளுக்கும் காலத்திற்குமுள்ள தொடர்பைப்பற்றிய விதியைக்கண்டறிந்தனர்.

இம்முறையை முதன் முதலில் கையாண்டவர் பேகன்[5] இம் முறைக்கு அவர் 'புதுக்கருவி'[6] எனப் பெயரிட்டார். இம்முறையால் என்றும் உடனுறைப்பொருள்களும் உடன் மாறுதல்களையும் பொருள்களும் எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளன எனும் விதிகளை அறியலாம்.

(3) பகுத்தறிதலால் தர்க்கித்தல்.

பொதுவானவற்றினின்று, குறித்த ஒன்றின் தன்மைகளையறிதலே இம்முறையாம். வானநூலால் அறியப்பட்ட, கோள்களின் இயக்க விதிகளினின்று, நெப்ட்யூன்[7] என்ற ஒரு கோள்,[8] கோளாய்த் தொலைநோக்காடி[9]யால் காணப்படு முன்னரே, அவ்வாறான கோள் ஒன்றிருக்க வேண்டுமென உய்த்துணரப்பட்டது.

ஆனால், அனுபவத்தில் இம்முறைகள் எல்லாமோ, அல்லது சிலவோ கலப்பதினாலேயே விஞ்ஞானம் முன்னேற்றமடைகின்றது, இத்துடன், பல சிறந்த வகையில் உயரிய கருத்துக்கள் கற்பனையின் திறத்தால்

1. Induction. 2. Deduction. 3. Darwin. 4. Galileo. 5. Bacon.
6. Nourn Ogenum. 7. Neptune. 8. Planet. 9. Telescope.

வெளியாகின்றன. இக்கருத்துக்கள் அவை தோன்றும் அறிஞர் மனங்களில் அவர்களறியாமலே தோன்றி, வளர்ச்சியடைந்து வெளிவருகின்றன. இத்திறன் நீயூடன்[1] எனும் விஞ்ஞானப்பேரறிஞரிடம் முழுதும் காணப்பட்டது.

அடுத்ததாக, விஞ்ஞானிகள் 'கூர்த்தவிழி' யுடையவராக இருத்தல் வேண்டும். இச்சொற்றொடர் நேரானதும் உருவகமானதுமான இரு பொருள்களிலும் கருதப்படவேண்டும். அஃது உற்று நோக்கும் பழக்கத்தையும் துடிதுடிப்பான உளத்தையும் ஆர்வமுள்ள ஆராயும் அறிவையும் அரிய பொருள்களையும் நுண்ணிதில் காணும் ஆற்றலையும் பொதுவரையுள்ளவற்றிலும் பொதிந்துள்ள மறைபொருள்களைக் காணும் திறனையும் குறிக்கும். இதைவிட, முற்றும் விளக்குதல் கடினம். கண்ணும் கருத்தும் கலந்து, வியப்பும் சிந்தனையும் சேரும்போது, இத்தன்மை உச்சநிலை எய்துகின்றது.

விஞ்ஞான வரலாற்றைப் பயிலுவார், பல அரும்பெரும் பொருள்கள் கூர்மையான விழிகளும் ஆராயும் மனமும் கலந்ததால் கண்டுபிடிக்கப்பட்டனவென அறியலாம். இங்கு ஓர் எடுத்துக்காட்டைத் தரலாம். அஃதாவது, ராபர்ட்மேயர்[2] உயிரியூட்டலின்[3] ஆற்றலைக்கண்டுபிடித்த வரலாறுகும்.

"1840-ஆம் ஆண்டில், வேனிற்காலத்தில், அவர் சாவகத்தீவில் இருந்தார். அங்கு, தான் மருத்துவம் செய்து வந்த பிணியாளர்களின் காளங்[4]களினின்று பெருகிய குருதி மிகவும் ஒள்ளிய சிகப்பு நிறத்துடனிருப்பதைக் கண்டார். இத்தோற்றம் அவர் மனத்தைக்கவர்ந்தது. ஏனெனில் குளிர் நாடுகளிலுள்ளவரின் காளங்களிலுள்ள குருதி சற்றுக் கருநிறமாயிருப்பதை அவர் நன்கு அறிந்தவர். இதைப்பற்றிய ஆழ்ந்த சிந்தனையின்பயனாய், குளிர்நாடுகளைவிட வெப்பமான நாடுகளில், உடலின் வெப்பம் குன்றுதிருக்கச் சற்று மட்டமான உயிரியூட்டல் போதுமானதே, இவ் வேற்றுமைக்குக் காரணம் எனும் முடிவையடைந்தார். காளத்திலுள்ள குருதியின் நிறம் உயிரியூட்டலின் ஆற்றலைக்காட்டும் சின்னமாகும் என விளக்கினார். பின் உயிர்வாழ்வனவற்றின் வெப்பநிலை[5]க்கும் அவையாற்றும் உழைப்புக்குமுள்ள தொடர்புகளை யாராய்ந்து, வெப்பத்திற்கும் உழைப்புக்குமுள்ள பொருத்தங்களைப் பற்றிய விதிகளைக் கண்டுபிடித்தார்."

இயற்கை எப்பொழுதும் தன் மறையின் அறிகுறிகளை வெளிப்படுத்திக்கொண்டேயுள்ளது. அவற்றில் எவை உன்னிக்காணவுகந்தவை யென்றும், எவை புறக்கணிக்க வேண்டியவை யெனவும், பிரித்துக்கூற எவரும் துணியார்.

பின், எவ்வகையான வினைவையும் விஞ்ஞான முறையில் ஆராயுமுன், அதைப்பற்றிய உண்மையான ஆதாரவுகளைச் சேர்க்க வேண்டும்.

1. Newton. 2. Robert Meyer. 3. Oxidation. 4. Veins. 5. Temperature.

அனுபவம் நாம் விரும்பும் வண்ணமே யிருத்தல் அரிது. ஆதலின் நாம் கேட்ட வினாவிற்கு விடையளிக்கச் சிறிதேனுமாயினும் பயன்படும் எனத்தோன்றும் அனுபவ நிகழ்ச்சிக்குறிப்புக்களைத் திரட்டவேண்டும். பின் அவற்றை ஆராய்ச்சியால் சலித்தெடுக்கவேண்டும் அதன்பின் அவை தோன்றுவதற்கான காரணங்களை யறிந்து விதிகளைக் கூறவேண்டும். இறுதியாக, சோதனை வாயிலாய் அவ்விதிகள் உண்மையானவையென நிலைநாட்டவேண்டும்.

இன்னும், விஞ்ஞான முறைக்கு 'அளவை'[1]யே ஆதாரமாயுள்ளது. அளவுகோல் அல்லது கருவிகொண்டு அளத்தல் மட்டுமில்லாது, அனுபவத்தில் திட்டமாகக் கணக்கிடக்கூடியவையெல்லாம் 'அளவை' யெனப்படலாம். உறுதியாகவும் நுணுக்கமாகவும் அளத்தல், புத்தம் புதிய பொருள்களைக் கண்டுபிடிப்பதைவிடக் கீழான நோக்கம் என விஞ்ஞானத்தைப் பற்றிச் செம்மையாய் அறியாதவர் எண்ணலாம். ஆனால் 'விஞ்ஞானம் கண்ட பல அரும் பெரும் பொருள்கள் பிழையற அளக்கப்படுவதாலும், பொறுமையாய் நெடுதுசெய்த உழைப்பாலும் கிடைத்த எண்ணிக்கை வடிவானவற்றைச் சலித்து எடுத்தனவேயாம்,' எனக் கெல்வின்பிரபு[2] கூறுகின்றார். உவில்லியம் இராம்சே[3], காற்றினின்று, மடியம்[4] - மறையம்[5] - புதியம்[6] எனும் வாயுக்களைக் கண்டுபிடித்த வரலாறு இதற்கோர் சிறந்த எடுத்தக்காட்டாகும். காற்றையும், அதிலுள்ள வெடியம்[7] - உயிரியம்[8] - நீராவி[9] - கரியீரூயிரி[10] இவற்றையும் நிறுத்தபோது, காற்றின் நிறைக்கும் வாயுக்களின் மொத்த நிறைக்கும், பதினாயிரத்திலொருபங்கு இலக்கத்தில் நுண்ணிய வேற்றுமை காணப்பட்டது. இதை, அவர் கவனித்து, அது சோதனைப்பிழை[11]யல்லவென்றுகண்டு அதற்குக்காரணம் அறியமிகத் திட்டமான ஆராய்ச்சிகள் செய்து, காற்றில் அதுவரைகண்டு பிடிக்கப் படாத பல புது வாயுக்கள் உள்ளனவென்று அறிந்து அவற்றைத் தனியே பிரித்துக்காட்டினார். அவ்வாறு கண்ட வாயுக்களே முற்கூறிய மடியம் - மறையம் - புதியம் என்பவை.

திரட்டிய பலபொருள்களை விஞ்ஞானம் ஒழுங்குபடுத்தவேண்டும். இதற்கு இன்றியமையாத உழைப்பு, பொருள்களைத்திரட்டும் உழைப்பை விட எவ்வகையிலும் குறைந்ததன்று. பிறகு வகுத்து, அடிப்படையான விதிகளைக் கண்டு பிடிக்கவேண்டும். இவ்வாறு செய்வதற்கு, முதலில் ஒரு 'கருதுகோள்'[12] வேண்டும். 'கருதுகோள்' என்பது ஆராய்ச்சியாலறிந்தவற்றைப் பொதுவிதியாக்கி நிலைநாட்டுமுன் ஆராய்ச்சியாளர் ஊகிக்கும் அனுமான விதியாகும். விஞ்ஞான துறையில் கருதுகோள்கள் ஊகிக்கப்படுகின்றன. பின் அவை சோதனைக்குட்படுத்தப் படுகின்றன.

---

1. Measurement. 2. Lord Kelvin. 3. William Ramsay. 4. Argon.
5. Krypton. 6. Neon. 7. Nitrogen. 8. Oxygen.
9. Walevapour. 10. Carbondixide. 11. Experimental Error. 12. Hypothesis.

சோதனையில் வெற்றி பெற்றால் 'கருதுகோள்' 'விதி' யாகி எல்லா ராலும் ஏற்றுக் கொள்ளப் படுகின்றது. சோதனையில் தவறினால் அக்கருதுகோள் ஒதுக்கப்பட்டு வேறொன்று ஊகிக்கப்பட்டு சோதனைக் குட்படுத்தப்படுகின்றது. இவ்வாறு, பெரும்பாலான விஞ்ஞான முடிவுகள், நீண்டகால ஆராய்ச்சிக்கும் சிந்தனைக்கும் உட்பட்ட பின்னரே வெளிவருபவையாகும். விஞ்ஞான முறையில் இறுதியாக கிலைகாட்டப்பட்ட பொருள்களைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் கூறவேண்டும். அஃதாவது, அவற்றைச் சூத்திரங்களாக்க வேண்டும். விதிகள் சொல்லப்படவேண்டும். புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டவை பழைய விதிகளுக்குட்பட்டவையா வென அறியப்படவேண்டும். புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட விதி அனுபவத்துடன் இயைந்ததாய் இருத்தல் வேண்டும். எல்லோரும் தக்க சான்றுகளுடன் ஏற்றுக் கொள்ளும் வகையில் அமைக்கப்படவேண்டும்.

இவற்றினெல்லாம், விஞ்ஞான வழிக்கு அடிப்படையான ஒரு விதி உண்டு என உணர்கிறோம். அது இயற்கையின் சீர் என்பதேயாகும். இயற்கையில் அடிப்பொருள்கள் மாறுதலையென்றும், ஒரே வகையான தருணங்களில் மீண்டும் மீண்டும் ஒரே வகையான நிகழ்ச்சிகள் நேரிடு கின்றன என்பதையும், இயற்கையில் மாற்ற முடியாத ஒழுகலாறு உள்ளது என்பதையும், ஒவ்வொரு நிகழ்ச்சியும் அதன் முன் நிகழ்வ தால் உருவாக்கப்படுகின்றது என்பதையும் உணர்கிறோம். வானநூல் போன்ற உறுதியான விஞ்ஞான நூல்களில் இவ்வொழுங்கு சற்றேனும் மாறுமல் காணப்படுகின்றது. உயிர்நூலில் இவ்வாறு திண்ணமாய் மூற்றும் கூறமுடியாவிடினும், சிலபகுதிகளில் கூறலாம். மற்றப் பகுதிகளில் இவ்வாறான திண்ணமான விதிகள் இன்னும் கண்டுபிடிக்கப் படவில்லை. விஞ்ஞான முன்னேற்ற விரைவில், நிறுதுகாலத்திலேயே அவை கண்டுபிடிக்கப்படும் என்பது திண்ணம்.

சாமான்னியமக்களுக்காகும்
சங்கீதத்தின் உருவமும் சாகித்தியமும்.

இசைத்தமிழ்ச்செல்வர்
திரு. தி. இலக்குமண பிள்ளை அவர்கள் B. A.
திருவனந்தபுரம்.

சங்கீதப் பயிற்சி இல்லாதிருப்பினும், சாமான்னிய மக்களிற் பெரும்பாலார் சங்கீதம் கேட்க விருப்பமுடையவராயிருக்கின்றனர். அவர்கள் இயற்கைவாசனையுள்ளவர்களாயிருக்கின்றனர். இயற்கைவாசனைக்கு ஞானம் என்றொரு பெயர் அளிப்பதுண்டு. சங்கீதம் கேட்டானந்திப்பதற்கான ஆசையே அந்த இயற்கை ஞானத்திற்கு அடையாளமாகும். சிங்கண்ணி மூத்தால்முதலியென்று பெயர்பெறுவதுபோல், ஆசை முதிர்ந்தால் ஞானம் ஆகும். சங்கீதத்தில் விருப்பமுள்ளோர்க்கு கல்ல சங்கீதம் அடிக்கடி கேட்க வாய்ப்பு உண்டாகுமேல், அவர்கள் சங்கீத ஞானத்தில் பின்னும் முதிர்ச்சி அடைவார்கள்.

சங்கீதக் கச்சேரிகளில் பாடகர் ஒரு இராகத்தை ஆலாபனை (ஆளத்தி) செய்யவோ, கல்ல பல்லவிகளைத் திரிகாலங்களில் கிரவல் செய்து பாடவோ, உயர் தரத்தனவரகிய வர்ணங்களையும் கிருதிகளையும் பாடவோ, செய்தால், அது சிலர் மனத்துக்குப் பிடிக்காமல், பாட்டுக் கச்சேரியை விட்டு உடனே அவர் ஒருக்கால் எழுந்து போகாமலிருப்பினும், அயலிருப்பவரோடு உரையாடி நேரத்தை வறிதே கழிப்பர். அப்படிச் செய்வதால், அவர்களுக்குச் சங்கீதத்தில் ஞானமில்லையென்று அறுதியிட்டுக் கூறவொண்ணாது. இவ்வாறுள்ள பெரும்பாலாரகிய சாமான்னிய மக்களுக்கு எவ்வித சங்கீதத்தைக் கொடுக்கவேண்டும்? அவர்களுடைய இயற்கை ஞானத்தைக் கெடுத்துவிடாமல், எவ்வாறு அவர்களுக்கு இனிதமான சங்கீதத்தை யளித்து வளர்க்கவேண்டும்? இஃதொரு சூழல். இதற்கு விடையளிக்க, சங்கீத உருவத்தைப்பற்றி ஆராய முதலாவது எடுத்துக் கொள்வோம்.

---

* இக்கட்டுரை திருச்சிராப்பள்ளி அகில இந்திய வானொலி நிலைய மேற்பார்வையாளரின் உடன்பாடு பெற்று வெளிவருகிறது.

சாமான்னியமக்களுக்காகும் சங்கீதம்

இந்திய சங்கீதத்தின் உருவம் முக்கியமாகக் கீழ்க்கண்ட நான்கு வகைகளிலும் அமைத்து கிடக்கின்றது :—

1. கர்ணடக சங்கீதம்
2. ஹிந்துஸ்தானி சங்கீதம்
3. தமிழ்ப் பண்
4. சோபான சங்கீதம்

கர்ணடகமும் ஹிந்துஸ்தானியும்

இவற்றில், முதல் இரண்டையும் இவண் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொளவோம் கர்ணடக சங்கீதம் தென்னிந்தியாவுக்கும், ஹிந்துஸ்தானி சங்கீதம் வட இந்தியாவுக்கும் உரியது. வேங்கடமகி 17-வது நூற்றாண்டில் 72-மேள கர்த்தாக்களை வகுத்த பிறகுதான் இரண்டு ஏற்பாடுகளுக்கும் இடையே வேற்றுமை யுண்டாயிற்றென்றும், அதற்கு முன் இரண்டுக்கும் முழுவொற்றுமை யிருந்ததென்றும் சிலர் கருதுகின்றனர். சற்று நிதானமுகூர்ந்தால், இவ்வபிப்பிராயத்திற்குச் சரியான அடிப்படை இல்லையென்று தெரியவரும். வேங்கடமகிக்கு முற்பட்டே அக்பர் சக்ரவர்த்தியின் காலத்தில் 72 மேளகர்த்தாக்கள் வட இந்தியாவில் கடைபெற்றிருந்தன என்று மாளவகாட்டு ராஜகரப் பாடகர் நாஸறுடின் என்பவர், 18 இராகங்கள் வீதம் அடங்கிய 4-தருபத்துக்களைப் பாடிக்காட்டி, மதராஸ் சங்கீத அக்காடமி முன்னிலையில் மூன்று வருடங்களுக்கு முன்பு வெளியிட்டார். இவர் கூறியது உண்மையாயின், 72-மேளகர்த்தாக்களின் பெயர்களை மட்டும் வேங்கடமகி மாற்றி அமைத்தாரேயன்றி, அவற்றை உற்பத்திசெய்தார் என்று கூறவொண்ணுது. காஸறுடினது கூற்றினுல், வட இந்திய சங்கீதத்திற்கும் தென்னிந்திய சங்கீதத்திற்கும் ஒருவகை ஒற்றுமைப் பாடு முன்னமே இருந்ததென்று தோன்றலாம். இரண்டு ஏற்பாடுகளிலும் இராகப் பாகுபாடுகளின் பொது இயல்புகள் ஒன்றுயிருப்பினும், சிறப்பியல்புகளில் இரண்டிற்கும் மிகுந்த வேறுபாடுகள் உள்ளன என்பது மறக்கற்பாலதன்று. மொழி, இராக உருவம், பாணி (அல்லது கடை,) பாடும் சம்பிரதாயம், இராக பாவங்கள், பாடுவோரின் இயற்கைத்தன்மை முதலியவற்றுல் கூரியவேறுபாடுகள் உண்டாயிருக்கின்றன. அவ்வேறு பாடுகளை அநுசரித்துத், தொழில் செய்முறை, கற்பனைப்போக்கு இலக்கிய இலக்கணங்கள் முதலிய பல அம்சங்களும் மாறு பட்டிருக்கின்றன என்பது வெளிப்படை. ஹிந்து சங்கீதத்தைப் பற்றி நூல் எழுதியிருக்கும் காப்டன் டே (Captain Day) என்பவர், தற்காலத்தில் தென்னிந்தியாவில் வழக்கத்திலிருக்கும் இரு வேறு உருவங்களில், ஹிந்துஸ்தானி சங்கீதமானது வங்காளத்தில் வழங்கி வரும் சங்கீதத்தைச் சற்றே ஒத்திருக்கிறதென்றும், அது முக்கியமாக மகம்மது சங்கீதக்காரர்களால் கையாளப்பட்டும், கர்ணடக சங்கீதம் தென்னிந்தியாவிலுள்ள மக்களால் வழங்கப்பட்டும் வருகிற தென்றும், இரண்டிலும் கர்ணடக சங்கீதம் மேம்பட்டதென்றும் கூறுகிறார்.

இரண்டு ஏற்பாடுகளுக்கும் ஒருவகையில் ஒட்டு இல்லாமலில்லை. உதாரணமாக, தோடி, பைரவி, கல்யாணி, இவ்வாறு சில தென்னிந்திய இராகங்களை வட இந்தியரும், பிஹாகு, கானடா, கமாசு முதலிய சில வடஇந்திய இராகங்களைத் தென்னிந்தியரும் எடுத்து, உருமாற்றித் தங்கள் தங்கள் ஏற்பாட்டிற்குள் நுழைத்திருக்கிறார்கள் என்பது அநுபவத்தில் தெரியவருகின்றது. இதனால், இரண்டு ஏற்பாடுகளும் ஒன்றுதான் என்று முடிவுகட்டுதல் பொருந்தாது. ஆங்கிலமொழியானது, லத்தின், கிரீக் முதலிய பிறமொழிகளிலிருந்து பலப்பல சொற்களை யெடுத்துத் தனதாக்கிக்கொண்ட போதிலும், அம்மொழி தனது தனி இயல்புகளோடு இயங்கி எவ்வாறு நிலவுகின்றதோ, அவ்வாறே இந்திய சங்கீத ஏற்பாடுகளும் பிறகலப்புக்கள் சற்றே உடையனவாயினும், தனித்தனி இயல்புகளோடு இயங்கி நிலவுகின்றன.

இனி, ஹிந்துஸ்தானி சங்கீத பாணிகளை (கடைகளை)க் கர்னாடக இராகங்களுள் நுழைத்துப்பாடுதல் முறையே என்பது ஒரு சூழல். அப்படி நுழைத்துப் பாடினாலும், அத்திரிபுகளைச் சாமான்னிய மக்கள் அறிந்து கொள்ளாமல் இருக்கலாம். அல்லது, அத்தகைய திரிபுகள் அவர்கள் காதுக்கு மிக இனிமையாகவே புலப்படலாம். ஆனால் அப்படிச் செய்வது ஒரு அளவு கடந்தால், கேட்போரின் சங்கீத ஞானத்தூய்மையில் திரிபுண்டாக்குவதோடு, கர்னாடக இராகங்களின் தனிப்பெரும் இயல்பினையும் போக்கினையும் அடியோடே அழித்து விடும், அதாவது, கர்னாடக சங்கீதத்தின் தனிஉருவம் முற்றிலும் சிதைந்து, மாறுபட்டுக் கெடும், என்பது திண்ணம். பருப்பு, சாம்பார், ரஸம், மோர்க்குழம்பு, முதலிய கறிபதார்த்தங்களோடு ஒரு மூலையில் சர்க்கரை மிட்டாயும் சற்றுப் பரிமாறினால், பின்னும் அத்தச் சாப்பாடு தென்னிந்தியாதே என்று சொல்ல இடமுண்டு. ஆனால், மிளகுத்தவாறும் மிட்டாய், ஜிலேபி, முதலிய வகைகளை வைத்து, மற்றக் கறிவகைகளை எடுத்துவிட்டால், அதை என்ன சாப்பாடென்று சொல்வோம்?

கர்னாடக சங்கீதம் கேட்டனந்திப்போரை இருபெருங்கூறுகப் பிரிக்கலாம். ஒன்று, சங்கீதத்தால் செவிக்குவரும் இன்பத்தைமட்டும் குறியாகக்கொண்டு கேட்போர். இரண்டு, செவிக்கு வரும் இன்பத்தோடு, கர்னாடக சங்கீதம் ஆத்மீக வாழ்வுக்கும் உரிமையுடையதால், வேறு குறிக்கோள்களை மாத்திரம் கைக்கொண்டு நிற்கும் ஏனைய சங்கீத பாணிகளை அதனுடன் கலப்பது அவ்வாத்மீக வாழ்விற்கு இடையூறு விளைக்கத்தக்கது என்ற கொள்கையுடைய சங்கீத நேயர்கள்—முதல் வகுப்பைச் சேர்ந்தோருக்கு ஹிந்துஸ்தானி பாணிகளை ஒரு அளவுக்குக் கலப்பதனால் சங்கீதத்தின் சுவை குன்றாது; குன்றினும், அதில் ஊறும் சுகானுபவத்தில் அவர்கள் அதை யறியார்கள். கர்னாடக சங்கீதத்தில் ஆத்மீக * இலக்கியமும் பண்பும் உள்ளன என்று கம்பிக்கை கொண்டிருக்கும் இரண்டாவது வகுப்பினர்க்கோ, உலக இன்பம் மட்டிலும் மிக மலிந்த ஏனைய பாணிகள் கலந்து வருவது கடிய உவர்ப்பையே

* குறிக்கோள்.

சாமான்னியமக்களுக்காகும் சங்கீதம்

கொடுக்கத் தக்கது. ஆதலால், இன்ப துகர்ச்சியைமட்டும் விரும்பும் சாமான்னியருக்கு, வேண்டுமானால், ஹிந்துஸ்தானி பாணிகளைச் சற்றுக் கலக்கும், மற்றையோருக்கு அக்கலப்பிலீன அறவே ஒழித்தும், பாட்டுக் கச்சேரிகள் நடத்துவது நலமாயிருக்கும். ஆனால், கர்நடக சங்கீத சாகித்தியங்களில் ஹிந்துஸ்தானி பாணிகளைக் கலப்பது எவ்வாற் றும் தகுதியுடையதல்ல; அது அச்சங்கீதத்தின் தனி இயல்பையும் தனிச்சிறப்பையும் அடியோடே குலைத்துவிடும். இவ்விடத்தில், 'ஹிந்து இராகங்கள் ஆத்மீக உணர்ச்சிகளை உடையன', என்று டிக்கின்ஸன் என்னும் ஆர்கன்வாசிப்பில் பெயர்போன அமெரிக்க சங்கீத வித்வான் சொன்ன வாக்கியம் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது.

தமிழ்ப் பண்கள்.

இவற்றை ஓதுவார்கள் தேவாரம், திருவாசகம், முதலிய பத்திப் பாடல்களுடன் கலந்து பாடுவார்கள். இவை பத்தியுணர்ச்சியை எழுப்புவதில் தலைசிறந்தன என்பது அநுபவத்தால் தெரியவரும்.

சோபான சங்கீதம்.

இது கேரள நாட்டுப் பழைய சங்கீதம். இதிலுள்ள இராகங்கள் தமிழ்ப்பண்களோடு தொடர்புடைய தேன்மையுடையன. அவை கதைகளி முதலான பாட்டுக்களில் பாடப்படும். 'புறநீர்மை' என்ற தமிழ்ப்பண் இவ்வேற்பாட்டில் 'புறநீர்' என்ற பெயருடன் இப்போதும் வழங்கி வருவது ஆராய்ச்சியாளரின் கவனத்தைக் கவரத்தக்கது.

சாகித்தியம், அல்லது, இசைப்பா.

இவ்விடத்தில் சாகித்தியம் என்பது சங்கீதத்திற்கு இசையக்கூடிய இசைப்பாவைக் குறிக்கும். தமிழில் இசையென்னும் பெயரே பல இயற்பாக்களுடனே தொடர்பை இசைத்தலால், வந்தது என்பது சான்றோர் கருத்து. ஆனால், ஒரு தோக்கில், தமிழ் மொழியில் சங்கீதத்தை இசைக்கக்கூடாத சாகித்தியம் ஒன்றுமேயில்லை யென்று கூறலாம். சிந்து முதலிய ஒன்பது வகை இசைப்பாக்களும், பிள்ளைத்தமிழ் முதல் சிறுகாப்பியம் ஈறாக உள்ள தொண்ணூற்றாறு செய்யுள் வகைகளும், சந்தப்பாக்களும், சங்கீதத்துடன் இசையக்கூடி யனவேயன்றி, வேறல்ல. பாவினங்கள் எல்லாம் தாளப் பத்ததி களுள் உள்படுவனவே. தாளத்திற்கு அயல்வீடு இராகம். உதாரணமாக, இப்போதும் கட்டளை கலித்துறைக்குப் பைரவியும், வெண்பாவிற்குச் சங்கராபரணமும், ஆனந்தக்களிப்புக்கு காதகாமக்கிரியையும் இசைத்துப் பாடுதல் மரபாயிருக்கின்றது. தேவாரத்தில் அப்பர் திருத்தாண்டகத்திலும், திருஞானசம்பந்தர் யாழ்முரியிலும் தனித் தனித் தமிழ்ப்பண்கள் இசைக்கப் பட்டிருக்கின்றன. சாமான்னிய மக்களுக்கு இவையெல்லாம் மகிழ்ச்சியை அளிக்கக் கூடியனவே. எவ்வாறென்றால், பாட்டின் பொருளும் சங்கீத உணர்ச்சியும் ஒன்று படுவதால், இருவகைப் பயன் பாடும் மனதிற்பதிந்து, அவர்கள்

அகவுணர்ச்சியை நன்கு எழுப்புவனவாயிருக்கும். இவ்வகையால், நாம் உய்த்துணரக்கூடிய இரண்டு விடயங்கள் உள்ளன. அஃதாவது, சாகித்தியங்களே இரண்டு பெருவகுப்புக்களாகப் பிரிக்கலாம்.

1. **உரையியல் சாகித்தியங்கள்** அஃதாவது, உரை நடை யிருக்கும், சங்கித நடை சுருங்கியும், இருக்கும் சாகித்தியங்களாம்.

2. **இசையியல் சாகித்தியங்கள்** அஃதாவது, சங்கித நடை யிருக்கும், உரை நடை சுருங்கியும், இருக்கும் சாகித்தியங்களாம்.

இவற்றில், முதலாவதை, றெஸிடேடிவ் மியூஸிக் (Receitative Music) என்றும், இரண்டாவதை, லிறிக்கல் மியூஸிக் (Lyrical Music) என்றும், கானவிசாரதா எம். எஸ். இராமசுவாமி ஐயர் அவர்கள் விசதமாக வகுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

திரு. தியாகய்யர் அவர்கள் தென்னிந்தியாவில் தோன்றும் அக்காலவரைக்கும் வழக்கத்திலிருந்த சாகித்தியங்கள் புரந்தரதாஸ், இராமதாஸ், அருணாசலக்கவிராயர், கவிகுஞ்சரபாரதியார், ஆதியோரின் நிர்த்தனங்களே. இவை மூன்குறிப்பிட்ட உரையியல் சாகித்தியங்களேயாம்; சங்கீதப் பகுதியில் தனிச்செப்பமுடைய இசை யியல் சாகித்தியங்களல்ல. சங்கீதத்தில் கூர்ந்த ஞானமோ, ஆழ்ந்த பயிற்சியோ இல்லாத சாமான்னியமக்களுக்கு இவ்வித சாகித்தியங்களே ஏற்புடையன வாயிருக்கும். முதற்படியில், தியாகய்யர் கிருதிகளைப் போன்ற அதிக சங்கதிகளும், பிருகாக்கள் என்னும் துடுக்கான சுரத் தொகுதிகளும் அடங்கிய சாகித்தியங்கள் அவர்களுக்குச் சுவை யுள்ளனவாயிரா. ஆதலின், முதற்கண் அவர்களுக்கு ஆசை யுண்டாக்கிச் சங்கித ஞானத்தை வளர்ப்பதற்கு உரையியல் சாகித்தியங்களும், இசை மணம் மிகுந்த கிருதிகளை யொழித்து, இலயபாகத்தில் அமுத்தமுள்ள சாகித்தியங்கள், அஃதாவது, தில்லானா, நொண்டிச் சிந்து, விருத்தம், வண்ணம் ஆதியான சில்லரைவகை சாகித்தியங்களும் பொருத்த முடையன வாயிருக்கும். அவர்களுடைய ஞானம் வளர, வளர, வர்ணம், கிருதி முதலிய இசையியல் சாகித்தியங்கள் கற்பிக்கத்தகுந்தனவா யிருக்கும். கிருதிகளுள்ளும், அதிக சங்கதிகள் இல்லாதவற்றையே முதற்கண் கற்பிக்கவேண்டும்.


கற்பிக்கும் முறை.

சங்கீதம் பயில விருப்பமுள்ள சாமான்னிய மக்களுக்கு முதலாவது இலக்கிய சங்கீதத்தில் சுவையுண்டாகும்படிச் செய்து, பிறகுதான் இலக்கணசங்கீதத்தைக் கற்பிக்கவேண்டும். இதன் காரணம் வெளிப் படை. இயற்கை ஞானமுடைய யாதொரு மாணவனும் ஆரம்பத்தில் சுரஞானமோ, இலயஞானமோ பெற்றிரான். ஆதலின், இருக்கிற ஞானத்திற்குத் தகுந்தபடி எளிதான சாகித்தியங்களைக் கற்பித்த பிறகு தான் சுரப்பாடல்களைத் துவக்கவேண்டும். இது பரம்பரையாகச்சங்கீதம் பயிற்றுவிக்கும் முறைக்கு முரண்பாடாகத் தோன்றலாம். ஆனால், காம் எடுத்துக்கூறியது இயற்கையைத் தழுவிப் போகும் முறை; சங்கீதப்படிப்பை மகிழ்ச்சியோடுகொண்டு செல்லும் முறை-மற்றது இயற்கைக்கு முரணும் வல்லினமுமான முறை. இராகங்களை ஆலாபனை (பழந்தமிழில் 'ஆளத்தி') செய்யும் முறைகள் பல உள்ளனவாயினும், மாணவனுக்கு எடுத்த இராகத்தை ஆரோகண அவரோகண சுரங்களைத் தழுவி தாரஸ்தாயி (அதாவது, உச்சஸ்தாயி) மத்யமம் வரைச் சென்று திரும்பி, இராகத்தின் பொது உருவம் மட்டும் தெரியும்படி சுருக்கமாய்ப் பாடி நிறுத்துதல் போதுமானது. மற்று விரிவான முறைகளைக் கேள்வியால் அவன் ஞானம் முதிர்ச்சிபெற்று வரும்போது தானே கையாண்டு கொள்ளலாம்.



காஞ்சேயம்

சேதுசமஸ்தான மகா வித்துவான்
பாஷாகவிசேகரர்.
ரா. இராகவையங்கார் அவர்கள்



காஞ்சேயம் கொங்கு நாட்டின் ஓர் பகுதியாகும். தென் தமிழ் நாட்டில் ஆகிரையாலும், ஆனேற்றூலும் தலைசிறந்த பெருகிலம் இஃதாகும். ஆகிரை நிறைந்த இத்தமிழ் நிலம் ஒரு தமிழ்ப் பெயரைப் பெறுது காஞ்சேயம் என வடமொழிப் பெயர் பெற்று விளங்குவதன் காரணம் ஈண்டு ஆராயப்படும்.

தமிழ் வேந்தர் மூவர் நாட்டுள்ளும் சேரர் நாட்டிலேதான் பசுச் செல்வம் மிக்கு இருந்ததென்பது பழைய சங்கநூல்களால் நன்கறியக் கிடப்பது.

> "தன்னூட்
> டியாடுபொரந் தன்ன மாவி
> னுபாந் தன்ன யானையோன்குன்றே" (பதிற்றுப்பத்து - 78)

எனப் பதிற்றுப்பத்துள் வருதலான் இஃது நன்கு அறியலாகும். இதன்கண் குதிரை மிகுதிக்கும், யானை மிகுதிக்கும், சேரர் தங்கள் நாட்டு ஆடுகளையும், ஆவையும் உவமை கூறுதல் காணலாம். இதனால் இச்சேரர் வதிந்த நாடு ஆடும் ஆவும் நிறைந்த நாடென்பது புலனாகும். இவ்வாறு புறப்பாட்டிலும்,

> "எருமை யன்ன கருங்கல் லிடைதோ
> றுணிற் பரக்கும் யானையூன்பிற்
> கானக நாடனை நீயோ பெரும" (புறம் - 5)

என்று சேரன் பாடப்படுதல் கண்டு கொள்ளலாம். இதனால் இக்காட்டு எருமை இடந்தாற்போன்ற கருங்கற்கள் மிகுந்தனவென்றும், அவற்றின் இடையெல்லாம் ஆனினங்கள் பரந்து மேய்வனவென்றும், அது கானக நாடென்றும் அறியலாம்.

சேரரிற் பழையவனாகக் கருதப்படும் **உதியன்சேரல்** வதிந்த குழூமூரை, 'கல்லான் பரப்பிற் குழூமூர்', (அகம்-168) என அகப் பாட்டிற் சிறப்பித்தல் காண்க.

"பல்லான் குன்றிற் படுநிழல் சேர்ந்த
நல்லான் பரப்பிற் குழுமூர் ராங்கண்
... ...
உதிய னட்டில் போல"

என்பது அகப்பாட்டு. இதனுள் உதியன் வதிந்த குழுமூர் பல்லான்களை யுடைய ஒருசிறுகுன்றுகளும், கல்லான் பரப்புகளு முடைமைகூறினர். இவற்றுக்கேற்பவே 'மன்று நிறையும் நிரைகளே'ப் பரிசிலர்க்குச் சேரன் செல்வக்கடுங்கோவழியாதன் வழங்கினன் எனக் குண்டுகட் பாலி யாதனர் கூறினர்.

"மன்று நிறையும் நிறையென்கோ
மனைக்களமொடு களமென்கோ
ஆங்கவை, கனவென மருளவல்லே கனவி
னல்லி யோனே" (புறம்-387)

என்பது காண்க.

இவ்வாறு சேரரும், சேரநாடும் பசுச்செல்வத்தாற் சிறப்பிக்கப் பட்டிருப்பது ஒருபுறமாகவும் 'கொங்கர்' ஆபரந்தன்ன செலவில், (பதிற்று-77), 'ஆகெழு கொங்கர் நாடு,' (பதி. 22) 'கொங்கர்' படுமணி யரய நீர்க்கு நிமிர்ந்து செல்லுஞ், சேதாவெடுத்த செங்நிலக் குரூஉத் துகள், (அகம்-79) எனக் கொங்கரும், கொங்கர்நாடும் மற்றொரு புறமாகவும் சிறப்பிக்கப்படுதல் சங்க நூல்களிற் காணலாம்.

கொங்கர்கோன் சேரனே என்பது 'நாரரி நறவிற் கொங்கர் கோவே' (பதிற்று-88) எனவும், 'கட்டிப் புழுக்கிற் கொங்கர் கோவே' (பதிற்று-90) எனவும் பதிற்றுப் பத்துள் வருதலான் கன்கறிந்தது. இச்சங்கநூல் வழக்கிற்கேற்பவே நிவாகரம், பிங்கலம், சூடாமணி முதலிய நிகண்டுகள் எல்லாம் 'கொங்கனைச்சேரன்' எனவேகூறும். இச்சங்கநூல் வழக்கெல்லாம் வடித்துணர்ந்த கச்சியப்ப முனிவர் பேரூர்ப் புராணத்தில் 'கொங்கனென விள்ளும் கோதை' என விளக்கிக் காட்டினர். ஆழ்வார் திருமங்கை மன்னன் 'தென்னுடன் குடகொங்கன் சோழன் சேர்ந்த திருநறையூர்' என்றதனும் சேரனைக் கொங்கன் எனக்கூறினர். சேரகுல வேந்தராகிய குலசேகரப்பெருமாள் 'கொங்கர்கோன் குலசேகரன்' என்றார். சேரரை அட்டகளம் கூறிய களவழியிற் பொய்கையாரும் 'கொங்கரை அட்டகளத்து' என விளக்கியுரைத்தார். இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்து வேட்டுவ வரியில் கண்ணகியை மேலே கொங்கிற் கோயில் கொள்பவளாகக் கருதிக் 'கொங்கச்செல்வி' என முற்படக்கூறிக் காட்டுதல் காணலாம். அரும்பதவுரைகாரரும் மேல் கோயில்கொள்ளும் இடம்கூறுதல் என ஆண்டு உரைகூறுதல் காண்க. பாண்டிக்கோவை உடையாரும் 'கோவுண்டைகோட்டாற்றழித்த கோன் கொங்கரட்ட' எனப் பாண்டியனைச் சேரனுடைமை கூறுதல் காணலாம். வில்லிபுத்தூரரும் 'சென்னிநாடு குடகொங்கநாடு.....செந்தமிழ்க் கன்னிநாடு' எனச்

சேரநாட்டைக் கொங்குநாடாகவே கூறுதல் காணலாம். அருணகிரி நாதர் 'சேரர்கொங்கு' என்றார். இவற்றுள் ஆபரந்த சேரநாடும், ஆகெழு கொங்கர் நாடும் வேறு வேறுகாது ஒன்றுதல் நன்கு துணியலாம்.

மேல்கடற் பக்கத்துள்ள கடன் மலிநாடு ஆகிரையாலும், குதிரை களாலும் வறுமைப்பட்ட தென்பது கண்கூடாகக் கண்டது. திரு. நாகமையர் அவர்கள் எழுதிய திருவனந்தபுரம் மான்யூலால் இவ் வுண்மையுணர்க.

பதிற்றுப்பத்து எண்பத்துநான்காம் பாட்டில்,

"கொடிநுடங் காரெயி லெண்ணுவரம் பறியா
பன்மா புரந்தபுல மொன்றென் றெண்ணுது
வலியை யாதனற் கறிந்தன ராயினும்"

என்புழி இச்சேரநாடு பன்மாபரந்த புலம் உடைமை கூறுதல் காணலாம். பசுச்செல்வத்தாற் சிறப்பித்தற்குரிய நாடு தமிழ்நாட்டில் இரண்டாகாது கொங்கு நாடு ஒன்றேயாதல் கண்கூடாகக் கண்டுகொள்க. மூவேந்த ருள்ளும் சேரனே பசுநிரையைத் தன்னாட்டுப் பாதுகாத்து ஓம்பினன் என்பது,

"காவலன் ஆநிரை நீர்த்துறை படீஇ
கோவலர் ஊதும் குழலின்பாணியும்"

எனச் சிலப்பதிகாரத்து நீர்ப் படைக்காதையால் அறிந்தது. ஈண்டுக் காவலன் ஆநிரை என்பது சேரன் செங்குட்டுவன் ஆநிரை என்றவாறு. இச்செங்குட்டுவன் வடநாடு புக்கு வடவாரியரை வென்று ஆண்டு இமயத்தினின்று உற்பவித்து ஓடும் கங்கைக் கரையின் உள்ள கல்ல பசுக்கூட்டங்களைக் கன்றொடு கொணர்ந்து தன்னாட்டு ஆநிரையோடு வளர்த்துப் பெருக்கினன் என்பது.

"இன்பல்லருவிக் கங்கை மண்ணி
இனக்தெரி பல்லான் கன்றொடு கொண்டு"

என வருதலான் நன்கு அறிந்ததாகும். இளங்கோவடிகளும்,

"வில்லவன் வக்தான் வியன்பேரிமயத்துப்
பல்லான் னிரையொடு படர்குவிர் நீரெனக்
காவலன் னிரை நீர்த்துறை படீஇக்
கோவலரூதும் குழலின் பாணியும்"

எனப்பாடுதல் காண்க. இவற்றுல் இமயத்துக் கங்கைக் கரையினின்று சேரன் செங்குட்டுவன் ஆநிரைகளைக்கொணர்ந்து தன்னாட்டு வளர்த்தது புலனாகும்.

காங்கேயம்

இவற்றுல் கங்கை காட்டுப் பசுச் சம்பந்தம் உடைய இக்கொங்கு காட்டுப்பகுதி காங்கேயமெனப் பெயர் சிறந்தவாறு உணரலாம். காங்கேயம் கங்கை சம்பந்தம் உடையது. காங்கேயம் சேரநாட்டின் வேறுபட்டது அன்றென்பதும் இதனுல் அறியலாம். அரசாங்கத்தாரும் இக்காங்கேயத்துக் குதிரையையும், எருதுகளையும் பெருக்கற்கு வேண்டுவன செய்தலும் காணலாம்.

இதற்கேற்பவே சேரர் ஊர் 'ஆகிலை ஊர்' ஆதலும், 'எருதேறி ஊர்வாய் எழில் வஞ்சி'(பாணதேவர் திருவந்தாதி) ஆதலும் நோக்கிக் கொள்க. இவற்றுல் சேரர் வகித்த நாடு, பசுக்குறைவுடைய காடாகாமையும், பசுக்கள் நிறைந்த காங்கேயம் உடையதாதலும் கன்கறியலாம்.



கவியுள்ளமும் கலைஞானமும்

திரு. பூ. ஆலாலசுந்தரஞ்செட்டியார் அவர்கள் M. A.,
கிறித்தவர் கல்லூரி, சென்னை.

நம் நாட்டுக் கவிஞர் எழுதப்போகிற நூல்களுக்குப் பல அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளும் நூல்களும் வெளி வருதல் வேண்டும். தற்போது சங்க இலக்கியத்தைப் பற்றியும், பிறசாத்திரத் தோத்திர நூல்களைப் பற்றியும் ஒரு சில ஆராய்ச்சி நூல்களே வெளி வந்துள்ளன. ஆனல் மேனாட்டுக் கவிஞர் இயற்றிய நூல்களுக்குப் பல அரிய ஆராய்ச்சி நூல்கள் உள்ளன. உதாரணமாக ஆசிரியர் ஷேக்ஸ்பியர் (Shakespeare) நாடகங்களை நோக்குவோம். ஹாலிலெட் (Hozlitt) என்பவர் 'ஷேக்ஸ்பியர் நாடகத்திலுள்ள பாத்திரங்கள்' (Characters of Shakespeare's plays) என்ற ஒரு நூலினையும், ஜேமிஸன் (Jameson) என்ற அம்மையார் 'ஷேக்ஸ்பியரில் உள்ள தலைவியர்' (Heroines in Shakespeare) என்ற ஒரு நூலினையும், ஆசிரியர் டௌடன் (Dowdon) என்பவர் ஷேக்ஸ்பியரின் 'கவியுள்ளமும் கலைஞானமும்' (Shakespeare's Mird & Art) என்ற அரிய ஆராய்ச்சி நூலினையும் இயற்றியுள்ளனர். ஷேக்ஸ்பியர் நாடகத்திற்கு இதுபோன்ற ஆராய்ச்சி நூல்கள் பலவுள. மேலே குறிப்பிட்ட டௌடன் எழுதிய நூலினைக்கண்ட பின்னர், நம் நாட்டுக் கவிகளின் கவியுள்ளத்தையும் கலைஞானத்தையும் ஆராய்தல் வேண்டும் என்ற பேரவாவானது என்னைப் பலகாலும் பிடர் பிடித்துந்தியது. எனவே, இராமலிங்க அடிகளின் கவியுள்ளத்தினையும் கலை ஞானத்தினையும் ஈண்டு எழுதத்துணிந்தேன்.

இராமலிங்கரின் கவியுள்ளத்தினை முதற்கண் கூறுவாம். அடிகள் இனிய எளியபயின்ற நடையில் கவிபாடும் பண்பு வாய்ந்தவர். எனவே அவர்களது திருப்பாடல்களைக் கற்றோரின்றி மற்றோரும் பாவலரின்றிப் பாமரரும் கற்று இன்புற்று வருகின்றனர். 'பணியுமாம் என்றும் பெருமை' என்பதற்கு அடிகளே இலக்காவர். அவர் மாணவர் ஒருவர், ஒருமுறை, 'திருவருட்பிரகாச வள்ளலார் என்னும் இராமலிங்க சுவாமிகள்' என்று எழுதி அடிகளுக்குக்காட்ட, அதைக்கண்டு அடிகள் நகைத்து, 'ஆம், நீ சொல்வது உண்மையே; திருவருட்பிரகாசவள்ளல் யார்? (யாவர்) என்னும் (என்று ஆராயும்) இராமலிங்கன்' என்று

கூறியதாக ஒருவரலாறு வழங்கப்படுகிறது. இதனுள் அடிகள் அடக்க முடைமைஎன்ற குணத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் என்பது போதரும். அவர் சிவபெருமான், உமாதேவியார், முருகர், விநாயகர் முதலிய கடவுளரைப்பாடியதனே டமையாது துலுக்காணத்தம்மை பஞ்சரத்தினம், திரு. இராமகாமத் திருப்பதிகம், திருவெவ்வுளூர் திரு. வீரராகவப் பெருமாள் போற்றித் திருப்பஞ்சகம், திருக்கண்ண மங்கை இலக்குமி தோத்திரம் முதலியன பாடியிருத்தலால் சமயக் கோட்பாட்டில் அவர் சமரச நிலையுடையவராகவே விளங்கினர் என்று தெரிகின்றது. அடிகள் உள்ளத்தில் சிவகாருணியமே தலையாய அறமாக விளங்கியது.

'சிவகாருணிய ஒழுக்கம்' என்ற ஒரு சிறந்த கட்டுரை அவர் சமக்கு வழங்கியுள்ளனர். அதில் அவர்கள் கூறிய சில கருத்துக்களை ஈண்டுத் தருவாம். 'சிவகாருணிய மில்லையாகில், இகலோக வொழுக்க மெவ்வளவும் வழங்கமாட்டாதென்றறிய வேண்டும். எப்படி யென்னில், சிவகாருணிய மில்லாதபோது அறிவும் அன்புந்தோன்றா. அவை தோன்றுதபோது கண்ணோட்டமும் ஒருமையும் உபகாரமும் விளங்கா. அவை விளங்காத போது வலிய சிவர்களை லெளிய சிவர்க வொழுக்கம் பொறுமை முதலானவை தடைபட்டழிந்து போம்.....' '..... பரலோக வொழுக்கமுஞ் சிவகாருணியத்தால் வழங்குகின்றது. அதுவில்லையாயின் பரலோக வொழுக்கமும் வழங்கமாட்டாது. எப்படி யென்னில்:- சிவகாருணியமில்லாதபோது அருள் விளக்கந் தோன்றாது. அது தோன்றுதபோது கடவுள் நிலை கைகூடாது. அது கூடாத போது முத்தியின்பம் ஒருவரும் அடைய மாட்டார்கள்' '..... சிவகாருணிய மென்கின்ற திறவுகோலைக் கொண்டுதான் மோட்ச மாகிய மேல் வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே புகுந்து எக்காலத்தும் அழியாத இன்பத்தை அனுபவித்து வாழவேண்டும்.'

இவ்விருபதாம் நூற்றாண்டிலும் கூட மக்கள் சில குருட்டுப் பழக்கங்களைக் கையாண்டு வருகின்றனர். அகேகர் ஆடு கோழி முதலியவைகளைச் சிறு தேவதைகட்குப் பலியிடுகின்றனர். 'உங்கள் மக்களும் கீங்களும் கோய்பட, எங்கள் மக்களும் யாங்களும் என் செய்தோம்' என்று அவைகள் அரற்றும் அழுகுரலினை அன்னர் செவிமடுக்கின்றாரில்லை. அவைகளை வெட்டும்போது அவைகளின் அழுகுரலைக் கேட்டோர்க்கே கரகமெனில் அவைகளின் ஊனைத்தின்பவர் கட்கு அதனினும் கொடிய கரகம் கிடைக்கும் என்ற கருத்துப்பட ஒரு புலவர் 'அம்மாவென்று அழுகுரல் கேட்டவர்க்குப் பொய்மா கரக மெனில் புசிப்பவர்க்கு என் சொல்வேன்' என்று கூறிப் போந்தார். அடிகளும் சிறு தேவதைகட்கு மக்கள் பலியிடுவதைக் கண்டு தாம் கடுங்கியதாகவும், பிறவுயிர் பதைத்த காலத்துத் தம் மனம் பதைத்த தாகவும், வலிஞர் வலியுடனும் தூண்டியுடனும் சென்ற காலத்துத் தாம் அவைகளைக்கண்ட போது தம் உள்ளம் கடுங்கியதாகவும் **பிள்ளைப் பெருவிண்ணப்பம்** என்ற தலைப்பில் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

''கலிதரு சிறிய தெய்வமென் றையோ காட்டிலே பல பெயர் காட்டிப்
பலிதர ஆடு பன்றிகுக் குடங்கள் பலக் கடா முதலிய வுயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவுங் கண்டே புன்தி னொர் துளை கடுக் குற்றேன்
கலியுறு சிறிய தெய்வவெங் கோயில் கண்டகாலத்திலும் பயந்தேன்''

''அண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத் தொடங்கிய போதெலாம் பயக்
கண்ணிஞலேயோ பிறவுயிர் பதைக்கக் கண்டகா லத்திலும் பதைத்தேன் [தேன்
மண்ணினில் வலியும் தூண்டிலுங் கண்ணி வகைகளும் கண்டபோ தெல்லாம்
எண்ணியென் னுள்ள நடுங்கிய நடுக்க மெத்தைகின் திருவுள மறியும்''

அடிகள் தாம் பாடிய பாக்களுள் பலவிடங்களுள் கொல்லாமை என்ற அறமே சிறந்த அறம் என்று வற்புறுத்தியிருக்கின்றார்கள். ஒருவன் ஆணைப் பெண்ணுக்கும் திறமையினையும், இறத்தவர்களை யெழுப்புகின்ற சத்தியினையும் பெற்றிருந்தாலும் அன்னவன் புலாலுண்பானுகில் அவனை ஞானி யெனக் கூறுதலாகாது என்று அறநிலை விளக்கம் என்ற தலைப்பில் கூறிப் போந்தார்.

''மருவா ணைப்பெண்ணுக்கி யொருகணத்திற் கண்விழித்து வயங்கு மப்பெண்
உருவாணை யுருவாக்கி யிறத்தவரை யெழுப்புகின்ற வுறுவனேனும்
கருவாணை யுறலிரக்கா தயிருடம்பைக் கடிந்தண்ணுங் கருத்தனேலென்
குருவாணை எமது சிவக் கொழுந் தாணை ஞானியெனக் கூறுரு ணுதே''

மேலே காட்டிய செய்யுளில் எம் குருவாணை, எமது சிவக்கொழுந்தாணை யென்று கூறியதின் நயம் குறிப்பிடத்தக்கதாகும். உலகில் மக்கள் தமக்கு உயிராணைய பொருளின்மேல் ஆணையிடுவர். எனவே ஒரு சிலர் தம் குழந்தைகள் மீதும் தாம் வழிபடும் கடவுளர் மீதும் ஆணையிடுவது மாபாதகம். உதாரணமாக, கைகேயி தசரதனிடம் வரம் பெறுதற்காகப் பிணக்குற்றபோது அவளது வஞ்சமனத்தை ஓராத மன்னன், 'உள்ள மூவந்துள செய்வனென்றும் லோபேன், வள்ளலிராமனுன் மைந்தனுணை யென்ருன்'. ஈண்டு மன்னவன் வள்ளல் இராமன் உன் மைந்தன் ஆணை யென்று கூறியது குறிப்பிடத் தக்கதாகும். திருஞானசம்பந்தர், தாம் மதுரைக்குப்போக இருப்பதைத் திருநாவுக் கரசரிடம் கூறினர். அதைக்கேட்ட திருநாவுக்கரசர், அங்குச்சென்றுல் சமணர் கடுவினை செய்வர் என்றும் அவர் செல்வதற்குக் கோள்களும் சரியாக இல்லை யாதலின் 'செல்ல இசையேன் என்ருர்'. அதைக் கேட்ட ஆருடைய பிள்ளையார், 'என்று கூற வெல்லையிலை நீறு போற்று மிருவரையுஞ், சென்று காணுங் கருத்துடையே னங்குத் தீங்கு புரியமணர், நின்ற நிலைமையழிவித்துச் சைவ நெறிபா ரித்தன்றி, யொன்றுஞ் செய்யே னுணையுமை தென்ரு ரூடைய பிள்ளையார்' இவ்விடத்து ஆருடைய பிள்ளையார் நாவுக்கரசர் மீது ஆணை யென்று சொல்வதினின்று பிள்ளையார் நாவுக்கரசர் தமக்கு உயிரணையர் எனக் கருதி யிருந்தனர் என்பது புலனுகும். முன்காட்டிய செய்யுளில் இராமலிங்க சுவாமிகள் தம் குருவாணை, சிவக்கொழுந்தாணை ஞானியெனக் கூறுரு ணுதே

யென்பது, கொலை செய்வோரிடத்து அன்னவர்க்கிருந்த வெறுப்பினைக் காட்டுகின்றது. கொல்லாமையினைப்பற்றி வற்புறுத்திக் கூறிய புலவர் பலராவர். தாயுமான தயாபரரும்,

"கொல்லாவிரதம் குவலய மெல்லா மோங்க
எல்லார்க்கும் சொல்லுவதென் னிச்சை பராபரமே"

என்று கூறிப் போந்தார். சிவக சிந்தாமணியின் ஆசிரியராகிய திருத்தக்க தேவர் முத்தியிலம்பகத்தில் கொலை செய்வோர் நரகத் துன்பத்தின்பாற்படுவர் என்ற கருத்துத் தோன்ற,

"சிலையினுன் மாக்கள் கொன்று செழுங்கடல் வேட்டமாடி
வலையினுன் மீன்கள் வாரி வாழுயிர்க் கூற்றமான
கொலைகைக்கும்பி தன்னுட் கொழுத்தழலழுத்தியிட்டு
கலிகுவர் நாளு நாளு நரகரை நாமவேலோய்"

என்று கூறியுள்ளனர்.

அடிகளின் கவியுள்ளமானது வாய்மையினை மக்களுக்குவற்புறுத்த வேண்டு மென்பதிலும் சென்றிருக்கது என்பதற்கு அவர் பாக்களில் பலசான்றுகள் உள. அடிகள் தம்முள்ளம், சான்றோர் கூறிய மெய்யினை மறந்து பொய்யின்பாற் சென்றதென்று ஓரிடத்தில் குறிப்பிட்டிருக் கின்றார். 'மெய்விளக்கே விளக்கல்லால் வேறு விளக்கில்லையென்றார் மேலோர் நானும், பொய்விளக்கே விளக்கெனவுட் பொங்கி வழி கின்றேனேர் புதுமை யன்றே, செய்விளக்கும் புகழுடைய சென்னநகர் நண்பர்களே செப்பக் கேளீர், மெய்விளக்கே போன்றொரு தண்ணீர் விளக்கு மெரிந்தது சங்கியின் முன்னே'. இப்பாட்டின் கடைசி இரண்டு அடியில் ஆசிரியர், நமிநந்தியடிகள் நாயனார் சரித்திரத்தைக் குறிப்பிட்டிருக்கின்றனர். அறங்களுள் சிறந்த அறங்கள் எவை யென்று உசாவும் மாணவனுக்கு ஓர் ஆசிரியர் விடையிறுப்பார் போன்று, ஆசிரியர் திருவள்ளுவனார் 'ஒன்றுக கல்லது கொல்லாமை மற்றதன் பின்சாரப் பொய்யாமை நன்று' என்று கூறியுள்ளார். வாய்மையின் சிறப்பைக் கூறப்போந்த சிலப்பதிகார ஆசிரியராய இளங்கோவடிகள்

"வாய்மையின் வழாது மன்னுயிர் ஓம்புநர்க்
கியாவதும் உண்டோ வெய்தா அரும் பொருள்" என்றார்.

சுத்தாத்துவித சைவசித்தாந்தச் சிங்கமாகிய மாதவச் சிவஞான சுவாமிகள் காஞ்சிப் புராணத்தில், ''மெய்யே சிறந்த பெருநலமாம் மெய்யே யெவையும் நிலைபெறுத்தும், மெய்யால் அழல்கால் கதிர்பிறவும் தத்தந் தொழிலின் விலகாவாம், மெய்யே யெவைக்கும் இருப்பிடமாம் மெய்யே மெய்யே சிவமாகும், மெய்யே பிரமபதமுமெனப் புகன்றுன் வினைதீர் காசிபனே'' ! என்று கூறியுள்ளனர்.

மக்களிடத்துத், சாதிப் பிணக்குச் சமயப் பிணக்கு முதலியன விருத்தலாகாது என்ற கருத்து அடிகளிடத்து உண்டு என்பதற்கு ஒரு சான்றுதருதும். 'சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே சாத்திரச்

சக்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே, ஆதிமிலே யபிமானத் தலைகின்ற வுலகீர் அலைக்தலைக்து வீணே நீர் அழிதல் அழகலவே.....' இக்கருத்தினையே திருவாசகத்தைத் திருவாய் மலர்ந்தருளிய மணி வாசகப் பெருந்தகையார், ''சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும், ஆதமிலி காயேனை அல்ல லறுத்தாட்கொண்டு.....'' எனத் திருவாய் மலர்ந்தருளினர். திருநாவுக் காசரும், ''சாத்திரம் பலபேசும் சழக்கர்காள், கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்.....'' எனக் கூறிப் போந்தார். ஒருவரைக் குணகலம் பற்றிப் போற்ற வேண்டுமேயொழிய அன்னார் குலகலம் ஒன்றைமட்டுங்கொண்டு போற்றலாகாது. ''பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்.'' என்பது பொது மறையன்றே!

இனி அடிகளின் கலைஞானத்தை ஒரு சிறிது ஆராய்வாம். அடிகளார் சைவ சமயாசாரியர்களைத் தமது ஞானாசாரியர்களாகக் கொண்டுள்ளார் என்பது அவர், அவர்கள் மீது பாடிய அருண்மாலை யரல் விளங்கப் பெறும். இராமலிங்கர் தேவார திருவாசகங்களுக்கு ஓர் உரை கண்டவர் என்று கூறுதல் புனைந்துரை யாகாது. 'முன்னோர் மொழி பொருளே யன்றி யவர் மொழியும், பொன்னே போற் போற்றுவம்'' என்பதற்கிலக்காக இவர் தேவாரங்களின் கருத்துக் களையும், **மாணிவாசகப்** பெருந்தகையார் திருவாய் மலர்ந்தருளிய **திருவாசகத்தின்** கருத்துக்களையும், சொற்களையும், அடிகளையும், பொன்னேபோல்போற்றித்தம் பாடியபாக்களுள் அமைத்துள்ளார்கள். அவைகட்கு ஒருசில உதாரணம் ஈண்டுத் தருவாம்.

''கேட்டாரு மறியாதான் கேடொன் றில்லான்
இளையிலான் கேளாதே யெல்லாங் கேட்டான்
காட்டார்கன் விழித்திருப்ப ஞாலத்துள்ளே
நாயி னுக்குத் தவிசிட்டு நாயினேற்கே
காட்ட தன வெல்லாங் காட்டிப் பின்னுங்
கேளா தனவெல்லாங் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டா
னெம்பெருமான் செய்திட்ட விச்சைதானே. [திருச்சதகம் 28]

இப்பாட்டில் வாதவூர் அடிகள், இறைவன் தன்னை ஆட்கொண்டது நாயினுக்குத் தவிசிட்டதை ஒக்கும் என்று தமது சிறுமையினையும், இறைவன் பெருங்கருணைத் திறத்தினையும் விதந்து கூறுகின்றார். அதுவுமன்றி காட்டாரகள் விழித்திருப்ப ஞாலத்துள் இறைவன் தனக்குக் காட்டாதன வெல்லாம் காட்டிக் கேளாதனவெல்லாம் கேட்பித்து மறுமுறையும் பிறவாமற் படித்தன்னைக்காத்து ஆட் கொண்டா னென்றும் இது ஒரு பெரிய வியப்பென்றும் கூறுகின்றார். இப்பாட்டின் கருத்தினையும் உவமையினையும் இராமலிங்க அடிகளார் பொன்போல் போற்றுகின்றனர்.

'நாய்க்குமோர் தவிசிட்டுப் பொன்மாமுடி
நன்று சூட்டினை யென்றுநின் னன்பர்கள்
வாய்க்குவந்த படிபல பேசுவே
மதியி லேனையும் மன்னருட் சத்தியாற்
தாய்க்குக் காட்டிநற் றண்ணமு தூட்டியோர்
தவள மாடப் பொன் மண்டபத் தேற்றியே
சேய்க்கு நேரவென் கையிற் பொற்சங்கணைத்
திக்கழக் கட்டிஷ் யென்னே கின்செய்கையே'

மாணிக்கவாசகர் கூறிய முத்திநிலையையே சைவசித்தாந்த சாத்திரங்களும் கூறும். அஃதாவது, பசுவானது பதியினால் ஆட்கொள்ளப்பட்டால் பாசமானது விலக்கப்பெற்றுப் பதித்தன்மை அடையும் என்பதாம். இக்கருத்தை நாம் திருவாசகத்தில் பலவிடங்களில் காணலாம்.

" அவமாய தேவ ரவகதியி லழுத்தாமே,
பவமாயக் காத்தென்னை யாண்டுகொண்ட பரஞ்சோதி
சுவமாய செஞ்சுடர் கல்குதலு நாமொழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ "
(திருத்தெள்ளேணம்-4)

" சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட "
(அச்சோப்பதிகம்-1)

இக்கருத்தையே இராமலிங்கரும் பின்பற்றுகின்றனர்.

" இருமையும் ஒருமை தன்னில் ஈந்தனை யெந்தாயுன்றன்
பெருமையென் னென்றுநான்றான் பேசுவேன் பேதமின்றி
உரிமையால் யானும் நீயும் ஒன்றெனக் கலந்துகொண்ட
ஒருமையை நினைக்கின் றேனென னுள்ளகம் தழைக்கின்றேனே "

அடிகள் கோயிற் புராணம், காஞ்சிப்புராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் முதலிய இன்னோரன்ன பிறபுராணங்களை எழுத்தெண்ணிப்படித்தவர் என்பது அவருடைய பாடலால் அறியக் கிடக்கின்றது. சந்தானகுரவருள் ஒருவராகிய உமாபதி சிவாசாரியார் தாம்பாடியருளிய கோயிற் புராணத்தில் முருகருக்கு வணக்கம் கூறும்போது,

" தோராட்டிக் கயங்காட்டுந் திரண்மாகட் டையைமூட்டிப்
போராட்டிப் புறங்காட்டிப் போர்காட்டிற் புலால்கமழும்
நீராட்டிச் சூர்மாட்டி நிகழ்நாட்டிற் புகழ்நாட்டும்
பேராட்டிச் சோராட்டும் பிள்ளையார் கழல்போற்றி "

என்று கூறியுள்ளார். இப்பாட்டின் சொல் அமைப்பினையே இராமலிங்கரும் ஆருந்திருமுறையில் தனிப்பாடல் என்னும் தலைப்பில் கீழ்வருமாறு பாடியுள்ளார்.

" அறங்காட்டும் முறைகாட்டி அறுசமயத் தவரவர்க்குய்
திறங்காட்டிச் சிவங்காட்டிச் சித்திமுத்தித்திருக்காட்டிப்
புறங்காட்டிற் பொய்யுடலே வையமெய்ப்புலங்காட்டி
மறங்காட்டென் மனக்காட்டை வளராமே மதிகாட்ட "

சிவஞான சுவாமிகள் காஞ்சிப் புராணத்தில் பாடியருளிய முருகர் வணக்கச் செய்யுளாகிய, ' முருகோட்டந்தரப்பாயும் மும்மதமும்.....' என்றசெய்யுளின் அமைதியினை அடிகள் கல்வர்க்கு வணக்கங் கூறும்போது ' ஒரு கோட்டுச்சிவ கவிற்றை.....' என்னும் பாட்டில் அமைத்துள்ளனர். இவைபோன்று உதாரணங்கள் பல இருத்தலின் அவைகளை ஈண்டு விரிப்பின் கட்டுரை பெருகுமாதலின் இதனோடு அமைகின்றேன்.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் பாடியதுபோல அடிகளுந் தன்னைத் தலைவியாகவும் கடவுளைத் தலைவனாகவும்கொண்டு அகப் பொருட்டுறையாகப் பல செய்யுட்களைப் பாடியுள்ளனர். அவைகளுள் இங்கிதமாலை யென்பது ஒன்றாகும். இங்கிதம் என்பதற்குக் குறிப்பு என்பது பொருளாகும். திருக்குறளில் பெரியாரைத் துணைக்கோடல் என்னும் அதிகாரத்தில் இரண்டாங்குறளுக்கு உரை கூறப்போந்த பரிமேலழகர் 'இங்கிதம்—குறிப்பாணிகழும் உறுப்பின் றொழில்' என்றார். இங்கே இங்கித மென்பது தாருகாவனத்து முனிவர் பத்தினிகளின் கர்வத்தையடக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் சிவபெருமான் பிட்சாடனவேடம் பூண்டுவர அம்மங்கையர் அப்பெருமானை உள்ளுறையோடு கேட்ட வினாக்களுக்கு அப்பெருமான் இறுத்த விடையாகும். கடவுள் மானிடப் பெண்டிருடன் உரையாடல் பொருத்தமோ என ஐயங்கொள்வார்க்கு ' ஆம், பொருத்தமுடைத்தே ' எனக்கூறுவதுபோல இதற்குத் தொல்காப்பியச் சூத்திரம் இடந்தருகின்றது.

" காமப்பகுதி கடவுளும் வரையா
தேனோர் பாங்கினு மென்மனார் புலவர் "
(தொல்காப்பியம், புறத்திணை,-28)

என்ற சூத்திரத்திற்கு விசேடவுரை கூறப்போந்த ஆசிரியர் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் காமப்பகுதி யென்ற தொடர்க்கு உரை கூறுங்கால் ''அது கடவுண் மாட்டுக் கடவுட் பெண்டிர் நயப்பனவும், அவர் மாட்டு மானிடப் பெண்டிர் நயப்பனவும், கடவுண் மானிடப் பெண்டிரை நயப்பனவும் பிறவுமாம்''. இக் கருத்தினையே புறப்பொருள் வெண்பா மாலை ஆசிரியராய ஐயனாரிதனார் கடவுண்மாட்டு மானிடப் பெண்டிர் நயப்பக்கம் என்ற துறையில் ''மூக்கணான் முயக்கம் வேட்ட, மக்கட் பெண்டிர் மலிவுரைத்தன்று'' எனக் கூறிப் போந்தார். இவ் விங்கித மாலை யென்பதற்கு அடிகளே பொருள் கூறியதாக திருவருட் பாவில் ஒரு குறிப்புக் காணப்படுகிறது. அஃதாவது, ''.....ஆன்ம சிற்சத்தியாகிய தலைவி கடவுளாய தலைவரோடு சமிக்ஞை புரிந்த

கவியுள்ளமும் கலைஞானமும்

ஐக்யானுபவ சையோக விவகாரத்தைப் பார சத்தியராய உயிர்ப் பாங்கியரிடத்து வினவிய தலைவி பாங்கிக் குரைத்தல்'' என்னும் துறை யத்தால் இப்பெயர் எய்தியதெனக் கொள்க.

இவ்விங்கித மாலையில் ஒரு செய்யுளை ஈண்டு ஆராய்வாம்.

"தன்னக் தனியா யிங்கு கிற்குஞ் சாமி யிவரு சொற்றியதாம்
அன்னக் தருவீ ரென்ருர்கா னழைத்தே னின்னை யண்ணமிட
முன்னம் பசிபோ யிற்றென்ருர் முன்னின்றகன்றே னிவ்வன்னம்
இன்னம் தருவா யென்கின்ரு ரிதுதான் சேடி யென்னேடி"

இச்செய்யுள் தலைவி தோழிக்குக் கூறிய தாகும். தலைவி தன் தோழியை அழைத்து, 'ஏ சேடி, இங்கே தனியாக இருக்கும் கடவுளாகிய இவர் ஹர் திருவொற்றியூராம். இவர் நம் அகத்து வந்து அன்னம் தாருங்கள் என்ருர். அவருக்கு அன்னம் இடுதற் பொருட்டு யானுன்னை அழைத் தேன். அதைக்கேட்டவுடனே அவர் முன்னிருந்த பசி போய்விட்ட தென்ருர். அவர் அவ்வரறு கூறவே நான் அவ்விடம் விட்டகன்றேன். உடனே அவர் இந்த அன்னத்தை இன்னம் ஒரு முறை தருவாய் என்ருர். இதன் காரணம் யாதோ அறியேன்'' என்ருள் தலைவி, என்பது இச்செய்யுளின் பொழிப்பாகும். இப்பாட்டிலுள்ள குறிப்பு யாதோவெனில், தலைவி தோழியை அழைத்த இன்குரலோசையே தன் பசியைப் போக்கிற்று என்று கூறுவார், ''பசி போயிற்றென்ருர்''. தலைவி அவ்விடத்தை விட்டகன்றதனால், அவ்வன்னகடையை நோக்கியவர், அக்கடையை மறுமுறையும் கண்டு களிக்கவேண்டும் என்னும் கருத்தினால் ''இவ்வன்னம் இன்னம் தருவாய்'' என்ருர். ஈண்டு அன்னம் என்பது தலைவியின் அன்னகடையைக் குறிப்பிட்ட தாகும். எனவே, பிச்சைக்கு வந்தவர் தலைவியின் இன்குரலோசையும் அன்னகடையுமே தமக்கு அன்னமாக(உணவாக)க்கொண்டார் எனபது போதரும்.

இது காறும் கூறியவற்றின் தொகுப்புரையினைத் தருவாம். நம் காட்டுக் கவிகள் எழுதிய நூல்களுக்குப் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளும் நூல்களும் வெளிவருதல்வேண்டும். இராமலிங்கஅடிகள் பணிவுடைமை, வாய்மை கொல்லாமை முதலிய அறங்களைச் சிறந்த அறங்களாக் கொண்டிருந்தனர். அவர் சமயக் கோட்பாட்டில் சமரச நிலையுடையவர்; மக்களிடத்துச் சாதிப் பிணக்கும் சமயப்பிணக்கும் ஒழிய வேண்டும் என்னும் கருத்துடையவர்; அன்னவர் கலைஞானத்தை நோக்கின் அவர்கள் சைவ சமயசாரியர்களைத் தமக்கு ஞான குரவர்களாகக் கொண்டதனோடமையாது அன்னவரின் வாக்கையும் நோக்கையும் கையாண்டுள்ளார்; கோயிற் புராணம், காஞ்சிப் புராணம், பெரிய புராணம் முதலிய இன்னோரன்ன பிறநூல்களை எழுத்தெண்ணிப் படித்தவர்; அகப் பொருட்நிறையுள் வைத்துப் பல கவிகள் பாடியுள் ளனர்; அவற்றுள் தலையாயது இங்கித மாலையாகும். அடிகளுடைய பாக்களைப்படிக்கும்போது அன்னவரை ஒரு சித்தரெனக் கூறுவதோ,

மருத்துவரெனக் கூறுவதோ கவிஞரெனக் கூறுவதோ, சமரச சன்மார்க்க நிலையுடையோரெனக்கூறுவதோ, அன்றித் தத்துவப்பிரகாசரெனக் கூறுவதோ அவரை எவ்வாறு கூறுவது சிறப்புடைதென்பதை யானறியேன். ஆனால் மேலே காட்டிய நலங்கள் அனைத்தும் ஒருங்கு வாய்க்கப்பெற்ற ஒரு சான்றோரென்பேனுகில் அதுபுனைந்துரையாகாது. தமிழ் நன் மக்கள் அனைவோரும், பன்னிரு திருமுறைகளையும், இராமலிங்கரின் திருப்பாடல்களையும் பிறசாத்திரத் தோத்திரங்களையும் ஆர்ந்து ஓர்ந்து கூர்ந்து கற்று, இன்புற்று, அவ்வவ்வாசிரியருடைய சூறிக்கோள்களை நன்கு உணர்ந்து அவர்கள் காட்டிய நெறி நின்று எல்லாம் வல்ல இறைவனது இன்னருளைப் பெற்று உய்வார்களாக.

செந்தமிழ்நாடு

வித்துவான்,
மு. அருணாசலம் பிள்ளை அவர்கள்,
தமிழாசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

தோற்றுவாய்

செந்தமிழ்நாடு என்னுந் தலைப்புப் பெயர்கொண்ட இக் கட்டுரையில், தமிழ் மொழியின் பெருமையும், அதன் தொன்மையும், அதுவழங்கு நிலனும், அதன்கட் செந்தமிழ் கொடுந் தமிழ்நாடுகள் இவை யென்பதுபற்றிய பல்லார் கருத்துக்களும், அவை குறித்துப் பிறர் கூறுந் தடை விடைகளும், செந் தமிழ்நாடு இன்னதென்பதும், அதற்குக்காரணமும் பிறவும் தக்க பலசான்றுகள்கொண்டு ஆராய்ந்து காட்டப்படும். இவற்றுள் ஒவ்வொன்றும் விரித்தெழுதப்புகின் வரம் பின்றி விரியுமாதலின் ஈண்டைக்குவேண்டிய அளவே சுருக்கியெழுதுதல் இக்கட்டுரையின் நோக்கமாம்.

தமிழ்மொழியின் பெருமை

இப் பூவுலகின்கண் வாழும்மக்களாற் பேசப்படும் மொழிகள் எத்துணையோ மிகப்பலவுள்ளன வெனினும், அவற்றுள் தலைசிறந்தன வாகத் தக்கோராற் பாராட்டப்பெறும் ஒரு சில மொழிகளுள் நம் தாய் மொழியாகிய தமிழ்மொழியும் ஒன்றெனக்கூறலாம். இது சொல்வனப்பு பொருணினைமை இயலமைப்பு இசைதலம் முதலான மொழிப் பண்புகள் அனைத்தும் நிரம்பியுள்ளது; மக்கள் தம் உள்ளத்தில் தோன்றும் பலதிறப்பட்ட கருத்துக்களையும் பிறர் அறிந்துகொள்ளுமாறு எடுத்துரைத்தற் கேற்ற சொற்றொகுதிகளை யுடையது; பிறிதொரு மொழியின்துணை சிறிதும் வேண்டாது தானே தனித்தியங்கும் ஆற்றல் அமைந்தது; கன்னடம் துளு தெலுங்கு மலையாள முதலான வழி மொழிகள் பல இதனைச் செழித்து வளர்தற்குத் தாயகமாம் தன்மை சான்றது; இக்காலத்து வரலாற்று நூலார் ஆய்ந்து அறுதியிட்டுக்

கூறுதற்கு அகப்படாத காலவெல்லையைக் கவர்ந்து நிற்பது; உலகில் வேறு எம்மொழியினுங் காண்டற்கியலாத பொருளிலக்கணமென்னும் பேரணிகலம் புனைந்து திகழ்வது; அன்றியும், ஓரெழுத்தானும் இரண்டு முதலான சில வெழுத்துக்களானும் அமைந்த சொற்கூட்டமும், சிறுவர் முதல் எல்லோரானும் எளிதில் ஓதப்பெறும் இயல்புமுடையதாய்ப் பண்டுதொட்டு இன்றுகாறும் தன் இளமைச் செவ்விகலங் குன்றாது உலகவழக்கினும் நூல்வழக்கினும் ஒப்ப வழங்கிவரும் உயர்வின்மிக்கது. இன்னோரன்ன மாண்புகள் குறித்தே நம் முன்னோர் இதனைச் செந்தமிழ் பைந்தமிழ் நற்றமிழ் தண்டமிழ் என்பன ஆதியாகச் சிறந்த அடைபுணர்த்துக் கூறுவாராயினர். செந்தமிழ் என்பதற்குச் 'செம் பொருள்' என்பதுபோல எஞ்ஞான்றும் விகாரமின்றி ஒரு தன்மைத்தாகி நிற்கும் மரபினையுடைய தமிழ் என்பது பொருளாம் என்றுரைப்பர். ஏனையவற்றிற்கும் இவ்வாறே ஏற்றபெற்றி பொருளறிந்து கோடல் பொருந்துவதாகும்.

தமிழ்மொழியின் தொன்மை

இவ்வமிழ்தினும் இனிய தமிழ்மொழியின் தொன்மையை ஈண்டு ஒரு சிறிது ஆராய்ந்தறிதல் தகுதியுடையதாகும். அயோத்தியர் இறை யாகிய இராகவன் காலத்தின் முன்னரே கபாடபுரத்தின்கண் இடைச் சங்கமாகிய இரண்டாந் தமிழ்ச்சங்கம் தோன்றி நிலவியதென்பதும், இற்றைஞான்றினும் நரம்கண்கூடாகக் காணும் நான்மாடக்கூடல் நகர், கடைச்சங்கத்திற்கு இலக்கணஞ்சான்ற பாண்டியர் தலைநகராகிய காலமே பாரதவீராகிய பாண்டுவின் புதல்வர் காலமென்பதும் வடமொழி இதிகாசங்களினுங் கேட்கப்படுகின்றன. முற்றத்துறந்த முனிவராகிய வான்மீகியாரும் வேதவியாதரும் 'பொய்மைமொழி புகன்றறியேம் புகலமனம் எண்ணுகினும், மெய்மையல தரையாகாவேத நவில் பயிற்சியால்' என்றபடி பொய்ம்மைமொழி புகன்றறியாப் புனித சீல ராதலின் அவர் கூற்றுக்கள் யாங்ஙனம் மறுத்தற்கியலும்? அவ்விரண் டற்கும் முன்னதாய்க் கடல் கொள்ளப்பட்டெழுந்த தென்மதுரை யிடத்தே முதற்சங்கம் வீற்றிருந்தபோழ்து கவியரங்கேறிய பாண்டிய ரெழுவருள் ஒருவனுகிய நிலந்தரு திருவிற் பாண்டியனைத் தலைவனுகக் கொண்டதொரு போவையில் அரங்கேறி இடைச் சங்கத்தார்க்குங் கடைச்சங்கத்தார்க்கும் நூலாயிற்றுத் தொல்காப்பிய மென்பது களவியலுரை சிலப்பதிகாரவுரை போராசிரியர் நச்சினார்க்கினியர் உரை களிற் காணப்படுதலானும், இத்தொல்காப்பியத்தினும் முற்பட்டதாய அகத்தியமும் வேறுபல பெருநூல்களும் இருந்தனவென்பதும் அவற்றுள் அறியப்படுதலானும் இவ்விரு பெருமொழிகளினுங் காணப் படும் நூலுரைகொண்டே தமிழ்மொழியின் தொன்மையை ஒருவாறு அளந்தறிதல் அமைவதாகும் ஆயின், சிறிது பிறப்பதற்குச் சில நூற்றாண்டுகளின் முன்னர்த்தோன்றிய பாணினி வியாகரணத்தைச் சுட்டி 'ஏழியன் முறையது எதிர்முகவேற்றுமை, வேறெனவிளம்பான்

பெயரதுவிகாரமென்று, ஓதியபுலவனுமுளன் ஒரு வகையான், இந்திரன் எட்டாம் வேற்றுமையென்றனன்' எனவும் அகத்தியனுர் கூறியிருப்பது கண்டுவைத்தும், அவரையும் அவர் மாணுக்காகிய தொல்காப்பியனுரையும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவராகக் கூறுதல் எங்ஙனம் இயையுமெனின், உரையாசிரியரிற் பலர் இதனை அகத்தியருத்திரமென்றே எடுத்தாண்டுள்ளாராதலின் அதனை மறுத்தல்வேண்டா. விண்ணவர்தலைவனுகிய இந்திரனுக்கு வடமொழி யிலக்கணம் அறிவுறுத்த வியாழன், விளியைப் பெயர்க்கண் அடக்கி வேற்றுமை யேழென்று நூல்செய்தாஞக, அதன் வழிநூல் செய்த இந்திரன் விளியை வேறுக்கி வேற்றுமை எட்டென்றனன். இவ்விந்திரன் கொள்கையே எமக்கும் உடன்பாடாம் என்றனர் அகத்தியர் என்பதுவே அச்சூத்திரத்திற்குப் பொருளென்பாதலின் அது பாணினியத்தைச் சுட்டியதாகப் பொருள்கோடலே மறுக்கத்தக்கதாம். தொல்காப்பியச் சிறப்புப்பாயிரத்தும் பாணினியம் நிறைந்த தொல்காப்பியனென்னுது 'ஐந்திரநிறைந்த தொல்காப்பிய'னென்றே கூறியிருத்தலானும், நூலுள்ளும் 'ஆசிரியர்' வேற்றுமை தாமே யேழென மொழிப' எனப் பிறர் மதங்கூறி 'விளிகொள்வதன்கண் விளியோடெட்டே' எனத் தந்துணிபுரைத்தாராதலானும் 'புண்ணியசரவணம் பொருந்துவிராயின், விண்ணவர் கோமான் விழுநூலெய்துவிர்' என இளங்கோவடிகள் இந்திரன் செய்த இலக்கணத்தையே சிறப்பாக எடுத்தியம்பினுராதலானும் பாணினியம் தோன்றுமுன்னர் ஐந்திர வியாகரணம் ஓதப்பட்டுவந்தகாலத்தே தொல்காப்பியம் எழுந்ததென்பது ஐயமின்றித் தெளியப்படுதலின் மேற்கூறியது இயையுமென்க.

தமிழ்வழங்கும் நிலம்

இனி, அத்தமிழ்மொழி வழங்கும் நிலம் யாதாமெனின், 'வடவேங்கடந் தென்குமரியாயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்' எனப் பனம்பாரனுரும், 'வேங்கடங்குமரி தீம்புனற் பௌவமென், றிந் நான்கெல்லை தமிழது வழக்கே' எனச்சிகண்டியாரும் பிறரும் எல்லை கூறியிருத்தலால், வடக்கின்கண் வேங்கடமும் தெற்கின்கட் குமரியும் கிழக்கு மேற்குக் கடலும் எல்லையாகப்பெற்ற நிலமே தமிழ்வழங்கு நிலமென்பது யாவர்க்கும் ஒத்த முடிபாகும். தென்மதுரையிடத்தே முதற்சங்கமிருந்து தமிழாராய்ந்த காலத்து வேங்கடமலையும் குமரி மலையும் எல்லையாயிற்றென்பதும், அக்குமரிமலையும் பஃறுளியாறும் தென்மதுரையோடு கடல்வாய்ப்புக்க பின்னர் இடைச்சங்ககாலத்துக் குமரியாறும், அதுவுங் கடல்கோட்பட்டு அழிந்தொழிந்த பிற்றைநாளில் குமரிக்கடலும் தெற்கெல்லையாயின வென்பதும் அறியப்படும். பிற் காலத்து மேற்குக்கடலேயன்றிக் குடநாடே யெல்லையாயிற்றென்பதாம்.

செந்தமிழ் கொடுந்தமிழ் நாடுகள்

மேற்கூறிய எல்லையுட்பட்ட தமிழ்வழங்கும் நிலத்துள் செந்தமிழ் கொடுந்தமிழ நாடுகள் உளவென்பதும் அவைபற்றிப் பலர் கூறும்

கருத்துக்களும் இன்னவெனக் காண்பாம். தென்சொற்கடந்தான் வட சொற்கடற்கெல்லைதேர்ந்தான் எனப் பாராட்டப்பெற்ற ஆசிரியர் சேனுவரையர் 'இயற்சொற்றுமே, செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித், தம்பொருள் வழாமையிசைக்குஞ் சொல்லே' என்னுஞ் சூத்திரத்திற்கு 'இயற்சொல்லென்று சொல்லப்படும் சொற்றும், செந் தமிழ்நிலத்து வழக்காதற்குப் பொருந்திக் கொடுந்தமிழ் நிலத்தும் தம் பொருள் வழுவாமல் உணர்த்தும் சொல்லாம். திரிபின்றி இயல்பாகிய சொல்லாகலின் இயற்சொல்லாயிற்று. கொடுந்தமிழ் நிலத்திற்கும் பொதுவாகலின் இயற்சொல்லாயிற்றெனினும் அமையும். செந்தமிழ் நிலமாவன:—வையையாற்றின் வடக்கும் மருதயாற்றின் தெற்கும் கரு வூரின் கிழக்கும் மருவூரின் மேற்குமாம்' என்று உரையெழுதியுள்ளார். இவர்க்கு முன்னோரான இளம்பூரணரும் மற்று நச்சினர்க்கினியர் குணசாகரர் மயிலைநாதர் முதலிய பலரும் செந்தமிழ் நாடின்னதென்பது பற்றி இவ்வாறே கூறுவாராயினர். செந்தமிழ்நாடு வையையாற்றின் வடக்கெனக் கூறுதற்குக்காரணம் அவருள் ஒருவரும் எழுதினரில்லை. குணசாகரர்மட்டில் 'மன்றவரணன் மலர்திருவருளால், தென்றமிழ் மகிமை சிவணியசெய்த, அடியவர் கூட்டமும் ஆதிச்சங்கமும், படியின் மாப்பெருமை பரவுறுசோழனும், சைவமாதவரும் தழைத்தினி திருக்கும், மையறுசோழ வளநாடென்ப' என ஒருவகையான காரணங் கூறினர். இவ்வுரைச்சூத்திரம் ஆருகத சமயத்தவராகிய குணசாகரரால்றிப் பிற்காலத்துச் சைவப் புலவர் ஒருவரால் இடையே செருகப் பெற்றிருக்க வேண்டுமென்பது உற்று நோக்குவார்க்கு கன்கு புலனும்.

சங்கரநமச்சிவாயர், மாதவச்சிவஞான முனிவரர் முதலானோர், செந்தமிழ் நிலமாவது:—'சந்தனப் பொதியச் செந்தமிழ் மூனியும், சொனந்தரபாண்டிய னெனுங் தமிழ்நாடனும், சங்கப்புலவருக் தழைத் தினிதிருக்கும், மங்கலப் பாண்டிய வளநாடாகும்' இவ்வாறன்றி வையையாற்றின் வடக்கெனக் கூறுவாருமுளர். கொடுந்தமிழ் நிலத்துப் புனல்நாடெனனச் சான்றோர் கூறுதலானும் அஃது உரையன் றென்க' என்றனர். இவர்கள், செந்தமிழ் நாடெனப்படுவது பாண்டி வளநாடெனக்கொண்டு அதற்குத் தக்க காரணமுங் காட்டினர்.

இனி, திசைச்சொல்லுக்கு இலக்கண முணர்த்தும் "செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும், தங்குறிப்பினவே திசைச்சொற்கிளவி" என்னும் சூத்திர உரையில், "செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு நிலத்தும் தாம் குறித்த பொருள் விளக்கும் திசைச்சொல். அவ்வந் நிலத்துத் தாங்குறித்த பொருள் விளக்குவதல்லது அவ்வியற் சொற்போல எக்நிலத்தும் தம் பொருள் விளக்கா. பன்னிரு நிலமாவன:- பொன்தார்நாடு ஒளிநாடு தென்பாண்டிநாடு குட்டநாடு குடநாடு பன்றிநாடு கற்காநாடு சீதநாடு பூழிநாடு மலைநாடு அருவாநாடு அருவா வடதலைநாடு எனச்செந்தமிழ்நாட்டுத் தென்கீழ்பால் முதலாக வடகீழ்பால் இறுதியாக

எண்ணிக்கொள்க'' என்றனர் சேனாவரையர். அவர் இவற்றைக் கொடுந் தமிழ் நிலமெனக் கூறிலரெனின், மேலைச் சூத்திர உரையில் செந்தமிழ் நிலம் கொடுந்தமிழ் நிலமெனப் பகுத்து, அவற்றுட் செந்தமிழ் நிலம் இன்னதென வரையறை கூறிப் போந்து, ஈண்டுப் பொங்கர்நாடு முதலியவற்றையெண்ணி அவற்றுக்குத் திசையுங் கூறினர். இவை யன்றிக் கொடுந்தமிழ் நிலமென வேறுநிலம் இவராற் கூறப்படாமை யானும், இப்பன்னிரு நிலனும் செந்தமிழ் கொடுந்தமிழ் நிலங்களில் அடங்காது தனியே நிற்றல் சாலாமையானும் பொங்கர்நாடு முதலாக எண்ணப்பட்ட இப்பன்னிரு நிலனும் செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு கொடுந்தமிழ் நிலமென்றலே அவர்க்குக் கருத்தாதல் தெளியப்படும். இளம்பூரணர் இவற்றுட் சில நாடுகளை முன் பின்னாக மாற்றி இவ்வைப்புமுறை பிறழக்கூறினர். ஆசிரியர் நச்சினார்க்கினியர் ''செந்தமிழ் சேர்ந்த பன்னிருநிலம்'' என்பதற்குச் செந்தமிழ்நாட்டைச் சேர்ந்த ஓளிநாடு தென்பாண்டிநாடு முதலான பன்னிரண்டு கொடுந் தமிழ்நாடும், அவற்றைச் சார்ந்துள்ள சிங்களங்கொல்ல முதலிய பன்னிருநாடுமாம், எனப் பொருள் கூறியிருப்பதும் ஈண்டு நோக்கத் தக்கதாம். இவரும் செந்தமிழ்நாடு வையையாற்றின் வடக்கென்னும் கொள்கையுடையவரென்பது மேலே கூறப்பட்டது.

நன்னூற்கு உரைகண்டாரெல்லோரும் ''செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு கொடுந்தமிழ் நிலங்களினும் பதினெண்மொழி களுள் தமிழும் வடசொற்குக் காரணமான ஆரியமும் ஒழிந்த பதினாறு மொழியும் வழங்கிவரும் பதினாறு நிலத்தின் கண்ணுமுள்ளோர் தங்குறிப்பினவாய்ச் செந்தமிழோர்குறிப்பினவன்றி, அத்திசைகளினின் றும் செந்தமிழ்நிலத்து வந்து வழங்குவன திசைச் சொல்லாம், என்றனர். வடமொழியை எல்லாத் தேயத்திற்கும் பொதுவெனக்கொண்டு விலக்கித் தமிழொழி நிலம்பதினேழெனக் கூறலுமுண்டு.

> ''தென்பாண்டி குட்டம் குடங்கற்கா வேண்பூழி
> பன்றி யருவா வதன்வடக்கு—நன்றிய
> சீத மலாடு புனனாடு செந்தமிழ்சேர்
> ஏதமில் பன்னிருநாட் டெண்''

''சிங்களஞ் சோனகம்.....பதினேழ்புவிதாமிவையே'' என்பவற்றால் முறையே கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டும், தமிழொழிநிலம்பதினேழும் இவையெனக்கூறினர். கொடுந்தமிழ்மொழியும் வேற்றுமொழிச்சொற் களும் செந்தமிழ் நிலத்துவந்து வழங்குவன திசைச் சொல்லென்பது இவர்கள் கருத்தாம்.

அவைபற்றிய தடைவிடைகள்.

செந்தமிழ் நாடாவது வையையாற்றின் வடக்கெனக் கூறுதற்கோர் காரணமின்மையானும், அங்ஙனங்கூறின், வையையாற்றின் தெற்காகிய கொற்கையும் கருவூரின் மேற்காகிய கொடுங்கோளூரும் மருதயாற்றின்

வடக்காகிய காஞ்சியும் தமிழ்நிரி நிலமெனப்படுமாகலானும், வடவேங் கடந்தென்குமரியாமிடைத்தமிழ் கூறும் உலகமென்ஞது கல்லுலகம் எனத்தமிழ்கூறும் உலகம் விசேடிக்கப் பட்டமையானும் இவ்வெல்லீயுட் பட்ட நிலமுழுதும் செந்தமிழ் நிலமாம். ஒளிகாடு தென்பாண்டிநாடு முதலிய பன்னிரண்டும் செந்தமிழ் காட்டகத்த ஆதலால் அவை கொடுந்தமிழ்நாடெனப்படா. ''செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நில'' மென்பது செந்தமிழ்நாட்டெல்லீயைச்சார்ந்த வேற்று மொழி வழங்கும் பிறநாடாதல் வேண்டும். அப்பன்னிருநாடாவன குமரியாற்றின் தென் கரைப்பட்ட ·பழந்தீவம் கொல்லம் கூவம் சிங்களம் என்பனவும், சையத்தின் மேற்குப்பட்ட கொங்கணம் துளு குடகம் குன்றகமென் பனவும், கிழக்குப்பட்ட கருநடம்வடுகு கலிங்கம் தெலுங்கம் என்பனவும் ஆம். (இக்கருத்தமைந்த சூத்திரமொன்று காட்டி அதனை அகத்திய மென்பர் மகீஷ்நாதர்) இப்பிறநாட்டின்கண் இயல்பாய் வழங்கும் மொழிகள் செந்தமிழ் நிலத்துவந்து நிலவுங்குவன நிசைச் சொல்லெனப் படும் என்பர் தெய்வச் சிலையார்.

''புனல் நாடெனப்படும் சோணாட்டினீயாதல் கடைச்சங்கமிருந்த உத்தரமதுரையையுடைய பாண்டி நாட்டினீயாதல் செந்தமிழ்நாடென் றலும் ஏனைய நாடுகளைக் கொடுந்தமிழ் நாடென்றலும் பொருந்தாவாம். பொருந்துமேல், செந்தமிழ் நூலாகிய தொல்காப்பியம், வேங்கடங் குமரியாகிய கொடுந்தமிழ் எல்லையை நீக்கிச் செந்தமிழ்க்கே யெல்லை கூறல் வேண்டும். அஃதின்றேல் அவ்வெல்லீயை இரண்டடங்கும் பொதுவாக்கிச் செந்தமிழுக்குத்தனியே சிறப்பெல்லீயுங்கூறல்வேண்டும். அவ்வாறு கூறுமையானும், இடைச்சங்க மிருந்தகபாடபுரமும் முதற் சங்கமிருந்த தென்மதுரையும் செந்தமிழ் கொடுந்தமிழெனப்பகுத்த நாட்டினுள் அடங்காமையின் அவை தமிழ்நாடாகாவெனவே கொள்ளப் படுமாதலானும், நூலுள்ளும், ''வண்புகழ்மூவர் தண்பொழில்வரைப்பு'' எனவே கூறப்பட்டுள்ளமையானும் வேங்கடங்குமரியை யெல்லீயாக வுடைய காடு முழுதும் செந்தமிழ் நாடேயாம். ''செந்தமிழ்சேர்ந்த பன்னிருநிலம்'' என்றது செந்தமிழ் வழங்கிய பன்னிரு தமிழ் நாடெனப் பொருள்படுமன்றிக் கொடுந்தமிழ் நாடெனப்படாமை யானும், செந்தமிழினின்று சிதைந்து வழங்குமொழியே கொடுந் தமிழெனில், அஃது இழிந்தோர் வழக்காதலிற்கொள்ளப் படாமை யானும், அத்தமிழினின்றும் பிறந்த வேறொருமொழியெனின், அது துளுகன்னடம் என்றாற்போல வேறு பெயர் பெறுமாகலானும், அத்துளுமுதலியனவும் ஆரியன் காலத்து இன்மையானும் ஆண்டுப் பன்னிரு நிலமென்றது செந்தமிழியற்கையுந் திரிபுஞ் சேர்ந்த பன்னிரு தமிழ் நாடேயாம்.'' என்பர் அரசஞ் சண்முகனார்.

இதுகாறுங் கூறியவாற்றால், வடவேங்கடத் தென்குமரியிடைப்பட்ட தமிழ் நாட்டினீச் செந்தமிழ் நாடு கொடுந்தமிழ் நாடெனப் பகுத்து, அவற்றுட் செந்தமிழ் நாடாவது சோணாடென்றும் பாண்டிநாடென்றும்,

ஏனைய நாடுகள் கொடுந்தமிழ் நாடென்னுங் கூறுவாரும், அவர் கூற்றுக்களை மறுத்து, அவ்விரண்டெல்லை யுட்பட்ட நாடு முழுதும் செந்தமிழ் நாடேயாம். அதன்கட் கொடுந்தமிழ் நாடென்பதில்லை. செந்தமிழ்சேர்ந்த பன்னிருநிலம் என்றது. செந்தமிழ் நாட்டெல்லையைச் சார்ந்த சிங்களங் கொல்ல முதலிய பிறநாடாதல் வேண்டும். அன்றிச் செந்தமிழியற்கையுந் திரிபுஞ்சேர்ந்த பன்னிரு தமிழ் நாடாதல்வேண்டு மென்பாரும் எனப் பலதிறத்தர் ஆசிரியரென்பது அறியப்பட்டது. இவரெல்லாம் அறிவுத்துறையிற் கைபோய ஆன்றோராதலின் இவர் தங்கோட்பாடுகள் எளிதின் மறுக்கத் தக்கனவாகா. எனினும் உண்மை யின்னதென ஆராய்தல் பொருத்தமுடையதாகும்.

மிகவும் சேய்மையான பண்டைக்காலத்தே வேங்கடமலையுங் குமரி மலையும் எல்லையாகவுடைய நாடுமுழுதும் தமிழ்மொழியே வழங்கலாயிற் றென்பதும், அம்மொழி வழக்கிற் காணப்படும் வழூஉக் களைந்து இலக்கண வரம்பமைத்துத் தூய்மைப் படுத்தித் திருத்தமுறப் பேசவும் எழுதவும் செய்யுளியற்றவும் வேண்டித் தமிழ்ச் சுவை யுணர்ந்த பாண்டியர், தம் கன்முயற்சியால் அறிவுடைப் பெரியார் பலரை ஒருங்கு கூட்டி ஆதரித்துத் தென்மதுரையிடத்துத் தமிழ் ஆராயுங் கழகம் ஒன்று நிறுவித் தாமும் உடனிருந்து பலப்பல ஆண்டுகள் அதனைப் போற்றி வந்தனரென்பதும், அக்கழகத்திருந்து தமிழாராய்ந்த புலவர் கன்மக்கள் அக்காலத்து இருவகைவழக்கினும் ஏற்பனகொண்டு திருந்திய முறையில் இலக்கிய இலக்கண நூல்களும் இசை நாடக நூல்களும் பல இயற்றி முத்தமிழையும் வளம்பெற வளர்த்தனரென்பதும், அதுகாலைத் தமிழ்நாட்டின் பலபகுதியி லுமுள்ள மாந்தர்பலர் அத்தூயசெந்தமிழைக் கற்கவும் அம்முறையைத்தழுவித் தாம் தாம் இயற்றிய செந்தமிழ்ப் பனுவல்களை அக்கழகத்து அரங்கேற்றவுங் கருதி ஆங்குக்குழுமின ரென்பதும், அக்கழகத்துப் பயின்று புலமைமிரம்பிய ஆசிரியர் தொல்காப்பியர் அம்முதற் சங்கத்திறுதிக் காலத்துத் தொல்காப்பிய மெனப் பெயரிய நூலியற்றினரென்பதும் கொள்ளப்படும். ஆயின், தொல்காப்பியனார் நூல்செய்த அக்காலத்துச்செந்தமிழ், கொடுந்தமிழ்ப் பாகுபாடு உண்டோவெனின், அஃது உண்டென்பதும் இன்றென்பதும் வெளிப்பட அறிதல் அரிதாயினும், அவர் தம் நூலின்கண் இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென்னும் கான்கும் செய்யுளியற்றற் கேற்ற சொற்களாமெனக் கொண்டு அவற்றின் இலக்கணம் உணர்த்துங்கால், "செந்தமிழ்நிலம்" "செந்தமிழ்சேர்ந்த பன்னிரு நிலம்" என வகுத்துச் செந்தமிழ் நிலத்து வழங்குவன இயற்சொல் என்றும், ஏனைப் பன்னிரு நிலத்து நின்றும் செந்தமிழ் நிலத்து வந்து வழங்குவன திசைச் சொல்லென்றும் இரண்டு சூத்திரங்களால் இயற்சொல் திசைச்சொற்களின் இயல்பு கூறியுள்ளாராதலின் அக் நிலங்கள் வெவ்வேறுமென்பதறியப் படுதலானும், பாயிரத்துள்ளும் 'வடவேங்கடந் தென்குமரியாயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்' என முன்னர்ப் பொதுப்படக் கூறிப் பின்னர்ச் 'செந்தமிழியற்கை சிவணிய

நிலம்' என விதந்து கூறப்படுதலானும், ஈண்டுத் தமிழ் கூறும் நல்லுலக மென்பதற்குத் தமிழ் மொழியினைக் கூறும் நல்லாசிரியரெனவும் நல்ல உலகமெனவும் பொருள் கூறிஞரெல்லோரும் செந்தமிழியற்கை சிவணிய நிலமென்பதற்குச் செந்தமிழ் நாடென்றே உரையெழுதினரதலானும், பின்னது சுட்டு மாத்திரமே உணர்த்துமெனின், செந்தமிழெனச் சிறப்பித்துரைத்தலால் ஒரு பயனுமின்றி வறிதே அடைபுணர்க்கப்பட்ட தென்னுங் குற்றந் தங்குமாகலானும், தலைச் சங்கத்தாரும் இடைச் சங்கத்தாரும் இயற்றிய அரும்பெருஞ் செய்யுட்களெல்லாம் நமக்கு அகப்படாவாறு அழிந்தொழிந்தமையின் அக்காலத்து இப்பாகுபாடு இல்லையென்று - ஒருதலையாகத்துணிதல் கூடாதாகலானும், கடைச் சங்கத்திறுதிக்காலத்து அருந்தவச் செல்வராய்ப் பெருந்துறவு மேற்கொண்ட ஆசிரியர் இளங்கோவடிகள் தொல்காப்பியமே இலக்கணமாகக் கொண்டு தாமியற்றிய சிலப்பதிகார நூலிறுதிக் கட்டுரையில் "மண்டிணி கிடக்கைத் தண்டமிழ்வரைப்பிற், செந்தமிழ் கொடுந்தமிழென்றிரு பகுதியின்" எனப் பிரித்துக் கூறுதலானும், இப்பிரிவு பண்டுதொட்டின்றுகாறுந் தாமே படைத்திட்டுக் கொண்டு கூறினரென்றல் பொருந்தாமையானும் தொல்காப்பியர் காலத்தும் இப்பகுப்புண்மை உய்த்துணரப்படுவதாகும். அவ்வாறாயின், தமிழ் நிலத்திற்குப் பொதுவும் சிறப்புமாகிய இரு வேறெல்லையும் கூறுதல் வேண்டுமெனின், ஆசிரியர் காலத்தும் அதன்முற்காலத்தும் தோன்றிய பிற நூல்களும் வழக்கியலுங் கொண்டு துணியப்படுமாதலின் இரு வேறெல்லையும் ஒருங்கே கூறவேண்டுமென்னும் நியதியின்றென்பது களவியல் முதலியவற்றுள் அறியப்படும்.

செந்தமிழ்நாடு இன்னதென்பதும், அதற்குக் காரணமும்.

ஆயின், வடவேங்கடந் தென்குமரியிடைப்பட்ட நிலப்பரப்பு முழுதும் செந்தமிழ் நிலமாமெனின், செந்தமிழென்பது கற்றூர் வழுவின்றிக்கூறும் செம்மையுடைய தமிழாகலின், கற்றூர் சிலருங் கல்லார் பலருங் கலந்துறையும் ஒரு பெரிய நிலப்பரப்பு முழுதும் தாய செந்தமிழே வழங்கிற்றென்றல் இயற்கைக்கு மாறுகலானும், பாண்டிய மன்னர் தமிழ் மொழியின் ஆக்கநலங்குறித்து ஒன்றன்பின் ஒன்றாக மூன்றுமுறை தமிழ்ச்சங்கம் நிறுவிப்பல்லாயிரம் ஆண்டுகள் அம்மொழி வளமுந் தாய தன்மையும் சிதையாமல் போற்றிப் புரந்த அருமைப் பாட்டானும், அதன் பயனுக அவர் நாட்டின்கண் நல்ல தமிழே வழங்கி வந்த சிறப்பானும், விளக்காகிய சுடர் இருந்த இடமும் குறிஞ்சியாகிய ஒழுக்கம் நிகழ்ந்த நிலனும் முறையே விளக்கெனவும குறுஞ்சியெனவும் பெயர் பெற்றாற்போலச் செந்தமிழ்ச் சங்கம் நிகழ்ந்த பாண்டி வளநாடே செந்தமிழ் நாடென்னும் சிறப்புப்பெயர் பெறுவதாயிற்று. இதனுல் தலைச்சங்கமிருந்த தென்மதுரையும் இடைச் சங்கமிருந்த கபாடபுரம் கடைச் சங்கமிருந்த உத்தர மதுரையும் செந்தமிழ் நாடாமென்றல் கூருமாலே அமையும்.

அவ்வாரூயின் பாண்டியனே செந்தமிழ்நாடன் அவனது நாடே செந்தமிழ்நாடு எனப்படும். ஆகவே 'வண்புகழ் மூவர்தண் பொழில் வரைப்பு' 'போந்தை வேம்பேயார்' எனத் தொல்காப்பியத்துள்ளும், 'வென்றியொடு, வில்லலைத்துண்ணும் வல்லாண் வாழ்க்கைத், தமிழ் கெழுமூவர்' என அகத்திலும், 'முரசு முழங்குதானை மூவருங்கூடி, அரசவையிருந்த தேசற்றம்போல' எனப்பாட்டிலும், பிறவிடங்களிலும் தமிழ்நாட்டு வேந்தர் மூவர் எனக்காணப்படும் ஆன்றோர் ஆட்சியொடு மாறுபடுமெனின், ஏனையிருவேந்தரும் தமிழ்நில வேந்தரென்பதும், தமிழ்ப்புலவர்களே ஆதரித்து அவராற் பாடப்பெறும் அழியாப்புகழை விரும்பித்தாமும் புலமை மிக்காராய்த் தாய்மொழி வளர்ச்சியில் அவ்விருவரும் கருத்தூன்றி நின்றாரென்பதும் அவர் ஆட்சிநடாத்திய மண்டலங்களுக் தமிழ் மண்டலமென்பதும் யாவர்க்கும் உடன்பாடாம். ஆயினும், சற்றுவல்ல புலவர் பெருமக்களே ஒருங்கு கூட்டித் தாமும் உடனிருந்து முச்சங்க நடாத்திய முறைமையாலும், செந்தமிழ்ப்பயிற்சி மிக்கிருந்த சிறப்பாலும் பாண்டியரைச் செந்தமிழ் நாடென்றலும் அவர் நாட்டினைச் செந்தமிழ் நாடென்றலும் தொன்றுதொட்ட மரபாகும். இதனால் ஏனையிருவர்க்கும் அவர் நாடடிற்கும் இழுக் கொன்றுமில்லையாதலின் மாறுபாடின்றும்.

சேரசோழரென்னும் இருவேந்தரும் எங்ஙனம் தமிழ்வளர்ச்சியில் தலைப்பட்டாரெனின், சேரகுலவேந்தராய் முடிசூடுதற்கேற்ற பொறிகள் வாய்ப்பப் பிறந்திருந்தும் நாடாட்சி துறந்து அத்தமில் இன்பத்து அழிவில் வீடாட்சி யெய்துதற்குரிய அருந்தவ மேற்கொண்டொழுகிய இளங்கோவடிகள், தம் முத்தமிழ்ப் புலமையும் வித்தகப்பாடலுந் தோன்ற இயற்றிய சிலப்பதிகாரமென்னும் பெருங்காப்பிய முதலாலும், பெருங்கடுங்கோவாற் பாடப்பெற்ற பாலைக்கலியும், சேரகுல வேந்தர்க்கே உரித்தாய பதிற்றுப் பத்தும், புறப்பொருள் வெண்பாமாலையும், தொகை நூல்களில் இவர்கள் பாடினவும் இவர்கள்மேற் பாடப்பெற்றனவுமாய்க் காணப்படும் பல செய்யுட்களும், சேரமான் பெருமானடிகள் அருளிச்செய்த அந்தாதி மும்மணிக்கோவை ஆதியுலா முதலியனவும் இக்குலத்தாரின் தமிழ்ப் புலமையையும் தமிழாரார்வத்தையும் புலப்படுத்துவனவாம். பதிற்றுப்பத்துச் சேரமன்னர், தம்மைப் பாடிவந்த பரிசிலர்க்கு உள்ளம் உவந்தளித்த வள்ளன்மையை உள்ளுங்கால் உள்ளம் உருகாகிற்கும். இவ்வாறே பதினோராசிரியம் பொற்காசுகள் பரிசிலளித்துத் திருமாவளவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டினப்பாலையும், சோழன் நல்லுருத்திரன் இயற்றிய முல்லைக்கலியும், சோழவேந்தரின் பெருமைகுறித்துத் தொகைநூல்களிற் காணப்படும் பலபாடல்களும், களவழிநாற்பதும், பிற்காலத்துச் சோணாட்டரசர் ஆதரவால் தோன்றிய பரணி கோவை உலா வீரசோழியம் திருத்தொண்டர் புராணம் இராமயண முதலியனவும், சோழர் குலத்தோன்றல்களின் தமிழறிவையும் தமிழ்ப்புலவர் பக்கல் அவர் காட்டிய பேரன்பையும் அறிவிப்பனவாம்.

இனி, இசைச் சொற்கள் தோன்றுதற்கு நிலைக்களனுய்ச் செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலமெனப்படுவன யாவையெனின், செந்தமிழ்நாட்டின் எல்லையைச்சார்ந்து அதன் புறத்தேயுள்ள சிங்களம், கொல்லம் முதலிய வேற்று மொழிகள் வழங்கும் பன்னிருநாடும், அவ்வேற்று மொழிப் பயிற்சி மிகப் பெற்றமையால் தமிழ்நாட்டெல்லையிலுள்ள பல நாடுகள் தம் இயற்கை மொழிவளம் இழந்து திரிபுபட்டமையின் அவ்வியற்கையுக் திரிபுங்கலந்த தமிழ் வழங்கும் தென்பாண்டி முதலான பன்னிரு தமிழ் நாடுமாம். இங்ஙனம் வேற்றுமொழிக்கலப்பால் தன் இயற்கை கலங்குன்றித் திரிந்தமையால் அந்நாட்டுத்தமிழ் செந்தமிழும் ஆகாது; தமிழின் பகுதியேயாதலின் அயல்மொழியும் ஆகாது; கொடுந் தமிழெனப்பட்டுத் திசைச் சொல்லுள் அடங்குவதாயிற்று. துளு, வடுகு முதலிய சில மொழிகள் தமிழின் வழிமொழியே யாயினும் வடமொழிச் சார்புமிகப்பெற்று நாளடைவில் வேறுபட்டமையால் அவை கொடுந் தமிழெனப்படாது, அயல் மொழியேயாயத் திசைச்சொல்லாயின. துளு, வடுகு முதலான பிறமொழிகள் அக்காலத்துண்டோவெனின், ''தோகைக்காவிற்றுளுநாட்டன்ன.....செம்மல்மூதூர்'' 'வாணிணப் புகவின் வடுவர் தேனத்து' ''தொடையமை பகழித்துவன்றுநிலைவடுகர் .....மொழி பெயர்தே எம்'' ''கல்லா நீள் மொழிக் கதகாய்வடுகர்'' ''முரண்மிகுவடுகர் முன்னுறமோரியர்'' ''வடுகர் அருவாளர் வான் கருநாடர்'' எனக் கடைச்சங்கத்துச் சான்றோர் பாடல்களிற் பயின்று வருதலின் அச்சான்றோர் காலத்திற்கு முன்னரே அவை வழக்கிலிருக் தமை யறியப்படும்.

வையையாற்றின் வடக்காகிய சோணாடே செந்தமிழ்நாடென்பது பலருடைய கருத்தாதலின் அங்ஙனங்கோடல் பொருந்துமெனின், மேற்கூறியவாறு அரும்பெரு நூல்கள் பலவற்றை ஆக்கியும் ஆக்குவித்தும் பல்லாற்றானும் தமிழ்மொழிவளர்ச்சியில் தலைநின்று முயன்ற அவ்வரு பெருமரபின் வழிவந்த பேரரசர்களும், கடைச்சங்கமாள்முதல் இன்று காறும் வெளிப்போந்த நூல்களை ஆக்கியருளிய ஆசிரியப் பெருந்தகையார்களும் ஒருப்பட்ட உள்ளத்தராய்ப் பாண்டிமண்டலையே தமிழ்நாடர் தமிழ்வேந்தரெனப் பாராட்டியுள்ளாரன்றிச் சோணாட்டரசரை யாதல், அவர்நாட்டினை யாதல் தமிழொடு தொடர்புபடுத்திக் கூறினாரில்லையென்பது தக்க பலசான்றுகள்கொண்டு ஆராய்ந்து நிறுவப்படுமாதலின் சோணாடே செந்தமிழ்நாடென்பது பொருந்தாதாம். இங்ஙனம் ஆராயப்புகுமுன், சங்கத்துச் சான்றோராகிய நல்லிசைப் புலவர்களும் பிறரும், தம்மையாதரித்தோர் பெருநிலவேந்தராயினும் குறுநில மன்னராயினும் கொடையிற் சிறந்தோர், படையிற் பயின்றோர் இன்னும் எவ்வகையான மேம்பட்டாராயினும் அவரவர்பால் தாம் கண்ட அரியகுணஞ் செயல்களை உள்ளவாறு கூறுதலன்றி, வேறு எக்காரணம்பற்றியும் நடுநிலைதிறம்பி உயர்த்தியுந் தாழ்த்தியுங் கூறுவாரல்லரென்பதையும், அவர் தம் பெரும்பாலான மொழிகளை ஆராய்தல், உவத்தல் அகற்றி ஆய்தல் வேண்டுமென்பதையும் உள்ளத் தமைத்துக் கோடல் நல்லதாம்.

நத்தத்தனார் கருத்து

ஓய்மானாட்டு நல்லியக்கோடனை த்தலைவனுக்கொண்டு இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடிய சிறுபாணாற்றுப்படையில், சேர பாண்டிய சோழரென்னும் மூவேந்தரையும் முறையே கூறிவருமிடத்து, அவருடைய நாடு நகரங்களின் இயற்கையும் அவர்தம் அரியசெயல்களும் சுருக்கி யுரைக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு:—

கொழுவிய மீன்கள் காலிற் பட்டுத்துணியும்படி நடந்து செங்கழுநீர் பூவை மேய்ந்த எருமை, தேன்மணங்கமழ மென்று அசையிட்டு மிளகுக் கொடிபடர்ந்த பலாமரத்தின் நீழலிலே மஞ்சளினது இலை முதுகைத் தைவரக்காட்டு மல்லிகையாகிய படுக்கையிலே துயில்கொள்ளுதற்கு இடமான குடபுலம் எனச் சேரமானாட்டின் இயற்கையழகும், வடதிசைக் கண்ணுள்ள இமயநெற்றியில் தனது வில்லியெழுதிய குட்டுவன் என அவனது ஆணைச்சிறப்பும், பெருகின்ற நீரையும் கோபுரவாயிலையு முடைய வஞ்சியெனத் தலைகரின் பெருமையும் வருணிக்கப்பட்டுள்ளன. இவ்வாறே, பொய்கைக் கரையிலே நின்று வளர்ந்த கடம்பினுடைய மாலைபோற் பூத்தமலர்கள் இந்திரகோபத்தை யொத்த தாதை யுதிர்த்தலின் அத்தாது சேர்ந்து சித்திரத்தை யொத்த உண்ணுந்துறை யிடத்தே மாதர் முகம்போல் மலர்ந்த தாமரைக்கொட்டையின்கண் இனிய பெடையைத் தழுவித் துயில்கொண்டெழுந்த தும்பிகள் சோமா மென்னும் பண்ணைப்பாடுதற் கிடமான மருதநிலஞ்சூழ்ந்த குடியிருப்பை யுடைய குணபுலம் எனச் சோணாட்டின் நீர் நிலவளங்களின் சிர்மையும், பகைவருடைய தூங்கெயிலையழித்தமையால் உலகறிந்த புகழையுடைய செம்பியன் என அவனது ஒன்னார்த்தெறும் ஆற்றலும், தன்னிடத்து வாழ்வார் ஓடாமைக்குக் காரணமாகிய மேற்கோளினையுடைய உறந்தை யென முறஞ்செவி வாரணத்தையும் புறங்காணும் புறஞ்சிறை வாரண நகரின் இயற்கை வன்மையும் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு இரு வேந்த ருடைய செயற்கருஞ் செயல்களையும் நாடு நகர்களின் இயல்பையுங் கூறி வந்த ஆசிரியர், இவ்விரண்டற்கும் இடையில், கூர்மையான உளியால் நடுவேயகழ்ந்து கடைந்து சாதிலிங்கம் பூசப்பெற்ற நுணுமரத்தின் கட்டையாலாகிய சேப்புச்சேர்ந்த மார்பினையும் கிடேச்சையாற்செய்த பூமாலையினைக் கட்டிய கெற்றியினையும் உடையதும், உப்பு வாணிகரார் குழந்தைபோல் வளர்க்கப்பட்டு அவர்சகட வொழுங்கோடே கூட வந்ததும் ஆகிய மத்தி, உமட்டியரின்ற புதல்வரோடு சேர்ந்து கிளிஞ்சிலினுள்ளே முத்துக்களை யிட்டுப் பொதிந்து தானுங் கிளு கிளுப்பைகொண்டு விளையாடுதற்கிடமான கொற்கைத்துறையினையுடைய தென்புலம் எனப் பாண்டிய நாட்டின் இயல்பும், மாற்றூர் நிலத்தைக் கைக்கொண்ட வழுதியென அவன் வீரச்செயலும், 'தமிழ் நிலைபெற்ற தாங்கருமரபின், மகிழ்நனை மறுகின்மதுரை' அஃதாவது, தன்னிடத்துத் தோன்றிய மனமகிழ்ச்சி பொறுதற்கரிய முறைமையினையுடைய தமிழ் வீற்றிருந்த தெருவினையுடைய மதுரை யெனத் தலைகரின் பெருமையும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சேர சோழருடைய நாடு

நகர்களின் சிறப்பியல்களை நேரிற் கண்டாலொப்ப நாம் அறிவுக்கண்ணும் காணும்படி கூறிய ஆசிரியர் நத்தத்தனார், பாண்டியர் நாடு நகரங்களுக்கு முத்தும் முத்தமிழும் ஆகிய இரண்டாலும் ஏற்றங்கூறினர் என்பது ஈண்டுநோக்கத்தக்கது. பாண்டியனையாதல் அவன் நாடு நகர்களையாதல் எண்ணிய அளவில் பெரும்புலவர்கள் உள்ளத்தில் முத்தும் முத்தமிழும் முன்வந்து நிற்குமென்பதைப் பல விடத்தும் பரக்கக் காணலாம்.

" வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்துப்—பூழியார்கோன்
தென்னூடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து "

எனக் கவியரசியாகிய ஔவையாரும் தென்னூடு முத்துடைத்து எனக் கூறியுள்ளார். ஒவ்வொருநாட்டினும் மிக்குத் தோன்றுவ தொன்றைக் கண்டு அதனால் அந்நாட்டினைப் புனைந்துரைத்தாராதலின் ஏனைய நாடுகளை இழித்துரைக்கும் நோக்கம் அவர்க்கு இல்லையாமென்க.

மாங்குடி மருதனார் கருத்து

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைக் குறித்து மதுரைக்காஞ்சி பாடிய புலவர் பெருமானுகிய மாங்குடி மருதனார், 'தென்னவற் பெயரிய துன்னருந்துப்பிற், றொன்முதுகடவுட் பின்னர்மேய, வரைத்தாழருவிப் பொருப்பிற் பெருந' என அவனை மூன்னிலைப்படுத்துக் கூறியுள்ளார். அஃதாவது;— பக்கமலையிலே விழுகின்ற அருவியினையுடைய பொதியின் மலையிலிருப்பவனும் இராவணனைத் தமிழ்நாட்டையாளாதபடி பேர்க்கின கிட்டுதற்கரிய வலியினையுடைய பழமை முதிர்ந்தவனும் ஆகிய அகத்தியன் பின்னே எண்ணப்பட்டுச் சான்றோரியிருத்தற்கு மேவின ஒப்பற்றவனே என்பது அவ்வடிகளின் பொருளாம். இதனால் அகத்தியனுடன் தலைச்சங்கத்துப் பாண்டியனிருந்து தமிழாராய்ந்த சிறப்புக்கூறினர் என்று நச்சினார்க் கினியர் எழுதியிருப்பதுங் காணலாம். இது நெடுஞ்செழியனுடைய முன்னோர் பெருமையை அவன் மேலேற்றிக் கூறியதாகும். இவ்வாறே, கி. பி. 10-ஆம் நூற்றாண்டில் இராசசிம்மபாண்டியன் காலத்து அமைந்த சின்னமனூர்ச் செப்பித்தகளில் " அகத்திய சிஷ்ய " " பொருவருஞ்சீர் அகத்தியனைப் புரோகிதனகப்பெற்றது " எனவும், வீரபாண்டியன் மெய்க்கீர்த்தியில் " நிடவாசகக் குறுமுனிபால் செந்தமிழ் நூல் மெய்க்கீர்த்தியில் " எனவும் பிற்காலத்துப் பாண்டியர்களையும் தமிழ் முனிவராகிய அகத்தியரோடு தொடர்புபடுத்திக் கூறியிருத்தல் ஒப்பு நோக்கத்தக்கதாம்.

பெருங்கடுங்கோவின் கருத்து

சேரமான் பெருங்கடுங்கோவென்பார் தாம் பாடிய பாலைக்கலியில் பாலைத்திணையாகிய அகவொழுக்கத்தைப் பலபடப் பாரித்துரைத்தலே கருத்தாகவும், அதனைட் கூறுதற்கு யாதும் இயைபில்லாத கூடல்

நகரையும் ஆண்டுவழங்குந் தமிழ்மொழிப் பயிற்சியையும் ஒருதலேவி கூற்றிலமைத்து இடையே புகுத்திப் பாராட்டுகின்றார். அஃதாவது:-

"நிலனுலிற் றிரிதருஉம் நீண்மாடக் கூடலார்
புலனுலிற் பிறந்தசொற் புதிதண்ணும் பொழுதன்றே"

'நிலவுலகத்திலுள்ளார் காவிலேவழங்கும் நீண்டமாடங்களையுடைய மதுரையிலுள்ளார், அறிவினையுடைய சான்றோர் காவிற்பிறந்த கவிகளின் புதுமையைக் கொண்டாடும் இவ்விளவேனிற் காலமல்லவோ தலிவர் வருவேமென்று உரைத்தகாலம்' என்பதாம். இதனால், உலகத்து மக்கள் எல்லோரும் புகழும் பெரும்பேறுபெற்றது மதுரை யென்பதும், அதன்கட் கழக மிருந்து தமிழாராய்ந்த நல்லிசைப் புலவர்கள் புதிய புதிய கருத்துக்கள் அமைந்த பாடல்களை இயற்றி யருளுவாரென்பதும், அங்ஙகரத்து மாந்தர் அப்பாடல்களின் சொற்சுவை பொருட்சுவைகளை நுணித்துணர்ந்து நுகர்ந்து இன்புறுவரென்பதும் பெறப்படுகின்றன. சேரர் மரபிற் பிறந்து தமிழ்ப்புலமை மிக்காராய்ப் பாலியொழுக்கத்தைப் புனைத்துரைக்கவந்த ஆசிரியர் மதுரைகாகரையும் அதன்கண் மதுரத் தமிழ் வளரும் மாண்பினையும் எடுத்துக் கூறியிருப்பது நினைவில் வைக்கத்தக்கதாம்.

மருதன் இளநாகனார்

இனி, மருதக்கலிபாடிய மருதன் இளநாகனென்னும் புலவர், பரத்தையர் சேரியினின்றும் வந்த தலைமகனோடு ஊடிய காமக்கிழத்தி கூற்றாகக் கூறும் ஒருபாடலில், பாண்டியனைக் கிளவித் தலைவனாகக் கொண்டு,

"பொதுமொழி பிறக்கின்றி முழுதாளுஞ் செல்வர்க்கு
மதிமொழி யிடல்மாலே யினைவர்போல் வல்லவர்
செதுமொழி கீத்த செவிசெறு வாக
முதுமொழி நீராப் புலனு வழுவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர"

எனக் குறிப்பிடுகின்றனர். இதன்பொருள்:-பிறர்க்கும் இம்மண்ணுலகம் பொதுவென்னும் மொழியின்றாக மண்ணுலகம் முழுதையும் ஆளும் போரசர்களுக்கு அறிவாகிய சொல்லைச் சொல்லுதலே இயல்பாகவுடைய அமைச்சரைப்போல, நூல்வல்ல ஆசிரியராலே நீயசொற்கள் இடையிற் புகுதாமற் பேசக்கப்பட்ட தஞ்செவிகள் விளைநிலமாக, முன்னுள்ள சான்றோர் கூறிய செயயுட்கள் தம்சொல்லை வளர்க்கு நீராக, அறிவினை யுடைய நாவாகிய ஏராலே உழுதுண்ணும் புலவருடைய புதிய கவிகளைக் கொள்ளைகொண்டுண்ணும் மதில் சூழ்ந்த புனலையுடைத்தாகிய மதுரையை யுடையவனே, என்பதாம். இதன்கண், நல்லாசிரியரை யடுத்துக் குற்றமற்ற நூய செந்தமிழ் நூல்களைக்கேட்டறிதலும், பிழைபட்டநூல்களைக் கேளாது கடிந்தொதுக்குதலும், பழம்பாடல்களைச் சுவையுணர்ந்து படித்துப் பயனுறுதலும், இயல்பாயமைத்த புலவர், தம் அறிவின்திறனை முயன்று புத்துணர்ச்சி ததும்புவண்ணம் இயற்றிய

சிறந்த செந்தமிழ்ப் பாடல்களோப் பலரும் முன்வந்து பயின்று இன்புறுத லாகிய செயல் இடையறவின்றி நடைபெறும் கூடல் நகரையுடையவனே எனப்பாண்டியனைப் பாராட்டிய நயம் உணர்ந்து இன்புறத்தக்கது.

காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார்.

பாணிறவருவிற் பணிக்கொடியோனும் நீணிறவருவின் நேமியோனு மென்றிரு பெருந்தெய்வமும் ஒருவழிக் கண்டாற் போலச் சோழன் குராப்பள்ளித்துஞ்சிய திருமாவளவனும் பாண்டியன் வெள்ளி அம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் ஒருங்கிருந்தாரைக் காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனர் கண்ணாரக் கண்டார். உள்ளம் உவகை பூத்தது. அக்கிலேயில், புலனழுக்கற்ற அப்புலவர்க்கு நினைவுகள் பல தோன்றலாயின. இவ்விரு பெருவேந்தரும் ஒருவர்க்கொருவர் உற்றுழி யுதவி உடனிலே நிரியாராயின் இக்கடல் புடையுடுத்த நெடுநிலமுழுதும் இவர் கையகப்படுதல் பொய்யாகாதே! பொருதற்குச் சென்ற சென்ற களக் தோறும் வென்று வெண்முரசு வென்றீள்வரன்றே! பிறர்காட்டுக்குன்றுகளெல்லாம் இவருடைய புலியுங் கயலும் பொறித்த குடுமியவாய்த் திகழுமே! இவரைப் பிரித்தல் கருதி 'நல்ல போலவும் நயவ போலவும் தொல்லோர் சென்ற நெறிய போலவும்' ஏதின்மாக்கள் இடையே புகுந்து கூறும் சிறப்பில்லாத பழிற்றுரைகளை இவர் ஏற்றுக்கொள்ளாதிருத்தல் வேண்டுமே! இவர் கூட்டம் இன்றுபோல் என்றும் நிலைபெறுவதாக. என்றெல்லாம் எண்ணி அவரை அணுகித் தாம் கூறும் அறிவுரைகளை அவர் செவிமடுத்தல்வேண்டி முகம் புகுவாராய்ச் சில கூறத்தொடங்கு கின்றார். இவர் சோழன் அவைக்களப் புலவரென்பது சொல்லாமலே விளங்கும். வேந்தர், இருவரும் அறிவு நிரு ஆற்றல்களில் தம்மின் ஒத்தவராவர். இவருள் ஒருவரை உயர்த்தியும் மற்றொருவரைத் தாழ்த்தியுங் கூறுதல் தம் புலமைக்கும் அவர் தகுதிக்கும் ஏலாதாகும். ஆதலின், அவர்பால் தாங்கண்ட சிறப்பியல்புகளை உள்ளவாறு கூறுதலே இருவர்க்கும் உவப்பாகுமெனத் துணிந்து,

> "நீயே, தண்புனற் காவிரிக் கிழவனை, யிவனே,
> முழுமுதல் தொலைந்த கோளி யாலத்துக்
> கொழுநிழல் நெடுஞ்சினை வீழ்பொறித் தாங்குத்
> தொல்லோர் மாய்ந்தெனத் தனங்கல் செல்லாது
> நல்லிசை முதுகுடி நடுக்கறத் தழீஇ
> யீனைய தாயினு நினையா வெறியும்
> அருநரை யுருமிற் பொருநரைப் பொரு அச்
> செருமாண் பஞ்சவ ரேறே, நீயே,
> அறத்தஞ் சுறந்தைப் பொருளனை, யிவனே,
> கெல்லும் நீரும் எல்லார்க்கும் எளியவென
> வரைய சாந்தமும் நிரைய முத்தமும்
> இமிழ்குரல் முரசம் மூன்றுட னுளும்
> தமிழ்கெழு கூடற் றண்கோல் வேந்தே"

என்று கூறுவாராயினர். இப்பாடற்கண் முதலில், தம் அரசனுடைய

சோழனை நோக்கி நீ, குளிர்ந்த நீரையுடைய காவிரிக்குத் தலைவன் என்றார். 'சோழவளநாடு சோறுடைத்து' எனப் பாராட்டப்படுதற்கு மூலமாய் வான்பொய்ப்பினும் தான் பொய்யாதொழுகி வேலி ஆயிரம் விளையுட்டாக வளஞ்சுரந் தூட்டுவது காவிரியாறுதலின் அதனால் அவனுக்குச் சிறப்புக் கூறினர். இச்சிறப்புப் பற்றியே புனல் காடான், நீர் காடான், பொன்னி காடான் எனப் பிறரும் கூறுவாராயினர். பின்னர்ப், பாண்டியனைப் பார்த்து, ஓராலமரத்தின் அடிப்பாகமுழுதும் நிைைந்துபோயினும் அதன் கிளைகள் பலவற்றையும் அம்மரத்தின்கட் டோன்றியவீழ் தாங்கு நற்போலத், தன் முன்னையோரெல்லாம் மாய்ந்தனராகத் தான் தளராது நின்று நல்ல புகழையுடைய தன் பழங்குடியைத் தடுமாற்றமறத் தாங்கி, உரு மேறு சிறியதாயினும் பாம்பினங்களை ஒருங்கழித்தல்போலத் தன் இளையனையினும் பகைஞரைக் காணப்பொறாது பொருது போரின்கண் மாட்சிமைப்பட்ட பாண்டியர் குடியுள் ஏறுபோல்வான் என்றார். பாண்டியர் இளம் பருவத்தும் பெரும் பகைவெல்லும் ஆற்றலுடையரென்பதைத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் '' இளையன் இவனென உளையக்கூறி ..... சிறுசொற்சொல்லிய சினங்கெழுவேந்தரை..... .....ஒருங்ககப்படேளையின் '' இன்னன் ஆவேன் எனக் கூறிய வஞ்சினத்தானும், இக் நெடுஞ்செழியன் மீக்க இளமைச் செவ்வியுடையனும் இருபெரு வேந்தரும் ஐம்பெரு வேளிருமாகிய ஏழரசர்களை ஒரு களத்தின்கண் அட்டுகின்ற திறத்தைக் கண்டு வியந்து இடைக்குன்றூர் கிழார் பாடிய 76, 77-ஆம் புறப்பாட்டுக்களாலும் உணரலாம். '' இளையராயினும் பகையரசுகடியும், செருமாண்டென்னர் '' என்றார் இளங்கோவடிகளும். இதனால் பாண்டியருடைய தாளாண்மையும் பகைவெல்லும் ஆற்றலும் கூறினர். மீண்டும் சோழனை நோக்கி நீ, அறந்தங்கும் உறையூர்க்கண் அரசன் என்றார். பிறரும் மறங்கெழு சோழர் உறந்தையவைத்து, அறம் கின்று நிலையிற்று '' என்ப ஆதலின், இதனால் செம்பியர் முறை கோடாத் தன்மை செப்பினர். அப்பால், பாண்டியனை நோக்கி இவன், நெல்லும் நீரும் எல்லார்க்கும் எளியவெனக் கருதி அவைபோலாது யாவர்க்கும் பெறுதற்கரிய பொருளின்மலையிடத்துச் சந்தனமும் கடலிடத்து முத்தும் என இவற்றை முரசம் மூன்றுடன் ஆலும் தமிழ் பொருந்திய மதுரைக்கண் குளிர்ந்த செங்கோல் வேந்தன் என்றார். இதனால் பாண்டியர்க்கே யுரிய மலை வளனும் கடல் வளனும் இவை யென்பதும், உறந்தைக்கு அறங்கூறவையம் சிறப்பளித்தாற் போலக் கூடல் நகருக்குத் தமிழாயுங் கழகம் சிறப்பளிப்பதென்பதும் கூறினர். சோழனும் தமிழரசனுகவும் பாண்டியனையே தமிழ்கெழுகூடல் வேந்து என்றது நோக்குதற்குரியதாம்.

'' வில்லுடையான் வானவன் வீயாத் **தமிழுடையான்**
பல்வேற் கடற்றானைப் பாண்டியன் — சொல்விகவா
இல்லுடையான் பாலை இளஞ்சாத்தன் வேட்டனே
நெல்லுடையான் நீர்நாடார் கோ ''

என்னும் பழம் பாடற்கண்ணும் சோழன் செல்வுடையரனென்றும் பாண்டியன் தமிழுடையானன்றும் கூறியிருத்தல் காணலாம்.

பரிபாடல்

பரிபாடலென்னுந் தொகைநூலின்கண் ''தெரிமாண்டமிழ்மும்மைத் தென்னம் பொருப்பன், பரிமாகிரையிற் பரந்தன்று வையை'' எனப் பாண்டியனை முத்தமிழ் வழங்கும் பொதியின்மலைக்கு இறைவனென்னும் அறிவினும் வீரத்தினும் பிறரைப் போர்வெல்லுங் கூடல் என்னும் பொருள்பட ''புலத்தினும் போரினும் போர் தோலாக்கூடல்'' என்றும், பாண்டிநாட்டின்கட் செல்லும்யாற்றுநீரும் தமிழ் மணமுடையதென்பது தோன்றத் 'தமிழ்வையைத் தண்ணம் புனல்' என்றுங்கூறப்பட்டுள்ளன.

இளங்கோவடிகள்

கோவலன் கண்ணகி யென்பார் இருவரும் மதுரைக்குச் செல்லத் துணிந்து புகார் நகரைக் கடந்து கவுந்தியடிகள் தவஞ்செய்யுந் தவப் பள்ளியைச் சார்ந்து அடிகளை வணங்கி அவருடன் அளவளாவிய பின்றைக் கவுந்தியடிகள், மதுரைக்குப் போதற்குமுன்னரே ஒருப்பட்ட உள்ளமுடையேனுதலின் யானும் போதுவல் கியிரும் வம்மின் என்பார், ''தென்றமிழ் நன்னாட்டுத் தீது தீர் மதுரைக்கு, ஒன்றியவுள்ள முடையேன்'' என்றார். இதில், தெற்கின்கண் உள்ள கல்ல தமிழ் நாட்டின்கண்ணதாகிய குற்றந் தீர்ந்த மதுரை என அவர் கூறியது நோக்கத் தக்கதொன்றாம். சோணாடும் தமிழ்நாடாயினும் மதுரை சூழ்ந்தநாடே நல்ல தமிழ்வழங்கும் நாடென்பது அவர் கருத்தாகக் கொண்டு இளங்கோவடிகள் கூறியிருப்பது காணலாம். கவியரசியாகிய ஔவைப்பெருமாட்டியும்,

> ''நல்லம்பர் நல்ல குடியுடைத்திச் சித்தன்வாழ்
> வில்லங் தொறுமூன் றெரியுடைத்து—நல்லரவர்
> பாட்டுடைத்துச் சோமன் வழிவந்த பாண்டியனின்
> நாட்டுடைத்து நல்ல தமிழ்''

என்றார்.

இதன்கட் பாண்டிநாட்டில் நல்ல தமிழ் வழங்குதலுடையது என்றதும் ஈண்டுப் பொருத்தமுடையதாகும். இப்பெருமாட்டியார் தமிழ்நாடு முழுதுஞ்சென்று ஆங்காங்குப் பேசப்படுந் தமிழ்ச் சுவையைத் தாமே அநுபவித்துக் கூறியதாதலின் இஃது யாவராலும் மறுத்தற்கியலாது. இன்னும், 'பாடல்சால் சிறப்பிற் பாண்டியன் பெருஞ்சீர், மாடமதுரை' என்ற பதிகத்தொடர்க்கு, 'தமிழினது பாடல் சிறந்த சிறப்பினையுடைய பாண்டியனது மிக்க புகழையுடைய மாடமதுரை' என அடியார்க்கு நல்லார் பொருள் எழுதியிருப்பதும் காணலாம்.

ஒட்டக்கூத்தர்

ஒட்டக்கூத்தரென்னும் புலவர் தலைவர், விக்கிரம சோழன் இரண்டாங் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் என்னும் மூவரசர் மூவருடைய அவைக்களத்தும் அமர்ந்து தலைமைப் புலமை நடாத்தியவர்; பரணி உலா முதலான நூல்கள் பலவியற்றி அவரைச்

சிறப்பித்தவருமாவர். இவர் தாம் பாடிய தக்கயாகப் பரணியில், திருஞானசம்பந்தப் பிள்ளையார் பாண்டியனுடைய வெப்புநோயை நீக்கித் திருநீறணியச் செய்தபின், நீரானும் கெருப்பானும் வாதஞ் செய்யவேண்டுமென்று அமணர் வற்புறுத்தியபோழ்து, மங்கையர்க் கரசியார் ஆங்குவந்து பிள்ளையாரை நோக்கி, நீர் இங்ஙேந்தருளி எம் நாட்டினையும் மதுரையினையும் செழுமையுறச் செய்தீர். மந்திரம்வல்ல இவ்வமணரோடு வாதுசெய்தல் வேண்டா. சிகாழிக்குத் திரும்பியருளுக என வேண்டிக்கொள்ளுமிடத்தில்,

> "குழைதந்தனே செந்தமிழ் மண்டலமுங் கொடிமாகருங் குன்றங்களிகூர்
> மழைதந்தனே வந்தனே வாழியினிப் பிரமாபுரமேற மறித்தருளே"

என்றும், பின்னர் வாதுசெய்யுங்கித்தம் சமணரும் சம்பந்தரும் பாண்டியன் முதலிய மூவரும் வைகைக்கரையெய்தினரென்னுமிடத்தில்,

> "என்னுஞ் சமண்மூகரும் நான்மறையோர்
> ஏறுந்தமிழ் நாடனும் ரகுமாபிற்
> பொன்னும் பெருநம்பி குலச்சிறையும்
> போய்வைகையில் வாதுகளம்புகவே"

என்றும் பாடியுள்ளார். இவ்விருதாழிசையினும் முறையே பாண்டிய நாட்டைச் செந்தமிழ் நாடென்றும் பாண்டியனைத் தமிழ்நாடனென்றுங் கூறியிருத்தல்போலவே பிறிதோரிடத்துப் பொதியின் மலையைத் 'தமிழ்ப்பொதியில்' என்று கூறியுள்ளதுங் காணலாம்.

சேக்கிழார் பெருமான்

திருத்தொண்டர் புராணம் இயற்றியருளிய சேக்கிழார்பெருமானார், இறைவன்பால் இடையறாப்பேரன்பு வாய்க்கப்பெற்றவர்; பேரறிவாளர்; சோழமன்னற்கு முதன்மை யமைச்சராய் நெடுங்காலமிருந்து அரசியற் கருமங்களை முறைதிறம்பாது நடாத்திய அருந்திறல் படைத்தவர். இவர், தம் அரசனும் உலகத்துமக்களும் நன்னெறியில் நின்று உய்தி பெறவேண்டுமென்னும் அருள்மேலீட்டால் வேறு எவராலும் அறிதற் கியலாத உண்மை நாயன்மார்களுடைய காலம், ஊர், குலம், குடி, குணம், அருஞ்செயல்கள் முதலியவரலாறுகளை, முன்னூல்களானும், கல்லெழுத்து முதலிய வேறுபல சான்றுகளானும் அறிந்தின் ஆராய்ந்து தொகுத்து, முழுமுதற்கடவுளே முதலடியெடுத்துக்கொடுப்பத் தெய்வ மணங்கமழுந் திருத்தொண்டர் புராணம் என்னும் பெயரால் பாடி முடித்த அருமைப்பாடு அறிந்து போற்றுதற்குரியதாகும். 'சங்கரன் தாள் தமது, சிரங்கொள் திருத்தொண்டர் புராணத்தை யளவிட நம் சேக்கிழார்க் கெளிதலது தேவர்க்குமரிதே' என்னும் உமாபதிசிவத்தின் திருவாக்கானும் இவ்வுண்மையை யுணரலாம். இத்தகைய அருமை பெருமை வாய்ந்த சேக்கிழார் பெருமானார், தமிழ்நாட்டின் அமைப்புக்களையும் வழக்கவொழுக்கங்களையும் அறிந்த அளவு பிற்காலத்தாரெவரும் அறிந்திலரென்பது சொல்லவேண்டியதில்லை யாதலின், செந்தமிழ்நாடு இன்ன தென்பதுபற்றிய அவர் கருத்தை அவர் நூல்வழி நின்று ஆராய்வாம்.

திருஞானசம்பந்தப்பிள்ளையாரும் ஆளுடைய அரசுகளும் திரு மறைக்காட்டில் மறைக்கதவம் திறப்பித்து இறைவழிபாடு செய்து கொண்டிருக்கும் காளில், மெய்யறிவு சுடர்க்கொழுந்தாய் விளங்கும் பிள்ளையாரின் அருட்செயல்களைக் கேட்டறிந்த பாண்டிமாதேவியாரும் குலச்சிறையாரும் தம்நாடு அமணிருள் மூடியிருத்தலே யறிவிக்குமாறு அறிஞர் சிலரை அவர்பால் விடுத்தனராக, அங்ஙனம் விடுக்கப்பெற்ற அறிஞர்கள் மதுரையினின்று நீங்கிப் பாண்டி நாட்டெல்லையைக்கடந்து சோணாட்டின் வழிப்போந்து திருமறைக்காடு சேர்ந்தாரென்று கூறுமிடத்தில்,

> " ஆங்கவர் விடமூன் போந்த அறிவுடை மாந்தர் அக்கண்
> நீங்கியவண் டமிழ்நாட் டெல்லை பிற்பட நெறியி னேகி
> ஞாங்கர்நீர் நாடுங் காடும் நதிகளுங் கடந்து வந்து
> தேங்கமழ் சோலை தெய்தல் திருமறைக் காடு சேர்ந்தார் "

என்று பரடியுள்ளார். பின்னும், ஆளுடைய பிள்ளையார் அப்பரிடம் அரிதின் விடைபெற்று மறைக்காட்டிலிருந்து புறப்பட்டு மதுரைகாக்கு அணித்தாக வந்தளவில் ' சூளிரும் பருவத்தே யாயினுந் தென்றல், வளியெறியின் மெய்யிற்கினிதாம் ' என்றபடி ஆங்கு இளந்தென்றற் காற்றுலவி யின்புறுத்து வதைச் ' செந்தமிழ் மாருதமெதிர்கொண் டெம்மருங்குஞ் சேவிப்ப " எனவும், பிள்ளையாரின் திருவுருவப் பொலிவையும் வருகைப்பயனையும் உரைக்குங்கால்,

> " பானல்வயல் தமிழ்நாடும் பழிநாடும் படிபரந்த
> மானமிலா அமணென்னும் வல்விருள்போய் மாய்வதனுக்கு
> ஞானமணி விளக்கெழுந்து வந்ததென மலம்படைப்ப "

' பூழியர்வண் டமிழ்நாட்டுத், தரைசெய்தவப் பயன்விளங்கச் சைவ நெறி தழைத்தோங்க ' எனவும் பாண்டி மன்னனை ' நற்றமிழ்வேந்தன் ' ' தண்டமிழ்நாட்டு மன்னன் ' எனவும், ஆலவாயமர்ந்த அவிர்சடைக் கடவுளைத் ' தலைச்சங்கப் புலவனார் ' எனவும், அமணரொடு வாது செய்து வென்று, சைவத்தை நிலைநாட்டித் தென்னவன் கூன் நிமிர்த் தருளித் திருநீற்றி னொளிகண்டு பாண்டிநாட்டுப் பலதலங்களையும் செந்தமிழ்ப்பாமாலைபாடி வழிபட்டுச் சோணாட்டுக்கு மீண்டாரென்னு மிடத்தில்,

> " நீர்த்தமிழ்நாட் டிடைநின்றும் எழுந்தருளிச் செழும்பொன்னி
> வாய்ந்தவளக் தருநாட்டு வந்தணைந்தார் "

எனவுங்கூறியுள்ளார். பின்னர்த் திருநாவுக்கரசர் திருப்பூந்துருத்தி யினின்று பாண்டி நாடுசெல்ல நினைந்தாரென்பதை,

> " மண்குலவுந் தமிழ்நாடு காண்பதற்கு மனங்கொண்டார் " எனவும்,

மதுரைசேர்ந்து ஆலவாயடிகளை வணங்கினரென்னுமிடத்துச்

"சென்றணைந்த மதுரையினில் திருந்தியதூற் சங்கத்துள்
அன்றிருந்து தமிழாராய்ந் தருளிய அக்கணர்"

எனச்சிறப்பித்தும், திருநெல்வேலியைப் 'பொங்குதமிழ்த் திருநாட்டுப் புறம்பணைசூழ் நெல்வேலி' எனப்புகழ்த்தும், பாண்டிநாட்டுத் தலங்களை வணங்கிச் சோழநாட்டுக்குத் திரும்பினரென்னுமிடத்துத்,

"தேம்பொழியுஞ் செந்தமிழ்நாட் டினிலெங்கும் சென்றிறைஞ்சிப்
பாம்பணிவார் தமைப்பணிவார் பொன்னிநா டதுவணைந்து"

எனவும், காரைக்காலம்மையார் புராணத்துப் பாண்டிய நாட்டினைக் கூறுமிடத்தில் 'சிலபகல் கடந்து சென்று செந்தமிழ்த் திருநாடெய்தி' எனவும் ஆசிரியர் கூறியுள்ளார்ர். இங்ஙனம் பாண்டி நாட்டைக் கூறுமிடத்தெல்லாம் 'வண்டமிழ்நாடு' 'தீந்தமிழ்நாடு' 'செந்தமிழ் நாடு' 'தமிழ்நாடு' என்றும், பாண்டிவேந்தனை 'நற்றமிழ்வேந்தன்' 'தண்டமிழ்நாட்டு மன்னன்' என்றும், அப்பாண்டிப்பெருமானைத் தலைச்சங்கப் புலவனர் என்றும், அந்நாட்டுலவுங் காற்றினையும் 'செந்தமிழ்மாருதம்' 'தமிழ்மாருதம்' என்றும் ஆசிரியர் நினைந்து நினைந்து தங்குறிக்கோள் வழுவாது கூறிச்செல்லுந்திறன், நாமும் நினைந்துநினைந்து இன்புறத் தக்கதாமன்றே! இவ்வாறே சோணாட்டைக் கூறுமிடத்தெல்லாம் 'புனல்நாடு' 'நீர்நாடு' 'பொன்னிநாடு' என மறவாது கூறுவதன்றித் தமிழ்நாடென யாண்டுங்கூறக் கண்டிலேம். இவற்றுல் ஆசிரியர் சேக்கிழார் கருத்து இன்னதென்பது நன்கு வெளியாயிற்றும்.

கம்பநாடர்

கல்வியிற் பெரியன் கம்பன் எனச் சிறப்பித்துரைக்கப்பெறும் பெரும் புலவராகிய கம்பநாடர், சோழநாட்டிற் பிறந்துவளர்ந்து சோழமன்னர் ஆதரவுபெற்று அவருடைய பேரவைக்கு ஓரணிகலனுய்த் திகழ்ந்தவர் ஆதலின், தாம் இயற்றிய பெருங்காப்பியமாகிய இராமாவதாரத்தில், 'கங்கையிற் புனிதமாய காவிரி' 'காவிரி நாடன்ன கழனிநாடு' எனக் கங்கையினுஞ் சிறந்தது காவிரியெனவும் கோசல நாட்டினுஞ் சிறந்தது சோணுடெனவுங் கூறியுள்ளார். இஃது அவர் தாய்நாட்டின்கண் மிகுந்த பற்றுள்ளவரென்பதை அறிவிப்பதாகும். இவ்வாறே தம்மை ஆதரித்தோர்களையும் தம் நூலிற் பலவிடத்தும் பெருமைப்படுத்திப் பொன்னூப் புகழ்பெற அமைத்திருப்பது அவர்தம் நன்றியறிவைப் புலப்படுத்தாநிற்கும். இங்ஙனம் தாம்பிறந்த நாட்டுப்பற்று மிக்குடையாராயினும், மூவேந்தருடைய மூன்று நாடுகளையும் ஒருங்கே கூறும்படி கோர்த்தோரிடத்தில், பாண்டியநாட்டினையே தென்தமிழ் நாடென்றூரன்றிச்

சோணாட்டினை அங்ஙனங்கூறுமை, அவர்வாரம்பற்றி ஓரம் சொல்லா சென்பதை வலியுறுத்தும். சீதையைத்தேடி கிழித்தம் தென்திசைக்கட் போந்த அநுமன் முதலிய வானரவீரர் தமிழ் நாட்டினுக் தேடினு சென்று கூறுமிடத்தில்,

> " அனைய பொன்னி யகன்புனல் நாடொரீஇ
> மனையின் மாட்சி குலாமலை மண்டலம்
> வினையி னீங்கிய பண்பினர் மேயினர்
> இனைய தென்றமிழ் நாடுசென் றெய்தினர் "

என்றார். இப்பாடலில், சோழநாட்டைப் பொன்னிப் புனல் நாடென்றும், சேரமான் நாட்டை மலைமண்டலமென்றும் கூறியவர், பாண்டிநாட்டைத் தென்றமிழ்நாடு என்றதுகாண்க. இன்னும் அவ்வளவின் அமையாது அடுத்தசெய்யுளில்,

> " அத்திருத்தகு நாட்டினை யண்டர்நாடு
> ஒத்தி ருக்குமென் றுலுரை யொக்குமோ
> எத்திறத்தினும் வழுல் கும்புகழ்
> முத்தம் முத்தமி ழுர்த்து மூற்றுமோ "

என்றுகூறுகின்றார். அஃதாவது, அத் தமிழ்நாடாகிய பாண்டிய நாட்டை அண்டர்நாடு ஒக்கும் என்று கூறுவது பொருந்தாது ஏனெனில் ஏழுலகத்தவராலும் புகழப்படும் முத்தும் முத்தமிழும் பாண்டிநாடு தருமன்றி அப்பொன்னுடு தாராதாதனின், என ஒவ்வாமைக்கு ஒரு காரணமுங் கூறியுள்ளார். இக்காரணத்தால் பாண்டி நாட்டினைப் பொன்னுடு ஒவ்வாதென வெளிப்படையாகக் கூறினுரேனும் ஏனையிரு நாடுகளும் ஒவ்வாவென்பதும் குறிப்பிற்பெறவைத்தாரென்று கொள்ளத் தடையில்லை.

சைவசமய குரவர்கள்

இனி, சிவஞானச்செல்வர்களாய் இறைவன் திருவருள் வழிநின்று ஞானப்பாடல்களியற்றிய நம்மனோரை உய்விக்கத்தோன்றிய அருட் பெருங் குரவர்களாகிய நால்வருள், திருவாதவூரடிகள் ' தண்ணார் தமிழுலிக்குத் தண்பாண்டி நாட்டரனே ' ' சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்து மென்சிந்தையுள்ளும், உறைவான் உயர்மதிற் கூடலி னுய்ந்த வொண்டீந்தமிழ் ' எனப்பாடியிருத்தலும், திருகாவுக்கரசர் ' கன்பாட்டுப் புலவனுய்ச் சங்கமேறி நற்கனகக்கிழிதருமிக் கருளினுன் காண் ' எனக்குறித் திருப்பதும், திருஞான சம்பந்தப்பிள்ளையார் ' அந்தண்மதுரைத்தொகை யாக்கினனும் ' ' பண்ணியற்றமிழ்ப் பாண்டியற்காகவே ' எனப்பாடியிருப்பதும் கான்மாடக் கூடலில் தமிழ்ச் சங்கமிருந்த உண்மையையும் பாண்டியர்க்கும் அவர் நாட்டிற்கும் தமிழ்த்

தொடர்புமிக்குள்ள தன்மையையும் புலப்படுத்துவனவாம். பிற்காலத்து இலக்கியங்களுள்ளும் காணப்புகின் விரியுமாதலின் இம்மட்டில் நிறுத்தப் பட்டது.

முடிவுரை

பொய்யடிமையில்லாத புலவரென்று சிறப்பித் தோரைக்கப்பெற்ற சங்கத்துச்சான்றோரும், சேரசோழரென்னும் இருபெரு வேந்தரும், இவரால் ஆதரிக்கப்பெற்ற பிற்காலத்துப் பெரும்புலவர்களும், சிவஞானச்செல்வர்களாகிய சைவசமய குரவர்களும் ஆகிய எல்லோரும் ஒன்றுபட்ட உள்ளத்தாய்ப் பாண்டிய நாட்டினைச் செந்தமிழ் நாடென்றும், பாண்டியனைத் தமிழ் நாடனென்றும் எழுதிவைத்துள்ள ஆவணங்களாகிய சங்க நூல்கள் முதலியன நின்று நிலைத்து இன்றும் சான்று பகராநிற்கவும் அவற்றின்கண் நம்பிக்கையிலராய் உரை யாசிரியரிற் பலர் அதற்குமாறுபடக் கூறுதலும், இக்காலத்தாசிரியர் 'சீதமலாடு புனல்காடு செந்தமிழ்சேர், ஏதமில்பன்னிருநாட்டெண்' என்றதன்கண் புனல்நாடென்பதைப் புனநாடெனப் பாடந்திரித்தலும் பொருந்தாவென்பதும், செந்தமிழ் நாடெனப்படுவது பாண்டிவளநாடே யென்பதும் இக்கட்டுரையில் ஆராய்ந்து முடிவுசெய்யப்பட்டன.

மணிமேகலை காதல்

அ. சிதம்பரநாதச்செட்டியார் அவர்கள் M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

பெருங்குடி வாணிகர் மரபிற்றோன்றிச் சிறந்த கோவலன், கண்ணகி ஆகிய இருவரையும் தந்தையார் என மதித்த மணிமேகலை என்னும் நங்கை, மாதவி மகள், துறந்த செய்தியைக் கூறுவதால், "மணிமேகலை" என்னுங் காப்பியம் "மணிமேகலை துறவு" என்றும் பெயர்பெறும். அக்காப்பியமே மணிமேகலையின் காதலைப் பற்றியும் மொழிகின்றதெனினும், "மணிமேகலை காதல்" என்ற பெயரொடு அது செல்லாமைக்குக் காரணம் காதலிலாதல் காதலின் விழைவிலாதல் அது முடிவு பெறுமையேயாம். இனி, மணிமேகலையின் காதல் நிகழ்ந்தவாறு இவ்வணமென்றும் அஃதிற்றவாறு இவ்வண மென்றும் காண்பாம்.

மணிமேகலை புகாரின்கண் இந்திரவிழா நாளில் ஆடல் பாடல் புரியவில்லையே என ஊரார் வருந்துகின்ற நிலையில் மணிமேகலைக் காப்பியம் தொடங்குகின்றது. அவளுடைய அன்னை மாதவியைப் பெற்றெடுத்த சித்திராபதி யென்னும் மூதாட்டி மாதவியும் மணிமேகலையும் ஆடல் பாடல் புரிந்து மகிழ்விக்காது நற்றவம் புரிய லுற்றது நாணத்தக்கது என்று ஊரார் உரைக்கும் அலரை அறிவிக்கு மாறு மாதவிதோழி வசந்தமாலையை விடுக்கின்றாள். அவளுஞ் சென்று அதனை யுரைக்கக் கேட்ட மாதவி "கணவனுக்கு உற்ற கடுந்துயரைப் பொருளாய் மதுரைப் பேரூரைத் தீயூட்டிய மாபெரும் பத்தினியாகிய கண்ணகியின் மகளாம் இவள் தவவழிச் செல்வளன்றி அவ்வழிச் செலுத்தப்படமாட்டாள். காதலன் உற்ற கடுந்துயரைக் கேட்டும் கான் போதல்செய்யா உயிரொடு நின்று புகழுரை யிழந்து நாணைத் துறந்துள்ளேன்" என்று சொல்லி, நற்றவம் புரியலுற்றது நாணத்

தக்கதன்று என்பதைக் குறிப்பால் அறிவிக்கின்றாள். காதலன் கோவலன் மடிய நேர்ந்தது தன்மீது அவன் வைத்த காதலாற்போலும் என்ற எண்ணம் அவளை உறுத்திக் கொண்டிருந்தது போலும்! ஒத்த கல்வ குலத்திற் பிறந்த நேரிழை கண்ணகியை மணந்து அவளொடு இன்பமும் அன்புங் கனிய இல்லறவாழ்க்கையை இனிதின்நடத்திவந்த கோவலனைப் பிரித்தது தனது கணிகைக் கோலம் அன்றே? அவன் ஊடுதற்குக் காரணமாயிருந்தது தன் கணிகைக் கோலக் கானல் வரியன்றே? பொருளையெல்லாம் அவன் இழந்ததற்குக்காரணம் தன் கணிகைக்கோல வேட்கையன்றே? இழந்த பொருளை மீட்க வேண்டுமென்றும் மதுரை சென்று வாணிகஞ்செய்ய வேண்டுமென்றுங் கோவலன்மாட்டு எண்ணம் எழுந்ததற்குத் தன் கணிகைக் கோல ஊடலன்றே காரணம்? கண்ணகி சிலம்பை முதற் பொருளாக்கி வாணிகஞ் செய்யு நோக்கத்துடன் அவன் மதுரைமாநகர் புக்கதும், ஆண்டுச் சிலம்பு கவர்ந்த கள்வனென்று கொல்விக்கப்பட்டதும் தனது பழைய கணிகைக்கோலத்தால் விளைந்தன அல்லவோ? கண்ணகி அருமைக் கணவனை யிழந்ததற்கும் மதுரை மூதூர் பாழாய்ப் போனதற்கும் தனது முன்னைய கணிகைக்கோலம் அன்றே காரணம்? இங்ஙனம் எண்ணுகின்ற காரணத்தால் 'வான்றுயர் உறுக்குங் கணிகையர் கோலம் மணிமேகலையைக் காணுதொழுக' என நினைத்துத் தன்அருமை மகளை அருந்தவப்படுத்த உறுதிகொண்டுள்ளாள் மாதவி. மணிமேகலையுந் தாயொடு தனி யிருந்து வருகின்றாள்.

மணிமேகலை பருவமெய்திய பெண். அவளழகை ஆடவர் கண்டால் அகன்றுபோகார், நின்று பார்ப்பர். அவளைத் தனியே புகார் நகர வீதியிலே விடுதலாகாது. ஆதலால், தானும் அவளுடன் செல்வதாகச் சுதமதி என்னுந் தோழி யுரைக்கின்றாள். இஃது எப்பொழுதோ எனின், வசந்தமாலையிடம் மாதவி பேசிக்கொண்டிருந்தக்கால், காதலனுற்ற கடுந்துயர் பொறுளாய்க் கண்ணகி இழைத்த தீது இன்னதெனக் குறிப்பிட்டதைக் கேட்டு மணிமேகலை கண்ணீரரும்ப, அவள் தொடுத்துக்கொண்டிருந்த மாலை தூத்தகை யிழந்ததால் மலர்வனம்புக்கு வேறு மலர் கொண்டுவருக என மாதவி கூறியபொழுது என்க. எனவே, இப்பொழுது மணிமேகலை மலர்வனம் நோக்கி சுதமதியோடு போவதைப் பார்க்கிறோம். இவளை அருந்தவப்படுத்திய தாயோ கொடியள் தகவிலள் என்பார் ஒருபக்கம்; அம்மலர் வனத்தில் உள்ள அன்னங்கள் இம் மடந்தையின் நடைவல்லனகொல்லோ என்பார் ஒருபக்கம்; அவணுள்ள மாமயில்கள் இவளது சாயல் கற்பனை கொல்லோ என்பார் ஒருபக்கம்; அங்குள்ள பைங்கிளிகள் இவளுடைய இன்னிசைவிக்கு இசையர, இசையர என்பார் ஒருபக்கம்; இங்ஙனமாக, மணிமேகலை மெல்ல நடந்து உவவனத்தினுள்ளே புகுந்தாள்.

பூம்புகார் அரசனுடைய மகன் உதயகுமரன்பான் குருகுபெயர்க் குன்றங் கொன்றுவென்ன முருகச்செவ்வியுடையவன் தேரூர்ந்து செல்பவன் மணிமேகலை மலர்வனம் புக்க செய்தியை எட்டிகுமரன்

என்பானுல் அறிந்து அவளைத் தன் அணித்தேரில் ஏற்றிவருவதாக உரைத்துப் புறப்படுகின்றுன். வருந் தேரொலி கேட்டு அஞ்சும் மணிமேகலையைப் பளிக்கறையிற் சுதமதி புகுத்துகின்றுள். உதயகுமரன் பகல் முழுதத்தபோற் ரேன்றி 'மாதவர் உறைவிடம் நீங்கி மணிமேகலை தமியளாய் ஈண்டும்பதென்' எனச் சுதமதியைக் கேட்க, அவளும் அவனுக்கு விடையிறுக்கின்றவள் மக்கள் யாக்கையின் இழிவை அறிவுறுத்துகின்றுள். இங்ஙனம், உரையாடிக் கொண்டிருக்குங்கால், மணிமேகலையின் உருவம் பளிங்கினூடே தோன்றிட, உதயகுமரன் பளிங்குமண்டபத்தைத் தடவிப் பார்க்கிறுன். வாயில் யாதென அறிகிலன் ஆதலின் 'எத்திறத்தான் இளங்கொடி' எனச் சுதமதியை வினவ, அவள் 'நின் முருகச் செவ்வியை முகந்து தன் கண்ணுற் பருகாள். அவள் காமனைக் கடந்த வாய்மையள், ஊழ்தரு தவத்தள், சாபசாத்தி' எனக் கூறுகிறுள். அவன் 'காமங் காழ்கொண்டால் நிறையும் உண்டோ' என்றும் 'அவளைச் சித்திராபதியால் சேர்வேன்' என்றுஞ் சொல்லிக் கொண்டு போகிறுன்.

அவன் அவ்விடம்விட்டு நீங்கிய பிற்பாடு மணிமேகலை பளிக்கறையி னின்று வெளிப்போந்து **'புதுவோன் பின்றைப் போனது என் நெஞ்சம்; இதுவோ அன்னுய் காமத்தியற்கை'** எனச் சுதமதியிடஞ் சொல்லிகின்ற எல்லையுள், மணிமேகலா தெய்வம் ஆண்டுத் தோன்றிச் சுதமதிபால் உற்றது வினவியறிந்து 'அரசிளங்குமரன் அறத்தோர் வனமென்று இப்பொழுது அகன்றுனுயினும், மணிமேகலைமீது தணியாக் காதலன் ஆதலின், புறத்தே வீதியிற் பொருந்துவன். நீவிர் சக்காவாளக் கோட்டம் புக்குக் கங்குற்பொழுது தங்கினுலுங் கேடுறுது' என்று மொழிகிறது. இருவரும் அவ்வாறே புக்குக் கனைப்பினுற் றுயில, அத் தெய்வம் மணிமேகலையை முப்பது யோசனைக்கப்பால் உள்ள மணிபல்லவத் தீவிடைக் கொண்டுசேர்க்கின்றது. மணிமேகலை அத்தீவில் துயிலெழுந்ததும் சுதமதியைக் காணுது வருந்தி, தன் வரவுங் கிளைஒருங் காணப்படவில்லையே எனக் கலங்கி, விஞ்சைமகள் வஞ்சஞ் செய்தனளோ என மயங்கி, அத்தீவெங்குந் திரிந்து, கூந்தல் குலைத்து பின்னே வீழும்படி அரற்றிக் கூவி யழுது ஏங்குகின்றுள். தந்தையை யுள்ளி ஐயோவோ என அழுகின்ற அவள் முன்னர்ப் **புத்தபீடிகை** தோன்றுகிறது. தலைமேற் குவிந்த கையளாய்க் கண்ணீர் உகுத்து மும்முறை வலம் வந்து வணங்கி யெழுவோள் தன் பழம் பிறப்பை வழுவின்றி யுணர்கின்றுள். தன் முற்பிறப்புக் கணவன் யாண்டுளனே என அறிய வேண்டுமென்னும் அவாவோடு அவள் ஏங்கும் எல்லையில், மணிமேகலா தெய்வம் வந்து புத்தபீடிகையை வணங்கியெழ, அத் தெய்வத்தை வணங்கி மணிமேகலை தன் கணவன் யாங்குளன் எனக் கேட்கிறுள். அதுவும் அவனே இப்பிறவியில் உதயகுமரனுய் உளன் என்பதை யறிவித்து. அவன்பால் அவள் உள்ளஞ் செல்வதைத் தடுப்பதற்கும் அவளைத் தக்க வழியிற் செலுத்துவதற்குங் கருதியே ஆங்குக் கொணர்ந்ததாகத் தெரிவிக்கிறது. மேலும், அவள் பிறப்பறுத்

நிடுதல் நிண்ணமென்று சொல்லி, அதற்குரிய வழியில் முயலுக என மொழிந்து, வேற்றுருவெய்தவும் அந்தராத்திரியமும் அரும்பசி அறுக்கவும் உரிய மந்திரங்களைக் கொடுத்து அந்தரம் எழுந்து நெடுந்தெய்வம் நீங்கிற்று.

அத்தீவில் உள்ள வெண்மணற்குன்றம், தண்மலர்ப் பொய்கை, விரிபூஞ்சோலை ஆகியவற்றைப் பார்த்துக்கொண்டு மணிமேகலை சுற்றி வருகின்ற சோதத்தில், புத்தபீடிகையைப் பாதுகாக்குந் தீவதிலகை என்பாள் வந்துதோன்றி 'யார் நீ' என்னவும், மணிமேகலை போய பிறவியிலும் ஆய பிறவியிலும் தான் யாவள் என்பதை அறிவிக்கிறாள். தீவதிலகை அங்குள்ள பொய்கையில் ஆண்டிற்கொரு காள் அமுதசுரபி என்னும் மாபெரும் பாத்திரம் வந்து தோன்றுகின்றவாற்றைக் கூறி, அற்றை நாளில் அப்பொழுதே அப்பாத்திரம் தோன்றும் என்றும் ஒருகால் மணிமேகலைக்குக் கிடைக்கும் என்றுங் கூறி அவளை அவ்விடம் அழைத்துச்செல்ல, மணிமேகலை அப்பொய்கையை வலஞ்செய்து நிற்க, பாத்திரம் எழுந்து அவள் செங்கையிற் புக்கது பெற்ற பைக்தொடி மாத்திரையின்றி மனமகிழ்வு எய்திப் புத்ததேவனைப் பாவ, தீவதிலகை பாத்திரத்தின் பெற்றியை மணிமேகலைக்குக் கூறி, அதின் முழு வரலாற்றைப் புகார் நகர அறவணவடிகள்பால் கேட்டறிக என உரைக்கின்றாள்.

மணிமேகலையை உவவனத்திற்கு அனுப்பிய மாதவிமகள் வந்திலளே என வருந்திக்கொண்டிருக்கும் வேளையில், சுதமதி வந்து தானும் மணிமேகலையும் சக்கரவாளக் கோட்டம் புகுந்த வரலாற்றையும், ஆண்டுத்துயிலுங்கால் மணிமேகலையை மணிபல்லவத்திற் கொண்டு சேர்த்துத் தன்னைத் துயிலெழுப்பி மணிமேகலை பண்டைப் பிறப்புப் பண்புற வுணர்ந்து இன்னம் எழுநாளில் வருவள் என்று மணிமேகலா தெய்வம் சொல்லிய செய்தியையும், தான் கந்திற் பாவையால் தனது பழம்பிறப்பையும் மாதவியின் பழம்பிறப்பையும் உணர்ந்த செய்தியையும் தானும் மாதவி மணிமேகலை ஆகிய தையலாரிருவரும் முற்பிறப்பில் வீரை, தாரை, இலக்குமி, என்னும் பெயரொடு உடன் வயிற்றோராய் இருந்த செய்தியையுந் தெரிவித்து உயிரிழந்த யாக்கைபோல் இருக்க, மாதவி கன்மணியையிழந்த காகத்தைப் போன்று தனித்துயர் உழக்கின்றாள். பின்னரும் எழுநாள் வந்தது என்மகள் வரவில்லையே என மயங்கிக்கொண்டிருக்கும் மாதவி முன்னே, பிறப்புணர்ந்து மந்திரம் அறிந்து பாத்திரம் பெற்ற மணிமேகலை வந்து தோன்றுகிறாள். அவ் விருவரையும் அறவணவடிகளிடம் அழைத்துச்செல்லுகிறாள். அறவணவடிகளும் மாதவி சுதமதி ஆகியோரின் பழம் பிறப்புவரலாற்றை அறிவித்தபின் புத்ததேவன் புகழைக்குறித்துப் பேசுகின்றார். பசிப்பிணி தீர்த்தலாகிய பேரறத்தின் பெருமையை விளக்கப் புகுகின்றார். மணிமேகலை பெற்ற பாத்திரத்தின் பழைய வரலாற்றையும், அதனை முன்னர் ஏந்திய ஆபுத்திரன் என்பான் வரலாற்றையும் உரைக்கின்றார்.

உரைத்தபின், பசியுற்றோர் யாவரையும் மணிமேகலை அந்த அறவோட்டியிருந்து ஊட்டவேண்டுமென்று பணிக்கின்றார். அவளும் பிக்குணிக் கோலத்திற் பாத்திரத்தைக் கையில் ஏந்தியவளாய்ப் பெருந்தெருவை அடைய, மக்கள் பலர் இவள் இக்கோலம் கொண்டாளே எனச்சித்தை நோய்கூர்ந்து நிற்க, காயசண்டிகை என்னும் ஒரு விஞ்சைமகள் யாஞைத்தீப்பசியுடையாள் ஆதிரை என்னும் கற்பரசியிடம் முதற்பிச்சை பெறுக எனக் கூறுகின்றாள்.

மணிமேகலை கற்பரசி ஆதிரை பாத்திரத்தில் பிச்சை பெற்றுக், காயசண்டிகையின் பொல்லாத் தீப்பசியைப் போக்கி, சக்கரவாளக் கோட்டத்தில் உள்ள உலக அறவியுட் புகுந்து அங்குப் பசிதின்ன வருந்திய பைதல் மக்கள் எல்லாரையும் வம்மின் என அழைத்து ஊட்டுகின்றாள்.

மணிமேகலையை மலர்ப்பொழிலிற் கண்டு சித்திராபதியால் அவளை அடைவேன் எனக்கருதித் திரும்பிய உதயகுமரன் உறுதுயரெய்திப் படுக்கையில் இருந்தோன் உறங்காளுய்க் கங்குல் கழியின் அவளைக் கையகப்படுத்துவேன் என நினைத்திருக்கின்றான். மணிமேகலையை மணிபல்லவத்தீவிற் சேர்த்துவிட்டு மணிமேகலா தெய்வம் இடையிருள் யாமத்தில் அவன்முன்னர்த் தோன்றிக் கோணிலை திரிக்திடில் யாவுங் கேடுறும் என்றும், தவத்திறம் பூண்டாள்மேல் வைத்த அவத்திறம் ஒழிக என்றும் அறிவுறுத்துகின்றது. அவனும் தெய்வங் கொல்லோ திப்பியங்கொல்லோ என ஐயுற்று அதிசயத்தோடு இருந்து வருகின்றான்.

இப்படி காள்கில செல்ல, மணிமேகலை பாத்திரமேந்தி உலக அறவியிற் புக்காளாக, அவளுடைய பாட்டி சித்திராபதி கொதித்த உள்ளத்தோடு விதுப்புறு நெஞ்சினளாய் வெய்துயர்த்துக் கலங்கி, மணிமேகலை செயல் தகாதெனக் கூத்தியன் மடந்தையர்க்கெல்லாங் கூறி, மணிமேகலையை உதயகுமரன் பொற்றேரில் ஏற்றிச் செல்லும்படி செய்வதாகச் சூளுரைத்து, இளங்கோவேந்தன் உதயகுமரனுடைய இருப்பிடங்குறுகுகின்றாள். பளிங்கினுற் செய்யப்பட்ட மண்டபத்திலே தாமரைப்பள்ளியின்கண் இருமருங்குந்தோகையர் சாமரைகொண்டு வீச வீற்றிருக்கின்ற உதயகுமரனுடைய அடிபணிந்து சித்திராபதி கின்றேத்த, உதயகுமரன் 'மாதவி மணிமேகலையின் தரபதக்கோலம் தவறின்றே' எனக்கேட்கிறான். அவளும் மணிமேகலை பாழம்பலம் புக்கதையும் உதயகுமரன் அவளைப் பெறவேண்டும் என்பதையும் குறிப்பாகத்தெரிவிக்கின்றாள். தன் கலக்கந் தவிர்க்கத் துணைபெற்றான் போற் சிறிது நேரம் மகிழ்ந்து, மணிமேகலைமேல் மனம் வைத்த தனக்கு கள்ளிரவில் ஒருநாள் தெய்வம் வந்து செங்கோல் காட்டி அவள் திறம் மறக்க என்று கூறிச் சென்றதைக் கூறி வியக்கின்றான். அப்பொழுது சித்திராபதி சிறுகை எய்தி 'மணிமேகலை பத்தினிப் பெண்டிர் குலத்திலே தோன்றினவள் அல்லளாதலால், அவள் படிற்றுரையை அடக்கி அவளைப் பான்மையிற் பிணித்தல் அன்றே

கோன்முறை' எனக்கூறினவுடன், உதயகுமரன் உள்ளம் பிறழ்ந்து தேர்மேலேறி மலர்வனம் புகுந்து பாத்திரம் ஏந்தியபாவையைக் காண்கின்றான். 'நல்லாய்! என்கொல் நற்றவம் புரிந்தது? சொல்லாய்' எனக் கேட்கின்றான். மணிமேகலை அவனைத் தொன்று காதலன் என அறிந்துளாள் ஆதலின் அடிவணங்கி, மக்கள் யாக்கை இடும்பைக் கொள்கலமென்று உணர்ந்து தவநெறியை விரும்பியதாக உரைக்கின்றாள். உரைத்துவிட்டு உலகவறவியில் உள்ள சம்பாபதிக் கோயிலுள் மடக்கொடி புகுந்து மந்திரமோதிக் காயசண்டிகை என்னுங் காரிகைவடிவில் வந்து தோன்றுகிறாள். உதயகுமரன் அவளைக் காயசண்டிகை யெனவே கருதி, மணிமேகலை யாங்கொளித்தனள் கொல்லோ என ஏங்கி, மணிமேகலையை விட்டுவிட்டுப் போகேன் என்றும் பன்னாளாயினும் பாடு கிடப்பேன் என்றும் சம்பாபதியை நோக்கி மும்முறை வணங்கிச் சூளுரைக்கின்றான். 'நாடாது துணிந்து நாசல் கூர்த்தாய்' எனச் சித்திராபதி யொன்று செப்பவும், உதயகுமரன் உள்ளங்கலங்கி 'இவையெல்லாம் ஆச்சரியம் வினைக்கின்றன. மணிமேகலை செய்தியில் இவற்றையெல்லாம் பின்னறிவாம்' என்று பெருமூச்செறிந்து பெயர்ந்து போகின்றான்.

காயசண்டிகை வடிவில் மணிமேகலை சிறைக்கோட்டஞ் சென்று, ஆங்குப் பசியுற்ற ஆருயிர் மக்கள் எல்லாம் வாங்குகையகம் வருந்துமாறு நின்று ஊட்டுகின்றாள். கண்ட காவலர் அரசன் முன் சென்று ஐயப் பாத்திரம் ஒன்றிலிருந்து சிறையிற் பலர் மக்களை அவள் ஊட்டுகின்ற திறத்தை வியந்து உரைக்க, அரசனும் அவளை அழைப்பித்து அவள் திறம் வினவ, தெய்வந் தந்த திப்பியபாத்திரத்தால் மக்களுக்கு உயிர் மருந்து கல்குவதாக அவள் உரைக்க, வேந்தன் தான்செயற்பாலது யாதென வினவ, சிறையிடத்தை இடித்து அங்கு அறவோர்க்காகுங் கோட்டம் ஒன்று அமைக்க என அவள் வேண்ட, அங்ஙனமேயாகுக என ஆக்குகின்றான் அரசன்.

இச்செய்தியைக் கேள்வியுற்ற உதயகுமரன் காயசண்டிகை வடிவில் பாத்திரமேந்தி நிற்பவள் தன் நெஞ்சங்கவர்ந்த வஞ்சக் கள்ளியே என கினைந்து அம்பலஞ்சென்று அவளைப்பற்றித் தனது பொற்றேரில் ஏற்றிவர எண்ணங்கொண்டு உலகவறவிக்குப் போகின்றான். அவ்வேளை, ஆண்டு வருகின்றான் காஞ்சனனென்பான், காயசண்டிகையின் கணவன். சாபமொன்றினற்பன்னீராண்டு கழிபெரும் பசியுற்ற காயசண்டிகையைப் பிரிந்துபோன இவ்விஞ்சைமகன், அவ்யாண்டு கழிந்ததறிந்து அவளை அழைத்துப்போக வருகின்றான். அவளோ திப்பசி மணிமேகலையால் நீங்கப் புகாரை நீங்கிச் சென்று விட்டாள். இதனை யறியாத காஞ்சனன் காயசண்டிகை வடிவில் அம்பலத்துள்ள மணிமேகலையைத் தன் மனைவி யென்றே கருதி, அவளொடு பழமை பாராட்டிப் பேசத் தலைப்படுகின்றான். மணிமேகலை அவனைப் புறக்கணித்து உதயகுமரன் அருகிற்சென்று, கரைமூதாட்டி யொருத்தியைக் காட்டி இளமை

நிலையாமையை அறிவுறுத்துகின்றாள். வந்த விஞ்சையனே தன் மனைவி அயலான் ஒருவன்பால் நேயங்கொண்டு தன்னை வெறுக்கிறாள் எனத் தவறாக நினைத்து வெகுளியொடு ஒருபுறத் தொளித்து இருக்கின்றான். உதயகுமரனே, வந்து பழமை பாராட்டிய இப்புதியவனைத் இவள் இன்றிரவு என் செய்கின்றாளென வந்தறிகுவன் என நீங்கி, பிறகு ஊர்துஞ்சு யாமத்தில் தனியாக வருகின்றான். பதுங்கியிருக்கும் விஞ்சையன் பின்புறஞ் சென்று தோளைத் துணிக்கின்றான். சம்பாபதிக் கோயிலிலிருந்த மணிமேகலை இச்செய்தியைக் கேள்வியுற்றதும் தன்னுருவில் வெளிப்போந்து, வெய்துயிர்த்துப் புலம்பி அழுது வங்கு கின்றாள். இங்ஙனம் முடிகின்றது இவள் காதலின் கதை.

மணிமேகலையும் உதயகுமரனும் முதன்முறை சந்திக்கின்றபொழுது மணிமேகலை அச்சமுடையாளாகக் காணப்படுகிறாள். அவ்வச்சத்திற்குக் காரணம் தன்னைத் தரச் தவறெறிப்படுத்த நினைத்திருப்பதற்கு மாறாக ஏதேனும் அவன் செய்து விடுவனே என்பதே. அவனைப்பற்றி முன்னரே அவள் கேட்டுளாள். அவள்மேல் அவன் உள்ளம் வைத் துள்ளை செய்தியைச் சித்திராபதியிடம் அவன் ஒருநாள் கூறினதை வசந்தமாலை மாதவிக்குத் தெரிவித்திருக்கிறாள். தெரிவித்தகாலை மணிமேகலையும் உடனிருந்தாள் ஆதலின் அதனை அவள் அறிவாள். எனவே, பிறர்க்கரிய உவவனத்தருகே தேர்வர, அத்தேரொலி அவன் தேரொலியேபோலும் என மணிமேகலை நினைத்து "என் செய்க" எனச் சுதமதியை அஞ்சிக்கேட்க, அவளும் இவளைப் பளிக்கறையிற் புகுத்துகின்றாள். இவருருவைப் பார்த்து உதயகுமான் வியந்து பல உரைக்கின்றான். இவளோ சொல்லொன்றும் உரைக்கவில்லையாயினும், புன்முறுவல் பூத்தனள். இச்செய்தி, பின்னர்ச் சித்திராபதியொடு உதயகுமரன் உரையாடுங்கால் வெளிப்படுகிறது. அவன் சித்திராபதி யிடம் பின்வருமாறு கூறுகின்றான் :—

> "மேலிய பளிங்கின் விருந்திற் பாவைஇஃது
> ஓவியச் செய்தியென்று ஒழிவேன் முன்னர்
> ... ...
> அருந்த வமாந்த ஆருயிர் தளிர்ப்ப
> வீருந்தின் மூரல் அரும்பியது."

பளிங்கினுட் காணப்பட்ட மணிமேகலையின் உருவம் ஓவியமேபோலும் எனக்கருதி உதயகுமரன் நீங்கும் எல்லையில், அவளுடைய காந்தளஞ் செங்கை சிறிது அசைந்ததையும் பவளவாய் மூரலரும்பியதையும் அவன் கண்டதாக உரைக்கின்றான். பளிக்கறையினுள்ளே இருந்த துணிவினால் மணிமேகலை மூரல் அரும்பியிருக்கக்கூடும். அவனை எள்ளுதற் பொருட்டு அங்ஙனஞ் செய்தனள் எனக்கூறுதல் ஒண்ணுது. ஏனெனில், தன்மனம் அவன்பின் சென்றது என இவளே சுதமதிக்கு அறிவிக் கின்றாள். உதயகுமரன் திரும்பிப் போனபின், சுதமதி பளிக்கறை திறந்தாளாக, அவள்பால் மணிமேகலை கூறியது யாது ?

"புதுவோன் பின்றைப் போனது என் நெஞ்சம்
இதுவோ அன்னாய் காமத்து இயற்கை"

என்பதன்றே? பின்னரும், உதயகுமரன் காஞ்சனன் வாளால் துணிக்கு கிடப்ப, இவள் வருந்தி யுரைக்கின்றாள்:—

"உவவன மருங்கில் நின்பால் உள்ளம்
தவிர்விலேன் ஆதலின் தலைமகன் தோன்றி
மணிபல் லவத்திடை என்னையாங்கு உய்த்து".

இவள் சிந்தை சிறிது திரிந்ததாலே மணிமேகலா தெய்வம் இவளை அப்புறப்படுத்திற்று. இவள் பண்டைப் பிறப்பு உணர்ந்த பிற்பாடு இதனை அத்தெய்வம் இவளுக்குத் தெரிவித்திருக்கிறது. அது கூறியதாவது

"ஆங்கவன் அன்றியும் அவன்பால் உள்ளம்
நீங்காத் தன்மை நினக்கும் உண்டாகலின்
... ... உன்னை ஓர்
திறப்படற்கு ஏதுவாச் சேயிழை செய்தேன்" என்பது.

இங்ஙனம் இவளது உள்ளம் அவன்பாற் சென்றதற்குக் காரணம் உதயகுமரன் பழைய பிறவியில் இவள் கணவனாயிருந்தமைபோலும்! பழம் பிறப்புணர்ச்சி மாத்திரம் பெற்றவளவில் நின்று தன்வழி நடக்க இவளுக்கு உரிமை உண்டாயின் இவள் உதயகுமரன் எண்ணத்திற்கு இசைந்திருப்பள். ஆனால், இவள் தவநெறிச் செல்லவேண்டுமென்பதும், யாவருஞ் செல்லும் பொதுநெறிச் செல்லலாகாதென்பதும், இவள் புத்த தேவனுடைய நிருவாகம் எய்துதல் உறுதியென்பதும் அத் தெய்வத்தால் இவள்முன் வற்புறுத்தப்படுகின்றன. இவள் சிறந்த மணமுள்ள நெல்லின் பெருவித்துப் போன்றவள் என்றும், உதய குமரனோடு ஒன்றும் வாழ்க்கை களர்நிலத்தின்கண் அவ்வித்தின் வீழ்ச்சி போன்றது என்றும் அத்தெய்வம் தெரிவிக்கிறது.

"கந்த சாலியின் கழிபெரு வித்தினொர்
வெந்தகு வெண்களர் வீழ்வது போன்மென
அறத்தின் வித்தினுக்கு ஆகிய உன்னையோர்
திறப்படற்கு ஏதுவாச் சேயிழை செய்தேன்"

என்ற பகுதியை நோக்குக.

பழம் பிறப்புணர்ச்சியினால் மணிமேகலை உதயகுமரனிடம் வைக்கும் அன்பு வெளிப்படும் இடங்களும் உள. சித்திராபதியினால் தாண்டப்பட்டு அம்பலத்தில் வந்து புகுந்த அரசகுமாரன் இவள் கற்றவம் புரியவுற்றது என்னை எனக் கேட்டு நிற்குந்தறுவாயில், மணிமேகலை தெய்வத்தின் சொல்லை நினைத்து அவனுக்கு விடை பகராது இருக்கின்றாளல்லள். முன்னைப் பிறவியில் அவனொடு கருத்தொன்று ஆதரவுபட்டிருந்து அவன் இறந்தவுடன் தானுமிறந்த இவள் இப்பொழுது அவன் கேட்கும் வினவிற்கு விடையும் பகராது இருத்தல் இயலுமோ? அவன் தன்

பழைய காயகன் என்ற வுணர்ச்சி வந்தவுடன் அவனை வணங்கவேண்டு மென்ற எண்ணமே உண்டாகின்றது. இதனால், ஒருகால் நெஞ்சம் அறைபோய் அவன்பால் அணுகும் என்பதையும் அவனும் ஒருகால் தன் முன்கையைப் பற்றவும் பற்றுவன் என்பதையும் அவள் அறிந்தே இருக்கிறாள். இங்கிலையில், பழைய காதலனிடத்தே அன்பு ஒருபக்கம்; உந்த, தெய்வத்தின் முன்மொழி மனத்தில் ஒருபக்கந் தோன்ற நடுங்கி ஊசலாடுகின்றாள் நங்கை. கேட்ட வினாவிற்கு விடையிறுப்பதே தகுதியென முடிவுசெய்து அவனடி வணங்கித் தான் கல்லறஞ் செய்யத் தலைப்பட்டதற்குக் காரணம் இன்னதெனத்தெரிவிக்கின்றாள். இதனை நயம்படச் சாத்தனார் பின்வரும் அடிகளில் வரைந்தார்.

> "என்னமர் காதலன் இராகுலன் ஈங்கிவன்
> தன்னடி தொழுதலுந் தகுவென வணங்கி
> அறைபோய் நெஞ்சம் அவன்பால் அணுகினும்
> இறைவளை முன்கை ஈங்கிவன் பற்றினும்
> தொன்று காதலன் சொல்லதிர் மறுத்தல்
> நன்றி அன்றென நடுங்கினள் மயங்கிக்
> கேட்டது மொழிவேன்.... ....
> ....
> கேட்டனை யாயின் வேட்டது செய்கனை".

உதயகுமரன் தொன்று காதலன் என்பதனால் அவனுடைய தாயையும் வணங்குகின்றாள், அவளது வெவ்வினையைத் தீர்க்க முயலுகின்றாள் மணிமேகலை எனின், இவள் மன்னவகுமரனிடம் வைத்த அன்பு இத்தன்மைத்து என்பது புலப்படும். உதயகுமரன் வீழ்ந்தானாக, அரசன் இவனைச் சிறைப்படுத்தினானாக, அரசி வஞ்ச எண்ணங்கொண்டு இவனைச் சிறைவீடு செய்து துன்பம் பலவற்றிற்கு ஆளாக்க முயன்றாளாக. அப்பொழுதெல்லாம் இவள் மந்திரமோதி ஓடாதிருந்ததற்குக் காரணம் தன் பழைய காதலனுடைய தாயை நன்னெறியுய்க்க வேண்டும் என்பதேயாம். இதனை இவளே பின்வரும் அடிகளால் அரசிக்கு அறிவிக்கின்றாள்:—

> "மயற்பகை ஊட்டினை, மறுபிறப்பு உணர்ந்தேன்
> அயர்ப்பது செய்யா அறிவினேன் ஆயினேன்;
> கல்லாக் கயவன் காரிருள் தான்வர
> கல்லாய் ஆணுரு தான்கொண்டு இருந்தேன்;
> ஊனெஞ்சு மன்றிரம் உடைமையின் அன்றே
> மாணிழை செய்த வஞ்சம் பிழைத்ததும்;
> அந்தரஞ் சேரலும் அயலருக் கோடலும்
> சிந்தையிற் கொண்டிலேன், சென்ற பிறவியிற்
> காதலற் பயந்தோய் கடுந்துயர் களைந்து
> தீதறு வெவ்வினை தீர்ப்பது பொருட்டால்"

மணிமேகலையின் மனம் பித்தேறுதற்கென மருந்து கொடுப்பித்தும், பழிச்செயல்புரிய ஆடவன் ஒருவனை ஏவியும், ஊனின்றிப் புழுக்கறையில்

அடைப்பித்தும் பயனென்றுங் காணுத அரசி, "என் மகனுக்கு உற்ற இடுக்கண் பொருது சிறுமை செய்தேன், பொறுக்க" என்று சொல்லித் தொழு, மணிமேகலை அதனைப் பொருளாய் "தகுதி செய்திலை, காதலற் பயந்தோய்" என மொழிந்து தொழுது ஏத்துகின்றுள் எனின், இவள் பழம் பிறப்புணர்ச்சியினால் உதயகுமரன்மாட்டு மட்டிலா அன்பு பெற்றிருப்பள் எனக் கூறுவது புனைந்துரையாமோ?

அவ்வுழுவல் அன்பு வேறுவழியே செலுத்தப்படுகிறது. அவ்வன்பு காரணமாகவே உதயகுமரனுக்குப்போதிவு புகட்ட இவள் முற்படுகிறுள். தவநெறியை விரும்பியதற்குக் காரணம் யாதென வினவுகின்ற உதயகுமரனுக்குப் பிறப்பு மூப்புப் பிணி சாக்காடு இவற்றையுடைய இடும்பைக்கே இருப்பிடமாகியது உடம்பெனத் தான் அறிந்ததே என்று கூறித் தன்னைப் போல அவனும் தவநெறி மேற்கொள்ளவேண்டும் எனக் குறிப்பாய்த் தெரிவிக்கின்றுள். அவ்விடம் வருமாறு உளது:-

> "பிறத்தலும் மூத்தலும் பிணிப்பட்டு இரங்கலும்
> இறத்தலும் உடையது இடும்பைக் கொள்கலம்
> மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து
> மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்;
> மண்டமர் முருக்குங் களிறனையார்க்குப்
> பெண்டிர் கூறும் போறிவு உண்டோ?
> கேட்டனை யாயின் வேட்டது செய்க".

அவனைக் காணுங் நேரமெல்லாம் இதைப் போன்ற நல்லுரை பகர்ந்து திருத்த இவளுக்கு எண்ணம்போலும்! இது இவள் இன்னொருகால் அவனுக்கு அறிவுறுத்த முயல்வதால் வெளிப்படும். என்னை? காயசண்டிகை வடிவில் தன் காதலியே ஓடுகொண்டு ஊட்டுகின்றுள் எனக் கருதி அவளைப் பொற்றேரில் ஏற்றி வருவதாக உரைத்து உலக வறவி புக்க உதயகுமரனுக்கு நரைத்துத் திரைத்த ஒருத்தியைக்காட்டி, அவளுடைய உறுப்புக்கள் இளமையிற் பெரிதும் பாராட்டப்பட்டன இப்பொழுது வெறுக்கத்தக்கனவாய் உள்ளவாற்றை அறியும்படியும், பெண்ணுடல் புனைவன நீங்கிற் புலால் புறத்திடுவது என்பதை அறியும் படியும் வேண்டுகின்றுள். "பார்க்க, மன்னவன் மகனே! கருமணல் போன்றிருந்த கூந்தல் வெண்மணலாகிய விந்தையை! பிறைபோன்று அழகுடையதாயிருந்த நெற்றி நரைத்த தோலினால் அழகின்றியுளது. வில்லைப் போன்று ஒன்றி இருந்த புருவம் இரண்டும் இரும்மீனின் வற்றலைப் போன்று வேறுகிவிட்டன. கழுநீர் மலர் போலிருந்த கண்கள் வழுநீர் சுமந்தன காணுய்! சூழிமழம்பூப் போன்றிருந்த மூக்கு உமிழ் சீயினை யொழுக்குகின்றது காணுய்! முத்துப் போன்று வரிசை யாயிருந்த பற்கள் இப்பொழுது சுரைவிதைபோலப் பிறழ்ந்து வேறுயின பாராய். இலவம் இதழ்போற் சிவந்திருந்த வாய் இப்பொழுது புலவுப் புண்போற் புலால் புறத்திடுவது அறிவாய். வள்ளைத் தண்டே போலிருந்த செவிகள் வாடிய வற்றலே போலுள பாராய். பருத்திருந்த கொங்கையும் வெறும் பைபோல வீழ்ந்து வேறுனமை அறிவாய். இளமூங்கிலைப்

போன்றிருந்த தோள்கள் தெங்கின் மடல்போலத் திரங்கி வீழ்ந்தன நோக்காய். வாழைத் தண்டே போன்ற துடைகள் தாழைத் தண்டின் வற்றல் காணாய். தளிர்போல் இருந்த அடிகள் தேங்காய் வற்றல் போன்றுள காணாய். தனது புலால் நாற்றத்தைப் பூவினுஞ் சாந்தினும் மறைத்து, அணியாதும் ஆடையாதும் அழகு படுத்தப்படுவ தன்றே இவ் யாக்கை? இவ்வஞ்சத்தை யறிவாய், மன்னவன் மகனே''. இங்ஙனங்கூறி அவனைத் தன்னைப் போலத் தவகெறி தலைப்படச் செய்யவே மணிமேகலை முயலுகிறாள். அறவணவடிகள்பரம் கேட்ட அறவுரையெல்லாம் இவள் மனத்தில் நன்கு பதிந்துவிட்டனவாக, இவளைத் தவகெறியினின்று திருப்ப இங்கிலையில் உதயகுமரனாலும் இயலாது. எனவே, அவனையே தன்வழித் திருப்பித் தனது கருத்தின்படி நல்லறம் புரியும்படி செய்ய விழைகின்றாள் இவ்விழுமியோள். தடுமாறு பிறவியை விடுமாறு முயல்கின்ற இவள் அவன் பொன்றிக் கிடக்குங்கால், அழுது அரற்றி ஏங்கி கெட்டியிர்த்து எழுந்து அவனுடம் பருகே செல்ல நினைக்கின்றாள். ஆனால், கற்பாவை என்னுக் தூணினின்ற தெய்வத்தால் தடுக்கப்படுகிறாள். இதுகாறும் பார்த்த வாற்றால், மணிமேகலை உதயகுமரன்பாற் காதலுள்ளம் உடையவள் என்பதும், அக்காதல் வளரவொட்டாது தடுக்கப்பட்டதற்குக் காரணம் மணிமேகலா தெய்வத்தின் செயலுஞ் சொல்லும் என்பதும், நாளடை வில் அக்காதல் பேரன்பாக மாறிற்று என்பதும், அவ்வன்பு காரணமாக அவனை அவள் நல்வழிப்படுத்த முயன்றனள் என்பதும் தெளிவாகும்.

வள்ளுவர் கூறிய வாய்மை

வித்துவான்,
பண்டித, பு. இரா. புருடோத்தம நாயுடு அவர்கள்,
தமிழ் விரிவுரையாளர்,
அரசர்கல்லூரி, திருவையாறு.

உண்மைப்பொருள், பரம்பொருள், முதற்பொருள் என்பதே ஈண்டு "வாய்மை" என்பதன் பொருளாம். 'துஉய்மையென்பதவாவின்மைமற்றது, வரஅய்மை வேண்ட வரும்' என்புழிவாய்மை என்பதிப்பொருட்டாதல் காண்க. "மெய்மையுடைய பரத்தை ஆகுபெயரான்மெய்மை என்றுங் கூறினர் பரிமேலழகர்.

தெய்வப்புலமைத் திருவள்ளுவர் தாம்வழிபடு கடவுளாகக்கொண்டு வாழ்த்தி வணங்கிய வாய்மைப் பொருளைக் காய்தல் உவத்தலின்றி, அறிதலையே ஒரு தலையாகக்கொண்டது இக் கட்டுரை. அங்ஙனமறிதற்குக் கருவியாகின்று துணைசெய்வன; அவர் தாம் அருளிய தமிழ் மறையும்; அவர்தமுள்ளக் கருத்தைத் தெள்ளிதி னுணர்த்தும் பரிமேலழகருரையும், ஆசிரியர் தம்பெருமையும் அருமறையின் அந்தமில் சிறப்பையும் கூறுதற் கெழுந்த திருவள்ளுவமாலையுமே யாம். இம் மூன்றனோடு முரணுதலின்றேல் ஏனையவும் ஆம்.

ஆயின், அம் மூன்றனையுங்கொண்டு அவர் வாழ்த்தி வழிபட்டு வணங்கி வந்த வாய்மைப் பொருளை யறிதல் கூடுமோவெனின், கூடும்; என்னை? தாம் கற்றுக் கேட்டுத் தெளிந்து வழிபட்டு ஒழுகி வந்தனவற்றையே. உலகினர்க்கு ஓதப்புகும் தமதுயர்ந்த நூலிலும் கூறுதல் ஆன்றோர்கள் ஆட்சியாதலின், எங்ஙனமெனின், கருவிலே திருவுடையாரிமாறப்பிரான் தமது உயர்ந்த நோக்காலே காசினியோர்க்கு உபதேசித்த தெய்வத் திருமறையில், முதற்பத்து, இரண்டாந் திருவாய்மொழி "வீடுமின் முற்றவும்" என்றதன் தோற்றுவாயில், இத் திருவாய்மொழி பத்தியைப் போதிக்கின்றதா? அன்றிப் பிரபத்தியைப் போதிக்கப் புகுந்ததா? என்ற வினவை எழுப்பிக்கொண்டு அதற்கு விடையாக திருவாய்மொழியாகிய கடலுள் அமுதத்தைத் திரட்டித்தந்த நம்பிள்ளை யென்னும் பெரியார். "மயர்வற மதிநல மருளினன்" என்றிவர் தாம்பெற்றது பக்தி ரூபாபன்ன ஜ்ஞானமா

யிருக்கது; தாம்பெற்ற தொன்றும் பிறர்க் குபதேசிப்ப தொன்று மாக வொண்ணுதே; அப்போது விப்பலம்பக கோடியிலே யாவரே..... ஆனபின்பு தாம் பெற்றத்தையே பிறர்க் குபதேசிக்கின்றோராக அமையும்'' என்று அருளிச் செய்யும் அருமைத் திருவாக்கு, பொன்னேபோல் போற்றுதற்குரிய தன்றோ?

ஆதலின், இம் மூன்றையுமே சிறப்புக் கருவியாகக் கொண்டு, மூதறிஞரின் ஏனையவற்றைத் துணைக் கருவியாகக்கொண்டு இக்கட் டுரையைக் கூறிமுடிப்பன்.

மேற்கூறிய மூன்றனுள் திருவள்ளுவமாலையைக் குறித்து முதலிற் கூறுவேன். திருவள்ளுவமாலை, திருக்குறளுக்குச் சிறப்புப் பாயிரமாக விளங்குவது என்பது ஆன்றோர் கொள்கை. சிறப்புப் பாயிரம் அளப் பரிய வாகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போன் றிருத்தலின், பருப்பொருட்டாகிய பாயிரம் கேட்டார்க்கு நுண்பொருட் டாகிய நூல் இனிது விளங்கும் என்று கூறுப. ஆதலின், சிறப்புப் பாயிரமாகிய இதனையே முதன்முன்னம் ஆராயத் தொடங்கினேன்.

இது, கடைச் சங்கத்து வீற்றிருந்த பொய்யடிமை யில்லாப் புலவர்கள் நாற்பத் தொன்பதின்மராலும், அசரீரி, காமகள் முதலியோ ராலும் பாடப்பட்ட ஐம்பத்து மூன்று வெண்பாக்களை யுடையது; உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் முதலிய பண்டைய உரை யாசிரியர்களால் தமது உரைக்கிடையில் மேற்கோளாக எடுத்தாளப்படும் மேன்மையுடையது; இதன் வெண்பாக்களில் சில, நூலின் அளவை யினையும், சில, நூலின் பெருமையினையும், சில, ஆசிரியர் பெருமை யினையம் உவமை முகத்தானும் பிறவாற்றானும் கற்ற ருளங்கொளத் தெள்ளிதி னுணர்த்தும் நிறம்படைத்தவை.

இவற்றுள் ஆசிரியர் பெருமையினையும் நூற் பெருமையினையும் உவமை முகத்தால் விளக்கும் வெண்பாக்களையே ஈண்டு எடுத்துக் கூறப் புகுகின்றேன்; அவையே இக் கட்டுரைக்குப் பயன்படுவ; ஆதலின்.

உவமை முகத்தால் விளக்குமிடத்து நம் பெருந்தகையாருக்கும், நம் தமிழ் மறைக்கும் உவமையாக, உயர்வற வுயர்நலமுடைய இறைவனையும், அவன்றன் பிறவாப் பிறப் பிலியாகவிருந்தும் ''உயிரளிப்பான், எங்கின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா'' (குருகை காவலன்) என்றும், ''புவ்வத் தாமரை புரையுங் கண்ணன், வெளவற் காரிருண்மயங்கு மணிமேனியன், எவ்வயினுலகத் துந் தோன்றி யவ்வயின், மன்பதை மறுக்கத் துன்பங்களைவோன்'' (பரி பாடல்) என்றும் கூறியவாறே அவதரித்தானும், பிறப்பித்தோர் இலாதவனும் உலகுயக்கொண்ட அவதாரங்களையும், பிணக்கற வறு வகைச் சமயமும் நெறியுள்ளியுரைத்த, கணக்கறு கலத்தனன் அத்தமில் ஆதியம்பகவன், வணக்குடைத் தவநெறியினையும், (தவ நெறி-

பகவத்கீதை) அவ்விறைவனது பெருஞ்சேர் புகழினை விரித்துரைக்கின்ற திரு இராமாயண மாபாரதம் முதலிய நூலுமே கூறிச்செல்லுதலை அறிவுடையோர் கூர்ந்து குறிக்கோடற்பால.

மாலுக்குரையாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞாலமுழுதும் நயந்தளந்தான்—வாலறிவின்
வள்ளுவருந் தங்குறள் வெண்பாவடியால் வையத்தார்
உள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து (பரணர், 6.)

காணின்ற தொங்கலாய் காசிபனுர் தந்ததுமுன்
கூனின்றளந்த குறளென்ப—தூன்முறையான்
வானின்று மண்ணின்று அளந்ததே வள்ளுவனுர்
தானின்றளந்த குறள் (பொன்முடியார், 14.)

இவ்விரு பெரியார்களது செய்யுட்களும் இறைவன் ஆலமர்வித்தினருங் குறளாகச் சென்று நீணிலங் கடக்கும் நெடுமுடியண்ணலாகி உலகத்தை யெல்லாம் மறுபிறப்பறுக்கு மாசில்சேவடி யிரண்டால் வசிட்ட சண்டாள வேற்றுமையற எல்லார் தலையிது மொக்கத் திருவடி வைத்து அளக்கு பாவனமாக்கினுற்போல, தெய்வப்புலமைத் திருவள்ளுவரும் வல்லுகரும் வல்லாரும் சொல்லிடனும் ஆற்றல் சோர்வில்லாத திருக்குறளால் உலகத்தார் உள்ளுவவெல்லா மளக்து விளக்கிக்காட்டினுர். என இறைவனேடு திருவள்ளுவரையும் ஒப்பிட்டோதுகின்றன. இவற்றை விரித்து நூலைக் கூறுமிடத்துக் கூறுவன்.

உப்பக்கம் நோக்கி யுபகேசி தோண்மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப—இப்பக்கம்
மாதாநு பங்கி மறுவில் புலச்செந்தாப்
போதார் புனற்கூடற் கச்சு (நல்கூர்வேள்வியார் 21)

வடதிசை குறித்துச்சென்று நப்பின்னைப் பிராட்டியினது தோளை மணந்த கண்ணனை வடமதுரைக்கு அச்சு என்று சொல்லுவர்; இப் பக்கத்தைக் குறித்து மாதாநுபங்கி எனப்படுகின்ற குற்றமற்ற புலமை யாகிய தேனைச் சொரிகின்ற நாவாகிய மலரையுடையவர் நீர்வளப்ப முடைய தென்மதுரைக்கு அச்சு ஆம் என்பர்; 'மாதாநுபங்கி' திருவள்ளுவரது திருநாமங்களில் ஒன்று; அது மாதாவை நிகராகக் கொண்டு நடக்கும்ஒழுங்கினன், அஃதாவது மாதாதன்குழந்தைகள்மேல் அருள் செய்தல்போல் இவர் உலகத்தார்மேல் அருள் செய்பவர் எனப் பொருள்படும். உபகேசி—கூந்தலழகுடையாள்; எனவே நப்பின்னைப் பிராட்டியார் என்பதாம். நேமிநாதவுரைகாரரும் "பாலே கிணையே" என்னும் செய்யுளின் கீழ் இச்செய்யுளை மேற்கோளாகக் காட்டி, உபகேசி யாவாள் நப்பின்னைப்பிராட்டியார் என்று விளக்கமும் எழுதிச் செல்வர்.

"நிலக்தரு திருவின் நெடியோன் போல" என்று தொடங்கும் மதுரைக் காஞ்சி யடியும், எல்லா நிலங்களையும் தன்னிடத்தே காட்டிய பெருஞ் செல்வத்தையுடைய மாயோனைப் போலத் தொல்லாணையினை

யுடைய நல்லாசிரியர்; என்றது, கண்ணன் எப்பொருளும் தானேயிருக் கின்றபடியைக்காட்டிக் கீதையை யருளிச்செய்து எல்லாரையும் போதித் தாற்போல எல்லாரையும் போதிக்கவல்ல ஆசிரிய ரென்றவாறு.'' என்ற கச்சினார்க்கினியருரையும், நல்கூர் வேள்வியாரியற்றிய இவ்வெண்பாவும் பொருணேக் கொன்ரு யிருத்தல் கற்ருர் கழிமகிழ் வெய்தற்பாலது. திருவள்ளுவர் போன்ற அறிவுடைப் பெரியார்கட்கும், அவர்கள் கூறும் ஞானமொழிகட்கும் கண்ணபிரானேயும் கீதையையும் உவமை கூறி உளம் மகிழ்தல் பண்டையோர் பண்பு. ஆதலின், இவ்வெண்பாவிற்குப் பிறர்கூறும் வேறுபொருள் சான்ருேர் கருத்துக்களோடு முரணுடைத் தாம் என்று தெளிக.

இதனுல், ஆரியம் பகவன் கண்ணனுகத் தோன்றி அறுவகைச் சமயமும் பிணக்கற நெறியுள்ளிக் கீதை யருளிச்செய்து உலகத்தாரை யெல்லாம் உய்விக்கச் செய்தாற்போல, நான்முகத்தோன் தான்மறைத்து வள்ளுவராய்ச் சான்மறையின் மெய்ப்பொருளே முப்பொருளாக அறுவகைச் சமயத்தாராகிய எப்பாலவருமியைய மொழித்த முப்பாலால் உலகுய்யக்கொண்டனரென்ற கருத்துக்காண்க. வடமொழி தென்மொழி யாகிய இவ்விருமொழிகளி லுமுள்ள இவ்விருபெருநூல்களும் வழங்காத நாடுகளேயோ, தம் நூலிலாக்கிக்கொள்ளாத மொழியையோ இவற்றின் அருமை பெருமைகளேயறிந்து போற்ருத மக்களேயோ எங்குங்காண்டல் அரிது. அறியாதார் அறியாதவரே யாவர் என்க.

எப்பொருளும் யாரும் இயல்பி னறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாம் செப்பவரு—மூப்பாற்குப்
பாரதஞ்சீ ராம கதை மனுப் பண்டை மறை
சேர்வனமற் றில்லே நிகர் (பாரதம் பாடிய பெருந்தேவனர். 30.)

எவ்வகைப்பட்ட பொருள்களேயும் எவ்வகையோரும் அவற்றின் தன்மையோடு அறிய, அவர்க்குச் சொல்லும்படிக்குத் திருவள்ளுவர் செல்லரல் வந்த திருக்குறளுக்கு உவமானமாகத் தக்கன, மாபாரதம் இராமாயணம், மனுநூல், பழைய வேதங்கள் என்னுமிவையேயாம். இவற்றை யொழிந்தன உவமானமாகத்தக்கனவில்லே என்றவாறு.

ஈண்டு சேர்வன இவையெனவே, ஏனைய நேராவென்பது தாமே போதரவும், தாம் வேண்டிய பொருளின் சிறப்பை முடித்தற்கு ''மற்றில்லே நிகர்'' என மீண்டுங்கூறி வற்புறுத்தும் வனப்பு வாய்ப்பு உடைத்தாம். இவை நான்கும் திருக்குறளே சேர்வன; எனவே, சேர்தல் இவை கூறும் பொருள் பற்றியே யாதல் வேண்டும்; ஆதலின், இவ்வைந்தினும் கூறும் பொருளே யுளப்படுத்தி நோக்குவோம்.

இவற்றுள், மாபாரதமும் இராமாயணமும் இதிகாசத்துட் சிறந்தவை; இறைவனது தியோசையழித்து அடியவரை யாட் கொள்ளுவனவாகிய தாவாவிழுப் புகழோடு அறம் பொருளின்பங்கள் ஆகியவற்றைக் கூறுவன. ''நாராயண கதாமிமாம்'' (நாராயணன்

சரிதையைக் கூறுகின்றேன்) வியாசர். ''மன்னு மாதவன் சரிதமுமிடை யிடை வழங்கும், என்னுமாசையால் யானுமீதியம்புதற் கிசைக்தேன்'' வில்லிபுத்தூராழ்வார். ''மாமர மேழ் தொளை, யெய்த வெய்தவற் கெய்திய மாக்கதை'' கம்பர். ''மாபாரதத்தால் நூது பேரன வன் ஏற்றம் சொல்லுகிறது, இராமாயணத்தால் சிறையிருந்தவ ளேற்றம் சொல்லுகிறது'' திரு பிள்ளைலோகாசார்யர். என்பன ஆன்றோர்களது அருமைப் பொன் மொழிகள்.

மனுநூலில், 'தர்ம சாஸ்த்ரேஷ்வமாதவ:' அறநூல்களில் சிறக்கது மனுநூல் என்றும், 'யதியக்மதுரவதத்தத்பேக்ஷயம்' மதுவானவர் சொல்லுவ வனைத்தும் பிறவிப் பிணிக்கு மருக்து என்றும் புகழ்ந்த பெருமை வாய்ந்தது. இத்தகைய இந்நூலானது, முதலில், உலகத் தோற்றத்தை யுரைக்குமிடத்து (6-ம் ஸ்லோகம் தொடக்கம்) இவ்வாறு பிரளயகால முடிந்த பின்பு, உயிர்களைப்போல் கருமத்தினாலே தேகம் எடுக்காமல் தன்னிச்சையினாலே தேகமெடுக்கத்தக்க தானந்தன்மை யனை பகவானனவர், கண் முதலான புறவிக்திரியங்களாலே இழுக்கப் படாதவராயும், ஒருவராலும் தடுக்கப்படாத படைப்பு முதலிய முத் தொழிலையுமுடையவராயும், வான் முதலிய வைம்பெரும் பூதங்களையும் விளங்கச்செய்கிறவராயும், உலகிற்கு இன்றியமையாதவராயும் விளங்கினர். என்று தொடங்கிச் சொல்லி வந்து, பின் நீர் தோற்றத்தைச் சொல்லி, அதில் பகவான் தன்வன்மை வடிவமான ஒருவிதையை விதைத்ததையும் அவ்விதை அண்டமானதையும், அதில் சதுர்முகனைப் படைத்ததையும் கூறி, பின் தண்ணீர், நரன் என்னும் பெயரையுடைய இறைவனால் படைக்கப்பட்டமையின் நாரம் என்ற பெயரையடைந்தது. நீரில் வசிப்பதனால் அவ்விறைவனுக்கு நாராயணன் என்ற பெயர் உண்டாயிற்று என்று கூறுகின்றது.

இவ்வாறு மனுநூலில், உலகத்திற்கு முதற்பொருளைக் கூறுமிடத்து 'ததஸ்வயம்பூர்பகவாக்' என்று 'பகவான்' என்ற சொல்லை முறையாகச் சொல்லி, 'தேநநாராயணஸ்மிருத:' அவனை நாராயணன் என்று உறுதிப்படுத்திப் பின் அவனால் படைக்கப்பட்ட உலகத்திற்கு, * நிற வேறுபாட்டின் நிலைக்குரிய அறங்களையும் பிறவற்றையும் கூறப்பட்டிருக் கின்றது.

பண்டமறை :—இது மறையாதலின் எல்லாம் வல்ல இறைவனுடைய காரணமில்லாம லுண்டாகின்ற கடைக்கண் பார்வை இல்லாதார்க்கு இதன் பொருள் கன்கு புலனாகா. அவ்விறைவனாலே மயர்வற மதிநலமருளப்பெற்ற கருவிலே திருவுடைய ஆழ்வாராதிகளைப் போன்ற பெரியார்கட்கே முற்றும் புலனும்.

> ''மூர்த்தத்தினையும் முழுவேழுலகுமுழுகின்ற
> நீர்த்தத்தினைச் செய்ய வேதத்தினைத் திருமால் பெருமை
> பார்த்தற்கருளிய பாரதத்தைப் பணித்தானுன்ற
> வார்த்தைக்குருகைப் பிரானுங் கண்டானம் மறைப்பொருளே''

* சிறவேறுபாடாவது :—வருணாஸ்ரம தருமம்

உயிரின் உருவத்தையும், எழுவகைப்பட்ட இந்த உலகங்களெல்லாம் அடங்குமிடமும் தானுந்தன்மையதும், மாசில்லாததுமான இவற்றவனது வடிவத்தையும், செவ்வியையுடைய வேதங்களுமாகிய சிறந்த உண்மைப் பொருளை திரு நாராயணனுகிய கண்ணன் அருச்சுனனுக்குப் போதித்த பகவத்கீதை தன்னில் அடங்கப்பெற்ற மாபாரதத்தையும் சொல்லியருளியவனை வியாசனும் கிலிபெற்ற திருவாய் மொழியாகிய சிறந்த நூலையுடைய நம்மாழ்வாரும் ஆகிய இருவருமே உணர்தற்கரிய இரகசியமான வேதங்களின் உண்மைப்பொருளை அறிந்தவர்கள் என்ற கம்பரது திருவாக்கைக் கண்டு தெளிக.

ஆதலின், அப்பெரியாரும் அப்பெரியாரை அடியொற்றிய கம்பரும் அருளிய செய்யுட்களைக் கொண்டே அதன் பொருளை யறிதல்தகும்.

"அறிந்தன வேதவரும் பொருள் நூல்கள்
அறிந்தன கொள்க அரும்பொருளாதல்
அறிந்தன வெல்லாம் அரியையவண்ணல்
அறிந்தனர் நோய்களறுக்கு மருந்தே" நம்மாழ்வார் 9.ப.3.திருவாய்.3.பா.

ஆயிய்ந்த மரியென யாவையும்
ஓதினுரல இல்லன வுள்ளன
வேதமென்பன மெய்க்கெறி கண்ணையன்
பாதமல்லது பற்றிலர் பற்றிலர் கம்பர்.

இவற்றுல் வேதங்களிற் கூறப்படும் பொருள் அரியே யாதலின் இருவகைப்பற்றும் முற்றத்துறந்த ஞானிகள் அவ்விறைவனையே உபாயோபேயங்களாகப் பற்றிப் பிறவியறுக்கு மருந்தையறிந்தார்கள் என்னு முண்மைப்பொருள் விளங்குதல் காண்க.

இவ்வாறு, வேதங்கள், இதிகாசங்கள், மனுநூல்கள் முதலாகிய இவற்றில் கூறப்படுதல் போன்று, திருக்குறளிலும் முதலிடை கடைகளில் இறைவனது பொருள் சேர் புகழையும் வீட்டுலகையும் சுருங்கக்கூறி விளங்கவைத்து, எனைய அறம்பொருளின்பங்களையும் விரித்துக் கூறுதல் நோக்குக. இறைவன் புகழ் முதலிடைகடைகளில் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கப்பட்டிருத்தலை, நூலைக்குறித்துக்கூறுமிடத்து விரித்துக் கூறுவன்.

ஈண்டு இன்றியமையாதனவாக நோக்குதற்குரியதொன்று. மனுவானவர் தமது நூலின் முதலில் உலகத்தோற்றத்தைக் கூறுகின்றார்; கூறி அதற்குத் தலைவனைக்கூறுமிடத்து தானுந்தன்மையனை பகவான் என்று விதந்து "தேன நாராயணஸ்ம்ருத:" அவன் நாராயணன் எவ்வுலகத்திற்கும் காரணப்பொருள் நாராயணன் என்று அறுதியிடுகின்றார். நம் தெய்வப்புலமைத் திருவள்ளுவர் தமது நூலில் முதலிலும் "ஆதி பகவன் முதற்றேயுலகு" என்று தொடங்கிப் "பிறவிப் பெருங் கடல் நீந்துவர் நீந்தார், இறைவனடி சேராதார்" என்று இறைவன் என்ற சொல்லால் முடிக்கின்றார்.

சுயம்பு, ஆதி, நாராயணன் வாசுதேவன், விஷ்ணு, இறைவள் என்பனவும் ஒரு பொருட்கிளவிகள். இறைவன் என்ற சொல்லைக் குறித்துப் பின் பரிமேலழகருரையைப்பற்றிக் கூறுங்கால் கூறுவன்.

பற்றற்ற பரம வைதீகர்களாகிய இப்பெரியார் இருவர்களுடைய திருவுளக்கருத்து ஒன்றுக விளங்கி நிற்பது; என்னே வியப்பு! என்னே வியப்பு!! பரம்பொருளே, மெய்ம்மைப்பொருளே உலகோர்க்குணர்த்துவதில் பற்றிலாத பெரியார்கள் அனைவரும் ஒரே கருத்துடையவர்களாக விருப்பர்கள். இது ஞானிகள் சம்மதம். ''கின்னிடை (பகவான்) வெறுப்புக் கொண்டிருப்பாளெரு வைதீகனுண்டோ! உண்டாயின் அவைதிகனு மத்தனை'' என்பதாஉமிப்பொருட்டு.

பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச்சாம்புநதம்
ஆவிற்கருமுனியா யாணைக் கமரும்பல்
தேவிற்றிருமா லெனச் சிறந்ததென்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா (கவிசாகரப் பெருந்தேவனார் 36)

மலர்களுக்குள்ளே தாமரையும் பொன்களுக்குள்ளே சாம்புநதப் பொன்னும் கோக்களுக்குள்ளே வசிட்டருடைய காமதேனும், யாணைகளுக்குள்ளே ஐராவதமும் தெய்வங்களுக்குள்ளே திருமாலும் சிறந்து மேம்பட்டு விளங்கினைப்போன்று, நூல்களுக்குள்ளே திருவள்ளுவரது குறள் வெண்பா சிறந்தது என்று சொல்லுவர். ஈண்டு திருமால் முத்தொழிற்கு முதல்வனுய், தெய்வங்களனைத்திற்கும் தெய்வமாய்கின்று விளங்குதல் பெரியார்களனைவருக்கும் ஒப்ப முடிந்தாற்போல, திருக்குறளும் உலகினுள்ள நூல்களனைத்தினும் தலைசிறந்து ஒப்புயர் அற்றதாய் விளங்குகிறது; என இறைவனது முழுமுதற்றன்மையும் நூலின் தலைமையும் விளங்குதல் காண்க.

உள்ளக் கமல மலர்த்தி யுளத்துள்ள
தள்ளற் கரிய விருள் தள்ளுதலால்—வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பாவும் வெங்கதிரு மொக்குமெனக்
கொள்ளத் தகுங்குணத்தைக் கொண்டு (குலபதி நாயனார். 48.)

நெஞ்சமாகிய தாமரை மலரை மலர்த்தி மக்களகத்துள்ள பிறிதொன்றனுலே நீக்கப்படாத அஞ்ஞானவிருளை நீக்குதலால் திருவள்ளுவரது குறள் வெண்பாவும் எல்லாராலும் விரும்பப்படுகின்ற ''ராமநிவாகர அச்சுதபானுக்களு''ம் செய்கையால் ஒக்குமெனக் கொள்ளல் தகும் என்க.

ஈண்டு விரும்பப்படுகின்ற கதிரோன் என்றது; இராமபிராணையும் கண்ணபிராணையும் குறித்தது. இவர்களே, ராமநிவாகரன் என்றும் அச்சுதபானு என்றும் கூறுதல் பெருவழக்கு. ''ஆதித்யராமநிவாகர அச்சுதபானுக்கள்'' **ஆசார்யஹ்ருதயம்.** ''வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி விண் முழுது முயக்கொண்ட வீரன்''

பெருமாள் திருமொழி. ''பல்லாயிரமிருள் கிறிய பகலோனென வொளிரும் வில்லானன்'' கம்பர். ''உலகங்களாகிய தாமரைகள் எல்லாம் மலரும் பொருட்டு தேவகியாகிய கிழக்குச் சந்தியிலே திரு நாராயண னுகிய சூரியன் உதித்தருளினன்'' விட்டுணுபுராணம். ''ஆயர் குலத் தினில் தோன்று மணிவிளக்கை'' சூடிக்கொடுத்த சுடர்க் கோதையார். ''அத்திசை யுதித்ததோ ரிரவியாமெனத், துளபமாலை கமழ் மவுலிக காதன்'' வில்லி. இம்முன்னோர்களது முது மொழிகளால் உணர்க.

இவர்களைக் கதிரோன் என்னக்காரணம் உலகத்தில் பயங்கரமாகப் பரவிய கரியபெரிய வடிவமுடைய இராக்கதர் முதலிய கொடியோர் களாகிய விருளை அறத்தொலைத்து அடியார்களுடைய முகத்தாமரை அகத்தாமரைகளை மலர்த்தி விளங்குதல்.

> சுடரிரண்டே பண்டு மூன்றுயினதுகள் தீர்த்தலைத்
> திடரிரண்டாய் வரும் பேரிருள் சீப்பன எம் பிறப்பை
> அடரிரண்டாமலர்த்தாளுடையான் குருகைக்கரசன்
> படரிருங்கீர்த்திப்பிரான் திருவாய் மொழிப்பாவொடுவே.

என்ற சடகோபரந்தாதிச் செய்யுள் ஈண்டுகினைவிற்கு வருகின்றது ''ராமதிவாகர அச்சுதபானு''க்களாகிய பண்டைச் சுடர்களிரண்டோடு கலியுகத்துத் தோன்றிய காவிரியுடையபிரான் கலந்தருதெய்வப்பாடலைக் கூட்டிச் சுடர்கள் மூன்று என்கின்றார் கம்பர். குலபதி காயனார் பொய்யில் புலவன் பொருளுரையை அச்சுடர்களோடு ஒப்புமை கூறுகின்றார்.

இனி வெங்கதிர் என்பதற்கு, அகவிருளை அகற்றும் ஆற்றலின்றிப் புறவிருளை மாத்திரம் போக்கும் புண்மையுடைய ஆதித்தன் என்று பொருள் கூறுதல், ''உள்ளக் கமல மலர்த்தியுளத்துளள, தள்ளற்கரிய விருள் தன்னுதலால்'' என்பதற்குப் பொருந்துவதன்று. ''வெள்ளி வியாழம் விளங்கிரவிவெண்டிங்கள், பொள்ளென நீக்கும் புறவிருளை - தெள்ளிய, வள்ளுவரின் குறள் வெண்பாவகிலத்தோர், உள்ளிருள் நீக்குமொளி'' என்ற செய்யுளில் மதுரைப் பாலாசிரியனார் புறவிருள் உள்ளிருள் என விதந்தோதுதல் காண்க. புறத்துள்ள தாமரையை மலர்த்திப் புறவிருளை நீக்குதலால் எனக்கூறின் பொருத்தமாயினும், செம்பொருளின்றாயினன்றே ! வலித்து பொருள் கோடல் வேண்டும் என விடுக்க.

இதுகாறும் கூறியவாற்றால், பண்டைப் புலவர் பெருமக்கள் பலரும், இறைவன் மாட்டும் அவன் உலகத்தோர் உய்வதற்காகப் போந்த தேசற்றங்களிடத்தும் தங்கட்குள்ள அன்பும் செய்கன்றி யறிதலும் பத்தியும், இறைவன் வாய்மொழியாகிய வேதங்களென்ன, அவனுரு அவதாரத்தின் சிறப்பிலே அருளிய கதையென்ன அவன் புகழைக் கூறுகின்ற இதிகாசமாகிற சிறந்த நூல்களான இராமாயண மாபாரதங் களென்ன, அவன் உலகிற்குக் காரணமாந் தன்மையைக் கூறுகின்ற

வள்ளுவர் கூறிய வாய்மை

மதநூல் என்ன ஆகிய இவைகள், வக்தாவின் அவமும் பிரபந்தத்தின் ஏதமும் பிரதிபாதயனது நீதும் ஆகிய மூன்றுவித குற்றங்களினின்று நீங்கிய வைதிக நூல்கள் ஆகையாலே, அவையிடத்துத் தங்கட்குள்ள ஒழுங்கும், ஆதரவும், கன்மதிப்பும், உயர்வும் விளங்க, தெய்வப் புலமைத் திருவள்ளுவனார்க்கும் திருக்குறட்கும் உவமைகூறிப் பொய்யடிமை யில்லாப் புலமையைப் புலப்படுத்தியும், அங்ஙனம் புலப்படுத்து மாற்றல் திருவள்ளுவரது தெய்வ வழிபாட்டை ஐயமறத் தெள்ளிதின் தெரிவித்திருத்தலும் காண்க.

இனி, இரண்டாவதாகப் பரிமேலழகருரையைப் பற்றிக்கூறுவேன்.

இவ்வுரை, புலவர் பலராலும் போற்றும் பொருட் செறிவுடையது; கற்போர் உளம் காமுறச்செய்வது. சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல் முதலிய வனப்பு வாய்க்கது. மிக அரியனவாகிய வடநூல்களின் கருத்துக்களை எளியனவாகத் தமிழ் நாட்டார் அறிந்து கோடற்குக் கருவியாக உள்ளது. திருக்குறளாகிய பெருங்கடலிற் புகுபவர்க்குப் பெரியதோர் மரக்கலமாய் உரைகள் பலவற்றிற்கும் முடிமணியாயத் திகழ்வது. திருவள்ளுவரது தெய்வக்கருத்தைத் தெரிதற்குத் திறவு கோலாந்திறம் படைத்தது. அதனால், நூல்களோடொப்ப நுவலப் படும் கோன்மையுடையது.

> '' திருத்தகு சீர்த்தெய்வத் திருவள்ளுவர்தம்
> கருத்தமைதிதானே கருதி—விரித்துரைத்தான்
> பன்னு தமிழ்தேர் பரிமேலழகனெனு
> மன்னு மூயர் நாமன் வந்து ''
>
> '' வள்ளுவன் மீளவும் வந்துதித் தலகோர்க்
> குள்ளிய பொருளே யுரைத்தன னென்ன
> எழுத்துமுதலா லிலக்கண வமைதியும்
> வழுத்தில் வேதாகம வகையதன்பயனும்
> தங்கியகுறட் பாத்தமிழ் மனுநூலிற்
> கிதுவே யுரையென் றியாவரும் வியப்ப
> பொழிப் பகலத்தொடு நுட்பமெச்ச
> விழுப்பொருள் விரித்துரைத்தனன்
> ... ...
> பரிமேலழகனெனும் பெயர்படைத்துத்
> தரைமேலுதித்த தலைமை யோனே.''
>
> (பழம் பாடல்)

'' வள்ளுவர் சீரன்பர் மொழிவாசகக் தொல்காப்பியமே
தெள்ளுபரி மேலழகன் செம்தவரை—ஒள்ளியசீர்த்
தொண்டர்புராணம் தொகுத்தி யோராறும்
தண்டமிழின் மேலாந்தரம்.'' (கொற்றவன்குடி உமாபதிசிவம்)

இவ்வுரைப் பெரியார், உரை கூறுமிடத்து அருஞ்சொற்களையும் அருந்தொடர்களையும் சங்ககாலத் திலக்கணவிலக்கியங்களி னின்றும்

திருக்கோவையார் முதலிய சான்றோர் இலக்கியங்களினின்றும் மேற் கோள் காட்டி விளக்கிச் செல்லுதலிற்பேரலவே உண்மை (தத்துவ)ப் பொருள்களை விளக்குங்கால், இறைவனுல் மயர்வறமதிநல மருளப்பெற்ற ஆழ்வார்கள் அருளிச்செய்த நூல்களை மேற்கோள் காட்டி விளக்குவர். இதனுல், உண்மைப்பொருள்களைத் தந்துரைப்பதில் திருவள்ளுவரும் ஆழ்வார்களும் ஒற்றுமையுடையவர்கள் என்பது தேற்றம். அங்ஙனம் ஒற்றுமையுடையனவாக இருப்பனவற்றில் சில கூறுவன்.

"பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்" (பொய்யில்பாடல் துறவு. 9)

"அற்றது பற்றெனில் உற்றது வீடு" (திருவாய்மொழி) 1—2—5.

என்பதாவது மதுபற்றிவந்தது.

"ஆரா வியற்கை யவாநீப் பினங்கிலையே
பேரா வியற்கை தரும்" (அவாவறுத்—10)

"என்றும் ஞானங்கடந்துபோய் நல்லிந்திரிய மெல்லாநீத்
தொன்றுக் கிடந்த வரும் பெரும்பா மூலப்பி லதனையுணர்ந்துணர்ந்து
சென்றுங் கின்பத்தன் பங்கள் செற்றுக் களைந்து பசையற்றுல்
அன்றே யப்போதே வீடுமதுவே வீடு வீடாமே" (திருவாய்மொழி) 8.9.6.

என்பதாவது மிக்கருத்தே பற்றிவந்தது.

"களிப்புங் கவர்வு மற்றுப் பிறப்புப் பிணிமூப்பிறப்பற்று
ஒளிக்கொண்ட சோதிய மாயுடன் கூடுவதென்று கொலோ" (2, 3. 10,)

என்ற திருப்பாசுரத்தை, "ஆராவியற்கை" என்ற திருக்குறளின் விசேடவுரையில் "களிப்புக்கவற்கிகளும் பிறப்புப்பிணி மூப்பிறப்புக் களும் முதலாயினவின்றி உயிர் நிராதிசய வின்பத்ததாய் நிற்றலின் வீட்டினைப் பேராவியற்கை என்றார்" என்று அப்படியே அமைக்கிறார். உள்ளவாறே உரைநடையாக எழுதும் வனப்பு இவ்விரண்டையும் ஒருங்கு கற்பார்க்குக் கழிபேருவகையூட்டுவதாம்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை" துறவு: 10.

"எல்லாப் பொருளையும் பற்றினின்றே பற்றற்ற இறைவன் ஓதிய வீட்டு நெறியை இதுவே நன்னெறி யென்று மனத்துக் கொள்க; கொண்டு, அதன்கண் உபாயத்தை அம்மனத்தாற் செய்க; விடாது வந்த பற்று விடற்கு" என்ற உரைவாக்கியங்கள் கருதத்தக்கன. (ஈண்டு இறைவன் ஓதிய வீட்டு நெறி—பகவத்கீதை. இப்பெரியார் திருமாலையே இறைவன் என்று ஓதுவர்.)

"வாவையும் யவருந்தானுயவரவர் சமயந்தோறும்
தோய்வினன் புலனைந்துக்கும் சொலப் படாஅணுவின் மூர்த்தி"
3. ப. 4. கி. 10. பா.

"பிணக்கறவறுவகைச் சமயமும் நெறியுள்ளியுரைத்த
கணக்கது நலத்தனனந்த பிரானியம் பகவன்
வணக்குடைத் தவநெறி வழிநின்று புறநெறி கூசுகட்டு
உணக்குமின் பசையற அவனுடையுணர்வு கொண்டுணர்த்தே"
1. ப. 3. கி. 5. பா.

இவ்விரு பாக்களின் கருத்துத் திருக்குறளில் பல விடத்தும் வருதல் காண்க.

தமிழ் மறைகளாகிய இந்த விரண்டும் ஒரே உண்மையை யுணர்த்து மொற்றுமையை யுளங்கொண்டு, பிற்காலத்தாசிரியரொருவர்.

> "தேவர்குறளும் திருநான் மறை முடிவும்
> மூவர்தமிழும் முனி மொழியும்—கோவை
> திருவாசகமும் திருமூலர் சொல்லும்
> ஒருவாசக மென்றுணர்" என்று

ஒருங்கு சேர்த்து ஓதுவராயினர். திருநான் மறை முடிவு தமிழ் வேதமாகிய திருவாய்மொழி. முனிமொழியும் என்பதனைப்பெயரெச்சத் தொடராகக்கொண்டு கோவைக்கு அடைமொழியாக்குவாரும் எண் ணும்மையாகக்கொண்டு வடமொழிப் பிரமசூத்திரம் என்று கூறுவாரும் உளர். திரு. உ. வே. சாமிநாதையர் அவர்கள் "முனிமொழி" என்றே தமிழ்நூலொன்று இருந்ததாகக் கூறுகின்றார்கள்.

"இறைமாட்சி" இவ்வதிகாரத்திற்குப் பொருள் கூறப்புகுந்தவர் 'அஃதாவது—அவன் தன் கற்குண நற்செய்கைகள்' என்று கூறி, ஒருகாலத்தில் ஒரு தேயத்தில் ஓரிடத்திலிருக்குமரசனை, எக்காலத்தும் எவ்விடத்தும் நிறைந்துள்ளவன் என்ற பொருளைக் கொண்டதும், ஆதிபகவன் திருப்பெயரும் ஆன இறைவன் என்னும் திருநாமத்தால் கூறுதல் ஒண்ணாது என்ற தடையைத் தம் திருவுளத்தில் வைத்துக் கொண்டு, அரசர்கள் ஆதிபகவன் கூறுபாடாக நூல்கள் அறைவதால் அதனை அதற்கு இறையாக இறுப்பான் கருதித் "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே யென்னும்" என்று பெரியாரும் பணித்தாரெனச்சுடர்மிகு சுருதியுள் நின்றும்மேற்கோள் காட்டுகின்றார்.

இங்கு, வாரம்பற்றாது காய்தலுவத்தலின்றி ஒரு தலையே நின்று உற்று இதனை நோக்குவோம். பரிமேலழகர் கூறுவன வனைத்தும் தெய்வப் புலமைத் திருவள்ளுவர் கருத்தேயாம் என்பதனை மேலே கண்டாம். ஆதலின், பரிமேலழகர் திருவள்ளம் தெளிவுபெற நமக்குக் காண்டல் கூடுமாயின், அங்ஙனம் கண்ட கருத்தே திருவள்ளுவர் கருத்தும் ஆம். இதில் ஒரு சிறிதும் முரண்பாடின்று.

இனி உரையாசிரியரை நோக்குவோம் இறைவன் என்னும் திருநாமம் தோற்றக்கேடுகள் இன்மையின் எப்பொழுதும் உடையதாய் நோன்மையால் தன்னை ஒன்றும் கலத்தலின்மையின் தாய்தாய், தான் எல்லாவற்றையும் கலத்து நிற்கின்ற முதற்பொருள் மாட்டே முக்கியமாக வரிக்கும். அல்லாதார் மாட்டுச் செல்லாது, செல்லின் ஒளபசாரிகமாம் என்ற கருத்துத்தோன்ற முன்னர்க்கூறி, பின்னர் அவ்விறைவன் திருமாலேயாவன் என்பதற்கு மூன்றுவிதகுற்றமுமற்ற தெய்வத்தமிழ் மறையினின்றும் மேற்கோள் காட்டி நிறுவுகின்றார். நிறுவவே, இறைவன் திருநாமம் திருமாலையடையும் என்னுமதுவே பரிமேலழகர் திருவுளமென்பதை ஐயமற அறிதல் கூடும். அறியப்படவே, திருவள் ளுவர் கருத்து யாது என்பதனைக் கூறலும் வேண்டுமோ? வேண்டா.

குன்றின் மேலிட்ட விளக்காய்க் கோதின்றித்தோன்றும். தோன்றவே, கடவுள் வாழ்த்தில், 5, 10 இத்திருக்குறள்களில் இறைவன் என்ற சொல்லால் திருமாலையே குறிக்கின்றார் ஆதல் வேண்டும்.

நாராயணன், வாசுதேவன், விட்டுணு, இறைவன் என்பன ஒரு பொருட்கிளவிகள் என முன்னர்க் கூறியதை நினைவுக் கடைப்பிடிக்க.

திருவள்ளுவர் இறைவன் சொல்லால் திருமாலையே குறிக்கின்றார் என்பதற்கும், அதற்குத்தகவே பரிமேலழகர் கூறுகின்றார் என்பதற்கும் வேறுமொரு காரணங் காட்டுவேன்.

புகழ், பொருள்சேர்புகழ், பொருள் சேராப் புகழென இருவகைப் படும். பொருள்சேர் புகழுடையோரே இறையோன். பொருள் சேராப் புகழுடையோர் அல்லாதார் என்ற பொருள் பயக்க, "இருள் சேர் இருவினையும் சேராவிறைவன், பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு" என்னும், விசேடவுரையில் "இறைமைக் குணங்களில் லராயினுரை உடையரெனக்கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள் சேராவாகலின், அவை முற்றுமுடைய இறைவன் புகழே பொருள்சேர் புகழெனப்பட்டது" என்றும், பேரின்பமாகிய வீட்டுலகு என்பதொன்றுண்டு. அது தாமரைக் கண்ணான் தன் மேன்மைத் தன்மை தோன்ற வீற்றிருக்கும் பரமபதமே யாம். அது அவனருளால் யானென தென்னும் செருக்கறுத்த ஞானிகள் அடையத்தக்கது. என்ற பொருட்சிறப்புகள் தோன்ற

> "தாம்வீழ்வார் மென்தோள் துயிலி னினிதெழல்
> தாமரைக் கண்ணா னுலகு" என்றும்,

அதன் விசேடவுரையில், "இந்திரனுலகென்று உரைப்பாருமுளர். தாமரைக் கண்ணான் என்பது அவனுக்குப் பெயரன்மையின், அஃது உரையன்மையறிக" எனமறுத்து, "தவயோகிகள் எய்தும் செங்கண் மால் உலகம்" என்றும் திருவள்ளுவரும் பரிமேலழகரும் கூறுகின் றார்கள். இவர்கள் இங்ஙனம் உறுதியாகக் கூறுதற்கு மேற்கோள்களை ஆராயின், இவை உண்மையுரைப்போர் கூற்றுகையாலே இவர்கள் கூறுவனவே மேற்கோள்கள் ஆம். மேலும் வடமொழி வேதங்களுமதன் முடிபுகளும் மேற்கோள்களாம். (தமிழ்நூற்கு வடநூல் மேற்கோள் கனைக் காட்டுதல் குற்றமன்றேவெனின், காட்டுதல் குற்றமாயின், அக்குற்றம் வேத இதிகாசங்களைத் திருக்குறட்கு உவமையாகக்காட்டிய பாரதம் பாடிய பெருந்தேவனார் முதலிய பொய்யடிமையில்லாப் புலவர்களையே சாரும் என்க.) ஆயினும், தமிழ்நூல் மேற்கோள் வேறுகக் கிடைப்பின் சாலச்சிறந்து தோன்றுமல்லவர? ஆதலின், அதனை நோக்குவோம்.

நோக்குமிடத்துப் பிற்காலத்து நூற்கள் மேற்கோள்களாகா. பண்டைப் பெருநூல்களே மேற்கோள்களாம். பண்டைப் பெருநூல்கள்

அனைத்திற்கும் தாயகமாய்த் தலைசிறந்து விளங்குவது; ஆசிரியர் தொல்காப்பியர் செய்த தொல்காப்பியம். ''தொல்காப்பியன்றன், ஆணைவழிகிற்றல் தமிழறிந்தோர்க்குக் கடனே'' என்பது பல்காப்பியம். தமிழுலகத்திற்கே தாயகமாய் முழுமுதலான அத் தொல்காப்பியத்தில், பொருளதிகாரத்தில், புறத்திணையியலில், 'பூவைகிலை' என்னும் துறைக்கு இலக்கணங்கூறுமிடத்து

''மாயோன்மேய மன் பெருஞ்சிறப்பின்
தாவா விழுப்புகழ் பூவை நிலையும்''

எனக் கூறுகின்றார். கூறுகின்ற இவ்வடிகளே மேற்கோள்களாம் என்க.

எங்ஙனமெனின், ''இருள் சேர்'' என்ற திருக்குறட்கும் அதன் உரைக்கும் ''மாயோன்மேய தாவா விழுப்புகழ்'' என்ற சொற்றொடரும், ''தாம் வீழ்வார்'' என்ற திருக்குறட்கும் உரைக்கும் ''மாயோன் மேயமன் பெருஞ்சிறப்பு'' என்ற சொற்றொடருமே யாம். ''மாயோன் மேய தாவா விழுப்புகழ்'' என்றார் ஆசிரியர் தொல்காப்பியர். ''இறைவன் பொருள் சேர்புகழ்'' என்றார் திருவள்ளுவர். ''மாயோன் மேயமன்பெருஞ் சிறப்பென்றார்'' முதற்குரவர். ''தாமரைக் கண்ணுலகு'' என்றார் அதனை அடியொற்றியவர்.

''தொல்காப்பியர்'' என்னும் பொருள்பற்றிய கட்டுரையில் இவ்வடிகளைப்பற்றித்தோன்றக் கூறுவன். இங்கு வேண்டுதலினையே கூறினேன். சிறப்பு வீடு (பரமபதம்) ''சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே'', ''சிறப்பென்னுஞ் செம்பொருள்'' என்பன காண்க.

தொல்காப்பியர், அழியாதநிலைபெற்ற பெருமை பொருந்திய வீட்டுலகத்தையுடையாரும், கெடாத சீரிய புகழுடையாரும் மாயோன் எனக்கூறியிருக்க பரமாசாரியன் பணித்த பணிக்கு மாறுக, சான்றோராகிய இப்பெரியார்களிருவரும் கூறுவார்களா! நடப்பார்களா! எண்ணுவதும் செய்வார்களா? செய்யாரே செய்யார்.

இதுகாறுங் கூறியவாற்றால் உண்மையை யுணர்த்துவதில் திருவள்ளுவரும் ஆழ்வார்களும் ஒத்த கருத்துடையோர் என்பதூஉம், பெருளுள் சேர்புகழுடையோனே இறைவன் என்பதூஉம், அத்திருப்பெயர் திருமாலியே குறிக்கு மென்பதூஉம், வீட்டுலகு திருமாலுக்கேயுரிய தென்பதூஉம் தெளிவாதல் காண்க.

இனி, நூலைப்பற்றிக் கூறுவேன். நூலில் வாய்மைப் பொருளை எங்ஙனம் வெளியிடுகின்றாரோவெனின், இவ்வுலகு பரவுலகு என உலகு இருவகைப்படும். இவ்வுலகு, அகார வாச்சியனும் ஆதி பகவனுமான இறைவனது 'உலகம் யாவையையும் தாமுள வாக்கலும் நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலாவலகிலா விளையாட்டி'ற்கு இருப்பிடம் ஆகவிருத்தலின் திருவிளையாடல் (லீலா விபூதி) எனப்படும். பரவுலகு,

'சிறுகா பெருகா கிலேயோ திரியா குறுகா நெடுகா குணம் வேறுபடா உறுகால் இளர்பூத மெலா முகிலும் மறுகாநெறி'யாக இருத்தலின் என்று முரிய விலேயாட்டு (நித்திய விபூதி) எனப்படும். இவ்விரண்டு உலகங்கட்கு முரியவனுதலின் இறையவன் 'உபய விபூதி நாயகன்' எனப்படுவன். இங்ஙனம் இருவிலேயாட்டிற்குந் தலேவன் தானே இறைவனுத்தக்கான் எனக்கூறவந்தவர், அதனே, உலகின்மேல்வைத்துக் கூறுமுகத்தான், அவனுடைய எவ்வுலகமும் தோன்றுதற்குரிய காரணத்தன்மையும், எவ்வுலகையும் காக்குந் தன்மையும், வீடுபேற்று நிலேமையும் வெளியிடுகின்றுர்.

இங்ஙனம் கூறுதலே ஆசிரியர் திருவள்ளுவனுர்க்குக் கருத்து என்பதை

> "சமயக் கணக்கர் மதிவழி கூருது
> உலகியல் கூறிப் பொருளிது வென்ற
> வள்ளுவன்"

என்னும் கல்லாடச் செய்யுளால் உணர்க. "காணப்பட்ட உலகாற் காணப்படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலின் 'ஆதி பகவன் முதற்றே யுலகு' என உலகின்மேல் வைத்துக் கூறினுர். கூறினுரேனும், உலகிற்கு முதல் ஆதி பகவன் என்பது கருத்தாகக் கொள்க" என்னும் வள்ளுவர் கருத்தைத் தெள்ளிது ணுர்த்தும் பரிமேலழகருரையும் இதனே வற்புறுத்தும். இக்நூலில் இவ்வாய்மைப் பொருள் இலே மறை காய்போல் அறிவுடையார் அறியுமாறு மறைய நிற்றலின் இந்நூலிற்குத் 'தமிழ் மறை'யெனப் பெயர் பெரியோர் கூறுவர்.

ஆயின், வைணவமும் ஒரு சமயமன்றே, 'சமயக் கணக்கர் மதிவழி கூறுது' என்றல் பொருத்தமா றென்னே யெனின், அங்கிங்கெனுதபடி எங்கு மாய்நின்ற அச்சுதனே அமலனே ஆனந்தனே முதற்பொருளே பொதுப்பொருளே இலேமறைகாய்போல் உணர்வுடையோர் உணருமாறு கூறுதலின், எப்பாலவரும் இயையமொழித்த இம்முப்பாலிற்கு "பொது மறை" எனப் பெயர் வழங்கலாயினர். வைணவம் என்பது ஒரு சாராருக் குரிய மதம் அன்று. எங்கும் நிறைந்துள்ள எல்லாருக்கும் பொதுவான ஒரு பொருளின் சம்பந்தம் என்பதே பொருள்; ஆதலின் இச்சம்பந்தம் எல்லார்க்கும் பொதுதானே.

பரமன் படைப்புத் தொட்டு, ஆசிரியர் தொல்காப்பியர் திருவள்ளுவர் போன்ற பரம வைதிகர்களாலே போற்றிக்காக்கப்பெற்று வந்ததனுல், 'பரம வைதிக சித்தாந்தம்' என்றும், எம்பெருமானுரால் (இராமாநுசர்) வளர்க்கப்பட்டதனுல் 'எம்பெருமானுர் தரிசனம்' என்றும் இதற்குப் பெயர்கள் வழங்குகின்றமை ஆன்ருர்கள் அறிவார்கள். இப்பெயர்களாலும், நின்றதெல்லாம் நெடுமாலென் றென்ருலும் இம்மால் சமயம் பொதுச் சமயம் என்பது போதரல் காண்க.

வள்ளுவர் கூறிய வாய்மை

“அந்தணர்மாட் டங்கிவைத்த மந்திரத்தை” என்பர் திருமங்கை மன்னன்.

> “எம்பெருமானூர் தரிசன மென்றேயிதற்கு
> நம்பெருமாள் பேரிட்டு நாட்டிவைத்தார் — அம்புவியோர்
> இந்தத் தரிசனத்தை எம்பெருமானூர் வளர்த்த
> அந்தச் செயலறிகைக் கா” என்பர் **வரவரமுனிகள்.**

ஆசிரியர் மேற்கூறியாங்குக் கூறியுள்ளதை நூலினின்றும் விளக்குவன்.

கடவுள் வாழ்த்தில்

> “அகர முதலவெழுத் தெல்லாம் மாதி
> பகவன் முதற்றே யுலகு”

என முன்னர் உலகைக்கூறிப் பின் பொருட்பாவில்

> “மடியிலா மன்னவனெய்து மடியளந்தான்
> தாஅயதெல்லா மொருங்கு”

இறைவன் தாவியளத்தலாகிய விளையாட்டுக் குரியவதனால் இறைவன் திருவிளையாடல் (லீலா விபூதி) எனப் பெயர் பெற்ற இவ்வுலகைக் கூறிப் பின் காமத்துப் பாலில்

> “தாம்வீழ்வார் மென்றோள் துயிலி னினிதுகொல்
> தாமரைக் கண்ணு னுலகு”

அழிதன்மாலியவான ஈண்டைச்சிற்றின்பத்திற்கு முற்றும் மறுதலையான ஆண்டைப் பேரின்ப மாதலின் என்றுமுள்ள திருவிளையாடல் (நித்திய விபூதி) எனப் பெயர் பெற்ற பரவுலகைக் கூறுகின்றார். இது தொகுத்து முடித்தல் இனி விரித்துக் கூறுவல்.

> “அகர முதலவெழுத் தெல்லா மாதி
> பகவன் முதற்றே யுலகு”

> “மார்வமென்பதோர் கோயிலமைத்து
> மாதவனென்பதோர் தெய்வத்தை நாட்டி
> ஆர்வமென்பதோர் பூவிடும்”

கம் பெரியார் தமது நூல் என்றும் நின்று நிலவுதல் வேண்டி, எக்கலன்களுமமைந்த வடிவையுடையவனுகிய இறைவனது முதல் திருகாம மாகிய “அகரத்தை” மங்களத்தின் பொருட்டு முதலில் அகரம் என்று தொடங்கினர்.

அகரம் இறைவனுக்கு முதற்பெயர் என்பதைக் கீழ்வருவனவற்றால் உணர்க. “அஇதி பகவதோ நாராயணஸ்ய பிரத மநாபிதரகம் கிந்நாம மங்களம்ந க்ருதம்” பதஞ்சலி கூற்று. அகரமானது பகவானுகிய நாராயணனது முதல் திருநாமம் ஆதலால், இந்நூலில் எம்மங்களத்தான்

சொல்லப்பட வில்லை என்பதாம். ''அகாரோ விஷ்ணு வாசக:'' என்பது வேதம். ஆசிரியர் கச்சிணர்க்கினியர் முதலிய ஆன்றோர்கள் கொள்கையும் இதுவே என்பதைப் பின்னர் கூறுகின்றேன்.

அகரத்தின் பொருள் பகவான் என்பதை ''ரஹஸ்யத்ரயம்'' என்னும் நூலில் பிள்ளைலோகாசார்யர் என்னும் பெரியார் மிக விரிவாக கூறிச் செல்வர் ஆண்டுக் காண்க.

இனி, முதல் திருக்குறள் இறைவனது எவ்வுலகுக்கும் காரணமாந் தன்மையைக் கூறுவதை விளக்குவன்.

அகரம் எழுத்துக்களனைத்திற்கும் பிறப்பிடமாகித் தான் ஒவ்வோர் எழுத்தினும் கலந்து நிற்குமாறு போல, ஆதி பகவன் தான் உலகங்கள் அனைத்தும் தோன்றுதற்குக் காரணனாகி, இயங்குதிணை, நிலைத்திணைகள் அனைத்தினும் உள்ளும் புறமும் உளன் என்பதாம். எனவே, அகரத்தியைபு இன்றேல் ஏனையெழுத்துக்கள் ஒலியாதவாறு போன்று அவனன்றி யோரணுவும் அசையாது என்னும் பொருள் தோன்றுதல் காண்க. அவன் என்பது, அகரத்தின் பொருளாகவுள்ள ஆதி பகவன் என்னும் பொருட்டு.

''மெய்யினியக்க மகரமொடு சிவணும்''

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தை அடியொற்றியது இச்செய்யுள்.

''இங்ஙனம் மெய்க்கண் அகரங்கலந்து நிற்குமாறு கூறினற்போலப் பதினேருயிர்க்கண்ணும் அகரங்கலந்து நிற்கும் என்பது ஆசிரியர் கூரராயினர், அங்கிலமை தமக்கே புலப்படுதலானும் பிறர்க்கு இவ்வாறு உணர்த்துதல் அரிதாகலானு மென்றுணர்க. இறைவன் இயங்குதிணைக் கண்ணும் நிலைத்திணைக் கண்ணும் பிறவற்றின் கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்பமுடிந்தாற்போல, அகரமும் உயிர்க்கண்ணும் தனிமெய்க்கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்குமென்பது சான்றோர்க் கெல்லாம் ஒப்ப முடிந்தது. 'அகர முதல்' என்னுங் குறளான் அகரமாகிய முதலியுடைய எழுத்துக்க ளெல்லாம், அதுபோல இறைவனுகிய முதலியுடைத்து உலகம் என வள்ளுவனுர் உவமை கூறியவற்றுனும், கண்ணன் எழுத்துக்களில் அகரமா கின்றேன் யானே எனக்கூறியவற்றுனும் பிற நூல்களானு முணர்க. இதனுன், உண்மைத் தன்மையும் சிறிது கூறினராயிற்று'' என்பது. கச்; உரை. யான் கூறுவனவற்றை யெல்லாம் கண்ணுடிபோல் தெரித்துக் காட்டும் இவ்வுரையின் பொருட் செறிவை ஆழ்ந்து ஆய்ந்து தேர்க்குக. இவ்வுரையை விரிப்பின் பெருகும். 'மறையாய் விரிந்ததுளக்கமில் விளக்கினை'' என்பது ஆசார்யஹ்ருதய சூத்திரம்.

''ஆதிபகவன்'' அரியையே காட்டுவதொன்று. ஆதிபகவன் இருபெயரொட்டுப் பண்புத்தொகை என்பர். பரி, இதனுல், அது

இரண்டு தனித்த பெயர்கள் என்பது போதரும். போதரவே, ஆதி யென்பதும் பகவன் என்பதும் ஒரு கடவுளையே குறித்த இரண்டு திருப் பெயர்கள் என்பது விளங்கும். இவற்றில் ''ஆதி'' என்பதனை ஆராய்வாம். சிவஞான சித்தியார் பரபக்கத்தில் பாஞ்சராத்திரி மதமறு தலையில், ''ஆதியாயருவுமாகி'' என்னும் முதற்பாட்டில் உரையில் 'பாஞ்ச ராத்திரீ! நீ உன் கர்த்தாவை ஆதியென்று கூறினாய் அங்ஙனம் ஆதியாமின் ஆதிக்கு முடிவுண்டாய்க் கர்த்தாவு மல்லனுவன்' என்று கூறப்பட்டது. இதனால், ஆதியென்னும் பெயர் அரிக்கேயுரியதென்றும், அவ்வாதி யென்னும் பெயரைத் தம் நூலில் முதலிற்கூறிய நம் பெரியார் பாஞ்சராத்திர ஆகமத்தைப் பின்பற்றிய பெரியார் என்பதும் விளங்குதல் காண்க. இதற்கு வேறு சான்று வேண்டா வன்றே!

இனி பகவன் என்பதை நோக்குவோம். இப்பகவனென்னும் சொல் முக்கியமாக வழிப்பது அவன் பக்கலிலே. அல்லாதார் பக்கல் ஔபசாரிகம் என்று பற்பல்வாயிலாகப்பற்பல் சான்றுகள் காட்டி முன்னோர்கள் நிறுவியுள்ளார்கள். ஈண்டும் சில குறிக்கின்றேன். அவன் அடியார்கள் **பாகவதர்கள்** என்றும், அவனைப் பற்றிக்கூறும் புராணத் திற்குப் பாகவதம் என்றும், அவன் ஓர் அவதாரச் சிறப்பில் கூறிய நூலிற்குப் பகவத்கீதை யென்றும், அவதாரச் சிறப்பிலே அவனுடன் பிறந்த தேவிக்குப் பகவதியென்றும் வழங்கும் வழக்குக்களைக்காண்க. மேலும், மநு, பதஞ்சலி, நச்சினார்க்கினியர் இவர்கட்கும் கருத்து இதுவேயென்பதை முன்னர்க் காட்டிய வற்றுட் காண்க.

''கணக்கறு நலத்தனனந்த மிலாதியம்பகவன்''

என்பது மகிழ்மாலையணிந்த **மாறன்றன்** வாய்மொழி.

இனிக், கடவுள் வாழ்த்திலுள்ள வேறு திருக்குறளைப் பற்றிக் கூறுவன்.

''பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வார்''

என்பதில் ''பொறிவாயிலைந்தவித்தான்'' என்பது ''இருஷிகேசன்'' என்னும் திருநாமத்தின் பொருளை யொத்திருக்கின்றது.

''மூவுலகு மீரடியால் முறைநிரம்பா வகைமுடியத்
தாவிய சேவடி சேப்பத் தம்பி யொடுங்கான் போந்து
சோவரணும் போர் மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
கேவகன் கீர்கேளாத செவியென்ன செவியே
திருமால் சீர்கேளாத செவியென்ன செவியே.

பெரியவனை மாயவனைப் பேருலகமெல்லாம்
விரிகமலவுந்தியுடை வெண்ணலனைக் கண்ணுங்
திருவடியும் கையுந் திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன கண்ணே

மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனூர் வஞ்சங்
கடந்தானே நூற்றவர்பால் காற்றிசையும் போற்றப்
படர்ந்தாண முழங் கப்பஞ்சவர்க் குத்தூது
கடந்தானேயேத்தாத நாவென்ன காவே
காராயணு வென்னு நாவென்ன காவே"

என்று இளங்கோவடிகள் தம்மனமுருகக் கற்றூர் கேட்டாருளமும் கரையப் பாடுதற்குக் காரணம்

"கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
தாளே வணங்காத் தலை"

என கம் பெரியார் பண்டே பரமன் பணித்த பணிவகையில் நின்றுபாடிய இத்திருப்பாடலன்றே ! மேலும், இத்திருப்பாடற்கு மேற்கூறிய சிலப்பதிகாரவடிகள் ஒரு சிறந்த பேருரை போன்று இதன் பொருளை ஐயந்திரிபறப் பரக்க விரித்து விளக்குதல் பார்ப்பவர்கள் உள்ளத்தை மிகுந்த மகிழ்ச்சியில் இழுத்துச்சென்று மூழ்கச்செய்வதாம்.

இனி, பொருட்பாலிற் கூறும் இறைவனது உலகங்காக்குந் தன்மையைப்பற்றிக் கூறுவேன்.

"மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
தாஅய தெல்லா மொருங்கு" (மடியின்மை 10)

இத்திருக்குறளால், பெரிய திருமந்திரத்தின் பொருளை வெளியிட்டு உலகங்காக்குந் தன்மையை எடுத்துக் காட்டுகிறார். எங்ஙனமென்னில், மடியிலாதவரான் எல்லாவுலகங்களையும் ஒருங்கே எய்தும் என்பதே ஈண்டுக் கூறவேண்டிய தொரு செய்தி அதற்கு உலக முழுதையும் எய்தும் என்றே கூறிவிட்டுச் செல்லலாம். அங்ஙனங் கூறாது, இவ்வரலாற்றைக்கொண்டு கூறற்கு ஏதாவதொரு கருத்து இருத்தல் வேண்டும். மேலும், "அடியளந்தான் தாயதெல்லாமொருங்கு "என இத்துணை சொற்களால் கூறற்குக் கருத்து மொன்றிருத்தல் வேண்டும். அதிலும், இறைவனுக்குரிய பலபெயர்களில் ஏதாவதொன்றையிட்டு அவனை "தாயதெல்லாமொருங்கு" என்று கூறாமல், "அடியளந்தான் தாயது" என அடியின்மேலிட்டு அடியின் தொழிலால் பெயரை யமைத்தற்குக் கருத்தும் ஒன்றிருத்தல் வேண்டும். பயன் ஒரு சிறிதுமின்றி இத்துணை சொற்களால் ஒரு பொருளைக்கூறும் வழக்கமும், காரணம் இன்றி வரலாற்றைக்கூறும் கொள்கையும் தெய்வப்புலமைத் திருவள்ளுவனார்க்கின்றென்பதை அவர்தம் பொய்யில் பாடலை முற்றும் கற்றுணர்ந்தார் தெளிய அறிந்த தொன்று.

ஆதலின், முன்னம் அக்கருத்துக்கள் யாவை ? அவற்றை யறியும் வண்ணம் யாங்ஙனம் ! எனின்,

பூர்வாசாரியர்கள் பரம கிருபையினால் அருளிச்செய்த பேருரைகளில், சிலபகுதிகளை ஈண்டுக் குறிக்கின்றேன், அவையே, தெய்வப்

வள்ளுவர் கூறிய வாய்மை

புலமைத் திருவள்ளுவனுரது உள்ளக் கருத்துக்களும், அவற்றை காம் உணர்வதற்குப் போதியனவும் ஆம். இவற்றை யுணரவே அவனுடைய உலகங்காக்குந்தன்மை தானே விளங்கும்.

மேலே யான் எழுப்பிய வினுக்களுக்கு இனி கூறும் உரைப்பகுதிகளே முறையே விடையாகக் கொள்க.

"விழுகனை மகாபலிக்கும் ருசியைப் பிறப்பிக்கும் ஸௌந்தர் யத்தையுடையவனெயொழிய ஆஸ்ரயணீயருண்டோ? தன்னுடை மையை லபிக்கைக்குத்தான் அர்த்தியாய்ச்செல்லும் சேலவானெயொழிய ஆஸ்ரயணீயருண்டோ? அதிதிக்ரியமான விக்ரஹத்தைத் துஷ்பிர கிருதிகள் கண்ணுக்கு மகப்பட விஷயமாக்கும் சுலபனெயொழிய ஆஸ்ரணீயருண்டோ? சதுர்த்தசபுவனத்தையமளந்த சர்வஸ்மாத் பரனெயொழிய ஆஸ்ரணீயருண்டோ வென்கிறார்"

"நாராயணசப்தார்த்தத்தை நாராயணனுவாகமாகிற ஓலைப்புறத்தே கேட்டுப் போகாதே கண்ணுலே கண்டநுபவிக்கலாம்படி ஸ்ரீவாமனு யவதரித்துத் திருவுலகளந்தபடியை அநுபவிக்கிறார். சேஷசேஷித்வ சம்பந்தமிறே நாராயணசப்தார்த்தமாகிறது. ஜகத்காரணத்வத் தாலும் ஈஸ்வரனேடு இவ்வர்த்தாவுக்குண்டான சம்பந்தத்தையிறே சொல்லுகிறது. 'காண்மின்கள் உலகீர் என்று கண்முகப்பே நிமிர்ந்த' என்று சர்வலோகமும் கண்ணுலே காணலாம் படியிறே திருவுலகளந் தருளினது. ஆகையாலே நாராயணசப்தார்த்தமான த்ரை விக்ரமாப தானத்தை யநுபவிக்கிறார். யக்ஞவாடத்தே சென்ற படியையும் அர்த் தித்த படியையும் சொல்லாதே எல்லார் தலைகளிலும் திருவடிகளை வைத்த இவ்வம்சத்தைச் சொல்லுகையாலே சேஷ சேஷித்வ சம்பந் தத்தையனுபவிக்கிறார் என்று தோற்றுகிறதிறே. (திருநெடுந்தா. பெரியவாச். வியாக்)

"அடியளந்தான் தாயது"

"குணுகுண நிரூபணம் பண்ணுதே சர்வ பிராணிகள் பக்கலிலும் திருவடிகளை வைத்தபடி. வியாப்தியில் வரைதலில்லாதாப்போலே யாய்த்திதுவும், வியாப்திக்குக் கருத்து—இவற்றினுடைய சத்தை யுண்டாக்குகைக்காக இங்கு இவற்றோட்டைச் சம்பந்தம் தனக்குத் தாரக மாக வீறே நிலைத்திருப்பது. இவற்றுக்கு அபேக்ஷிதமின்றிக்கே யிருக்கச் செய்தேயும், உறங்குகிற பிரஜையையணைத்துக்கொண்டு கிடக்கும் மாதாவைப்போலே இவற்றோட்டை ஸ்பர்ஸம் தனக்குத் தானுகக் கிருனிறே. (திருப்பாவை. பெரி. வியாக்)

"அடியளந்தான்"

"காய்ச்சிமார்தொடும் போதும் பூத்தொடுமாலே கூடித்தொடும் திருவடிகளைக்கொண்டுகிடீர் காடும் ஓடையும் அளந்து கொண்டது

என்று ஆச்சர்யப்படுகின்றார். வசிஷ்டசண்டாள விபாகமற எல்லார் தலையிலும் ஒக்கத்திருவடியை வைத்தான். இவர்கள் நன்மை தீமை பாராதே தன்னுடைய சுத்தியே இவர்களுக்குமாம்படி பண்ணினன். (திருவாய். நம்பிள் ஈடு) என்பன காண்க.

இனி, "உலகங்கொண்ட வடியனதிவருமேனிமாயத்தனகிலும் கொடியவென்னெஞ்சமவனென்றே கிடக்கும்" என்றும், "அன்றொரு கால் வையமளந்தபிரான் வாரானென்றொன்றொருகால் சொல்லாதலகு" என்றுமிறே யிவர் (நம்மாழ்வார்) கிடப்பது. திருமங்கையாழ்வாரும் "முன்னங்குறளுருவாய் மூவடி மண்கொண்டளந்த, மன்னன் சரிதைக்கே மாலாகிப் பொன்பயக்தேன்" என்று இவர்களெல்லாரு மீடுபடுவதிச் செயலுக்கிறே" (நம்பிள்ளை ஈடு) என்கிறபடியே பெரியார் களனைவரும் ஈடுபடுவதிச் செயலுக்காதலின், அங்ஙனம் ஈடுபட்ட நம் பெருந்தகையாரும், அண்டமுழுற்று மகண்டமு மேனுணர்ண்டவன் ஆலமர் வித்தினருங் குறளாகிச் செய்த அருஞ்செயலில் தமக்குள்ள ஈடுபாட்டினுலும் செய்கன்றி மறவாமையினுலும் பெயரும் பொருளும் பொருந்தும் பொருத்தத்தினுலும், சாற்றிய அருமறையும் பல்கலையும் போற்றியுரைத்த பொருளெல்லாந்தனக்குள் அடக்கிக்கொண்டிருக் கின்ற தமது நூலுக்கு, அத்தோற்றத்தின் பெயராகிய "குறள்" என்னுமதனையே வைத்தனர் என்று கூறினுமிழுக்காகாது. சாலப் பொருந்துவதொன்று. அஃது அருங்குறள் இது திருக்குறள்

திருவள்ளுவமாலையில் பரணர் பாடிய 6-ம் பாடலும் பொன் முடியார் புகன்ற 14-ம் செய்யுளும் இக்கருத்தையே இயம்புவன.

வேதப் பொருளை விரகால் விரித்துலகோர்
ஓதத் தமிழாலுறை செய்தார்—ஆதலால்,
உள்ளுக குள்ளும் பொருளெல்லா முண்டென்ப
வள்ளுவர் வாய்மொழி மாட்டு (செயலூர்க் கொடுங் செக்கண்ணனூர் 42)

வேதப் பொருள்—வேதத்தால் சொல்லப்படுபவனுன திரு நாராயணன்.

இனி, காமத்துப்பாலில் வீடுபேற்றைப் பற்றிக் கூறுவதை விளக்குவன்.

உயிர் இறைவன், கல்வினை தீவினை, பிறப்பு இறப்பு, இன்பம் துன்பம், துறக்கம் நரகம, இம்மை மறுமை என ஒன்றுக்கொன்று முற்றும் முரணன உடன்பாடு எதிர் மறைச் சொற்களால் இவ்வுலகில் எடுத்தோதுவதைப் போன்று, இன்பத்தையும், சிற்றின்பம் பேரின்பம் என இரண்டாகப் பிரிப்பர். அவற்றுள் சிற்றின்பமாவது இவ்வுலகின் பங்களும் துறக்க இன்பமுமாம். இவை சிறிது பொழுதிருந்து அழியக் கூடியவாதலின் சிற்றின்பம் எனப்பட்டது. பேரின்பமாவது பரவுலகில் இறைவனேடு கூடி ஓழிவில் காலமெல்லா முடனுய்மன்னி வழுவிலா வடிமை செயுமதனுலுண்டாகுமின்பம். இஃது அழியாத இன்பமாதலின்

வள்ளுவர் கூறிய வரம்மை

இடையீடில்லாவின்பம் என்றும், எல்லையற்றதாதலின் ஒரு தன்மைத்தாய வின்பம் என்றும் வழங்கப்படும். இடையீடில்லாத இன்பமென்பது அஷ்டாதசரஹஸ்ய (18 நூல்) ங்களிலும் திருவாய்மொழிக்கு நம்பிள்ளைசெய்த ஈட்டிலும், அதனுரையிலும் கண்டதொன்று.

காமத்துப்பாலில் ‘‘தாம் வீழ்வார் மென்றோள் துயிலினினிது கொல் தாமரைக் கண்ணுலகு’’ என்ற செய்யுளை நோக்குவோம்.

இச்செய்யுள் இடையருதவின்பத்திற்குரிய நீ இச்சிற்றின்பத்திற்கு இன்னியாதல் தகாது என்ற பாங்கற்கு, தலைப்படு சால்பினுக்குந்தன் நேர் சித்தம் பித்தனென்றும் மலைத்தறி வாரில்லை யாரையுந்தேற்றுவன் என்னுந்தகைய தலைவன், சிறுமான்விழியரலழிவற்று மயங்கியவனு தலின், இக்கொவ்வைச் செவ்வாய்க் கொடியிடை தோள் புணர்ந்தாற் புணருந்தொறும் பின்னும் புதிதாய் வளர்கின்ற இப்பெரும் போகத் திற்கு நீ கூறும் இடையரு வின்பம் இனிது கொல்? என்று கூறுவ தாகக் கூறுகின்றது.

இங்கு, அத்தலைவன் மறுத்த பேரின்பத்தைத் ‘‘தாமரைக்கண்ணு னுலகு’’ என்கின்றனர். கம் பெரியார். எனவே, கமலக்கண்ணனுலகே இடையருவின்ப வீடெனவும், இடையீடில்லாவின்ப வீட்டையுடை யோன் கமலக் கண்ணனுன திரு நாராயணன் எனவும் பெறப்பட்ட வாறு காண்க. தாமரைக்கண்ணன் என்பது ‘புண்டரீக மிவாக்ஷிணீ’ என்னும் வேதத்தின்படி பிறிதினியைபு நீக்கிய அடைமொழிப்பெயராம். ‘‘புருஷ: புண்டரீகாக்ஷ:’’ என்பது உப பிரும்மணம்.

ஆசிரியர் தொல்காப்பியனர்

‘‘வினைபயன் மெய்யுரு வென்ற நான்கே
வகைபெற வந்த வுவமத் தோற்றம்’’
‘‘விரவியும் வருஉ மாபின வென்ப’’
‘‘உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங்காலே’’

என்பனவாதியாக உவமைக்கு இலக்கணங் கூறுமிடத்து, உவமானத் தைக் காட்டிலும் உவமேயம் உயர்ந்தேயிருத்தல் வேண்டும். தாழ்ந் திருத்தல் தவறு என்று விதிவிதிக்கின்றார். ஆதலின், தாமரைக் கண்ணனுலகிற்கு மேல் பேரின்பத்தை யடைதற்குரிய உலகம் பிறி தொன்றுளது. எனக் கூறுவேம் ஆயின், ஆசிரியர் தொல்காப்பியனர் விதித்த விதிக்கு முரணுவதோடு யாதொரு குற்றமுமின்றியுயர்ந்த இந்நூலிற்கும் குற்றத்தையுண்டாக்கினேம் ஆவேம் என்க.

இங்குக் கூறியவாற்றுல் எல்லாவுலகிற்கும் மேலாய தாமரைக் கண்ணனுலகே இடையீடில்லா வின்பத்தரும் இன்பவுலகு எனப் பெறப் பட்டதாதலின்,

‘‘மலர்மிசை யேகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்’’

3.

''சிறப்பீனும் செல்வமுமீனும் அறத்தினூஉங்
காக்க மெவனே உயிர்க்கு'' 31.

''அருளிலார்க் கவ்வுலக மில்லைப் பொருளிலார்க்
கிவ்வுலக மில்லாகியாங்கு'' 247.

''யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
கூயர்ந்த உலகம் புகும்'' 346.

''ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய தடைத்து'' 353.

என்னுமிடங்களில் நிலமிசை, சிறப்பு, அவ்வுலகம், உயர்ந்தவுலகம், வானம் என்ற சொற்களும், பரிமேலழகர் அவ்வவ் விடங்களில் எல்லா வுலகிற்கும் மேலாய வீட்டுலகு என்றும், நிரதிசயவின்பம் என்றும் எழுதிச்செல்லும் உரைகளும் தாமரைக்கண்ணனுலகையே குறிப்பன வென்க.

''மாயோன்மேய மன்பெருஞ்சிறப்பு'' திருமால் எழுந்தருளி யிருக்கின்ற நிலைபெற்ற அழியாத எல்லாப் பேற்றினுஞ் சிறந்த இடை யீடில்லாவின்பமாகிய வீட்டுலகு என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுவதனை முன்னர்க் காட்டியுளேன். ஆசிரியர் தொல்காப்பியனார் அடியறிவார் நம் தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் ஒருவரேயிதே. இங்ஙனமறிந்த பெருந்தகையார் ஆதலின், பண்டைப் பொய்யடிமை யில்லாப் புலவரனைவரும் ஒருமுகமாகப் புலவர் பெருமானையும் பொய் யில்பாடலையும் போற்றிப் புகழ்வாராயினர். அங்ஙன் அமையாது, தத்தம் நூல்களிலும் இடையிடையே இப்பெரியயில் பாடல்களையும் இதன் கருத்துக்களையும் அமைத்துப் பேசுவாராயினர்.

''அறனறிந்தேம் ஆன்றபொருளறிந்தேம் இன்பின்
திறனறிந்தேம் வீடு தெளிந்தேம்—மறனெறிந்த
வாளார் நெடுமாற வள்ளுவனார் தம்வாயால்
கேளாத னெல்லாம் கேட்டு'' திருவள்ளு 50

பரம்பொருளையறிதற்குரிய உபாயங்களை யறிந்தேம். யாவையும் எவரும் தானாய் எங்கும் நிறைந்திருக்கின்ற (காண்மின்களுலகீரென்று கண்முகப்பேகியிரிர்த்து எல்லார் தலையிலும் ஒக்கத் திருவடியை வைத்துக் காட்டின) பரமனது வடிவம், திருவிளையாடல் முதலியவைகளையும் அறிந்தேம். இற்றின்பம் பேரின்பமென இரு கூறுகப்பிரித்துக்கூறப் படுகின்ற இன்பத்தின் வகையை யறிந்தேம். அங்ஙனம் அவ்வின்பத்தை யறிந்த மாத்திரையான் பேரின்பமாகிய வீடு, தாமரைக்கண்ணுலகு என்று தெளிந்தேம் மாற! இதற்குமுன் கேட்கப்பட்டிலாதவையெல்லாம் வள்ளுவனார் தம் வாயால் கேட்டு எனத் திருக்குறளால் பண்டைப் பெருமக்கள் தாம் அறிந்த பொருள்களனைத்தையும் தொகுத்துக், கொடி ஞாழல் மணிப்பூதனார் என்னும் புலவர், பாடியிருப்பதையும் காண்க.

ஆக, இதுகாறும் கூறியவாற்றால், ''காருணிகனை ஸர்வேஸ்வரன் அறிவிலாமனிசர் உணர்வெனும் சுடர்விளக்கேற்றி பிறங்கிருள் நீங்கி மேலிருந்த கந்தா வேதவிளக்கைக்கண்டு கல்லதும் தியதும் அறிவதற்கு மறையாய் விரிந்ததுளக்கமில் விளக்கில் கொளுத்தின பெருவிளக்காகிய கலிகளை நீர்மையினால் அருள் செய்தான்.'' அங்ஙனம் அருளிச்செய்தாற் போலவே தெய்வப்புலமைத் திருவள்ளுவரும் தமது நூலை அருளிச் செய்தாரென்பதுஉம், அதனால், வேதம் இதிகாசம் முதலிய நூல்களையும் கீதை முதலிய நூல்களையும் இந்நூல் ஒக்குமென்பதூஉம், படைத்தல், காத்தல், வீடு பேறு முதலியவற்றிற்குத் தானுந்தன்மையனுவான் அகார வாச்சியனும் ஆதிபகவனும் இறைவனும் தாமரைக் கண்ணனும் ஆன திருமந் நாராயணனே யாவன் என்பதூஉம், பற்றிலார்பற்ற நின்ற அப்பரமனே யானென தென்னுஞ் செருக் கறுத்த நம் பெரியாருக்கு வழிபடு தெய்வமாவான் என்பதூஉம் மலையின் மேலிட்ட விளக்கைப் போன்று தோன்றுதல் காண்க.

சிவ வழிபாட்டின் தொன்மை

கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் M. A., M. L.,
தமிழ்ப்போராசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

இந்திய சமய வாழ்க்கையில் சிவ வழிபாடும், சத்தி வழிபாடும் ஆற்றல் மிகுந்த பகுதிகளா மென்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். சில ஆண்டு களுக்கு முன் பஞ்சாபிலும், சிந்துவிலும், ஹாரப்பா, மொஹொஞ்சதாரோ என்னுமிடங்களில் புதையுண்ட நகரங்கள் புலப்படுத்தப்பட்டன. அங்கே வாழ்ந்த மக்களின் கடவுட் கொள்கையைப் பற்றிப் பேசிய தொல் புதை பொருளிலாக்காத் தலைவர் அங்கு வாழ்ந்த மக்களின் சமயத்தைப் பற்றிக் கூறியது வருமாறு:—

'Taken as a whole their religion is so characteristically Indian as hardly to be distinguishable from still living Hindusim or at least from that aspect of it which is bound up with animism and cults of Siva and the mother Goddess still the two most potent forces in popular worship.'

இதன் பொருளாவது :—'பிண்டமாக பார்க்கும்போது அவர்கள் சமயம் இப்பொழுது வழக்கிலுள்ள இந்து மதத்தினின்று பிரித்தறிய முடியாதபடி தெளிவான இந்தியச் சார்புடையதாக விருக்கின்றது. ஆவி வணக்கமும், சிவ வழிபாடும், அன்னை தெய்வத்தின் வழிபாடும் கலந்த பகுதியினின்று அதனைப் பிரித்தறியவேயியலாது. சிவ, அன்னை வழிபாடுகளாகிய இரண்டும் பொதுமக்கள் வழிபாட்டில் இன்னும் மிக்க உரமான சத்திகளாக விளங்குகின்றன.' சக்திவழிபாடு சிவ வழிபாட்டின் ஒரு பகுதியா மென்பதை டாக்டர், ஜி. யு. போப் முதலிய அறிஞர்கள் கன்கு விளக்கியிருக்கின்றனர். பண்டை நூல்களாலும் அது இனிது புலனும். கொற்றவை, காளி, உமை என்னும் தெய்வங்களுக்கு நாயகன் சிவபெருமான் என்பது சங்கநூல்களுள் பேசப்படுகின்றது.

சிவ வழிபாட்டின் தோன்மை

ஹாரப்பா, மொஹெஞ்சதாரோ என்னுமிடங்களிற் கண்டுபிடித்த அதிசயங்களுள் மிகச்சிறந்தது சிவ நெறியின் தொன்மையாகும். சர். ஜான் மார்ஷல் என்பவர் அதனைத் தெளிவாகக் கூறியுள்ளார்.

அவர் கூறுவதாவது:—

'Among the many revelations that Mohonjadaro and Harappa had in store for us none perhaps is more remarkable than this discovery that Saivaism has a history going back to the chalcolithic age or perhaps even further still and that it thus takes place as the most ancient living faith in the world.'

இதன்கண் உலகத்தில் நிலைபெற்றுள்ள சமயங்களெல்லாவற்றிற்கும் பழமையான சமயம் சைவமென்று அறிய வந்தமை பாராட்டப் படுகின்றது. புதையுண்ட நகரங்களின் நாகரிகம் கி. மு. ஐயாயிரம் ஆண்டிற்கு முன் நிலவியதெனக்கூறப்படுகின்றது. ஆரியர் இக்காட்டிற்கு வெளிகாட்டிலிருந்து வந்தவரென்று கருதிய நிலகர் அவர்கட்குக்கூறும் தொன்மை கி. மு. காலாயிர மாண்டிற்கு முற்பட்டதென்றனர். பிறர் கி. மு. இரண்டாயிர மாண்டிற்கு முற்பட்டதென்பர். தமிழர்கள் வெளி நாட்டிலிருந்து இவண் வந்தாகக் கூறும் கருத்தினர் சிலர் அவர்கள் கி. மு. எண்ணாயிர மாண்டிற்கு முன் வந்தனரென்பர். ஆசிரியர், வி. அரங்காச்சாரியார் என்பவர் தமது இந்திய சரித்திரநூலில் அவ்வாறு கூறியுள்ளார். பன்னெடுங்காலமாக இந்திய நாட்டிலேயே பஞ்சநதம் மாகாணத்தில் ஆரியர் தோன்றி வாழ்ந்தனர் என்னும் கருத்தினை வற்புறுத்தும் அபினஸ் சந்திர தாஸ் என்பவர் தாம் எழுதிய இருக்குவேத இந்தியா என்னும் நூலில் விந்தியத்திற்குத் தெற்கில் இருந்த நாட்டில் தமிழர்கள் தோன்றி வாழ்ந்தனர் என்றும், இருவகை மக்களினத்தார்க்கு மிடையிற் கடல் இருந்த தென்றும் பணியர் என்னும் வர்த்தகர்கள் அங்கு மிங்கும் போக்குவரவு செய்தனரென்றும் இயம்பினர். இப் பணியர் என்பாரை ஆரியரென்று அபினஸ்சந்திர தாஸரும், தமிழரென்று காலஞ்சென்ற பி. டி. சீனிவாச ஐங்கார் அவர்களும் செப்பினர். ஆராய்ந்து பார்க்குமிடத்துப் பணியர் என்பார் தமிழினத்தாரென்பது தெளிவாகும். பண்டைக் காலத்தில் தமிழ் மக்களே கடல் வணிகத்துச் சிறந்து விளங்கினர். காலஞ்சென்ற வரலாற்று ஆசிரியர் டி. ஆர். சேஷ ஐயங்கார், திராவிட இந்தியா என்ற நூலில் கூறுவது இவ்விடத்தில் உற்று நோக்கத்தக்கதாகும்.

'The existence in the Tamil language of pure Tamil words like kadal, paravai, punari, arkali, and munnir, all of which refer to the sea and the words like kalam, marakalam, mithavai and kappal, which are also original Tamil words and which all denote a ship, proves that the Tamils in the earliest times were a sea-faring people.'

அஃதாவது, 'தமிழ் மொழியில் வழக்காற்றிலுள்ள தூய தமிழ்ச் சொற்களாகிய கடலைக் குறிக்கும் கடல், பரவை, புணரி, ஆர்கலி, முந்நீர் ஆகியவைகளும், கப்பலைக் குறிக்கும் கலம், மரக்கலம், மிதவை, கப்பல் ஆகியவைகளும் பண்டைத் தமிழர்கள் கடற்செலவிற் சிறந்தவர்க ளென்பதைத் தெளிவுபடுத்துகின்றன.'

பணியர் என்ற சொல் வணிகரென்ற தமிழ்ச் சொல்லின் திரிபாகும். அச்சொல்லிலுள்ள ணகரம் தமிழ் மொழிக்குரிய வொலியாகும். ஆரியத்தில் அதுமுதலிலில்லை. அபிஞஸ்சந்திரதாஸ கூறுகிறபடி ஆரியர் இந்திய நாட்டிலிருந்து மேலை நாட்டிற்குச் சென்றுரென்ரூல் ஆரியச் சார்பான பாரசீகம், கிரீக், இலத்தீன் முதலிய மொழிகளில் ணகரம் காணப்படல் வேண்டும். அது காணப்படாமையாலும், தமிழ்ச் சார்புடைய தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய மொழிகளில் காணப்படுவதாலும் அது தமிழொலி யென்பதே தேற்றம். அவ்வாறு ளகரம், சகரம் முதலிய வெழுத்துக்களுமாம். சிவம் என்ற சொல்லில் உள்ள சகர மெய் தமிழோசையாகும். எனவே பணியர் என்பார் தமிழினத்தவராய் ஆரியநாடு சென்று அங்கே தங்கியவ ரென்பது போதரும். அன்னோர் வழிபாடு சிவவழிபாடு என்பது இருக்குவேத ஆராய்ச்சியாலும் தெளியப்படும். இருக்கு வேதத்துள் சிவலிங்க வழிபாட்டை இகழ்ந்து இந்திர வழிபாட்டை உயர்த்திக்கூறும் பகுதிகள் உள்ளன.

தமிழர் கன்னிமுனைக்குத் தெற்கேயிருந்த கடல்கொண்ட நாட்டில் இருந்து இவண் போந்தவரென்பது முச்சங்க வரலாற்றினால் தெளியப்படும். கடல்கொண்ட நாட்டைப் பற்றி ஆராய்ச்சி செய்த ஸ்காட் எலியட் என்பவர் அங்கிருந்த பண்டை மக்கள் பதினான்கு அல்லது பதினேந்தடி உயரமுள்ளவராய்த் தலையின் முதற்பாகத்தில் நெற்றிக்கண் போன்ற தசைத்திரளுள்ளவரா யிருந்தன ரென்பர். முன்னோர் வழிபாட்டினின்று சமயம் கிளைத்த தென்பது வரலாற்று நூலார் கருத்து. ஆதலின் அக்காட்டினரே முக்கட் கடவுள் வழிபாட்டினைத் தோற்றுவித்தவ ரென்னலாம். புறநானூற்றினுள் பண்டைப் பாண்டிய மன்னனெருவனைப் புகழ்ந்து கூறும்பாடலில் 'முக்கட் செல்வர் நகர் வலம் செயற்கே நின்குடை பணியும்' என்பது பேசப்படுதலின் அக்கடவுளே பண்டைத் தமிழ் மக்களால் முதற் பெருந் தெய்வமாக வழிபடப்பட்டமை ஊகிக்கப்படும். மொஹொஞ்ச தாரோவில் கண்டெடுக்கப்பட்ட சிலைகளில் முக்கண்ணும், மூன்று முகமுமுடைய சிவவடிவம் சிறந்து விளங்கிற்று. ஆதலின் தமிழருடைய சிவவழிபாடு புதையுண்ட நகரங்களிற் பயின்றுவந்ததென்பது போதரும்.

சிவபிரானுக்குச் சிறந்த ஆர்கியாகவுள்ளது காளையாகும். அதன் வடிவமே கொடியிலு மெழுதப்படும். புதையுண்ட நகரங்களிற் காணப்பட்ட சில முத்திரைகளிற் காளை வடிவம் பொறிக்கப்பட்டுள்ளது. பாணைகளின் மீதும் சிறு கொம்புடைய காளை வடிவம் பொதுவாகக்

காணப்படுவதொன்றாகும். அழித்தற் கடவுளின் ஊர்தியாக அக்காளை நியமைப்பு ஏற்பட்டிருக்கின்றதென்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். வீரசயரட்டுச் சமான்களிலும் காளை வடிவம் வரையப்பட்டுள்ளது. இந்திய ஐரோப்பிய இனங்களின் தோற்றத்தைப்பற்றி ஆய்ந்தவோர் அறிஞர் தமிழர்க்கு முதன்மையான பிராணி காளையென்றும், ஆரியர்க்கு முதன்மையான பிராணி குதிரை யென்றும் தெரிவித்தனர். ஆதலின் காளையை ஊர்தியாகக் கொண்ட கடவுள் வணக்கம் ஆதியில் தமிழர்க்குரியதென்று ஊகிக்க இடமுண்டு.

டி. ஆர். சேஷ ஐயங்கார் கூறுவதாவது:—

'The worship of Siva was prevalent among the mountain tribes long before the advent of the Aryas into the South.

டாக்டர். சிலேட்டர், காளி, சிவம், விஷ்ணு முதலிய தெய்வங்கள் திராவிடருக்கு உரியவென்று கூறுகின்றார்.

டாக்டர். ஸ்டீவன்சன் என்பவர் சொல்லுவதாவது:—

Siva was the Tamilian God, and was worshipped in two forms one as a spiritual object of meditation and the other as a material symbol or linga to represent the invisible to the visible eyes. என்பது.

சிவம் என்ற சொல் தமிழ்ச் சொல்லென்று டாக்டர். கிரையர்சன் (Dr. Grierson) தமது பெருநூலுட் கூறியுள்ளார். அது வடமொழியிற் புகுந்து சைவம் என்ற சொல்லிற்கு அடிப்படையாயிற்று. அது செம்மையென்ற பண்புச் சொல்லடியாகப் பிறந்தது. செம்மையென்பது செந்நிறத்தையும், நேர்மை, நன்மை, மங்களம் என்ற பண்புகளையுங் குறிக்கும். சிவப்பு என்னும் சொல் செம்மையடியாகப் பிறந்ததென்பது தெளிவு. அதுபோல நேர்மை, நன்மை, மங்களம் என்பவற்றைக் குறிக்கும். சிவம் என்ற சொல்லும் செம்மையடியாகப் பிறந்ததே. சிந்தாமணியுள் சிவம்புரிநெறி யென்ற சொற்றொடர் அப்பொருளிலே வந்துள்ளமை காண்க. பேரின்ப வீடு என்னும் பொருளில் சிவகதியென்ற சொற்றொடர் சிந்தாமணியாரால் வழங்கப்பட்டுள்ளது.

சிவவழிபாடு முதலில் ஆரியாவிகழப்பட்டு காலடைவில் ஆரிய நூலில் முதன்மை பெற்றது. உருத்திரன் என்ற வடசொல் செம்மையன் என்று பொருள்படும். இருக்குவேத முதல் மண்டிலத்தில் உருத்திரன் கடவுளரில் முதன்மையானவனென்றும், பொன்னைப்போல்விளங்குபவன் என்றும், எல்லாவுயிர்களுக்கும் இரங்குபவனென்றும், சிறந்த வைத்திய னென்றுங் கூறப்பட்டுள்ளது. இருக்குவேத ஐந்தாவது மண்டிலத்தில் திரிபுமெரித்த கடவுளே உலகிற்குத் தந்தையென்பது பேசப்படுகின்றது. பத்தாம் மண்டிலத்தில் அவன் நஞ்சுண்டமை தெரிக்கப்படுகிறது. யசுர் வேதத்தில் சதருத்ரீயம் என்னும் பகுதியில் உருத்திரனது பெருமை

விரிவாக விளக்கப்பட்டுள்ளது. சாம வேதத்துள் தேவர்களுக்குள் உருத்திரன் அத்தணன் என்று கூறப்படுகிறது. அதர்வ வேதத்தில் சிவப் பிழம்பின் வழிபாடும் திரிபுர சங்காரமும் பேசப்படுகின்றன.

பிராமணங்களுட் பழையதான ஐதரேய பிராமணத்துள் பிரஜாபதியை உருத்திரன், தனது மூவிலை வேலால் ஒறுத்தான் என்று பேசப்படுகிறது. கௌஷீதகி பிராமணத்தில் சிவபிரானது பவன் முதலிய எட்டு நாமங்கள் கூறப்படுகின்றன. சதபத பிராமணத்துள் தக்கன் யாகத்தில் சிவபிரான் தேவர்களைத் தண்டித்த செய்தி காணப் படுகின்றது.

வால்மீகி இராமாயணத்தில் தேவர்கள் சிவபிரானை வழிபட்டு முருகனைத் தமது படைத் தலைவனைப் பெற்றுக் கொண்ட வரலாறும், கங்கையைத் தாங்கும் பொருட்டுப் பகீரதன் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்த வரலாறும் கூறப்படுகின்றன. நஞ்சுண்டமையும், தக்கன் வேள்வி யழித்தமையும் இராமாயணத்தில் பகரப்பட்டுள்ளது. மாபாரதத்தில் சிவபெருமான்மாட்டுப் பாசுபதம் பெறும்படி கண்ணன் அர்ச்சுனனுக்குக் கூறிய வரலாறும், கண்ணன் உபமன்யு முனிவரிடம் உபதேசம் பெற்ற வரலாறும் பிறவும் சிவபெருமான் பெருமையையே விளக்குவனவாகும். சுவேதாசுவர உபநிடதம் கைவல்லிய உபநிடதம் முதலியவை சிவபெருமான் மாண்புணர்த்துவதை யாவரும்மறிவர்.

பழம் புராணங்களாகிய மச்சபுராணம், வாயுபுராணம் என்பவைகள் சிவ பரத்துவமே பகர்கின்றன. திருமாலுக்குப் பெருமைகூறும் புராணங்கள் பிற்காலத்தெழுந்தனவாகும். வாணன் கதை முதலியனவும் அத்தகையனவே. இக்கருத்துக்களை உயர்திரு. மறைமலையடிகள் மாணிக்கவாசகர் காலம் என்ற நூலில் தெளிவு படுத்தியுள்ளார்.

பழந்தமிழ் நூல்களிலெங்கும் சிவபெருமானது உயர்வு விளங்கித் தோன்றுதல் சங்கநூல்களையும், சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி முதலிய காப்பியங்களையும் கற்றோர்க்கு இனிது புலனாகும்.

இதுகாறும் கூறியவாற்றான் வட இந்தியாவில் பஞ்சாபிலும், சிந்து வெளியும் தோண்டிப்புலப்படுத்தப்பட்ட நகரங்களிற்கிடைத்த பொருள்களின் ஆராய்ச்சியால் புலனாவது சிவநெறியானது உலகத்தில் வழங்கும் சமயநெறிகளெல்லாவற்றினும் பழமையானதென்பதும், சத்திவழிபாடு சிவவழிபாட்டின் பகுதியே யாமென்பதும், அதுவும் தொன்மை மிக்க தென்பதும், புதையுண்ட நகரங்களின் காலநிலம் கி. மு. ஐயாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதாகத் தோன்றுவதாலும், கி. மு. காலாயிரம் ஆண்டுக்குப் பின்வந்த ஆரியருக்கு அக் காலநிலை முரியதென்று கொள்ள இடமின்மையாலும் அவர்களுக்குச்சில்லாயிர ஆண்டுகட்குமுன் எங்கும் பரவிய தமிழினத்தார்க்கு அது உரியதென்று கொள்ளுதல் சாலுமென்பதும், இந்திய காட்டில் நாகரிகம் பரவுதற்குக் காரணராயிருந்த

பணியர் என்பார் தமிழினத்தைச் சேர்ந்த வணிகரென்பதும், கடல் கொண்ட காட்டிலிருந்த தமிழர்க்குள் முக்கட் கடவுள் வழிபாடு தொடங்கிய தென்பதும், அவர்கள் முதன்மையராய்ப் பேணிய காளையை யூர்தியாகக் கொண்ட சிவவழிபாடு வட இந்தியாவில் புதையல் ஈகரங்களில் கிடைபெற்றதென்பதும், அவ்வழிபாட்டுக் குறிகளே ஆரியர் ஆதியிலிகழ்ந்தனரென்பதும், சிவம் என்ற சொல் ஒலியானும், பொருளானும் தமிழ் மொழிக்குரிய தென்பதும், ஆரிய நூலில் இடம்பெற்ற உருத்திர வழிபாடு சிவ வழிபாட்டின்கூறே யென்பதும், சிவனது மாண்பு வட மொழி நான்கு வேதங்களிலும், இதிகாச புராணங்களிலும் சிறப்புற்று விளங்குகிறதென்பதும், பண்டைத் தமிழ் நூல்கள் பலவும் சிவபெருமானுக்கு முதன்மை கூறுகின்றன வென்பதும் பிறவும் அறியற் பாலனவாகும்.

தமிழர் மறந்த தமிழொலி

திரு. ஈ. த. இராசேசுவரி அம்மையார் M. A., L. T.,
அறிவுநூல் விரிவுரையாளர்,
மேரிஅரசி கல்லூரி, சென்னை.

றகரமும், னகரமும் தனித்தமிழ் எழுத்துக்கள் என்றும் அத்தச் சிறப்பு நோக்கியே அவை தமிழ் நெடுங்கணக்கின் முடிவிலே விளங்குகின்றன என்றும், தமிழிலக்கண ஆசிரியர்கள் கூறுகின்றனர். றகரத்தின் ஒலி பலபடித்தாக வழங்கக் கேட்கிறோம். இவ்வொலி வல்லெழுத்தாதலின் மொழிக்கு முதலிலும் கடையிலும் வருவதில்லை. மொழிக்கு இடையே அறம் முதலிய இடங்களில் உயிரெழுத்தின் பின் வரும் போதும் 'சென்று' முதலிய இடங்களில் 'ன'கரத்தின் பின்வரும்போதும் இந்த 'ற' என்ற உயிர்மெய் எடுத்து அழுத்திச் சொல்லப்படும், றகரம் பேரல ஒலிக்கக் கேட்கிறோம். ஸ்காட்லாண்டிலும் (Scotland) ஜர்மெனியிலும் (Germany) றகரத்தை இவ்வாறு ஒலிக்கின்றனர். றகரம் இரட்டித்துக் கற்று முதலிய இடங்களில் வரும்போது 'ட்ரு' என்ற டகர, ரகர ஒலியாக வரக் காண்கிறோம். மொழிக்கிடையே இவ்வாறு இரட்டாது தனி மெய்யாக 'வெற்பு' முதலிய இடங்களில் வரும்போது ஒலிக்காது உயிர்ப்பு வடிவாக வரும் ரகரம்போல கிற்கக் காண்கின்றோம். 'வெற்பு' என்பதனை 'வெட்பு' என்று ஒலிக்கும் நிலையிலிருந்து 'வெப்பு' என்று ஒலிக்கும் நிலைவரை பல வகையாக ஒலிப்பதனை விரைவாக பேச்சு முறையில் காண்கிறோம். 'முற்றுப்புள்ளி' என்பதும் 'முட்டுப்புள்ளி' என்று ஒலிக்கும் நிலையிலிருந்து 'முத்துப் புள்ளி' என்று ஒலிக்கும் நிலைவரை பலவகையாக ஒலிப்பதனை பரவை வழக்கில் கேட்டு வருகின்றோம். இவை அதன் இலக்கணமாக அமையாத இழிவழக்கொலிகள் எனப் பெறலாம். இருந்தாலும் றகரத்தோடு இயைபுடைய ஒலிகளாகத் திரிந்தனவாதலின் றகரத்தின் உண்மை ஒலியை அறிதற்குப் பெரிதும் உதவுமன்றே? தமிழ் ஒலி என்னபாடு படுகின்றது? தமிழ் மனம்போன படியெல்லாம் திரிந்து ஒலித்து வருகிற தல்லவா?

சில எழுத்துக்கள் உயிர்ப்பாகவே வெளிவருகின்றன. (Breathed Letters) க், ச்.....எனச் சொல்லிக் காண்க. மார்பகத்துள்ள

நுரையீரலிலிருந்து வெளிவரும் உயிர்ப்பாகவே வருதலின் இவற்றை நெஞ்சொலியால் பிறப்பன என்பர் சில எழுத்துக்கள் ஒலியாக வெளி வருகின்றன. (Sounded letters) அ. இ.....எனச் சொல்லிக்காண்க. இவை ஒலிக்கும்போது மிடற்றிலுள்ள குரல் வளையிலுள்ள உதடுகள் ஒருங்கு சேர அவற்றிடை புகுந்து அவற்றைப் படபட என இயங்கி ஒலிக்கச் செய்து வெளிவருகின்றன. இவற்றை ஒலிக்கும்போது மிடற்றில் விரலை யழுத்திப் பார்ப்போமாஞல் குரல்வளையின் அசைவை உணரலாம். மிடற்றுவலியால் ஒலிப்பன உயிரெழுத்து என்பர் தொல்காப்பியர். யகரத்திற்கு மிடற்றெழு வளியிசை கூறிய தொல் காப்பியர்க்குப் பிற இடை எழுத்துக்களும் இவ்வாறே ஒலித்தல் உடன் பாடனெலாம்.

இதுபற்றியே பவணந்தியார் ''ஆவியும் இடைமையும் இடமிட ருகும்'' என்றார். இவ்வாறு வருகின்ற எழுத்துக்களில் தடைபட்டு வருவன மெய் யெழுத்துக்கள். அத்தடைகள் நாவானது அண்ணத் தையோ பல்லையோ தொடுவதாலும், உதட்டை உதடோ பல்லோ தொடுவதாலும், உண்டாவதாம். இத்தடை காற்றைமுழுதும் தடுக்கும் முழுத்தடையாகவும், காற்றை சிறிதளவு மட்டும் விடும் சிறுதடையா கவும், இருக்கக் காண்கிறோம். முன்னையதில் ஒற்றுதல் உண்டு. பின்னையதில் வருடலிலே உண்டு. க் என்பது ஒற்ற எழும் எழுத்து. ம் என்பது வருட எழும் எழுத்து. இவற்றை Plosives என்றும் Fricatives என்றும் முறையே ஆங்கிலத்தில் வழங்குவர். பலமுறையே தட்டி ஒலிக்கும் எழுத்தை ஆங்கிலத்தில் Rolled letter என்பர். ரகரம் இத்தகைய உருட்டெழுத்தாகும் வருடப் பிறக்கும் ஒலியாகும்

நுனிநாவால் பிறக்கும் எழுத்துக்கள் பல. பலநாட்டார் பலவகையாக இவற்றை ஒலித்து வருகின்றனர். பல்லின் நுனியில் நுனிநாவை ஒற்ற 'ற'ப் பிறப்பது ஒன்று. இதனைப் பல்லொலி (dental) என்பர். ஆங்கிலேயர் ஒலிக்கும் "t" என்ற எழுத்து இவ்வகையைச் சேர்ந்தது. பல்லின் அடியிலுள்ள ஈற்றில் நுனிநாவை ஒற்றப் பிறப்பது **இரண்டாவது.** பிரஞ்சு நாட்டினர் ஒலிக்கும் "t" என்ற எழுத்து இவ்வகையைச் சார்ந்தது. இதனை ஈற்றெலி (alveolar) என்பர். நமது தகரம் இவ்வாறு பிறப்பதே யாம். (அண்ணம் கண்ணிய பன்முதன் மருங்கின் நாநுனி பரந்து மெய்யுற ஒற்றத்தாமினிது பிறக்குந்தகாரம், ககாரம் என்பது தொல்காப்பியம்) பல்லீற்றுக்கும் உட்புறத்தே நுனி நா ஒற்றப் பிறப்பது மூன்றும் வகையாம். இதனை ஈற்றெலி என்று கூறிய இரண்டாம் வகையின் வேறு பாடே என்றும் கூறுவர். இதனைப் பற்புற ஒலி (Post dental) என்பர். இந்தியர் "t" என்ற ஆங்கில ஒலியை இவ்வாறே ஒலிக்கக் காண்கிறோம். இதற்குள் உள்ளிடத்தே வற்கென் றிருக்கும் அண்ணத்தை நுனிநா உள்நோக்கி வளைந்து ஒற்றப் பிறப்பது **நான்காம் வகையாம்.** தலைக்கு நடு இடத்தைத் தொடுவதுபோல

காவானது செல்லுதலின் இதனை மூர்த்தாக்கரம் (தலை எழுத்து) cerebral என வழங்குகின்றனர். இவற்றை நாமடிப் பெழுத்துக்கள் (retroflex) என்பர். வடமொழியில் வழங்கும் டகரத்தை இவ்வாறே ஒலிக்கின்றனர். நாமும் தமிழில் டகரத்தை இவ்வாறே ஒலித்து வருகின்றோம்.

ஆனால் தொல்காப்பியர் டகரத்திற்கு நா மடிவதைக் கூறவில்லை. டகாரம் ணகாரம் நுனிநாவண்ணம் என்பதே அவர்கூறுவது. இதனைப் பற்புற ஒலி என்று மேற்கூறிய மூன்றும் வகையிற் சேர்தலாமேயன்றி நாமடிப் பொழுத்துக்கள் என்ற நான்காம் வகையிற் சேர்ப்பதற்கில்லை. டகரம் தொல்காப்பியர் கொள்கைப்படி தகரத்தினும் சிறிது வேறு பட்டதேயாம். பட்டணம், பத்தணம் என வடமொழியில் தகர டகரம் மாறி வருவது காண்க. எனவே டகர ஒலியையும் மாறி ஒலிக்கின்றோம் என்பதாயிற்று.

இனி நாவை மடித்தலை தொல்காப்பியர் அணர்தல் எனக் கூறுகின்றார். இவ்வாறு நுனிநா அணரப் பிறப்பனவாகத் தொல்காப் பியத்தில் நான்கு எழுத்துக்கள் உள்ளன. றகரம் வல்லெழுத்து, னகரம் மெல்லெழுத்து ரகரம் ழகரம் இடையெழுத்து றகரமும் னகரமும் **ஒற்றப் பிறப்பன.** ரகரமும் ழகரமும் வருடப் பிறப்பன. வல்லெழுத் தென்பன. ஆங்கிலத்தில் breathed plosives எனப்படுவன. நாமடி வல்லெழுத்தாகிய றகரம் Retroflex breathed plosive என ஆங்கிலத்தில் பெயர் பெறும். இதன் ஒலி வடமொழி டகரத்தோடு ஒக்கும் என்பது எழுத்தொலி நூல் வல்லரசது முடிபு. இதனை இக்காலத்திற்போல உரத்த ரகரமாக ஒலித்தால் அவ்வொலி வருட ஒலிக்கும் உருட்டெழுத் தாவதன்றி Retroflex rolled letter வல்லெழுத்தாவதில்லையாம். ரகரம் ஒலிக்கும் மிடற்று வளியாற் பிறக்கும் எழுத்து. வல்லெழுத்துக்களோ உயிர்ப்பாய் வரும் ஒற்றெழுத்துக்கள். வல்லெழுத்தை இடை எழுத்தாய் ஒலிப்பது எவ்வாறு ஒவ்வும்?

எனவே றகரத்தின் பழைய ஒலி இப்போது நாம் டகரத்தை ஒலிக்கும் ஒலியே யாம். றகரம் இரட்டித்து 'பற்று' முதலிய இடங் களில் வரும்போது அங்கே இக்காலைய டகர ஒலி கேட்கப்படுகின்ற தல்லவா. அதுவே அதன் இயற்கை ஒலி என்பதாயிற்று. இது இக்காலைய முதல் சான்று. மலையாளத்தில் என்னுடைய என்ற பொருளில் 'என்றே' என்று எழுதி 'எண்டெ' என்று ஒலிக்கின்றனர். ஆதலின் அவ்வோரிடத்தில் 'றகத்திற்கு' இக்காலைய 'டகர ஒலி' உள்ளமை இன்னும் காண்கிறோம். ஈது **இரண்டாவது சான்று.** தமிழினத்தைச் சார்ந்த தெலுங்கு முதலிய மொழிகளில் தமிழில் றகரம் வர எழுதும் சொற்கள் டகரம் வர எழுதி வழங்கப் பெறக் காண்கிறோம்.

'நூற்று இரண்டு' என்பது தெலுங்கில் 'நூடை ரெண்டு' என எழுதப்படுகிறது. 'பற்றிக்கொள்' என்பது 'பட்டுகோ' என எழுதப்

படுகிறது. 'மூன்று' என்பது 'மூடு' என எழுதப்படுகிறது. இன்னும் விரிக்கிற்பெரும். இவை மூன்றுவது சான்று. முகரம் அணரி வருடப்பிறக்கும் எழுத்து. அது ஒற்றெழுத்தாய் வலிக்து மாறினால் 'றகரமாதல்' வேண்டும். 'ஏழு' என்பது 'ஏறு' என வலித்தல் வேண்டும். ஆனால் தெலுங்கிலோ 'ஏடு' என்றே உள்ளது. இவ்வாறு வலிப்பதற்கு மாறாய் வடமொழி காமடிப் பெழுத்து இடைக்து ஒலிக்கும்போது முகரமாகிறது. 'நாடி' 'நாழி' என ஆதல் காண்க. எனவே வடமொழி டகர கிற்கும் கீலியில் கின்றது, றகரத்தின் பழைய ஒலி என்பதாயிற்று. ஈது நான்காவது சான்று றகரத்தை வல்லெழுத்து என்று வழங்குவது ஐந்தாவது சான்று. அணரி நுனிகர அண்ணம் ஒற்றப்பிறக்கும் எழுத்து வடமொழியாளர் கூறும் டகர ஒலியே என்று வடமொழி இலக்கணங்களும் retroflex breathed plosive என்று மேனாட்டு எழுத்தொலி நூலோர் கூறும் இலக்கணங்களும் ஆறுவது சான்றும். 'அயறு' என்பதை 'அசடு' என்றும் 'முயிறு' என்பதை 'முசுடு' என்றும் பேச்சு முறையிலும் 'முற்றுப் புள்ளியை', 'முட்டுப்புள்ளி' என ஒலிப்பது ஏழாவது சான்றும். கற்சிறை, முட்சிறை என்றபோது றகர டகரங்கள் சிறிது ஒத்து ஒலிப்பதும் காண்க. வெற்பு என்றபோது றகரம் ஒலியின்றி உயிர்ப்பாய் கிற்கிறது என்றேனும்; நுனிகர வணரி வருடப் பிறக்கும் எழுத்து (ர) ஒற்றும் எழுத்தாய் கிற்பதென்றால் என்னை? அணரி நுனிகர வண்ணம் ஒற்றப்பிறக்கும் றகரமாக (ட) ஒலிக்கும் என்பதே யாம். கல்+தீது—கற்றீது எனத்தகரம் றகரமாக மாறுகிறது. ஆகவே தகரம் றகரத் தோடியையுடையதாக வேண்டும். றகர ஒலி தகரத்தோடு இயையுடையதல்ல. டகர ஒலியானும் (t_4) தகர ஒலியோடு (t_2) இயையுடையதாம் இது எட்டாம் சான்று இவ்வாறு பல சான்றுகளாலும் தொல்காப்பியர்காலில் றகரம் இக் காலை டகர ஒலியே பெற்றிருந்தது, என்பது வலியுறுகிறது.

டகரம் ஒன்றிருக்க அவ்வொலியையே குறிக்க றகரம் வழங்கியது. என்? இந்த ஐயம் எழுவது இயல்பே. ஆனால் டகரத்தின் பழைய ஒலி வேறாக இருந்தது எனக்கண்டோம். பற்புறஒலி (Post dental) அல்லவா அது. தொல்காப்பியர் காலின் டகரம் வடமொழியிலும் அவ்வாறே வழங்கியிருத்தல் வேண்டும். ஆனால் இப்போது வழங்கும் வடமொழி இலக்கணங்களெல்லாம் டகரத்தையே காமடிப் பொலியாகக் கூறுவதால் தொல்காப்பியம் அவ்விலக்கணங்களுக்கு முற்பட்டதாதல் வேண்டும். தமிழ் நெடுங்கணக்கை முறைபடுத்திய காளுக்குப்பின் எழுந்தவையே இவ்வடமொழி இலக்கணங்கள் அனைத்தும் எனலாம். இக்தியாவில் உள்ள எல்லா மொழியினரும் எழுத்தொலி ஆராய்ச்சியை ஒழுங்கு செய்தனர், இவ்வொலிகளை ஒருகோவை செய்தனர். ஒருங்கு செய்த இவ்வாராய்ச்சியை ஒவ்வொருவரும் பயன்படுத்திக்கொண்டனர். ஆதலின் இந்தக்கோவை வடமொழிக்கே உரியதெனக் கோடற்கில்லை. இவ் வாராய்ச்சியின் பயனைக்கண்ட டகர ஒலியினும் இக்காலை தமிழ் றகர ஒலி வேறுபட்டுத் தனிச்சிறப்புடையதாக விளங்கினமையால் னகரத்

தோடு நெடுங்கணக்கின் முடிமணியாக ஒலிர்கிறது. ஆரியத் தாய்மொழியில் டகர ஒலி இல்லை. வேதத்தில் காண்கிறோம். திராவிட மொழியோடு சேர்ந்தபோது இவ்வொலி வடமொழியிற் புகுந்தது என மொழிநூல் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இதுவரையும் கூறி வந்தமையால் அவர்களுடைய டகரம் தகரத்தின்மாற்றாய் 'பட்டணம்' 'பத்தனம்' எனப் பொருள் மாறுதலின்று வந்து (t_3) ஒலியாக விளங்கிப் பின்னர் t_4 ன் ஒலியாக விளங்கிற்று என வேண்டியிருக்கிறது. [துனி கர எழுத்துக்களின் கால்வகையை $t_{(1)}$; $t_{(2)}$; $t_{(3)}$; $t_{(4)}$ என வழங்கலாம். $t_{(1)}$தான் ஆங்கிலர் ஒலிக்கும் t; $t_{(2)}$தான் ரரம் ஒலிக்கும் தகரஒலி, $t_{(3)}$தான் பழைய டகர ஒலி; $t_{(4)}$ பழைய றகரத்தின் ஒலியும் புதிய டகரத்திதின் ஒலியுமாம். மயங்காதவாறு இவ்வாறு பிரித்து உணர்தல் வேண்டும்.

றகரம் இரட்டித்து வரும்போது $t_{(4)}$ஒலி மாறவில்லை. வல்லெழுத்து ஒற்றாய் 'வெற்பு' முதலிய இடங்களில் வரும்போது $t_{(4)}$ஒலி மாறவில்லை. ஆனால் ஒலிக்கும். எழுத்துக்களாகிய மெல்லெழுத்தின் பின்னும் உயிரெழுத்தின் பின்னும் 'சென்று' முதலிய இடத்தும் 'அறம்' முதலிய இடத்தும் வரும்போதுதான் 'ரகர' ஒலிவரக் காண்கிறோம். ஒலிக்கும் எழுத்தின் சார்பால் உயிர்ப்பாய் வரும் ஒற்றெழுத்து ஒலி எழுத்தாக மாறத்தொடங்குகிறது. அவ்வாறு மாறுகையில் ஒற்றுதலோடு கூடிய வருடுதல் எனக் கூறத் தக்கபடி ர அண்ணத்தைப் பலமுறை தட்டி ஒலிக்கும் உருட்டெழுத்தாம் ரகரமாக மாறுவது இயல்புதான். எழுத்து இயைபினாலாய மாற்றுகும் (assimilation) இது முற்று என்றபோது $t_{(4)}$ ஒலிக்கின்றது என்றோம். தொல்காப்பியர் காலத்தில் வல்லெழுத் தெல்லாம் உயிர்ப்பெழுத்துக்களேயாம். பின்னே வல்லெழுத்துக்கள் முன்வரும் ஒலியெழுத்துக்களின் தொடர்பால்ஒலிக்கும் எழுத்துக்களால் மாறின. k என்பது g என்பதாய் t என்பது d என்பதாய் மாறக்காண் கிறோம். இவை ஒலிக்கும் ஒற்றுக்கள் Sounded plosives எனப்பெறுவன. இக்த முறையே 'சென்று' முதலிய இடங்களில் னகரத்தின் சார்பால் (t_4) உயிர்ப்பெழுத்து ஒலியெழுத்தாய் (d_4) மாறி (''Cendru'') சென்று என ஒலிக்கப்பெறுதல் காண்க.

இவ்வாறு t_4 பழைய றகரஒலி (t_4) ரகரஒலியாக மாறுதல் எளிதாகும். பிறமொழிகளிலும் இம்மாறுதலைக் காண்கிறோம். லட்சி என்ற இக்துஸ்தானிச் சொல் 'லர்க்கி' என ஒலிப்பது காண்க. மேனாட்டு மொழிகளிலிருந்தும் பலபல எடுத்துக்காட்டுகள் தரலாம். ஆனால் எளிதாகிற்கும் மாறுதல்கள் எல்லாமொழிகளிலும் தோன்றுவதில்லை. ஆகவே இம்மாறுதல் தமிழற்கு இயல்பே என ஆராய்தல் வேண்டும். ஆகவே இம்மாறுதல் தமிழற்கு இயல்பே என ஆராய்தல் வேண்டும். இத்தகைய மாற்றத்தை இன்றும் தமிழில் காண்கின்றோம். 'விடு அடா' என்பது 'விடுரா'; 'போடு அடா' என்பது 'போடுரா'; 'அடி அடா' என்பது 'அடிரா' என்றும் t_4 ரகர ஒலியாக மாறுவதைக் காது புளிக்கக்கேட்கிறோம்.

றகரம் பழைய காளில் டகர t4 ஒலிபெற்று வந்தது என்பது மொழி நூல் ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்தருவது என்றும் தமிழில் ஆண்பாலைக் குறிக்க அன் ஆன் என்ற விகுதிகள் வருகின்றன. தெலுங்கிலோ ஆண்பாற் சொல், 'டு' என முடிகின்றது. 'அவன்' என்பது தமிழ், 'வாடு' என்பது தெலுங்கு. தெலுங்கில் சுட்டுப் பெயர்களில் சுட்டெழுத்துக்கள் தலைதடுமாறி வகரத்தின் பின் சென்று நீண்டு நிற்கக் காண்கிறோம். அவன் என்பது அம்மட்டில் வான் என நிற்றல் வேண்டும். னகரம் வலித்தல் விகாரம் பெற்றால் றகரமாகும். றகரம் மொழிக்குக் கடையில் தனித்து வாராது; உகரம் பெற்றேவரும். ஆகவே 'வாறு' என நிற்கும் எனலாம். இத்த றகரத்திற்கு டகர ஒலி உண்டெனக்கொண்டால் 'வாடு' என்று தானே நிற்கவேண்டும். அவ்வாறே மகனென்பது மகடு எனத் தெலுங்கில் நிற்பதைக் காண்கிறோம். இக்குறிப்புக்கொண்டு ஆராய்ந்தால் பல ஒற்றுமைகளைத் திராவிட மொழிகளிடையே காணலாகும். இதுபோது ஈதோடு அமைவதாக.

தமிழ் இலக்கியங்களில் உவமைச் சுவை

பெருஞ்சொல் விளக்கனார்,
திரு. அ. மு. சரவண முதலியார் அவர்கள்
தமிழாசிரியர், அரியலூர்.

தமிழ் மொழியால் ஆக்கப்பட்ட இலக்கியங்களில் காணப்படும் உவமானங்களிலுள்ள சுவை என்பது இத் தொடரின் பொருள். உவமைச் சுவை என்பது, நகைச் சுவை முதலிய எட்டு அல்லது ஒன்பது வகைச் சுவைகளுள் ஒன்றன்று; எனினும், ஐம்புலனுக்கோ அல்லது அறிவுக்கோ இன்பந் தருவன அனைத்தையும் 'சுவை' என்று கூறும் வழக்குப் பற்றிக் கற்போருக்கும் கேட்போருக்கும் இன்பந்தந்து அவர்களை மகிழ்விக்கும் உவமத்தையும் சுவை என்று கூறுகின்றோம்.

உவமை என்பது என்ன ?

உவமை என்பது ஒருபொருளோடு மற்றொரு பொருளை ஒப்புமை கூறுதலாகும். இந்த உவமை, பண்டைப்புலவர்கள் அகமும்புறமும் பற்றிப் பாடியபாட்டுக்களின் பொருளைப் புலப்படுத்துதற்குச் சிறந்த கருவியாக உள்ளது. 'இஃது அணிவகையிற் சேர்ந்தது' எனவும் 'அல்ல' எனவும் கொள்ளும் கருத்துவேற்றுமை பண்டைய உரையாசிரியர்களிடம் உண்டு. தொல்காப்பியனாரால் இஃது ஏனையுவமமென்றும், உள்ளுறை உவமமென்றும் இரண்டாகப் பகுக்கப்பட்டது. இங்குப் பேசப்படுவது ஏனை உவமையே யன்றி உள்ளுறை உவமமன்று. அந்த ஏனை உவமம் வெளிப்படையுவமம் என்னும் பெயரையும் உடையது. அது வினைபற்றியும், பயன்பற்றியும், வடிவம்பற்றியும், நிறம்பற்றியும் வருதலால் நான்கு விகற்பங்களையுடையதாயிற்று. ஒவ்வொன்றற்கும் உதாரணங்காட்டி விளக்கினால் விரியுமாகையால் இஃது இம்மாட்டோடு நிற்க.

புலமையை அளப்பதற்குரிய கருவிகளுள் உவமையும் ஒன்று.

பண்டைக்காலத்தில் புலவர்களின் பரந்த புலமை நுட்பத்தை அளப்பதற்குரிய கருவிகளுள் அவர்கள் கையாண்ட உவமைகளைத் தலைசிறந்த கருவியாகக் கொண்டிருந்தனர் என்பதையும், அவ்வுவமையி லீடுபட்டு அப்பெயரையே அப்புலவர்கட்கு இட்டு வழங்கி வந்தனர் என்பதையும் நாம் அறிவதற்குப் பலஆதாரவுகள் உள்ளன. குறுந்தொகை என்னும் சிறந்த சங்க இலக்கியத்திற்காணப்படுவன கடவுள் வாழ்த்து உட்பட நானூற்றொரு (401) பாடல்கள். அவற்றைப்பாடியவர்கள், பாரதம்பாடிய பெருந்தேவனர் முதல் அம்மூவனர் இறுதியாகவுள்ள இருநூற்றாறு (206) புலவர்களாவர். இவருள் பதின்மூவரின் பெயர்கள் அவர்கள் கூறிய உவமைகளாலேயே வழங்கப்படுகின்றன. 'செம்புலப் பெயனீரார்' என்பது ஒரு புலவரின் பெயர். இவர், முன்பு யாதொரு தொடர்புமில்லாது எதிர்ப்பட்ட ஓர் தலைவன் தலைவியின் உள்ளம் ஒன்றுபட்டதற்குச் செம்மண் நிலத்துப் பெய்தமழை நீரானது அம்மண் ணோடு கலந்து அதன் நிறத்தையும் சுவையையும் பெற்று ஒன்று படுவதை உவமையாக்கி,

''செம்புலப்பெயல் நீர்போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந்தனவே'' எனக் கூறியதனால்

அப்பெயராலேயே அழைக்கப்பட்டார். மற்றப் புலவர்களின் பெயரையும் இவ்வாறே காண்க.

எந்தெந்த உவமையால் எவ்வெவற்றை அறியலாம்

இந்த உவமங்களைப்புலவர்கள் ஆண்டிருக்கும் முறையை நோக்கினால் அவை பிறர் கூற்றாகக் கூறியதும், தம் கூற்றாகக் கூறியதும் என இருவகையாகக் காணப்படுகின்றன. அவற்றுள் பிறர்கூற்றாகக்கூறும் உவமங்களிலே நான் புலவனுடைய விரிந்த புலமை யாற்றல் வெளிப்படும். தம் கூற்றாகக்கூறும் உவமங்களாலே அப்புலவனுடைய உள்ளத்தின் உயர்வு, அதையொட்டியவாழ்க்கைநிலை, புலமை முதலியவற்றையறிய லாம். பிறர் சொல்லுவதாகச் சொல்லப்படும் உவமைகள், சொல்லு கின்றவர்களின் மரபு, தொழில், பழக்கம், சுற்றுச்சார்பு முதலியவற்றால் அவர்கள் அறிந்த பொருளிலே இருக்கவேண்டும் ஆதலால், அவை யனைத்தையும் புலவன் கண்ணுதெரிந்து வைத்திருந்தாலன்றி, அவற் றுக்குப் பொருத்தமாகக் கூறமுடியாது. ஆதலால் அவ்வுவமை அவனது பரந்த புலமையைக் காட்டுவதாயிற்று.

இனி, புலவன் தன் கூற்றாகச்சொல்லும் உவமைகளோ 'மனநலம் மாற்றம் உரைக்கும்' என்றபடி அவனது உள்ளத்தின் உயர்வையும் தாய்மையையும் வெளிப்படுத்தி, அவன் வாழ்க்கையின் குறிக்கோளையுங் காட்டி, 'உலக நிகழ்ச்சிகளை எத்துணைக் கூர்ந்து நோக்கியிருக்கிறான்' என்பதைப் புலப்படுத்து முகத்தால், அவனது புலமையையுங் காட்டு கின்றன.

பிறர் கூற்றுக் கூறும் உவமை.

இவ்வுவமங்கள் இலக்கியங்களுள் எவ்வாறு எடுத்தாளப்பட்டிருக்கின்றன என்பதை ஆராய்வோம். விரைவில் மணந்து கொள்ளுங் கருத்து இல்லாதவனுய், களவொழுக்கத்தையே விரும்பி ஒழுகுந் தலைவனிடம் தோழி, 'நீ, எங்கள் தலைவியைப் பிறரறிய விரைவில் மணஞ்செய்து கொள்ளவேண்டும். இன்றேல் தலைவி இறந்துவிடுவாள்' என்று சொல்லுபவள், தன் தலைவியின் உயிரினது சிறுமையும், அதைப் பற்றி நிற்கின்ற காமநோயின்பருமையுமாகிய இவற்றுக்கு, மலைப்பக்கத்திலுள்ள பலாமரத்திலுள்ள கொம்பின் சிறுமையையும் அதைப்பற்றித் தொங்குகின்ற பலாப்பழத்தின் பெருமையையும் உவமமாக்கி,

"... ... ... சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கியாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே" எனக்கூறினுள்.

என்பது குறுந்தொகையாலறியப் படுவதொன்று. அத்தோழியானவள் குறிஞ்சி நிலத்திலுள்ளவள்; அந்நிலத்தின் கருப் பொருளாகிய பலா மரங்களின் சிறு கொம்புகளிலே பெரிய பெரிய பழங்கள் தொங்குதலைப் பலகாலுங் கண்டு பழகியவள்., ஆதலால் அவள் அறிந்த பொருளாலே உவமை கூறுகின்றுள் என ஆசிரியர் பாடியது பெரிதும் போற்றத்தக்க தாகும்.

இனி, திருக்குறளிற் கூறப்படும் உவமங்களுள் இரண்டை எடுத்துச் சுவைக்கலாமென எண்ணுகிறேன். 'தலைவன் பிரிந்திருக்கும்பொழுது அவனுடைய குறைகளைக் கூறி வருந்தும் நீ, அவனைக்கண்ட காலத்துப் பிணங்காமைக்குக் காரணம் என்ன' என வினவிய தோழிக்குத் தலைவி, கண்ணுக்கு மைதீட்டும் அஞ்சனக்கோலின் தன்மையை, அது தனித் திருக்கும் போழ்து கண்டு அறிந்து கொண்டிருக்குங் கண், அக்கோல், தன்னோடு பொருந்தி மைதீட்டும்பொழுது காணுவதில்லை என்பதை உவமையாக்கி,

"எழுதுகாற் கோல்காணாக் கண்ணேபோற் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து" எனக்கூறுகிறுள்.

தலைவி செல்வர்கள் வீட்டுப்பெண் ஆகையால், தன் தலைவன் கண்டு மகிழுமாறு மையிடுதல் முதலியவற்றுல் எப்பொழுதும் தன்னை ஒப்பனை (அலங்காரம்) செய்து கொள்ளும் இயல்பினள், ஆதலால் அதனையே இங்கு உவமமாக்குகிறுள்.

ஓர்காள், தோழி தலைவியை நோக்கி 'கலவிக்காலத்தில் சாலவும் இன்பத்தை விளைத்தலால் புலவி இன்றியமையாததுதான். ஆனல் அஃது ஓரளவிலிருந்தாற்றுன் அந்த இன்பத்தைத் தரும்; அவ்வளவிற் சிறிது மிகுந்தாலோ இன்பத்திற்கிடாகத் துன்பத்தை கல்கிவிடும்' எனச் சொல்லக்கருதியவள், சமைக்குந் தொழிலில் நன்கு பழகியவளாதலால், மக்கள் உண்ணுங்கறி முதலியவற்றுக்கு அளவோடு போடப்

பட்டிருந்தாற்றான் உப்பு இனிமையைத்தரும். சிறிது அளவு மீறினாலும் அவற்றை உண்ணுக் தகுதியில்லாதனவாய் அவ்வுப்புச்செய்துவிடும் என்பதை உவமமாக்கி,

> ''உப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது
> மிக்கற்றால் நீள விடல்''
>
> என்று கூறினான் என

வள்ளுவர் கூறுவது எத்துணை வாய்ப்புடையது பாருங்கள்.

தேவலன் பிரிந்தபின் உலக வாழ்க்கையையே வெறுத்திருந்த மாதவியைத் திருப்பித் தன் மரபுத் தொழிலிற்புகுத்தக்கருதிய அவளுடைய தாய் சித்திராபதி என்பவள் 'யாழ் வாசிக்கும் ஒருவன் இறந்து விடுவானானால் அவனோடு அவன் வாசித்த யாழும் இறந்துபடுவ தில்லை. பின்னும் வாசிக்கின்றவன் கையிற் சென்று பயன் தரும். அதுபோலல்லவா நாமும்.'

> ''பாண்மகன் பட்டுழிப் படூஉம் பாண்மையில்
> யாழினம் போன்ற இயல்பினம்''

எனக் கூறினளென்பதை மணிமேகலை என்னும் பெருங்காப்பியத்தாலறி கிறோம். சித்திராபதி என்பவள் விலைமகள். அம்மரபுப் பெண்கள் பலரும், தம்வலையில் வீழாத செல்வ இளைஞர்களை வீழவைக்கவும், வீழ்ந்தவர்கள் பொருள் அவர்களைக் கைவிடும் வரையும் தம்மைக் கைவிடாதிருக்கவும் மேற்கொள்ளும் உபாயம் யாழ் வாசித்தல் முதலிய வற்றுள் தேர்ச்சிபெற்றிருத்தலன்றோ! எனவே, தனக்குக் கைவந்த நிகழ்ச்சியொன்றையே சித்திராபதி உவமையாக்கிக் கூறினளென்பது எத்துணை இன்பத்தை அளிக்கிறது பாருங்கள்.

இனி, சீவக சிந்தாமணி என்னும் பெருங்காப்பியத்துட் காணப்படும் உவமையொன்று அறிவுடையோர் எண்ணிஎண்ணிச்சுவைத்தற்குரியது. கந்தகோன் என்ற இடையர் தலைவன், தன்மகள் கோவிந்தை என்பாளைச் சீவகனுக்கு மணஞ்செய்து கொடுக்கக் கருதியவன், அச்சீவகனிடம், தன்புதல்வியின் உடலினது மென்மைக்கும், சொல்லின் சுவைக்கும், உடலின் நிறத்திற்கும், தன் வாழ்க்கையிலே பலகாலும் கண்டு கண்டு பழகிய வெண்ணெய், பசுவின்பால், உருக்கிய பசுவின் நெய் இவற்றையே உவமமாக்கி,

> ''வெண்ணெய் போன்றாளினியன் மேம் பால்போற்றீஞ் சொல்லள்
> உண்ண உருக்கிய ஆனெய் போல் மேனியள்''

எனக் கூறினான் என்று திருத்தக்கதேவர் பாடியிருப்பது அவர்கூறிய பசுவின் பாலினும் தெவிட்டாத சுவையுடையதாக இருப்பதைப் பாருங்கள்.

கண்ணப்ப நாயனார் நாணன் என்னும் வேடனோடு காளத்தி மலையிலேறினார். இறைவனைக் கண்டார்; அதன்பால் விழுங்கப்பட்டுத் தம்மை மறந்தார்; அப்பெருமானை இறுகத் தழுவிக் கொண்டார்; நாணன் என்ன கூறியும் அவ்வாண்டவனை விட்டாரில்லை; அன்புகனிந்த

பல வார்த்தைகள் கூறினர். பின்னர் அவனுக்கு உணவுகொண்டுவரும் பொருட்டுக் கீழே இறங்கினர். நாணனும் உடனிறங்கினன். கண்ணப் பரால் கொல்லப்பட்ட பன்றியொன்றை அவருடைய ஆணைப்படி பாதுகாத்துக்கொண்டிருந்த காடன் என்னும் வேடன் 'ஏன் இத்துணைக் காலந்தாழ்ந்தீர்கள்? நாம் ஊருக்குப் போகவேண்டாமா?' என வினவினன். அச்செய்தி கண்ணப்பர் காதில் ஏறவேயில்லை. நாணன் அதற்கு விடைகூறுகிறான். சொல்லும் அவனும், கேட்கும் காடனும் வேடர்கள். தங்கள் வாழ்க்கையில் எத்துணை முயற்சியாலுந் தளராது தான்பிடித்த பிடியை விடாமலிருக்கும் உடும்பைத்தானே கண்டிருப் பார்கள். ஆகையால் நாணன் 'மரப்பொந்தைப் பற்றிய உடும்பு எப்படி அதை விடாதோ, அதுபோல இவன் அங்குள்ள குடுமித் தேவரைக் கட்டிப் பிடித்துக்கொண்டு விடமாட்டாதவனுய் விட்டான்' எனக் கூறியதாகச் சேக்கிழார் பெரிய புராணத்துள்,

> 'அங்கிவன் மலையிற் றேவர் தம்மைக் கண்டணைத்துக் கொண்டு
> வங்கினைப் பற்றிப் போகா வல்லுடும் பென்ன நீக்கான்'

எனப் பாடியிருக்கிறார். வேடன் கூற்றுக்கு கூறப்படும் இந்த உவமை வேறு எந்த வகையாற் கூறப்படினும் அஃது ஆசிரியரின் பரந்த புலமையைக் காட்டாதல்லவா?

இனி, கம்பராமாயணம் என்னும் கனி நிறைந்த சோலையுட்புகுந்து ஒரு கனியைச் சுவைக்கலாமென எண்ணுகிறேன். விசுவாமித்திர முனிவன், தன் அரிய தவத்தைத் தன் காமத்தாலும் வெகுளியாலும் பாழாக்கினவனுதலால், தாடகையைக் கொல்லும் பொருட்டு இராம பிரானைத் தசரத மன்னனிடம் பெறச்சென்றவன்,

> 'தருவனத்துள் யானியற்றுந் தவவேள்விக் கிடையூறுத் தவஞ்செய்வோர்கள்
> வெருவரச் சென்றடை காரமெருளியென'

என்று தன் அநுபவத்தையே உவமையாகக் கூறினன். சிறந்த நூல்கள் ஒவ்வொன்றிலுள்ள ஒவ்வோர் உவமையைக் கூறியும் இது விரிந்து விட்டதாகையால் இதனை இம்மட்டோடு நிறுத்திவிட்டு, தம் கூற்றுக் கூறும் உவமையை இரண்டொன்று காண்போம்.

தம் கூற்றுவமை.

திருவள்ளுவர் 'மானம்' என ஓர் அதிகாரங் கூறியுள்ளார். மானம் என்னும் அச் சொல் ஓர் வியப்பானது. தன் பெயரைக் கேட்டவுடனே ஆணே பெண்ணே, முதியவரோ இளைஞர்களோ, அறிஞர்களோ மூடர்களோ இவர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியையோ சினத்தையோ மூட்டுவது. 'மானமுடையவர்கள்' என்றால் மகிழ்ச்சி; 'மானங் கெட்டவர்கள்' என்றாலோ சினம். ஆனல் அந்தச் சொல்லின் பொருள் தெரியாது. ஆதலாலே தான் இஃது ஓர் வியப்பான சொல் என்றேன். இச் சொல்லுக்குப் பரிமேலழகர் 'எஞ்ஞான்றும் தம் நிலையினின்று தாழாமையும் தெய்வத்தாலே (ஊழ்வினை) தாழ்வுவக்குழி உயிர்

வாழ்மையையுமாம்' எனப் பொருள் விரிக்கிறார். எனவே மக்களுக்குத் தம்நிலை என்பதொன்று; அதினின்றும் ஓர்படி மேலேறினால் தெய்வநிலை; ஒருபடி கீழிறங்கினால் விலங்கின் நிலை, சிறந்த மக்கள் தம் நிலைக்குத் தாழ்வு வருமானால் அஃதாவது மானங்கெட நேருமானால் உயிரைவிட்டு மானத்தை நிலை நிறுத்துவார்களேயன்றி, மானத்தைவிட்டு உயிரை வைத்திருக்கமாட்டார்கள்.

இனி, மானமிழந்தும் உயிர் வாழ்கின்றவர்கள் அறிஞர்களால் எவ்வாறு கருதப்படுகிறார்கள் என்பதற்குத் திருவள்ளுவர் மானம் என்னும் அவ்வதிகாரத்துக்கும் உவமையொன்று மிகமிக அருமையும் சுவையுமுடையது. அத்திருக்குறள்,

'தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை'

என்பது, மயிரானது தன் நிலைப்பிடமாகிய தலையிலிருக்கும் வரையிலும் வாசனெய்முதலிய ஊட்டப்பெற்று, பேணிவளர்க்கப்படுதலையும், அந்நிலையினின்று தவறினால் அஃது அருவருத்து ஒதுக்கப்படுதலையும், தப்பித்தவறி உண்ணும் உணவிற் கிடந்துவிட்டால் உண்பவர்கள் சமைத்தவர்களிடம் பாய்வதையும் கண்கூடாகக் காண்கின்றோம். சற்று நேரத்திற்குமுன் (தன்னிலையி லிருக்கும்போது) புகழ்ந்து பேணப் பெற்றது இப்போது இகழ்ந்து கூறப்படுவதோடு, நூல் வழக்கிலும் உலக வழக்கிலும் இழிந்த பொருளுக்கெல்லாம் அதுவே உவமையாக எடுத்தாளப்படுதலையும் பார்க்கின்றோம். ஆதலால், நமது வள்ளுவப் பெருந்தகையார் 'மானங்கெட்டு உயிர் வாழ்பவர் தலையினின்றும் தவறிய மயிரை ஒப்பாவார்' என்று கூறியது, ஓர் வகை நகைச் சுவையோடு பொருந்தி, அப்புலவர் பெருமான் தமது வாழ்க்கையில் மானத்தை உயிரினும் மேலாக ஓம்பிவந்திருக்க வேண்டுமென்பதையும் புலப்படுத்துகிறதல்லவா? எவனுக்தன் வாழ்க்கையில் உறுதியாகக் கொள்ளாத ஒன்றைப் பிறருக்கு வற்புறுத்திக் கூறமாட்டானென்பதும் அங்ஙனம் கூறினும் அக்கூற்றுப் பிறரால் எள்ளி நகையாடுதற் கிடமாவதோடு ஒரு பொருளாக மதிக்கப்படாதென்பதும் நம்மாலறியப் பட்டனவே!

அரிவாட்டாய நாயனரின் வாட்போருக்கு அஞ்சி அவருடைய பகைவனாகிய அதிசூரனென்பவன் படைகள் ஓடி ஒளிந்தன என்பதற்கு, ஒருவனுக்கு மெய்ஞ்ஞானம் தோன்றிய காலத்தில் அவனது காமவெகுளி மயக்கங்கள் தலைகாட்டாமல் ஓடி ஒளிவதை உவமமாக்கி,

"நிலைப்பட்ட மெய்யுணர்வு நேர்பட்ட போதில்
அலைப்பட்ட ஆர்வமுதற் குற்றம் போலாயினார்" எனவும்,

கண்ணப்பர் வேட்டையாடும்போது வலைகளை அறுத்துக்கொண்டு தப்பியோடும் விலங்குகளைப் புறத்தே நின்ற நாய்கள் பிடித்துக்கொண்டன என்பதற்கு, நல்வினை தீவினை என்னும்வலையை அறுத்துக்கொண்டு

ஆண்டவனுடைய திருவடியை நோக்கி ஓடும் ஆன்மாவை, மனத்தைத் துணையாகக்கொண்டு ஐம்புலன்கள் பற்றிக் கொண்டன என்பதை உவமையாக்கி,

"நிலவிய இருவினை வலியிடை நிலைசுழல்பவர் நெறிசேர்
புலனுறு மனனிடைதடை செய்த பொறிகளினவுளவே" எனவும்

சேக்கிழார் பெரிய புராணத்துட் கூறியிருப்பது அவரது வாழ்க்கையின் குறிக்கோள் (இலட்சியம்) என்ன என்பதைத் தெள்ளத் தெளியக் காட்டுகின்றதல்லவா?

இந்த முறையில் ஆன்றோர் கூறிய உவமைகளை நோக்கி உண்மை யறிவோமானால் அது நமக்குத் தெவிட்டாத சுவைதரும் என்பதைக் கூறி இம்மட்டோடு முடிக்கின்றேன். குற்றங்களைப் பொறுத்துக் கொள்க; குணம் உளதேற் கொள்க.

வாழ்க நம் தமிழ்மொழி.



சத்விங்கம்

திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் B.A., B.L.,
திருநெல்வேலி.

நல்ல காரியம் ஒன்றைச் செய்வதில் யாதொரு அவமானமும் இல்லை என்று சொல்லுவார்கள். உண்மை அப்படியா, அல்ல.

ஒரு வக்கீல் சாயங்காலம் அனுஷ்டானம் செய்து விபூதி பூசிக்கொண்டு கோயிலுக்குப்போய்த் தரிசனம்செய்துவிட்டு வீட்டுக்குத் திரும்பி வந்தார். அவரைக் கிளப்பில் பத்தாடிவிட்டு, துட்டுவைத்துச் சீட்டாடிவிட்டு வீட்டுக்குத் திரும்பிவந்த வேறொரு வக்கீல் நண்பர் வழியில் சந்தித்தார். "ஏது அனுஷ்டானம் விபூதி சுவாமி தரிசனம் எல்லாம் முறுக்கா இருக்கிறதே" என்று கேட்டார்.

இதற்குப் பதில் சொல்லுகிறார் கம்முடைய நண்பர். "இல்லே இல்லே.....சும்மாதான்.....கோயிலுக்குப் போய்விட்டு வருவோமே என்று போனேன்."

ஏதோ அபசாரமான காரியத்தைச்செய்து விட்டதாகவும் அதை மறைக்கவேண்டும் என்பதாகவும் தியங்கித் தியங்கிப் பேசுகிறார்.

கிளப் ஆசாமி விட்டபாடாக இல்லே. "எல்லாம் தெரியும் ஐயா. வேண்டும் என்றுதான் கோயிலுக்குப் போயிருக்கிறீர்கள். இல்லே என்ருல் அனுஷ்டானம், குழைத்து விபூதி இடுகிறது எல்லாம் எங்கே இருந்து வந்தன! விஷயத்தை யேன் ஒளிக்கவேணும், குட்டைட்" என்று சொல்லிவிட்டு எடுப்பாய்ப் போய்விட்டார்.

கோயில் ஆசாமிக்கு அவ்வளவு எடுப்பு வரவில்லே நடக்கும்போது. மறுநாளும் கோயிலுக்குப் போய்விட்டுத் திரும்பும்போது முன்ன நாள் சந்தித்த கிளப் நண்பரும் வேறொரு நண்பரும் கையில் பத்து மட்டைகளுடன் எதிரே வந்துகொண்டிருந்தார்கள்; இவர்களைச் சந்திக்கவேகூடாது என்று சொம்ப லஜ்ஜைப்பட்டுக் கோயில் முகமாகத்

திரும்பிக் கோபுரவாசல் கதவை ஓட்டி ஒளித்து நின்றுகொண்டார். பத்துமட்டை நண்பர்கள் வீதியில் வேறு முகமாய்ப் பேசிவிட்டார்கள் என்று கிச்சயம் ஏற்பட்ட பிறகுதான் வீதிக்கு வர தைரியம் வந்தது.

இப்போது அநேகருக்கு விபூதி அணிகிறது, கோயிலுக்குப்போகிற தெல்லாம் கேலியாய்த்தான் இருக்கிறது. தூட்டுவைத்துச் சீட்டாட்டம் கல்லது அல்லதான் என்று ஒருவாறு ஒப்புக்கொள்ளுவார்கள். இருட்டினபிறகு பொழுதுபோகவேண்டும் அல்லவா. அப்பாவிகள், என்ன செய்வார்கள்! சீட்டாட்டம் போகட்டும்.

டெனிஸ் ஆடுவதில் யாதொரு குற்றமும் இல்லை என்று சொல்லுவார்கள். வகாகரீகத்துக்கு இன்றியமையாதது அல்லவா அது. லஜ்ஜைப் படுவதற்கு அதில் ஒன்றும் இல்லையென்று உறுதியாய்ச்சொல்லுவார்கள். உண்மையில் சீட்டாட்டத்தைவிட டெனிஸ் விளையாட்டில் அதிகமாக லஜ்ஜைப்படவேண்டிய அம்சம் இருக்கிறது. டெனிஸ் ஆட்டத்தின் நிறமை, ராகவம் எல்லாவற்றையும் அனுபவிக்கிறவன்தான் நான்.

ஆனாலும் விளையாட்டுச்சம்பந்தமாகச்சிலருக்கு மோகம் இருக்கிறது என்ற காரணத்தை முன்னிட்டு ஏமாற்றுக் கச்சவடம், (மோசடியான வியாபாரம்) ஒருவர் கடத்துவதென்றால் அவமானப்படவேண்டியது தானே. கால்அணாப் பெறுத ரப்பரையும் பிளானல் கத்தையையும் தைத்து அதற்குள் தம்பிடியும் பெறுத கார்றை அடைத்து விடுகிறார்கள் அது பந்தாய் விடுகிறது. துள்ளியும் குதித்துவிடுகிறது! ஆனால் துள்ளிக்குதிக்கிறதெல்லாம் மூன்று காலுக்குத்தான். இத்தக் காலணுக் காரியத்துக்கு ஒரு ரூபாயைக்கொடுத்து விடுகிறதில் என்ன பெருமை இருக்கிறது. பந்தோடவா கிற்கிறது ஏமாளித்தனம்.

ஒரு அணுப்பெறுத மட்டைக்கும் காம்புக்கும் ரூபாய் ஒன்பது, தொண்ணூறு, நூறு என்று கொடுக்கிறது. (சீட்டுக்கட்டுக்கு வில்லை மூன்றணுத்தான்) இத்த வியாபாரத்தால் எத்தனையோபேர் கோடீஸ்வர பிரபுகளாக ஆயிருக்கிறார்கள். அத்த வியபாரிகள் மட்டையைக் கையில்வைத்துச் சுழற்றிக்கொண்டு இறுமாப்போடு நடக்கலாம். மட்டை நம்முடைய கையில் இருக்கும்போது தலையைத் தொங்கவிட அல்லவா வேணும். காம் அதற்குப் பதிலாக இறுமாப்போடு நடக்கிறோம். இப்படி நடந்துகொண்டு கோயிலுக்குப் போய்விட்டு விபூதி அணிந்து வருகிற வரைப்பார்த்து கையாடுகிறோம். லக்ஷம் லக்ஷமாய் செலவுசெய்து அருமையான, உலகத்தில் எங்குமே இல்லாத, சிற்பவேலைகொண்ட கோயிலுக்குள்போய் அனுபவித்து விட்டல்லவா வருகிறார். ஒரு பிரகாரம், ஏன், ஒரு தூண் ஒன்று போதுமே காம் அனுபவத்தில் இளைப்பதற்கு, புஷ்பம், மேளம், நடனம், தீபதூபம் எல்லாம் எவ்வளவு சோபையைத் தரக்கூடியன. இவைகளை அனுபவிப்பதில் ஏமாளித்தனம் என்ன இருக்கிறது. லஜ்ஜைப்பட என்ன இருக்கிறது? ஒன்றுமே

இல்லே. நம்முடைய முன்னோர்கள் தந்துபோன அரிய பண்பாட்டை அனுஷ்டானத்தில் வைத்து, உண்மையும் ஒளியும் கெடாமல் போற்றி வருகிறோம் என்பதில் எவ்வளவு எக்களிப்பு ஏற்படவேண்டும்! ரப்பர்துண்டையும் கந்தையையும் மட்டையையும் வைத்துச் செய்கிற ஏமாற்றுக் கச்சவடமா அவமானப்பட?

கோயிலுக்குப் போய் வந்த வக்கில் கண்பருக்கும், துணேயர்கப் பத்துப்பேர் இருந்தார்களானுல் லஜ்ஜையே ஏற்படாது. கோபுர வாசல் கதவுப்பக்கம் ஒளிக்கவேண்டிய அவசியம் தோன்றுது.

ஆனுல் மேலே சொன்ன ஆசாரங்களில், பண்பாடுகளில், ஈடு படாதவர்களிடையில் அகப்பட்டுக் கொண்டால் கஷ்டந்தான். பக்கத் திலுள்ளவர்கள் சதா கண்ணடித்து கையாடுவதைப் பார்த்துப் பார்த்து ஒரு விதமான உத்ஸாகக் குறைவு ஏற்பட்டுவிடுதல் இயல்பு. தன்னுடைய நியம நிஷ்டைகளே முதலில் மறைமுகமாகச் செய்யவும் பிறகு மெள்ளப் புறக்கணிக்கவும் ஏற்பட்டுவிடலாம். இது இக்கக் காலத்தில் மிகவும் உண்மை. பண்டைக் காலத்திலும் உண்மை தான். ஆகையால் நம்முடைய ஆசாரம், பண்பாடுகளோடு ஒட்டாத குழாத்தைக் கண்டால் அஞ்சவேண்டியது என்றுல் மிகைப்படக் கூறல் அல்ல.

மாணிக்கவாசகர் அஞ்சினர் என்றுல் உண்மையான அச்சத்தான். நடராஜமூர்த்தியின் தத்துவத்தை, அதாவது ஒவ்வொரு ஜீவனுக் குள்ளேயும், தனக்குள்ளேயுமேயிருந்து இயக்குகிற, ஆனந்த தத்து வத்தைப் பார்த்தால் நெஞ்சம் உருகுகிறதாம். அதிலும் பக்தர் குழாத் தோடு மூர்த்தியைப் பார்த்து அனுபவிக்கும் போது உண்மையிலுள்ள ஈடுபாடு எத்தனேயோ மடங்கு அதிகமாகிறது. இப்படியெல்லாம் ஈடுபடாதவர்களேப் பார்த்தால் அவர்களுடைய உணர்ச்சியின்மை தன்னேயும் வந்து பாதித்து விடுமோ என்று அஞ்சுகிறார். இதயத்துக் குண்டான நிமிர்வாதம் ஒட்டுவாரொட்டியோ, என்பது பாவம்.

(1) வன்புலால் வேலும் அஞ்சேன் வஞக்கையார் கடைக்கண் அஞ்சேன்
என்பெலாம் உருக நோக்கி அம்பலத் தாடு கின்ற

ஆனந்த தாண்டவமானது, தன்னேயே நோக்கி ஆடுகிறதாக் எண்ணுகிறார். உண்மைத் தத்துவத்துக்கும் தனக்கும் அவ்வளவு நெருக்கம்!

(2) என்பொலா மணியை எத்தி இனிதருள் பருக மாட்டா
அன்பிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே

---

(1) வன்புலால் வேல் : சதா யுத்தத்தில் நிகர்த்து மாம்ஸம் ஒட்டியவேல்

(2) பொல்லாமணி — மனிதனுல் துளேபடா, அதாவது அனுபவியான அரிய வஸ்து கடவுள் என்பார்.

இது அகப்பண்பு, அதாவது உள்ளத்தில் நிகழும் உண்மையான பக்தி, இல்லாதவர்களைக் குறித்துச் சொன்னது. இவ்வேதாரு நிற்கவில்லை புறமான பண்பையும் குறித்துப் பேசுகிறார். அதிலும் ஆர்வம் குறையவில்லை. ஏனென்றால் அதில் ரொம்ப உண்மையமிருக்கிறது. சத்ஸங்கமென்றுசொல்லும்போது உள்ளுணர்ச்சி மாத்திரம் அல்ல. புற ஒழுக்கங்களும் அடையாளங்களும் சேர்ந்து தொழிற்பட்டு உள்ளத்தைப் பண்படுத்துகிறது என்னும் தத்துவம் கொண்டது. இது எல்லா தேசத்தாரும் எல்லா மதத்தாருமே ஒப்புக் கொண்ட விஷயம். ஏன்! ராணுவத்தை எடுத்துக் கொண்டாலும் அவர்களுடைய உடை குறி யீடு, தாளம், பாண்டு எல்லாம், ஒன்றுபட்ட உணர்ச்சியைக் கொடுக் கின்றன என்று சொல்லுவார்கள். இதையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு மாணிக்கவாசகர் சொல்லும் வார்த்தையைப் பார்த்தால் உண்மையும் வேகமும் விளங்கும்.

(3) *பிணியெலாம் வினும் அஞ்சேன் பிறப்பினே(டு) இறப்பும் அஞ்சேன்*
தணிவிலா அணியும் அன்னன் தொழும்பரோ(டு) அழுந்தி அம்மால்
திணிநிலம் பிளந்தங் காணுச் சேவடி பாவி வெண்ணீ(று)
அணிகிலா தலைகள் கண்டால், அம்ம நாம் அஞ்ச மாறே.

மாணிக்கவாசகர் உள்ளத்தில் நிகழும் உண்மையான உணர்ச்சிகளை பேச்சாய்ப் பேசி வெளியிடுகிறார். அதனாலேயே கவிநயம் பாவம் வேகம் எல்லாம் ஏற்பட்டுவிடுகின்றன. உண்மை நமக்குத் தென்பட்டு விடுகிறது. நம்முடைய ஆணவமாகிய கல்லைப் பிளைந்து கனியாக்குகிற காரியத்தான்.

பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்களை முதல் முதல் பேசக்கேட்டது இருபது வருஷத்துக்குமுன் திருவாசகத்தின் பெருமைதான் விஷயம். பாசுரத்தின் உள்ளக்கிடையில் நினைத்துப் பரவசநிலையில் நின்று பேசினார்கள். இது சாதாரணமாக சாத்திய மாவதல்ல. ''தொழும்பரோடு அழுந்திச் சேவடி பாவியவர்கள்'' என்று யூகித்துக்கொண்டேன். அது ஞாபகத்துக்கு வர சத்ஸங்கம் என்ற பொருளை எடுத்துப் பேசத் துணிந்தேன்.

பேசப் பட்டேன் நின் அடி யாரில், திருநீறு
பூசப் பட்டேன், பூதல ராள்உன் அடியான் என்(று)
ஏசப் பட்டேன், இனிப்படு கின்ற(து) அமையாதால்;
ஆசைப் பட்டேன் ஆட்பட் டேன்உன் அடியேனே

—திருச்சதகம்.

---

(3) திணி நிலா—பிறைச் சந்திரன்; மால் பூமியைத்தோண்டி, அடிதாவது பாதாளம் வரையும் அடிகளைப் பார்க்கப்போனார்கள் என்பது குறிப்பு. அடிதாவது உயிர்களைக் காக்கும் தத்துவத்துக்கும் அப்பாற்பட்டது கடவுள் தத்துவம் என்பது பொருள்.

பிறை தொழுதல்

திரு. ஞானம்பாள் அம்மையார் அவர்கள், M. A.,
ஆராய்ச்சி மாணவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

"அந்தியாரண மத்திரத் தன்புட னிவனே
வந்தியாதவர் மண்ணினு வானினு மில்லே"

என்று வில்லிப் புத்தூரார் புகழ்ந்து கூறியவாறே மதி பலராலும், பலகாடுகளிலும், பலமுறைகளிலும் எத்தப்பட்டு வருகிறது. சங்க காலத்திலும் தமிழர்கள் சிவபெருமானது சடைமீது குடியேறியிருக்கும் பெருமையாலும், மற்றும் பதினெண் கணங்களும் வணங்கும் சிறப் பாலும் மதியை வணங்கி வந்தனர். ஆனல் கம்பிறைவனையும், பதினெண் கணங்களையும் அறியாத பிறநாட்டினரும் பிறையைத் தொழுதுள்ளார், தொழுது வருகின்றனர்.

பிலினி (Pliny) என்னும் ஆசிரியர் 'மதி தன்னுடைய தன்மையினல் சகல பொருள்களுக்கும் குளிர்ச்சியைத் தரும். பெரும்பாலும் ரத்தமற்ற மரம், செடி, கொடிகள் மதியின் வளர்ச்சியினல் உயிர்ப்புப் பெறு கின்றன. மனிதர்களுடைய ரத்தமும் வளர் பிறையில் மிகுதிப்படும், ஏனெனில் சந்திரனது அறுகூல சக்தி எல்லாப் பொருள்களிலும் ஊடுருவிச் சென்று அவற்றை வளரச் செய்கிறது' என்று கூறினர். அவரினும் உறுதியாக மேக்ரோபியஸ் (Macrobius) என்பார்' சந்திரனே பொருள்களை ஆக்குவோன். 'அவன் வளர்ச்சியுடன் அவை வளரும்; தேய்வுடன் தேயுமென'க் கூறியுள்ளார். ஹிசயட் (Hesiod) ஆசிரியரது நூலுக்கு உரைகண்ட புளூடார்க் (Plutarch) என்பவரது உரையை மேற்கோளாகக்கொண்டு ஆலஸ் நெல்லியஸ்(Aulus Gellius) என்பவர் "வளர் பிறையில் வளரும் பொருள்களே தேய்பிறையில் தேயும்" என்று ஒரு சாந்திர விதியை நியமித்ததுடன், இவ்விதியை மாறுபடச் செய்வது சிறு பூண்டாகிய உள்ளியொன்றே என்றும் கூறினர். இச்சிறு பூண்டு தேய் பிறையில் வளர்ந்து, வளர் பிறையில் குறைந்து விடுகிறது. ஆயினும், பொதுவாக, வளர்பிறையில் எல்லாச் செடிகளும் வளரும் என்பதைக் கொண்டே ஸ்காத்லாந்து குறிஞ்சி நில மக்கள், இலியுதிர் காலத்து வளர் பிறைச் சந்திரனை 'கனி பிறை' (Gealach an abachaidh)

அஃதாவது கனிகளைக் கனியச்செய்யும் பிறை (ripening moon) என்கின்றனர். அக்காலத்துக் கதிர்கள் எவ்வாறு சூரிய கிரணங்களால் கனியுமோ, அதுபோலவே சந்திர கிரணங்களாலும் கனியும் என்பதே அவர்களுடைய நம்பிக்கை.

இவ்வாறு மதியால் பயிர்கள் முதலியவை வளரும் என்னும் கொள்கையை அடிப்படையாகக்கொண்டு பலவிதிகள் ஐரோப்பாவிலும், கீழ் நாடுகளிலும் விவசாயிகளும், ஆயர்களும் கையாளுதற் பொருட்டு ஏற்பட்டுள்ளன. அவற்றில் பல இன்றும் மக்களிடையே நிலவி வருகின்றன. இந்நூற்றாண்டில் ஆங்கிலேய ஆசிரியருள் ஒருவர் தமது சமூகத்திலுள்ள சிலநம்பிக்கைகளைப்பற்றி எழுதியுள்ளதைக்கண்டவாறு கூறுகிறார். * 'குடியானவன் எது ஓங்கி வளரவேண்டுமென்று விரும்புகிறானே அதை வளர்பிறையில் விதைத்தும், எதைக் குறைக்கவேண்டுமென்று எண்ணுகிறானே அதை தேய்பிறையில் குறைக்கவும் வேண்டும்'. இதனால் தான் ஜெர்மனியில் தினசரி வாழ்க்கையில் இன்றியமையாதப் பல தொழில்களைச் செய்யும் காலத்தை மதியின் வளர்ச்சியையும், தேய்வையுங் கொண்டே முடிவு செய்கின்றனர். தொழிலுக்கேற்றவாறு வளர்பிறைக் காலத்தையோ, தேய்பிறை காட்களையே குறித்துக் கொள்ளுவார்கள். பொதுவாக அனுசரிப்பது பெருகவேண்டுமவற்றைச் சுக்கில பக்ஷத்திலும், சிறுக வேண்டுமவற்றை கிருஷ்ண பக்ஷத்திலும் செய்வதென்பதே. மணமுடித்தல், விதையிடல், ஒட்டுச் செடிகளைச் செய்தல், முதலிய தொழில்களை வளர்பிறையிலேயே செய்வார்கள். இது காமும் அறிந்ததொன்றே. சந்திரன் ரோகிணியோடு கூடிய நன்னாளையே மணநாளாகக் கொண்டதை அகநானூறு முதலிய பழைய தமிழ் இலக்கியங்களும் கூறுகின்றன. இதைப் போலவே மேல் நாட்டினரான ஜெர்மானியரும் தமது மணநாள் வளர்பிறையில் வருமாறு கொண்டனர். மற்று விறகு வெட்டுதல், நகம் குறைத்தல் முதலியவற்றைத் தவறுது தேய்பிறையிலேயே செய்வர்.

காபூன் (Gaboon) என்னும் நீக்ரோ சாதியினர் தேய்பிறையில் விதைத்த பயிர்ச்செடிகள் வளரா : ஆனால் வளர்பிறையில் விதைத்தவை ஒன்றிற்குப் பத்தாகப் பலனளிக்குமென்று திண்ணமாய் நம்புகின்றனர். ஸ்காத்லாந்திலும் இவ்வாறான நம்பிக்கை உண்டு. தாமஸ்உஸ்ஸர் (Thomas Yusser) என்பவர் தமது விவசாய நூல்கள் ஒன்றில் '' அவரை, துவரை முதலியவற்றைத்தேய்பிறை காட்களில் நிலத்தில் இடவேண்டும்; ஏனெனில் அவை மதியோடு மறைந்திருந்து, பின்னர் மதியுடனே தோன்றும் ' என எழுதியுள்ளார். எஸ்தோனியரும் (Esthonians) ஜெர்மானியரும் நிலத்தின் கீழ் வளரும் கிழங்கு முதலியவற்றை அமர பக்ஷத்தினிடையே கட்டு வினைவின் பயனை மிகுதியாக்கிக் கொள்ளுகின்றனர். மத்திய அமெரிக்க காட்டு பிபைல்ஸ் (Pipiles) என்னும் வகையினர் தாம் இடப்போகும் தானியமணிகளை காள்கு இரவுகள்

* Brand "Popular Antiquities of Great Britain quoting Werenfals "Dissertation upon Superstition"

சிலர் வெளிச்சத்தில் பரப்பி வைத்து, அம்மணிகள் சக்திரிகையின் சக்தியை கண்டு ஏற்ற பிறகே விதைப்பார்கள். இயற்கையின் மாறுதல் களுக்கு உட்பட்ட விதைகளே யன்றி, அவர்கள் வளையும் மட்பாண்டங் களும் இவ்விதிக்கு உட்பட்டவையே. உகந்தா (Uganda) காட்டில் குயவன் தனது கலங்களைச் சுடுவதற்குப் பிறைதோன்றுமளவு காத்திருப்பான். பிறை தோன்றிச் சிலநாள் கழித்த பின்னரே கலங்களைச் சுடுவான். தேய்பிறையில் கலங்களைச் சுட்டால், அவை செவ்வனே உருப்பெறுமல் தொறுங்கி, உடைவதுமன்றி தனது வேலையும் வீணாகும் என்பது அவன் நம்பிக்கை.

பிரான்சு தேசத்தில் கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டு இறுதிவரை தேசியப் புரட்சி (Revolution) ஆரம்பமாகும் வரை காட்டிலாக்கா விதிப்படி மரங்களைத் தேய்பிறையில் தான் வெட்டலாம். இதற்காக அரசாங்கத்தார் கொடுத்த அனுமதிச் சீட்டுகள் பல கிடைத்துள்ளன. பர்மாவில் ஷான்ஸ் (Shans) என்னும் வகையினர் வீடு கட்டுவதற்குரிய பலகைகள் வேண்டுமாயின் தேய்பிறை நாட்களுள் ஒரு சன்னலைக் குறித்து, அன்றே மரங்களை முறித்துப் பலகைகளைச் செய்வது வழக்கம். வளர்பிறையில் மூங்கில்களை வெட்டினால் அவை விரைவில் துளைபட்டு, உதிர்ந்துவிடும் என்பது அவர்களது நம்பிக்கை. அதுபோலவே அமெரிக்க தேசத்து மெக்ஸிகோ (Mexico) நாட்டினரும் வளர்பிறையில் மரங்களை வெட்டுவது கிடையாது. வெட்டினால் விரைவில் கெட்டுவிடும் என்று எண்ணுகிறார்கள்.

வளர்பிறை நாட்களில் பனி அதிகமாகப் பெய்வதைக் கண்டு, திங்கள் தாவர வளர்ச்சிக்குக் காரணமாயது எனப் பலதேசங்களிலும் கருதலாயினர். கிரேக்க அறிஞரான அல்க்மன் (Alcman) என்பவர் இக்கருத்தை வைத்து ஒரு அழகிய கதையும் புனைந்துள்ளார். பனி ஒரு பெண் என்றும், ஜியஸ் என்னும் தெய்வத்துக்கும், சந்திரனுக்கும் பிறந்தவள் என்றும் கூறினர். (ஜியஸ் விண்ணிற்கும், மேகத்திற்கும் தெய்வம்). சந்திரனைக் குளிர்ச்சிக்கும், பனிக்கும் பிறப்பிடமாகவே கருதி, ஊழுதுண்போர் வணங்கினர். தமது கதிர்கள் கனிவதற்கும், பயிர்கள் வளர்வதற்கு இன்றியமையாத பனியின் இருப்பிடமாகத் திங்களைக் கொண்டால், அத்திங்களை அவர்கள் வணங்கியதில் தவறு யாதொன்றுமில்லை. ருக் வேதத்திலும் சோமனைப் பற்றிக் கூறும் பாடல்கள் சில குளிர்ச்சியையும், மனதிற்கினிய நிலவையுந்தரும் தெய்வ மாகவும் அவனைப் போற்றுகின்றன. புற்றரைகளும், ஊழுதுண்ணும் வாழ்க்கையையும் தமது ஆதாரமாகக் கொண்ட ஆரியர்கள் சோமனைக் கடவுளாக வழங்கியது போலவே, சரித்திர காலத்திற்கு முற்பட்ட நாட்களில், நாகரிகம் தோன்றின இடமான பாபிலோனியாவில் (Babylonia) சூரியனைக் காட்டிலும் சந்திரனே அதிகச்சிறப்புப்பெற்றான். சந்திரனைக் கதிரவனின் தந்தையென்றும் வழங்கினர். அமெரிக்க உஷ்ண பிரதேசத்தில் வாழும் கரிப்புகள் (Carib) திங்களையே தமது

முதற்கடவுளாக வணங்குகிறார்கள். பெரு (Peru) காட்டினரும், மற்றும் பகஸ்மயூ (Pacasmayu) முதலிய பள்ளத்தாக்குகளில் வசிக்கும் வேறு சாதியினரும் மதியையே தொழுகின்றனர். பகஸ்மயூவில் சந்திரனுக்குப் பெரியதொரு கோவிலுண்டு. அங்கு அவர்கள் காட்டு விளைபொருளான மக்காச் சோள மாவும், கறவும் நிவேதனமாகக் கொடுத்ததன்றி, சிறு குழந்தைகளையும் பலியாகக் கொடுத்தனர்

சங்க காலத்துத் தமிழர்களும் திங்களை வணங்கினரென்பது குறுந்தொகை 178-ம் செய்யுளால் பெறப்படும். 'தொழுது காண் பிறை' என்று ஆசிரியர் கூறுகின்றனர். கடம்பனூர்ச் சாண்டிலியனும்,

> "வளையுடைத் தலையதாகப் பலர்தொழச்
> செவ்வாய் வானத் தையெனத் தோன்றி
> இன்னுப் பிறந்தன்று பிறையே" (குறுந் 307.)

என்று கூறினர். உழுதுண்டு வாழ்வோரையே, வாழ்வாராகக் கொண்ட அவர்கள் மதியினுல் பயிர்த்தொழிற்கு ஏற்படும் நன்மையை யறிந்தே வணங்கினரென்று கொள்ளுவதால் இழுக்கொன்று மில்லை. உலக நாகரிகத்தின் அடிமுதல் திராவிட நாகரிகம் என்று விவகரிக்கும்போது, இக்கொள்கை பொருட்பேறுடையதாய்ப் பயன்படுதல் காணலாம். பொதுவாக மதியை யாவரும் தொழுதாலும், அம்மதியின் வளருந் தன்மைக்கு அறிகுறியான பிறையையே பலரும் பெருமகிழ்ச்சியுடன் வரவேற்றுத் தொழுகிறார்கள். மேற்காட்டிய குறுந்தொகைச் செய்யுட் களிரண்டும் 'பிறை' என்றே கூறுதல் காணலாம்.

பிறை, பொருள் வளர்ச்சியைத் தருவது: மேல் காட்டினர் பிறையைக் கண்டவுடன் தங்களிடமுள்ள நாணயங்கள் பெருகுமாறு அவற்றைப் பிறைக்குக் காட்டுவார்கள். சிரியா (Syria)வில் மகம்மதியரும் கிறிஸ்தவரும் யாவரும் பிறையைக் கண்டவுடனே வெள்ளி நாணயம் ஒன்றை பிறைக்குக் காட்டுவார்கள். தெருப்புறங்களில் ஒருவரை யொருவர் கண்டால் ஒவ்வொருவரும் வெள்ளிக்காசு கையிலெடுத்து, ஒருவரையொருவர் தழுவிக்கொள்ளுவதுடன் "இம்மாசம் கல்ல மாச மாகுக" வென்றும் ஆசி கூறுவர்.

பிறை காட்டல்: தான் கள்தோறும் வளருவதனுல், பிள்ளைகளையும் பிறை வளரச்செய்யுமென்னும் நம்பிக்கை காரணமாகவே, உலகில் பல தேசங்களிலும் குழந்தைகளுக்குப் 'பிறை காட்டல்' என்னும் வழக்கம் காணப்படுகிறது.

கிரிவினுத் தீவு (Kriwina Islands): கினியா (Guinea)வின் கிழக்கில் உள்ள ட்ரோபியண்ட்ஸ் (Trobriands) தீவுத் தொகுதியில் ஒன்றான கிரிவினு (Kriwina)த் தீவில் பிள்ளை பிறந்தபின் தோன்றும் முதற்பிறை யன்று தாய் தனது பிள்ளையைத் திங்களிடம் காட்டுவாள். பிறை வளருவதைப் போலவே தன் குழந்தையும் வளர்ந்து விரைவில் தன் மழலைச்சொற்களால் தன்னை மகிழச்செய்யவேண்டுமென்று தொழுவாள். பகந்தா (Baganda) காட்டினும் இச்சடங்கு உளதாகும்.

அபினகோஸ் இந்தியர்கள் (Abinagos Indians): தெற்கு பொலிவியர்வில் இருண்ட காடுகளில் வசிக்கும் க்வராயோஸ் (Guarayos) இந்தியர்கள் தவறாமல் ஒவ்வொரு குழந்தையையும் பிறைக்குக் காட்டி அதனை வளரச்செய்யுமாறு இறைஞ்சுவார்கள். **பிரேஸில்** (Brazil) நாட்டுக் குடிகளான அபினகோஸ் இந்தியர்கள் பிறைகாட்டலைப் பெரும் விழாவாகக் கொண்டாடி வருகிறார்கள். அவர்களது 'பிறை காட்டல்' விழாவை நேராகக்கண்ட காஸ்டல்னவ் (Castelman) என்னும் பிரெஞ்சு யாத்திரிகர் பின்வருமாறு கூறுகிறார்.

பிறைகாட்டல் விழா: ''அபினகோஸ் இந்தியர்கள் இதைப் பெரும் விழாவாக மதிக்கின்றனர். நான் பார்த்த அன்றிரவில் ஊர்ப் பொதுவில் பெண்கள் ஒரு வரிசையாகவும், ஆண்மக்கள் எதிர் வரிசையாகவும் நின்று நடனம் செய்தார்கள். இரு நிரைகளின் நடுவே பெருந்தீ மூண்டு பிரகாசித்தது. ஆடவர்கள் கண் பறிக்கும்படியான பற்பல வர்ணங்களைத் தம்முடம்பில் பூசி, சோளமாவும், பசையும் சேர்த்துச் செய்த குல்லாய்களைத் தலையில், தலையணியாக யணிந்து கூத்தாடினர். அவர்களது காட்டியம் சிறிதும் வேறுபாடின்றி ஒரே வகையானது. முதலில் ஒரு காலை முன்வைத்து, மாற்றி மற்றொன்றை வைத்தும் ஒரு பாட்டையே மீண்டும், மீண்டும் பாடியும் ஆடினர்கள். ஆடும்போது தமது படைக்கலங்களை இடைமிடையே தரையில் தட்டுவார்கள். பெண்களோ வர்ணமேதும் பூசாமல், சிறிது முன்புறமாக வளைந்துநின்று, முழந்தாளை ஒன்றுசேர வைத்து இசைக்கேற்றவாறு முன்னும் பின்னுமாகக் கைகளை வீசி, முன்புறம் வீசும்பொழுது முன்பாகவும், பின்புறம் வீசும்பொழுது பின்னுகவும் கைகளைக் கோத்தாடினர்கள். ஆனால் இவ்விரண்டு நிரைகளின் நடுவே, மிகவும் புதுமையானதொரு உருவம் காணப்பட்டது. உடல் நிறைய சிவப்பு வர்ணத்தைப்பூசி, கையில் குடுக்கை (சுரைக்காயில் கற்களிட்டு) யொன்றை ஏந்தி, அங்கு மிங்கும் ஆடி நடுவே தீயையும் தாண்டுவான். வெறி கொண்டவனைப் போல் பெண்கள் நிரையின் முன்னே ஓடி, இங்குமங்கும் நின்று சில சைகைகளைச் செய்து குடுக்கையை விரிவாகக் குலுக்கி, ஒலிக்கச்செய்து கொண்டே ஓடுவான். மற்றும் சில சமயங்களில் தரையில் முழந்தாளிட்டுத் திடீரென நிலத்தில் வீழ்ந்து புரண்டெழுவான். அவன் ஓடும் வேகமும், திறனும் வியக்கத்தக்கவை. பல நாழிகைவரை இக்கூத்து நடந்தபின், சிலர் வெளியேற சிலர் உள்வந்து கலந்து கொண்டனர். ஆடவர் மட்டும் இறுதிவரை நின்று ஆடினர்கள். நடு நிசியில் இங்கள் உச்சத்தை யடைந்தபொழுது ஒரு வேறுபாடு கண்டேன். ஒருவர் பின்னொருவராக, நீண்ட வரிசையாகப் பலர், சிறு பாய் தொட்டில்களில் சிறு பிள்ளைகளை யேந்தி வந்தனர். வந்தவர்கள், ஒவ்வொருவராக நிரைகளின் நடுவேசென்று; தொட்டிலை முன்னும், பின்னுமாக வீசி, ஒரு கீதத்தைப் பாடினர்கள். பாடி முடித்தவுடனே நிரையிலுள்ள மற்றவர்கள் அதை மீண்டும் பாடினர்கள். பலமுறை பாடியபின் ஒரு முதியவள், பார்க்கச்சகியாதவள், கைகளை மேலேதூக்கியபடி வரிசையுள்

வந்து, ஓசையின்றிச் சுற்றிச் சுற்றி வந்தாள். இவளைக் கண்டவுடன் முன்பு ஆடிய குடுக்கைக்காரன் வெறிகொண்டவனைப் முன்னும் பின்னும் புழுப்போல் வளைந்தும், வளைந்தும் கூத்தாடினான். தன்னுள் எழுந்த வெறியைப் பிறருக்கும் ஊட்டுவானைப் போலத் தோன்றினான். கூத்து நிகழ்ந்த நேரமுழுதும் நிரையின் வெளிப்புறத்தில் ஒருவன் ஏதோ பெயரை மீண்டும், மீண்டும் கூறிவந்தான். இவ்வாறு கூறியவன் கையில் அழகிய இறகுகளும், கோடரியுங்கொண்டு முன் செல்ல, குழந்தையுடன் ஒரு பெண் பின் தொடர்ந்தாள். இருவரும் ஓசையின்றி நிரைகளின் மூன்றும் பின்னுமாக நடந்து வெளியேறினர்கள். அவர்கள் போனவுடனே அங்கிருந்தோர் அவன் கூறிய பெயரைச் சத்தமிட்டு அழைத்தார்கள். (அப்பெயர் பிறையின் பெயர் போலும்). இவ்வாறே இரவு முழுவதும் குழந்தைகளைப் பிறைக்குக் காட்டிவந்தார்கள். ஆனால் இரவு முடிவதற்கு முன்னரே நான் தூங்கி விட்டேன். காலையில் எழுந்து பார்க்கும்போழுது இரவில் நடந்த விழாவில் குறியொன்றும் காணப்பட வில்லை. எங்கும் நிசப்தமே''.

தோங்க (Thonga): தென்னப்பிரிக்காவிலும் ''பிறைகாட்டல் என்னும் வழக்கு உண்டு. ஆனால் செய்யும் முறை வேறுபட்டுளது. ஆரியர்களும் சிசுக்களை மூன்றாம் மாதத்தில் சந்திரனுக்குக் காட்டி வந்தார்கள். இது இப்பொழுது மிகுதியாக வழக்கில் இல்லை. ''சந்திர தரிசனம்'' அல்லது 'நிஷ்க்ரமணம்' என்று கூறப்படும் இச்சடங்கு முடிந்த பின்னரே, குழந்தைகளை வெளியில் கொண்டு போவார்கள். பொதுவாக புரோகிதர்கள் இச் சந்திர தரிசனத்தில் சந்திரனை நோக்கி வேண்டுவது என்னவென்றால் ''நீ இக் குழந்தைக்கு ஆயுள், ஐஸ்வரியம், ஆரோக்கியம் மூன்றும் தருமாறு உன்னை நமஸ்கரிக்கிறோம்'' என்பதே. தமிழ்ப்பிரபந்தங்களில்காணப்படும் 'அம்புலிப் பருவம்' என்னும் துறையும் குறிப்பிடத்தக்கதே.

பல காடுகளிலுள்ள இப் 'பிறைகாட்டல்' என்னும் வழக்கு எதை நோக்கி ஏற்பட்டதோவென்று **பிரேசர்** (Frazer) என்னும் ஆசிரியர் ஆராய்ச்சி செய்திருக்கிறார். ஆனால் அவ் வாராய்ச்சியில் ஒரு முடிவும் ஒருதலையாகத் துணிந்து கூறப்படவில்லை. மேற் கூறப்பட்ட சுலோகத்தால் ஒரு தலையாகத் துணிதற்குக் கூடும். அவர் கருதியவாறே குழந்தையின் ஆயுளும், ஆரோக்கியமும் பெருக வேண்டுமென்றே சந்திர தரிசனம் செய்து வந்தனரென விளங்குகிறது.

பிறை, வேண்டியன அளிக்கும் தெய்வம்: வளர்ச்சியின் தெய்வமாகப் பிறையைக் கருதியதைப் போலவே, வேண்டியவற்றை அளிக்கும் தெய்வமாகவும் எண்ணி, பல காட்டினரும் பிறையைத் தொழுது வந்தனர். பெரு (Peru) காட்டு **யுகயலி** (Yucayali), **யுகயலி** (Yucayali) இந்தியர்கள், பிறை தோன்றியவுடனே மிக்க மகிழ்ச்சியுடன் ஆரவாரித்து, வரவேற்று, அதை நோக்கிப் பெரிதும் புகழ்ந்து பேசி, தம்மைச் செல்வனே பாதுகாத்து, மேன்மேலும் தமது வன்மையைப் பெருக்கு

மாறும் இறைஞ்சுவார்கள். **சான் ஜுயன் கபிஸ்டரானே** (San Juan Capistrano) என்னும் காலிபோர்னியா நாட்டுச் சுதேசிகள் பிறையைக் கண்டவுடன், யாவரும் ஒன்று சேர்ந்து, தொழ ஆரம்பிப்பார்கள். அவர்களுள் முதியோனெருவன் ''பிறை, பிறை'' யெனக்கூவ, இளையவரெல்லாம் அங்குமிங்கும் பைத்தியம் பிடித்தவரைப்போல ஓட, மற்றவர்கள் வட்டமாக நின்று ''நீங்கள் இறந்து பிறப்பதே போல், சரமும் இறந்து பிறப்போமென்று பாடிக் கொண்டே நடனமாடுவது வழக்கம். இக் கருத்தையே திருத்தக்க தேவரும்,

> "மாய்தலும் பிறத்தலும் வளர்ந்து வீங்கலும்
> தேய்தலு முடைமையைத் திங்கள் செப்புமால் (சிந்தா. 2932)

எனக் கூறியுள்ளார்.

மசய் (Masai):—மசய் (Masai) சாதியாருள் சூலுற்ற மகள் பிறையைக் கண்டால் ஒரு சிறு சுரைக் குடுக்கையில் சிறிதளவு பாலைக் கறந்து, அதைப் பசும்புல்லால் மூடி, ''எனது பிரசவம் க்ஷேமமாக நடக்க வேண்டு''மென்று கோரிக் கொண்டே பிறையை நோக்கிப் பாலை வீசி எறிவது வழக்கம். வகோகோ (Wagago) என்னும் கிழ் ஆப்ரிக்கா மக்கள் பிணியுற்றால், பிணியுற்றவன் பிறையைக் கண்டவுடன் ஒரு சிறுகோலைப் பலதுண்டுகளாகச் சிதைத்து, அதன் மேல் உமிழ்ந்து, சக்திரனுள்ள திசைநோக்கி வீசியெறிந்து 'என்னுடைய பிணியும் மேல் திசையை நோக்கிப் போக வேண்டுமென' வேண்டுவான். **பொலொகி: (Boloki)** பொலொகி (Boloki) யரும் பிறையைக் கண்டால், அதை மிக்க ஆரவாரத்துடன் வரவேற்று, நோயுற்றவர் நோய் நீங்கவும், நோயற்றவர் நோயின்றி வாழவும் தொழுவார்கள். **கொரியா** (Korea) காட்டினும் நோயுற்றவர் பிறைச் சந்திரனைத் தம் நோய் நீங்குமாறு ஏத்துவது வழக்கம். பிறை வேண்டியதை அளிக்கும் தெய்வமாகவே எண்ணி, தமிழ்நாடரும் பிறையைக் கொண்டு ஆசி கூறினர்*

'பிறை' கன்னியர்: மூத்தோரது பிணியை யகற்றி, மற்றும் தெய்வம் வேண்டுவோருக்கு வேண்டியதை அளிக்கும் ஆற்றலுடையது பிறையென்று நம்பித்தான் தமிழ் நாட்டினும் பிறையைத் தொழுது வந்தனர் போலும். தாம் விரும்பியதைப் பிறையிடம் கேட்டால் பெறுவோமென்று கருதியே கன்னிப் பெண்கள் 'புல்லென்னும் மாலையினும் உயர் பிறையைத் தொழுதனர் போலும். கன்னி மகளிர் பிறையை வழிப்பட்டனர் என்பது.

> "�எள்ளிழை மகளிர் உயர்பிறை தொழூஉம்
> புல்லென் மாலை"
>
> (அகம் 231)

என்பதனாலும் 'தொழுது காண் பிறை' என்பதனாலும் பெறப்படுகிறது. கன்னி மகளிர் ஏன் பிறையைத் தொழுதனர்? இங்கீஸ் ஒரு

* மதுரைக் காஞ்சி

கடவுளாகக் கொண்டனர் என்பதில் ஐயமில்லை. பிற்காலத்து நூல்களான கோவைகளுள் 'பிறை தொழுகென்றல்' என்னும் பகுதியொன்று உண்டு 'கடுங்க நாட்டம்' என்னும் துறையைக் கூறும்பொழுது மணிவாசகர், பிறை தொழுகென்று தோழி கூறுவதாக,

"மைவார் கருங்கண்ணி செங்கரங் கூப்பு மறத்து மற்றப்
பொய் வானவரிற் புகாதுதன் பொற்கழற்கே யடியே
னுய்வான் புகவொளிர் திங்கே கின்றேன் சடை மேலதொத்துச்
செவ்வானடைந்த பசுங்கதிர் வெள்ளைச் சிறு பிறைக்கே"

(திருக்கோவையார். 67)

கூறினர். தஞ்சை வாணன் கோவை ஆசிரியரும்,

"நிலைக்குந் திரை மேலுனக்குமுன் றேன்றலிற் செம்பொன் வெற்பை
வலைக்கும் பிரான்மூடி வைகுக லாற்றஞ்சை வாணன் மண்மேல்
விலக்கும் புகழ்போல் விளங்குத லாற் செக்கர் வீண் பிறைகார்
தலைக்குங் குழற்றிருவே தொழவே தகுந் தன்மையதே"

கூறினர். தலை மகளது களவொழுக்கத்தைக் குறிப்பினால் மட்டும் அறிந்த தோழி அதை ஐயமற அறியும் பொருட்டுப் பல குறிகளைக் கொண்டு தெளிய முயலுவதில் பிறை தொழுவோம் வாவென்றலும் ஒன்றாகும். கற்புக்கடம் பூண்ட மகளிர் தமது தலைவனைத் தேர்ந்தெடுத்த பின்னர் அவனையல்லது பிறதெய்வங்களை வணங்கார் என்பதை கன்னிமதிலே தோழி தலைமகளைப் பிறைதொழ வாவென்றது. பிறைதொழ மறுத்து நாணி நின்றாளாயின், இவள் தனது தலைவனையறிவாளெனத் தோழி உணர முடியும். பிறை தொழுவோம் என்றது தான் காமமிய விரும்புவது பிறையைக் கடவுளாக மேலும் கன்னி மகளிர் தொழுவதற் குரிய கடவுளாகக் கொண்டாலன்றி பிறைதொழ வருமாறு அழைப் பதில் சிறப்பொன்றுமில்லை. கன்னி மகளிருடைய உரிமையாகப் பிறைச் சந்திரன் கருதப்பட்ட தெவ்வாறு? இவ்வினாவிற்கு விடை வேறொரு மூலத்திலிருந்து கிடைக்கின்றது.

வேதத்தில் சோமன் கன்னிப் பருவத்திற்குரிய கடவுளாக காணப் படுகின்றனன். அத்ரி ஸ்மிருதியில் (137) 'மகளிருக்கு சோமன் தாய்மை யையும், கந்தருவர் இன் மொழியையும், அக்னி சர்வமேதத்வத்தையும்' அளித்தார்கள் என்று கூறப்பட்டுள்ளது. ஆரியர் மணம் (The Aryan Marriage) என்னும் நூலியைழுதியவர் இதை விரிவாக 'சோமன் ஸஸ்யாதிபதி தாவர உலகின் அரசன் அதுவுமன்றி அவன் மகளிரது புத்தி, சரீர வளர்ச்சிக்கும் ஏதுவானவன். மகளிரது புத்தி வளர்ச்சி அவனுல் ஏற்படுவது' என்றார். மேற்கூறியதையும், வேத சுலோகத் தையும் பார்க்கும்போது ஆரியர்கள் சோமனை மகளிரது இளமைப் பருவத்திற்குரிய கடவுளாகக் கொண்டு வணங்கினரென்பது பெறப் படுகிறது. ஆரியர் தெய்வங்கள் பலவும், கொள்கைகள் பலவும் சங்க இலக்கியத்திற் காணப்படுகின்றன. தமிழரது, தமிழ் இலக்கியத்தின்

சிறப்புமுப்பான கிலப்பகுதிகளைக் கூறும்பொழுது இந்திரன் மேகத்தின் இறைவன், ஒரு பகுதியைப் பெற்றான். இந்திரன் மட்டுமென்று, வேதங் கூறும் வேறுபல தெய்வங்களையும் தமிழர் அறிந்தும், போற்றியும் வந்தனர். அதுபோலவே சந்திரனையும் மகளிர் தங் கன்னிப் பருவத்திற்குரிய, அவாது வளர்ச்சிக்குரிய கடவுளாகக் கொண்டு, கன்னிவகளிர் பிறையைத்தொழுதனர் என்பதில் இழுக்கொன்றுமில்லை.

வேறு பல நாட்டினரைப் போல, சங்க காலத்துத் தமிழ் மக்களும் பிறையை வணங்கினர். எதற்காக வணங்கினரென்பது பெறப்படாவிடினும், பிற உதாரணங்களால் வளர்ச்சியின் தெய்வமாகவும், வேண்டியதை யளிக்கும் கடவுளாகவும் கொண்டாடினர் என்று துணியலாம். ஆயினும் பிறை தொழுதல் என்பது கன்னி மகளிருக்கே சிறப்பாயிற்று. தமது கன்னிப் பருவத்திற்குரிய தெய்வமாகவும், வேண்டியதை யளிக்கும் சிந்தாமணியாகவும் எண்ணித் தொழுதனர். பாற்கடலில் திருவிற்கு முன்தோன்றி, இறைவன் சடையை யடைந்து, பதினெண் கணங்களால் போற்றப்படும் சிறப்பையும் பெற்ற பிறை, பிறரால் வளர்ச்சிக்குரிய தெய்வமாகவும், விரும்பியதை யளிக்கும் கற்பகமாகவும் வணங்கப்பட்டது.

வணிகப் புலவர்கள்.

ராவ்பகதூர்,
கோ. ம. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் B. A., B. L.,
இந்து சமய அதிகிய கண்காணிப்பாளர்,
சென்னை.

வணிகத்தொழிலுக்குப்படிப்பு இன்றியமையாதது. உழுதுண் பார்க்கோ அஃது அத்துணை அவசியம் அல்ல. ஆகவே, பண்டைக்காலம் முதலாக வேளாளரைக் காட்டிலும் வாணிகர்கள் படிப்பைத் தம் வாழ்க்கைக்கு இன்றியமை யாததாகக் கொண்டிருந்தது வியப்பல்ல. எனவே, பண்டைத் தமிழ் இலக்கண நூலார் வணிகர்க்கு ஏற்படுத்திய அறுவகைத் தொழில்களில் ஓதல், வாணியம், என்னும் இரண்டையும் குறிப்பாகச் சேர்த்தினர் போலும், கொள்வதூஉம் மிகை கொடாது. கொடுப்பதூஉம் குறை கொடாது பண்டம் பகர்ந்து பொருள் ஈட்டல்'' இவர்கள் அறம் என வகுத்தனர். இத்தகைய வாழ்க்கையிலே எண் வகை உணவாகிய பயறு, உளுந்து, கடுகு, கடலை, கொள், எள், அவரை, துவரை, முதலியவை வித்தி விலைத்துப்பொருள் செய்து வாழும் உரிமை கொண்ட வர்கள் ஆவார்கள். தொழிலுக்குக் கணக்கு வைத்தல் இன்றியமை யாதது அல்லவா? ஏனைய நாடுகளிலும் வாணிகர்கள் படித்தவர்களே ஆவார்கள். ஆனால் அங்கோ தம் தொழிலுக்கு அளவான படிப்பையே அவர்கள் கொண்டுள்ளார்கள். நம் மாட்டிலோ வாணிகர்களில் சிற்சிலர் படிப்பில் அதிகமாகத்தேர்ந்து பெரும்புலவர்களாய் விளங்கியுள்ளார்கள் ஆகவே, கடைவைத்துக் கணக்கு எழுதும் வாணிகர்களில் புலமை விளங்கிச் சிறப்புப் பெற்றது நம்தமிழின் இணையற்ற பெருமையாகும்.

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றாகிய மணிமேகலையை இயற்றிய கூலவாணிகன் சாத்தனார் என்ற பெரும்புலவரின் பெயரை எண்ணும் காலத்திலேயே, அவருடைய தொழிலும் இன்னதென விளங்கும். கூலம் என்றால் தானியம்; அதில் வாணிபம் செய்யும் தொழிலைக் கொண்டதால் கூல வாணிகன் என்ற அடைமொழி அவருக்கு வந்தது. அவருடைய இயற்பெயர் சாத்தனார் என்பது. கூலவாணிகம் செய்யும் அப்பெரியார் பெரும் புலமை வாய்ந்தவரானார். சமய நூட்பங்கள் அகம் புறம்என்றஇருபொருளையும் கதைப்போக்கில் அமைத்துப்பாடுதல்

மெய்ப்பாடுகளை ஆங்காங்கு அமைத்தல், முதலியவைகள் அவர் இயற்றிய நூல்களில் சிறந்துள்ளன. ஆழ்ந்த படிப்பும், தேர்ந்த தெளிவும், நிறைந்த அறிவும், அந்நூலில் மிளிரக்காணலாம். திருக்குறள், தொல்காப்பியம் முதலிய சிறந்த நூல்களிலிருந்து இடத்திற்கேற்றவாறு மேற்கோள்களை அப்புலவர் எடுத்தாண்டிருப்பதைப் பார்க்கில் அவைகளை ஐயந்திரிபறக் கற்றவர் என அறியவேண்டும். ஆங்காங்கு அறக்கூற்றுகளை எடுத்துக்காட்டும் வண்மையும், மக்களின் இயற்கைப் பண்புகளைக் கதைப்போக்கில் அமைத்து நாடகம் போல் காட்டும் திண்மையும், இயற்கை அமைப்புச் செயற்கை வகுப்பு இவைகளை விரித்துரைக்கும் எளிமையும், இந்நூலில் விளங்குகின்றன. நகரங்களில் அமைந்திருந்த உட்பிரிவுகள் புறப்பிரிவுகள் முதலியவைகளை ஓவியம் போல எடுத்து விரித்துரைப்பர். தலைவன், தலைவியர் வரலாறுகள் அக்காலத்து மாண்பை இயல்பை தெளிவாகத் தெரிவிக்கின்றன. நகர அமைப்பு, நகர மாந்தர் இயல்பு, குடிவிவரம், தொழில்வகை, ஆலய கிர்மாணம், ஆலய வழிபாடு முதலிய பற்பல விவரங்களையும் அதில் அறியலாம். தற்காலப்புலவர்களைப்போல் வெறும் மனோபாவ வருணனைக்களில் அமைக்காது உள்ளதை உள்ளபடி கண்டகாட்சிகளையே தம் வரலாற்றில் எடுத்தாண்டுள்ளார். காதலின் செயல்களை எடுத்துக் காட்டும் முறைகளை ஆராய்ந்தால் தற்கால வனிகமும் இவர் கூற்றுகளுக்குத் தோற்றுவிடும் எனலாம். ஆகவே தான், திரை ஒளிப்படத்திலும் இவர் இயற்றிய கதை ஏறிவிட்டது எனலாம். தமிழில் புறச் சமயமாகிய பௌத்த சமயத்தின் கொள்கைகளைத் தெளிவாய்க்கூறும் நூல் இது ஒன்றே ஆகும். சமய வேறுபாடுகளை மிக வெறுப்போடு கோக்கும் தன்னுடைய புறச் சமயக் கொள்கைகளை நிலைநாட்டும் முறையினிலே ஒரு நூல் இயற்றிய இப்புலவரின் நெஞ்சின் திடமே திடமென்க.

மேலும் இப்புலவர் பெருமான் கடைச் சங்கத்து நூல்களில் கற்றிணையில் மூன்று பாடல்களும், குறுந்தொகையில் ஒன்றும், அகத்தில் ஐந்தும், புறத்தில் ஒன்றும், திருவள்ளுவமாலையில் ஒன்றுமாகப் பதினெரு பாடல்கள் பாடியுள்ளார். பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன் மாறனைப் புகழ்ந்து பாடியுள்ளார். (புறம் 59) இப்புலவர் மூல்லை ஒழிய ஏனைய கான்கு நிலங்களையும் பாடியுள்ளார். அகம் 59ல் அடிமாங்களில் சுரிமூக்கு கொள்ளைகள் மழைக் காலத்தில் ஏறி ஓட்டிக் கொள்வதைக் கூறியுள்ளார் அகம் 134ல் வெளிமான் கொம்பினை வாழைப்பூ உதிர்ந்த தாற்றோடு உவமைத்துள்ளார். அகம் 306, 320 இப்பாடல்களில் எடுத்துள்ள உள்ளுறை உவமங்கள் மிகவும் வியக்கத் தக்கவை. ஆகவே இப்புலவர் பெருமான் அகம், புறம் இரண்டிலும் மிகவும் தேர்ந்தவர் எனவேண்டும். உலக இயற்கையை கன்றாக அறிந்தவர் எனவேண்டும்.

மதுரையிலே சங்கத்தார் காலத்திலே மற்றொரு வாணிகப்புலவர் இருந்தார். அவருடைய பெயர் மதுரைப் பண்டவாணிகன்

தேவனுர் என்பது. அவரும் பண்டமாற்றுதல் செய்யும் வணிகரா யிருந்தார். பண்டம் என்றால் சரக்கு ; ஆகவே அவரை இக்காலத்தார் பலசரக்குக் கடைக்காரர் என்று சொல்லுவார்கள். இப்புலவர் பெருமான் பாலைத் திணையையும் குறிஞ்சித் திணையையும் பாடியுள்ளார். கற்றிணை 41ல் ஒரு காதலி விருந்துபுறந்தருதலை வியப்புறப் பாடியுள்ளார். அகநானூறு 298 ல் ஒரு தலைவன் இரவுக்குறி வருதலை வெகு அழகாக எடுத்துக் கூறியிருக்கின்றார். இப்புலவர் பாடியது கற்றிணையில் ஒரு பாட்டும் அகநானூறில் 3 பாடல்களுமாக நான்கு கிடைத்திருக்கின்றன. பாலை நிலத்தில் சென்ற தலைமகன் தன் காலில் படிந்த புழுதியை ஒரு கிணற்றில் இறங்கிக் கழுவினன் என்றும் அக்கிணற்றைச் சுற்றிப் பருத்தி முளைத்திருந்த தென்றும் வருணிக்கிறார். பருத்தி விற்கச் செல்லும் வாணிபர்கள் வழியே இருந்த அக்கிணற்றுக்கரையில் இளைப்பாறுகையில் பருத்தியின் விதைகள் அங்கே சிந்தினதினாலே பருத்திச் செடிகள் முளைத்தன. அதனாலே அக்கிணருனது பருத்திச் செடிகளால் சூழப் பட்டதாம்; அத்தகைய கிணற்றில் தலைவன் வெஞ்சுரத்தில் கடந்த கடுமையைத் தணித்துக் கொண்டானும் என்று அழகு பெறப்பாடி யுள்ளார்.

மேலும் பண்டைக்காலத்துத் தமிழர்களில் நிலம் உழுது விளைவித்த விளைபொருள்களில் வாணிபம் செய்ததுமன்றி, கைத் தொழில் செய்து ஊதியம் பெற்றும், அக்கைத்தொழில் சரக்குகளை வாணிபம் செய்தும், வாழ்ந்து வந்தார்கள். அவ்வாறு கைத்தொழில் செய்தவர்களிலும் கைத்தொழில் சரக்குகளில் வாணிபம் செய்தவர்களிலும் படித்தவர்கள் இருந்திருக்கிறார்கள். புலவர்களும் இருந்தனர். பொன்வேலை செய்பவர் களில் திருத்தண்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார் என்பவர் ஒரு வர். இவர் குறிஞ்சியையும் பாலையையும் பாராட்டியுள்ளார். கற்றிணையில் ஒரு பாடலும் குறுந்தொகையில் ஒன்றும் அகத்தில் இரண்டும் புறத்தில் ஒன்றுமாக ஐந்து பாடல்கள் கிடைத்திருக்கின்றன. பொன்னால் செய்த அணிகளை விற்பனை செய்யும் பொன் வாணிபர்களில் உறையூர் இளம்பொன் வாணிகனார், சாத்தன் கொற்றனார், காவிரிப்பூம்பட்டினத் துப்பொன்வாணிகனும்மகனார்ப்பூதனார், என்பவர்கள் சிறந்த புலவர்களாக இருந்தார்கள். அவர்களில் உறையூர் இளம்பொன் வாணிகனார் புறத்தில் 264 வது பாடல் பாடியிருக்கிறார். அதில் கண்ணுடன் கறவைகளாகிய கிரைமீட்டியபோது களத்தில்பட்ட தலைமகனது சிலைக்கல்லைக்கட்டி பூவையும் மயிர்ப்பீலியையும் சூட்டிப்பெயர் எழுதிய வரலாற்றைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். பாடபேதத்தை ஆராயும் போது இப்புலவரே உறையூர் இளம்பொன்வாணிகன் சாத்தன்கொற்றனை இருந்திருக்கலாம் எனத்தோன்றும். சாத்தன் கொற்றன் பாடியதாக உள்ளபாட்டு அகம் 117 ஆகும். ஆனால் இவரது பெயர் செயனார் இளம்பொன் சாத்தன் கொற்றனார் என்றும், செல்லூர் இளம்பொன் சாத்தன் கொற்றன் என்றும், காண்கின்றோம். இதனால், ஊர்ப்பெயர் மாறியிருப்பதை அறிக.

மேலும், அறுவை (துணி) நெய்பவர்கள் நெய்துகொடுக்க அதனை விற்பவர் அறுவை வாணிகர் எனப்பட்டார்கள். (தற்காலத்தில் புடவைக்கடைக்காரர் என்பர்) அவ்வித வணிகர்களில் மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் என்பவர் ஒரு சிறந்த புலவர். அவர் அகத்தில் 6-பாடல்களும் குறுந்தொகையில் ஒன்றும் நற்றிணையில் ஒன்றும் புறத்தில் ஒன்றும் ஆக 9-பாடல்கள் பாடியிருக்கின்றார். நற்றிணை 344ல் புலி முழங்குவதை இடிமுழக்கமாம் என்று கொண்டு குறவர் தினையைக் குவிப்பர் என நயம்படக் கூறியுள்ளார். இவ்வித்தக் குறவர் செயலிக்கூறி அதற்கு உள்ளுறை உவமமாகத் தினைகாத்திருந்த தலைவியைக் காவலில் வைத்து வெறிக் களத்திற்குக் கொண்டு போவதைச் சிறப்பித்திருக்கின்றார். அகம் 254ல் புரோடு விளையாடும் மைந்தரை நோக்கிக் காதலி வருந்துவாள் என்று தலைவன் கூற்றாக இப்புலவர் கூறியது பாராட்டத்தக்கது. இப்புலவர் பெரும்பாலும் குறிஞ்சி முல்லைகளையும் சிறுபான்மை பாலையையும் சிறப்பித்துள்ளார். நற்றிணையில் ஒன்றும் குறுந்தொகையில் ஒன்றும் அகத்தில் 6ம் புறத்தில் ஒன்றும் திருவள்ளுவமாலையில் ஒன்றும் ஆக 10 பாடல்கள் இப்போது கிடைத்திருக்கின்றன. புறநானூற்றுப் பாடல் 329-ல் கடுகல்லுக்குப் பலியூட்டி கன்னீராட்டி நெய்தலையிட்டு மாப்புகை மறுகுடனும் கமழ விழாச் செய்தலை ஒரு புலவர் வருணித்திருக்கின்றார். பொருளீட்டும் வணிகராயினும் காட்டு வழக்கங்களை கன்றாக அறிந்திருக்கின்றார்.

மற்றொரு புலவர் பெயர் மதுரை ஓலைக்கடை கண்ணம்புகுந் தாராயத்தனார் என்பது. இவரது தொழிற் பெயர் விளங்க வில்லை. இவர் புறத்தில் 350 ம் பாடலைப் பாடியிருக்கின்றார். அவ்வழி கடை வைத்த மற்றொரு புலவர் பெயர் மதுரைஓலைக்கடையத்தார்கல்வெள்ளை யார் என்பது. இவர் நற்றிணையில் 250, 369 என்ற இரு பாடல்களைப் பாடியிருக்கின்றார். இவரது பெயரால் இவர் பெண்பாலர் என்று ஊகிக்கப்படுகிறது. 'நிறையுடுகாமம் சிறையுடு கடும்புனலோடு ஒத்தது' என்று இவர் கூறியது வியக்கத் தக்கது. இமயமலையையும் கங்கை ஆற்றையும் கூறியுள்ளார். மருதம், நெய்தல் இரண்டினையும் கயந் தோன்றப் பாடியுள்ளார். ஊடல் தணிவித்தல் என்ற துறையில் புதல்வன் தேர் உருட்டிவருவதைச் சிறப்பித்துப் பாணனை அடைத்து 'நகுகம் வாராய் பாண' என்று விளிக்கும் 250 வது பாடல் படிக்கப் படிக்க இன்பம் தரும்.

மேலே கண்ட புலவர்கள் வரலாறுகளையும் அவர்களின் புலமைத் திறத்தையும் காணும் போது பண்டைக் காலத்தில் தமிழர்களில் எல்லாத் தொழிலாளர்களும் படிப்பில் சிறந்து புலமை பெறும் மட்டும் விளங்கினர்கள் என்று அறிகின்றோம். ஆனால் இடைக் காலத்தில் அப்படிப்பும் புலமையும் ஏன் குறைந்து விட்டனவோ அறியக்கூடவில்லை. ஒரு வேளை அரசாங்க மாறுதல், சமூக மாறுதல் முதலியவற்றால்

சீர்கேடு உற்றிருக்கலாம். சைவம் தழைத்து ஓங்கிய காலத்தில் காரைக்கால் அம்மையார், பட்டினத்து அடிகளார் என்ற இரு பெரும் வணிக குலத்து அடியார்களைத்தான் தமிழ்நாடு பெற்றது. இப்பெரியார் களுடைய பாடல்கள் பதினொரும் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. அவைகளின் சிறப்புக்களை நாம் ஒருவாறு அறிந்திருப்போம். ஆதலினால் இங்கு விவரிக்கவில்லை. வைணவர்களில் திருக்கச்சி நம்பிகள் என்ற ஒரு பெரியார் பிற்காலத்தில் அவதரித்தார். அவருடைய புலமைத்திறம் அறியக்கூடிய வாக்குகள் நமக்கு கிடைக்க வில்லை. உடையவருக்கு ஆசிரியராக இருந்து அவருடைய பெருமையை உலகத்திற்கு அறிமுகப் படுத்திய மேன்மை இப்பெரியாருடையது என்க. இடைக் காலத்தில் வாணிப இயக்கம் குறையப் புலமையும் குறைந்தது போலும்.

சமீப காலத்திலும் வாணிகர்களில் ஒரு சிலரே புலமைப் பெற்றிருக்கக் காண்கின்றோம். தேவிகோட்டை சின்னயச் செட்டியார், சொக்கலிங்க ஐயா முதலிய புலவர்கள் செட்டிநாட்டில் தோன்றினர். தற்காலத்தில் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் புலவர்களுக் கெல்லாம் முடிமணியாக விளங்குகின்றார். வாசகர், எழுத்து, போதனை, இம்மூன்றிலும் மிகச் சிறந்தவர். தமிழ் மொழியிலும் அங்கதம் உண்டு என்று முதல் முதலில் வெளியிட்ட ஆராய்ச்சியாளர் இவரே. அதனை தம்வாக்கில் வேண்டியமட்டும் பயன் படுத்திக் கொண்டு கேட்போரைமகிழ்விப்பர். அன்னார் அடிச்சுவட்டைப்பின்பற்றி இரண்டு மூன்று இளங்காளைகள் இப்பொழுது தோன்றியுள்ளார். இத்தகைய பேராளர்களாலே வாணிக உலகம் சிறப்படைந்து ஓங்கிவருகின்றது.

கோவை கிழார்.

சங்ககாலத்துப் பெண்பாற் புலவர்கள்

இராசாமணி அம்மையார் அவர்கள் M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
மேரிஅரசி கல்லூரி, சென்னை.

சங்க காலம் என்பது, பாண்டிய நாட்டிற் றலைசிறந்து விளங்கிய மூன்று சங்கங்களுள் ஞ் கடைச்சங்க காலத்தையே குறிக்கும். அவ்வமயம் பல புலவர்களாலும் எழுதப்பட்ட நூல்கள், பின்னுல் தொகுக்கப்பட்டன. அத்தொகை நூல்களுள்சில, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு முதலியவைகளாம். நமக்குக் கிடைத்துள்ள நூல்கள் யாவும் கடைச்சங்க காலத்திலிய ற்றப்பட்டவைகளே யாகும். இச்சங்கத்தின் இறுதிக்காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதி அல்லது மூன்றும் நூற்றாண்டின் தொடக்கம் என்று கூறப்பட்டுள்ளது. ஆயினும், வரலாற் றாராய்ச்சியாளர் பலரும் பலவிதமாகக் கூறுவர்.

சங்கச்செய்யுட்களே நோக்குமிடத்து, அவையாவும் பல்வேறு மதத்தினராலும், பற்பல மரபினராலும், பல்வேறு காலங்களில் இயற்றப்பட்டனவாய்த் தெரிகின்றன. அரசர்களிற் சிலர், சிறந்த புலவர்களாய் விளங்கியுள்ளனர். உதாரணமாகக் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி, ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியன், தலையாலங்கானத்துச் செரு வென்றபாண்டியன் முதலியோரைக் கூறலாம். அந்தணர் பலரிருந்தனரென்பதற்குக் கபிலரைக் குறித்துக் கூறப்பட்டுள்ள 'புலனழுக்கற்ற வந்தணாளன்' என்னுந்தொடரே மொழியே சான்று பகரும்.

சங்ககாலத்தில் பெண்பாற் புலவர்களும் இருந்திருப்பதாய்த் தெரியவருகிறது. 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' என்னும் புன்மொழியைப் பொய்ப்பிக்கவந்த பாவையருட்சிலர் அக் காலத்திலேயே தோன்றியிருந்தமை மிக்க மகிழ்ச்சிக்குரியதேயாம். அவர்கள் தொகையிற் குறைவாயிருந்தபோதிலும், பேராசர், சிற்றரசர், வள்ளல்கள் முதலியோரிடம் சென்று, அவர்களைப் புகழ்ந்துபாடி

அணிகலன்களுக்குரிய பொன் முதலிய பரிசில்களைப்பெற்றுவருவதிலும், கற்பிலும், வீரத்திலும் சிறிதும் குறைந்தவர்களல்லவென்பதற்குப் புற நானூறு ஒன்றே போதிய சான்றாகும்.

சங்ககாலத்தில் விளங்கிய பெண்பாற் புலவர்களுள், ஆதிமந்தியார், வெள்ளிவீதியார், ஔவையார், பூதப்பாண்டியன் தேவியார், காக்கை பாடினியார் முதலியோர் முக்கியமானவர்களாவர். அக்காலத்து மக்களது பெயர்கட்கும், இக்காலத்து மக்களது பெயர்கட்கும் மிகுந்த வேறுபாடுண்டு. ஆகவே சங்ககாலத்துப்புலவர்களது பெயர்களினின்றும் பெண்பாற் புலவர்களது பெயரை வேறுபடுத்துவது மிகவும் கடினமாயிருக்கிறது. எல்லாப்பெயர்களும் 'ஆர்' என்னும் பொது விகுதி பெற்றுள்ளன. ஆகவே, அவர்களது செய்யுட்களினின்றும் அவர்களை யொருவாறு கண்டுபிடிக்க வேண்டியதாயிருக்கிறது.

சங்ககாலத்துப் பெண்பாற் புலவர்களுள் **ஆதிமந்தியார்** என்பவர் காலத்தாற் முற்பட்டவர். கரிகாற் பெருவளத்தானின் அருமைப் புதல்வியர். சிறந்த புலமைவாய்ந்தவர். **ஆட்டனத்தியென்பானை** மணந்துகொண்டனர். ஒருக்கால் இவரும் இவரது கணவரும் புதுப் புனல் விழாவுக்குச் சென்றிருந்தகாலை, ஆட்டனத்தியைக் காவிரி வௌ்ளமியதாகவும், அவரையாண்டுத்தேடியும் அகப்படாது, கடைசியில் கடலே அவரைக்கொண்டுவந்து முன்னர் நிறுத்தியதாகவும், 'சிலப்பதிகாரத்திலும்' தெடுத்தொகையிலும் கூறப்பட்டுள்ளது. தலைவியர் தலைவரைப்பிரிந்து வருந்துகின்ற இடத்திலெல்லாம் ஆதிமந்தியாரையே புலவர்கள் உதாரணமாகக் கூறுகின்றனர். இவர் பெயரும் இவரது கணவர் பெயரும் முதற்குறையாக மந்தியெனவும், அத்தியெனவும் வழங்கப்படுகின்றன. குறுந்தொகையிலுள்ள

> "மள்ளர் குழீஇய விழவி னானும்
> மகளிர் தழீஇய துணங்கையானும்
> யாண்டுங் காணேன் மாண்டக் கோளே
> யானுமோ ராடுகள மகளே யென்கைக்
> கோடு நிலங்குவளை கெளிற்ற
> பீடுகெழு குரிசிறு மாடுகள மகளே"

என்னுஞ்செய்யுள், காதலற்கெடுத்த, அஃதாவது, கணவனைக்காணப் பெறுத ஆதிமந்திபாட்டு என கச்சினார்க்கினிய ருரைத்திருப்பதால், ஆதிமந்தியார், சிறந்தபுலமை வாய்ந்தவரென்று தெரிகிறது.

'வெள்ளி வீதியார்' என்பவர் சங்ககாலத்திலிருந்த மற்றொரு பெண்பாற்புலவர். இவர் அனேக பாடல்களைப் பாடியுள்ளனர். அவற்றுட்பல, பிரிவுபற்றி வருவனவேயாம். தலைவன் மாட்டுவைத்த அன்பினால், இவர், 'முன்நீர் வழக்க மகடூஉ வேரடில்லே' யென்னும் புலனெறி வழக்கிற்கு மாறாக, அவன் சென்றுழிச்செல்லவேண்டிக் காடு முதலியவற்றைக் கடந்து சென்றார். இது, அறிவிற்சிறந்த பெருந்தகை

மகளார் ஒருவர் உழுவலன்பினால் நிகழ்த்திய அருஞ்செயலாதலின், ஔவையார், கற்பின்பாற்றலினி, பிரிந்த தலைவன்பாற் செல்லத் துணிந்தமையை,

> நெறிபடு கவலைய நிரம்பா நூரிடை
> வெள்ளி வீதியைப் போல நன்னுஞ்
> செலவயர்ந் திசினால் யானே என்றுகூறினர்.

கண்ணகியென்னும் கற்புடையமாது, கோவலன் பின் சென்றதும் இப்புலனெறி வழக்கிற்குமாறாயினும், அன்பின் தகைமையால் ஆன்றோரால் புகழ்ந்து பாராட்டப்படுதல் போல் இதுவும் பாராட்டப் படுதல் வேண்டும்.

தன்கணவனைப் பிரிந்த வெள்ளிவீதியார், பிரிவாற்றுமையினால், எப்படி கல்ல பசுவின்பால் கன்றுக்கும் உதவாமல் கலத்திலும் கறக்கப் படாமல் வறிதே பூமியில் உகுக்கப்படுகின்றதோ, அவ்வாறே தன்னுடைய அழகும் இளமையும் தன் கணவனுக்கும் தனக்கும் பயன் படாமல் பசலை நோயாலுண்ணப்படுகிறது என்னுங் கருத்துடைய பாட்டைப்பாடியிருப்பதால், இவர் கல்விசைப்புலமை வாய்ந்தவரென விளங்குகிறது.

நற்றமிழ் நாட்டுமக்களுள் ஔவையாரை யறியாதவர்களே கிடையாது எனத்திட்டமாய்க் கூறலாம். இவர் கபிலர் காலத்தவர். இவரது பிறப்பையுணர்த்தும் வெண்பாவொன்றுண்டு. இவர், தம் வாழ் நாளின் பெரும்பகுதியை ஊரூராய்ச்சென்று, ஆங்காங்குள்ளவர்களைப் புகழ்ந்து பாடுவதில் கழித்தனர். பறம்புநாட்டை யாண்டுவந்தவனும், நற்றமிழும்பேறப்பாடாத முல்லைக்குத் தேரளித்தவனுமாகிய பாரி வள்ளலது மகளிர், குளிரால் நடுங்கிய ஔவைக்கு நீலச்சிற்றுடை கொடுத்ததற்காக அவர்களைப்புகழ்ந்து பாடியுள்ளார் என்பதைத் தமிழ் நாவலர் சரிதை தெரிவிக்கின்றது. அஃதாவது,

> "பாரி பறித்த கலனும் பழையனூர்க்
> காரியன் நீங்த களிக்கோலுஞ்—சேரமான்
> வாராயோ வென்றழைத்த வார்த்தையுமிம் மூன்றும்
> நீலச்சிற் றுடைக்கு நேர் தமிழ் நாவலர் சரிதை

இதினின்றும் இவரது நன்றிப்பெருக்கு விளங்குகின்றது.

ஒருக்கால், இவர், இப்பொழுது தர்மபுரியென வழங்கப்படும் நகரையாண்டுவந்த அதியமானது அவைக்களத்திலிருந்த காலத்தில் அவனால் கொடுக்கப்பட்ட, கிடைத்தற்கரிய நெல்லிக்கனியை யுண்டு, அவனை "நீலமணிமிடற் றொருவன் போல மன்னுக பெரும" என்று மனமார வாழ்த்தினர். அச்செய்யுள் மிகச் சுருங்கிய முறையிலமைக்கப் பட்டிருந்தபோதிலும், அது தெளிவான விரிந்த பொருளைத்தன்னகத்தே கொண்டுள்ளது. அஃதாவது, தேவரும் அசுரரும் அமிர்தம் பெறும் பொருட்டு மந்திரகிரியை மத்தாகவும், வாசுகியென்னும் பாம்பை

காணுகவுங்கொண்டு திருப்பாற் கடலைக் கடைந்த காலத்தில், வாசுகி யானது வலிபொறுக்க மாட்டாமல் நஞ்சைக் கக்கியது. மரணத்தைத் தடுக்கும் மருந்தாகிய அமிர்தத்தையுண்டும் தேவர் இறந்தனர். ஆனால், மரணத்துக்கேதுவாகிய நஞ்சையுண்டும் சிவன் என்றும் நிலைத்துளான். ஆகையால், நெடுங்காலம் உயிர்பெற்றிருப்பதற்குரிய நெல்லிக்கனியை நீயுண்ணிடினும், சிவனைப்போல் என்றும் நிலைபெற்றிருப்பாயாக என்று வாழ்த்தினள். இன்னும், 'நீங்கனி குறியாது ஆதல் கின்னகத் தடக்கி' யென்னுஞ் சொற்றொடர்கள் பொருள் பொதிந்து விளங்கு கின்றன. அஃதாவது, அவ்வினிய நெல்லிக்கனியானது கிடைத்தற் கருமையான தென்பதையும், அதனையுண்டாரும் நன்மையையுங் கூறினுல், நான் அக்கனியையுண்ணை மறுத்துவிடுவேனென்றெண்ணி, அவற்றைக் கூறுது விடுத்தனையென்று புகழ்ந்தார்.

இன்னும் அதியமான், ஔவையாரை ஒருசமயம் தொண்டைமா னுழைத் தூதுவிடுத்தனன். அவ்வமயம் அவன் தன் படைக்கலக் கொட்டிலை ஔவையாருக்குக் காட்ட, அவர், பழிப்பதுபோலப்புகழ்தல் என்னும் அணி தோன்றுமாறு, அதியமானுடைய படைக்கலங்கள் யாவும் துனியும் ஓரமும் முறிந்து கொல்லனுடைய உலைக்களத்தில் இருப்பதாயும், தொண்டைமானின் ஆயுதங்கள் நெய் பூசப்பெற்றும், மயிற்பீலி, மாலை முதலியவை அணியப்பெற்றும், கரவலையுடைய மாளிகையில் ஒழுங்காக வைக்கப்பட்டிருப்பதாயும், அதியமானின் வீரத்தையும் தொண்டைமானின் வீரமின்மையையும்பற்றிப் பாடினர்.

ஔவையார் சேர, சோழ, பாண்டிய நாடுகளில் நெடுங்காலம் உலவிவந்தார் என்பதுவும், அவர் காலத்தில் தொண்டை நாட்டிற் சான்றோர் பலரிருந்தனரென்பதுவும்,

> "வேழ முடைத்து மலைநாடு மேதக்க
> சோழ வளநாடு சோறுடைத்துப்—பூழியர்கோன்
> றென்னுடு முத்துடைத்தத் தென்னீர் வயற்றொண்டை
> நன்னுடு சான்றோ ருடைத்து."

என்று இவர் பாடியதினின்று மறியலாகும்.

இன்னும், இவர் ஊரூராகச் சென்ற காலத்தில் பொய்யாமொழிப் புலவரால் பாடி கிறுத்தப்பட்ட பாதியை இவர் பாடிமுடித்தாரென்பது, 'தண்ணீருங் காவிரியே' என்பதினின்றும் தெரிகிறது. சங்ககாலத்தை யடுத்திருந்தவர் பொய்யாமொழியார் எனக் கூறப்படுவதால், ஔவையார் நெடுங்காலம் உயிர் பெற்றிருக் திருக்கவேண்டும் என்று யூகிக்கவேண்டி யதாயிருக்கிறது.

சங்ககாலத்தில் விளங்கிய பரிமகளிரும் சிறந்த புலமை வாய்ந்தவர் எனத் தெரிகிறது. முடியுடை மூவேந்தராகிய சேர, சோழ பாண்டியர் வந்து பறம்புகாட்டைமுற்றுகையிட, பாரியினது அவைக்களத்திலிருந்த வரும், அவனது ஆருயிர் கண்பருமாகிய கபிலர் அம்மன்னரை நோக்கி,

நீவிர் எத்துணைக்காலம் முற்றுகையிட்டபோதிலும் காஞ்சிகள்உணவின்றி வருந்தோம். ஏனெனில், இக்காடு உழவருழாத நான்குபயணையுடைத்து. அஃதாவது, சிறிய இலைகளையுடைய மூங்கிலில் நெல் விளைகின்றது. இனிய பலாக்கனிகளும், வள்ளிக்கிழங்குகளும் உண்டாகின்றன. தேன் கூடுகள் உடைவதால் அவற்றிலுள்ள தேன், மலையின்மீது வழிந்து ஓடுகின்றது. பாரியின் பறம்புமலை ஆகாயத்தைப் போல் விசாலமாயுள்ளது. அதில் விண்மீன்களைப் போன்ற தெளிவான நீரையுடைய சுனைகள் அனேகம் உண்டு. ஆகையால், நீங்கள் மறந்தோறும் உங்களுடைய யானைகளையும் இடந்தோறும் உங்களுடைய தேர்களையும் உடையவர்களாயிருப்பினும், நீங்கள் அவனை வாளினால் வெல்லுதல் இயலாதகாரியம். ஆனால், சிறிய யாழையுடைய புலவர்கள், விறலியர் பின் தொடர, ஆடிப்பாடிக்கொண்டு வருவார்களானால், அவன் தனது நாட்டையும் குன்றையும் ஒருங்கே கொடுத்துவிடுவான் என்று அப்பாரியினது புலவருக் கருமையையும், இரவலர்க் கெளிமையையும் எடுத்துக் கூறினர். அப்போது அவர்கள் பாரியை வெல்ல முடியாமற் போனபோதிலும், சிறிது காலங்கழித்து அவனை வஞ்சனையாற் கொன்றுவிட்டார்கள்.

பாரி மிறந்தவுடன், கபிலர், அவனுடைய மரணத்துக்காக வெகுவாய்த் துன்புற்று அவனது மகளிரை மணம்புரிந்து கொடுக்கும் பொருட்டு அழைத்துச்செல்லுகையில், அவர்கள் புறப்பட்டுச் சிறிது தூரம் சென்றவுடன் ஆற்றுமை மிகுதியால் ஒரு செய்யுளைப் பாடினர். அஃதாவது,

அற்றைத் திங்க ளவ்வெண் ணிலவி
னெந்தையு முடையே மெங்குன்றும் பிறர்கொளா
நிற்றைத் திங்க ளிவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெங்
குன்றுங் கொண்டார் யாமெந்தை யுமிலமே.

அதற்கு முன்திய நிலைக் காலத்துத், தமது அரண்மனையில் மகிழ்ந்து விளையாடியதையும் அடுத்த இந்நிலைக்காலத்தில் தம் தந்தையையும் பறம்பு நாட்டையு மிழந்ததையும் நினைவு கூர்ந்துபாடிய இப்பாட்டுப், புறநானூற்றில் காணப்படுகிறது.

பாரி மகளிர், கபிலர்பாற் பயின்றதனால் கல்விசைப் புலமையுடைய ராய் விளங்கியதுடன், தம் தந்தையைப் போலவே வள்ளன்மையிலும் சிறந்துவினங்கினர். அஃதாவது, ஒரு சமயம் உணவு கிடைக்காமல் வருந்திவந்த பாண் மகனொருவனுக்கு உலையில் பொன்னைப் பெய்து சோறாக்கியுண்பித்தனர் என்று கூறப்பட்டுள்ளது. ஔவையார், கபிலர் முதலானோர், இவற்றைப்பற்றி அனேக செய்யுட்களியற்றியுள்ளனர்.

ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியன் தேவியாரும் கல்விசைப்புலமையும் கற்பும் வாய்ந்தவர். முடியுடை மூவேந்தராகிய சேர, சோழ, பாண்டியர் உலகந்தோன்றியதுமுதற்றோன்றிய தொன்மை வாய்ந்தவ

ரென்று கூறப்பட்டுள்ளது. அவர்களுக்குள் பாண்டியரே பெருமை வாய்ந்தவர். ஏனெனில், தமிழ்ச்சங்கத்தோன்றியதும், செந்தமிழ் நாடென வழங்கப்படுவதும் பாண்டியநாடேயாம். தமிழை வளர்த்தவர்களும், சங்கங்களுக்குத் தலைமை வகித்தவர்களும் அங்கத்தினராயிருந்தவர்களும் பாண்டியர்களேயாகும். ஆகவே, அப்பாண்டியர் குலத்துதித்த பூதப்பாண்டியன் சிறந்த நூற்பயிற்சியும், வீரமும் முடையனவன் என்பது,

அவர்ப் புறங் காணே னுயிர் சிறந்த
பேரம ருண்க ணிவளினும் பிரிக

என்று, அவர்கூறிய வஞ்சினத்தினின்றும் புலனாகும். அஃதாவது, பகைவரைப் புறமுதுகிட்டு ஓடச்செய்யேனுயின் யான் என் மனைவியை விட்டுப்பிரிவேனாக என்று கூறுகிறான். இவன் சிறந்தபுலவன் என்பதற்கு, அகநானூறு, புறநானூறு முதலியவற்றிற் சிலபாடல்கள் காணப்படுகின்றன.

ஒத்தகிழவனும் கிழத்தியுமாகிய இவ்விருவரும் இல்லத்தை இனிது நடத்திவருங்காலையில், கூற்றுவன் பூதப்பாண்டியனது உயிரை வௌவிச் சென்றான். பெருந்தேவியாரின் துன்பவெள்ளம் கரைகாணுது புரண்டோடிற்று. இவரது கேண்மை மிகவும் உயர்ந்த கேண்மையன்றோ, மக்களிழந்த இடும்பையினும், மனையாளிழந்த இடும்பையிதும் மிக்க இடும்பை, ஓவாத விதவை யிடும்பையன்றோ? தந்தை, தாய் முதலாயினோரை யிழந்தவரது துயரையாற்றுதற்கு அம்முறை சொல்லிப்பிறரைக் காட்டுவதுண்டு. ஆனால் கணவனை யிழந்தாருக்கு அங்ஙனம் சொல்லிக் காட்டுதல் கூடாததன்றோ? ஆகவே, அவரது நெஞ்சம் பட்டபாட்டை யாரோ எடுத்தியம்பவியலும்? 'பசைந்தாரைத் தீர்தலிற் றீப்புகுதல் கன்று' என்பதற்கிணங்க, தேவியார் ஈமத்தீயிற் பாயத்துணிந்தனர். அவ்வமயம் அங்கு கூடியிருந்த மதுரைப்பேராலவாயர் முதலிய புலவர்கள், தம்மோடொத்த அறிவுடைய அரசியையிழக்க மனம்வராது, அவரைத் தீப்புக விடாமற்றடுத்தனர். அதுகண்டதேவியார் அவர்களை நோக்கி,

பல்சான் றீரே பல்சான் றீரே
செல்கெனச் செல்லா தொழிகென வீலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே

என்றுகூறித் தீயிற் பாய்ந்து உயிர்நீத்தனர். தன் கணவனை நீங்கிய உலக வாழ்க்கையானது அத்தேவியாருக்குச் சுடுதீயாயிற்று ஆனால், அவளிறத்தற்குக் காரணமான தீயோ, குளிர்நீர்ப்பொய்கையாயிற்று. இஃது இவரது கற்பின் திறத்தைக் காட்டுகிறது.

இதே கருத்து மணிமேகலை ஆதிரை பிச்சையிட்ட காதையில் காணப்படுகிறது. அஃதாவது, சாதுவன் இறந்தானென்பதைக் கேட்ட ஆதிரை, நீமூட்டி அதிலிறங்க, அவன் தீயால் பாதிக்கப்படாமல் விரை மலர்த்தாம்ரை யொருதனியிருந்த செய்யோள் போன்றினிதிருந்தனள்.

பின்பு அசரீரிதோன்றி, அவள் கணவன் விரைவில் திரும்பி வருவான் என்று சொன்னதைக் கேட்டவுடன் பொய்கைபுக்காடிப் போதுவாள் போன்று தன்னில்லத்திற்குச் சென்று பத்தினிப் பெண்டிரும் விரும்பித் தொழும் பரன்மையளாயினள்.

கணவன் இறந்தா னென்பதைக் கேட்டவுடனே உயிர்விடுதல் முதற்கைம்மை யெனப்படும். இது மிகக் குறைவாக நிகழக்கூடிய ஓர் நிகழ்ச்சி. உதாரணமாகப் பாண்டியன் நெடுஞ்செழியன் இறந்தவுடனே, கோப்பெருந்தேவியினது உயிர் நெடுஞ்செழியனது உயிரைத்தேடிச் செல்வதுபோல் சென்றுவிட்டதென்று இளங்கோவடிகள் கூறுகின்றனர். இது முடியாத காரியமாகையால், முற்காலத்திலிருந்த கற்பரசியர் உடன்கட்டை யேறுதலைக் கைக்கொண்டிருந்தனர். இஃது இடைக் கைம்மை யெனப்படும். இன்னும் சிலர், உயிரின்மீதுள்ள விருப்பத் தாலோ, மற்றெக்காரணத்தாலோ, வெள்ளுடையுடுத்தி, ஒருவேளையுண வருந்தித் தரையிலுறங்கிக் காலங்கழிக்கின்றனர். கடைக்கைம்மை யெனப்படும்.

ஆகவே, பூதப்பாண்டியன் தேவியார், கைம்மை நோன்பினை வெறுத்ததாலும், கணவருடன் மாய்தலைக் குறித்து மகிழ்ச்சியடைந்த தாலும், தன்னைத் தடுக்கவந்தவர்களைப் பொல்லாச் சூழ்ச்சியர் என்று முணிந்து கூறினர். இத்தகையோருக்கே 'தெய்வந் தொழாஅள் கொழுகற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யு மழை' என்னுங் குறள் பொருந்தும்.

'பசைந்தாரைத் தீர்தலிற் றீப்புகுதல் கன்று' என்பதை நட்புடைய ஆண்மக்களும் விளக்கிக் காட்டியுள்ளனர். உதாரணமாகக் கோப்பெருஞ் சோழன் இறந்தவுடன், பிசிராந்தையார் வடக்கிருந்து உயிர்துறந்தார். அவ்வாறே, பாரியிறந்தவுடன் கபிலர் தீப்பாய்ந்து உயிர்நீத்தார். இதி னின்றும் இவரது உயர்ந்த கேண்மை விளங்குகிறது.

சேரமன்னர்களைப்பற்றிய நூலாகிய பதிற்றுப்பத்திலும் ஆரும் பத்தால், காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்பவர் ஆடுகோட் பாட்டுச்சேரலாதன் என்னுஞ்சேர மன்னனைப்புகழ்ந்துபாடி அணிகலன் களுக்காக ஒன்பதுதுலாம் பொன்னும், நூறாயிரங்காணமும் அளிக்கப் பட்டார். பாடினி, செள்ளையென்னும் இவர் பெண்பாற் புலவரென் றெண்ணப்படுகிறார். குறுந்தொகையிலும், புறநானூற்றிலும் இவரது பாடல்களுண்டு.

இன்னும், மாரோகத்து நப்பசலையார் என்பவர், பிரிவு காலத்தில் மகளிரெய்தும் பசலையென்னும் நிறப்பெயராற் சிறந்து விளங்குகின்றார். இவர், சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளி வளவனையும், மலையமான் திருமுடிக்காரியையும் பாடியுள்ளார்.

காவற்பெண்டு என்னும் புலவர், சிற்றினற்றாண் என்னும் புறப் பாட்டையியற்றியுள்ளார். இதினின்றும், இவர் வீரக்குடியினுதித்தவ ரென்றும், புலியையொத்த போர் வீரனொருவனை மைத்தனாக உடையவ ரென்றும், அவ் வீரனைப் போர்க்களத்துக் கனுப்பியபின் தன் வயிற்றினைப் புலி தங்கியிருந்த முழையாகக் கருதினரென்றும் தெரிய வருகிறது. காவற்பெண்டும் அடித்தோழியும் என்ற சிலப்பதிகாரத்து உரைப்பாட்டுமடைத் தொடரால் அறியப்படுதலால், இவர், தலைவன் ஒருவனை வளர்த்த செவிலியென்று கருதலாம். அன்றி, காவற்குடியிற் பிறந்த பெண்டு என்றும் கூறலாம்.

பாண்டிநாட்டினுள்ள ஒக்கூர் என்னு மூரிற் பிறந்த மாசாத்தியார் என்பவர் புறநானூற்றினும், அகநானூற்றினும் சிலபாடல்களைப் பாடியுள்ளார். அவற்றுள் புறநானூற்றினுள்ள பாட்டு ''கெடுக சிந்தை கடிதிவள் துணிவே'' என்று வீரமகளிரைப்பற்றிப் பாடப்பட்டுள்ளது. அஃதாவது, மறக்குடியினுதித்த ஓர் பெண்மணியின் தமையன், சிறிது நாட்களுக்குமுன் கடந்தபோரில், யானைப்படையை வீழ்த்திப் போரில் மாண்டனன். முந்திய நாள் நடந்த போரில், அவளது கணவன் யானைப் படையையழித்து வீழ்ந்திறந்தான். அப்படியிருந்தும், அவள் தனது ஒரே மைந்தனென்றும் பாராது, அவனிடம் வேலாயுதத்தைக் கொடுத்து, வெள்ளாடையணிவித்துப் பாறுமயிர்க்குடுமி யெண்ணெய் நீவிப் போர்க்களத்துக் கனுப்புகிறாள்.

இன்னும், பொன்முடியார் என்னும் பெண்பாற்புலவர் ஈன்று புறந்தருதல் என்றலைக்கடனே, வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே, களிறெறிந்து மீளுதல் காலைக்குக்கடனே, என்னுஞ் செய்யுளைப் பாடியுள்ளனர்.

இத்தகைய வீரப்பெண்மணிகள் அக்காலத்தில் கம்நாட்டிலிருந்த தால்தான் மேனாட்டார், இந்தியநாட்டுக் நாட்டுக் கிரேக்கர் என்றழைத் தனர். கிரேக்கர், வீரத்திற்கும், வாணிபத்திற்கும் பெயர் போனவர்கள். ஒருசமயம் தமது நாட்டின்மீது படை யெடுத்துவந்த மிகப்பெரிய பாரசீகச் சேனையை முந்நூறு கிரேக்கர் எதிர்த்துப் போர்புரிந்ததாகச் சரித்திரம் கூறுகின்றது. கிரீஸ் தேசம் தீழ்நிலையை யடைந்தபின் பைரன் என்னும் புலவர் அக்காலத்திலிருந்த 300 வீரர்களில் இப்பொழுது மூவர் கூட இல்லையே யென்று வருந்துகின்றார்.

இங்ஙனம் மேனாட்டாராலும் புகழத்தக்க வீரம் பொருந்திய நம் நாடு இப்போது மிகவும் கீழான நிலைமையிலிருக்கிறது. ஆகையால் அதனுடைய பழையஉயர்வை ஒவ்வொருவரும் நினைத்துத் தாய்நாட்டை மேன்மைப் படுத்த முயலுவோமாக.

இலக்கிய மறுமலர்ச்சி

(கி. பி. பனிரண்டாம் நூற்றாண்டுவரையில்)

வித்துவான், இ. கே. நடேச சர்மா அவர்கள்

தமிழ் விரிவுரையாளர்,

மலையாளக் கல்லூரி, சென்னை.

தமிழ் மொழியின் தனிநிலை, கலப்புக்கரந்து தனித்து நின்றநிலை, குறிப்பாகவும் வெளிப்படையாகவும் கலந்து நின்றநிலை, எதுவரினும் வருகவெனு வின்றி யமையா நற்கலப்புடன் எவர்க்கும் இன்பந்தந்து நின்றநிலை, பெருங்காப்பியத்தோற்றம், கலப்பில் அழகு, கவிச்சக்கரவர்த்திகளின் ஆட்சி முதலியன இக்கட்டுரையின் குறிக்கோள்களாகும்.

1. சங்க காலம்.

அகத்தியர் காலத்தொட்டே தமிழ்மொழிக்கண் இலக்கியங்கள் தோன்றின என்பர் சிலர். அதன் முன்னரும் அவை தோன்றி மறைந்தன என்பர் பலர். முதற்கண் அறத்தையும் பொருளையும் உள்ளீடாகக் கொண்டு பல நூல்களும், அகத்தையே அல்லது இன்பத்தையே பொருளாகக்கொண்டு பலநூல்களும் தோன்றினவென்பது ஒருதலை. அந்நூல்களெல்லாம் வடித்த செந்தமிழ்ச் சொற்களான் தொல்லாணை நல்லாசிரியர்களானும் ஏனைப்புலவர் பெருமக்களானும் பாடப்பெற்றவை. அந்நூல்கள் தோன்றிய காலமே சங்ககாலம். அக்காலம் தலை இடை கடையென மூப்பகுப்பினது. அக்காலத்துப் பகுக்கப்பட்ட நூல்களும் மூத்திறத்தன. அவை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு என்பனவாம். அத்தொகைநூல்களின் வாயிலாக நஞ் செந்தமிழ்மொழி அக்காலத்து எய்ஞ்ஞனம் தனியரசு புரிந்து வந்த தென்பதைப் படிப்பவரே நன்குணர்தல் கூடும். கவியின்பத்தினைத் தம்மைப்போலவே ஏனையோருக் துய்த்தின்புற வேண்டுமென்னுங் கருத்தினைத் தமிழ்க்கவிகள் நன்குணர்ந்தவர். பலநூற்றாண்டுகள்கழிய,

தமிழ்ப்பயிற்சியும் குறைய அந்நூல்கள் சிலர்க்கு எட்டா இன்கனி களாயின. இக்காலத்து அக்கனிகளே கம்மக்கள் நன்கு நுகரலாமாயினும் காலக்கோளிஞற் காய் கவர்கின்றராயினர்.

2. இடைக்காலம்

கடைச்சங்க காலத்தை யடுத்த சில நூற்றாண்டுகளிலே சங்க காலத்திற்போலத் தமிழ்வளர்ச்சியிருந்ததோ வென்றையுறுவதற்குச் சில காரிகளும் குறிகளும் உள. யாண்டுகள் பல கழியினும் தமிழ்ச் சான்றோரின் சீரிய கருத்துக்கள் நானவில் புலவர் பெருமக்களானும் பிறரானும் நாடெங்கும் போற்றப்பெற்று வந்தன வெனவே குற்றமில் முடிபு. அக்காலத்து மக்களின் மனப்பான்மையை நனித்தறிந்த சாத்தனரும் இளங்கோவடிகளும் மணிமேகலை சிலப்பதிகாரம் என்னு மிருகாப்பியங்களே முறையே இயற்றித் தந்தனர். பொருட்டெடர் நிலைச் செய்யுளாக வந்த அந்நூல்கள் சுவைக்கு நிலைக்களனுக விளங்கின. அப்பெருங்காப்பியங்கள் தோன்றியும் தமிழ் மக்கட்கு இலக்கிய வேட்கை அடங்கிற்றில்லை.

3. விருத்தயாப்பினில் காப்பியத் தோற்றம்.

மெள்ள மெள்ள வடமொழிப் பெருங்காப்பியங்களின் விதிகளைப் பின்பற்றித் தமிழிற்காப்பியங்கள் தோன்றலாயின. முதற்கண் எழுந்தது தோலாமொழித் தேவரியற்றிய சூளாமணியென்பாரும் அன்று, திருத்தக்கதேவரியற்றிய சிந்தாமணியே என்பாரும் உளர். முதற்கண் எழுந்தது எதுவாயினும், அக்காப்பியங்களைத் தமிழ்மக்கள் விரும்பிப் பயின்றும், கற்றோரின் விரிவுரை கேட்டு இன்பம் நுகரத்தலைப்பட்டனர். பின்னர் எழுந்தது கொங்கு வேளிர் மாக்கதை அல்லது பெருங்கதை. அக்கதையும் மக்கட்கு ஒருவாறு சுவையினைத் தந்தது. தமிழர்க்கோ இலக்கிய வேட்கை தணிந்த பாடில்லை. அவர் தம் இலக்கியக் கண்ணின் ஆற்றலோ, ஏறுபடியாகவே யிருந்தது. தேன்செய் பெருங்கினைபோலப் பொம்மென விம்மிப் பறந்து திரிந்தனர். புறமதக் கருத்துக்களேனும் காப்பிய வாயிலாகக் கூறப்படின் அவற்றினைச் சுவைக்க முற்றுவர். அத்தகைய விரிந்த நோக்கம் தமிழர்க் கில்லையாயின் சூளாமணி சிந்தாமணி முதலிய காப்பியங்கள் மாய்ந்தே போயிருக்கும்.

4. எங்கும் பத்தி வெள்ளம்.

நால்வர் தோன்றி அடியவர் குழாத்துடன் பதிதோறும் காலிற் சென்று பல்லாயிரம் இசைப்பாட்டுக்களைப் பாடினர் அவர்கள் ஆற்றிய அருஞ்செயல்கள் ஒன்றல்ல ; பல. அக்காலத்தும் அதன் பின்னரும் ஆழ்வார்கள் தோன்றி நாலாயிரம் இசைப் பாட்டுக்களைப் பாடினர். எங்கும் அடியவர் குழாஅம் ; பாகவத கோட்டி ; பத்தி வெள்ளம். நாட்டில், ஊரில், காட்டில், சிறு குடியில் தெய்வமணம் அங்ஙனம் நிலவாண்டுகள் கழியச் சேக்கிழார் சுவாமிகள் தோன்றிப் 'பத்திச்சுவை

கணிசொட்டச் சொட்ட'ப் பெரிய புராணம் பாடினர். அச்செய்யுட்களின் அருமை பெருமைகள் படித்துப் படித்துச் சுவைத்துச் சுவைத்து இன்புறற் பாலன.

5. கலப்பில் அழகு.

இங்ஙனம் பல்வகையானும் சுவைகண்ட தமிழ்மக்கள் காப்பிய வின்பம் நுகர்தலில் முற்படுவாராயினர். கலப்பில் தான் அழகு மிக்குத் தோன்றுமோ? ஒட்டுமாங்கனியில் தீஞ்சுவை விஞ்சிக் காண்கின்றதே. மொழுமொழுவெனக்காணும் பொற்றைமலையொன்றில் இன்பமொன்றும் காணப்படாதே! வானினீக் கிழிக்கும் மலையும், அதன் மிசை இருள் படப் பொதுளித் தழைத்துச் செழித்த மரங்களும், இடையிடையே இழுமெனு மொலியுடன் பெருகியோடுமருவிகளும், சரிவுகளிலுள்ள பசும்புற்றரைகளில் மான் முதலிய விலங்குகளின் இயக்கமும் நம் கண்ணையும் கருத்தையும் கவரவில்லையா? மேற்கூறிய வணைத்தையும் ஒவியமாகக் கிழியிற்காணினும் புத்துணர்ச்சி எழுகின்றதே! ஆம்; இதுவே இளங்கோவடிகள் கூறிய சேய்யாக்கோலம். ஒரு திருமண வீட்டையுஞ்சிறிது கருதிப்பார்மின், என்ன கூட்டம்! என்ன ஆரவாரம்! என்ன ஊக்கம்! பேரணிப்பந்தர்! அறுசுவையுண்டி! பல்வகைத்தாய வின்னியங்கள்! மணங்காண்பான் வந்த ஆடவரும் மகளிரும் உடுத்தி வந்த உடைவகை, அணிந்துவந்த அணிவகை, அவரெல்லாமேறிவந்த ஊர்தியாதிய இவையெல்லாம் ஒன்றிற்பலவாய் விளங்குதல் ஏன்? இன்னிசை விருந்தெனிற் பல ராகங்களும் பல கீர்த்தணைகளும் பாடப் பெறுகின்றனவே! தமிழ், தெலுங்கில், இந்தியில், வடமொழியில் பாட்டு. அவைகளும் போதாவென்று இறுதியில் ஒரு காவடிச்சிந்து, திருப்புகழ், தில்லானு, ஜாவளி, களிப்பு, இவற்றின்றலோ இவற்றின் ஒன்றலோ அவ்வின்னிசை விருந்து இறுதியுறல் வேண்டும். இத்தகைய வேறுண பலவேல்லாம் ஒற்றுமைப்பட்டு ஓரிடத்திற் கூடிய வழி இன்பம் தோன்றில் துன்பம் மறைகின்றதே இவையெல்லாம் மக்களின் சுவை வேறுபாட்டினை யறிந்துதானே செய்யப்படுகின்றன? அங்ஙனமே மாகவிகள் இவைகளை சொற்களாற் செய்து தருகின்றனர்.

6. பெருங்காப்பியநிலை

மக்களிற் பெரும்பாலோர் வானத்திற் பறக்கும் எஃகுப்பறவைகள் அல்லது ஆகாயவிமானங்கள், மின்சாரவிந்தை, சட்டசபை கிகழ்ச்சி முதலியவற்றை விரும்புவது போலவே இலக்கியங்களையும் விரும்பு கின்றார்கள். இலக்கியங்கள் பயனற்றவையென அவர்கள் தள்ளவுஞ் செய்யார். நன்றுயிற்காண்பா மென்றிருத்தலுமிரார், மக்களிடையே இலக்கிய விழைவு சிலகாலம் மங்கியும் சிலகாலம் போங்கியும் தோன்றும். ஒருவன் பத்தாண்டுகட்கு முன்னே கவினமொன்றினை விழுந்து விழுந்து படித்திருந்தால் இன்றைக்கு அந்கவினம் அவனுக்குப் பிடிப்பதேயில்லை. ஒரு கால் ஏதோவொரு பற்றினலவன் மீண்டும் அதனைப்படித்தாலும் அஃது

அவனுக்குச் சப்பென்றிருக்கும். இவ்வுணர்ச்சி தோன்றியது புத்தகத்தின் குறைவினாலன்று. சுவையானது நாளுக்கு நாள் மாறி வருவதே அவ்வுணர்ச்சிக்குக்காரணம். சுவை மக்களிடையே இன்ன வாண்டில் இன்னாளில் இங்கனம் மாறிவரும் என எவராலும் வரையறுத்தலும் ஒண்ணுது.

நவினத்தின் தலைவிதி யிங்ஙனமாகக் கம்பராமாயணமாதிய பெருங் காப்பியங்கள், தோன்றிய காள்தொட்டு இன்றுகாறும் அவற்றின் அருமை பெருமைகள் குறையாமற் பெருகிவரக் காரணமென்னை? அதுவே மாகவிகட்குக் கைவந்த மர்மம். அத்தகைய கவிகளின் ஏற்றத்தினைப்பற்றி ஐயப்படுவாரும் உலகில் மிகச்சிலர். கவிகளின் பெருமைகளைச் சிறிதேனுங் குறையாமற் போற்றிப்புரப்பாரே நூனவில் புலவர். இவர்கள் சுருங்கிய தோகையினரேனும் இரவு பகலாக ஓய்வின்றி அம் மாகவிகளின் இன்கவிகளைச் சுவைத்துச் சுவைத்துச் சொல்லிச் சொல்லி மக்களுக்கு இன்பமூட்டிவருகின்றனர். இத்தகைய உயர்ந்த தொண்டி னாலேயே கவிகளின் பெருமைகள் இம்மியுங் குறையாமற் பெருகி வருகின்றன. ஒருபொருளைப் பன்முறையுந் தனி மனிதனிடமோ அல்லது மாபெருங் கூட்டத்தினிடையோ சொல்லும் வழக்கம் வழிவழியாக ஒரு நாட்டில் ஏற்படுமாயின் கவிகளின் பெருமைகளை அனைவரும் அறிவது எளிது தானே. ஆதலின், பெருங்காப்பியங்கள் நூனவில் புலவர் தம்மால் முதற்கண் சுவைக்கப்பெற்றுப் பின்னர் அவர் வாயிலாய் ஏனைமக்களும் இன்பமடைகின்றனர்.

ஒரு பெருங்காப்பியம் பிறருதவியின்றித் தன்னளவில் சீவித்து நிற்பதுயில்லை. புரப்பாரின்றி இறந்து படுதலுமில்லை. நூனவில் புலவர் தம் கண்ணிற்பட்ட அவை அவராலே இன்பவூற்றுக்களாக உவட் டெடுத்து ஓடுமாறு செய்யப்படுகின்றன. வண்டுகள் மலரை மறப்பினும் நூனவில் புலவர் காப்பியங்களை மறவார். இன்னோரன்ன காரணங் களானே, பெருங்காப்பியங்கள் நூனவில் புலவரானன்றி விளங்கித் தோன்ற வேன்பது பேற்றும்.

மக்கள் இலக்கிய நுகர்ச்சிக்கண் குறையா வேட்கையுடையராய் நூற்பயிலல் வேண்டும். இதன்கண் தொடங்குங்காற் சிலதொல்லைகள் தோன்றினும், நுகர்ச்சி வேட்கை கன்று பெரிதாயின் அவை நீங்கிப் போகும். நூற்பயிலும் பழக்கத்தை மக்கள் ஒன்றுகொடுத்தும் பெறவேண்டும் அப்பழக்கமொன்று கைவரின் இன்பம்பெருகும். துன்பந்தேயும், அப் பழக்கத்தினை ஆடவரும் பெறவேண்டும். மகளிரும் பெறவேண்டும். பெறின், மனஞ்செம்மையுறும் வாழ்க்கை எளிதாகும்.

இனிய காப்பியங்கட்குச் சொல்லும் பொருளும் உடல், சுவையே உயிர். அழகே வீரம்; குற்றங்கள் குறையுறுப்புக்களைப்போல, கடைகளே நல்லுறுப்புக்கள்; அணிகள் வனையையுங் குழையையும் போல குற்றங்கள் நீக்கிக் குணப்பொலிவுற்ற காப்பியங்கள் பல தோன்றி நாட்டின்கண் இயங்குதல் வேண்டும்.

7. கவிச்சக்கரவர்த்திகளின் தோற்றம்

சங்கநூல்களெல்லாம் தமிழ்நாட்டு மூவேந்தராலும், வள்ளல்களாலும் சீராட்டிப் பாராட்டி வளர்க்கப் பெற்றவை. பிற்பட்ட சோழ மன்னர் ஆட்சிக் காலத்தில் காடெங்கும் அமைதி. நாட்டில் பஞ்சம் பிணிமுதலியனவில்லை. மன்னர்களோ அருங்கலை விஞ்ஞர்களாயிருந்தனர். மக்களெல்லாம் நிறைந்த உள்ளத்தராகி இல்க்கிய வேட்கை கொண்டு விளங்கினர். அரசன் எவ்வழி அவ்வழிக் குடிகள். அல்லரோ? இக்காலத்தே தான் தமிழ் மொழிக்கு வேள்ளி நிலை தோடங்கி ஒரு போடே போட்டது. செயங்கொண்டார், ஒட்டக் கூத்தர், புகழேந்தி, சேக்கிழார், கம்பநாடர் முதலிய கவிமேகங்கள் கவிமழைபொழிந்தன. புவிவேந்தர் இருந்தாற் கவிவேந்தர் வேண்டாவோ? முதற்குலோத்துங்கன் அவைக்களத்தைக் கலிங்கத்துப்பரணி பாடிய செயங்கொண்டார் அழகு செய்தார். இரண்டாங் குலோத்துங்கன் சபைக்கு ஒட்டக்கூத்தர் அணியாக விளங்கினர். மூன்றாங் குலோத்துங்கன் சபையைக் கம்பநாடார் விளக்க முறச் செய்தார். இக்கவிவேந்தர் தம் காலத்தை வரையறுத்துக்கூற இடனன்று. இக்காலத்தே இக்கவிவேந்தர் காலத்தால் ஒருவர்க்கொருவர் முன்னுகவோ பின்னுகவோ இருந்தனர் என்பதை மாத்திரம் இங்குக் கொள்ளிற்போதும் அக்கவிவேந்தர், தம்முள் அழுக்காறுகொண்டு தினிந்தனர் என்பதைக்காட்ட நாட்டில் நம்மனோர் கட்டிவிட்ட பொய்ம்மூட்டைகள் பொறுக்க முடியாதவை. அப்பொய்க்கதைகளான் நம் கவிவேந்தர்க்குப் பெருமையோ சிறுமையோ சிறிதும் உண்டாக வேண்டா. அவர் செய்த நூல்வாயிலாக அவர்தம் அருமை பெருமைகளை அறிந்து மகிழ்தலே நூனவில் புலவர் தங்கடமை. அற்றே! அவையெல்லாம் வெறுங்கற்பனைக் கதைகள்! அவற்றைக் கூறுதிருத்தலே சிறந்த தமிழ்த்தொண்டு, நல்ல அறம்.

8. பரணிக்கோர் செயங்கொண்டான்

விசயதரன் என்னும் முதற் குலோத்துங்கன் கலிங்கத்தை வென்றவன். அவ்வெற்றியைப் புகழ்ந்து 'பரணி' யென்னும் அரிய நூலினைச் செய்தார் செயங்கொண்டாரென்னும் கவி வேந்தர். அதுவே முதன் முதலேழுந்த முதற்பரணி. பின்வந்த பரணிகட்கெலாம் அப் பரணியே மேல்வரிச்சட்டம். பாக்களில் எல்லாம் சுருங்கச்சொல்லல் என்னும் அழகு நிறைந்து காணும். பாடல்தோறும் சொன்னயமும் பொருணயமும், நெஞ்சினையள்ளும் ஐம்பத்துநான்கு இனியசந்தங்கள் இந்நூலின் கண் உள்ளன. குறிப்புப்பொருள், இறைச்சிப்பொருள், உள்ளுறையுவமம் முதலியன ஆங்காங்கு காணப்படும். அமயத்திற்கேற்ற சொற்கள்! திகைக்கச் செய்யுங் கற்பனைகள்! வீரம், வெகுளி, அவலம், அச்சம், காமம் முதலிய சுவைகள். உயர்ந்த கருத்துக்கள்! எளிய சொன் முடிபுகள்! இந்நூற் செய்யுட்களை மேற்கோளாக எடுத்தாளாதவர் மிகச்சிலர். இக்குணங்கள் இந்நூற்கில்லையேல் 'பரணிச்கோர் செயங் கொண்டான்' எனும் பராராட்டுரை எழுமா?

தாலிபுலாகனியாயம்பற்றிக் கலிங்கத்துப் பரணியில் ஒன்றினைப் பதம்பார்ப்போம். இதோ,

[சோழன் படைவீரர்கள் கருணாகரத் தொண்டைமான் தலைமையிற் கலிங்கநாடு புக்குக் கொள்ளிவைத்துச் சூறையாடுகின்றனர். அச்செய்தி கலிங்கவேந்தன் அகந்தபன்மனுக்கு அறிவிக்கப்படுகின்றது. அதனைப் பரணியுடையார்,]

"இடிகின்றன மதில்; எரிகின்றன பதி
எழுகின்றன புகை; பொழில் எல்லாம்
மடிகின்றன; குடிகெடுகின்றனம், இனி
வளைகின்றன பகைபடை யென்றே

உலகுக் கொருமுதல் அபயற் கிடுதிறை
உரைதப் பியதெம தாசே யெம்
பலகற் பனைகோ கினைவுற் றிலே; வரு
படைமற் றவன்வீடு படையென்றே

உரையிற் குழறியும், உடலிற் பதறியும்
ஒருவர்க் கொருவர்முன் முறை யிட்டே
அரையில் துகில்வீழ அடையச் சனபதி
அடியிற் புகவிழு பொழுதத்தே"

எனக்கூறுவர். இக்கண்ணிகட்குப் பொருளும்வேண்டுமா? கேரில் கின்று பேசுவது போலில்லையா? இவ்வாறு கூறல் மாகவிகட்குப் பெரிதும் எளிது. மக்கள் உள்ளத்தைக் கொன்னே கொள்ளும் கள்ளர்கள்!

9. கோவையுலா வந்தாதிக் கொட்டக் கூத்தர்.

இவர் கவியரக்கர். அரக்கர்தாம்! கௌடப்புலவர் என்னும் பெயரும் இவர்க்குண்டு. அஞ்சா நெஞ்சர். முற்றிய புலமையாளர். மாதர் கோக்கு இன்பந்தருவது போன்றே கூத்தர் வாக்கும் இன்பந் தருமாம்! கவிச் சக்கரவர்த்திதான். ஐயகோ, மெய்யே. அனல் அடிட்டம் பஞ்சை. என்னபாடினும் என்; ஏனையோர்க்கு முன்னே .....பரவம், அளியர். கோவை, உலா, அந்தாதி, பரணி முதலிய பிரபந்தங்கள் இயற்றியுளார். இவர் பரணிக்கு, இவரியற்றியதான் வந்த பெருமைபோய், பதிப்பித்தவர்தம் பெருமையால் பெருமையடைந்து கம்மிடையே யிருக்கின்றது. உத்தர ராமாயணம் இவராற் பாடப்பெற்ற தென்ப. இக்கவிவேந்தர் கவியினையும் எற்றபெற்றிச் சுவைப்போம்.

சோழன் கூத்தர்க்கு வரிசை யளித்தான். அப்போது,

இடுக்கட் புண்படு நிரப்புக் கொண்டுழன்
றிரக்கச் சென்றவின் றெனக்குச் சிங்களம்
நிடுக்குற் றஞ்சும் வெஞ் சினத்துச் செம்பியன்
திருக்கைப் பங்கயம் நிறக்கத் தந்தனன்,

படுக்கக் கம்பளம் ; பதக்கக் குங்குமம் ;
பதிக்கக் கங்கணம் ; பரிக்கக் குஞ்சரம் ;
தடுக்கக் குண்டலம் ; கலிக்கச் சங்கினம் ;
கலிக்குப் பஞ்சரம் ; கலிக்கத் தொங்கலே.

என்னும் வகுப்பிலை எவரும் திடுக்கிடப் பாடினர். என்ன வாக்கு ! குதிக்கின்றது. துள்ளித் துள்ளிச் செல்கின்றது. அவர் என்ன செய்வார் ! மகிழ்ச்சி ! உண்டவராய் வாழ்த்தாதார ?

இவர் பாடியதாகக் கருதப்படும் உத்தர ராமாயணத்தில் இமயமலையினின்றும் பெருகி வருங்கங்கையை,

பகுமுக மொடுதிகழ் பகிரதி யிழிதரு
மொகுமொகு வெனுமொலி முழவொலி யதுவா
அகமகிழ் அறுபத அளியிசை மூரல்தர
மிக மயில் நடமுறு வரிபொழில் உடையது

மலைதலின் மனமென வரியர வெழமதி
சூலைசூலை சூதைரு குடுமிய துடையது
கலகல வெனவெழு கழையொலி யொடுபுனல்
சலசல வெனலிழு தடவொலி யுடையது

என வருணியா நிற்பர். மலைக்காட்சி, கங்கையின் பெருக்கு என்னுமிவ் விரண்டினையும் திருந்திய சொற்களாலும், அழகிய சந்தத்தாலும் படமெழுதிக் காட்டுகின்றனர். இவ்வியற்கைக் காட்சி செய்மையதேனும் அண்மையிற்கானச் செய்கின்றூர்.

10. வெண்பாவிற் புகழேந்தி

இப்புகழ், புகழேந்தியார்க்கு 'நளவெண்பர' என்னும் நூலைப்பாடியமையாலே வந்ததெனல் வேண்டும். நளவெண்பாவுக் கிணையான வெண்பா நூலொன்றினைக் காண்டல் அரிது. வேண்டாத சொற்களையோ தொடர்களையோ அடுக்குவது இவர்க்கு வழக்கமின்று. சொல்லும்பொருளை கேராகவும் இனிமையாகவும் கூறுவர். பாரதவெண்பாவே இவர்தம் நளவெண்பாவினுக்கு மேல் வரிச் சட்டம் என்ப. இங்கும் நூலுணர் கண்ணுற் சிலவெண்பாக்களை நோக்குவோம்.

இந்திராதி தேவர்க்காகத் தூது சென்ற நளன் நெஞ்சினை,

"தேவர் பணித்தலைமேற் சொல்லும் ; திரிக்தொருகால்
மேவு மிளங் கன்னிபால் மீண்டேகும்—பாலில்
குழல்போல நின்றுழலும் கொன்கைத்தே ; பூவின்
கிழல்போலும் தண்ருடையான் நெஞ்சு."

என்பர்.

என்ன உவமை ! சுவையோ விஞ்சுகின்றது. தமயந்தியைப் பிரிகின்ற போது,

"போய் ஒருகால் மீளும் ; புகுந்தொருகால் மீண்டேகும் ;
ஆயர் கொணர்ந்த அடபாலின்—தோயல்
கடைவார்தம் கைபோலும் ஆயிற்றே காலன்
வடிவாய வேலான் மனம்."

என்பர்

புகழேந்தியார் இங்ஙனம் கூறுவதிலிருந்து மக்களின் பழக்க வழக்கங்களை நுணித்தறிந்தவர் என்பது நன்கு புலனாகும். 'ஈவெண்பா' என்னும் நூலைச் சிறுவரும் சிறுமியரும் படித்தால் அவர்கட்கு அது நல் விருந்தாகும்.

11. விருத்தமெனும் ஒண்பாவுக்குயர் கம்பன்

கல்வியிற் பெரியர் கம்பர், கவிச்சக்காவர்த்தி, அப்பெருமானால் விருத்தயாப்பினாற் பாடப்பெற்றது இராமாவதாரமெனுங் கம்பராமாயணம். சூளாமணியினுஞ் சிந்தாமணியினும் நந்தாமணியாய் மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் பெருங்காப்பியம். படிக்கப்படிக்கத் தெவிட்டாதது. காவிய பாத்திரங்கட்குத் தக்கவாறு அமைந்த கவிகள் பலவற்றைக் கொண்டது. மனிதர் இயல்புகளை யெல்லாங் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் பல கவிகள் சொல்லிச் செல்லும். சில கவிகள் செய்யாக் கோலச் சிறப்பினை எடுத்தியம்பும். பல செழுமை காட்டும். இன்னும் பல கற்பனை நயங்களை எடுத்துக் காட்டும். நடை வாய்ப்பினுக் கேற்றவாறு, மிடுக்கும், கம்பீரமும், இன்னோசையும், தளர்ச்சியுங் கொண்டு நிற்கும், மகிழ்ச்சிவினைக்குஞ் செய்திகள் அடங்கிய கவிகளைப் படிக்கின்றவன் தானும் மகிழ்ச்சியால் ஆடாநிற்பன். துக்கங்காணுமிடத்துத் துக்கிப்பான். இங்ஙனம் ஆட்டிவைப்பதில் கம்பர்கவிகள் சிறிதும் பின்வாங்கா. இவற்றினை விரிப்பிற் பெருகும்.

கம்பகாடர் சுவையறி புலவர் என்பது,

"தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே"
"உத்தமக் கவிகட் கொன்றுணர்த்துவேன்"
"நிலையுடைக் கவி நீத்தம் அளித்தமே"
"காதைகள் சொரிவன செவிதுகர் கவிகள்"
"புன்கவியெனத் தெளிவின்றி"
"பன்னருங் கலைதெரி பட்டி மண்டபம்"
"தென்னுண்டேனிற்றீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்"

என்னும் இவ்வடிகளால் நன்கு விளங்கும். சான்றோர் கவியின் இயல்பை,

புவியினுக் கணியாய், ஆன்ற பொருள்தந்து, புலத்திற் றூஉ,
அவியகத் தறைகன் தாங்கி, ஐம்மிணை நெறிய ளாவி,
சவியுறத் தெளிந்து, தண்ணென் றெழுக்கமுக் தழுவிச், சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்.

என்னுஞ் செய்யுளால் அறிவிக்கின்றார். தாம் உத்தமக் கவியாதலின் உத்தமக் கவிகளின் இலக்கணம் இன்னதெனக் கூறல் கம்ப காடர்க்கு எளிதாயிருந்தது. இத்தகைய 'பாவிகம்' என்னுங்காப்பியப் பண்புடைய உத்தம காவியங்களே மக்கள் உள்ளத்தைப் பண்படுத்துவன. அழமுதல் நாற்பொருளையும் பயப்பன.

பண்டைத் தமிழர் பெருமை

திரு. வி. ஆர். இராமச்சந்திர தீட்சதர் அவர்கள் M. A.,
வரலாற்று ஆராய்ச்சியாளர்,
பல்கலைக்கழகம், சென்னை.

தமிழ் காட்டின் பெருமையே பெருமை. அது தெய்வத் திருகாடாம். வடவேங்கடம், தென்குமரி என்பது தமிழ் நாடு. தற்காலம் திருப்பதி யென்று விளங்கி வருவதே வேங்கடம். இம்மலையில் வீற்றிருப்போன் நீலமேனி நெடியோன். இம்மலை வட சொற்கும், தென் சொற்கும் வரம்பாய் நின்றமலை. தென் பக்கத்திலோ கன்னித்தெய்வம் காத்தருள் கின்றனள். இஃது ஒரு பாலிருக்க முத்தமிழ் முனிவன் சந்தனப் பொதியமாமலையில் அமர்ந்து தென்னாடு முழுதும் தமிழ்மொழி ஒலிக்கும்படி செய்தகாடு. இத்தகையபேறும் பெயருமுள்ள காட்டை என் தெய்வத் திருகாடு என்று சொல்லக்கூடாது.

தமிழ்காடு எப்பொழுது தோன்றியது? தமிழ்காகரிகத்தின் காலம் யாது என்று வரலாற்றாராய்ச்சி வல்லுநர்கள் பலர் ஆராய்ந்து வருகிறார்கள். சென்ற ஆண்டில் இந்திய Science Congress கலைமை கொண்ட ஆராய்ச்சிப்புலவர் Sahani எத்தனையோ ஆயிரம் ஆண்டு களுக்கு முன் தென்னாட்டில் மக்கள் வசித்து வந்தனர் எனத்தெரிவித்தார். பழையபாண்டங்கள், ஆயுதங்கள், வீட்டுக்கருவிகள், முதலியவைகளை ஆதாரமாக்கொண்டு Bruce Foote என்ற பெரியார் வட இந்தியாவில் இரும்பின் உபயோகம் தெரியுமுன்னரே தென்னாட்டில், இரும்பு உப யோகத்திற்கு வந்து விட்டது என்று தெரிவித்தார். முதல் முதலில் இரும்பின் உபயோகம் தென் இந்தியர்க்கே தெரிந்தது போலும். தமிழ்க் காப்பியங்களுள் மிக்க சிறப்புப் பெற்ற காப்பியமான சிலப்பதிகாரத்தில் 'கண்ணெழுத்து' என்பது கூறப்படுகிறது. (சிலப். 26. 170.) அஃதாவது சித்திரம் வரையப்பட்ட எழுத்தாம். தற்காலம் கண்டுபிடிக்கப்பட்ட சிந்துசமவெளி காகரிகத்திற்குச் சமானமான எழுத்துக்களே அவையாகும். தமிழ் காட்டில் வியாபாரத்திற்கு ஏற்பட்ட பொதிகளில் எவ்வளவு மூட்டைகள், என்ன சாமான்கள்,

எவ்வித நிறை என்பதைக் குறிக்கும் எழுத்தாம். இவ்வெழுத்திலிருந்து தமிழ் காகரிகத்திற்கும் சிந்துசமவெளி காகரிகத்திற்கும் தொடர்புண்டெனக் கருதலாம். சிந்துதேசத்திற்கும் தென்இந்தியாவிற்கும் கடல் வழியாகப் போக்குவரவு இருந்து வந்தது. என்கருத்தைக் கேட்டால் இந்திய காகரிகம் மிகப்பழையது. சிந்துநதிப் பிரதேசத்திலிருந்து நமது காகரிகம் பாபிலோனியா எகிப்து முதலிய தேசங்களுக்குப் பரவின. அவ்விடங்களிலிருந்து இந்தியாவிற்குப் பரவியது என்ற ஐரோப்பிய ஆராய்ச்சியாளரின் எண்ணம் தவறென்றே கருத வேண்டும். பாபிலோனியாவில் கி. மு. 700ல் ஒரு தமிழ்க் குடித்தனம் இருந்தது.

தென்னாட்டிலிருந்து தமிழ் காகரிகம் உரோமாபுரிக்கும், கிரேக்கு காட்டிற்கும் பரவியது. இன்னும் தக்கிண பீடபூமியைச் சேர்ந்த வேட்டுவர் என்ற குறிஞ்சிமக்கள் யவன தேசத்திற்குச் சென்று தங்கள் அரசை கிரேக்கியத்தில் தங்கள் பெயரையும் அக்காட்டிற்குக் கொடுத்தார்கள். இதுவே Crete தேசம். இதன் காகரிகத்திற்கும் தமிழ் காகரிகத்திற்கும் ஒப்புமை மிகுதியாயுளது. உரோமாபுரி காணயங்கள் தமிழ்காட்டில் மதுரை, கரூர் முதலிய இடங்களில் மிகுதியாய்க்கிடைக்கின்றன. உரோமர்கள் வியாபாரம் முதலிய காரணங்களைக்கொண்டு இவ்விடம் கிறித்து பிறப்பதற்கு முன்னமேயே தமிழகத்தில் சிதறியிருந்தார்கள் என்று திண்ணமாய்க் கூறலாம். அகில், புகை, இரத்தினங்கள், முத்து, பட்டு, மிளகு இவைகள் மிகுதியாய் ஏற்றுமதியாயின. தமிழ் வேந்தர் அயல்காட்டு யவனர்களைத் தங்கள் கோட்டைவாயில் காவலாளிகளாய் வைத்திருந்தார்களென்று சிலப்பதிகாரம் கூறும். கி. மு. 20-ம் ஆண்டில் உரோமாபுரி வேந்தனை Augustus என்பவருக்குப் பாண்டியன் ஒரு தூது அனுப்பியதாகத் தெரிகிறது. இதுமுதலிய ஆதாரங்களிலிருந்து மத்தியதரைக்கடலில் காகரிகம் என்று இப்போது வழங்கப்படுவது தென்னிந்திய காகரிகம் அல்லது தமிழ் காகரிக மென்று துணிவாய்ச் சொல்லலாம். மேற்குத்திக்கில் பரவியது போல் கிழக்குத்திக்கிலும் நமது காகரிகம் பரவிற்று. தற்காலம் மலேயத் தீவுகள் (Malaya Archipelego) என்று வழங்கும் சுமத்ரா, சாவா, முதலிய தீவுகளுக்குத் தென்னாட்டுமக்களே போய்க் குடியேறி காகரிக மற்ற சாதியாரை வென்று தங்கள் ஆட்சியை கிலை நிறுத்தித் தம் காகரிகத்தையும் பரவச்செய்தார்கள். இதைத்தொடர்ந்து கலிங்கர், வங்கர்போனதாயும் தெரியவருகிறது. ஆனால் முதல் முதலில்குடியேறிய மக்கள் தமிழ்காட்டு மக்களேயாவர். இவ்வூர்களில் இந்தியமதமும் இந்திய வரலாறும் வழக்க ஒழுக்கங்களும் காணப்படுகின்றன.

இதுமாத்திரமன்று தென்னாட்டுமக்கள் சீனதேசத்திற்கும் மத்திய ஆசியாவிற்கும் போக்குவரவு செய்து நமது காகரிகத்தை அவ்விடங்களில் பரவப்பணணியதாகவும் வரலாறு கூறும். சீனமதக்கொள்கைகள் இந்துமதக்கொள்கைகளேயே தழுவி நிற்கின்றன என்பதில் என்னியப்பு. உதாரணமாக கி. பி. 526ல் தென்னாட்டு வேந்தன் குமரான்

புத்தமதத்தைத் தழுவி போதிதர்மன் என்ற பெயருடன் சீன நாட்டை அடைந்து பௌத்ததர்மத்தை ஓங்கும்படிச்செய்தான். மற்றும் பர்மாநாட்டிற்கும் இலங்கைத்தீபத்திற்கும் தமிழ் மக்கள் அடிக்கடி போனதற்கும். தமிழ்நாகரிகம் பரவியதற்கும் பலசான்றுகளுண்டு. சோழ வேந்தன் கரிகாலன் இலங்கையிலிருந்து ஆயிரக்கணக்கான கூலிவேலைக் காரர்களைக் கொண்டுவந்து காவிரிக்கு அணைகட்டியதாக நூல்கள் கூறும். சேரன் செங்குட்டுவன் பத்தினி தேவிக்குக் கோயில் கட்டி விழா நடத்தியபோது இலங்கை வேந்தன் கயவாகு வந்து, தன் ஊர் போய்ப் பத்தினிக்கடவுளுக்கு மங்கலவணி நடத்தியதாகச் சிலப்பதி காரம் கூறும். இன்னமும் அமெரிக்காவில் மாயா Maya நாகரிகம் இந்திய நாகரிகமென்றே முடிவில் ஒப்புக்கொள்ளப்படுமென்பது என் திண்ணமான எண்ணம்.

இஃது இப்படியிருக்க, தென்னாட்டுக்கும் வடநாட்டுக்கும் உண்டான சம்பந்தத்தை நோக்குவோம் ஆரிய வேதத்தில் மிகப்பழையதான இருக்குவேதசங்கிதையில் தக்ஷிணாபதம் சொல்லப்படுகிறது. வட இந்தியர் இத்தக்ஷிணாபதம் வழியாகத் தென்னாடு வந்ததாயும், தென் னாட்டு மக்கள் வடநாடு போனதாயும் தெரிகின்றது. இது தரை வழியாய் உண்டான பெரியபாதை. வடநாட்டு வேந்தர்கள் பலர் இந்நாட்டுக்குப் பல முறைகள் வந்ததாக இலக்கியம் கூறும். மாபாரதப்போரில் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் பெருஞ்சோறு அளித்து உதவியது சேரவேந்தனை உதியன் சேரலே. இதற்குப்பல ஆண்டுகள் முன்னர் இராம பிரான் முன்னோனை தண்டகனென்ற அரசன் தென்னாட்டைத்* தன் கைவசமாக்கித் தண்ட காரணியம் என்னும் பெயரைக் கொடுத்தான். இக்காட்டில் அனேக முனிவர் பின்புவந்து தங்கினர்என இராமாயணம்கூறும். இராமன் இலங்கை வேந்தன்மேல் படையெடுத்து வந்தபொழுது தமிழ் வேந்தர்கள் எதிர்த்தமையாதல் வென்றமையாதல் தெரியவில்லை. அவர்களிடம் அவன் நட்பாகவே யிருந்திருத்தல் வேண்டும்.

மற்றுமொருகதை உலாவுகின்றது. அஃதாவது பரசுராமன் தன் திக்குவிசயத்தில் கேரள தேசத்தை அடைந்து சமுத்திரத்தால் விழுங் கப்பட்ட மலையாள தேசத்தை மீண்டும் எடுத்ததாக வரலாறு. பிற் காலத்தில் மௌரிய சக்கரவர்த்தி அசோகனும் குப்த சக்கரவர்த்தி சமுத்திர குப்தனும் தமிழ்நாடு வரையில் வந்து பகைவரை வென்றனர். ஆனல் தமிழ் நாட்டை வெல்லவில்லை. சங்க இலக்கியம் கூறுவதிலிருந்து தமிழ் வேந்தர்கள் வடநாட்டுக்குப்போய்த் தங்கள் ஆற்றலைக் காட்டிவந்தார்கள். தமிழ்நாட்டு மூவேந்தரும் வடபால் இமயமலைவரை போய்த் தங்கள் இலச்சினைகளை அம்மலையில் பொறித்து வந்தார்கள். செங்குட்டுவன் என்ற சேரவேந்தன் கங்கைக் கரையில் குயிலாலுவமென்ற விடத்தில் ஆரியப்படைகளைத் தோல்வியடையச்

*இக்கு தட்சிணதேசமெனப் பெயர் பெறும்.

செய்து, அனேக வடமன்னர்களைச் சிறைப்படுத்தித் தமிழ்நாட்டு வேந்தர் வியப்பத்திரும்பி வந்தனன். இப்படிவென்ற வீரர்கள் இமயவரம்பன் என்ற பட்டத்தை வைத்துக்கொண்டார்கள். பிற்காலத்தில் காஞ்சியில் ஆண்ட பல்லவர்களும், தஞ்சையில் ஆண்ட சோழர்களும், பாண்டிய சேரர்களும் தமிழ்மொழியை வளர்த்து வந்தார்கள். தமிழ் நாகரிகத்தையும் பரவச்செய்தார்கள்.

தமிழ் நாகரிகமென்றால் என்ன எனக் கேட்கலாம். அரசியலிலும் கல்வியிலும் சிற்பங்களிலும் தமிழர் அடைந்த ஊக்கமும் பெருமையுமே. இவைகளைச் சுருக்கிச் சொல்வேன், தமிழ் அரசியன் முறைகள் அறத்தால் அமைந்தவையே, தெய்வப்புலமைவாய்ந்த திருவள்ளுவனார் அரசியலைப்பற்றி மிகவிரித்துள்ளார். தமிழ் வேந்தர்கள் ஆட்சியை நடத்த இருசபைகளை நிறுத்தி அச்சன்பையோர்களுடன் கலந்து ஆராய்ந்து அரசியல் செய்திகளை முடிவுகட்டினார்கள். இச்சபைகளுக்கு ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்பர் நூலாசிரியர்கள். இவர்களில் சிலரைக் கருமவினைஞர், தக்கார் வினைஞர், பெருங்கணி என்பர், தூதுவரும் சாரணரும் வேற்றரசரிடம் அரசியற்செய்திகளைத் தம்மரசனிடம் அறிவித்து அதற்கு வேண்டிய காரியங்களை வகித்துவருவர். அரசனது பிறந்தநாள் 'பெருநாள்' என்றும் பெருமங்கலமென்றும் நகர மாந்தர்களால் கொண்டாடப்படும். அரசன் போர்ச்செலவினீடுபடுவதற்கு முன் குறித்த நன்னாளில் தன் வெற்றி வாளையும் கொற்றக்குடையையும் யானைமேலேற்றி வெகு சிறப்புடன் கோட்டைக் கப்பால் புறவீடுவிட்டு வைப்பது தமிழ் மரபாகும். இதனைத் தொல் காப்பியர் 'நாட்கோள்' என்பர். அவர்களிட்டபோர் அறப்போரே யன்றி மறப்போரல்ல. இதைப்பின்வரும் புறநானூற்றுப் பாட்டு ஒன்று விளக்கும்.

ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கர் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறுஅ ஈரு
மெம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மினென
வறத்தாறு நுவலும் பூட்கை.....

ஒவ்வோரு வேந்தனுக்கும் இருவகைத் தலை நகர்கள் உண்டு. ஒன்று துறை முகப்பட்டினம், மற்றொன்று உள் நாட்டுப் பட்டினம். உறையூர், புகார் சோழர்களுக்கும், மதுரை, கொற்கை பாண்டியர்களுக்கும், வஞ்சி, முசிறி சேரர்களுக்கும் உரிய நகர்களாம். ஒவ்வொருவேந்தனுக்கும் தரைப்படையும் மரக்கலப்படையும் உரியவை என்றே சொல்லலாம். சேரர் பெருந்தகையான செங்குட்டுவனைக் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் என்றுர் அடிகளும். தமிழரின் போர் முறைகள் அநேகம். அதில் ஒன்றைக் குறிப்பேன். இக்காலம் போர்வீரத்தில் முதன்மையாய் விளங்கிய முடிமணிகளுக்கு "விக்டோரியா இராஸ்" என்ற பதக்கம் அளிப்பதுபோல் பொருது வெற்றியடைந்த வீரர்

களுக்குப் பொன்னாலாகிய வாகைப்பூக்களைச் சூட்டிப் புகழ்ந்து பாராட்டுவது ஒரு முறை. போரில் விழுப்புண்பட்டு இறந்த வீரர்களுக்கு ''வீரக்கல்'' என்ற கடுகல் நாட்டிச் சிறப்பிப்பது இன்னொருமுறை. தமிழ் வேந்தர்கள் நீதி தவறுமல் அரசுபுரிந்தவர்கள். நீதிக்காகத் தங்கள் உயிரையும் விட்டார்கள். நீதி தவறிக் கோவலன் கொலை செய்யப்பட்ட செய்தி கேட்ட பாண்டியன் அரசு கட்டிலில் வீற்றிருந்த படியே, தான் அரசனல்லன் கள்வன் என்று சொல்லிக் கொண்டே உயிர்விட்டான் என்பர் இளங்கோ அடிகள். தமிழ்ப்பெண்மணிகள் வீரபத்தினிகளாயிருந்தார்கள். கண்ணகிபோன்றார் கற்பினை வீரக் கற்பு, சீறிய கற்பு, மறக்கற்பு என்று பண்டையோர் அவர்களுக்கு நடுகல் நாட்டிக் கொண்டாடினர்.

கல்வியில் தமிழ்வேந்தர் சிறந்தவர். தமிழ்ப்புலவர்களுக்குவேண்டிய அளவு பரிசில் கொடுத்துச் சிறப்பித்தனர். பாண்டியன் ஒரு சங்கத்தை ஏற்படுத்திப் புலவர்களை மிகமிகப் பாராட்டினான். புலவர் கட்கும் ஏனைய இரவலர்க்கும் மிகுதியாகப் பண்டை மன்னர்கள் தானம் செய்து அவர்கள் வறுமையைப் போக்கினர்கள். அதனால் தமிழ்த்தாய் என்றுமிளமையோடிருந்தாள். தமிழின் பெருமை எங்கும் விளங்கிற்று.

பண்டைத் தமிழர் பெருமை பல வழிகளில் அறிந்து மகிழத்தக்கது. ஆடல்பாடல்களில் சிறந்த பயிற்சியுள்ளவர்கள். நாடகத்தில் சுரவை முதலான கூத்துக்களும் சங்கீத முறைகளும் உயர்ந்தவைகள். ஓவிய நூலிலும் மனை நூலிலும் சிற்பத் தொழிலிலும் பெயர் பெற்றவர்கள். மதத்திலும் மதக்கொள்கைகளிலும் வைரம் பாராட்டி ஒருவர்க் கொருவர் சண்டை சச்சரவு செய்யவில்லை. எல்லா மதத்தினரும் ஒரே வீட்டில் சேர்ந்து இல்லறம் நடத்திவந்தார்கள்.



தமிழாசிரியரும் பிறமொழிகலந்து கற்பித்தலும்

திரு. வித்துவான், சோமசுந்தரம் பிள்ளை அவர்கள்
தமிழாசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

உலகிற் சிறந்த மொழிகள் பலவற்றுட் சிறந்ததும், தொன்மை வாய்ந்ததும், உயர்தனிச் செம்மொழியாயுள்ளதும், சொல் பொருள் ஓசை முதலிய வற்றால் இனிமையுடையதும் உலகவழக்குச் செய்யுள் வழக்கிரண்டிலும் இன்றும் என்றும் நின்று நிலவுவதுமாயுள்ள மொழி தமிழ்மொழியொன்றேயாகும். இது தெலுங்கு கன்னடம் மலையாளம் துளுவம் முதலிய தென்னிந்திய மொழிகளின் தாய்மொழியாகவுள்ளது. தமக்கும் மொழிக்கும் பெருமை விளைக்கக்கூடிய இயல்விசை நாடகமென்ற முத்திறப்படும் பழமையான சிறந்த இலக்கியவளங் கொண்டு மிளிர்வது. பிறமொழியி னுதவியின்றித் தனித்தியங்குந் தன்மை வாய்ந்தது. மொழிவளர்ச்சிக்கேற்ற இயல்பினைத்தும் தன்பாற் கொண்டு மிளிர்வது இறைவனும் இறைவன்கழல்பரவி வீட்டின்ப மெய்திய மெய்யன்பர்களும் வழங்கிய மொழியாயுண்மையால் இறைமைப் பண்புடையது. நம்முன்னோர் முக்கட்செல்வனை 'மற்றருந்தன்னைப் பாரில்லாதானை' என்று புகழ்ந்து மொழிந்ததுபோல் 'ஓங்கலிடை வந்துயர்க்தோர் தொழுவிளங்கி, ஏங்கொலிநீர் ஞாலத்திருளகற்றும், தன்னேரிலாத தமிழ்' 'பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர் எல்லையறு செம்பொருள் முன் இருந்தபடி இருப்பது போல் கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும் உன்வயிற்றிற் பிறந்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும் ஆரியம்போல் உலக வழக்கழிந்தொழிந்து சிதையாவுன் சிரிளமைத் திறம்வியந்து செயல் மறந்து வாழ்த்துதும்' என்றும் நுண்மாண் நுழைபுலமிக்க அருட் பெருந்தகைமைச் சான்றோர்களால் போற்றிப் புகழ்ந்து வாழ்த்தி வணங்குஞ் சிறப்பினையுடையது. இத்தகைய அருள்மொழியாம் தமிழ் மொழியின் பெருமையைச் சாற்றிட நினைத்திட மகிழ்திட அறிந்திடச் சார்கின்றதோறும் வாயெலாம் தித்திக்கும் மனமெலாங்கித்திக்கும்.

தமிழாசிரியரும் பிறமொழி -- கற்பித்தலும்

மனிதனாக்கத்திற்கும் மன்னிய மெய்யறிவினாக்கத்திற்கு மென்னில் இதனுண்டாகும் இன்பப்பெருக்கு இயம்பற்கரிதென்பது மிகை யன்றே? இத்தகைய வின்பத்தை உண்மையில் துய்த்துணர்ந்த பன் மொழிபயின்ற பெரியாரொருவர் 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்குங்காணோம் எனவும் 'தெள்ளற்ற தமி ழமிழ்தின் சுவை கண்டார் இங்கமார் சிறப்புக்கண்டார்' எனவும் புகழ்ந்துள்ளனர்.

இத்தகைய தமிழ் மொழியைப் பல்லாயிரக்கணக்கான மக்கள் பேசுகின்றனர். அதனால் இவர்கள் தமிழரெனப்படுவர். இவர்கள் கற்றோன்றி மண்தோன்றாக் காலமுல் வாழ்ந்துவரும் பழங்குடி மக்க ளாவார்கள். பண்டைக்காலம் முதல் இன்றுவரை தமிழையே தாய் மொழியாகக்கொண்டு பேசு மியல்புடையாராயுள்ளனர். தமிழைத் தம் முயிரினுஞ் சிறப்புடையதாக மதித்துப் போற்றி வருபவர். மிகப் பழைய காலத்திலேயே காகரிகத்திற் சிறப்புற்றோங்கியவரென கம் காட்டுப் பிறகாட்டு வரலாற்றாசிரியர்களால் சிறப்பித்துக் கூறப்படு கின்றனர். மேலும் அவர்களால் ஆரிய காகரிகத்தைச் சிறப்பித் தெழுதிய காம் இப்பொழுது கிடைத்துள்ள புதைபொருள் ஆராய்ச்சிச் சான்றுகளால் அதனினும் பழைமையும் சிறப்பும் வாய்ந்ததென்று திராவிட (தமிழர்) காகரிகத்தைச் சிறப்பித்தெழுத வேண்டிய நிலையை அடைந்துள்ளேமென்றும் கூறத்தக்க நிலையைப் பெற்றவர்கள். தமிழர் கள் தம் காட்டில் மட்டுமின்றிக் கடல்கடந்து சென்று பல நாட்டிலும் குடியேறி வாழ்கின்றனராயினும் அக்காடுகளிலும் தம் தாய்மொழி யையே பேசிவருகின்றனர். பண்டைய வாணிகம் கைத்தொழில் இல்வாழ்க்கை போர்முறை அரசியல் முதலியவற்றிலும் இப்போது இவர் களால் பலகாடுகள் வளம்பெற்றுச் சிறந்து விளங்கும் நிலைமையாலும் இவர்களுடைய உழைப்பின் திறத்தை யுணரலாம். தமிழின் பெருமை யையும், தமிழரின் சிறப்பையும் தமிழர்களின் இருகண் போன்றுள்ள உலகனைத்தும் போற்றுவதும் ஒப்புயர்வற்றதும் பெருமை வாய்ந்ததும் பொதுமறையுமாகிய திருக்குறளாலும் தொன்மை வாய்ந்த தொல் காப்பியத்தாலும் பிற தொகைநூல்களாலும் கண்குணரலாம்.

தமிழ்மொழியை ஐயந்திரிபற உணர்ந்து காட்டுப்பற்றும் மொழிப் பற்றும் கடவுட்பற்றும் உடையவராய் அம்மொழியிற்றேர்ச்சி பெறுமாறு உணர்ச்சியோடும் ஊக்கத்தோடும் பிறர்க்குக் கற்பிக்கும் செயலுடைய வர்களே தமிழாசிரியாசவர்.

தமிழ் கற்பித்தலாவது தமிழிலுள்ள நூல்களைப் படிக்கவும் படித்தவற்றை யுணர்ந்து தெளியவும் திருத்தமாகப் பேசவும் எழுதவும் பிறர் பேசியவற்றை யுணரவும் கண்கு பயிற்றுவதாகும்.

தமிழாசிரியர்கள் தமிழ்காட்டின்கண்ணும் பிறவிடத்தும் உள்ள உயர்கிலைப்பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும்

ஆசிரியராயமர்ந்தும் அவ்வாறன்றித் தனித்திருந்தும் பாடங்கற்பித்தும் தம் நுண்ணறிவால் ஆராய்ந்தறிந்த செம்பொருளைச் சொற்பொழிவாற்றியும் கட்டுரை யெழுதியும் நூலியற்றியும் உரை செய்தும் பதிப்பித்தும் மாணவர்க்கும் மற்றவர்க்கும் அறிவுச் சுடர்கொளுத்தி வருகின்றனர்.

மாணவராவார் மக்கட் பிறப்பின் உயர்விற்குக் காரணமாயும் வாழ்க்கையைப் பண்படுத்துவதாயும் எழுமையுந் தொடர்வதாயும் அறியாச்செல்வமுமாயுள்ளகல்வி யறிவினைப்பெறும்பொருட்டுமொழியில் தேர்ச்சிபெற விரும்பிப் பள்ளிமுதலியவற்றிற் சேர்ந்துகற்போரும் தனித்துக் கற்போருமாவர்.

தமிழாசிரியர்கள் வடசொற் கலந்ததமிழ் பயின்றுள்ளனர். வடசொற் றமிழ்ச்சொற்களைப் பகுத்துணராமல் தமிழ்ச் சொற்களை வடசொற்களென எண்ணுவாரும் கல்லதுய தமிழ்ச்சொற்களை வடசொற் றிரிபு என்பாரும் உளர். சிலர் ஆங்கிலம் பயின்றும், பயிலாமல் பல சொற்களையும் பொருளையும் அறிந்தும் இருக்கின்றனர். சிலர் தமிழ் கன்கு பயின்றும் அதனிடத்துப்பற்றிலராய் உயர்வகூறுராய்த் தம்மாற் பயிலப்பட்டும் பயிலப்படாததாயுமுள்ள பிறிதொரு மொழியை உயர்த்தியும் பாராட்டியுங் கூறுவர். சிலர் இம்மொழிக்கு எவ்வெவ்வகையில் தாழ்வு கூறலாம் என்றெண்ணித் தாழ்வு கூறுவதோடமையாது இகழ்ந்துங் கூறுவர். சிலர் இம்மொழிக்குச்சிறப்பாக ஒரு பொருளுமில்லை யென்றும் இதிலுள்ள சிறப்புப் பொருள்களனைத்தும் வடமொழியினின்றும் வந்தவை யென்றுங்கூறி அதற்குச் சான்றுகப் பல மேற்கோள்களையுங்காட்டி மருட்டுவர். பிறருடையசெல்வம், சிறப்பு முதலியவற்றைக் கண்டு பொறுமையுறுகின்றவர்களைப்போல் தமிழின்சீர், சிறப்பு அறியாத் தன்மை இலக்கியவளம் முதலியவற்றைக்கண்டு பொறுமையுறுகின்றவர் களுமுளர். இத்தகையோரைத் திருச்செற்றுத் தீயுழியுய்க்கும் பொறுமைக்குணம், அவர்கள் போற்றிப்புகழும் மொழியினிடத்தும் அவர்களிடத்தும் பொது நோக்குடைய மக்கட்கும் வெறுப்புண்டாகுமாறு செய்கின்றது.

இத்தகைய ஆசிரியர்கள் மாணவர்கட்குப் பாடங்கற்பிக்கும்போது வட சொற்களையும் ஆங்கிலச் சொற்களையும் கலந்து கற்பித்து வருகின்றனர். எழுதும்போது பெரும்பாலும் ஆங்கிலச் சொற்களைக்களைக்து எழுதுகின்றனர். சிலர் வடமொழி ஆங்கிலம் அறிந்துளதைக் காண்பித்துத் தம்முயர்வைப் புலப்படுத்தவும் திறமையைக் காட்டவுஞ் சிலர் இயற்கையாகவுங் கலந்துபேசுகின்றனர். தம்முயர்வை எம்மொழியிலும் பிறமொழிக்கலப்பின்றிக் காட்டலாம். திறமையைக்காட்ட அவ்வம்மொழியிற் றிறம்படப் பேசுவது கன்று. மேலும் பிறமொழியில் தங்களுக்குள்ள திறமையைக்காட்ட மொழி பெயர்த்தல் முதலிய வேறுபல வழிகளுண்டென்பதையுங் கலத்தல் தகாதென்பதையும் உணரல்வேண்டும். கல்லூரிகளிற் சிலர் செய்யுளைப்படித்து ஆங்கிலத்

தினுலேயே பொருளை விளக்குகின்றனர். இலக்கணப் பாடங்களையும் இவ்வாறே கற்பிக்கின்றனர். சிலர் தமிழ்ச் சொற்களுக்குப் பொருள் கூறுங்கால் வடசொற்களையும் ஆங்கிலச் சொற்களையுங் கூறுகின்றனர். சிலர் மாணவர்கள் அடங்கி நடப்பார்கள் என்பதற்காகவும் எளிதில் பொருள் உணர்ந்து கொள்வார்கள் என்பதற்காகவும் பிறமொழிக் கலப்பைக் கையாளுகின்றேமென்றறைவர். இவர்கள் கூறுங்காரணம் மாறுபட்டதாயும் அறிஞர்களால் ஏற்கத் தகாததாயும் நகை விளைப்ப தாயுளளது. சிலர் தமிழிற் கூறினுல் இழிவென்றும் வடமொழியிற் கூறினுல் உயர்வென்றுங் கருதிக்கலக்கின்றனர். சிலர் சோறு, சாறு, நீர், குழம்பு, குளித்தேன் என்று நல்ல தமிழிற் பேசுவோரைப்பார்த்து நகையாடியிழித்துரைத்து வடமொழியிற் கூறச்செய்கின்றனர். இவ்வாறு சிறிது சிறிதாகக் கலந்து கல்வியறிவில்லாத மிக எளிய மக்களையும் வட சொற் கலந்து பேசும்படியான கிலைக்குக் கொண்டுவந்துள்ளனர். மேற்கூறியவாறு கால்தோறும் பிறமொழிக்கலந்து பேசிய பழக்கத்தால் பிறமொழிச்சொற் கலப்பின்றிக் கற்பிக்க ஆற்றலற்றவராயுளர். இதற்குக் காரணம் பிறமொழிச் சொற்களுக்கேற்ற தமிழ்ச் சொற்களையும் பிற மொழிக்கலப்பாற் றமிழிற்குண்டாங் கேட்டினையும் எண்ணிப்பாராததே யாகும். இக்கிலையுணர்ந்த புலவர்களிற் சிலர் கலப்பின்றிப்பேச ஏலா தெனக்கூறித் தங்கள் பழக்கத்தையுந் தங்கள் வாழ்நாள் முழுதும் இவ்வாறே கழிக்க நேர்ந்துள்ள நிலையையும் எண்ணி வருந்துவர்.

சொற்பொழிவாற்றுவோர் பெரும்பாலும் வடசொற்கலந்துஞ் சிறுபான்மை ஆங்கிலச் சொற்கலந்தும் பேசுகின்றனர். வடமொழிக் கலப்பானும் ஆங்கிலக் கலப்பானும் பேசப்படும் பொருள் தெளிவாக விளங்குவதில்லே. பேசுகின்றவர்களிற் சிலர் வடசொற்களின் உண்மைப் பொருள் அறியாமல் வேறு பொருளில் வழங்குகின்றனர். (எ—டு) அவசரம்; நிசம்; விசுவாசம்; விவகாயம்; பிரமாதம் முதலியன. இவற்றின் பொருள் முறையே நேரம்; தன்னுடையது; நம்பிக்கை; முயற்சி, ஏமாற்றம் என்பனவாம். இப்பொருளையறியாது விரைவு, உண்மை, அன்பு, உழவு, சிறப்பு என்ற பொருளில் வழங்குகின்றனர். கேட்டுவாயிற்படி யென்று ஒருபொருளைக்குறிக்க இருமொழிச் சொற்கள் கூடல்போல் பாசக்கயிறு என்று வடமொழி தென்மொழி இரண்டையுஞ் சேர்த்துப் பிழைபடக் கூறுகின்றனர். தாய்மொழித் தேர்ச்சிபெற்றுப் பிறமொழித் தேர்ச்சி பெறுதலரும் பிறமொழித் தேர்ச்சிபெற்றுத் தாய்மொழித் தேர்ச்சி பெறுதலரும் பிறமொழியைக் கலந்து பேசுவதில் ஒரு தன்மையராவ ரெனினும் முன்னவர் பிறமொழிச்சொற்களையறவே விடுத்தும் பின்னவர் தாய்மொழி நன்கு பயின்று பிறமொழிக் கலப்பின்றியும் பேசுதல் இன்றியமையாத தாகும். சிலர் வடமொழியிற் பேசும் ஆற்றல் இன்மையால் தமிழ்ச் சொற்களைக் கலந்து பேசுகின்றனர். இத்தகை யார் கலப்பின்றி வடமொழியிற்பேச முயல வேண்டும். ஏலாதாயின் வடமொழிப் பொருளாயினும் மற்ற ளப்பொருளாயினும் கலப்பின்றித் தமிழிற் பேசல்வேண்டும். இதை விடுத்து இருமொழியுங்கலந்து

பேசுதல் குற்றமாதலையுணர்ந் வேண்டும். சிலர் இருபொருள்படப் பேசுவதற்கும் மோனை எதுகையமைப்பதற்கும் ஏற்றதென்றும் கல்ல ஒலிக்குறிப்பு உண்டாகுமென்றுங்கருதி கலக்து பேசுகின்றனர். இவ்வாறு அவர்கள் அமைப்பதில் பொருட்சிறப்பின்மை கன்குபுலப்படும் சிலர் தமிழ்ச் சொற்களை வடமொழியொலியிற் பேசுகின்றனர்.

கட்டுரை யெழுதுவோரும் நூலியற்றுவோரும் பகிப்போரும், உரையெழுதுவோரும், பாடப்புத்தகங்கள் எழுதுவோரும் முடங்கல் எழுதுவோரும் வடசொற்களையும் ஆங்கிலச் சொற்களையுங் கலந்து எழுதுகின்றனர். உரையெழுதுவோருட் சிலர் தூன்முழுதுஞ் சில வடசொற்கள் கலந்திருக்க உரையில் நூற்றுக் கணக்கான வடசொற் களையும் புகுத்து விடுகின்றனர். சிலர் வடமொழிக் கொள்கைகளையும் புகுத்துவர். மற்றுஞ்சிலர் தனித்தமிழிலுள்ள உயர்ந்த உரைகளுக்குக் குறிப்புரை, விளக்கம் முதலியன எழுதுவான் தொடங்கிப் பொருத்தமற் றனவும் வேண்டாதனவுமாய பல வட சொற்களைக்கலக்து பழைய உரை கடையின் தூய்மையைக் கெடுத்து விடுகின்றனர். செய்தித்தாள் வெளியிடுவோர் வடசொற்களையும் ஆங்கிலச் சொற்களையும் மிகுதியாகக் கலப்பதோடமையாது தமிழ்ச் சொற்களை வடமொழி யெழுத்துக்களில் எழுதுகின்றனர். காட்சி, மாட்சி, ஆட்சி முதலியவற்றைப் படக்காக்ஷி மாக்ஷிமை தங்கிய, ஆங்கிலேயர் ஆக்ஷியில் என்று எழுதுகின்றனர். சில திங்கள் வெளியிடுகளே தமிழறிஞர்களால் வெளிவருகின்றன. அவை அறிவுக்கடல் (ஞானசாகரம்) செந்தமிழ்ச்செல்வி தமிழ்ப் பொழில் முதலியன. இவைகளைத் தமிழ்மக்கள் பெரும்பாலும் போற்றாது புறக்கணிக்கின்றனர். இப்புறக்கணிப்பானது நம் நாட்டின் சீர்கேட்டிற்கும் மொழியின் வளர்ச்சியின்மைக்கும் உண்மை கிலையுண ராமைக்கும் ஒரு சான்றாகும். இலக்கணநூல் எழுதுவோர் வடசொற் கலத்தலோடமையாது தமிழிலக்கணத்தின் எடுத்துக்காட்டுகளுக்கும் அமைப்பர். சிலர் வடமொழியைக் கலக்தெழுதி எளிய நடையும் பொருட்டெளிவும் உளதென்பர். எழுதுவோர் இவ்வாறெண்ணினும் பயில்வோரே பொருட்டெளி வின்மையையும் அரிய நடையாயுண்மை யையும் உணர்வர். கலப்பின்றி கல்ல செந்தமிழில் எழுதப்பட்டுள்ளன வற்றைத் தெளிவிலவென்று கூறிக் கொடுந்தமிழென்பர். தமிழ்பயிலாத சிலர் தாம்பயிலாமையை எண்ணாது கடுமையான நடையில் எழுதப் பட்டுளதென்றும் பொருள் விளங்க வில்லையென்றும் தமிழாசிரியரைப் பற்றிக் குறை கூறுவர். இவர்கள் கற்போரின் அகவைக்கும் அறிவுக்கும் எழுதப்படும் பொருளுக்கும் ஏற்ப நூலமைய வேண்டு மென்பதை யுணர்ந்திலர்.

பிறமொழி நூற்பொருள்களைத் தமிழில் மொழிபெயர்க்குங்கால் அம்மொழிச் சொற்களுக்கேற்ற தமிழ்ச் சொற்களை யாராய்ந்தெழுதுதல் வேண்டும் இச்செயல் தமிழ்மொழிப்பயிற்சியோடு பிறமொழிப்பயிற்சியும்

கன்கமையப் பெற்றவர்கட்குக் கைகூடுவதாகும். தனித்தமிழ்ப் பயிற்சி யேனும் தமிழில் கல்ல பயிற்சியின்றி வேற்றுமொழி பயிற்சிமட்டுமேனும் உடையவர்கட்கு இச்செயல் ஏலாததாகும். ஆதலால் மொழிபெயர்ப் பாளர் வடமொழி ஆங்கிலம் முதலிய பிறமொழி நூற் பொருள்களைத் தமிழில் எழுதுங்கால் ஏற்ற தமிழ்த்தனிச் சொற்களை யாராய்ந் தமைத்தல் வேண்டும். தனிச்சொற்கள் கிடைத்திலவேல் தொடர் மொழிகளாகவேனும் புதிய சொற்களை யாக்கியேனும் யமைத்தல் வேண்டும். இங்ஙனமன்றி வடமொழியினும் ஆங்கிலத்தினுமுள்ள நூல்களை மொழிபெயர்க்குங்கால் வடசொற்கும் ஆங்கிலச்சொற்கும் தமிழ்ச்சொல் எழுதத்தொடங்கி வடமொழிச் சொற்களையே மிகுதியாகக் கலக்கின்றனர். வடமொழி யறியாதோரும் அறிவியல்நூல் முதலிய வற்றை மொழிபெயர்க்குங்கால் மிகுதியாகக்கலக்குஞ்செயல் வியப்பூட்டுவ தாகும். இவ்வாறு இவர்கள் கலப்பதற்குக் காரணம் வடமொழிப் பற்றும் தமிழ்ப்பற்றின்மையும் பயிற்சியின்மையுமாகும். மொழி பெயர்ப்பாளர் தமிழ் மொழிப் பயிற்சியோடு பிறமொழிப்பயிற்சியும் கன்கமையப்பெற்றவராய் இருக்க வேண்டுமன்றே? இவ்வாறிருக்க வேண்டியதற்கு மாறுகவுள்ள கம் காட்டினர் ‘கானமயிலாடக் கண் டிருந்த வான்கோழி தன்பொல்லாச்சிறகை விரித்தாடினும் போலத் தேர்ச்சிபெறுத தமிழ்மொழியில் மொழிபெயர்க்க முற்பட்டுவிடுகின்றனர் இதனால் உண்டாகுக் தீங்கினைச் சிறிதும் எண்ணுகின்றிலர். இத் தகையோர் மொழிபெயர்த்த நூல்களைப் படிக்கின்றபோது இந்நூல் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுளதா? அன்றிப் பிறமொழியைத் தமி ழெழுத்துக்களால் எழுதப்பட்டுளதா? என்ற எண்ணம் கமக்குண்டா கின்றது. அரசியலரசரால் கிறுவப்பட்டும் தாமாகவும் தமிழிற்குப் பணி புரிய முன்வருவோரிற் பெரும்பாலோர் தமிழறியாராயும் பற்றிலராயும் பிறமொழிப் பற்றுடையராயும் இருத்தலால் வடசொற்கள் ஆங்கிலச் சொற்களை மிகுதியாகக் கலந்தெழுதி கன்மை செய்கிறோமென்றுகூறித் தீமைபுரிகின்றனர் இவர்கள் தம்மைத் தமிழர் என்பர். அரசியலார் உண்மையாகத் தொண்டு புரியுக் தமிழர்களைப் விணைக்குழுவில் சேர்ப்ப தில்லை. அவர்கள் தனிமையிற் தமிழினிடத்துள்ள ஆரா அன்பால் கன்கு உழைத்துச் செய்துள்ள தொண்டினைப் போற்றுவதுமில்லை.

வடசொற்களைக் கலப்பதுமட்டுமின்றி ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ, ஸ்ரீ, முதலிய எழுத்துக்களையும் கலக்கின்றனர். இவ்வெழுத்துக்களைமைத்த சொற்களை கம்மொழிக்கேற்பத்திருத்தி வழங்காமல் அம்மொழி ஒலிக் குறிப்பின்படியே பேசியும் கற்பித்தும் எழுதியும்வருகின்றனர். மேற் கூறிய எழுத்துக்களைக் கலப்பதனால் தமிழெழுத்துக்கள் இலக்கணத் திற்கு மாறுக மிகுகின்றன. இவற்றையுஞ் சேர்த்து இனிச்சூத்திரஞ் செய்தல் வேண்டும். எம்மொழியினும் இவ்வாறு பிறமொழி யெழுத்துக் களைக் கலந்தெழுதுவதாகத் தெரியவில்லை. பிறமொழியாளர் தம்மொழி யொலிக்குறிப்பிற் கேற்பவே பிறமொழிச்சொற்களைத் திருத்தி வழங்குவ தன்றித் தம்மொழிக்கு மாறுபட்ட பிறமொழிக்குரிய எழுத்துக்களைக்

கலக்து வழங்கக்கண்டிலம். இச்செயலே கம்மொழிக்கும் ஏற்றதென முன்னோர் முடிபு கண்டனராயினும் அவ்வழிநின் ரொழுகுகின்றிலர். வட சொற்களைக்கலந்து வழங்குவதற்கேற்பத் தமிழில் எழுத்துக்கள் இல்லையென்றும் எழுத்துக் குறையுற்ற மொழியென்றும் குறையைப் போக்க மேற்கூறிய எழுத்துக்களையும் இன்னும் எஞ்சியுள்ள வடமொழி யெழுத்துக்களையும் சேர்த்துக் கொள்வதே நல்லதென்றும் கூறு கின்றனர். இவர்கட்கு உலகில் சிறந்த எம்மொழியும் பிறமொழிகளின் எல்லா ஒலியையும் வெளியிடத் தக்கவாறு எழுத்துக்களையுடையன அல்லவெனின் யாது கூறுவர்.

எழுத்துக்களையுஞ் சொற்களையு மிகுதியாகக் கலப்பதற்கேற்ப வட மொழியிலக்கணம் தமிழிற் புகுதலோடு சிலபுதிய இலக்கண முறை களையும் அமைக்க வேண்டியிருக்கிறது. தொல்காப்பியத்தையும் கன் னூலையும் நோக்குவோர் இதை யுள்ளங்கை நெல்லிக்கனியென உணர்வர். இவ்வாறு பிறமொழி யிலக்கணம் கம்மொழியில் இடம் பெறுதல் கன்மையா? தீமையா? என்பதை அறிஞர் ஆராய்தல்வேண்டும்.

இங்ஙனம் இப்பொழுது கலந்த நிலையைக் கணக்கிட்டால் தமிழ்ச் சொற்களுள்ள அளவிற்கு வடசொற்கள் கலந்துள்ளன என்பதை அறியலாம். அஃதாவது அரைப்பங்கு வடசொற்களும் அரைப்பங்குத் தமிழ்ச்சொற்களுமாகக் கலந்துள்ளன. எஞ்சியுள்ள கலக்காத அரைப் பங்குக் குறைவையும் போக்க வழக்காற்றில் வாராத வடசொற்களை மிகுதியாக அகராதியிற் ரொகுத்து வைத்துள்ளனர். இவ்வகராதியைத் தமிழகராதி யென்று வழங்குவதை விடுத்துத் தென்மொழி வடமொழி யகராதி என வழங்கலே பொருந்தும். இவ்வகராதியிற்ரொகுத்து வைத்துள்ள எஞ்சிய சொற்களை இனிவழக்காற்றில் வலிந்து புகுத்துவர். வடமொழி கற்காமலும் பேசாமலும் பேசுகின்றவர்களோடு கூடி வாழா மலும் கம்மவரும் பிறரும் இவ்வாறு மிகுதியாகக் கலப்பார்களாயின் கம் மொழி யென்னகு மென்பதைச் சிறிது ஆழ்ந்து கருதல் வேண்டும். இவ்வாறு கலப்புற்ற மொழி தமிழ்மொழியா? வடமொழியா? தமிழென்று கூற காணுறுவேம். இங்ஙனங் கலக்கின்ற செயல் மேலுஞ்சில்லாண்டு நடைபெறுமாயின் தமிழென்ப தொன்றின்றியே மாய்ந்தொழியுமன்ரே? தமிழ்மொழிக்குறுங்கேடு தமிழர்க்குறுங் கேடன்ரே. அதுகேடுறு மாயின் தமிழர்களின் நாகரிகமும் கொள்கைகளும் சீரும் சிறப்பும் கேடுறுமல்லவா? மேற்கூறியவைகள் கேடுறுங்கால் தமிழர்கள் கேடின்றி வாழ்தல் எங்ஙனம்.

உயர்தனிச் செம்மொழியொன்றில் பிறமொழிச் சொற்களை வலிந்து கலத்தல் கொடியனபலவற்றுள் ஒன்றென்பதுதான் மொழியா ராய்பவரின் முடிபாகும். குறையாகதென்றெண்ணிக் கலப்போர்செயல் தாய்க்கொலை சால்புடைத்தென்பதனோடொக்கும். சிலர் இக்கிய மொழியனைத்திற்கும் தாய்மொழி வடமொழியென்று கூறுவதோட மையாது தமிழிற்கும் தாய்மொழியாகுமென்றும் ஆதலினல்கலப்பது

குறையாகதென்றுங் கூறுவர். ஆனால் அறிஞர் இதுவும் அதுவும் தனித்தனிப் பண்புடைய மொழிகளென்றும் தமிழ் பலமொழிகட்குத் தாய்மொழியாயுளதேயன்றித் தனக்கொருதாய்மொழியுடையதன்றென்றும் உணர்வர். உணராதோர் ஆராய்ந்துணரல் வேண்டும்.

பிறமொழிச் சொற்களைக் கலந்து வழங்குகின்ற ஆசிரியர்களிடத்தில் மொழித் தேர்ச்சிபெறுவதற்காகப் பாடங் கற்பதாலும் அவர்களால் எழுதப்பெற்ற நூல் முதலியவற்றைப் படிப்பதாலும் சொற்பொழிவைக் கேட்பதாலும் மாணவர்களும் தம் ஆசிரியர்களைப் பின்பற்றியே பிறமொழிச் சொற்களைக் கலந்து பேசியும் எழுதியும் வருகின்றனர். இவர்களும் அப்பழக்கத்திற்கே ஆளாகித் தங்கள் மொழியைப் பிறமொழிக் கலப்பின்றி வழங்க இயலாதவராகின்றனர். வகுப்பில் அருஞ்சொற்களுக்குப் பொருள் கூறுமாறு வினவில் மாணவர்கள் கூறுஞ் சொற்கள் பெரும்பாலும் வடசொற்களாகவேயிருக்கும். வடசொல்லென்றறிவித்து வேறு கூறச் செய்யின் மீண்டும் வடசொல்லே கூறுவர். இலக்கணத்திற்குக் காட்டுகள் கூறச் செய்யுமிடத்தும் வடசொற்களைக் கூறுவர். சிலர் ஆங்கிலச் சொற்களையுங் கூறுவர். இக்குற்றம் ஆசிரியர்களால் மாணவர்க்கு நேர்ந்த தாகும்.

இவ்வாறு பிறமொழிச் சொற்களையும் எழுத்துக்களையுங் கலப்பதாற் றமிழ்மொழியில் எழுத்துக்களுஞ் சொற்களும் பெருகுகளுக்கு நாள் வளர்ச்சிடைன்றன. ஆதலால் தமிழுக்கு கன்மையே யன்றித் தீமை யாதெனப் பலர் வினவலாம். பிறமொழிச் சொற்கள் கலந்து வழக்காற்றில் நிலைபெறுவதால் ஒருபொருளையே சிலர் தமிழ்ச் சொல்லாலும் சிலர் தமிழ்ச் சொல்லிருக்க அதை விடுத்து வட சொல்லாலும் குறிக்கின்றனர். இவ்வாறு குறிக்கும் நிலையைத் தமிழ்ச்சொல் வடசொற் போராட்டமெனலாம். சிறிது காலஞ்சென்றபின் அப் பொருளைக்குறிக்க அனைவரும் வடசொல்லையே கையாளுகின்றனர். இங்கிலையைத் தமிழின் தோல்வியென்றும் வடமொழியின் வெற்றி யென்றுங் கூறலாம். எடுத்துக் காட்டாகத் தமிழிலுள்ள கடவுட் பெயர், மக்கட்பெயர், காட்டுப்பெயர், ஊர்ப்பெயர், மொழிப்பெயர். இசைப்பெயர், பொருட்பெயர் முதலியவைகளில் பல இறக்கும் பல இறக்கும் நிலையிலும் இருக்க அப்பெயர்கட்கேற்ற வடமொழிப்பெயர்கள் வழக்காற்றில் நிலைபெற்றிருப்பது கொண்டுணரலாம்.

சிதைந்த தமிழ்ச் சொற்களும் வடசொற்களும் கலந்து பல வெவ்வேறு மொழிகள் தோன்றியுள்ளன. இவ்வாறு தோன்றிய மொழிகளைப் பேசுகின்றவர்கள் தமிழரினின்றும் பிரிந்து வேற்று மொழியாளராயினர். இதற்குச் சான்றாகத் தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் முதலிய மொழிகளையும் இம்மொழிகளைப் பேசும் தெலுங்கர், கன்னடியர், மலையாளர் துளுவர் முதலியவர்களையுங் காண்க. இவர்களனைவரும் பழந்தமிழர்களே. தமிழிற்கலந்த வடசொற்களையுஞ் சொற்றொடர்களையும் எழுத்துக்களையும் எளிதாக ஒலிக்க முடியாமல் பெரும்பாலோர் துன்புறுகின்றனர். சிலர் அவற்றைச் செவ்வையாக


ஒலிக்க எண்ணிக் காற்றையிழுத்து பெருமூச்சுவிட்டுத் திணருகின்றனர். பூவென்றுஞ் சொல்லலாம், புஷ்ப்பம் என்றுஞ் சொல்லலாம் ஐயா சொல்லுகிறது போலச் சொல்லலாம் என்ற மூதுரையொன்று நம்தமிழ்க் காட்டில் வழங்குகின்றது. இம்மூதுரை தமிழின் இனிமையையும் வடசொற் கலப்பினால் உண்டாகும் ஒலிக்குறிப்புத் தூன்பத்தையும் கன்கெடுத்துக்காட்டுகிறது. வடசொற்கள் மிகுதியாகக் கலப்பதால் தமிழ்ச்சொற்கள் வழக்காறற்றுத் திரிசொற்களாகி இறந்துபடுவதாலும் இன்னேரசை மாறுபட்டு மொழிகடை பிறழ்ந்து பண்புகெடலாலும் கற்ப திற்காலக்கழிவும் ஒலித்தலிற்றுன்பமும் உண்டாவதாலும் பழந்தமிழுக் கும் இக்காலக் கலப்புத்தமிழிற்குங் மிக வேறுபாடுண்டாகி பழந்தமிழ் நூற்பொருளறிதலிற் பேரிடர்ப்பாடு நேர்வதாலும் வேற்றுமொழிகள் பல உண்டாவதாலும் தமிழர்கள் வேற்றுமொழியாளராய்ச் சிதறுண்டு ஒற்றுமையின்றி வாழ நேர்வதாலும் தாய்மொழிப்பற்றுக் குறைவதாலு கன்மையொரு சிறிதும் இல்லையாதலானும் தமிழிற்கும் தமிழருக்கும் இக்கலக்கும்மிலே கேடுபயக்கும் என்பதைத் தமிழர்கள் உணரல் வேண்டும். இவ்வுணர்ச்சியின்மையாலன்றே தமிழ் மொழியும் வளர்ச்சி யுற்றிலது. தமிழரும் மேன்மையுற்றிலர். கலத்தலாற் றமிழுக் தமிழருங் கேடுறும் நிலையை யறிவுறுத்திப் பிறமொழிச் சொற்கள் கலத்தற்கூடா தெனின் மறுப்பாருண்டோ ? அன்றியும் ஒருமொழியிற்றேர்ச்சியுற விரும்பிய மாணவனொருவன் அம்மொழியின் சொற்களையும் பொருள் களையும் இலக்கணத்தையுமறிந்து தேறவேண்டுமேயல்லாமற் பிறமொழிச் சொற்களையும் பொருள்களையும் அறிவதாற் கருதிய மொழிகளில் தேர்ச்சியுறல் இயலாதென்பது அறிஞர் அனைவர்க்கும் ஒப்ப முடிந்த தொன்றாகும். ஆதலாற் றமிழிற் றேர்ச்சியுற எண்ணியவர்க்குப் பிறமொழிச் சொற்களாலும் எழுத்துக்களாலும் வேண்டுவதில்லையென உணர்க. அஃதன்றியும் பிறமொழிச் சொற்களைக் கலந்து வழங்குவதாற்றமிழ்ச் சொற்களின் இன்றியமையாமை மாணவர்களாற் கைவிடப்படுகின்றது. தமிழாசிரியர்கள் தமிழ் கற்பிக்கப்புகுந்து தமிழ்ச் சொற்களைவிடுத்துப் பிறமொழிச் சொற்களையும் எழுத்துக்களையுங் கலந்து கற்பித்தல் குளிக்கப்போய் சேறுபூசிக் கொள்வது போலாகும். தமிழர்கள் தமிழ்ப் பயின்றும் அதனைவிடுத்துப் பிறமொழிச் சொற்களைக்கலத்தற் கற்புடை மங்கையொருத்தி கணவனை விடுத்துப் பிறருக்கு வாழ்க்கைப்பட விரும்புதற்போலாகும்.

இக்கட்டுரையைப் பார்ப்போர் இப்பொழுது கலப்பற்ற தமிழ்மொழி யரண்டுமே இல்லையென்றெண்ணுவர். அவ்வாறெண்ணுதற் பொருத்தாது. எனெனில் கல்வி மனமே வீசப்பெறுத ஈற்றூர்களில் வாழ்கின்ற கல்வியறிவில்லா மக்கள் தனித்தமிழ் பேசி வருகின்றனர் என்பதையறிந்து உவப்பும் வியப்பும் உறவேண்டியவர்களாயிருக் கின்றோம். இவர்கள் கல்வியறிவுபெறின் கலந்து வழங்குகின்றோரின் நிலையையே யடைவர். ஆதலால் இத்தகைய கல்லாதாரே நல்லவர் களாயுள்ளனர். கல்லாத பேர்களே நல்லவர் நல்லவர்களென்ற சான் றோர் மொழி பொருத்தமுடையது போலும்.

தமிழாசிரியரும் பிறமொழி -- கற்பித்தலும்

இத்தகைய பழக்கம் பலநூற்றாண்டுகளாகப் பிறருடைய கூட்டுற வாலும் கலத்தல் மேன்மையென்றெண்ணிய சிலர் கொள்கையாலும் தமிழரிடத்தில் வேரூன்றிவிட்டது. ஆயினும் அன்று முதலின்றுவரை எதிர்க்கின்ற தமிழர்களுமுளராதலாற்றான் என்றுமுள தென்றமிழாய் இன்றும் தன்னிலைதிரியாமையுடன்றிகழும் நிலையில் உளதென்பதை பகுத் தறிதல் வேண்டும். அவ்வாறில்லையெனின் நம் தமிழ்மொழியும் பிற இந்திய மொழிகளைப்போல் வடமொழிக் கடிமைப்பட்டுத் தன்னலமிழந் திருக்கவேண்டும். பிறமொழிக்கடிமைப் படாமலும் தன்னலமிழக் காமலும் வீறுற்றிருக்கின்ற நிலையை நோக்கிப் போலுஞ் சான்றோர் ஒருவர் வீறுபெறுந் தமிழென்றனர்.

நம் மொழிக்கும் நமக்குமுற்ற கேட்டினையறிந்த பேரறிஞரிற் சிலர் பிறமொழிக் கலப்புக்கூடாதென்பதை யறிவுறுத்திக் தாமும் அக்நிலையில் நின்று கற்பித்தும் சொற்பொழிவாற்றியும் நூலியற்றியும் வருகின்றனர். அத்தகைய நலனைத் தமிழர் அனைவரும் அடைந்து தமிழ்மொழியையும் அடையும்படிச் செய்தல் இன்றியமையாக் கடமை யென்பதை யொவ் வொரு தமிழரும் உணரல் வேண்டும். ஆதலாற் றமிழாசிரியர்கள் கற்பிக்கும்போதுஞ் சொற்பொழிவாற்றும்போதும் நூல் முதலியன எழுதும்போதும் பிறமொழிக் கலத்தலின்றித் தமிழ் மொழியையே கையாள வேண்டுமென்பதை யுறுதியாகக் கடைப்பிடித் தொழுகல் வேண்டும். சொற்களைக் கசடறத்துவத்தலின்றி யாராய்ந்து தெளிந்து வடசொற் றமிழ்ச்சொல் என அறிவித்தல் வேண்டும். மாணவர்களையும் பிறமொழிக் கலப்பின்றிப் பேசவும் எழுதவும் பயிற்றல்வேண்டும். மாணவர்கள் தாங்களாகவே யறியக்கூடிய வடசொற்களையறிந்து விலக் கியும் வடசொற்றமிழ்ச் சொற்களைப் பகுத்துணர்ந்தும் ஆசிரியர்களைத் தனித்தமிழிற் கற்பிக்கும்படி வேண்டியும் தனித்தமிழிற் பேசவும் எழுதவும் ஆற்றலுடையராதல் வேண்டும். தமிழ்மொழியைப் பிற மொழிக்கலப்பின்றி வழங்கும் நிலையை ஆசிரியரும் மாணவரும் அடையின் அப்போதுதான் நம்மொழி செந்தமிழாகும். நாமும் பெய ராளவிலன்றி யுண்மைத் தமிழராவோம். நம்நாடுஞ் செந்தமிழ்நாடாகும். இத்தகைய சிறப்புறும் நாளிற்றான் செந்தமிழ் நாடெனும் போதினிற் காதினில் இன்பத் தேன்வந்து பாயுமென்றுணர்க்.



பரிபாடல்

பண்டிதர், லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள்
தமிழாசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

இந்நூல் புலவர் பெருமக்களுடைய அறிவுருவாகிய எட்டுத் தொகையுள் ஒன்றாகும். எட்டுத்தொகையுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித் தொகை, அகநானூறு என்னும் ஐந்தும் அகப் பொருள்பற்றியும், பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறப்பொருள் பற்றியும் வருவனவாம். பரிபாடல் அகப்பொருளும், புறப்பொருளும் பற்றி வருவதாம். இக்கருத்துப் புலனாகவே,

> '' நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறு நூறு
> மொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
> கற்றறிந்தார் சொல்லும் கலியோ டகம்புறமென்
> றித்திறத்த வெட்டுத் தொகை '' என்னும் பாடலில்

பரிபாடலைப், புறப்பொருள்பற்றிய பதிற்றுப்பத்துக்கும் அகப் பொருள் பற்றிய கலித்தொகைக்கும் நடுவே ஐந்தாவதாக வைத்தனர்போலும். இப்பாடலில் ' ஓங்கு பரிபாடல் ' என்று பாராட்டப்பட்டிருத்தலானும், ' இன்னியன் மாண்டோர்ச்சி * யிசை பரிபாடல் ' (11,137) என்று ஆசிரியன் கல்லக்துவனர் பாராட்டி இப்பரிபாடல்பெற்றமையை வையைக்குச் சிறப்பாகக் கூறியிருத்தலானும் இதன் பெருமையை உணரலாம்.

இந்நூல் பரிபாடல் என்னும் பாவினால் தொகுக்கப்பட்டமையால் இப்பெயர்த்தாயிற்று. பரிபாடல் தெய்வமும் காமமும் பொருளாக வருமென்பது அறிஞர்கட்கு ஒப்ப முடிந்ததே. பேரின்பமும் சிற்றின் பமுமாகிய இருவகை இன்பப் பகுதிகளையுங் கூறுவதென்பது ஈண்டு உணரத்தக்கதாம். பரிபாடற்பா, பலவகைப்பாவடியும் ஏற்று வருவதாம்.

* இசைப் பரிபாடல் எனக்கொள்ளினும் மிக்க பொருத்த முடையதாகும்.

பிற இலக்கணங்களைத் தொல்காப்பியத்துக் காணலாம். இப்பாடல்கள் இசையுடன் பாடப்பட்டனவென்பது, தேவாரங்களிற் போலப் புலவர் பெருமக்களாற் பண் வகுக்கப்பட்டிருத்தலானும், முதற் பாடலிற்றிற் பரிமேலழகர் "பரிபாட்டென்பது இசைப்பாவாதலான்" என்றெழுதி இருத்தலானும் "கலியும் பரிபாடலும் போலும் இசைப்பாட்டாகிய செந்துறை மார்க்கத்தன" என்னும் (தொல், செய், சூ, 242) பேராசிரியர் உரையானும் புலனும். இதனால் தமிழர்களுடைய இசைப் பயிற்சி தொன்று தொட்டதென்பது தெளிவாம்.

எழுபது பரிபாடல்களிருந்தனவென்பது பண்டையுரை களாலறியப் படினும் இப்பொழுது காணப்படுவன தொடர்ச்சியாகவுள்ள இருபத் திரண்டு பாடல்களும், பழைய வுரைகளிற் காட்டப்பட்ட இரண்டு முழுப்பாடல்களும் சிலவுறுப்புக்களுமே யாம். தொடர்ச்சியாகவுள்ள இருபத்திரண்டு பாடல்களுள் செவ்வேளுக்கு எட்டும், திருமாலுக்கு ஆறும், வையைக்கு எட்டும் உள்ளன. ஏனைய திருமாலியும் வையையையும் மதுரையையும் பற்றியன

இந்நூற்குப் பரிமேலழகருரை அணிகலம்போல் விளங்குகின்றது. அஃதின்றேல் நாம் இதன்கண் உள்ள நுண்பொருள்களைக் கண்டு இன்புறல் இயலாது. இந்நூலில் எனக்குத் தோன்றுவனவற்றைத் தொகுத்துச் சில பகுதிகளாக வகுத்தெழுதுகின்றேன்.

செவ்வேள்.

5, 8, 9, 14, 17, 18, 19, 21-ஆம் பாடல்கள் செவ்வேளுக்குரியன, இவற்றைப் பாடியவர் கடுவனிளவெயினனாரும், ஆசிரியன் கல்லந் துவனாரும், நன்றம் பூதனாரும், கேசவனாரும், நல்லழிசியாரும், நப்பண்ணனாரும், நல்லச்சுதனாரும் ஆவர். இப்பாடல்களில் செவ்வேள் பிறப்பு, சூரனைக் கொன்றமை, கௌஞ்சமலையைப் பிளந்தமை முதலிய வரலாறுகள் கூறப்பட்டுள்ளன. பிறப்புவரலாறு கந்தபுராணத்திற்கூறப் பட்டதின் வேறுகக் காணப்படுகின்றது.

"மூவிரு கயத்தலை முன்கான்கு முழுவுத் தோள்
ஞாயிற் றோர் நிறத்தகை (5. 11-12)

உடையு மொலியலுஞ் செய்யைமற் றுங்கே
படையும் பவழக் கொடி நிறங் கொள்ளும்
உருவு முருவத்தி யொத்தி முகனும்
விரிகதிர் முற்று விரிசுட ரொத்தி (19. 97-100)

"தொட்டதை.....அடையல் (21. 3-7)

என்னும் பகுதிகளாற் செவ்வேள் அறுமுகமும், பன்னிருகையும் செக்கிறமும் உடையவனுய்ச் செவ்வாடையுடுத்துச் செங்கடப்ப மலர் மாலையணிந்து வேல்பிடித்து அடையற் செருப்புத்தொட்டு இனிய வீரனுய் நம்முன்னர்த் திகழ்கின்றன்.

மணிநிற மஞ்ஞை யோங்கிய புட்கொடிப்
பிணிமுக மூர்ந்த வெல்போரிறைவ (17. 48-49)

என்பதனால் அவன், மயிலும்* சேவற்கொடியும், பிணிமுகமென்னும் யானையாகிய ஊர்தியும் உடையான் என்பது புலனும்.

ஆராவுடம்பின் .....ஆறிருகைக்கொண்டு (5.55-68)

என்பதனால் அவன் மறி, மஞ்ஞை, வாரணச்சேவல், சாபம், மான், வாள், ஈட்டி, சூடாரி, கணிச்சி, கனலி, மாலை, மணி என்னும் இப் பன்னிரண்டனையும் பன்னிரு கரங்களிலும் கொண்டுள்ளானென்பதும், அவை, அவன் இந்திரனை வென்றவுடன் இவ்வாற்றலுடைய இவனே நம் சேனைத் தலைவனெனக் கருதித் தேவர்களால் தம் உடலினின்று பிரித்துக் கொடுக்கப்பட்டன வென்பதும், அவற்றுள் கோழி திக்கடவுளாலும், மயில் இந்திரனாலும் யாடு யமனாலும் கொடுக்கப்பட்டன வென்பதுந் தெரிகின்றன.

"நீயே வரம்பிற்றிவ் வுலகம்" (5.17)

"சிறப்பினு ளுயர் பாகலும்
பிறப்பினு ளிழி பாகலும்
ஏஎர் நின்வலத்தினதே" (5,19-21)

"எருமை யிருந் தோட்டி என்னீயுங்காலை" (8.86)

என்பனவற்றுற் செவ்வேளின் தலைமையும் ஆற்றலும் அழகுறக் கூறப் படுகின்றன.

நின்குண மெதிர் கொண்டோ ரறங் கொண்டோ ரல்லதை
மன்குண முடையோர் மாதவர் வணங்கி யோரல்லதை
செறுநீர் நெஞ்சத்துச் சின நீடி னுரும்
சோர வறத்துச் சீரி லோரும்
அழிதவப் படிவத் தயிரியோரும்
மறுபிறப் பில்லெனு மடவோருஞ் சோரார்
நின்னிழல் அன்னோ ரல்ல நின்னோர்
சேர்வா ராதலின் யாஅ மிரப்பவை
பொருளும் பொன்னும் போகமு மல்ல நின்பால்
அருளு மன்பும் அறனு மூன்றும்
உருளிணர்க் கடம்பி னுலிதா ரோயே (5.71-81)

என்புழி, 'யாஅமிரப்பவை பொருளும் பொன்னும் போகமுமல்ல நின்பால் அருளுமன்பும் அறனுமூன்றும்' என்னும் அடிகட்குப் பரிமேலழகர், "நின்னை யாமிரப்பவை நுகரப்படும் பொருள்களும் அவற்றை உள வாக்கும் பொன்னும் அவ்விரண்டானு நுகரும் நுகர்ச்சியுமல்ல; எமக்கு வீடு பயக்கும் நின்னருளும் அதனை உண்டாக்க நின்னிடத்து யாம் செய்யுமன்பும் அவ்விரண்டானும் வரும் அறனுமாகிய இம் மூன்றுமே" என்று அருமையாக வுரை கண்டுள்ளார். ஈண்டுத், திருக்குறளில் (755) அரசன் குடிகள் மாட்டுச் செய்வது அருள், குடிகள் அரசன் மாட்டுச் செய்வது அன்பு என எழுதப்பட்ட வுரை கினைக்கத்தக்கதாம். இங்கே 'ஆதலின்' என, முற்பகுதியைக் காரணமாகக் கூறியது யாங்ஙனம் பொருத்துமெனின், கூறுவேன்:— பொருளும் பொன்னும் விரும்புவார்க்கு உயிர்களை அழிக்கின்ற தீ நெஞ்

* மயில் ஊர்தியாகவும் கொடியாகவும் கூறப்படும்.

சமும், அறத்திற் சேராமையாற் பழியும் உண்டாமாதலானும் போகம் விரும்புவார்க்குக் கூடாவொழுக்கத்தால் தவவிரதம் அழிதலும் இப் பிறப்பின் நுகர்ச்சியே யுள்ளது மறுபிறப்பின்று என்னும் மடமையும் உண்டாமாதலானும் அவற்றைத்தாம் வேண்டாமலும், இறைவன்மாட் டன்பு செலுத்தி அவன் அருளைப் பெற்றூர் பெறுவது அவன் குணங் களே அறிந்து மேற்கொண்டு அவனே வழிபடலாகிய அறமே யாத லானும், அத்தகையோரை விடுபெறு மியல்புடைய மாதவரும் வணங்குவ ராதலானும் அருளும் அன்பும் அறனுமே தாம்வேண்டியுங்கூறினு ரெனக் கொள்ளலாம்.

"பணியொரீஇ நின்புகழேத்தி
யணிகெழுங் குன்றம் பாடுதந் தொழுதும்
அவை, யாமு மெஞ் சுற்றமும் பரவுத
மேம வைகல் பெறுகயா மெனவே" (17.50-53)

என்று கல்லழிசியார் கூறுகின்றூர். ஈண்டுச் 'சேவலங்கொடியோன் காப்ப ஏமவைகல் எய்தின்ரு லுலகே' என்னுங் குறுந்தொகைக் கடவுள் வாழ்த்தடி நினைவிற்கு வருகின்றது. இதனினும் சிறப்பாக,

"வாழ்த்தினேம் பரவுதந் தாழ்த்தித் தலைநினையா
கயத்தலிற் சிறந்த வெம் மடியுறை
பயத்தலிற் சிறக்க நாடொறும் பொலிக்தே" (9.83-85)

"செருவேற் ருனைச் செல்வ நின்னடியுறை
யுரிதினி னுறைபதிச் சேர்ந்தாங்குப்
பிரியா திருக்க வெஞ்சுற்ற மோடுடனே" (18.54-56)

"சுன்றம ராயமோ டொருங்கு நின்னடியுறை
யின்றுபோ லியையெனப் பரவுத
மொன்ரூர்த் தேய்த்த செல்வநிற் ருழுதே" (21.68-70)

"அண்ணா யாகலி னமர்த்தியா நின்னைத்
தின்னிதி னின்னி வழிபடு வதன்பய
மின்னு மின்னு மவை யாகுக
தொன்முகிர் மாபினின் புகழினும் பலவே" (14.29-32)

எனச் செவ்வேள் திருவடிக்கணுறைதலையும் அவனை வழிபடுதலையும் வேண்டிக் கூறும் பகுதிகள் 'கூடு மன்பினிற் கும்பிடலே யன்றி வீடும் வேண்டா வீறலின் விளங்கினூர்' என்னுந் திருவாக்கை நினைஷூட்டு கின்றன. திருமாலிடத்தும்,

"காமரு சுற்றமோ டொருங்குநின் னடியுறை
யாமையைத் தொன்றுபு வைகலும் பொலிகென
வேமுறு நெஞ்சத்தேம் பரவுதும்
வாய்மொழிப் புலவ நின்ருழை ருழுதே" (1.62-65)

"அன்னையென நினை நின்னடி தொழுதனெம்
பன்மாணடுக்க விறைஞ்சினேம் வாழ்த்தினேம்
முன்னு முன்னும் யாஞ்செய் தவப்பயத்தா
லின்னு மின்னுமெங் காமமி தூவே" (13.61-64)

" நல்லடி யேத்தி நிற் பரவுது
மெல்லெம் பிரியற்கெஞ் சுற்றமோடொருங்கே " (திரட்டு. 81-82)

என அவ்விரண்டனையும் வேண்டிக் கூறுதலுங் காண்க. முன்னர்க் காட்டியவாறுள்ளும்,

" உடங்கமராயமோ டேத்தினந் தொழுதே " (19. 105)
" சுடும்பொடுங் கடும்பொடும் பரவுதும் " (2. 75)
" தையலவரொடுந் தக்கா ரவரொடுங்
கைம்மக வோடுங் காதலவரொடுந்
தெய்வம் பேணித் திசைதொழுதனிர் சென்மின் " (15.46-48)

என்பவற்றுள்ளும் கடவுளை ஏத்தும் போதும் அவன் அடியுறைவை வேண்டும் போதும் சுற்றத்தாரையுஞ் சேர்த்துக்கூறும் அழகு வேற் றிடத்திற் காணப்படாத தொன்றாம். ஈண்டுக்

" காக்கை காவா கரைந்துண்ணு மாக்கழு
மன்னதீ ரார்க்கே யுள " (527)

என்னுந் திருக்குறளும் ' அப்பெற்றித்தாய வியல்பென்றது தாம் துகள் வனவெல்லாம் அவரும் துகளுமாறு வைத்தல் ' என்னும் உரையுங் காண்க.

" தொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற மூடுப்பதூஉ
மூண்பதூஉ மின்றிக் கெடும் " (166)

என்பதனுல் ஒருவனுக்கு வருந்தீமை அவன் சுற்றத்தைச் சாருமெனவே நன்மையுஞ் சாருமெனல் கூறாமலே விளங்கும்.

இறைவன் திருவடியையே புலவர்கள் விரும்புவதற்குக் காரணம் அது வீடளிக்கும் என்னும் உண்மையேயாம். இதனை,

" சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்துறையும் "
[(திருமுருகாற்றுப்படை 62-3)

என்புழி நச்சினார்க்கினியர் எழுதிய ' மெய்ஞ்ஞானத்தால் அறிதலிலக் கைவிட்டுத் தங்குந்திருவடி, திருவடியே வீடாயிருக்குமென்றார். அது ' தென்னன் பெருந்துறையான், காட்டாதனவெல்லாங் காட்டிச் சிவங் காட்டித் தாட்டாமரை காட்டித் தன்கருணைத்தேன்காட்டி ' என்பத னானும் பிறரும் திருவடியைக் கூறுமாற்றானுணர்க ' என்னும் உரை யானும் உணரலாம். ' நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள்வாழ்க ' என மாணிக்கவாசகப்பெருமான் திருவடியை முதலிற் கூறியதும் அதனை அடைதற்குக் கருவியாகிய ஐந்தெழுத்தை அதனினும் முற்படக் கூறியதும் இக்கருத்துப் பற்றியேயாம்.

" மறுபிறப் பறுக்கு மாசில் சேவடி " (3.2)
" நின் சேவடி தொழாரு முளரோ " (3.18-19)
" நின்னிற் பிறந்த நின்ருளிணையவை " (4.62)

எனத் திருமால் திருவடியைப் பற்றிவரும் பகுதிகளும், பின்னதற்குள்ள

'வீடளிக்குங்கால் கின்னிலுஞ் சிறக்க கின்தாளிணையை உடையை' என்னும் உரைப்பகுதியும் கண்டு மகிழத்தக்கனவாம்.

" நின்னடி, தலையுற வணங்கினேம் பன்மாண் யாமுங்
கலியி னெஞ்சினே மேத்தினேம் வாழ்த்தினேம்
கடும்பொடுங் கடும்பொடும் பரவுதுங்
கொடும்பாட நியற்க வெம்மறி வெனவே " (2.72-76)

என்புழி எழுதப்பட்ட 'எம்மறிவு கொடும்பாடறியற்க வென மெய்யுணர் வினையே வேண்டினர் வீடு அதனலல்ல தெய்தப்படாமையின்' என்னு முரையால் திருவடியை வணங்கினல் மெய்யுணர்வு பிறக்குமென்பதும் அதனல் வீடு பெறலாமென்பதுக் தெரிகின்றன.

" மாசில் வீணையு மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெங்தை யிணையடி நீழலே "

என ஈசன் திருவடியைப்பற்றிக்கூறிய திருநாவுக்காசர் திருவாக்கும் இங்கே நோக்கத்தக்கது. அவன் திருவடியை அடைதற்கும் அவனருளே வேண்டுமென்பதை

" ஐம்வுல வேடரி னயர்த்தனே வளர்ந்தெனைத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினீ லுணர்த்தவிட்டு
அன்னிய மின்மையி னான்கழல் செலுமே " (8)

என்னும் சிவஞான போதச் சூத்திரத்தாலும், 'அவனருளாலே அவன்றாள் வணங்கி' என்னும் சிவபுராணப் பகுதியாலும் உணரலாம்.

" தலையுற வணங்கினேம் பன்மாண் யாமுங்
கலியி னெஞ்சினே மேத்தினேம் வாழ்த்தினேம் " (2.73-74)

" அன்னையென நினேஇ நின்னடி தொழுதனெம்
பன்மாணடுக்க வீறைஞ்சினேம் " (18.61-62)

" இதுவென வுரைத்தனெம் உள்ளமார்க் திசைத்திறை.
யிருங்குறைத் தடியுறை யியையெனப்
பெரும்பெயரிரவுரைப் பாவுதுந்தொழுதே " (15.64-66)

என்னுமிடங்களில், வணங்கினேம் கலியில் நெஞ்சினேம் ஏத்தினேம் வாழ்த்தினேம்' எனவும், 'நினை இத்தொழுதனெம் இறைஞ்சினேம் வாழ்த்தினேம்' எனவும், உள்ளமார்த்து உரைத்தனெம் தொழுது பரவுதும்' எனவும் மனம் வாக்குக் காயங்களின் செயல்களைக்கூறியமை யமுடைத்து. 'தொழுதனெம் இறைஞ்சினெம்' என்பன கையாற் றொழுதலும் தலையால் வணங்குதலுமாகிய காயச் செயல்களைக் குறிப்பனவாம்.

செவ்வேள் வீட்டின்பம் அளித்தலேயன்றி அன்பர்கள் விரும்பும் இம்மைப்பயன்களும் அளிக்குக் திருவருட்டிருவுருவினன் என்பது

" கனவிற் றொட்டது கைபிழை யாகாது
நனவிற் சேர்ப்பின் னளிபுனல் வையை

வருபுன லணிகென வரங்கொள் வோருங்
கருவயி றுறுகெனக் கடம்படு வோருஞ்
செய்பொருள் வாய்க்கெனச் செவிசார்த்து வோரு
மையடி ரடுகென வருச்சிப் போரும் " (8.103-108)

" கெழீஇக் கேளிர் சுற்ற நின்னை
எழீஇப் பாடும் பாட்டமர்க்தோயே " (14.23-24)

எனக்காதலரும் குழந்தையும், பொருளும், காதலருக்குப் பகை வெற்றியும், பிரிந்த காதலர் வந்து கூடி நீங்காமையும் மகளிர் வேண்டிக் கூறும் பகுதிகளால் அறியலாம். இவ்வாறு வேண்டும் வரங்கள் மகளிர்க்கு உண்டென்பதை வையையிடம்

" கழுத்தமை கைவாங்காக் காதலர்ப் புல்ல
வீழுத்தகை பெறுகென வேண்டுது மென்மாரும்
பூவீ ரரியிற் புலம்பம் போகா
தியாம்வீழ்வா ரேம மெய்துக வென்மாருங்
கிழவர் கிழலிய ரென்னுதேழ் காறு
மழவீன்று மல்லற்கேண் மன்னுக வென்மாரும் " (11.116-121)

எனக் காதலரும் காதலர் தம்மைப் பிரிந்து பிறர்பாற் செல்லாமையும் இளமையும் வேண்டிக் கூறும் பகுதியாலும் உணரலாம்.

17-ஆம் பாடலால் மகளிர் தம்மைப் பிரிந்த தலைவர் வினைமுடித்துக் கடிதின்வந்து கூடுதற் பொருட்டுப் பரங்குன்றின்கண் விழாச் செய்வ தென்பதும், 19-ஆம் பாடலால் மணமான மகளிர் தம் காதலர் அன்பைப் பெறுதற் பொருட்டும், மணமாகாத கன்னியர் குறைவற்ற காதலரைப் பெறுதற் பொருட்டும் பரங்குன்றத்துள்ள முருகன் கொடி ஏற்றப்படும். யானைக்குப் பூசை செய்து அவ் யானையின் கவளமிச்சிலை யுண்பரென் பதும் தெரிகின்றன.

முருகன் பூசை, யாழொலிக்கப் புலவர்கள் பாட அந்தணர் வேத மோதச் சூடர், நறும்புகை மலர்களுடன் நிகழ்கின்றது. உலகத்தார் பரங்குன்றிற் பலவிடங்களிலும் முருகனுக்குச் செய்யும் பூசைக்கண் உண்டாம் அகிற்புகை, சூரியனை மறைத்து இமையோர் கண்களையும் இமைக்கச் செய்கின்றது.

திருப்பரங்குன்றம்

முருகப் பெருமான் வீற்றிருக்கும் திருப்பரங்குன்றம், அதன் அடி யுறைவார்க்குத் தேவருலக வாழ்வையும் வேண்டா இயல்பை அளித்து விளங்குகின்றது. இதனை, " அடியுறை யெய்தர் மேலோர் உறையுளும் வேண்டுகர் யாஅர் " (17.7-8) என்பதனால் உணரலாம். இதனாற்றான் " குன்றத்தடியுறை யெய்தெனப் பரவுதும் " (21.16) என ஒரு புலவர் பெருமான் பாடுவாராயினர். ஆண்டு உரையாசிரியர், குன்றத் தடியிலிருந்தே அஃதையை வெனப் பரவுதல் சிறப்பின்றெனக் கருதி 'மறு பிறப்பிலும் இயைகவென' ப் பரவுதும் என எழுதியது மிகவுஞ் சுவை தருகின்றது. திருப்பரங்குன்றத்திற்குச் செல்வார்க்கு

''அறம் பெரி தாற்றி யதன்பயன் கொண்மார் சிறக்தோர் உலகம் படரு நரை'' (19.10.11) உவமை கூறியிருத்தலுங் காண்க. பரங்குன்றம் முருகனைத் தொழுதற்குத் திருமால் முதலிய அமரரும் அவுணரும் முனிவரும் வந்து கூடுதலானும் முருகன் விரும்புதலானும் இமையக் குன்றைப் போல் விளங்குகின்றது. ஆண்டுள்ள சுனை இமயத்துள்ள முருகன் பிறந்த வற்றுப் பொய்கையை ஒத்துளது. ஈண்டு (8.15) 'ஒருநிலைப் பொய்கை' என்பதற்கு 'வற்றுப் பொய்கை' என உரைகண்ட பரிமேலழகர் அறிவுத்திறம் பாராட்டற் பாலது.

அன்பர்கள் சந்தனம், புகைப்பன, நந்தா விளக்கிற்கு வேண்டுவன, மலர், முழவு, மணி, கயிறு, மயில், குடாரி, பிணிமுகம் முதலியன ஏந்திச் சென்று முருகனை வழிபட்டு வரம் வேண்டுகின்றனர். தாளத் தொடு இயங்களார்க்கின்றன. அக்குன்றத்தின் புகழ் திசைஎங்கும் பரவியுள்ளது.

அம்மலைக்கண் இரோவிய அம்பலந்திகழ்கின்றது. அங்கே அறிவும் அன்புந்தரும் பல ஓவியங்கள் உள்ளன. இதனை,

> ''என்னு முழவரு மிருசுடர் கேமி
> யென்றிய சுடர்நிலை யுள்படு வோரும்
> இரதி காம னிவளிவ னெனுஅ
> வீரியர் வினவ விளுவிறப் போரு
> மிந்திரன் பூசை யிவளக லிகையிவன்
> சென்ற கவுதமன் சினனுறக் கல்லுரு
> வொன்றிய படியிதென் றுரைசெய் வோரு
> மின்ன பலபல வெழுத்திநிலை மண்டபம்'' (19.46-53)

என்பதனால் அறியலாம். அவ்வம்பலம் மன்மதனுடைய படைப்பயிற்சி செய்யுமிடத்தைப் போன்றுள்ளது. மலர்மிக்க சோலைகளும், சுனை களும் அம்மன்மதனுடைய அம்பருத் தூணியை யொத்தும், காந்தட் குலைகள் அவன்போரில் தோற்றுக் கட்டுண்டார் கைகளை யொத்தும் உள்ளன. தும்பிகளால் கட்டவிழ்க்கப்படும், மலராதும் குவியாதும் இடைப்பட்ட நிலையிலுள்ள காந்தள் முகைகள், யாழ் நரம்புக்கட்டை நெகிழ்ப்பவர் கைகளைப் போன்றுள்ளன. இவ்விடத்துக்,

> ''கொடியிலார் கைபோற் குவிந்த முகை
> அரவுடன் றலை போல் விரிந்த குலை
> குடை விரிந்தலை போலக் கோலு மலர்'' (20-98-100)

என்னும் அடிகள் நினைக்கத்தக்கன.

சிகரங்களில் முத்து மாலை போல அருவிகள் ஒலித்து இழிகின்றன. நினைக்கதிர்கள் சுருவியார்ப்ப வீசுந்துள்ளன. அரக்கு, இறலி, தேன், மயிற்பீலி, நாவி என்னும் ஐவகை மலைவளமும் பொலிவு பெறுகின்றன. கடப்ப மலர்களில் வண்டுகள் பாண்பேரல் ஒலிக்கின்றன. வேய்கள், ஆடும்மகளிர் தோள் போன்றுள்ளன. மயில்கள், கூடிப் பிரிந்தோரை விரைந்து வாரும் என்பனபோல அகவுகின்றன. அழுகின்ற மகளிர்க்கு

அது தீரத் தாயார் புலி, புலி யென்று சொல்லுமாறு பாறைகளில் வேங்கைப்பூ பரந்திருக்கின்றன. பச்சிலையினிளங்கொழுந்து, ஆம்பல், காந்தள், எருவை, வேங்கை, தோன்றி, கறவம், கோங்கு, இலவம் என்னும் இவற்றின் மலர்கள் தெற்றின மாலைகள்போல நிறைந்தும், கோத்த மாலைகள் போல நிறம் மாறுபட்டும், தொடுத்த மாலைகள்போல இடையிட்டும், தூக்கிக் கட்டின மாலைகள்போல நெருங்கியும் பூத்தலால் அக்குன்றிடமுழுதும், விடியற்காலத்துப் பல நிறத்து மேகமார்ந்த வானம்போலத் திகழ்கின்றது. காற்று, முருகனுக்குப் பூசைக்கண்ணே காட்டும் கறும்புகையூடும், இளைஞர் பூசிய சந்தனத்தின் கண்ணும், மகளிருடைய பூந்தாது உதிர்த்த கூந்தலின் கண்ணும் படிந்து கறுமணம் கமழ்கின்றது.

அம்மலைக்கண் ஒருபால் மகளிராட்டம் நிகழ்கின்றது. கள்ளருந்திய ஓரழகி, துடியெயலிக்கேற்ப அடிபெயர்த்துச் சிலம்பொலிப்ப ஆடுகின்றாள். அதனைக் காண்பவருள் ஆடுகின்ற மாதின் போழகையும் தன் கணவன்மார் மனநிலையையும் கருதும் மகளிர் மனவியல்பை, நல்லச்சுதனார்,

"அடு நரு மிழித்தட்ப ஆவோ டகைமையி
னுனையிலவ் கெஃகெனச் சிவந்த நோக்கமொடு
தூணையினே கேள்வனைத் துணிப்பவ னிலையு
நிழல் காண் மண்டில நோக்கி
யழல் புனை யலரிழை நிருத்தவான் குறிப்பும்
பொதிர்த்த மூலையிடைப் பூசிச் சந்தன
முதிர்த்துப் பின்னுற வூட்வோள் விருப்பும்
பல்லூழ் இலையிலை நினைப்பின் வல்லோன்
ஓவத் தெழு தெழில் போலும் (21. 20-28)

எனப்பாடியதும், பரிமேலழகர் இங்கே "இவளழகு எமக்குங்கூட வியப்பாயிற்று, இனி இவற்குச் செல்ல வேண்டுமோவென உட்கொண்டு கேள்வன் தூணையாய் அமரா நிற்கவும் அவனை வெகுளி மிக்க நோக்கமொடு துணிக்கின்றாள்" எனவும், "இவளினும் எனக்கு அழகுண்டாயவழி இவனை நோக்காவென்று கருதிக் கண்ணுடியை நோக்கித் தன் அணிகளைத் திருத்துகின்றாள்" எனவும், "மார்பிடத்தே சந்தனத்தைப்பூசி யுதிர்த்து காற்றம் நிலைபெற்றவழி என்னைத் தழுவு மென்று கருதி அதனைப் பின்னும் பின்னும் ஊட்டுவாள்" எனவும் எழுதிய வுரையும் மிழ்வளிக்கின்றன. இப்பகுதியைச் சற்றுக் கவனிப் பின் சினந்தவள் போழகியாதலால் துணியால் வசப்படுத்தக் கருதினாள் என்பதும், அணி திருத்தினாள் அழகால் இடைப்பட்டவள். ஆதலின் தன் இயற்கை யழகோடு செயற்கை யழகுங்கூடினால் கணவனைத் தன் வசப்படுத்தலாம் எனக்கருதினாள் என்பதும், காற்றமூட்டினாள் அழகால் கடைப்பட்டவளாதலின் இருவகை அழகும் கூடாமையால் மணத்தால் வசப்படுத்தக் கருதினாள் என்பதும் புலனாகின்றன.

''மணிமரு.....போன்ம்'' (21.57-63) என்பதனும் கள்ளருக்கிய ஒரு மகள் தன் கணவன் துடிகொட்ட, ஆடையும் அணியும் அசைய ஆடும் பூங்கொம்பு போல ஆடுகின்றுள் எனவும், ''ஒரு திறம் பாணர் யாழின் நீங்குரலெழ .... மாறட்டான் குன்ற முடைத்து'' *(17.9-21)* என்பதனுல் சிலவிடங்களில் யாழொலியும், குழலொலியும், முழவொலியும், விறலியர் ஆட்டமும், பாடினியின் பாடலும் நிகழ்கின்றன; அவற்றிற்கு எதிராகச் சிலவிடங்களில் முறையே வண்டொலியும், தும்பியொலியும், அருவியொலியும், கொடியசைவும், மயிலொலியும் நிகழ்கின்றன வெனவுங் கூறப்பட்டிருத்தலுங் காண்க. ''மிசை படுசாக்தாற்றி.... ...இரங்குமுரசினுன் குன்று'' *(21.30-38)* என்பதனுல் மலருதும் தும்பியொலியும் வண்டொலியும் அருவியொலியும் முறையே குழலொலியும் யாழொலியும் முழவொலியும் போலத் தோன்ற மயில் ஆடுகின்றனவெனக் கூறப்பட்டிருத்தலும் ஈண்டு நினைக்கத்தக்கதாம்.

''பாடுவார் பாணிச்சிரு மாடுவா ராரங்கத் தாளமும்'' [8.109]

' ஆட னவின்றே ரவர்போர் செறுப்பவும்
பாடல் பயின்றேரைப் பாணர் செறுப்பவும்.. [9.72-73]

என வருவனவற்றுலும் ஆடல் பாடல்களும் அவற்றின் போர்களும் ஆண்டு நிகழ்தல் புலனும்.

பாண்டியவரசன் தம் உரிமைமகளிர்களோடும் அமைச்சர்களோடும் நாடும் நகருஞ்சூழ அம்மலையி லுள்ள திருக்கோயிலை வலம் வருங்கால் அத்தோற்றம் விண்மீன்சூழத் திங்கள் மேருமலையை வலம் வருதலை யொத்தது. அப்பொழுது மலையின் கீழிடம் நால்வகைச் சேனையும் நிறைந்திருத்தலால் அவன் பாசறை போலத் தோன்றியது. அவனுடன் மலைக்கு வந்தவர்கள் குரங்குகட்கு அவை யருந்தும் பொருள்களைக் கொடுத்தும், முசுக்கூட்டத்துக்குக் கருப்பு கொடுத்தும், பிரம வீணை வாசித்தும், குழலூதியும், யாழ் எழுப்பியும், மூரசடித்தும், பூசையின் அழகைப் புகழ்ந்தும் ஓவிய மண்டபம் கண்டும் களித்தனர்.

வள்ளி, தேவசேனை இருவரும் முருகன்பால் ஊடிய செயலையும் அதுபற்றிய பிறநிகழ்ச்சிகளையும் குன்றம்பூதனர் அழகுறப் புனைகின்றார். முருகன் தேவசேனையிடம் வந்தான். தேவசேனை அவனை நோக்கி, வஞ்சகனே! நின்னை அறியாது அகப்பட்ட மகளிர்திறம், மழைபெய்ய வேண்டி வருந்துஞ் சோலையை யொக்கும்; ஆதலால் நின்னை நம்பிய அவரே தவறுடையராவாரல்லது நீ தவறுடையையல்லை. நின்னை அடையும் திருவுடைய மகளிரொடு கூடி அருளுதலும் நின் பாலில்லை. ஆதலால் நின்னோடியான் கூடேன் என்று கையால் தன்னைச் சுட்டிக் காட்டிக் கூறி வள்ளி நாய்ச்சியார் காரணமான புலவியால் நீங்கினுள். உடனே செவ்வேள் அவன் கலிமாலை அவள் அடியிற் படுமாறு வணங்கினன். அவள் புலவி நீங்கி வருந்தாதே என்று கூறியணைத்தாள். அதுகண்ட வள்ளி யம்மை இனித் தேவசேனையை அணுகாதே என்று சொல்லிச் செவ்வேள் கையை இறுகக் கட்டித் தன்

மாலையே கோலாகக் கொண்டு அடித்தாள். அதனைக் கண்டு அவ்விருவருடைய மயிலும் கிளியும் மாறுபட்டன. வள்ளிநாய்ச்சியாருடைய வண்டு, தேவசேனை கொண்டையிலுள்ள வண்டின் மேற்சென்று பாய்ந்தது. அதனைக்கண்டு தேவசேனை பாங்கியர், மாலைகளையும் மார்பில் அணிந்த கச்சையும் பந்தையும் கருவிகளாகக் கொண்டு வள்ளி நாய்ச்சியார் பாங்கியரொடு பொருதனர். அதுகண்ட வள்ளிநாய்ச்சியார், பாங்கியர் மதங்கொண்ட யானைபோற் செருக்குற்றும், குதிரைபோல விரைந்தும், தேரணிபோல வடிக்கமைத்தைத் தெரிந்தெடுத்தும், வில்லனைத்தும் வாள்பிடித்தும், தோள்வலையாகிய சக்கரஞ் சூழற்றியும் போருக்கு வந்தனர். அதுகண்டு அஞ்சிய தேவசேனை பாங்கியர் முருகனைச் சூழ்ந்து, பின்னர்ச் சுனையுள் மூழ்கியும், சுனையுள் வண்டாய் ஒலித்தும், மயிலாய் ஆடியும், குயிலாய்க் கூவியும் துன்புற்றனர். இங்ஙனம் வள்ளி நாய்ச்சியார் பாங்கியர் போர் வினைத்தனரென நகைச் சுவை ததும்பக் கூறுகின்றார். இங்கே தேவ மாதர்கட்கும் குறத்தியர்கட்கும் ஏற்பப் போர்க் கருவிகள் கூறியது நயமுடைத்து. மழைபெய்ய வேண்டி வருந்துஞ் சோலையை யொக்கும் என்றது கா, தனக்கு இன்றியமையாத மழையை வருவித்துக் கொள்ளமாட்டாது, அதுதானே வந்துழிப் பொழிந்து வாராத வழியும் ஆமளவும் ஆற்றி ஆகாத எல்லைக்கண் இறந்து படுதலெனக் கொள்க.

> " கற்பிணை நெறியு டற்பிணைக் கிழமை
> நயத்தகு மரபின் வியத்தகு குமர " (9.81-82)

என்பதனால் அவ்வூடலை முருகன் விரும்பி மகிழ்கின்றான் என்பதுங் காண்க.

மகளிரும் மைத்தரும் ஆண்டுள்ள சுனைகளிற் பாய்ந்து ஆடுதலாற் சுனைப்பூக்களில் வண்டுகள் அஞ்சிமொய்த்தில.

ஆங்கு ஓர் இளைஞன், ஆடும் மயில் ஒன்றை நோக்கி அதன் அழகையும் களிப்பையும் தன் உள்ளத்துக் கருதினன். அதனைக் கண்ட அவன் மனைவி தன் சாயலினும் அதன்சாயல் அழகாக இருப்பதால் தன்னை நோக்காது அதனை நோக்கினனெனக் கருதி, நீ நினைத்தது அறிந்தேன். உண்மையைச்சொல் எம்மை நோக்காது இகழ்தலே மறையாதே என ஊடினள். தலைவன் காதலி ! கொள்ளுதற் கரிய நின் சாயலைக் களிமகிழாற் களவுகொள்ளக் கருதி அஃதியலாமல் வருந்தும் இதனைக் கண்டு யான் நின்சாயல் அருமையை நினைக்க, நீ இகழ்ந்ததாகக் கருதுகின்றாய் எனக் கூறி அவளுடலை ஒழித்தான்.

ஒரு பேதை தன் சுற்றத்தார்களினின்றும் நீங்கி, அவரைக் காண்டற் பொருட்டு அங்குள்ள கற்களின் இடை இடைப்புக்குத் திகைத்து, வந்த வழியு மறந்தேன் எனக்கூறி அச்சுற்றத்தரை யழைத்தாள். ஆண்டுள்ள குகைகளும் எதிரொலி செய்தன. அவள்

அதனையறியாது தன் சுற்றத்தாரும் தன்னை அழைக்கிறானென்று கருதி எதிரொலி உண்டாயவிடத்துச் சென்று, ஆண்டு அவரைக் காணாது பன்முறை கூவி மீண்டனள்.

ஒரு மகள் ஆழ்ந்த சுனை கடுவே மூழ்கி நீர்மேலெழுத்து, கரையில் நிற்கின்ற தன் கணவனை நோக்கி, நீரில் அழுந்துகின்ற தனக்குப் புணையாகிய மூங்கிலைத் தருமாறு வேண்டினள். அவள் கணவன் அது கொடாது அரக்கு நீர் நிறைந்த வட்டை எறிந்தனன்; ஆதலால் அவள் புணைபெறாது வருந்தினள். அவ்வமயத்து அவன் மகிழ்ந்து நீருள் மூழ்கி அவளைத் தழுவினன். இங்ஙனம் பலவாறு கவிகள் தம் அறிவுத் திறத்துக்கும் இயற்கைக்கும் பொருந்த ஓவியம் வரைந்து பரங்குன்றத்தை கம்முன் நிறுத்துகின்றனர்.

மதுரையிலிருந்து பரங்குன்றிற்குச் செல்லும் இடைவழியும், பல் வகை மலர் மணங்களோடு தென்றலசைகின்றது. மகளிரும் மைந்தரும் நெருங்கி விளையாடுதலால் விரைந்து செல்ல இயலாததாய் மிகச் சேய்த்தாகக் காணப்பட்டது. மகளிர் தலையினின்றும் மைந்தர் தலையினின்றும் விழுந்து அவிழ்ந்த மாலைகளால் தடுக்கப்பட்டு கடத்தற்கும் வழியின் ரூயிற்று எனப் புகழப்படுகின்றது. திருமான் மருகனையும், திருப் பரங்குன்றையும் பற்றிய செய்திகளை ஒருவாறு முடித்து இனித் திருமாலைப்பற்றிக் கூறுவேன்.

திருமால்

1, 2, 3, 4, 13, 15-ஆம் பாடல்களும் திரட்டிலொன்றும் திருமாலைப்பற்றியன. முதற்பாடலையும் திரட்டையும் பாடியவர் பெயர் தெரியவில்லை. 3, 4-ஆம் பாடல்களைக் கடுவனிளவெயினனாரும், 2, 13, 15-ஆம் பாடல்களை முறையே கிரந்தையாரும், கல்லெழுகியாரும் இளம் பெருவழுதியாரும் பாடினர். இப்பாடல்களில் வராகம், நரசிங்கம், வாமனன், பலராமன், கண்ணன் என்னும் அவதாரங்களும், கேசியை அழித்தமை, கருடன் செருக்கடக்கினமை, தேவர்களுக்கு அமுதளித்தமை முதலிய வரலாறுகளுங் கூறப்பட்டுள்ளன.

திருமாலுடைய திருவுருவம் பலவாறு புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளது. அவன் திருக்கண்களுக்குப் பலவிடங்களில் தாமரை மலர் உவமை கூறப் பட்டிருக்கிறது.

> " நின்னிற் றோன்றிய நிரையிதழ்த் தாமரை
> யன்ன நாட்டத் தளப்பரியவை " (4. 60-61)
>
> " புவ்வத் தாமரை புரையுங் கண்ணன் " (15.49)

என, அவன் திருவுந்தித் தாமரை உவமிக்கப் பெற்றிருக்கும் பகுதிகள் நினைக்கத்தக்கன.

அவன் கண் இயல்பாகவே சிவந்துளதென்பது 'செயிர்தீர் செங்கண்' எனவும் 'செறுஅச் செங்கண்' எனவும் அழகுறக் கூறப்பட்டுள்ளது.

திருமகள் வீற்றிருக்கும் அவன் திருமார்பு 'திருஞெமர்ந்தமர்ந்த மார்பினை' (1.8) 'திருமறுமார்ப' (1.36) 'செய்யோள் சேர்ந்தனின் மாசிலகலம்' (2.31) பொன்னிற் றேன்றிய புனைமறு மார்ப' (4.59) எனப் புகழப்படுகின்றது. ஈண்டு, மறு பொன்னிறத்ததெனக் கூறியது நினைக்கத்தக்கது. இத்திரு மார்பைத் தொழுவார்க்கு வைகுண்டம் உரியதாம் என்பது,

கின், திருவரை யகலந் தொழுவோர்க்
குரிதமா மறக்கமு முரிமை கண்குடைத்து (13.11-13)

என்பதனும் புலனும். ஈண்டும் 'திருவரையகலம்' எனத் திருமகளைக் கூறியிருத்தலினின்று அம்மையருளால் அப்பனருளைப் பெறவேண்டும் என்னும் மெய்க்கருத்து விளங்கி மகிழ்வளிக்கின்றது. இதனை வைணவர், புருஷகாரம் என்பர்.

செய்ய வளைக்குரு வின்னரு ளாற்றிருத் தாள்வணங்கிச்
செய்ய வளைக் குலஞ் சூழாக்கேசர் திருவுமுது
செய்ய வளைக் கும்புவிக்கு மங்காத செவ்வாய் முகுந்தன்
செய்யவளைக் கும் சிலம்பணி பாதங்கள் சேர்ந்தனமே"
(திருவாய்க்கத்தாதி)

என்பதுங் காண்க. 'திருமறுமார்ப நீயருளல் வேண்டும்' என்னும் அடிக்கண்ணும் இக்கருத்து அடங்கியுள்ளது.

அவன் திருமேனி நிறத்துக்கு, "கார்மலர்ப்பூவை கடலி யிருண் மணி, அவையைந்து முறழு மணிநிலா மேனியை" (13.42-43) என்பதனுல் கார், பூவை, கடல், இருள், மணி என ஐந்து பொருள்கள் உவமை கூறப்பட்டிருக்கின்றன. இவற்றுள், நீலமணியைத் திருமாலைப் பாடிய எல்லா ஆசிரியருஞ் சிறப்பித்து, உவமித்துள்ளனர். அவன் நீலமேனியில் திகழும் பொன்னுடை,

"……மால்வரை
யெரி திரித்தன பொன்புனை யுடுக்கையை" (1.9-10)
"மாஅ மெய்யொடு முரணிய வுடுக்கையை" (4.8)
"மன்புன வினவெயில் வளாவ விருள் வளர்வெனப்
பொன்புனை யுடுக்கை யோன்" (15.27-28)

எனக் கருவரையில் நெருப்புப் பரந்தாற் போன்றுள்ள தெனவும், கருமேனியொடு மாறுபட்டு விளங்குகின்றதெனவும், இளவெயில் சூழ அதனிடையே இருள் வளர்வது போன்றுள்ளதெனவும் கூறப்பட்டுளது. "மாஅமெய்யொடு முரணிய வுடுக்கை" என்புழித் "தன்னுருவுறழும் பாற்கடல்" (13.26) என்னும் பகுதி நினைக்கத்தக்கது.

"கூனையெரா நீல மலாச் சூனைசூழ்
கினையெலாஞ் செயலை மலரக் காய்கனி
உறழ நினைவேங்கை யொள்ளிணர் மலர
மாயோ னெஞ்சவின் னிலைத்தே" (15.30-33)

என்பதனுல் நீல மலர்ந்த சுணையைச் சூழ்ந்த அசோக மலர், அவன் நீலமேனியைச் சூழ்ந்த பொன்புணை உடுக்கை போலவும், கருமலியில் காய்களினுடன் நிறம் மாறுபட மலர்ந்த வேங்கை, அவன் மணிமுடி போலவும் உள்ளன என அவன் ஆடையும் முடியும் உவமானமாகவும், ''மணிவரை யூர்ந்த மங்குன் ஞாயிற்றணி வனப்பமைந்த பூந்துகில் புணை முடி'' (13 1.2) என்பதனுல், ஆடை, நீலவரைக்கட்பரந்த இளஞாயிறு போலவும், முடி, நீலவரையை யூர்ந்த இளஞாயிறு போலவும் உள்ளவென அவை உவமேயமாகவுங் கூறப்பட்டிருத்தலுங் காண்க.

திருமாலின் காலங்கடந்த நிலை 'முடிந்தது முடிவது முடிப்பது மலை மூன்றுங் கடந்தவை யமைந்த கழலினிழலவை' என அவன் தாள்மேல் வைத்துரைக்கப் பெற்றுளது.

"தெருளு நின் வரவறிதல்
மருளறு தேர்ச்சி முனைவர்க்கு மரிதே" (1.29-30)

"முதுமைக்கு, ஊழி யாவரு முணா" (2.17-18)

"மூன்னை மரபின் முதுமொழி முதல்வ" (3.47)

"மன்னுயிர் முதல்வனை" (1.53)

"இனைத்தென வெண் வரம்பறியா யாக்கையை" (3 45)

"பிறவாப் பிறப்பிலை பிறப்பித்தோ ரிலையே" (3.72)

"நினக்கு விரிந்தகன்ற கேள்வி யனைத்தினும்
வலியினு மனத்தினு முணர்வினு மெல்லாம்
வனப்பு வரம்பறியா மரபி னெயே" (3.48-50)

"அனைத்துநீ அனைத்தினுட் பொருளு நீ" (3.68)

"நினக்கு, மாற்றேரும்மிலர் கேளிரு மிலரொனும்
வேற்றுமை யின்றது போற்றுதர்ப் பெறினே" (4.53-55)

(உயிர்களது இயல்பான் நினக்குப் பகையும் நட்பும் உளபோலத் தோன்றுவதல்லது நின்னியல்பான் அவை உளவல்ல என்றவாறும்.)

"பகைவர் இவரிவர் நட்டோ ரென்னும்
வகையு முண்டோநின் மாபறி வோர்க்கே" (3.57-58)

என்பனவற்றுல் திருமாலுடைய வரவு ஒருவராலும் அறிய முடியாத தென்பதும், அவன் முதுமையும், தலைமையும், எங்கும் நிறைவும், பகை நட்பற்ற நிலையும் முதலிய சிறப்பியல்கள் புலனுகின்றன.

"சாய னினது வானிறை யென்னும்
நாவ லந்தண ரருமறைப் பொருளே" (2.56-57)

"அருள் குடை யாக வறங் கோலாக
வீருநிழல் படாமை மூவே முலகமும்
ஒருநிழ லாக்கிய வேமத்தை மாதோ" (3.74-76)

"ஒருமை வினை மேவு முள்ளத் தினே" (13.49)

"னவ்வயி னுலகத்துர் தோன்றி யவ்வயின்
மன்பதை மறுக்கத் துன்பங் களைவோன்
அன்பது மேனையிருங் குன்றத்தான்" (15.51-53)

"கின்னுர்வலர்,
தொழுதகை யமைதியி னமர்க் தோயு நீயே
யவரவ ரேவ லாளனு நீயே
யவரவர் செய் பொருட் காணமு நீயே" (4.70-73)

"மனக்கோ னினக்கென வடிவுவே றிலையே" (4.56)

"இருமை வினையுமில வேத்து மவை" (13.48)

என்பனவற்றுல் திருமால் மேகம்போல் பொழியுந் திருவருளுடையான் என்பதும், எல்லா வுலகத்துமுள்ள வுயிர்களையும் காப்போனென்பதும், அவற்றின் பிறவித் துன்பங் களைவோனென்பதும், அன்பர்கள் பணிவில் அகப்பட்டு அவர்க்கு ஏவலுஞ் செய்வானென்பதும், அவர் மனத்தே நினைக்கும் வடிவையே கொள்வான், என்பதும், அவனை வணங்கு வார்க்கு வினைநீங்குமென்பதும் தெரிகின்றன "மனக்கோள் நினக்கென வடிவுவேறிலையே" (4.56) என்புழித் "தனக்கோர் வடிவும் பெயரு மின்றி அன்பராயினுர் கருதியவடிவே வடிவாகவும் அவர் இட்ட பெயரே பெயராகவுமுடையனுதலின் 'முக்கை முனிவ' என்பது முதலாக 'நாருயிர்க்கை யாறறிகடவுள்' என்பது ஈறுக வடிவுவேற்றுமையும் பெயர் வேற்றுமையுஞ் சொல்லப்பட்டன" (3.36-43) என்னும் உரைப் பகுதி நினைக்கத்தக்கது.

"வலம்புரி வாய்மொழி யதிர்புவான் முழக்குச் செல்
அவை நான்கு முறழு மருள்செறல் வயின்மொழி" (13.44-45)

என்னும் அடிகள் மிக்க நயமுடையன. "நின் அருள் வயின் மொழி வலம்புரி முழக்கையும் வேதமுழக்கையுமொக்கும்; நின்செறல் வயின் மொழி வான்முழக்கையும் உருமேற்றின் முழக்கையுமொக்கும்" என்பது இதன் பொருள். இங்கே, வலம்புரி முழக்கு இனிதாதலும் வேதமுழக்கு அறிவுரையாதலும் போல அருண்மொழி இனிதாய் அறிவுரையாமென்பதும், மேக முழக்கும் இடி முழக்கும் கடியனவாய் வெறுப்பும் அச்சமும் விளைப்பினும் மழைபொழிதற்குக் காரணமாதல் போலச் செறல் மொழியும், வெறுப்பும் அச்சமும் விளைப்பினும் அவன் அருள் பொழிதற்கே காரணமா மென்பதும் நினைந்து மகிழற்பாலன.

"நின்னெருக்கும் புகழ்நிழலவை" (1.55) "நின்புகழுருவினை" (3.32) என உவமேயமாகவும் உவமானமாகவும் கூறியமையால் அவன் புகழ் நிகரற்ற தென்பதும் அளவற்ற தென்பதும் புலனும்.

"நின்னை,
இன்ன னென்றுரைத்த லெமக்கெவ ணெளிது" (1.31-32)

"மாயோய் நின்வயிற் பாங்தவை புரைத்தே
மாயா வாய்மொழி யுரைசா வலந்து" (3.10-11)

(நித்த மாகிய வேதமும் தேவரும் மூவேழுலகுகளும் உயிர்ப்பன்மையும் நின்கட்டோன்றியவாறு அறிந்து கூறும்; சிற்றறிவினேமாகிய யாம் அவற்றுட் சிலவற்றை முறை பிறழக் கூறுவதல்லது அவ்வாறு எல்லாம் கூறுதற்கு உரியமல்லமென்பார் 'வலந்துரைத்தேம்' என்றார்.)

"ஞாலத் துறையுட் டேவரும் வானத்தி
காலெண் டேவரும் கயக்குறிற் பாடுவோர்
பாடும் வகையே யெம் பாட மூமப்
பாடுவார் பாடும் வகை" (3.27-30)

(நின்னை நயந்து பாடுவாராகிய இவர்கள் பாடுவது தமக்கு முன்னே ராகிய பாடுவார் பாடும் வகையே; எம்பாடல் தாமும் எமக்கு முன்னே ராகிய அப்பாடுவார் பாடும் வகையே: அதனால் நின்தொன்மையும் பெருமையுமறியாமைக்கண் எம்மொடு அவரிடை வேற்றுமையின்று.)

"நின்னூர் வலர் தொழு தேத்தி,
நின்புகழ் விரித்தனர் இளக்குங்கா லவைநினக்
கிறும்பூ தன்மைநற் கறிந்தே மாயினும்
நகுதலுந் தகுதியீங் கூங்கு நிற் கிளப்ப" (4 2-5)

"நின்னேப்புரை நினேப்பி னீயலதுணர்தியோ" (3.46)

"அருமைநற் கறியினு மார்வ நின்வயிற்
பெருமையின் வல்லா யாமிவண் மொழிபவை
மெல்லிய வெனுஅ வெருஅ தல்லியக்
திருமது மார்பநீ யருளல் வேண்டும்" (1.33-36)

என்பனவற்றுல் அவனியல்பு, அறிக்து கூறவியலாதென்பதும், கூறுவது, வேதம் கூறிய சிலவற்றை முறைபிறழக் கூறுவதே யாமென் பதும், தேவரும் முனிவரும் பாடுவனவும் அவன் தொன்மையையும் பெருமையையும் முழுதும் அறிந்து பாடுவனவல்ல; முன்னோர் பாடிய முறைப்படி பாடுவனவே யென்பதும், அவன் பெருமைகளைப் பிறழக் கூறுவதனால் அவன் கைப்பின் அதுவே ஒரு தகுதி என்பதும், அவனை உயர்வுகூறக் கருதின் அது அவனலன்றி அறிய முடியாதென்பதும், இயலாமையறிந்தும் அன்பினாற் கூறுவனவற்றை ஏற்றருள வேண்டு மென்பதும் சிறந்த கருத்துக்களாகக் காணப்படுகின்றன. இங்கே,

"குறப்பிணைக் கொடியைக் கூடியோய் வாழ்த்துச்
சிறப்புணைக் கேட்டி செவி" (19.95-96)

என்னும் அடிகளும் அன்புடைமையாற் குறத்தியாய வள்ளிநாய்ச்சி யாரைக் கூடிய நீ அருளுடைமையால் என் ஓவ்வா வாழ்த்தும் கேட்டல் வேண்டும் என்னும் கருத்துப்பட எழுதிய உரையும் நோக்கத்தக்கன.

'தொல்லியற் புலவ, நல்லியாழ்ப்பாண' (3.86) 'இடவலகுடவல' (3.83) என்பனவற்றுல் திருமாலின் முத்தமிழ் வன்மையும், 'சலம்புரி தண்டேந்தினவை, வலம்புரி வயகேமியவை, வரிசிலை வயவம்பினவை, ...புகர்வரளவை' (15.58-61) என்பதனால் அவன் ஐம்படைகளுங் கூறப்பட்டுள்ளன.

திரட்டில் உள்ள திருமாலைப்பற்றியபாடலில் அவன் வையைக்கரைக் கணுள்ள இருக்தையூரில் எழுந்தருளிய செய்தி காணப்படுகிறது.

திருமாலும் பலதேவனும்

திருமாலுக்கும் பலதேவனுக்கும் வேறுபாடின்றென்னுங் கருத்தாற் பலதேவனுக்குரிய பனைக்கொடியும், யானைக்கொடியும், கலப்பைக் கொடியும் திருமாலுக்குங் கூறப்படுகின்றன 'வனைநாஞ்சி லொருகுழை யொருவனே' (1.5) 'வனைவாய் நாஞ்சிலோனும்..... ஆகி' (13.33-36) என்பவற்றால் திருமாலே பலதேவனுமென்பது புலனும்.

" நீயே, வனையொடு புரையும் வாலியோற் கவன்
இளைய னென்போர்க் கிளைய யாதலும்
புதையிரு ளுடுக்கைப் பொலம்பனைக் கொடியோற்கு
முதியை யென்போர்க்கு முதுமை தோன்றலும் " (2.20-23)

என்னும் அடிகளும், 'நீ,வாலியோற்கு அவனிளையனென்று கூறுவோர்க்குப் பிறப்பு முறையால் இளையையாகவும், எல்லாப்பொருள்களையும் மறைக்கும் இருள்போலும் உடுக்கையையுடைய பனைக்கொடியோர்க்கு வாசுதேவ மூர்த்தியாகிய நின்கட் பிறப்பு முறையான் முதியை என்போர்க்கு முதுமை தோன்றலும்' என்னும் உரையும் நயமுடையன.

பதினேந்தாம் பாடல் அவ்விருவரையும் பற்றியே கூறுகின்றது.

" கல்லறை கடலுங் கானலும் போலவும்
புல்லிய சொல்லும் பொருளும் போலவும்
எல்லாம், வேறுவேறருவி னொருசொழி லிருவர்த்
தாங்கு நீணிலை யோங்கிருங் குன்றம் (15.11-14)

என்னும் அடிகளில், கடலும் கானலும் போல வேறு வேறுகிய நிறமும், சொல்லும் பொருளும் போல வேறுபடா தொழிலும் உடையோரென அவ்விருவரையும் கூறியவழகு நினைக்குந்தோறும் இன்பமளிக்கின்றது. ஈண்டு, 'மாயவனுந் தம்முனும் போலே மதிகடலுங் கானலுஞ் சேர்வெண் மணலுங் காணுமோ' (திணைமாலை) 'மணிகிளர் நெடுமுடி வானவனுந் தம்முனும் போன்றணி கிளர் நெடுங்கடலுங் கானலுந் தோன்று மால் (யா. வி. சூ. 78. மேற்கோள்) என்னும் பகுதிகள் நினைக்கத்தக்கன.

" பொன்புனை யுடுக்கையோன் புணர்தமர் நிலையே
நினைமின் மாந்தீர் " (15 28-29

" இருங்குன்றத் தடியுறை யியைகெனப்
பெரும் பெய ரிருவரைப் பாவுதந் தொழுதே (15.65-66)

என அவ்விருவரையுமே பரவி வேண்டுதலுங் காண்க. மேற்கூறிய வற்றால் திரு மாலிருஞ் சோலை மலையில் திருமாலும் பலதேவனும் சேர்ந்திருந்தாரென்பது தெரிகின்றது.

திருமாலிருஞ் சோலைமலை

பதினேந்தாம் பாடலில் இம்மலை கூறப்படுகின்றது. உலகத்து மலைகள் பலவுள. அவற்றுட் சிறந்தன பசியாற்றி நிறை பயன் தருஞ் சில குன்றுகள்; அவற்றுட்சிறந்தன தெய்வங்கள் விரும்பியுறையுஞ் சில குன்றுகள்; அவற்றுட் சிறந்தது திருமாலும் பலதேவனும் வாழும் திருமாலிருஞ் சோலை மலையாம். அம்மலையில் அருவியார்த்து ஓழுகு தலாற் சிலம்பாறு அழகு செய்கின்றது. வேங்கைகள் பூத்துள்ளன. சுனையெல்லாம் நீலமலர் பொலிகின்றன. சுனையைச்சூழ்ந்து அசோகுகள் மலர்ந்துள்ளன. முல்லைகள் மகளிர் கற்புத்திறத்தைக் காட்டிக் கவி னுறுகின்றன. குட்டியரல் தழுவப்பட்ட குரங்குகள் பாய்கின்றன. மயில்கள் அகவுகின்றன. குயில்கள் கூவுகின்றன. இவற்றிற்கு எதி ரொலி மலையிலிருந்து உண்டாகின்றன. இத்தோற்றம் முறையே தாள வொலியும் முழவொலியும் பேரலவும், குழலொலியும் மிடற்றுப் பாடலும் போலவுந் தோன்றுகின்றன.

இக்குன்று பழையது; புகழ் மிக்கது; திருமால் அருளினுலல்லது பெற முடியாத துறக்கத்தைத் தன்னே ஏத்தினுர்க்கு எளிதின் வழங் குவது ; கண்ட அளவில் மயக்கத்தை அறுப்பது என்று பராட்டி,

> "சென்று தொழு கல்லீர் கண்டுபணி மின்மே" (15,34)
> "தையலவரொடுந் தந்தா யவரொடுங்
> கைம்மக வோடுங் காத லவரொடுந்
> தெய்வம் பேணித் திசைதொழுசனிர் சென்மின்" (15,46-48)

என்பனவற்றுல் அம்மலைக்கட் சென்று அவனைத் தொழ இயலாதவர்கள் அம்மலையைக்கண்டு பணிமின் அதுவும் இயலாவிடின் மனைவி, தாய் தந்தையர், குழந்தைகள், சுற்றத்தார் இவர்களோடு திசைநோக்கித் தொழுமின் எனக்கூறுவது, தெய்வ நினைவையூட்டுஞ் சிறந்தபகுதியாம்.

வையை

6, 7, 10, 11, 12, 16, 20, 22 ஆம் பாடல்களும் திரட்டில் ஒன்றும் உறுப்பொன்றும் வையைப்பற்றியனவாம். இவற்றுள் 6, 11, 20ஆம் பாடல்களை ஆசிரியன் நல்லந்துவனரும் 7, 10, 12, 16 ஆம் பாடல்களை முறையே மையோடக்கோவனரும், கரும்பிள்ளைப்பூதனரும், நல்லழுதி யாரும், நல்லழிசியாரும் பாடியுள்ளார். இப்பாடல்கட்குத் துறைகளுங் கூறப்பட்டுள்ளன. 22 ஆம் பாடலையும், திரட்டையும், உறுப்பையும் பாடியவர் பெயரும் அவற்றின் துறைகளும் தெரியவில்லை.

வையைநதி, சையமலையிற் ருேன்றி, ஆண்டுள்ள மரங்களை வேருடன் அகழ்ந்து, பலவகை மணங்களுடன், வாளைமீன்கள் தாவிப் பாளைகளை யுண்ணுமாறு கழுகு தெங்குகளின் கழுத்தளவு முட்டி, காற்றங்கால்களை வண்டலிட்டு மேடாக்கி, இள நெல்லின்கண்ணும் அரிகாற் சூட்டின்கண்ணும் பரந்து, மதுரை மதிலைப் பொருது, கரை

காப்பாரை யழைத்தற் பொருட்டும், கரையடைத்தற்கு ஆளழைத்தற் பொருட்டும், பறைபொலி யெழுப். பாடுவார் பாக்கத்தைக்கொண்டு, ஆடுவார் சேரியையடைந்து, மகளிர் மணலிற் புனைந்த பாவைகளைச் சிதைத்துப், பெருமுழக்கத்துடன் சென்று கடலிலக் கூடிற்று எனக் கூறப்பட்டுள்ளது.

"மாஇல் பனுவற் புலவர் புகழ்பல
நாவிற் புனைந்த நன்கவிதை மாரூமை
மேவிப் பரந்து விரைந்து வினை நந்தத்
தாயிற்றே தண்ணம் புனல்" (6, 7-10)

என்னும் அடிகளாற், புலவர் தம் கற்செய்யுட்கட்பாடிய சிறப்பியல்புகள் பொய்யாகாமல் நாட்ட, விரைந்து எங்கும் பரந்து உழவுமுதற்றொழில்கள் பெருகச் சென்றது எனக் கூறியது புதியமுறையாய் கயமுடைத்து.

வையை பெருகியதெனக்கேட்டு மதுரை நகாத்தார் பெருமகிழ்வுடன் ஆரவாரித்துத், தம்மைப் பலவாறு அலங்கரித்துக்கொண்டு, நீர் விளையாட்டுக்குரிய புழுகு கெய்விட்ட துருத்தி, பனி நீர்க்கொம்பு, வெண்கிடை மிதவை, கன் கிடைத்தேர் இவற்றுடன், பெண்யானை, குதிரை, குதிரை பூண்டவண்டி, எருது பூண்டவண்டி, கோவேறு கழுதை, சிவிகை இவற்றிலேறியும் நடந்தும் வையைக்குச்சென்றனர். வன்மை மென்மை இடைமையாகிய பண்பு வேறுபாடுடையவர்களெல் லோரும் கெருக்கத்தால் மென்னடையராய்ச் செல்லுதலுக்கு இயங்கள் ஒன்றற்கொன்று வேறுபாடுடைய வேனும் விளம்பித கடையையுடைய தாளகதியால் எல்லாம் மென்னடையவாய்ச் சேறல் உவமை கூறப் பட்டுளது.

வையை பெருகிய மகிழ்ச்சியால் சிலர் தம் நிலைமறந்த செய்தி,

"நிண்டேர்ப் புரவி வங்கம் பூட்டவும்
வங்கப் பாண்டியிற் றிண்டே ரூரவும்
வயமாப் பண்ணுக மதமாப் பண்ணவும்
கயமாப் பேணிக் கலவா தூரவு
மகளிர் கோதை மைந்தர் புனையவு
மைந்தர் தண்டார் மகளிர் பெய்யவும்
மூக்குறல் விருப்பொடு முறைமறந் தனிந்தவர்" (20, 16-22)

என்ற அடிகளால் அழகுறக் கூறப்பட்டுளது.

வையைக்குச் செல்லுதற் பொருட்டுச் சிலர் ஊடலைத் தீர்த்தர் னெனவும், ஒருமகள் தன்கணவன் பரத்தையிற் சேறல் காரணமாக இருந்த ஊடலையுமறந்து அவனுடன் பெண் யானை மேலேறினளெனவும் கூறிய செய்திகள் மகிழ்வூட்டுகின்றன. வையை வெள்ளம் மகளிர்க் கழகோ மகளிர் வையைக்கு அழகோ என்று ஒரு புலவர் பெருமான் கூறுகின்றனர்.

வையைக்குச் சென்றவர்கள் திருமருதமுன்றுறைக்கண் யாழும், வாய்ப்பாட்டும், குழலும், முழவும் ஆர்ப்பத், தலைக்கோல் மகளிரும் பாணரும் ஆட நீராடினர்.

கணவன் மனைவியர் நீராடுங்கால் கெட்டி முதலியவற்றுற் செய்யப் பட்ட வாளைச் சுழற்றியும், அவற்றுற் செய்யப்பட்ட குத்தமேக்தியும், தேரேறியும், யானை குதிரைகளை வெள்ளத்துட் செலுத்தியும், மூங்கிற் கழியால் நீரைவீசுவோரை அரக்கு நீர்வட்டால் எறிந்தும், மாலையைச் சுழற்றி எறிவார்மேற் கொம்பினீரை வீசியும் விளையாடினர். இத் தோற்றத்தை நோக்குங்கால் வையை நதி போர்க்களம் போலக் காணப்பட்டது.

மைந்தர் வாழைத்தண்டாலே நீரில் தாவிச் செல்வோரும், தாழை மலர்த் தாதைத் திரையிலும் நுரையிலும் தூவுவோரும், ஓடத்திலேறி அதனை நீர்போகுந் திசையில் விரைவாகச் செலுத்துவோரும், நீர் செல்லுந் திசைக்கு எதிராகஆடி உண்டான இளைப்பால் மெல்ல விளையாடுவோரும், மகளிர் இழைத்த சிற்றிலில் அவர் அட்டசிறு சோற்றையிட உண்டற்கு ஏற்பாரும், முன்இட்டுப் பின்மறுக்கும் மகளிருடைய பலபந்துகளையுங் கழங்குகளையுங் களவிற் கொண்டோடி அவர் அறிந்துவாங்கச்சென்றுழி எட்டாமல் நீருட்பாய்வாரும் ஆயினர். ஆதலால் வையைப் புனல், மைந்தர் வேலாலும் வாளாலும் போர் செய்யக் களிறுகள் தம்முட் பொருதலுற்ற களம் போலத் தெளிவின் றுயிற்று.

நீர் விளையாட்டால் மெலிந்த மகளிர் புனைகளை விட்டுக் கரையேறிச் சோலையில் எழுந்த அகிற்புகையால் ஈரம்புலர்த்திக் திசை யெங்கும் மணங்கமழக் கலவைக் குழம்பு பூசினர். சிலமகளிர் வெம்மையான கள்ளைக் குடித்தனர். அம்மகளிரால் உரையினின்றும் எடுக்கப்பட்ட கள்விடும் வள்ளத்துக்கு மேகத்தினின்றுங் கழிக்கப்பட்ட மதியும், அவ்வள்ளத்தைத் தம் கையில் தாங்கியதற்கு முழுமதியைப் பம்பு பற்றியதும், அவ்வள்ளத்துக்களை உண்பதற்குத் தேவமகள் மதியின் கலையை உண்ணுவதும் உவமையாகக் கூறப்பட்டுள்ளன. சிலமகளிர் தம்மீது வெண்டுகிலைப் போர்த்தனர்; சிலர் வெண்டுகிலைக் கூந்தலிற் சுற்றி முறுக்கி ஈரம் புலர்த்தினர்; சிலர் அகிற்சாந்து கருப்பூரம் இவற்றைச் செக்கிறம்பெற அம்மிக்கண் அரைத்தனர்; சிலர் பொன்னைச் செய்த சங்கு, கண்டு, இரும்பீன், வாளைமீன் இவற்றை நீரிலிட்டு விளை பொலிக என்றனர். இவ்வாறு நீரிற் பொன்மீன் முதலியனவிடும் வழக்க முண்மையை ‘‘ அவியாராதனை அழல் பலவேந்தி’’ (6, 11) என்பத னுரையாலும் அறியலாம்; சிலர் இல்லது நோக்கி இளிவரவு கூறுமுன் நல்லது வெஃகி விளைசெய்வர் ஈண்டு ‘ இலனென்னு மெவ்வ முரை யாமையீதல் குலனுடையான் கண்ணேயுள ’(223) என்னுங்குறள் நினைக்கற்பாலது. இங்கே ‘‘ ஈயெனவிரத்த விளிந்தன்று’’ (204) என்னும் புறநானூற்றடியை நினைத்து இளிவரவு என்பதற்கு ஈயென்று சொல்லுதல் என உரை எழுதப்பட்டுளது. சிலர் தம் கூந்தலிற் பத்துத் துவரையும் ஊட்டி நீராடினர். சிலர் எண்ணெய்போக இழைபொடியை யிட்டுப் பிசைந்தனர். சிலர் நீர் தமக்கு இன்பளித்து உதவியதற்குக்

கைம்மாறுக அக்கீரருக்கு அழகாக மாலையும் சந்தனமும் கத்தூரியும் அணிகலனும் இட்டனர். சிலர் மதுவூட்டினர். சிலகன்னியர் முதுபரர்ப் பணிமார் முறைமைகாட்டத் தம் தாயரொடு தைம்மாதத்தில் விடியற் காலத்து நீராடி, நீர்க்கண்ணே குளிர்வாடைவீசலால், கரைக்கண் உறையும் அந்தணர் வளர்த்த அழலிற்பேணி அதன்கண் தம் ஈரவணி யைப் புலர்த்தினர் என்று கல்லந்துவனர் கூறுகின்றார். கன்னியர் தைம்மாதத்தில் தம் தாயரொடு நீராடலால் அவ்வாடற்கு **அம்பாவாடல்** என்று பெயராமென்பதும் (அம்பா-தாய்) ''தாயருகா நின்று தவத் தைக்கீராடுதல்''(11,91) என்னும் பகுதியும் ஈண்டு அறியத்தக்கன.

ஒருவன் வாழைத்தண்டைத்தழுவி விளையாடும்போது ஒருத்தியைக் கண்டான்; உடனே, அவன் மனத்தை அவள் இழுத்தாள்; கையைநீர் இழுத்தது; கண்கள் அவளிடம் நின்றன; நீர் அவனை அவளிடம் கொண்டு செல்லாது தன்செலவின் வழியே நெடுந்தூரம் இழுத்துச் சென்றது. அதனை அறிந்த அவள் தன் ஆயத்தைவிட்டு அவனைப்பின் தொடர்ந்தாள். அவன் தாய் அவள் அன்புடமையை யறியாது தனியே செல்லாதே ஆயத்திற்கூடி என்று அவளை விலக்கினாள். அதனால் தலைவன்பாற் சேறலியலாமையால் அம்மகள் அரற்றினாள் என்ற பகுதி கயமுடைத்து.

நீராடச் சென்றவர்களுள் இளமகளிர், முகைபோலும் பருவத்தார், புதுமலர் அவிழ்ந்தன்ன பருவத்தார் எனப் பிரிக்கப்பட்டுள்ளனர். அவருள் அலர்வா யவிழ்ந்தன்ன பருவமகளிரிற் சிலர், நீரழகைக்கண்டு நின்றனர்; சிலர் நீரணி மாடத்தை யூர்ந்து சென்றனர்; சிலர் மைந்தரொடு பொரும் விளையாடற்போருக்கு வரிசையாய் நின்றனர்; சிலர் முற்படையினராய்ச் சென்று தாக்கினர்; சிலர் யாற்றிடைக் குறையை யடைந்து ஆண்டுள்ள தம் காதலரைத் தழுவினர்; சிலர் தழுவரது யாமத்து எஞ்சியதும் கூடல் விருப்பத்தைத் தருவதுமாகிய ஊடலே மேற்கொண்டனர்; சிலர் ஆசை மிகுதியால் ஊடலைவிட்டு அமளி சேர்ந்தனர்; இப்பருவத்துப் பரத்தையர் மேற்கூறியவற்றோடு யானை குதிரைகளை நடத்தியும் விளையாடினர்.

முகைப் பருவத்து மகளிர், பூவின் மேம்பாட்டை நாடி வந்தும்ற வண்டுபோலத் தாம் விரும்புங் காதற் கணவர் தம்மை விரும்பி வந்து எதிர்ப்பட்டுக் கூடுதற்பொருட்டு நீராடல் குறித்தும், தமக்குத் காவலாகிய பாட்டியரைத் தப்பி அவர் தடுத்தலையும் கடந்து போய் வையைப்புனலை எதிர்கொண்டனர். அவர் மிக்க விருப்புடன் வையை நீரை எதிர்கொண்டமைக்குத் தாம் நினைத்த பட்டினத்தைச் சேர்ந்து ஏற்றிவிட்ட பண்டங்களை இறக்கி ஆண்டுள்ளன கொண்டு இடையூறின்றி வரும் நாவாய் வரவை மிக்க விருப்புடன் எதிர் கொள்ளுதல் உவமை கூறப்பட்டுள்ளது.

ஒருகலிறு தனக்குப் பாங்காகிய பிடியைக் கண்டு மாலுற்ற மேலிருக்கும் மைந்தர் நடத்த நடவாது ஒரு புலிமுக மாடத்தருகில்

கின்றது. அப்பிடியும் மாலுற்றுத், தன்மேலிருந்த மகளிரொடு மெல்ல கடந்துசென்று, அப்புலிமுகமாடத்துச் செய்துவைத்த புலியைக்கண்டு அதனை மெய்ப்புலி என்றும், அது யானையைப் பாயுமென்றும் நினைத்துப் பாகரைக் கடந்து, மகளிர் நடுங்குமாறு தன் கிலிகெட்டது. அதனைக் கண்ட களிறுபிளிறி அங்குசத்துக்கு அடங்காமற் சிதைந்தது. உடனே களிற்றின் மேலிருந்த மைந்தர் அக்களிற்றைப் புலிமுகத்தினின்றும் வரங்கிப் பிடிசிதையாமல் அவிழ்த்து அதன்மேலிருந்த மகளிர் நடுக்கத்தைக் கலைந்தனர். இச் செயல் பாயும், கயிறும் பொருத்தும் கெடச் சிதையு கிலியிலுள்ள 'மரக்கலத்தைப் பயினல் (சுக்கானல்) திருத்தி அதனகத்தார் நடுக்கங்கலையும் நீகான் செயலோடொக்கும். ஈண்டு ''வையை நீர் விழவின்கண் மைந்தரும் மகளிருமேயன்றி விலங்குகளும் ஒத்த அன்பினவாயின அது நின்மாட்டு இல்லையாயிற்று என்பது கூறியவாறு'' எனத் துறைக்கேற்ப உரை வரையப் பெற்று இருத்தல் கண்டு இன்புறத்தக்கது.

ஊடலையுடைய சில ஆடவரும் மகளிரும் தம் ஊடலின் திண்மை, யாழொலிமிடற்றுப் பாடல் ஆடல் என்பவற்றுல் அழியக், கூடவேண்டுமென்ற எண்ணமுடையராயினர்; ஆயினும் ஒருவரையொருவர் வெற்றி கொள்ள வேண்டுமென்ற கருத்தால் முற்படுதற்கு நாணிக் கூடாது மெலிவுற்றனர். இங்கிலை தம்முட் போர்செய்து தொந்த மன்னர் சேனை இரண்டும் சமானமாதற்கு மனமியைந்தும் முன்னுக உடன்பட்ட தென்னும் வார்த்தை பிறக்குமென்று நாணி அதற்கஞ்சிப் பின்னும் கேரவொடு நின்றதையொக்கும் எனக் கூறியது மிகவுஞ் சுவை தருகின்றது.

ஒருத்தி தன்கணவனை ஓரழகி பார்ப்ப, உடனே சினந்து, தன்மார்பில் கோலாக அவனைப்புடைத்துத், தன் மார்பின் வடத்தால் அவன் முன்கையை இறுகக்கட்டி நீ பிழையுடையை என்றுகூறப், பிழையற்ற அத்தூயவன் அவளை வணங்கி என்பிழையாது? என்று கேட்டான். இதனைக் காண்மின் என ஒருவரொருவருக்குக் காட்டினர். இப்பகுதி அன்புரிமையை அறிவிக்கின்றது.

> '' நீரணி வெறிசெறி மலருறு கமழ்தண்
> தாரவரை யகலத்தவ் வேரணி நேரிழை
> ஒளிதி கழ்தகை வகைசெறிபொறி
> புனலினைப் பொலங் கோதை யவரொடு
> பாகரிறைவழை மதிதுகர்பு களிபாந்து
> நாகரினல் வளவினை வயவேற நளிபுணர்மார்
> காரிகை மதி வெருவரி ஞெருவர்கண்ணிற் கவர்புறச்
> சோமை பாடற் பயத்தாற் கினர்செவிதெவி '' (11.62-69)

வையைக்கண் மைந்தரும் மகளிரும் நாதரைப் போல இடைவிடாது கூடற்கு மது நுகர்ந்து களிமிக்கு இனியபாடலைக் கேட்டு ஒருவரையொருவர் கண்டு மகிழ்ந்தனர் என்பது இதன் கருத்தாம். ஈண்டு, 'ஐம்புலன்களாலும் இன்பம் நுகர்தற்கு இடனுயிற்று' என எழுதப் பட்டுளது. ஐம்புலவின்பம் யாங்ஙனங்கிடைத்தவெனின் 'களிபுணர்மார்'

என்பதனுல் மெய்யின்பமும், 'மதுதுகர்பு' என்பதனுல் வாயின்பமும், காரிகைமது ஒருவரிஞெருவர்கண்ணிற் கவர்புற' என்பதனுற் கண் ணின்பமும், 'வெறிசெறிமலர்' என்பதனுல் மூக்கின்பமும், 'பாடற் பயத்தாற் இளர்செவிதெவி' என்பதனுற் செவியின்பமுங் இடைத்தன வெனக் கொள்க.

மகளிர் ஒருவர் மேலொருவர் நீரை அள்ளிவீசி விளையாடினர். அவ்வமயம் ஒருத்தி நீர் தன் கண்ணிற் படுவதைப் பொறுக்கவியலாமற் கண்ணைக் கையாற் புதைத்தாள். உடனே அவள்மேல் நீர் வீசியவள் தான்வெற்றி கொண்டமையால் தோற்ற அவள் தோள்களைத் தன் கழுத்திலணிந்த பொன்னுல் இறுகக்கட்டிச் சிறையாகப் பிடித்தாள். அவளுடைய கட்டை நீக்கும்பொருட்டு ஒருத்தி நீரிலேபாய்ந்தாள். அப்போது அவள் கண்ணிலிட்டமையால் வையைப்புதுப்புனலின் செங்நிறம் மாறிக் கருநிறமாயிற்று என்னும் விளையாட்டு மகிழ்வளிக் கின்றது.

இங்ஙனம் பற்பல செய்திகள் சுருக்கமாகவும், விரிவாகவுங் கூறப் பட்டுள்ளன. விரிந்த பகுதியில் ஒன்றை ஈண்டுத் தருகின்றேன்.

இப்பரத்தையுடன் நீராடிய தலைமகன் காதற்பரத்தையிடம் வந்து வையை நீர் விழவு கூறி அவளுக்குத் தான் கொணர்ந்த தலிராகிய கையுறையைக் காட்டினன். அவன் கூறியவற்றை யுட்கொண்டு புலந்த காதற்பரத்தை, இத்தலிர் பழையவளாதலால் உன்னுல் இகழப்படுகின்ற எனக்குக் கொய்யப்பட்டதன்று; எப்பொழுதும் புதியராக உன்னுல் விரும்பப்படும் மகளிர்க்குக் கொய்யப்பட்டது என்று கூறினுள். தலைவன், நீ அறிந்தாய்; இவை அவர்களுக்குக் கொய்யப்பட்டனவே உண்மை என்றன் (நீ அறியாய் அவர்களுக்குக் கொய்யப்பட்டனவல்ல என்பது குறிப்பு) காதற் பரத்தை, பணிந்தாலும் அன்பின்றிக்கெட்ட பண் பினையுடையாய்! நின் களவு வெளிப்படுகின்றது; முன் எனக்காகக் கொய்துழியெல்லாம் நீ விரைந்து வருவாயாதலால் அத்தலிர் துவண்ட துண்டோ? இஃது அவளுக்காகக் கொய்யப்பட்டு அவளால் மறுக்கப் பட்டமையால் என்பாற் கொண்டு வரப்பட்டது ஆதலிற் காலந்தாழ்த் தமையால் துவண்டிருந்தலைப் பார், அவன் நின்மார்பின் மாலை வாட நீ நின்று கொய்ததற்கும் இத்தழையைக் கையிற்கொண்டு நீ செய்த தாழ்வுக்கும் உடன்பட்டிலனோ? சொல், என்றனள். தலைவன் அங்ஙன மன்று; வையைநீர் பெருகியது ஆதலாற் புணையேறி இவன் வரத் தாழ்த்தது அதனுல் தலிர் துவண்டது முருகன் குன்றத்து ஆணை 'காமம்பெருக்கன்றே வையை வரவு' என்றன். காதற்பரத்தை, இற்பரத்தை காமப்பெருக்கம் வையை வரவையொக்கும் என்று கூறினன் எனக்கருதி ஆம் ஆம் நீ சொல்லுகின்றது சரி காதற் காமம் எப்பொழு தும் ஒரு தன்மையிலே நிற்குமோ சிலப்பால் விரைவிற் சுருங்குதலாலும் சிலப்பால் விரைவிற் பெருகுதலாலும் வேனிற்காலத்துச் சுருங்கியும் கார்காலத்துப் பெருகியும் வரும் வையைப் பெருக்கேயாம். நீ வேண்

டாது சூளுற்றுப் பிழையுடையை யரனுய் இனிச் சூளுறல், யாற்றிற் புனலோடும் வழியே செல்லும் மரம்போல வெளவுதல்வல்ல மகளிர் வயப்பட்டுப் புனலாடற்கண் அவர்க்குப் புணையாகிய மார்பினையுடைய யாய்ச், சிறிதும் அஞ்சாது இரவெல்லாம் அவளோடு தங்கினை, வையைக்கண் உடைந்தமடையை யடைத்த விடத்தும் பின்னும் ஒழுகும் ஊற்று நீர்போல மூன்வருத்திய துன்பங்கெட நீ சேர்ந்தவிடத்தும் பிரிந்திப் பனிவரும் கண்களையுடைய மகளிர் நெஞ்சத்தை இன்னும் கணற்றி இவண் வருதலை ஒழி என்றூள். தலைவன், ஒருத்தியான் குளித்த குளக்கரையில் நின்றூள். அவள் பேதமையாற் குளத்துட்புக்கு அலைமேல் அழுந்திப் பின் அதனை நீங்கி எழுந்து என்மேல் மயங்கி விழுந்தாள் அவளைக் குளித்தயான் எழுந்து அணுகி எடுப்பதன்முன் என்னை எதிர் பாராமல் அவளே எழுந்தாள் அதனால் அவள் காமநுகர்ச்சியறியும் பருவத்தாலல்லள் அவள் ஒழியக் கோதைபோல என்மார்பினுள் அழுத்தப்பட்டவள் யாவளோ? அவளோடு யான் ஆடிய யாறு யாது? என்றூன். காதற்பரத்தை, ''தேறித் தெளிய வுணர் நீ பிறிதுமோர் யாறுண்டோ இவ்வையை யாறு'' என்றூள். தலைவன், நான் தடத்துக் குளிக்க நீ இவ்வையை யாறென்ற மாறுபாடென்னை முன்புபோற் சொல்லலாவிலன்றிப் பரங்குன்றின் தலையைக் கையால் தொட்டேன் என்று பின்னுஞ் சூளுற்றூன். உடனே காதற்பரத்தையின் இல்லத்து முது பெண்டிர், அவளோக்கி உன் சினத்துக்கு அஞ்சும் அவனோடு ஊடல் நீங்கி விளையாடலைத் தொடங்கு. துனியின்கண் மிகுவாயரனல் அவன் இன்பங்கெடும். இவ்வாறு செய்தல் இடனறிந்தூடி இனிதின் உணரும் ஒழுக்கத்துக்குப் பிழையாம் எனப் பலவாறு கழறவும், ஊடல் நீக்கவல்ல வாயில்கள் இரந்தும் பாராட்டும் வருந்தி நீக்கவும் ஊடல் நீங்கினுள். பின் அவ்விருவரும் கள் அருந்தியும் நீராடியுங் கூடியும் விளையாடியும் ஊடியும் மகிழ்ந்தனர்.

சூளுறுஞ் செய்தி இப்பகுதிக் கண்ணேயன்றிப் பிறபாடற் பகுதி களிலுங் கூறப்பட்டுளது. தலையிலடித்துச் சூளுறுதல் இக்காலத்துச் சிறப்பாகக் கருதப்படுதல் போல முற்காலத்தும் கருதப்பட்டதென்பது இரண்டாமுறை 'தலைதொட்டேன் தண்பரங்குன்று' எனக் கூறிய குறிப்பாற் புலனும்.

கோதைபோல என் மார்பினுள் அழுத்தப்பட்டவள் யாவளோ என்புழிக் கோதை என்பதை முன்னிலைப் புறமொழியாகக் கொள்ளுதல் சிறப்பாம். இன்னிப்போல என் மார்பில் அழுத்தப்பட்டவள் யாவளோ என்பதாம்.

பாண்டியனும் கூடல் நகரத்தாரும் நீராடியமைக்கு ஆகாயத்தின் வானுற்றில் இந்திரன் தேவர்களோடு ஆடியமை உவமைகூறப்பட்டுளது. இதனால் வையை நீராடற் சிறப்புப் புலனும்.

வையை நீராடல் தவப்பயனும் நகைப் பயனுமாகக் கருதப்பட்ட தென்பது,

"முன்முறை செய்தவத்தி னில்முறை யியைந்தேம்
மறுமுறை யமை யத்து மியைக
நறுநீர் வையை நயத்தகு நிறையே" (11,138-140)

"கண்ணியர் தாரர் கமழ்நறுங் கோதையர்
பண்ணிய வீகைப் பயன் கொள்வா ளுடலால்" (16,50-51)

என்னும் பகுதிகளாற் புலனும்.

வையை காதலரைக் கூட்டி அவர்க்கு மகிழ்வளித்தலால்,

"தாமமர் காதலரொ டாடப் புணர் வித்தல்
பூமலி வையைக் கியல்பு" (20,110-111)

எனப் புகழப்பட்டுளது.

இறுதியில்,

"இலம்படு புலவ ரேற்றகை ஞெமிரப்
பொலஞ் சொரி வழுதியிற் புனலிறை பரப்பிச்
செய்யிற் பொலம்பரப்புஞ் செய்வினை யோயற்க" (10,126-128)

என்னும் பகுதியைக்கூறி வாழ்த்துகின்றேன்.

கூடல்.

கூடலின் பெருமை சில பாடல்களிலும் உறுப்புக்களிலுங் கூறப் படுகின்றது.

கூடல், மதிலாலும் நீண்ட மாடங்களாலும் பொலிந்து விளங்கு கின்றது; பாடல் சான்று பல்புகழ் நிறையப்பெற்றுள்ளது; ஆண்டு மன்றல் கலந்த மணமுரசின் ஆர்ப்பு எழுகின்றது; ஆண்டுள்ளார் வருந்தாது வருபுனல் விருந் தயர்கின்றனர்; அறிவிலும் வீரத்திலும் பிறரைப் போர் வெல்லுகின்றனர். என்பன பாடற் பகுதிகளாற் புலனுகின்றன.

உறுப்புக்களுள்,

"மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையுஞ் சீரூர் பூவி
னிதழகத்தனைய தெருவ மிதழகத்
தரும் பொகுட்டனைத்தே யண்ணல் கோயில்
தாதின் அனையர் தண்டமிழ்க் குடிகள்
தாதுண் பறவை யனையர் பரிசில் வாழ்நர்
பூவினுட் பிறந்தோ ளுலினுட் பிறந்த
நான்மறைக் கேள்வி நவில்குர லெடுப்ப
வேம வின்றுயி லெழுத லல்லதை
வாழிய வஞ்சியுங் கோழியும் போலக்
கோழியின் எழாதெம் பேரூர் துயிலே"

என்பது மிகச்சிறந்ததாம். மதுரை நகர் திருமால் திருவுந்தித் தாமரை போலும், தெருக்கள் அத்தாமரை இதழ்களை நிகர்க்கும். சிவன்கோயில்

அத்தாமரைப் பொகுட்டை யொக்கும். தமிழ்க் குடிகள் அதன் தாதை மானுவர். பரிசிலர் அத்தாதை யுண்ணும் அறுகாற் பறவைகளைப் புரைவர். அக்தணர் காலையில் வேதமோதும் ஒலியைக் கேட்டே அக்ரகாத்தார் துயிலெழுவர். கோழி கூவும் ஒலியால் துயிலெழார் என்பது இதன் கருத்தாம். இங்கே,

> ''கோழி லாதகெஞ் சூட்டுடை வாரணங் கூவ
> ஓதலாலத்து மற்றைய தலத்துளார் விழிப்பர்
> ஈதலேற்றலோ டறுதொழி லிருபிறப் பாளர்
> வேத நாதத்தின் விழிப்பதவ் வியனகர் மாக்கள்''

என்னுக் திருவாப்பனூர் புராணங் காண்க.

> ''சுவாரைக் கொண்டாடி ஏற்பாரைப் பார்த்துவக்குஞ்
> சேய்மாடக் கூடலுஞ் செவ்வேள் பரங்குன்றும்
> வாழ்வாரே வாழ்வா ரெனப்படுவார் மற்றையார்
> போவாரார் புத்தே ளுலகு''

என்னும் பகுதி கயமுடைத்து. ஈண்டு,

> ''ஈத்துவக்கு மின்ப மறியார்கொ ருடுடைமை
> வைத்திழக்கும் வன்க ணவர்'' (228)

என்னுக் திருக்குறளும்,

> ''அறம்பெரி தாற்றியதன் பயன் கொண்மார்,
> சிறந்தோருலகம் படருநர் போல'' (19.10-11)

என்னும் பகுதியும்,

> ''பொலம்பூங் காவி னன்னுட் டோரும்
> செய்வினை மருங்கி னெய்த லல்லதை
> உடையோ ரீதலு மில்லோ ரிரத்தலுல்
> கடவ தன்மையிற் கையற வுடைத்து'' (38)

என்னும் புறநானூற்றடிகளுங் காண்க.

இங்கே 'இரவலர் வாராவிடினும் அவரைத்தேடித் தேரிலழைத்து வந்து அவருக்கு உணவளிப்பான்' என்னும் பிறநூலிற் காண்டற்கரிய உயர்ந்த கருத்தமைந்த ''வாரா ராயினு மிரவலர் வேண்டித், தேரிற் றந்தவர்க் காரிய னல்கும், நசைசரல் வாய்மொழி யிசைசா றேன்றல்'' (55) என்னும் பதிற்றுப்பத்தடிகள் நினைவில் வருகின்றன.

களவொழுக்கம் தமிழுக்கே உரியது

களவொழுக்கம் தமிழ் மொழிக்கே உரியதாய்க் கற்பினும் சிறந்த தென்பது அறிஞர் அனைவரும் அறிந்ததே. இதனை 'இன்ற மிழியற்கை இன்பம் என்னும் சிந்தாமணிக்கு நச்சினர்க்கினியரெழுதிய 'இனிய தமிழ்கூறிய இயற்கைப் புணர்ச்சியாகிய இன்பம்' என்னும் உரையானும், ஆரியவரசன் பிரகதத்தனைத் தமிழறிவுறுத்தக் கருதிய கபிலர் களவுப் புணர்ச்சியைக்கூறும் குறிஞ்சிப்பாட்டைப் பாடியதனானும், சிவ

ஞான சுவாமிகள் தொல்காப்பியப் பாயிர விருத்தியுள் 'ஈண்டுக்கூறும் பொருட் பாகுபாடுகள் பொதுவாகாது தமிழிற்கே சிறந்து வேறொன்றும் பெறப்படாமையின் இப்பொருள்பற்றிவரும் பரிபாடல்.....பதிற்றுப் பத்து முதலிய செய்யுளாராயப் புகுந்தார்க்கு' எனவும் முதற் சூத்திர விருத்தியுள் 'கக்கருவ வழக்கிற் கற்பினும் களவு சிறந்ததாகலானும்' எனவும் எழுதிய வாற்றானும் 'சிறப்பினைப் பெயர்பெற்றது களவியல் என்பது; என்னை? களவுகற்பென்னுங் கைகோளிரண்டனுட் களவினைச் சிறப்புடைத்தென்றுவேண்டும் இவ்வாசிரியன்' (சூ. 1. உரை) என்னும் இறையனாரகப்பொருளுரையானும் அறியலாம்.

இச்செய்தியைக் குன்றம்பூதனார் காரணமொடு புணரும் கற்பிற் புணர்ச்சி சிறந்ததெனக் கொள்ளும் நான்மறைப் புலவரை விளித்துக் கூறுகின்றார்.

"காதற் காமங் காமத்துச் சிறந்தது
விருப்போ டொத்து மெய்யுறு புணர்ச்சி
புலத்தலிற் சிறந்தது கற்பே யதுதா
னிரத்தலு மீதலும் இலவையுள் வீடாப்
பரத்தையுள் ளதுவே பண்புறு சுழற
றேரள்புதி தண்ட பரத்தையற் கிவப்புற
நாளணிந் தவக்குள் சுணங்கறை யதுவே
கேளணங் குறமனைக் கிளத்துள சுணங்கறை
சுணங்கறைப் பயனுமூடலுள் ளதுவே, அதனால்
அகற லறியா வணியிழை கல்லா
ரிகலலைக் கொண்டு தினிக்குந் தவறிலரித்
தன்னாப் பொருளியல்பிற் றண்டமிழாய் வல்லிலார்
கொள்ளாரிக் குன்று பயன்" (9.14-26)

இவ்வடிகளால், மெய்யுற்றறியாதார் இருவர் அன்பொத்து ஊழ் வகையால் தாமே மெய்யுற்றுக் கூடும் கூட்டமாகிய, காதலியுடைய களவுக் காமமே காமத்துச் சிறந்தது; அன்பொவ்வாத கற்பு, தலைவன் பரத்தையற் சேறலான் வரும் ஊடலாற் சிறந்தது; அது பரத்தை யிற்பிரிவு செய்வணியணிந்து ஒருத்தியையுய்த்துத் தலைமகள் பூப்பை அறிவிப்பத் தலைவன் வந்து மகிழ்ந்து கூட்டத்தை யுடையது, அக்கூட்டங்கள் தலைமகளுக்குப் பாங்காயினர் கேட்டு வருத்தமுறப் பரத்தையால் தன்மனைக்கண் அலர் தூற்றப்பட்டுள; அக்கூடலின்பம் களவிற்போல இயல்பானன்றி ஊடலானையது அதனால் இக்கற்பிற்போலத் தலைவர் பிரிதலறியாத களவிற்புணர்ச்சியையுடைய மகளிர் தலைவரோடு மாறுகொண்டு ஊடும் குற்றமுடையரல்லர். இப் புணர்ச்சியை வேண்டுகின்ற பொருளிலக்கணத்தையுடைய தமிழை ஆராயாத தலைவரே களவொழுக்கத்தைக் கைக்கொள்ளமாட்டார் என்னுங் கருத்துக்கள் புலனாகின்றன.

ஈண்டுப் பரிமேலழகர் "அக்களவிற் புணர்ச்சியையுடைமையான் வள்ளி சிறந்தவாறும், அத்தமிழை ஆய்ந்தமையான் முருகன் சிறந்த வாறும் கூறுகின்றார்." என்றெழுதியிருத்தலும் காண்க.

"ஆராக் காம மார்பொழிற் பாயல்
வரையகத் தியைக்கும் வரையா துகர்ச்சி
முடியா துகர்ச்சி முற்றூ டீ காதல்" (8,40-42)

என்னும் அடிகளாற் களவுப் புணர்ச்சியை வரையாத துகர்ச்சி முடிவு பெறுத இன்பம் நிறையாத காதல் எனவும்,

"மாமயில் அன்னர் மறையிற் புணர்மைத்தர்
காமங் களலிட்டுக் கைகொள் கற்புற்றென
மல்லற் புனல்வையை மாமலே லிட்டிருத்த
வில்லத்து நீதனிச் சேற லிளிவரல்" (11,41-44)

என்னுமடிகளால் வையை பிறந்த வீடமாகிய மலையைவிட்டுக் கடலாகிய தலைவன் இல்லத்துச் சேறல் மைக்தரும் மகளிரும் காமஞ்சிறப்புடைய களவொழுக்கத்தை விட்டு இளிவந்த கற்பொழுக்கத்தையுற்றுழ்போழும் எனவும், ஆசிரியன் கல்லந்துவனர் கூறியதனலும் இதன் சிறப்பை அறியலாம்.

ஈண்டு, உவமேயமாகிய யாறு மலையை விட்டுக் கடலே யடைதல்

"இருங்கடற் கூங்கி வரும் யாறெனத் தங்கான்" (16.27)

எனத் தலைவன் விரைந்து இல்லஞ் சேறற்கு உவமான மாதலும் நினைக் கத்தக்கதாம்.

".....பண்புறு கழற
றேன்புகி தண்ட பரத்தையிற் சிவப்புற
நாளணிக் குவக்குஞ் சுணங்கறை யதுவே" (9.18-20)

என்னும் அடிகளாற் பரத்தையிற் பிரிந்த தலைவனுக்குத் தலைமகள், பூப்பைச் செவ்வணி யணிக்து ஒருத்தியை யுய்த்தல் வாயிலாக அறிவிக் கும் வழக்கம் முற்காலத்து உண்மை புலனும்.

அங்ஙன மறிவித்தலைக் கழற லென்றது,

"பூப்பின் புறப்பா டூரா றுளும்
நீத்தகன் றுறைதல் அறத்தா றன்றே" (இறை, சூ, 43)

என்பது போன்ற ஆன்றோர் வாக்கைக் கருதியாம். மகப்பேற்றை வெள்ளணி வாயிலாக அறிவித்தல் உண்டென்பதும் உணர்க.

சுணங்கறை என்பதற்குக் கூட்டம் என்பது பொருளாம். கூட்டம், பிரிவினால் வரும் சுணங்கை (தேமலை) அறுப்பதாற் சுணங்கறை எனப் பட்டது. கூட்டம் சுணங்கை அறுக்கும் என்பதை,

"ஊருண் கேணி யுண்டுறைத் தொக்க
பாசி யற்றே பசலை காதலர்
தொடு வுழித் தொடுவுழி நீங்கி
விடுவுழி விடுவுழிப் பரத்தலானே." (399)

என்னும் குறுந்தொகைப் பாடலாலும் உணரலாம்.

அணிகள்.

உவமை.

மேற் பலவிடங்களிற் சிறந்த பல உவமைகள் காட்டப்பட்டன. ஆண்டுக் காட்டப்படாதவற்றுட் சிலவற்றை ஈண்டுத் தருகின்றேன்.

ஏழாம் பாடலிலும், பதினொன்றாம் பாடலிலும் வையையின் இயல்புக்குப் பல உவமைகள் காணப்படுகின்றன.

ஏழாம் பாடலில், வையைப் பெருகி அரிய பலவிடங்களிலுஞ் சென்றமைக்குப் பகை நிலத்தைக் கொள்ளக்கருதிய பாண்டியன் சேனை இளைத்து எங்குஞ் செல்லுதலும், தான்வேண்டிய இடங்களிற் சென்றமைக்கு ஆடலியல்பறியாதவள் தான்வேண்டியவாறு கடப்பதும், அணைகளை முறித்துப் போதலுக்கு ஊடலியல்பு அறியாத ஊடல் உவகையள் கணவனைக் கடந்து நீங்குதலும், கறியன பல கூடிய மணத்தையுள்ளே யடக்கிப் புதுமணங் கமழ்தலுக்கு நூன் முறைப்படி ஆக்கப்பட்ட கலவையது காற்றமும், அதன் விரைவுக்கு ஊடலித் தான் தீர்க்கவும் தீராத தலைவியைக் கூடுதற்கு முயலும் தலைவனுடைய ஆசைப் பெருக்கத்தின் விரைவும், தண்டிடத்து நீராடுவாருடைய கண்ணி கைவளை முதலியவற்றை அது கவர்ந்தமைக்கு பாண்டியன் தன்பகை நிலத்திடைப் புக்கபோது ஆண்டுள்ளனவெல்லாங் கவருதலும் உவமைகளாகக் கூறப்பட்டுள்ளன.

பதினொன்றாம் பாடலில், சந்திரன் நாடொறும் வளர்ந்து நிலவைப் பரப்பி உலகிற்குப் பயன்படுதல்போல வையை நதி பெருகி நீரைப் பரப்பி உலகிற்குப் பயன்படுகின்ற தெனவும், நிறைமதித் தேய்வுபோல நீர் குறையினும் எட்டாநாட் சந்திரனைப் போல ஒருபகுதி குறைவதன்றி அமாவாசை போல முழுதுங் குறையாதெனவும் தலைமகன் தலைமகளை யுடன்கொண்டு செல்லும்போது அவள் சுற்றத்தார் சுரத்திடைச் சென்று தடுத்தல்போல மதுரையார் நீராடுதற் பொருட்டு வையைச் செலவினிடையே புகுந்து தடுத்தனர் எனவும் கூறப்பட்டு உள்ளன. பிற உவமைகளுட் சில வருமாறு. காமம் மிக்கெழ அதனால் உண்டாகிய கண்ணின் களிப்புப் புலப்படவும் அதனை ஊரிலுள்ளார்க்கு அஞ்சி மறைப்பவர் நிலைமைகள் உண்டமையால் மயக்கம்எழ அதனால் உண்டான மதர்ப்பு அவர் நிலையை வெளிப்பட அறிவிக்கவும் ஊராருடைய பழிக்கு அஞ்சி அதனை மறைப்பவர் நிலையைப் போன்றது.

கருநரைக்குக் கடல் நிரை நிரையும், நாநரைக்குச் சுடர்மதிக் கதிரும் உவமை. ஈண்டு ''விரவுநரையோரும் வெறு நரையோரும்'' (10, 22) என்னும் அடி நினைக்கத்தக்கது.

மேகங்கள், பாண்டியன் போர்க்கு நிறுத்தப்பட்ட யானைகள்போல நிறைந்து, போர்க்களத்து அவன் முரசு முழங்குவதுபோல இடித்து, அவன் சேனைகள் வில்லினின்றும் விரைவாகவிட்ட அம்புகள்போல நீர்த்துளிகளைச் சிதறி, அவன் வேல்போல மின்னி, அதன் தொடை போல மழை பொழிந்தன. ஈண்டு,

"வண்ணமேபோல் வானம் பொழி நீர்" (22-8) என்றதனாலும்
"னோயே கைவண்டோன் றலீகைபோண்ம்" (16.1) என்றதனாலும்
"இலம்படி புலவு கேற்றகை ஞெமிரப்பொலஞ்சொரி வழுதி"(10.126-127)

என்றதனாலும் பணிவினுயர் சிறப்பிற் பஞ்சவன் கொடைப் பெருமையும், ஈண்டும் வேறுசில இடங்களினுங் கூறிய உவமைகளால் அவ், வெருவரு கொல்யானை வீங்கு தோண்மாறன் வீரமும் புலனும். காதலரோடு வினையாட் டயர்ந்திருக்கவும் பின்னும் புனலின்மேற் செல்லுகின்ற மகளிர் கண்கள் மன்மதனுடைய மணஞ்சிறந்த அம்பினது, அரத்தாற் கூர்மையிடப்பட்ட வாய் போலும். இஃது இல்பொருளுவமையாம்.

"இழிவறிந் தண்பான்க ணின்பம்போ னிற்குங்
கழிபே ரிரையான்க ணேய்" (946)

என்புழிப்போல முக்கியப் பொருளையே உவமான மாகவும் உவமேய மாகவுங் கூறும் அழகு இக்நூலிற் பலவிடத்துக் காணப்படுகின்றது.

"வாயடை யமிர்தநின் மணத்தகத் தடைத்தா
மூவா மரபு மோவா கோன்மையுஞ்
சாவா மரபி னமார்க்காச் சென்ற" (2,69-71)
"நின்புகழுரு வினதை" (3,32)

முதலியன. இங்ஙனம் கூறுதற்கு இலக்கணம்,

"முக்கியப் பொருட்கு முக்கியப் பொருளுவமை
புணர்ப்பது முதண்மைப் புலனெறி வழக்கே" (சூ.109)

என மாறனலங்காரத் துண்மை காண்க.

வஞ்சப் புகழ்ச்சியணி.

"நகையச்சாக நல்லமிர்து கலந்த
நடுவுநிலை திறம்பிய நயமி லொருகை" (3.33-34)

தேவர்க்கே அமுதளித்தமையால் திருமால் கை நடுவு நிலைதிறம்பிய நயமிலொரு கை எனப்பட்டது.

"காசொவ்வா வேனில் கலங்கித் தெளிவரல்
நீசொவ்வா வையை நினக்கு" (11,72-73)

கார்காலத்துக் கலங்கி வேனிற்காலத்துத் தெளிதலால் இந்நீர்மை எஞ்ஞான்றும் ஒத்திருக்கின்றதில்லை.

சிலேடையணி.

"செறுவே, லிடுமலர் சுமந்து பூநீர் நிறைதலிற்
படுகை ணிமிழ்கொள பயின்றன ராடுங்
களிகா ளரங்கி ணணிநலம் புரையும்" (16,11-33)

ஈண்டு விடுமலர் சுமந்து பூநீர் நிறைதல் என்பது வயலொடு இயையும் போது அவிழ்ந்த மலர்களைச் சுமந்து பொலிந்த நீர் நிறைதல் எனவும் அரங்கொடு இயையும்போது கமலவர்த்தனைக் கண் தூவிய மலர்களைச் சுமந்து பூதர் அருச்சனைப் பூவும் நீரும் நிறைதல் எனவும் பொருளாம்.

"மணிவரை பூர்ந்த மஞ்ஞை ஞாயிற்
றணிவனப் பமைந்த பூந்துகில் புனைமூடி" (13.1-2)

ஈண்டு மணிவரை பூர்ந்த என்பது துகிலோடு இயையும்போது நீல வரைக்கட் பரந்த எனவும், முடியோடு இயையும்போது நீலவரையை பூர்ந்த எனவும் பொருளாம்.

முறை நிரனிறையணி.

"ஆட லறியா வரிவை போலவும்
ஊட லறியா வுவகையள் போலவும்
வேண்டுவழி நடந்து தாங்குதடை பொருது" (7.17-19)

"வேலாற்று மொய்ம்பனின் விரைமல ரம்பிலூஞ்
போலாற்று முன்பிற் புனைகழன் மைந்தரொடு
தாரணி மைந்தர்" (22,26-28)

முதலியன. இவற்றுள் உவமையணியு மமைந்திருத்தல் காண்க.

உலக வழக்கு நவிற்சியணி.

"எதிர்குதிராகின்று" (8,21) 'எதிர் குதிரென்பது ஒருலகவழக்கு'

"ஏறுமாறேற்குமிக்குன்று" (18,6) 'ஏறுமாறு என்பது பகைத்தற்கு ஒருலகவழக்கு'

விரைவுயர்வு நவிற்சியணி

"வரையார்க்கும் புயல்கரை, திரையார்க்குமித் தீம்புனல்" (16,48-49)

மேகம் வரைக்கண்ணே ஆரா நிற்கும் அவ்வளவில் இவ்வகைத்தாகிய தீம்புனலுள் திரை கரைக்கண்ணே ஆராகிற்கும் என்பது பொருளாம்.

உரைநுட்பம்

பரிமேலழகர் அறிவாற்றலைத் திருக்குறள் உரைபடித்தார் யாவரும் கன்குணர்வர். இந்நூலிருந்துஞ்சில உரைப்பகுதிகளைக் கூறுகின்றேன்.

அருஞ் சொற்களுக்குப் பொருத்தமாகப் பொருள் காண்டலில் இவர் மிக வல்லுகர்.

"தருமனு மடக்கலும்"(3,8) தருமன்—யமன். மடக்கல்-அவன் ஏவல் [செய்யுங்கூற்றம்.

"கூற்றமு ஞமனும்" (3,21) கூற்றம்—மேற்சொல்லியமடங்கல்.

"வல்லாரைவல்லார் செறுப்பவும்" (9,74) வல்லார்—வல்லுப் போர்வல்லார்.
எதிர்கழறும்—ஒக்கும் (2 37)
ஏ—இறுமாப்பு (7,55)
கையறவு—ஊடல் (10,33)
ஒய்வார்—ஒழுக்குவார் (10,102)
ஐய—தப்ப (20,39)
தெவி—நிறைத்து (11,69)

கல்லகாரப்பூ—குளிரிப்பூ (11,103)
புட்டகம்—புடைவை (12,17)
தினை—இல் (16,7)
முஞ்சம்—ஒரு தலையணி (16,8)
கூரம்—யாழ் (19,44)
குதுகுதுப்ப—ஆசைப்பட (20,16)

வாயடை—உணவு. வாயின்கண் அடுக்கப் படுதலின் அப்பெயர்த் தாயிற்று (2,69)

கொசிப்பு—சமாதி. மனத்தினை யொன்றுக்கி நுண்ணியதாகக் காண்டலாதலிற் சமாதி கொசிப்பு எனப்பட்டது (5,37)

ஏணிப்படுகால்—மேகலை. இரு கோவை முதல் முப்பத்திரு கோவை யீறாக ஒன்றற் கொன்று வடமேறுதலால் மேகலையை ஏணிப் படுகால் என்றார் (10,11)

மூஉய்—பூப்பெட்டி. மூடுதலுடைமையாற் பூப்பெட்டியை மூஉய் என்றார் (10.13)

ஏள—சாமவேதம். உபசாரவழக்கால் ஏள என்னும் இசை யுடையதனை ஏள என்றார் (3, 62)

ஈதா—இதனைப்பார். ஈதாவன்பது ஒருமருஉ முடிபு. அஃது இக்காலத்து இந்தாவென்று வழங்கப்படும். சுட்டு நீண்டது (8,60)

உருவின, (3,32) பேணிய (7.63) என்பன உவமச் சொற்களாய், வந்துள்ளன.

நீயா கினைவ—அன்பாது விடாத கினைவின் கண்ணேய் (3,84)

ஒன்ரு உயர்கொடி ஒன்றின்று—ஒன்றுக உயர்ந்த கொடியை அக்கொடிகள் ஒன்றுதல் இன்று. ஒன்றுதல்—முதலாதல். ஒன்றுதல்—ஒத்தல் (4,41)

மாற்றேமாற்றலிலேயே—மாற்றுதற்றொழிலும் அதற்கு ஏமஞ் செய்தற்றொழிலும் உடையையல்லே (4,53) மாற்று ஏமம் ஆற்றல் இலே எனப்பிரிக்கவேண்டும்.

மங்குல் ஞாயிறு—இருளைக் கெடுக்கும் ஞாயிறு. இதனை நோய் மருந்து என்றார் போலக் கொள்க. (13,1) ஈண்டு "மறத்திற்கு மஃதே துணை" மறத்தை நீக்குதற்கும் அவ்வன்பே துணையாம் (76) "துன் பத்திற் கியாரே துணையாவார்—துன்பம் வந்துழி அது நீக்குதற்கு வேறு துணையாவார் ஒருவருமிலர்" (1299) என்னுக் திருக்குறட் பகுதிகள் காணத்தக்கன.

''மாலையணிய விலைதந்தானீ'' (20,79) என்புழி மாலையணிதல் சுன்பதனை இடக் கரடக்கல் எனக்கண்டு புணர்தல் என உரை கூறியது நயமுடைத்து.

''நீ யன்பன் எற்கன்பன்'' (20,81) இது பாத்தை தலைவியை நோக்கிக் கூறியதாம். 'நீ சால அன்பு பூண்டவன் என் மாட்டு அன் புடையான்' என்பது உரை. தலைவி அவனிடம் அன்பு பூண்டாள் என அவளுக்குக் குறை தோன்றுமாறும் தலைவன் தன்னிடம் அன்பு பூண்டா னெனத் தனக்கு உயர்வு தோன்றுமாறும் கூறியமை கண்டு மகிழத் தக்கது.

''வடுவில் கொன்கையி னுயர்ந்தோராய்ந்த
கெடுவில் கேள்வியு ணடுவா குதலு
மிக்கிலைத் தெரிபொ ருடேரி னின்னிலை
கின்னிலைத் தோன்றுகின் தொன்னிலைச் சிறப்பே'' (2,24-27)

தவறில்லாத விரதங்களையுடைய ஞானிகள் ஆராய்ந்த வேதத்தால், தெரிந்துணரின் உயிர்தோறும் உயிர்தோறும் கட்பொறிக்குத் தோன் றுதலனும் கிற்றலுமாகிய இக்கிலைமைகளும் கின்கட்டோன்றும் கின் தொன்னிலைமைபோல கினக்கேயுள்ள விசேடம். கின்னிலைத்தோன்றும் என்புழி கிலைனன்பது இடப்பொருட்டாய் கின்றது' என்பதுரை. வடுவில்கொள்கையின் உயர்ந்தோராய்ந்த கெடுவில் கேள்வியுள் தேரின் தெரிபொருள் நடுவாகுதலும் இக்கிலை கின்னிலைத் தோன்றுகின் தொன்னிலை கின்னிலைச்சிறப்பு எனக்கொண்டு கூட்டவேண்டும்.

பரிபாடற் புத்தகத்தில் இக்கிலைத்தெரி பொருடேரி னின்னிலை என்புழி இறுதிச்சீர் கிக்கிலை எனக்காணப் படுகின்றது. அங்ஙன மிருப்பின் அதனை கிக்கிலைச்சிறப்பு எனச் சிறப்பென்பதனோடு கூட்டி கினக்கேயுள்ள விசேடம் எனப்பொருள் கோடலியலாது. ஆதலால் அதனை கின்னிலை எனத்திருத்தவேண்டும். அவ்வாறே பாடபேதமும் இருத்தலால் அதுவே கொள்ளத்தக்கதாம்.

ஈண்டுத் தெரிபொருள் என்பதற்கு உயிர் எனப்பொருள் கண்டு 'தெரிபொருள் என்னும் விளைத்தொகை தெரியும் பொருளென கிகழ் காலத்தான் விரிக்கப்படும். உயிர்ப்பொருட்கு உணர்தற்பண்பு இயற்கை யாதலின்' என விளக்கப்பட்டிருத்தல் காணத்தக்கதாம்.

''பாழெனக் காலெனப் பாகென வொன்றென
இரண்டென மூன்றென நான்கென வைக்தென
ஆறென வெழென எட்டெனத் தொண்டென'' (3.77-79)

என்புழிப் பாழ் புருடதத்துவம். கால்-ஐம்பூதம், பாகு-கன்மேக்கிரியம் ஐக்து; ஒன்று இரண்டு மூன்று நான்கு ஐக்து என்பன முறையே ஓசை ஊறு ஒளி சுவை காற்மகம். ஆறு-ஞானேக்கிரியமைக்தும் மனமும். ஏழு-அகங்காரம். எட்டு-மான். தொண்டு-மூலப்பகுதி. தத்துவம் இருபத்தைக்தும் இவ்விடத்துக் கூறப்பட்டன.

'மூரிதவிராது முடுக்கு முதுசாடி'(20,54)சாடி-சால். சாலென்னும் பெயருடைமையாற் சாடி எனப்பட்டது. சாடிஎன்பதற்கு உழுசால் என்னும் பொருளின்மையும் சால் என்னும் பெயருண்மையும் நீக்கி பெயரிருத்தலாகிய இயைபுபற்றி உழுசால் எனப்பொருள்கண்ட நுண்ணறிவு நோக்கத்தக்கது 'கூந்தல், எரிநிலங் கொன்றோய்'(3,31-32) கூந்தல்-கேசி கேசி-குதிரையாய் வந்து பொருதானேரசுரன். இப் பெயர் கேசமென்னும் வடமொழி முதனிலையாக முடிந்தமையின் அதன் பொருண்மைபற்றிக் கூந்தல் என்றார். என்பதுங்காண்க.

விசேடவுரை

'நகையச்சாக நல்லயிர்து கலந்த' (3,33) அமிர்துண்டலை மறப்பித்த காமமகிழ்ச்சி பின் இறத்தற்குக் காரணமாயினமையின் 'நகையச்சாக' என்றார்.

'திரைபாடவிந்தமுந்நீர்' (4,6) திரைகிளர்ந்த வழி வெண்மை யுடைமையின் 'திரைபாடவிந்த' என்றார்.

'பொன்னிற் றேன்றிய புனைமறு மார்ப' (4,59) திருமகள் ஆதலாற் 'புனைமறு' என்றார்.

'மலையாற்றுப்படுத்த மூவிருகயத்தலை (5,10) குழவிப்பருவத்து இவ்வீரமெல்லாஞ் செய்தாய் என்னுங்கருத்தாற் 'கயத்தலை'என்றார்.

'அளிப்பதுணிப்ப வாங்காங்காடுப' (6,104) துணிப்ப எனப் பன்மையாற் கூறிற்று உணர்ப்புவயின்வாரா வூடலை நோக்கி.

'யார்பிரிய யார்வர யார்வினவ யார்செப்பு' (8,72) என்றது இரு தலைப்புள்ளி னேருயிரேனுதலாற் பிரிவும் வரவும் வினவும் செப்பும் நம்மிடை உளவாகா வென்றவாறு.

'மாந்தீந் தளிரொடு வாழையிலை மயக்கி' (10,6) என்பது புனல் கரையிற் சோலைகளுள் மரச்சினைகளைத் தேய்ந்து செல்கின்றமை தோன்ற நின்றது.

'மையாட லாடன் மழபுலவர்' (11,88) கல்விதொடங்கின அள வாதலின் மழபுலவரென்றார்.

'பிடிமேலன்னப்பெரும்படை யனையோர்'(12,27)பிடியை கடையரல் வென்று ஏறினரென்பது போதர அன்னப் பெடையனையோ ரென்றார்.

'தளவஞ்சூடிய வறிதுயிலோனும்' (18,29)யோக உறக்கமாதலால் அறிதுயிலெனப்பட்டது.

'கேள்வியு மறிவு மறத்தொடு நுண்ணியை' (13,55) அன்பர்தம் குறை தம்முள்ளே கூறியும் அறிதலாற் கேள்வி நுண்ணியை என்றார்.

'விரகியர் வினவ வினவிறுப்போரும்' (19,49) விரகியர் என்பதனால் வினவுகின்ற மகளிர் பிரியாமைக் குறிப்பினராதலும் அவ்வினாவிற்கு இறைசொல்லுவார்கணவராதலும் பெற்றும்.

'படையும் பவழக்கொடி கிறங்கொள்ளும்' (19,98) குருதி தோய்ந்துழியல்லது அங்கிறம் இயல்பன்மையிற் 'கொள்ளும்' என்றார்.

'குருதிக் கோட்டழிகறை தெளிபெறக் கழீஇயின்று' (20,5) மழைத்துகளினது விசைகூறுளார் கறை கழுவிற்றென்றார்

'வாய்மொழி யோடைமலர்த்த தாமரைப் பூவினுட் பிறக்தோனுக் தாதையும்' (3,12-13) தாமரைப்பூப் படைப்பிற்கு முதலாக வக்து மலருமென்பதற்கு வேதம் ஞாபகவேது வாதலின் அதற்கு அதனை ஓடையாக உபசரித்துக் கூறினர்.

பதினன்காம் பாடலிற்றில் 'வாருமென்பவர் சொற் போன்றன' (9) என்றதனாலும், 'எழீஇப்பாடும் பாட்டமர்க்தோய்' (24) என்றதனாலும், இப்பருவத்தே தலைமகன் வரும் என்பது பட்டவாறு கண்டு கொள்க என இப்பாடலின்துறையை அமைத்துக் காட்டியிருப்பது கண்டு இன்புறத்தக்கது

இருவேரி. வெட்டிவேர் (12,16) வெங்கார் காற்றம்-முதல் மழை யால் மண்ணிற்றேன்றும் ஆவியின்மணம் (20,10) வேசனைகாற்றம்-சூரியனுடைய வெம்மையால் குளம் முதலியவற்றின் நீரினின் றெழும் காற்றம் (20,13) என்பன முதலாக உரையின் விளக்கமாக அறிய வேண்டுவனவும் பலவுள.

இவருரையால் இவர் இசைநூலும் சோதிட நூலும் வல்லு ரென்பது தெற்றெனப் புலனும்.

இங்ஙனம்;பல்லாற்றானுஞ் சிறந்த வுரைவரைந்த இவரை,

''சிற்றறி வினர்க்குச் தெற்றெனத் தோன்ற
மதியின் றகைப்பு விதியுளி யகற்றி
எல்லையில் சிறப்பிற் றெல்லோர் பாடிய
அணிநிகழ் பாடத்துத் தணிதரு பொருளைச்
சுருங்கிய வுரையின் விளங்கக் காட்டினன்''

எனப் பெரியார் பாராட்டியது மிகப் பொருத்தமே.

ஒழிபு.

இத்தலைப்பின் கீழ் மேற் சொல்லாத சிலவற்றைக் கூறுவேன்.

கட்குடி, நீராட்டு, புலவி இம்மூன்றானும் கண் சிவக்கு மென்பது,

''கள்ளே புனலே புலவியிம் மூன்றினு
மொள்ளொளி சேர்தா வொளிஇளருண் கட்கெண்டை'' (16,39-40)

என்னும் பகுதியாற் புலனும்

ஒரு பரத்தை யியல்பு காமத்தைப் பொய்யொடுங் கூட்டி விற்பாள். பெண்மையது பொதுமையால் ஒருவராற் பேணப்படாதாள், ஐம்புலத்தையும் நுகரும் காமுகர்களாகிய பன்றிகள் நுகரும் தொட்டியாவாள், பலர்க்கும் இன்பளித்தலில் துறைபோலப் பொதுவாயுள்ளாள் என அழகுறக் கூறப்பட்டுள்ளது.

பரத்தைமாட்டுச் சென்று வந்த தலைவன்பால் மனைவி நடக்கு மாற்றைப், ''பரத்தைபாற் செல்வானைச் செல்லாமற் காத்தனும் சென்றான் என்று நீக்கி ஒழுகலும் மனையாளாற் கூடுமோ கூடா. தகவுடை மன்கையர், தம்மைக் கணவர் இகழினும் தாம் அவரை ஏத்துவார். பரத்தைபாற் சென்றுவந்த கணவரைக் கூடோமென்று இருத்தல் மங்கையர்க்கு முடிவு போவதன்று. சினவாதே காமம் தக்கவிடத்தில் நிற்குமோ'' என்று கூறிய பகுதி சிறந்த அறிவுரையாக விளங்குகின்றது.

''ஆமாமதுவொக்கும்'' (6,71)

என்பதைப் படிக்கும்போது உலகவழக்கில் ஆமா என வழங்கப்படுவது ஆம் ஆம் என்பதன் திரிபே என்பதும்,

''கட்டிய கயிலணிகாழ்'' (12,18)

என்பதற் கெழுதப்பட்ட 'கட்டிய கொக்குவாய் அழகுசெய்த வடங்கள்' என்னும் உரையைப் படிக்கும்போது உலக வழக்கில் கொக்கி என வழங்கப்படுவது கொக்குவாய் என்பதன் திரிபே என்பதும் நினைவிற்கு வருகின்றன. கொக்கின்வாய் போலுதலாற் கொக்குவாய் எனப்பட்டது போலும்

''தளிரறித்தாய் தாயினை'' 'நீ அறிந்திலை இத்தளிர்கள் அத்தன்மையவல்ல என்னுங் குறிப்பிற்று'' (6,62)

''அரியலோவரவதறிந்திலேன்'' 'அறிந்திலேன் என்பது குறிப்பு மொழி' (8,60)

''ஒருவர்க்கும் பொய்யா நின் வாயில்லுள் வெளவல்'' ஒருவர்க்கும் பொய்யா நின் என்றது குறிப்பு மொழி. (8,84)

என்னும் பகுதிகள் இன்பளிக்கின்றன.

''வந்திக்கவரென'' (20,70)

என்புழி வரர் என்பதற்கு வர என்பது பொருளாம் வரர் என்பது வர என்பதன் விகாரமாயினும் வாரார் என்பதுபோல வருமன்றி வரர் என நிற்றல் அருமையே. ஈண்டு ''வாரடா வுனக்கு'' என்னும் பாரத அடி நினைக்கத் தக்கதாம்.

''மையாடலாடன் மழபுலவர்'' (11,88)

என்பதனுள் இளமைத்தர் மையோலி பிடித்துப் படிக்கும் வழக்கம் முற்காலத் தண்மை புலனும். மையோலி — கரி பூசப்பெற்ற வோலி.

"ஞாயிறு காயா களிமாரிப் பிற்குளத்து, மாயிருந் திங்கள்
மறுகிறை யாதிரை வீரிநூலந்தணர் வீழ்வுதொடங்க" (11.76-78)

என்பதனால் திருவாதிரை நாளில் அதன் தெய்வமாகிய சிவபிரானுக்குத் திருவிழாச் செய்யும் வழக்கம் முற்காலத்தும் உண்மை புலனும்.

முடிவுரை.

இத்துணையுங் கூறியவற்றுற் பரிபாடலின் சிறப்பியல்பும், செவ்வேள், திருமால், பலதேவன் இவர்கள் பெருமையும், திருப்பரங்குன்றம், திருமாலிருஞ்சோலைமலை, வையை, கூடல் இவற்றின் மேம்பாடும், களவொழுக்கம் தமிழுக்கே யுரிய தென்பதும், உவமை முதலிய அணிகள் அமைந்திருக்குமாறும், பரிமேலழகர் உரை நுட்பமும், பிறவும் புலனும்.

இதன்கட் குறைகாணிற் பொறுத்தருளுமாறு அறிஞர்களைவேண்டி விரைவஞ்சி இவ்வளவில் நிறுத்துகின்றேன்.

"கொள்"

என்ற சொல் பற்றி ஓர் ஆராய்ச்சி.

திரு. க. ப. மகிழ்நன் அவர்கள் B. A., L. T.,



கொள் என்பது பிறவினைகளை யடுத்தன்றித்தனியே பெரும் பாலும் வழக்கில் வராத ஒரு சொல். இதனடியாகப் பிறக்கும் கொள்ளை, கொள்ளி என்ற பெயர்ச் சொற்களை நோக்கினால், 'கொள்' எனும் வினையாற் குறிக்கப்படும் பொருளிலிருந்து இவை விலகி நிற்பனபோல் தோன்றும். ஊன்றிப் பார்த்திடின், 'கொள்' என்ற இளவியின் கருத்தே இவ்விரண்டு பெயர்களிலும் மறைந்து நிற்பது வெளிப்படும். இது பின்னர்க் காட்டப் படும்.

பேச்சிற் பெருவழக்குடைய சொற்கள் திரிந்து வருவது எல்லா மொழிகளிலும் நாம் காணக்கூடிய ஒரு நிகழ்ச்சி. 'பெண்பிள்ளை' 'ஆண்பிள்ளை', என்ற சொற்கள் 'பெம்பிளை' 'ஆம்பிளை' என்று திரிந்து வருவதைப் பார்க்கிறோம். இது போன்றே 'எடுத்துக் கொள்' 'படுத்துக் கொள்', என்ற சொற்றொடர்களிலுள்ள 'கொள்' எனுஞ் சொல், 'க' என்று திரிகின்றது. மேலேகாட்டிய இரு சொற்றொடர்களும் முறையே 'எடுத்துக்க', 'படுத்துக்க' என்று திரிவதிலிருந்து இதை யறிந்து கொள்ளலாம். வழக்கிலுள்ளதை எண்டுக் கூறுகின்றேனே யன்றி, வழக்கின் தகுதிபற்றியான் ஒன்றுங் கூற முன்வரவில்லை என்பதை நினைவில் வைத்துக்கொளல் வேண்டும்.

'கொள்' என்ற முதனிலையிலிருந்து பிறக்கும் 'கொண்டு' என்ற வினையெச்சம் நோக்கத்தக்கது. 'கொண்டு' என்ற சொல்லை ஒருவர் எங்ஙனம் பேச்சில் வழங்குகின்றார் என்பதிலிருந்து அவரைப் பற்றிய சில குறிப்புக்களை யறிந்து கொள்ளலாம். 'வந்துகொண்டு', என்ற வினை யெச்சத் தொடரை, 'வந்துகின்னு' என்று ஒருவர் வழங்குவாரானால் அவர் தமிழ் நாட்டின் வடபகுதியைச் சேர்ந்தவர் என்று சொல்லி விடலாம், 'வந்துகிட்டு', என்று ஒருவர் வழங்குவாரானால், அவர் தென்னாட்டினர் என்பது உறுதி; 'வந்துண்டு' என்றொருவர் பேசினால் அவர் பிராமண வகுப்பைச் சேர்ந்தவராவார். 'கொண்டு' என்பது 'கின்னு' என்று வடபகுதித் தமிழ் மக்களால் திரித்து வழங்கப்படுவதிலிருந்து, தெலுங்கில் அது 'கொனி' எனத் திரிவதன் பொருத்தத்தை

யறியலாம். குறவர் மொழியிலே "ஓடிக்கொண்டு போய்" என்பது "ஓடிக்கிட்டே" எனவரும்; "வைத்துக் கொள்" என்ற தொடர் "வெச்சக்கோ" என்றுவரும்.

'கொண்டு வா' என்பது 'கொண்டா' என்று பேச்சில் வழங்குவது வியப்பைத் தருகின்றது. வகர உயிர்மெய் உயிர்த்தன்மை பெற்றுக் குற்றியலுகரப் புணர்ச்சியிற் புகுவது வியத்தற்குரிய தன்றே? 'கொண்டு வா' என்ற பொருளில் வரும் இலக்கிய வழக்காகிய 'கொணர்க' என்பது இலக்கண வரம்பிற்குட்பட்ட தன்று. இதிலுள்ள ரகர ஒற்று எங்ஙனம் தோன்றுகின்ற தென்பது ஆராய்தற்குரிய தது. 'கொணர்ந்' என்பதும் ரகர ஒற்றைப் பெறுகின்றது.

கொள்ளை.

ஒரு போரில் வெற்றிபெற்ற படைகள் தோல்வியடைந்தவர் நாட்டிற் புகுந்து தமக்குக் கிட்டியவற்றைச் சூறையாடுவதே 'கொள்ளை' எனப்படுவது. கொள்ளை = கொள்ளப்படுவது. சண்டையில் வெற்றிப் பெற்றோரால் மாற்றாரிடமிருந்து கொள்ளப்படும் பண்டங்கள் அளவிற் பெருகியிருக்கு மாதலால், 'கொள்ளை' என்ற சொல் மிகுதிப் பொருள் காட்டுவதாயிற்று. ஒரு பண்டம் ஏராளமாய்க் கிடைக்கு மென்ற கருத்தைக், 'கொள்ளை கொள்ளையாகக் கிடைக்கும்' என்ற சொற்களால் வெளியிடுகிறோம். 'காடு' என்ற சொல்லும் மிகுதிப்பொருளுணர்த்தும். நெருங்கி வளரும் மரம், செடி, கொடிகள் நிறைந்த பெரிய நிலப்பரப்புக் காடெனப்படும். மரம், செடி, கொடிகள் என்ற கருத்தை நீக்கி, அளவில் பெருமையைக் குறிக்க 'காடு' என்ற சொல் ஆளப்படும். 'புகைக் காடு', 'வெள்ளக் காடு', 'தாமரைக் காடு' என்பவற்றை நோக்க மேலே கூறப்பட்ட கருத்து வெளிப்படும். மிகுதிப் பொருள் காட்டும் 'காடு' என்ற சொல்லைக் குறித்து நச்சினார்க்கினியர் சிந்தாமணியுரையில் ஓரிடத்துக் கூறுகின்றார். 'கொள்ளை' யென்பதும், 'காடு' போன்றே மிகுதிப் பொருளுடையதாயிற்று. பெருந்தொகையினரான மக்களின் உயிரைக் கொண்டுபோகும் நோயைக், 'கொள்ளை நோய்' என்று சொல்லும் வழக்கு இதனால் எழுந்ததாகும். கொள்ளை நோய்க்கு மற்றொரு பெயராகிய, 'பெருவாரி நோய்' என்பது மிகுதிப்பொருளை வெளிப்படையா யுணர்த்துகின்றது.

'கொள்' எனும் பகுதியிலிருந்து தோன்றுவதாகிய 'கொண்டி' என்ற சொல்லும் 'கொள்ளை' எனும் பொருளைத்தரும்.

"பெருநனுமிளையன் **கொண்டியும்** பெரிதென
வெள்ளிவந்த வம்பமன்னர்; (புறநானூறு 78.6-7)

இவ்விடத்திற் 'கொண்டி' என்பது 'கொள்ளை' என்ற பொருளில் வந்தது. கொள்ளப்படுவது கொள்ளை, கொண்டி என்பதறிந்த பின், ஒரு வேந்தன் மற்றொருவனிடமிருந்து பெறுகின்ற கப்பமும் 'கொண்டி' எனப் பெயர் பெறுதலின் காரணத்தைக் காணல் எளிது.

தண்டமிழ் பொதுவெனப் பொருஅன் போரெதிர்ந்து
கொண்டி வேண்டுவனுயிற் கொள்கெனக்
கொடுத்த மன்னர் கடுக்கறறனரே. (புறம். 52, 5-7)

தம்பால் வக்தவரை மயக்கி அவரிடத்துள்ளவற்றைக் கவர்ந்துகொள்ளுக் தொழிலுடையவர்களைக் 'கொண்டி மகளிர்' (மதுரைக்காஞ்சி. 583) எனக் கூறியது பொருத்தமுடையதே. பிறரிடமிருந்து கொள்வது 'கொண்டி'யாயின், காம் கொள்வதையும் அச் சொல்லைக் கொண்டே குறிப்பிடுதல் கூடும். காம் உட்கொள்வதாகிய உணவையும் 'கொண்டி' என்பது பழைய வழக்கு. 'கட் கொண்டிக் குடிப்பாக் கத்து' (மதுரைக் காஞ்சி. 137) என்ற விடத்து இவ்வழக்கைக் காண்க. உட்கொள்ளப் படுவது உணவுமாத்திர மன்று; ஒரு கருத்து, ஒரு முடிபு, ஒரு உறுதியு முட்கொள்ளப்படும். உட்கொள்ளப்படுங் கருத்திற்குக் 'கொள்கை', 'கோள்' என்ற இரு சொற்கள் பெயராகின்றன. 'மாசற்றார் கோள்' என்று குறளில் இவ்வாட்சி தோன்றுகின்றது. 'கொள்கை', 'கோள்' என்பவற்றை ஆராயத் தொடங்குமுன் இக்கட்டுரை மிக நீண்டு விடும். ஈண்டுக் 'கொண்டி' என்ற சொல் 'கொள்ளை' என்ற பொருளில் வருவதைப் பார்த்தோம். கொண்டியும் மிகுதிப்பொருளைக் காட்டும். "கொண்டியுண்டித் தொண்டையோர்," (பெரும்பாணாற்றுப்படை. 454) என்பதிற்காண்க. அறியப்படும்.

சங்க நூல்களில் 'கொள்ளை' என்பது 'வில்லை' என்ற பொருளில் வருவதைக் காணலாம்.

கம்புட்சேவ லின்றுயிலிரிய
வள்ளைநீக்கி வயன்மீன் முகந்து
கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர் (மதுரைக்காஞ்சி 254-256)

மேற்காட்டிய வடிகளில், 'கொள்ளை சாற்றிய' எனவருஞ் சொற் றொடர்க்கு, "வில்லைகூறி விற்ற" என்பது பொருள்.

'இல்பதவுணவின் கொள்ளை சாற்றி' (பெரும்பாணாற்றுப்படை 64)

என்றவிடத்தும் முன்கண்ட பொருள் தோன்றுகின்றது. கொள்ளல் = வாங்கல்: கொள்ளும் பொருளின் விலை, கொள்ளை. காலமின்மையின் இவ்வாராய்ச்சியை ஈண்டு மிக வருத்தத்துடன் நிறுத்துகின்றேன்.



அருட் கோலங்கள்

திரு. பெ. இராம. இராம. சித. சிதம்பரஞ்செட்டியார் அவர்கள்,
திருக்கொள்ளம்பூதூர்த் திருப்பணியாளர்,
இராம நிலையம், மார்த்தாண்டபுரம், புதுக்கோட்டை.



ஆண்டவனை வழிபடும் முறைகளில், உருவ வழிபாடு என்பது உலகத்தில் மிகப்பழைய காலக்தொட்டுப் பல நாட்டு மக்களிடத்தும் காணப்படுவ தொன்றும். மேனாட்டு ஆராய்ச்சியாளரில் ஒரு சாரார் வேதங்களில் உருவ வழிபாடு காணப்படுவதில்லை எனக் கூறுவாரேனும் வேறு ஒரு சாரார் வேதகாலத்திலும் உருவ வழிபாடு வழக்கிலிருந்து வந்ததென்று கூறத்தக்க சான்றுகள் பல தெரிந்நூல்கள் பலவற்றுள் காணக் கிடக்கின்றனவென்று கூறுவர். பழைய இந்திய நாகரீகத்தை வெளிக் காட்டும் மொகஞ்சதாரோ, ஆரப்பா முதலிய இடங்களில் காணப் பெறும் புதை பொருள்களும் உருவ வழிபாட்டின் தொன்மையை வற்புறுத்துவனவாம்.

நமது நாட்டில் சைவர்களும், வைணவர்களும், சமணர்களும், பௌத்தர்களும் இவ்வழிபாட்டினைப் போற்றி வந்திருக்கின்றனர். இப்பொழுதும் இவ்வழிபாட்டினைச் சிறப்பாகக் கொண்டாடும் திருக் கோயில்கள் தமிழ்நாடெங்கும் காணப்பெறுகின்றன என்று கூறுவதை விடச், செந்தமிழ் நாட்டுச் சிறப்பியல்பே இத்திருக் கோயில்களென்று கூறலாம்.

இக்கோயில்களுள் அமைந்துள்ள திருவுருவங்கள், பலபடியான தத்துவங்களைக் குறிப்பிடுகின்றனவும், புராணக் கதைகளைத் தெரிவிக் கின்றனவும் அடியார்கள் வரலாற்றை நினைவூட்டுகின்றனவுமாக அமைந்துள்ளன. இத்திருக் கோயில்கள் நம் மக்களுக்குப் பல்லாயிர ஆண்டுகளாக எத்தனையோ நன்மைகளைச் செய்து வந்திருக்கின்றன.

சிவன் கோயிலில் காணப்பெறும் திருவுருவங்களில் சிவபெருமானைக் குறிக்கும் திருவுருவமே முதன்மையானதாகும். இத் திருவுருவந்தானும் பலகோலங்களாக அமைக்துள்ளதை காமெல்லோரும் அறிவோம். அக்கோலங்கள் இலிங்கத் திருவுருவம், அண்ணுமலையார் திருவுருவம், (இலிங்கோற்பவர்), வீற்ற திருக்கோலம் (சுகாசன மூர்த்தம்), கூத்தத் திருக்கோலம், (நிருத்தமூர்த்தம்) தென்முகத் திருவுருவம், (தெக்கணமூர்த்தம்,) மாதொருபாகக்கோலம் (அர்த்தநாரீஸ்வரமூர்த்தம்,) மாலொருபாகக் கோலம் (அர்த்த நாராயணமூர்த்தம்,) தெறுத் திருக்கோலம் (சங்கார மூர்த்தம்,) வெருத் திருக்கோலம் (கோர மூர்த்தம்) திருமணக் கோலம் (கல்யாண மூர்த்தம்) அருட்டிருக் கோலம் (அனுக்கிரக மூர்த்தம்) எனப் பலவகையாகத் திகழ்கின்றன.

அருட்கோலங்கள் சிவபெருமான் தன் அடியார்களுக்கு அருள் செய்த முறையை உருவவடிவில் காண்பிப்பனவாகும். இவை சிவபெருமானது பேரருளையும், அடியார்களது தெய்வப் பற்றையும், பற்றினுலவர்க ளடைக்த பயனையும் மக்களுக்கு அறிவுறுத்தி கல்வழிப் படுத்தும் நோக்கத்துடன் எடுக்கப் பெற்றனவாகும். இவ்வருட் கோலங்கள் சண்டீசர், பிள்ளையார், திருமால், விசயன், கஞ்சீசன், இராவணன் முதலியவர்கட் கருள்செய்த முறையைக் காட்டுவனவாகத் தனித் தனியே ஒவ்வோரிடங்களில் அமைந்துள்ளன.

சோழவளநாட்டில் திருச்சேய்ஞலூரில் எச்சதத்தனென்னும் அந்தணனின் அருமகவாய்த் தோன்றிய விசாரசருமர், ஆனிரைகளை மேய்த்துக்கொண்டு மண்ணியாற்றங் கரையில் சிவலிங்க வழிபாடு செய்துவரும்பொழுது அவரது நிலையை கண்ணுராத அவர் தந்தை அவ்வழிபாட்டினைச் சிதைப்ப வெகுண்டு தன்றந்தையின்காலைச் சேதித் தார். இவர் பற்றினை வியந்து இறைவன் அருள் செய்து சண்டீசர் பதத்தை இவர்க்களித்த நிலையைக் காட்டும் திருவுருவமே சண்டீச அனுக்கிர மூர்த்தம், எனவழங்கப்பெறுகின்றது. இச்செய்தியினை,

> "தழைத்த தோராத்தியின்றீத்தாபர மணலாற் கூப்பி
> அழைத் தங்கே யாவின் பாலைக் கறந்து கொண்டாட்டக் கண்டு
> பிழைத்ததன் றூதை தானேப் பெருங் கொடுமழுவால் வீச
> குழைத்த தோர் அழுத மீந்தார் குறுக்கை வீரட்டனூரே"

எனத்திருநாவுக்கரசு அடிகளாரும்,

> தீதில்லைமாணி சிவகருமஞ் சிதைத்தானைச்
> சாதியும் வேதியன் தந்தைதனைத் தாளிரண்டும்
> சேதிப்பவீசன் திருவருளால் தேவர் தொழப்
> பாதகமே சோறு பற்றினவாதோ ணேகக்கம்,

எனத் திருவாத ஆரடிகளும் மனமுருகிப் போற்றியிருக்கின்ருர்கள்.

ஊ

சண்டேசானுக்கிரகமூர்த்தி



கங்கைகொண்ட சோழபுரத்திலுள்ள
சண்டீசர்க்கருள்கோலம்

இத் திருக்கோலம், ஏழாம் நூற்றாண்டில் இராசசிம்மன் என்னும் பல்லவ அரசனால் எடுக்கப்பெற்ற காஞ்சீபுரத்திலுள்ள கைலாசநாதர் கோயிலிலும், பதினோராம் நூற்றாண்டின் முற்பகுதியில் இராசேந்திர சோழனால் கங்கை கொண்ட சோழபுரத்தில் எடுக்கப்பெற்ற திருக் கோயிலிலும் அமையப் பெற்றிருக்கின்றது. காஞ்சீபுரத்தில் அமைந் திருக்கும் முறைக்கும் கங்கைகொண்ட சோழபுரத்தில் அமைந்திருக்கும் முறைக்கும் சிறிது வேற்றுமை யுண்டு. தமிழ்நாட்டில் வேறிடங்களில் காணப் பெறும் இக்கோலம், கங்கைகொண்ட சோழபுரத்தி னமைப்பை ஒட்டிக் காணப்பெறுகின்றது.

காஞ்சீபுரத்தில் கைலாசநாதர் கோயிலில் இக்கோலத்தைச் சிவபெருமான் இடது திருவடியைச் சிறிது உயர்ந்த இடத்திலூன்றி வலது திருவடியைத் தரையிலூன்றி நின்று திருக்கைகளினால் திருவருள் செய்யுங் குறிப்போடு காட்டுவதாகவும், வலத்தில் சண்டேசுரர் தந்தை காலை எறிந்த மழுவை வலது தோளில் ஏந்தி நிற்பதாகவும் அதற்குச் சிறிது தாழ தாள் அரியுண்ட எச்சதத்தன் வியப்புக்குறியுடன் கையை உயர்த்திக் காட்டிக்கொண்டு கீழே விழுவதாகவும் காட்டியிருக்கிறார்கள்.

கங்கை கொண்ட சோழபுரத்திலோ, இடப்பால் உமையம்மை இனிது வீற்றிருக்கச் சிவபெருமான் வலப்பால் ஒரு சிறிது கடைக் கணித்து வீற்றிருப்பதாகவும், வலது திருவடிக் கருகில் சண்டீசர் பெருமகிழ்ச்சியுடன் அமர்ந்திருப்பதாகவும், சிவபெருமான் வலது திருக் கையில் நீண்டதேசர் மலர் மாலையின் நுனியைப் பிடித்துக்கொண்டு இடது திருக்கரத்தால் சண்டீசர் திருமுடியில் அம் மாலையைச் சூட்டு வதாகவும் அமைந்துள்ளது. இத்தக் கோலத்தின் அழகு கண்டுகளிக்கும் பான்மையதேயன்றி யெளிதில் எடுத்துரைக்கும் தன்மையதன்று. உமை யம்மையது அமர்ந்த இனிய நோக்கமும், சிவபெருமானது அருள் கூடிய பெருமித்தோற்றமும், சண்டீசரது அருள் பெறுமகிழ்ச்சியோடு சும்பிட்டமரும் பணிவும் பார்க்கப் பார்க்க உள்ளத்தை யுயர்த்துவன வாம். சேக்கிழார் பெருமான் கூறிய,

> அண்டர்பிரானுந் தொண்டர் தமக்குதவுகின்ற "அனைத்தாகாம்
> உண்ட கலமு மூடிப் பனவஞ் சூடுவனவு மூனக்காக்"
> சண்டீசனுமாம் பதத்தோம்" என்றங்கவர் பொற்றட மூடிக்குத்
> துண்டவிதிசேர் சடைக் கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார்

இத்திருப்பாட்டை மனத்தமைத்து ஆக்கியதோ இவ்வுருவம் எனவும் எண்ணவேண்டி யிருக்கின்றது; அன்றி, இப்பாட்டுத்தான் இத்திரு வுருவத்தை உளத்தமைத்து எழுந்ததோ!

இறைவன் தனதடிவழிபடும் அடியார்கட்கு வரும் இடர்களைக் கடிந்தொதுக்குதற்பொருட்டுத் தனது மூத்த பிள்ளையாராகிய யானை முகப் பெருமானை உலகுக் கருளினர் என்றும் உலக உயிர்கட்கு வினைத்

தொடர்பாற்றேன்றும் பெருத்துயிக்க துக்கமும் நீங்கர கோயும், வந்தடையாதபடி காத்தல் மூத்த பிள்ளையாரது முதற்கடமையென்றும் ஆன்றோர் கூறுவர். இவ்வுண்மை,

"பெற்றிட்டே மற்றிப்பார் பெருத்தி மிக்க துக்கமும்
உறுபுகர் மூகவிறையைப், போரா கோய் தாமே யாமை பிரிவு செய்தவன்"

எனத் திருஞானசம்பந்தப் பிள்ளையார் சிவபிரானைப் போற்றுதலால் புலனும். விநாயகப் பெருமானுக் கருள்செய்த திருக்கோலமே விக்கினேச்சுவர அனுக்கிரக மூர்த்தமெனப் பெயர் பெறும்.

அசுரர்களே வெல்லுதற்கெனச் சிவபெருமானிடத்துப் படை வேண்டிப் பன்னெரும் தாமரை மலரிட்டிறைஞ்சி வணங்கிய திருமால் ஒருகாள் வணங்குமாயிரம் பூவில் ஒன்றுகுறையத் தாமரையாகிய தன் கண்ணை இடந்து தூவி இறைஞ்சச் சிவபெருமான் அருள்கொண்டு ஆழிப்படையைத் திருமாலுக்கருளிய கோலமே விஷ்ணு அனுக்கிரக மூர்த்தமெனப்பெறும். இக்கோலத்தை ஆழியருள்கோலம் (சக்கிரதான மூர்த்தம்) எனவும் கூறுவர். இவ்வாலாற்றினை,

தடமலராயிரங்கள் குறைவொன்றதாக நிறைவென்று தன்கணதனுல்
உடன்வழிபாடுசெய்த திருமாலே யெங்கைபெருமான் உகந்துமிகவும்
சுடரடியான் மூயன்று சுழல்வித தரக்க னிதயம் பிளந்தகொடுமை
அடல் வலியாழி யாழியவனுக்களித்த வவனு நமக்கோர் சரணே

என்ற திருகேரிசையாலும்,

பங்கயம் ஆயிரம் பூவிலோர் பூக்குறையத்
தங்கணிடந்தான் சேவடிமேற் சாத்தலுமே
சங்கான் எம்பிரான் சக்கர 'மாற்கருளியவா'
றெங்கும் பாவிகாள் தோணேக்கமாடாமோ

என்னுக் திருவாசகச் செய்யுளாலும் நன்குணரலாம்.

மாபாரதப்போரில் வெற்றிபெற வேண்டி விசயன் பாசுபதாத்திரம் பெறுதற்குச் சிவபெருமானே நோக்கிக் கைலைமலைச் சாரலில் நோன்பு நோற்றுக்கொண்டிருந்தார். ஆன்றோர் ஏனம் எதிர்ப்பட்டது. சிவ பெருமான் வேட்டுவக் கோலத்தோடும், அருச்சுனன் தவக்கோலத் தோடும் அதனை எய்தனர். பன்றி வீழ்ந்தது. இவ்வொருவரும் தம் தம் அம்பினுலேயே வீழ்ந்ததெனக் கூறி வழக்கிட்டுப் போர்தொடுத்தனர். அப்போரின் முடிவில் தோல்வியுற்ற அருச்சுனன் தன்னோடு மாறு கொண்டார் சிவபெருமானேயெனத் தெரிந்து வணங்கச் சிவபெருமான் அவனுக் கருள்செய்து பாசுபதம் ஈந்தருளினர். இவ்வரலாற்றினை,

" வேடனுய் விசயன் தன் வியப்பைக்காண்பான்
வீற்பிடித்துக் கொம்புடைய வனத்தின்பின்
கூடினருமையவனுங் கோலங்கொள்ளக்
கொலைப்பகழியுடன் கோத்து " எனவும்

" அருச்சுனர்க்குப் பாசுபதங் கொடுத்தானை " எனவும்

வரும் தேவாரப் பதிகங்களை ஆணரலாகும்.

இத்திருக்கோலமே வேட்டுவ விசயக்கோலம் (கிராதார்ச்சுன மூர்த்தம்) எனப் பெயர்பெறும்.

சிவபெருமான் தன்பால் அணுக்கத் தொண்டனுய்த் தொண்டுபுரிந்த கந்தியம்பெருமானுக்கு அருள்புரிந்து சிவகணத்தலைமையீந்து இடையறு தென்றும் தன்பாலிருக்க அருளியதும் உமையம்மை கந்தீசனது தொண்டை வியந்து, அவனை மகனுய் ஏற்று, உச்சிமோந்து பால்சுரந்த தாமான தத்துவச் செய்தியைக் காட்டும் கோலமே கந்தியருள் கோலம் (கந்தீசனுக்கிரக மூர்த்தம்) எனப் பெயர்பெறும்.

" கந்திபணி கொண்டருளும் நம்பன் றன்னை "
" கந்திக்கருள் செய்தாய் நீயேயென்றும் "

எனவும் வரும் அப்பர் அடிகள் வாய்மொழியால் புலனும்.

கைலாய மலையைப் பெயர்த்தெடுக்க முயன்ற இலங்கையர்கோன் தன் முயற்சி தவறுபட்டதென வுணர்ந்து மலைக்கீழ் அழுந்தியவண்ணம் சிவபெருமானை இனிய இசைப்பாவரல் பரவ, அதற்கிரங்கி அருளிய திருக்கோலமே இலங்கையர் கோனுக்கிரங்கிய கோலம் (இராவண அனுக்கிரக மூர்த்தம்) எனப் பெயர் பெறும். இராவணன் கைலையை யெடுக்கமுயன்ற செய்தி பழந்தமிழ் நூலாகிய கலித்தொகையில்,

" இமையவில் வாங்கிய வீர்ஞ்சடை யந்தணன்
உமையமர்த் துயர்மலை யிருக்தனனுக
ஐயிரு தலையி னரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையிற் கீழ்புகுத்தம்மலை
எடுக்கல் செல்லா தழப்பவன் போல " (கலி. 38)

எனக் குறிக்கப் பெற்றுள்ளது.

எடுத்தனன் எழிற்கயிலை இலங்கையர் மன்னன் தன்னை
அடுத்தொரு விரலால் ஊன்ற அலறிப்போய் அவனும் வீழ்ந்து
விடுத்தனன் கைகரம்பால் வேதகீதங்கள் பாடக்
கொடுத்தனர் கொற்ற வாளுள் குலுக்கை வீரட்டனுரே

என்பது போன்ற பல செய்யுட்களால், திருமுறைகளில் இவ்வரலாறு புகழப்பெற்றிருக்கிறது.

இராவண [illegible] அருள்செய்த இக்கோலத்தை ஐதராபாத் மாநாட்டினுள்ள எல்லோரா குகைக்கோவிலிலும், மைசூர் மாநாட்டினுள்ள வேளூர் கோவிலிலும் அழகுபட அமைத்துக் காட்டியிருக்கின்றார்கள். இமயமலையை எடுக்கும் இராவணனது உடல் வலியின் முயற்சியும், மலை அசையக்கண்ட உமையம்மையின் அச்சமும், மருண்ட நோக்கமும், சிவபெருமானது புன்முறுவலும் மிகவும் அழகாக எல்லோரா குகைக் கோவிலில் காட்டப்பெற்றிருக்கின்றன.

சிவபெருமானது திருவருட்கோலம் எல்லோரையும் வாழ்விப்பதாக!

"வாழ்க வந்தணர் வானவர்ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்கதீய வெலா மாஞுமமே
சூழ்க வையகமும் அயர்தீர்கவே."

